ஜெனிபர்



கங்கை புத்தக நிலையம்

சிட்னி ஷெல்டன்

தமிழில்:

ரா.கி.ரங்கராஜன்

ஜெனிபர்

RAGE OF ANGELS

மூலம் :

ஸிட்னி ஷெல்டன்

தமிழாக்கம் :

ரா. கி. ரங்கராஜன்

மின்னூலாக்கம் : செல்லா

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர் :: சென்னை–17.


மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

முதற் பதிப்பு நவம்பர், 2000

விலை ரூ. 120.00

Title	**JENNIFER** (RAGE OF ANGELS by **Sidney Sheldon**)
Translated by	**Ra. Ki. Rangarajan**
Language	Tamil
Subject	Novel
Edition	First Edition, November, 2000
Pages	576
Published by	**GANGAI PUTHAKA NILAYAM** 13, Deenadayalu Street, Thyagaraya Nagar, Chennai 600 017.
Price	**Rs.120.00**

ஒளி அச்சு லேசர்லிங் சிஸ்டம்ஸ், சென்னை–17. ✆ 435 6548
அச்சிட்டோர் மலர் பிரிண்டர்ஸ் 044-8224803

பதிப்புரை

ஜெனிபர்–

ஸிட்னி ஷெல்டனின் அற்புதமான பாத்திரப் படைப்பு.

இரத்தமும் சதையுமாக, படிக்கும் போதே அந்தப் பாத்திரத்தின் உயிர்த் துடிப்பை நம்முள் துடிக்கச் செய்கிறார்.

குபேர நாடான அமெரிக்காவைப் பற்றி நமக்கொரு மாபெரும் மயக்கம் உண்டு. அதன் மறுபக்கத்தை மிக அருமையாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் ஸிட்னி ஷெல்டன்.

மாஃபியா கும்பல், கள்ளக் கடத்தல், அதன் பயங்கர மிரட்டல்கள், அதன் கோரப்பிடியில் சிக்கிய இளம் வழக் குரைஞராக ஜெனிபர்...

இருதலைக் கொள்ளி எறும்பாக, காதலுக்கும் கடமைக்கும் இடையே துணிவுடன் போராடும் ஜெனிபர்...

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்கு சாதுரியத்தால் நீதியை மயங்க வைக்கும் வழக்குரைஞர்கள்...

இவர்களுக்கு மத்தியிலே வெற்றி நடைபோடும் ஜெனிபர்...

'எடுத்தது கண்டேன்; இற்றது கேட்டேன்" என்ற கம்பனின் வாக்குக்கேற்ப நாவல் குதித்தோடுகிறது.

பல்லாயிரம் 'குமுதம்' வாசகர்கள் படித்து ரசித்த 'ஜெனிபர்' நாவலை ளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

மூலத்தின் சுவை கெடாது, மொழி பெயர்ப்பு என்று எண்ணத் தோன்றாதவாறு ஜெனிபரை நமக்குத் தமிழாக்கித் தந்திருக்கும் திரு. ரா. கி. ரங்கராஜனை வாசகர்கள் பாராட்டு வார்கள் என்பதில் ஐயமில்லை.

– கங்கை புத்தக நிலையத்தார்

முன்னுரை

ஸிட்னி ஷெல்டன் எழுதிய மிகச் சிறந்த நாவல்களில் இதுவும் ஒன்று. எடிட்டர் எஸ்.ஏ.பி. அவர்கள், இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் படிக்கும்படி சொன்னபோது, இதை மொழிபெயர்க்கும் எண்ணம் அவருக்கும் இல்லை. எனக்கும் இல்லை.

RAGE OF ANGELS என்ற இப்புத்தகத்தை ஒரே மூச்சில் படித்து முடித்தேன். ஜெனிபரின் போராட்டமும் காதலும் என் மனத்தைக் கவர்ந்ததைக் காட்டிலும், வெவ்வேறு வழக்குகளில் வெவ்வேறு தந்திரங்களைக் கடைப்பிடித்து அவள் வெற்றி யடைந்த முறையே என்னை அதிகம் கவர்ந்தது. அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குட்டிக் கதைகளாகப் பிரசுரிக் கலாம் என்று எடிட்டரிடம் சொன்னேன். 'ஏன், முழுதாகவே வெளியிடுவோமே?' என்றார்.

கதை வெளிவர ஆரம்பித்ததுமே எக்கச்சக்கமான வர வேற்பைப் பெற்றது. முதல் இரண்டு மூன்று அத்தியாயங்களில் வரும் சம்பவங்களைச் சில தயாரிப்பாளர்கள் தாங்கள் எடுத்துக் கொண்டிருந்த சினிமாவில் 'சேர்த்துக்' கொண்டார்கள்!

ஜெனிபரின் குழந்தை இறந்து போவதைச் சொல்லும் அத்தியாயங்களைப் படித்து ஏராளமான வாசகர்கள் நிஜமாகவே கண்ணீர் வடித்தார்கள்.

இந்த நல்ல கதையைப் புத்தகமாக, அழகிய முறையில் கொண்டு வந்துள்ள கங்கை புத்தக நிலையத்தாருக்கு நன்றி.

– ரா. கி. ரங்கராஜன்

பிளாட் எண் 1211, 12 வது தெரு,
5 வது அவென்யூ, 'Z' பிளாக்,
அண்ணாநகர், சென்னை–600 040.
✆ 626 6003

I

காலோடு தலை உற்சாகம் கரை புரண்டோடியது ஜெனிபருக்கு.

அவளுடைய ஆசைக் கனவு நாளைக் காலை பலிக்கப் போகிறது.

எந்த வழக்கறிஞர் துறையில், விடா முயற்சியுடன் புகுந்து வெற்றிகரமாக முன்னேறி, கொடிகட்டிப் பறக்க வேண்டுமென்று அவள் துடித்துக் கொண்டிருந்தாளோ அந்த வக்கீல் தொழிலில் அவளுக்கு இடம் கிடைத்து விட்டது. அதுவும் நியூயார்க் அரசாங்க வழக்கறிஞரின் உதவியாளர்களில் ஒருத்தியாக!

அப்பா உயிரோடு இருந்தால் எவ்வளவு சந்தோஷப் படுவார்!

உங்கள் ஆசையை நாளைக் காலை நான் நிறை வேற்றுப் போகிறேன், அப்பா! ஒரு சிறந்த தந்தைக்குப் பிறந்த ஒரு சிறந்த மகள் என்று பெயரெடுக்கப் போகிறேன்.

ஜெனிபரின் கண்களில் ஆனந்தம் பளபளத்தது. அவளுடைய இருபத்து மூன்று வயது இளம் உடம்பில் ஆர்வம் ஒவ்வொரு ரத்தத் துளியிலும் கலந்து ஓடியது.

சிறிய ஊரில் அவள் வாழ்ந்த குழந்தைப் பிராயம் ஞாபகம் வந்தது. மரக் கம்பெனிகளுக்கும் மரம் வெட்டும் தொழிலாளர்களுக்கும் வழக்கறிஞராகப் பணியாற்றி,

பணத்தைக் குறியாகக் கொள்ளாமல் மனிதர்கள்தான் முக்கியம் என்று வாழ்க்கை நடத்திய அப்பாவின் ஞாபகம் வந்தது. படகுச் சவாரி என்ன, பனிச் சறுக்கென்ன, மலையேற்றம் என்ன என்று அப்பாவுடன் கும்மாள மாய்க் கழித்த நாட்கள் ஞாபகம் வந்தது. தன் பக்கத்தில் உட்கார்ந்து மணிக் கணக்காக அப்பா பிரியமாய்ப் பேசிய பேச்செல்லாம் ஞாபகம் வந்தது. 'என்னைப் போலவே நீயும் வக்கீலாக வரவேண்டும்' என்று சொல்லி, அவளைச் சட்டம் படிக்கும் படி தூண்டிய அவருடைய ஆர்வம் ஞாபகம் வந்தது. அவளையொத்த பெண்கள் எல்லாரும் காதலர் களுடன் சுற்றிக் கொண்டிருந்த உல்லாச காலத்தில் அவள் மட்டும் வழக்குகளிலும் பத்திரங்களிலும் கேஸ் கட்டு களிலும் தன்னை மூழ்கடித்துக் கொண்டு சட்டப் படிப்புப் படித்தது ஞாபகம் வந்தது.

அது மட்டுமல்ல. ஒரு நாள் திடீரென்று அவள் அம்மா வீட்டை விட்டு ஓடிப்போன அவமானமும் அவளுக்கு நினைவு வந்தது.

அதன்பின் வக்கீல் தொழிலில் இறங்க அவளுக்கு மனமில்லாமல் இருந்தது. ஆனால் 'நீயும் நானும் கூட்டாக வக்கீல் தொழில் நடத்தப் போகிறோம், ஜென்னி. ஆகவே நீ பிரமாதமாய்ப் படித்தாக வேண்டும்' என்று அப்பா சொன்ன வார்த்தைகள் ஞாபகம் வந்தது.

அப்பா எதுவும் சேர்த்து வைத்திருக்கவில்லை. இருந்த ஆயிரம் டாலரும் வேகமாய்க் கரைந்து கொண்டிருந்தது. எப்படி இனிமேல் வாழ்க்கையை ஓட்டப் போகிறோம்? நினைக்க நினைக்கத் திகைப்பா யிருந்தபோது, ஒருநாள்—

அவளுக்குக் கிரிமினல் சட்டப் பாடம் சொல்லிக் கொடுத்த பேராசிரியர் அவளைக் கூப்பிட்டனுப்பினார். "ஜென்னி, நியூயார்க் அரசாங்க வக்கீல் அலுவலகத்திலிருந்து எனக்குக் கடிதம் வந்திருக்கிறது என்னுடைய சிறந்த

மாணவர் ஒருவரை அனுப்பினால் அரசாங்க வக்கீலுக்கு உதவியாளராகச் சேர்த்துக் கொள்கிறார்களாம். நீ போகிறாயா?" என்றார்.

நியூயார்க்!

உற்சாகம் கரை புரண்டது. உடனே ஜெனிபர் ஒப்புக்கொண்டாள். அதற்கான பரீட்சை எழுதித் தேறி, வேலையையும் பெற்று விட்டாள்.

நியூயார்க் வந்து ஒரு பழைய கட்டிடத்தின் நாலாவது மாடியில் ஜாகை பிடித்துக் கொண்டாள். அந்தக் கட்டிடத்தில் லிப்ட் கிடையாது. அத்தனை படிகளையும் நடந்துதான் ஏறவேண்டும். பரவாயில்லை, தேகப் பயிற்சிக்கு நல்லது என்று ஆறுதல் செய்து கொண்டாள். அறையில் இருந்தவை பழைய நாற்காலி மேசைகள். அதுவும் பரவாயில்லை. எப்படியும் இங்கே அதிக நாள் நான் தங்கியிருக்கப் போவதில்லையே! வெற்றிகரமான வக்கீல் என்று பெயரெடுக்கிற வரையில்தான்... பிறகு ஜம்மென்ற பெரிய இடமாகப் போய்விட மாட்டோமா!

நாளைக் காலை புதிய வேலை... புதிய மனிதர்கள்... புதிய அனுபவங்கள்... புதிய சந்திப்புக்கள்....

அரசாங்க வக்கீல் டிசில்வாவின் அலுவலகம்.

இருபது இருபத்தைந்து வழக்கறிஞர்கள் அங்கே கூடியிருந்தார்கள். அவளைப் போலவே சட்டக் கல்லூரி யிலிருந்து இப்போதுதான் வெளிவந்தவர்கள் போல் தோன்றியது.

டிசில்வா ஒரு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, அமர்த்தலாகச் சொன்னார்: "நான் ஒரு முக்கியமான வழக்கை நடத்தி வருவது உங்களுக்குத் தெரிந்திருக்கும். உங்களில் சிலரை இந்த வழக்கில் எனக்கு உதவியாக அமர்த்திக் கொள்ளப் போகிறேன். தயாராயிருப்பவர்கள் முன் வரலாம்."

முதலில் கையைத் தூக்கியவள் ஜெனிபர்தான்.

ஒரு நிமிஷம் டிசில்வா தயங்குவது ஜெனிபருக்குப் புரிந்தது. நல்ல வேளை, அவளையும் இன்னும் ஐந்து பேரையும் தேர்ந்தெடுத்தார்.

அறையை விட்டு வெளியே வந்தாள் போலீசார் கொடுத்த அடையாளக் கார்டைக் கைப்பையில் பத்திரப் படுத்திக் கொண்டாள்.

நீதிமன்றம்.

அப்பா! எவ்வளவு கூட்டம்!

பத்திரிகை நிருபர்கள்; தினம் தினம் வழக்கைப் பற்றிப் படித்துவிட்டு ஆவலுடன் வேடிக்கை பார்க்க வந்திருக்கும் பொதுமக்கள்; வழக்கறிஞர்கள்-

ஜெனிபருக்கு அன்றுதான் முதல் நாள். ஆனால் அந்தக் கொலை வழக்கு விசாரணை ஆரம்பித்து அன்று ஐந்தாவது நாள் என்று அவளுக்குத் தெரியும்.

ஜெனிபர், குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்த மாரெட்டியை ஏறிட்டு நோக்கினாள்.

நல்ல உயரம், பருமனில்லா உடலமைப்பு. கறுப்பு முடியை அழகாக வெட்டிக் கொண்டிருந்தான். விலை யுயர்ந்த உடை. விலையுயர்ந்த காலணி.

ஏதோ நீதிமன்ற ஷூட்டிங்கில் நடிக்க வந்திருக்கும் சினிமா நட்சத்திரம் போல் அல்லவா இருக்கிறான்!

மாரெட்டியைப் பற்றி அவள் நிறைய கேள்விப் பட்டிருந்தாள். சட்ட விரோதமான காரியங்களில் இறங்கிக் கொலை கொள்ளைகளுக்கு அஞ்சாத மாஃபியா கும்பலின் தலைவருக்கு மருமகன் அவன் தலைவருக்கு வயசாகிக் கொண்டிருந்தது. இவன்தான் அவருடைய வாரிசு என்று பேசிக் கொண்டார்கள்.

பல கொள்ளை, கொலைக் குற்றங்களில் மாரெட்டிக்கும் பங்கு உண்டு. ஆனால் அவன் எந்த குற்றத்தையும் தானே நேரடியாகச் செய்வதில்லை. மற்றவர்களை வைத்தே வேலையை முடிப்பான். ஆகவே அவனை மடக்க முடியாமலிருந்தது- இதுவரை.

மூன்று வருடமாக அவனை மாட்ட வைக்க முயற்சி செய்து வருகிறார் டிசில்வா. திடீரென்று இப்போதுதான் அதிர்ஷ்டம் அடித்தது.

மாரெட்டியின் கையாளான ஸ்டேலா என்பவன், ஒரு கொள்ளை நடத்தப் போய், அதில் ஒரு கொலையும் செய்து வசமாகச் சிக்கிக் கொண்டிருந்தான்.

மரண தண்டனையிலிருந்து தப்ப வேண்டுமானால், அப்ரூவராக மாறி, மாரெட்டிக்கு எதிராகச் சாட்சி சொல்ல வேண்டுமென்று டிசில்வா நிபந்தனை போட்டார். அவனும் ஒப்புக்கொண்டிருந்தான்.

டிசில்வாவுக்கு ஒரே ஆனந்தம்!

மாரெட்டிக்கு மட்டும் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டால், அவருக்கு நியூயார்க்கில் கவர்னர் பதவி கிடைக்கக் கூடும். நியூயார்க் கவர்னராக வந்தால் பிற்பாடு அமெரிக்க ஜனாதிபதியாகக் கூட வர முடியும்!

ஆகவே, டிசில்வா இந்த வழக்கில் ஜாக்கிரதையாக இருந்தார்.

எந்தச் சின்ன விஷயத்தையும் விட்டு வைக்கத் தயாராயில்லை. வழக்கைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்துத் தயாரித்திருந்தார். மாரெட்டியின் வழக்கறிஞர்கள் எந்தெந்த இண்டு இடுக்குகளைச் சாதகமாக்கிக் கொள்வார்களோ அதையெல்லாம் கண்டு பிடித்து, ஓட்டைகளை அடைத்திருந்தார்.

சாட்சிக் கூண்டில் ஏறி நின்றான் ஸ்டேலா. சின்ன முகம். தெற்றுப் பல், பார்வையில் ஒரு திருட்டுத்தனம் இருந்தது.

மாரெட்டியின் பக்கம் திரும்பவே அவன் நடுங்கிக் கொண்டிருப்பது ஜெனிபருக்குத் தெரிந்தது.

வழக்கில் மிகமிக முக்கியமான சாட்சி இந்த ஸ்டேலா தான். அவனை டிசில்வா வெகு பத்திரமாகப் பாதுகாத்து வந்தார். தானே நேரிடையாகக் காவலாளரைத் தேர்ந் தெடுத்து அவனுக்குக் காவல் போட்டிருந்தார்.

ஒரு ராத்திரி தங்கின இடத்தில் இன்னொரு ராத்திரி தங்க வைக்காமல் அவன் ஜாகையை மாற்றிக் கொண்டே யிருந்தார்.

ஆயுதம் தாங்கிய நாலு போலீசார் அவனை எப்போதும் காவல் காத்தார்கள். யாரும் அவனை நெருங்க முடியாது.

மாரெட்டியிடம் கொலை நடுக்கம் ஸ்டேலாவுக்கு. ஆனால் டிசில்வா தன் உயிருக்கு ஆபத்து வராமல் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையிலிருந்தான். அதனால் தான்-மாரெட்டிக்கு எதிராகச் சாட்சி சொல்லச் சம்மதித்திருந்தான்.

டிசில்வா சொன்னார்:

"மிஸ்டர் ஸ்டேலா, உங்கள் மீது ஒரு கொலைக் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறது. ஆனால் அரசாங்கத்தின் தரப்பில் சாட்சியம் சொல்ல நீங்கள் முன் வந்திருப்பதால் உங்களுக்குக் குறைவான தண்டனை தருவதாக அரசாங்கம் ஒப்புக் கொண்டிருக்கிறது. என்ன, நான் சொல்வது சரிதானே?"

"ஆமாம் சார்" அவன் கைகள் உதறிக் கொண்டிருப்பதை ஜெனிபர் கண்டாள்.

"மிஸ்டர் ஸ்டேலா, குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மாரெட்டியிடம் உங்களுக்குப் பழக்கம் உண்டு. இல்லையா?"

"ஆமாம். சார்."

"உங்களுக்கும் மாரெட்டிக்கும் எப்படிப் பழக்கம்?" என்றார் டிசில்வா.

"நான் அவரிடம் வேலை பார்த்தேன்..."

"எத்தனை காலம்?"

"சுமார் பத்து வருஷமாக."

குரல் கிணற்றுக்குளிருந்து வருவது போலிருந்தது.

"கொஞ்சம் சத்தமாகச் சொல்லுங்களேன்" என்று அதட்டினார் டிசில்வா.

"சுமார் பத்து வருஷமாய்." இப்போது அவன் தொண்டை நடுங்க ஆரம்பிப்பதை ஜெனிபர் கவனித்தாள்.

"மாரெட்டியிடம் நீங்கள் எந்த மாதிரியான முறையில் வேலைகள் பார்த்தீர்கள் ஸ்டேலா?"

"அது வந்து... தகராறு பண்ணுகிறவர்களைச் சரிக்கட்டுவது என் வேலை..."

"இன்னும் கொஞ்சம் புரியும்படி சொல்லுங்களேன்?"

"அதாவது... தகராறு ஏதாவது முளைத்தால்- யாராவது எங்க கட்டுக்கு மீறி, அடங்காப்பிடாரியாக இருந்தால்- அந்த ஆளைச் சரி பண்ணும்படி மாரெட்டி என்னிடம் சொல்லுவார்."

"சரி பண்ணுவதென்றால்?"

"உங்களுக்கு தெரிந்ததுதான்- அடி உதை," என்றான் ஸ்டேலா.

"உதாரணமாக ஒன்று சொல்ல முடியுமா?"

மாரெட்டியின் வழக்கறிஞர் சரேலென எழுந்து, "ஆட்சேபிக்கிறேன், யுவர் ஆனர், இந்தக் கேள்வி தேவையற்றது." என்றார்.

நீதிபதி என்ன சொல்லப் போகிறார் என்று அவர் முகத்தைப் பார்த்தாள் ஜெனிபர்.

எதிரி வக்கீலின் ஆட்சேபணையை நீதிபதி தள்ளி விட்டார்.

ஸ்டேலா தொடர்ந்து சொன்னான்:

"வந்து... மாரெட்டி பயங்கர வட்டிக்குக் கடன் கொடுக்கிறவர். இரண்டு வருஷம் முந்தி ஜிம்மி என்பவன் வட்டி கட்டவில்லை. அவனுக்குப் பாடம் கற்பிக்கும்படி மாரெட்டி என்னை அனுப்பினார்."

"என்ன செய்தீர்கள்?"

"அவன் காலை ஒடித்தேன்."

டிசில்வா ஓரக் கண்ணால் ஜூரர்களைப் பார்த்துக் கொண்டார். ஜெனிபரும் கவனித்தாள்.

அவர்கள் முகத்தில் அதிர்ச்சி பரவியிருப்பது தெரிந்தது. வழக்கு டிசில்வாவுக்குச் சாதகமாக முடியப் போகிறது நிச்சயம் என்று நினைத்துக் கொண்டாள்.

"மிஸ்டர் ஸ்டேலா! எட்டி, ஆல்பர்ட் என்ற இரண்டு சகோதரர்களைக் கொலை செய்ததாக மாரெட்டியின் மீது வழக்கு நடக்கிறது. உங்களுக்கு அவர்களைத் தெரியுமில்லையா?"

"ஓ, நன்றாய்."

"அவர்கள் கொலை செய்யப்பட்ட போது அங்கே இருந்தீர்களா?"

"ஆமாம்." அவன் உடம்பு மறுபடி நடுங்குவதை ஜெனிபர் கவனித்தாள்.

"கொலையைச் செய்தவர் யார்?"

ஒரு வினாடி அவன் பார்வை மாரெட்டியை நோக்கிச் சென்றது. "மாரெட்டி," என்றான் மெதுவாக.

"இதோ இங்கே நிற்கும் மாரெட்டியைத் தானே சொல்கிறீர்கள்?"

"ஆமாம்."

"அந்தச் சகோதர்களை ஏன் கொல்ல வேண்டுமென்று மாரெட்டி உங்களுக்குச் சொன்னாரா?"

"தனக்குச் சேர வேண்டிய பங்கைக் கொடுக்காமல் அவர்கள் ஏமாற்றினார்களாம்..."

ஸ்டேலாவின் கை மறுபடியும் நடுங்க ஆரம்பிப்பதையும் மறு கையினால் அதை அழுத்திக் கொள்வதையும் ஜெனிபர் பார்த்தாள். மாரெட்டியின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவன் முகத்திலோ உடம்பிலோ எவ்விதச் சலனமும் இருக்கவில்லை. எப்படித்தான் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் இருக்கிறானோ!

"அப்புறம் என்ன நடந்தது?" என்று கேட்டார் டிசில்வா.

"மெலிசன் என்கிற கடற்கரை ஓட்டலுக்கு அவர்களை மாரெட்டி வரச் சொன்னார். ஓட்டலில் கார் நிறுத்தும் இடத்துக்கு அவர்களை நான் அழைத்து வந்தேன். மாரெட்டி அங்கே காத்திருந்தார். அவர்கள் காரிலிருந்து இறங்கியதுமே நான் நகர்ந்து கொண்டேன். மாரெட்டி அவர்களைச் சுட ஆரம்பித்தார்."

"சகோதரர்கள் இருவரும் செத்து விழுந்தார்கள். அதை நீங்கள் பார்த்தீர்கள். இல்லையா?"

"ஆமாம்."

"பங்கைத் தராமல் மோசடி செய்தார்கள் என்பதற்காக இரண்டு பேரைச் சுட்டுப் பச்சைப் படுகொலை மாரெட்டி செய்ததை நீங்கள் கண்ணால் பார்த்தீர்கள். இல்லையா?"

மாரெட்டியின் வக்கீல் எழுந்து, "இதை ஆட்சேபணை செய்கிறேன். சாட்சிக்கு எடுத்துக் கொடுக்கிறார் என்றார்."

"ஆட்சேபணை ஏற்கப்படுகிறது," என்றார் நீதிபதி.

டிசில்வா ஜூரர்களின் முகங்களை நோக்கினார். இந்த வழக்கில் ஜெயித்தாகி விட்டது என்ற அந்த முகங்களிலிருந்து கண்டு கொண்டார். ஜெனிபருக்கும் அப்படியே தோன்றியது.

"இனி தாங்கள் குறுக்கு விசாரணை செய்யலாம்," என்று எதிரி வக்கீலிடம் சொல்லிவிட்டு உட்கார்ந்தார் டிசில்வா.

எதிரி வக்கீல் எழுந்தார். சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்தார். "ஒரு விண்ணப்பம் யுவர் ஆனர். இப்போது உணவு இடைவேளை நெருங்கிக் கொண்டிருக்கிறது. என்னுடைய குறுக்கு விசாரணையைத் தடங்கலில்லாமல் ஒரே மூச்சாக நடத்த விரும்புகிறேன். ஆகவே இடைவேளைக்குப் பிறகு என் குறுக்கு விசாரணையை வைத்துக் கொள்ளலாமென்று பார்க்கிறேன். கோர்ட்டாரவர்கள் அனுமதிக்க வேண்டும்," என்றார்.

"அப்படியே ஆகட்டும்." நீதிபதி மேஜையில் சுத்தியால் தட்டினார். "கோர்ட் இரண்டு மணிக்கு ஒத்தி வைக்கப் படுகிறது."

நீதிபதி எழுந்து பக்கத்து அறைக்குள் சென்றார். ஜூரர்கள் ஒருவர்பின் ஒருவராக வெளியேறினார்கள் ஆயுதம் தாங்கிய நாலு போலீசார் ஸ்டேலாவை முன் வாசல் வழியே பாதுகாப்பான அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஜெனிபரும் எழுந்தாள்.

பத்திரிகை நிருபர்கள் டிசில்வாவைச் சூழ்ந்து கொள்வதையும், வழக்கு எப்படியாகும் என்பதைப் பற்றிக் கேள்வி கேட்பதையும் பார்க்கையில் அவளுக்கு உற்சாகமாக இருந்தது. டிசில்வா நிபுணர்தான்! டிசில்வாவின் கீழ் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது குறித்து அவள் பெருமைப்பட்டுக் கொண்டாள்.

வெளியே வந்து நின்றாள்.

இப்போது டிசில்வா தன் உதவியாளர் சிலருடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

அந்தக் கும்பலில் ஓர் ஆள் டிசில்வாவிடம் ஏதோ கேட்கிறமாதிரி தெரிந்தது. பிறகு அவன் ஜெனிஃபரை நோக்கி வந்தான். ஒரு பெரிய காகித உறை அவனிடம் இருந்தது.

"நீங்கள்தானே மிஸ் ஜெனிஃபர்?" என்றான்.

"ஆமாம்."

"இதை ஸ்டேலாவிடம் கொடுக்கும்படி சீஃப் சொன்னார். இதிலுள்ள தேதிகளை நன்றாக அவன் பார்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்றார். எதிரி வக்கீல் குறுக்கு விசாரணை செய்யும்போது தடுமாறாமல் இருக்க வேண்டு மாம். சீஃப் சொல்கிறார்."

டிசில்வாவைப் பார்த்தாள் ஜெனிஃபர். அவர் அவள் பெயரை ஞாபகப் படுத்திக் கொண்டு ஒரு வேலையை ஒப்படைத்திருக்கிறார்! அவளுக்குப் பெருமையாயிருந்தது.

"சீக்கிரம் புறப்படுங்கள். ஸ்டெலாவுக்கு மந்த மூளை. தேதிகளை ஒழுங்காய்ச் சொல்ல வேண்டுமே என்று சீஃப் கவலைப்படுகிறார்."

ஜெனிஃபர் அந்த உறையுடன் வேகமாக நடந்தாள்.

ஸ்டேலா அழைத்துச் செல்லப்பட்டிருந்த வாசலை அடைந்தாள். ஆயுதம் தாங்கிய ஒரு போலீஸ்காரர் அவளை வழி மறித்தார். "என்ன வேண்டும் மிஸ்?"

"நான் அரசாங்க வக்கீலின் அலுவலகத்திலிருந்து வருகிறேன்." தன் அடையாளக் கார்டை எடுத்துக் காட்டினாள். "டிசில்வா இந்த உறையை ஸ்டேலாவிடம் கொடுக்கச் சொல்லி இருக்கிறார்."

அடையாளக் கார்டைக் கவனமாகப் பரிசீலித்தார் காவலர். பிறகு கதவைத் திறந்தார்.

ஸ்டேலா தங்கியிருக்கும் அறைக்குள் அவள் நுழைந்த போது இன்னொரு காவலர், "இருங்கள்! இங்கே யாரும் நுழையக் கூடாது!" என்றார்.

வெளியே இருந்தவர், "அவர் அரசாங்க வக்கீலிட மிருந்து வருகிறார், உள்ளே விடுங்கள்," என்றார்.

ஜெனிஃபர் உறையை ஸ்டேலாவிடம் கொடுத்தாள். "இதில் உள்ள தேதிகளை நன்றாகப் பார்த்து வைத்துக் கொள்ளுங்கள். டிசில்வா சொன்னார்."

ஸ்டேலா திருதிருவென்று விழித்தான். அவன் உடம்பு நடுங்கிக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது.

2

ஸ்டேலாவிடம் உறையைத் தந்துவிட்டு நீதிமன்றத்துக்குத் திரும்பிய போது ஜெனிபருக்கு ஒரு கடமையை முடித்துவிட்ட திருப்தி இருந்தது.

அவளை நம்பி ஒரு பொறுப்பை ஒப்படைத்தார் சீஃப். அதை நிறைவேற்றி விட்டோம்.

பசிக்கிறது என்பதும், காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை என்பதும் இப்போதுதான் அவளுக்கு

உறைத்தது. ஏதாவது உணவு சாப்பிடலாம் என்று திரும்பினாள்.

நீதிமன்றக் கூடத்தைக் கடந்தாள்.

சற்று முன் கலகலவென்றிருந்த இடம் இப்போது வெறிச்சென்று இருந்தது. எல்லாரும் இடைவேளைக்காகப் போயிருந்தார்கள்.

ஏனோ அந்த இடத்தைப் பார்த்துக் கொண்டு நின்றிருக்க வேண்டும் போல ஆசையாயிருந்தது ஜெனிபருக்கு நின்றாள்.

நீதிபதியின் ஆசனம்... பார்வையாளர்களுக்கான பெஞ்சுகள்... வழக்கறிஞர்களுக்கான நாற்காலிகள்... வாதிக்கும் பிரதிவாதிக்குமான கூண்டுகள்.

கூடம் அப்படியொன்றும் அழகாக இல்லை என்று ஜெனிபர் நினைத்துக் கொண்டாள் ஆனால் அவள் நெஞ்சில் பெருமிதம் நிறைந்திருந்தது.

இந்த நீதிமன்றமல்லவா சுதந்திரத்தின் அஸ்திவாரம்! இதுபோன்ற ஆயிரக்கணக்கான நீதி மன்றங்கள் இருப்பதால் அல்லவா மனிதன் காட்டுமிராண்டியாக ஆகாமல் இருக்கிறான்! நாகரிகத்தின் கோட்டைகளல்லவா இந்த நீதிமன்றங்கள்!

அவள் உள்ளத்தில் உறுதி ஏற்பட்டது. இந்த நீதிமன்றங்களை, நீதியமைப்பை, சட்டத்தை, நியாயத்தை கட்டிக் காக்க நான் உயிரைக் கொடுத்துப் பாடு படுவேன். வழக்கறிஞர் தொழிலின் மூலம் நான்....

சட்டென்று அவள் எண்ணங்கள் கலைந்தன.

என்ன அது?

தூரத்தில் ஏதோ ஒரு சலசலப்புக் கேட்கிற மாதிரி இருந்தது.

சத்தம் வரவரப் பெரிதாகிறது. என்னவாக இருக்கும்? சுற்றும் முற்றும் பார்த்தாள் திகைப்புடன்.

திடீரென்று அபாய மணிகள் ங்ணங்ணவென்று அடிக்கத் தொடங்கின. வெராந்தாவில் பலர் தடதடவென்று ஓடுவது தெரிந்தது. துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு காவலர்கள் நீதிமன்றத்தின் வாசலுக்கு விரைந்தார்கள்.

என்ன நேர்ந்தது? ஜெனிபருக்கு எதுவும் புரியவில்லை.

ஒரு வேளை... ஒரு வேளை...

குற்றவாளி மாரெட்டி தப்பித்து விட்டானோ?

அப்படித்தான் இருக்கும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டபடி வெராந்தாவுக்கு ஓடிச்சென்று பார்த்தாள்.

அங்கே ஏகப்பட்ட அமளி துமளியாக இருந்தது. அபாய மணிகள் இன்னும் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தன. அந்த இரைச்சலுக்கும் மேலாக அதிகாரிகளின் கட்டளைகள் கேட்டன. டெலிபோனில் தங்கள் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்த நிருபர்கள் அதை அப்படியே விட்டு விட்டு 'என்ன? என்ன?' என்று ஒருவரையொருவர் கேட்ட வண்ணம் ஓடிவந்தார்கள்.

என்ன இதெல்லாம்? என்ன இதெல்லாம்? யாரைக் கேட்பது?

அதோ!

அரசாங்க வக்கீல் டிசில்வா- அவளுடைய சீஃப் தூரத்தில் நிற்பதைக் கண்டாள். தனியே நின்றிருக்கவில்லை. ஐந்தாறு காவலர்களிடம் பதட்டமாக ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார் அவர் முகம் ரத்தம் வற்றி வெளுத்திருந்தது. 'ஐயோ! எந்த நிமிஷமும் மாரடைத்து விழுந்து விடுகிற மாதிரி அல்லவா இருக்கிறார்!' என்று ஜெனிபர் எண்ணிக் கொண்டாள்.

உடனே அவரிடம் சென்று அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும்.

டிசில்வாவை நோக்கி அவள் ஓரடி எடுத்து வைத்த அதே சமயத்தில்-

ஒரு காவலர் அவளைக் கவனித்தார். அருகில் இருந்த இன்னொரு காவலரிடம் அவளைச் சுட்டிக் காட்டினார். உடனே இருவரும் அவளை நோக்கி வேகமாக வந்தார்கள்.

அவர்களை ஜெனிபருக்கு அடையாளம் தெரிந்தது. ஸ்டேலாவின் அறைக் காவலர்கள்.

அவர்களைக் கேட்டால் விஷயம் தெரியும். ஆவலுடன் முன்னே நடந்தபோது-

ஜெனிபரிடம் அவர்கள் வந்தார்கள்.

கண்ணிமைக்கும் நேரம்தான்.

'என்ன? என்ன?' என்று அவள் பதறுவதைப் பொருட் படுத்தாமல்-

அவள் கையில் விலங்கு மாட்டினார்கள்.

ஜெனிபர் கைதானாள்.

என்ன நடக்கிறது ஏது நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளும் சக்தி வந்தபோது-

நீதிபதியின் அறையில் அவள் நின்றிருந்தாள்.

நீதிபதி, மாரெட்டியின் வக்கீல், அரசாங்க வக்கீல் டிசில்வா மூவரும் அவளையே பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

நான் என்ன குற்றம் செய்தேன்? எதற்காக என்னைக் கைது பண்ணினீர்கள்? ஏன் என்னை இப்படிக் குற்றவாளி போல் பிடித்து வைத்திருக்கிறீர்கள்? இப்படி நூறு கேள்விகள் அவள் நுனி நாக்கில் இருந்தபோதும் எதுவும்

கேட்க முடியவில்லை. அதிர்ச்சியும் பதற்றமும் அவள் நாவைக் கட்டிப் போட்டிருந்தன.

நீதிபதி அவளைப் பார்த்துச் சொன்னார்: "இதோ பாரம்மா, நீ இப்போது எதுவும் சொல்ல வேண்டுமென்கிற கட்டாயம் கிடையாது. அப்படியே ஏதாவது சொல்வ தென்றாலும் ஒரு வக்கீலை வைத்துக் கொண்டு சொல்லலாம். அதற்கு உனக்கு உரிமை உண்டு."

அப்போதும் அவளுக்குப் புரியவில்லை."யுவர் ஆனர்... நான்... நான்..." என்று திணறினாள்.

அரசாங்க வக்கீல் டிசில்வா எழுந்து அவளுக்கு மிக அருகில் வந்து நின்றார். அவர் முகத்தில் ஏன் இவ்வளவு கோபம்? அவருடைய கண்களிலிருந்து தீப்பொறி பறந்து கொண்டிருந்தது. அவர் நெற்றிப் பொட்டு தடக் தடக்கென்று அடித்துக் கொண்டது கூட அவளுக்குத் தெரிந்தது.

கடுமையான குரலில் அவர் கேட்டார். "எவ்வளவு பணம் வாங்கினாய்?"

ஜெனிபர் திடுக்கிட்டாள். "பணம் வாங்கினேனா! எதற்கு?"

"ஸ்டேலாவிடம் அந்தக் காகித உறையைக் கொண்டு போய்க் கொடுத்தாயே, அதற்கு."

"அது... நீங்கள்தான் அவள் குரல் நடுங்கியது. டிசில்வா நீதிபதியிடம் சென்றார். அவருடைய மேஜை மீதிருந்த அந்தக் காகித உறையை எடுத்துக்கொண்டு மறுபடியும் ஜெனிபரிடம் வந்தார். "இதை ஸ்டேலாவிடம் கொடுக்கும்படி யாரும் உனக்குச் சொல்லவில்லை? அப்படித்தானே? நீயாகவே கொண்டு போய் அவனிடம் கொடுத்தாய்? அப்படித்தானே?"

உறையை அவிழ்த்து உதறினார் டிசில்வா

பொத்தென்று ஒரு சிட்டுக் குருவி விழுந்தது. செத்த குருவி. கழுத்து முறிக்கப்பட்டிருந்தது.

அவள் வாயடைத்துப் போனாள்.

இதுவரை தெரியாததெல்லாம் ஒரே கணத்தில் புரிந்தது.

'எனக்கு எதிராகச் சாட்சி சொன்னாயோ இந்தக் கதிதான் உனக்கு' என்று ஸ்டேலாவுக்கு உணர்த்தி யிருக்கிறார்கள்! இந்தச் சிட்டுக் குருவியைப் போல உன்னையும் கழுத்தை முறித்துக் கொன்று விடுவோம் என்று ஸ்டேலாவைப் பயமுறுத்தி இருக்கிறார்கள்!

"இதை... இதை... நீங்கள் தான் கொடுக்கச் சொன்னதாக ஒரு ஆள் வந்து என்னிடம் தந்தான்.."

"எந்த ஆள்?"

எந்த ஆள்? யார் அவன்?

அவளுக்குத் தெரியவில்லை.

"எந்த ஆள் என்று கேட்கிறேன்." டிசில்வா மறுபடி உறுமினார்.

"அவன்... அவன் உங்களோடு பேசிக் கொண்டி ருந்தான் பிறகு என்னிடம் வந்தான். இந்த உறையைக் கொடுத்தான் ஸ்டேலாவிடம் நீங்கள் கொடுக்கச் சொன்னதாகச் சொன்னான் என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான்... என் பெயர் அவனுக்குத் தெரிந்திருந்ததே?"

"தெரியாமல் இருக்குமா பின்னே?" குத்தலாகச் சொன்னார் டிசில்வா "உனக்குப் பணம் தந்தவனாச்சே! பெயர் தெரியாமலா இருக்கும்? அது போகட்டும். எவ்வளவு பணம் கொடுத்தார்கள்? அதைச் சொல்லும்மா."

பணம்! பணம்! பணம்! ஜெனிபருக்குத் தலை சுற்றியது கடவுளே! எதிரியிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ததாக அவள்மீது பழி விழுந்திருக்கிறது!

இல்லை. இதெல்லாம் நிஜமில்லை. இதோ எந்த நிமிஷத்திலும் தூக்கத்திலிருந்து எழுந்து கொள்ளப் போகிறோம். எந்த நிமிஷத்திலும் கனவு கலையப் போகிறது. இப்போதுதான் குளித்து உடைமாற்றிக் கொள்ளப் போகிறோம். அரசாங்க அலுவலகத்துக்கு புறப்படப் போகிறோம். பதவி ஏற்றுக் கொள்ளப் போகிறோம்...

ஊஹூம். எவ்வளவுதான் அவள் கற்பனை செய்து கொண்டாலும் நிஜம் நிஜம்தான். ஒரு பயங்கரமான சதியில் அவள் சிக்கிக் கொண்டிருப்பது நிஜம்தான்.

"எவ்வளவு பணம் வாங்கிக் கொண்டாய் என்று கேட்கிறேன்!" டிசில்வாவின் கோபக் குரல் மறுபடி கேட்டது. "எவ்வளவு வாங்கிக் கொண்டிருந்தாலும் சரி, அது உனக்கு உபயோகப்படப் போவதில்லை. நீ செய்த காரியத்துக்கு உன்னை ஜெயிலுக்கு அனுப்பவேண்டும். விடுதலையாகி வரும்போது கிழவியாகியிருப்பாய். அந்தப் பணத்தை அனுபவிக்கமுடியாது!"

ஜெனிபருக்குக் கட்டுக்கடங்காத ஆத்திரம் வந்தது. "நான் லஞ்சம் எதுவும் வாங்கவில்லை!" என்று கத்தினாள்.

இத்தனை நேரமும் பேசாமலே இருந்த மாரெட்டியின் வக்கீல் இப்போது குறுக்கிட்டார்: "யுவர் ஆனர், இப்படியே நாம் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. வழக்கு விசாரணையை தொடர வேண்டாமா?"

"ஆமாம்," என்று நீதிபதியும் ஒப்புக்கொண்டு, அரசாங்க வக்கீலடம் திரும்பினார்: "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ஸ்டேலாவை இவர் குறுக்கு விசாரணை செய்யலாமல்லவா?"

டிசில்வா கொதித்துப் போயிருந்தார் "குறுக்கு விசாரணையா? பயத்தில் குலை நடுங்கிக் கொண்டிருக்கிறான் ஸ்டேலா. மாரெட்டிக்கு எதிராக இனிமேல்

வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூடச் சாட்சி சொல்லமாட்டான்!"

"அப்படியானால் இந்த வழக்கை மறுவிசாரணை செய்ய வேண்டியது தான்," என்றார் நீதிபதி.

தான் அரும்பாடு பட்டு அமைத்திருந்த வழக்கு தன் கண்ணெதிரிலேயே சரிந்து விழுவதை டிசில்வாவினால் பொறுக்க முடியவில்லை. ஜெனிபரைப் பார்த்துப் பல்லைக் கடித்தார் 'இருக்கட்டும் இருக்கட்டும். இவளை உண்டு இல்லை என்று பண்ணாமல் விடுவதில்லை!' என்று அவர் பார்வை கூறிற்று.

"சரி." நீதிபதி எழுந்துகொண்டார். "குற்றம் சாட்டப் பட்டிருப்பவரை விடுதலை செய்ய வேண்டியது தான். ஜூரர்களையும் கலைத்து விடலாம். நான் உத்தரவு பிறப்பிக்கிறேன்.

"நன்றி யுவர் ஆனர்," என்றார் மாரெட்டியின் வழக்கறிஞர். அவருக்கு இது மாபெரும் வெற்றி. ஆனால் முகத்தில் துளிகூடச் சந்தோஷத்தை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

"இன்னொரு விஷயம்," என்றார் டிசில்வா. ஜெனிபரை நோக்கி ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, நீதிபதியிடம், "இவளைச் சும்மா விட்டுவிட்டால் எப்படி? வழக்கு விசாரணையில் தடை ஏற்படுத்தி யிருக்கிறாள். ஒரு கொலை வழக்கில் முக்கியமான சாட்சியாக இருந்தவனைக் கலைத்திருக்கிறாள். இவளை இவளை..." என்றார் ஆத்திரத்தில் மேற்கொண்டு வார்த்தைகள் வரவில்லை.

ஜெனிபருக்கு கோபம் வந்தது.

"சார், இந்தக் குற்றச்சாட்டில் கொஞ்சம்கூட உண்மை யில்லை. நான் செய்தது முட்டாள்தனம் தான். ஒப்புக் கொள்கிறேன் நீங்கள் ஸ்டேலாவிடம் கொடுக்கச்

சொன்னீர்களென்று உண்மையிலேயே நம்பி அந்த உறையை அவனிடம் கொடுத்தேன். மற்றபடி யாரும் எனக்கு எந்த லஞ்சமும் கொடுக்கவில்லை," என்றாள் ரோஷத்துடன்.

நீதிபதி மென்மையான குரலில் சொன்னார்: "நீ என்ன நோக்கத்துடன் செய்திருந்தால் என்னம்மா? விபரீதம் ஏற்பட்டது ஏற்பட்டதுதானே? வக்கீல்கள் முறை தவறி நடந்தால் அதைப்பற்றி விசாரிக்க ஒரு குழு இருக்கிறது. அதனிடம் உன் விஷயத்தை ஒப்படைக்கிறேன். உன் மீது தப்பு இருப்பதாக அந்தக் குழு கருதினால்..."

கருதினால்? ஜெனிபர் மூச்சைப் பிடித்துக் கொண்டு காத்திருந்தாள்.

"வக்கீல் தொழிலிலிருந்தே உன்னை விலக்கி விடுவார்கள்," என்று நீதிபதி முடித்தார்.

உலகமே சுழன்றது ஜெனிபருக்கு.

வக்கீல் தொழில் செய்ய முடியாமல் தடையா?

"யுவர் ஆனர்! நான்...

"நீ போகலாம்."

சுற்றியிருந்தவர்களை ஏறிட்டு நோக்கினாள் அவள். அத்தனை முகங்களிலும் பகைமை பளீரிட்டது.

என்ன சொல்ல முடியும் இவர்களிடம்? என்ன சொல்லி என்ன பயன்?

மேஜை மீது கிடந்தது அந்தச் செத்த குருவி.

அவள் சொல்வதற்கு எதுவுமில்லாமல் கதையை முடித்து விட்டதே அது!

3

ஜெனிபரால் தலை நிமிர முடியவில்லை.

அன்று மாலை எல்லாச் செய்தித் தாள்களையும் அவள்தான் அடைத்துக் கொண்டிருந்தாள்.

அரசாங்க வக்கீல் ரொம்ப ரொம்ப நம்பியிருந்த கொலை வழக்கு. மாரெட்டிக்கு மரண தண்டனை கிடைக்க கூடிய வழக்கு. அதில் ரொம்ப ரொம்ப முக்கியமான சாட்சி ஸ்டேலா. அவனிடம் கழுத்து முறிக்கப்பட்ட ஒரு சிட்டுக் குருவியைக் கொடுத்தாள் ஜெனிபர். அவன் நடுங்கிப் போய் வாயை மூடிக் கொண்டுவிட்டான்.

பத்திரிகைகளிலும் டிவியிலும் அவள் புகைப் படங்கள்தான்.

அவள் நீதிபதியின் அறையிலிருந்து வெளிப்படும் போது எடுத்த ஒரு படம். முண்டியடித்துக் கூட்டத்தை விலக்கி கொண்டு செல்வது ஒரு படம். பத்திரிகை நிருபர்கள் அவளைச் சூழ்ந்து கொள்வது ஒரு படம்.

ஜெனிபருக்கு இதயத்தை அடைத்தது.

என்ன பயங்கரமான விளம்பரம்!

காலையில் நீதிபதியின் அறையிலிருந்து வெளி வந்ததுமே பத்திரிகை நிருபர்களும் வானொலி நிருபர்களும் அவளை முற்றுகையிட்டார்கள். ஓடி விட வேண்டும் போலிருந்தது அவளுக்கு. ஆனால் தன்மானம் தடுத்தது.

'மிஸ் ஜெனிபர், அந்தச் சிட்டுக் குருவியை உங்களிடம் யார் கொடுத்தார்கள்?'

'மிஸ் ஜெனிபர், மாரெட்டியை முன்பே உங்களுக்குத் தெரியுமல்லவா?'

'மிஸ் ஜெனிபர், இந்த வழக்கில் வெற்றி பெற்று நியூயார்க் கவர்னராக வேண்டுமென்று டிசில்வா திட்ட மிட்டிருந்தார் இல்லையா? இனிமேல் அது என்ன ஆகும்?'

'மிஸ் ஜெனிபர், உங்களை வக்கீல் தொழிலிருந்து நீக்கப் போகிறார்களாமே? டிசில்வா சொல்லியிருக்கிறாரே? அதை எதிர்த்து நீங்கள் போராடுவீர்களா?'

எந்தக் கேள்விக்கும் ஜெனிபர் பதில் சொல்லவில்லை. உதடுகளை இறுக்கிக் கொள்டாள் 'எதுவும் சொல்ல விரும்பவில்லை,' என்று மட்டுமே சொன்னாள்.

அவள் பதில் சொன்னாலும் சரி சொல்லா விட்டாலும் சரி அவளைப் பற்றிச் செய்திகள் வந்து கொண்டே தான் இருந்தன.

தெருவிலும் பஸ்ஸிலும் கடையிலும் ஜனங்கள் தன்னை உற்றுப் பார்ப்பது அவளுக்குத் தெரிந்தது. அந்தப் பார்வைக்குப் பயந்து வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க ஆரம்பித்தாள். வாசல் மணி அடித்தாலும் டெலிபோன் மணி அடித்தாலும் எடுப்பதில்லை.

மூட்டை முடிச்சைக் கட்டிக் கொண்டு சொந்தக் கிராமத்துக்கே போய்ச் சேரலாமா என்று ஒரு நாள் தோன்றும். இன்னொரு நாள், வக்கீல் தொழிலை விட்டு விட்டு வேறு எங்காவது வேலை தேடலாமா .என்று நினைப்பாள்.வேறொரு நாள் தற்கொலை செய்து கொண்டு விடலாமா என்று யோசிப்பாள்.

டிசில்வாவுக்கு நீள நீளமாய்க் கடிதங்கள் எழுதினாள். மடத்தனமாகச் செய்து விட்டேன், மன்னியுங்கள் என்று காலில் விழாத குறையாக எழுதினாள். ஆனால் எழுதியது எதையும் தபாலில் சேர்க்கவில்லை. கிழித்துப் போட்டாள்.

அலுப்பும் சலிப்பும் அவளை ஆட்கொண்டன. நியூயார்க்கில் சினேகிதர் என்று யார் இருக்கிறார்கள்?

யாரிடம் அவள் நாலு வார்த்தை பேசி ஆறுதல் பெற முடியும்? எவரும் இல்லை.

கதவை உள்பக்கம் தாளிட்டுக் கொண்டு அடைந்து கிடந்தாள். ராத்திரி வெகு நேரம் கழித்துத்தான் வெளியே செல்வாள். நடமாட்டமில்லாத தெருக்களில் மனம் போனபடி திரிந்துவிட்டு வீடு திரும்புவாள்.

அன்று நீதிமன்றத்தில் நடைபெற்றதெல்லாம் சினிமா போலத் திரும்பத் திரும்ப அவள் மனக் கண்ணில் ஓடும்.

அப்படி நடந்திருக்காமல் வேறு விதமாய் நடந்திருந்தால்...!

கற்பனை செய்து பார்ப்பாள்.

டூசில்வாவுடன் பேசிக் கொண்டிருந்த ஓர் ஆள் அவளை நோக்கி வருகிறான். அவன் கையில் ஒரு காகித உறை இருக்கிறது.

மிஸ் ஜெனிபர்?

ஆமாம்.

இதை ஸ்டேலாவிடம் கொடுக்கச் சொன்னார் சீஃப்.

ஜெனிபர் அவனைக் கடுமையாகப் பார்க்கிறாள். உங்கள் அடையாளச் சீட்டைக் காட்டுங்கள்.

அந்த ஆள் பயந்து போய் ஓடிவிடுகிறான்.

டூசில்வாவுடன் பேசிக் கொண்டிருந்த ஓர் ஆள் அவளை நோக்கி விரைந்து வருகிறான். அவன் கையில் ஒரு காகித உறை இருக்கிறது.

மிஸ் ஜெனிபர்?

.ஆமாம்.

இதை ஸ்டேலாவிடம் கொடுக்கச் சொன்னார் சீஃப்.

ஜெனிபர் உறையைப் பிரித்துப் பார்க்கிறாள். உள்ளே ஒரு செத்த சிட்டுக் குருவி இருக்கிறது. உன்னை நான் கைது செய்கிறேன் என்கிறாள்.

டிசில்வாவிடம் பேசிக் கொண்டிருந்த ஓர் ஆள் அவளை நோக்கி வருகிறான். அவன் கையில் ஒரு காகித உறை இருக்கிறது. ஆனால் அவன் ஜெனிபரிடம் வரவில்லை. அவளைத் தாண்டிக் கொண்டு வேறு ஒருவரிடம் போகிறான்.

இதை ஸ்டேலாவிடம் கொடுக்கச் சொல்லி சீஃப் கொடுத்தார் என்று சொல்லி அவரிடம் தருகிறான்.

எத்தனை விதமாக கற்பனை செய்து பார்த்தாலென்ன? நடந்தது நடந்ததுதான். முடிந்தது முடிந்ததுதான்.

படு முட்டாள்தனமான ஒரு காரியம் செய்து விட்டோம்...

இல்லையில்லை, நான் அழிந்து விடவில்லை என்று ஜெனிபர் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அவளை வக்கீல் தொழிலிலிருந்து இன்னும் யாரும் நீக்கி விடவில்லை. அப்படி வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.

முன்பு தன்னை வேலைக்குக் கூப்பிட்டிருந்த கம்பெனிகளின் முகவரிகளைத் தேடிப் பிடித்தாள். போன் செய்தாள் ஆனால் அவளுக்குக் கடிதம் எழுதியிருந்த நபர்கள் அவளுடன் பேச விரும்பவில்லை.

மனம் தளராமல் நியூயார்க்கிலுள்ள சட்டமன்ற அலுவலகங்களுக்கு நேரில் போய்க் கேட்டாள் எப்போதாவது ஒரு முறைதான் அவளுக்குப் பேட்டி கிடைக்கும். அதுகூட, அவள் நேரில் பார்க்க எப்படி இருக்கிறாள் என்பதை அறிவதற்காகத்தான் பார்த்துவிட்டு, வேலையெதுவும் காலியில்லை என்று சொல்லி விட்டார்கள்

இப்படியே ஒன்றரை மாதம் ஓடி விட்டது. கொஞ்சம் கொஞ்சமாய்க் கையிலிருந்த பணம் செலவழிந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்சம் குறைவான வாடகைக்குக் குடி போகலாமா என்று தோன்றியது. ஆனால் இதைவிட மலிவான ஜாகை எங்கே கிடைக்கும்?

காலையிலும் பகலிலும் பட்டினி கிடக்கத் தொடங்கினாள். இரவு வேளையில் சின்ன ஓட்டல்களைத் தேடிப் போய்ச் சாப்பிட்டாள் உணவு மோசமா யிருந்தாலும் விலை கம்மியாயிருந்தது.

பெரிய சட்ட அலுவலகங்களில் தான் வேலை கிடைக்க வில்லை. சின்ன அலுவலகங்களிலாவது கிடைக்கு மா என்று தேடினாள். ஆனால் அவள் போவதற்கு முன்பே அவள் 'புகழ்' அங்கே போயிருந்ததால் வேலை கிடைக்க வில்லை.

'யாரும் நமக்கு வேலை தர வேண்டாம். நாமே சொந்தத்தில் ஒரு சட்ட நிறுவனம் ஆரம்பித்தால் என்ன?' என்று தோன்றியது.

ஆனால் பணம்? குறைந்த பட்சம் பத்தாயிரம் டாலர் வேண்டியிருக்குமே? இடத்துக்கு வாடகை, டெலிபோன், உதவியாளர், சட்டப் புத்தகங்கள், மேஜை, நாற்காலி, காகிதம், பேனா, பென்ஸில்... ஊகும்! தபால் தலை வாங்கக் கூட அவளிடம் காசு கிடையாது!

நியூயார்க்குக்கு வந்த போது டிசில்வாவின் அலுவலகத்தில் தனக்குக் கிடைக்கப் போகும் சம்பளத்தை நம்பியிருந்தாள். அதுவும் இல்லையென்றாகிவிட்டது. இனி என்னதான் செய்வது?

சலிப்புடன் பேப்பர்களைப் புரட்டிக் கொண்டிருந்த போது ஒரு சிறிய விளம்பரம் கண்களில் பட்டது. சிறிய அலுவலகம் வைத்துக் கொள்ள இடம் கிடைக்கும் போல் தெரிந்தது.

நேரில் போய்ப் பார்த்தபோது, அது ஒரு பழைய கட்டடத்தில் பத்தாவது மாடி. ஓட்டை உடைசலான மேஜை நாற்காலிகள்.

இரண்டு பேர் இருந்தார்கள். ஒருவர், காணாமற் போனவர்களைக் கண்டுபிடித்துத் தருகிறவர். இன்னொருவர், தவணை முறையில் பொருள் வாங்கிவிட்டுப் பணம் தராமல் இருப்பவர்களைத் தேடிப் பிடித்து அந்தப் பொருளை மீட்டு வந்து தருகிறவர்.

அவர்களுக்கு நடுவே அவளுக்கு ஓர் இடம்.

வாடகை ரொம்ப ரொம்ப மலிவாயிருந்ததால் ஜெனிபர் ஒப்புக் கொண்டாள்.

ஜெனிபர் பார்க்கர்

வழக்கறிஞர்

ஜெனிபருக்கு ஒரு பக்கம் சோர்வு. இன்னொரு பக்கம் பெருமிதம். இப்படி ஒரு துப்பறியும் நிபுணருக்கும் ஒரு தவணை வசூல்காரருக்கும் நடுவே தானும் தன் பெயர்ப் பலகையை மாட்டிக் கொண்டு தொழில் துவங்க நேரிடும் என்று அவள் கற்பனைகூடச் செய்ததில்லை.

இருந்தாலும் அந்தக் கோணல் மாணலான பெயர்ப் பலகையைப் பார்த்த போது அவள் நெஞ்சில் பெருமிதமும் ஏற்பட்டது.

நான் ஒரு வக்கீல்! இன்று என் வக்கீல் தொழில் ஆரம்பமாகிறது!

இடம் பிடித்தாகி விட்டது!

கட்சிக்காரர்கள் வர வேண்டியதுதான் பாக்கி.

ஆனால் கொஞ்ச நாளிலேயே அவள் மனக்கோட்டை சரிய ஆரம்பித்தது.

எந்தக் கட்சிக்காரரும் வரக் காணோம்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன.

மலிவான ஓட்டல்களில் போய்ச் சாப்பிடுவது கூடக் கட்டுபடியாகவில்லை. வீட்டில் தானே காப்பி போட்டுக் கொண்டு குடித்தாள். ரொட்டித் துண்டுகளை வறுத்துச் சாப்பிட்டாள் எப்படியோ வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்தாள்.

தினம் டாணென்று ஒன்பது மணி அடித்ததும் அலுவலகத்துக்கு வந்து உட்கார்ந்து விடுவாள். என்ன வேலை இருக்கிறது? ஒன்றும் கிடையாது. மற்ற இரண்டு பேரும் தங்கள் தங்கள் போனில் பேசுவதைக் கேட்டுக் கொண்டு நாள் முழுவதும் உட்கார்ந்திருக்க வேண்டியது தான்.

அவள் கையில் இப்போது பதினெட்டு டாலர் கூட இல்லை. குடக்கூலி எப்போதோ கொடுத்திருக்க வேண்டும். இன்னும் கொடுத்த பாடில்லை. ஆச்சு, இன்னும் இரண்டு நாளில் அலுவலகத்துக்கான வாடகையை வேறே தந்தாக வேண்டும்.

வேறு வழியில்லை. ஊருக்குத் திரும்ப வேண்டியது தான். அங்கே போனால் அப்பாவின் நண்பர்கள் யாரேனும் வேலை கொடுப்பார்கள். அந்த ஊரே வேண்டாம் என்று இங்கே வந்தோம். திரும்ப அங்கேயே போகும்படி ஆகி விட்டது. எப்படிப்பட்ட தோல்வி! அவளுக்கு வெறுப்பா யிருந்தது.

இன்றோடு இங்கே கடைசி!

அலுவலகத்துக்குள் ஒரு முடிவுடன் நுழைந்தாள்.

துப்பறியும் கென்னத் வழக்கம் போல் டெலிபோனில் பேசி முடித்ததும், ஜெனிபரின் பக்கம் திரும்பி, "என்ன இன்றைக்கு லேட்?" என்றான்.

சொல்வதற்கே தயக்கமாயிருந்தது அவளுக்கு. "வந்து... வந்து... நான் ஊருக்குப் போகிறேன். உங்களுக்கு வாடகை பாக்கி... அதை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமே அனுப்பிவிடுகிறேன்..."

"உன் ஊருக்குத் திரும்பிப் போகிறேன் என்றா சொல்கிறாய்?"

ஆமாம் என்று ஜெனிபர் தலையாட்டினாள்.

"சரி, செய். போவதற்கு முன் எனக்கு ஒரு சின்ன உதவி செய்கிறாயா? என் சினேகிதர் ஒருத்தர் வக்கீலாக இருக்கிறார். சில பேருக்கு வக்கீல் நோட்டீஸ் சாதரா செய்ய வேண்டியிருக்கிறதாம், அந்த வேலையைச் செய்யும்படி என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். எனக்கு டயமில்லை. ஒவ்வொரு நோட்டீஸைச் சேர்ப்பிப்பதற்கும் பன்னிரண்டரை டாலர் கொடுப்பார். அதைத் தவிர, போக்குவரத்துச் செலவு தனி, அந்த வேலையை நீ செய்ய முடியுமா? செய்தால் எனக்கு உதவியாக இருக்கும்."

ஒன்றுமில்லாததற்கு இதுவாவது கிடைத்ததே!

ஒரு மணி நேரத்துக்கெல்லாம் கென்னத் சொன்ன வக்கீலின் அலுவலகத்தை அடைந்தாள்.

எவ்வளவு அழகான, ஆடம்பரமான அலுவலகம்! இந்த மாதிரி கம்பீரமான இடத்தில் வக்கீல் தொழில் நடத்த வேண்டுமென்று அவள் எவ்வளவு ஆசைப்பட்டாள் ஒரு காலத்தில்! தனக்கென்று ஜம்மென்று ஒரு பெரிய அறை... உதவியாளர்கள்... வசதிகள்... ஹூம்!

அந்த வழக்கறிஞரின் செயலாளர் அவளிடம் ஒரு கற்றை நோட்டீஸ்களைக் கொடுத்தாள். "போக வர என்ன செலவாகிறதோ அதைக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். கார் வைத்திருக்கிறீர்கள் இல்லையா?"

"வந்து ...கார் "

"சரி, பரவாயில்லை. ரயிலிலோ பஸ்ஸிலோ போனால் அந்தச் செலவுகளைக் கவனமாய்க் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்."

"சரி."

அன்று பூரா ஜெனிபர் நியூயார்க்கின் பல பகுதிகளுக்கும் சென்று வக்கீல் நோட்டீசுகளைச் சேர்ப்பித்தாள். கொட்டோ கொட்டென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது. இரவு பத்து மணிக்கு வீடு திரும்பியபோது அவள் சொட்ட சொட்ட நனைந்திருந்தாள். களைப்பு வாட்டியது.

கடினமான வேலைதான் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்குமாக நகரம் பூரா அலைய வேண்டியிருந்தது. அதுகூடப் பரவாயில்லை. எவ்வளவு மனக் கஷ்டம்! முகத்தில் அடித்தாற்போல் கதவைச் சாத்துகிறார்கள். திட்டுகிறார்கள். பயமுறுத்துகிறார்கள்.

எத்தனை நாள், இந்த வேலையில் தாக்குப் பிடிக்க முடியும்? ஆனால், பணம்! கையில் பணம் இருந்தால் நியூயார்க்கில் தொடர்ந்து தங்கியிருக்க முடியும். தொடர்ந்து தங்கியிருந்தால் என்றாவது ஒருநாள் நல்ல காலம் பிறக்குமே?

வெந்நீர் வைத்துக் குளித்தாள். மேனியெங்கும் வெந்நீர் ஓடியபோது ஏதோ மாபெரும் சுகத்தை அனுபவிக்கிற மாதிரி இருந்தது.

குளித்ததும் வயிறு முட்டச் சாப்பிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள். நல்ல ஓட்டலுக்குப் போக வேண்டும். மேசை விரிப்பு, நாப்கின்கள் உள்ள ஓட்டலுக்கு. மெல்லிய சங்கீதம் ஒலிக்கும் ஓட்டலுக்கு...

வாசலில் அழைப்பு மணி அடித்தது.

யார் அடிப்பது? இந்த இரண்டு மாதத்தில் ஒரு தடவைகூட எவரும் அழைப்பு மணி அடித்ததில்லையே?

ஒரு வேளை வீட்டுக்கார அம்மாளாக இருக்குமோ? வாடகை பாக்கியைக் கேட்க வந்திருப்பாளோ?

இரண்டாவது தடவையும் மணி அடித்தது.

எழுந்து, ஒரு துவாலையைச் சுற்றிக் கொண்டு கதவருகே சென்றாள்.

"யாரது?" என்றாள்.

கதவின் மறுபக்கத்திலிருந்து ஓர் ஆண் குரல் கேட்டது. "இது மிஸ் ஜெனிபரின் ஜாகைதானே?"

"ஆமாம்."

"என் பெயர் வார்னர். நான் ஒரு வக்கீல்."

ஜெனிபர் திகைப்புடன் சங்கிலியை நீக்கிக் கொஞ்சமாய்த் திறந்து எட்டிப் பார்த்தாள்.

வெளியே நின்றிருந்தவனுக்கு முப்பது வயதிருக்கும். உயரமாய், அகன்ற மார்புடன் இருந்தான். கூர்மையான கண். கண்ணாடி போட்டிருந்தான். விலையுயர்ந்த உடை.

"உள்ளே வரலாமா?" என்றான் அவன்.

திருடனாயிருக்குமோ என்று ஒரு வினாடி ஜெனிபர் பயந்தாள். இருக்காது, திருடர்கள் இவ்வளவு நல்ல உடை யணிந்திருக்க மாட்டார்கள். திருடர்களின் கைகள் இவ்வளவு அழகாயும் மென்மையாயும் இருக்காது.

கதவை முழுவதும் திறந்தாள். தன் அறை இப்படி வறுமைக் கோலமாயிருப்பதைப் பற்றி அவளுக்கு வெட்க மாயிருந்தது. இவரைப் பார்த்தால் பெரிய இடத்தைச் சேர்ந்தவராக இருக்கிறாரே?

"என்ன விஷயம் மிஸ்டர் வார்னர்?" என்றாள்.

அப்படிக் கேட்கும் போதே அவளுக்குச் சரேலென்று ஓர் எண்ணம் உதித்து, உள்ளத்தில் ஒரு பரவசம் மூண்டது.

இருக்கும். இருக்கும்! நாம் வேலைக்கு மனுச்செய்திருந்த ஏதோ ஒரு நிறுவனத்திலிருந்து இவர் வந்திருக்கிறார். வேலைக்குக் கூப்பிடப் போகிறார். சே, இப்போது பார்த்து இப்படி இருக்கிறோமே? நன்றாய் உடை அணிந்து, தலையை நன்றாக வாரி முடிந்து கொண்டு பார்வையாய் இருந்திருக்கக் கூடாதா?

அடுத்த நிமிடமே அவளுக்கு ஏமாற்றம்.

வார்னர் சொன்னான்: "நான் நியூயார்க் வக்கீல்கள் சங்கத்தின் நடவடிக்கைக் கமிட்டி உறுப்பினன். உங்களை வக்கீல் தொழிலிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள். அரசாங்க வக்கீல் டிசில்வாவும் நீதிபதி வால்டுமேனும் என்னை அதற்காக அனுப்பியிருக்கிறார்கள்."

பேசிக்கொண்டே அவளைப் பார்த்தான். அவளுடைய அழகு அவனைப் பிரமிக்க வைத்தது. சாதாரணமான பழைய உடையில், மேக்கப் எதுவும் இல்லாதபோதும் கூட, ஈரம் சொட்டும் கூந்தலுடன் எத்தனை வனப்பாக இருக்கிறாள் இவள்!

அவன் தொடர்ந்து சொன்னான்: "மாரெட்டி வழக்கில் நீங்கள் செய்த காரியத்தை விசாரணை செய்யப் போகிறோம். அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத் திருக்கிறார்கள்.

ஜெனிபருக்கு ஆத்திரம் பொங்கியது.

"ஓ, அப்படியா!" என்றாள். கோபம் சிறு பொறி போலக் கிளம்பி ஜ்வாலையாக உருவெடுத்து அவளுக் குள்ளே வளர்ந்து வெடித்தது. இவர்கள் நம்மை வேட்டை யாடுவதை இன்னும் நிறுத்தவில்லையா? ஆயுள் பூராவுக்கும் இவர்களுக்குப் பயந்து நடுங்கி கொண்டே இருக்க வேண்டுமா?

போதும்! போதும் இந்த வேதனை!

ஆத்திரத்தில் குரல் நடுங்க அவள் கத்தினாள்: "நான் எதுவும் சொல்லத் தயாராயில்லை. உங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நான் முட்டாள்தனமான ஒரு காரியம் செய்து விட்டேன் உண்மைதான். ஆனால் முட்டாள்தனம் சட்டப்படி குற்றமா என்ன? எனக்கு யாரோ லஞ்சம் கொடுத்தார்களாம். அரசாங்க வக்கீல் சொல்கிறார்!" வெறுப்புடன் அறையைச் சுற்றிக் கைவீசிக் காட்டினாள் அவள். "எனக்கு லஞ்சப் பணம் கிடைத்திருந்தால் என் வீடு இப்படியா இருக்கும்? இந்த மாதிரி இடத்திலா நான் குடியிருப்பேன்?" துக்கத்தில் அவளுக்குத் தொண்டை அடைக்க ஆரம்பித்தது. "என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். எனக்குக் கவலையில்லை. என்னைத் தனியே விட்டால் போதும். உங்களுக்குக் கோடிக் கும்பிடு. தயவுசெய்து போய்ச் சேருங்கள்.

குளியலறையை நோக்கித் திரும்ப ஓடினாள் அவள், கதவைப் படீரென்று சாத்திக் கொண்டாள்.

4

வார்னருக்குத் திகைப்பாக இருந்தது.

வக்கீல் தொழிலிலிருந்து அவளை நீக்குவது பற்றி விசாரணை செய்யும் வேலை சில தினங்களுக்கு முன்புதான் அவனிடம் வந்திருந்தது.

ஒரு பெரிய சட்ட நிறுவனத்தில் கூட்டாளி அவன். மொத்தம் நூற்றிருபத்தைந்து வழக்கறிஞர்கள் அவனுடைய நிறுவனத்தில் வேலை பார்த்தார்கள் திரும்பும் திசை யெல்லாம் வெற்றி முழக்கம் தான் அங்கே.

இரண்டு வாரம் முன்பு அவனும் அந்த நிறுவனத்தின் அதிபரும் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள். அதிபர்

சொன்னார்: "சில நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தேன், நீ பாராளுமன்றத்துக்கு நிற்க வேண்டுமென்று சொல் கிறார்கள்."

ஜிவ்வென்று ஒரு பிரகாசம் பரவியது வார்னரிடம். 'சில சினேகிதர்கள்' என்று சாதாரணமாக அவர் சொல்லு கிறாரே தவிர, எல்லாரும் சக்தி படைத்த பெரிய புள்ளிகள் தான் என்று அவனுக்குப் புரிந்தது.

"உனக்கு இஷ்டமா, சொல்லு. உன் வாழ்க்கையில் பெரிய மாறுதல்கள் ஏற்படக்கூடிய விஷயம். யோசனை செய்து சொல்லு," என்றார் அவர்.

வார்னர் கொஞ்சம் யோசித்தான். இங்கே நல்ல சட்டப் பிராக்டிஸ் அதை விட்டுவிட்டு, வாஷிங்டனுக்குப் போனால் முற்றிலும் புதிய வாழ்க்கை ஆரம்பிக்க வேண்டியிருக்கும். ஆனால் மேரி அவன் மனைவி- ரொம்ப சந்தோஷப் படுவாள். கணவன் எம்.பி. என்றால் சும்மாவா?

"எனக்கு இஷ்டம்தான் சார்," என்றான்.

அதிபருக்கு மிகவும் திருப்தி. "எல்லாரும் ரொம்ப சந்தோஷப் படுவார்கள்," என்றார் இன்னொரு கப்டீ கலந்து உறிஞ்சியபடி. "அப்புறம் ஒரு விஷயம். வக்கீல் சங்கத்தின் நடவடிக்கைக் கமிட்டியில் ஒரு வேலை ஒப்படைத் திருக்கிறார்கள். அதை நீதான் கவனிக்க வேண்டும். சின்ன வேலைதான். இரண்டு மணி நேரத்தில் முடிந்துவிடும்."

"என்னது?"

"மாரெட்டி வழக்கு. டிசில்வாவின் கீழே வேலை பார்த்த ஒரு பெண்ணுக்கு லஞ்சம் கொடுத்திருக்கிறார்கள். அவளால் வழக்கே குட்டிச் சுவராகிவிட்டது."

"ஓ, அதுவா? நான்கூடப் பேப்பரில் படித்தேன் செத்துப் போன சிட்டுக்குருவியை வைத்து..."

"அதேதான். அந்தப் பெண்ணை வக்கீல் தொழிலி லிருந்து நீக்கி விட வேண்டுமாம். அரசாங்க வக்கீல்

டிசில்வாவும் நீதிபதியும் சொல்கிறார்கள். அந்த மாதிரிப் பெண்கள் நம்முடைய வக்கீல் தொழிலில் இருக்கக் கூடாது என்றுதான் எனக்கும் தோன்றுகிறது."

"இதிலே நான் என்ன செய்ய வேண்டும்?" என்று வார்னர் கேட்டான்.

"ஒன்றும், பெரிசாயில்லை. தஸ்தாவேஜிகளைப் படி. அந்தப் பெண் லஞ்சம் வாங்கிக் கொண்டாள் என்பது நிச்சயமாய்த் தெரிந்ததும், அவள்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று அறிக்கை கொடு. மற்றதை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்."

வார்னருக்கு ஒரு விஷயம் திகைப்பாயிருந்தது. "இந்த அற்ப வேலையை என்னிடம் ஒப்படைப்பானேன்? சின்ன வக்கீல்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களே? அவர்கள் கவனிக்க மாட்டார்களா?"

"நீதான் இதைக் கவனிக்க வேண்டும் என்பதில் டிசில்வா குறியாயிருக்கிறார். அந்தப் பெண்ணை உண்டு இல்லையென்று பண்ணி விட வேண்டும் என்று அவருக்கு ஒரே ஆத்திரம். அவள் தோலை உரித்துத் தன் ஆபீஸில் காயப்போட்டால் தான் அவருக்குத் தூக்கம் வரும். அதனால்தான் யாராவது சின்ன வக்கீலிடம் ஒப்படைத்து, அவர்கள் காரியத்தைக் கெடுத்துவிடப் போகிறார்களே என்று பயப்படுகிறார்."

"சரி, கவனிக்கிறேன்," என்றான் வார்னர்.

அன்றே அலுவலகத்துக்குத் திரும்பியவன் மாரெட்டி வழக்கு விவரங்களை வரவழைத்து கூர்ந்து படிக்கலானான்.

ஒன்று மட்டும் அவனுக்கு நிச்சயமாய்த் தெரிந்தது: அந்தப் பெண் குறுக்கிட்டிராவிட்டால் மாரெட்டிக்கு நிச்சயமாய்த் தண்டனை கிடைத்திருக்கும். டிசில்வா அவ்வளவு கவனமாக வழக்கைத் தயாரித்து வைத்திருந்தார். இந்த ஜெனிபரால் எல்லாம் வீணாகிவிட்டது.

அன்று நீதிபதியின் அறையில் ஜெனிபரை டிசில்வா விசாரித்த விவரங்களைப் படித்தான்.

டிசில்வா: நீ சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்றவள் இல்லையா?

ஜெனிபர்: ஆமாம்.

சட்டம் படித்தவள்?

ஆமாம்.

அப்படியிருந்துமா இப்படிப் பண்ணினாய்? முன்பின் தெரியாத ஒருவன் உன்னிடம் ஒரு காகித உறையைத் தருகிறான். கொலை வழக்கில் முக்கியமான சாட்சியாக இருக்கும் ஸ்டேலாவிடம் கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்கிறான். மறுபேச்சில்லாமல் நீ கொண்டு போய்க் கொடுக்கிறாய்! இது அறியாமையா அயோக்கியத்தனமா.

நீங்கள் சொல்கிறபடி நடக்கவில்லை.

நீயே அப்படித்தானே சொன்னாய்?

அந்த ஆள் எவனோ அந்நியன் என்று எனக்குத் தோன்றவில்லை. உங்கள் கீழே வேலை பார்ப்பவன் என்று நினைத்தேன்.

எதை வைத்து அப்படி நினைத்தாய்?

அவன் உங்களோடு பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். பிறகு அவன் என்னிடம் வந்து அந்த உறையைக் கொடுத்தான். என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டான். அந்த உறையை ஸ்டேலாவிடம் நீங்கள் கொடுக்கச் சொன்னதாகச் சொன்னான். எல்லாம் கண்மூடிக் கண் திறப்பதற்குள் வேகமாய் நடந்து விட்டது.

வேகமாகவா! இல்லையில்லை. எல்லாம் மெதுவாக நிதானமாகத்தான் நடந்திருக்கிறது. இதை ஸெட்டப் பண்ணுவதற்கு நேரம் பிடித்திருக்கும். அதைக் கொண்டு

போய்க் கொடுப்பதற்காக உனக்குப் பணம் கொடுப்பதற்கு நேரம் பிடித்திருக்கும்.

இல்லை! அது பொய்!

எதம்மா பொய்? நீ ஸ்டேலாவிடம் உறையைக் கொண்டு போய்க் கொடுத்தது பொய்யா?

உறைக்குள்ளே என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியாது.

அப்படியானால் உனக்கு யாரோ பணம் கொடுத் தார்கள் என்பது உண்மை?

நான் சொல்வதைத் திரித்துச் சொல்கிறீர்கள் எவரும் எனக்கு எதுவும் தரவில்லை.

அப்படியானால் சும்மா ஒரு உதவியாக அந்த வேலையைச் செய்தாய்?

இல்லை. நீங்கள் சொல்லியனுப்பிய வேலையைச் செய்கிறோம் என்று நினைத்தேன்.

அந்த ஆள் உன்னைப் பெயர் சொல்லி அழைத்தான்? இல்லையா?

ஆமாம்.

எப்படி அவனுக்கு உன் பெயர் தெரிந்தது?

எனக்குத் தெரியாது.

உண்மையைச் சொல்லம்மா. கொஞ்சமாவது உனக்குத் தெரிந்துதான் இருக்கும். ஒன்றுமே தெரியாதா? எவனோ ஒருவன் உன்னைப் பார்த்து, 'ஆ! இந்தப் பெண்ணின் பெயர் ஒரு வேளை ஜெனிபர் என்று இருக்கும்' என்று நினைத்து உன்னைக் கூப்பிட்டானா என்ன?

நான் தான் சொன்னேனே? எனக்குத் தெரியாது.

நீயும் மாரெட்டியும் எத்தனை நாளாய்க் காதலர்கள்?

மிஸ்டர் டிசில்வா! ஐந்து மணி நேரமாய்க் கேட்ட தையே கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள், எனக்கு ஒரே களைப்பாக இருக்கிறது. நான் போகலாமா?

இடத்தை விட்டு நீ ஓரங்குலம் நகர்ந்தாலும் உன் கையில் விலங்கு மாட்டச்சொல்வேன். உஷார்! ஒரு பெரிய குற்றத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறாய். மறக்காதே. இதிலிருந்து தப்ப உனக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. பொய் சொல்லுவதை நிறுத்திக் கொள். உண்மையைச் சொல்ல ஆரம்பி.

எனக்குத் தெரிந்தது எல்லாவற்றையும் நான் சொல்லியாகிவிட்டது.

இல்லை. உனக்கு அந்த உறையைத் தந்தவனின் பெயரை இன்னும் சொல்லவில்லை. அவன் உனக்கு எவ்வளவு பணம் தந்தானென்பதை இன்னும் சொல்ல வில்லை.

-இதேபோல மேலும் முப்பது பக்கம் இருந்தது.

பாவம் அந்தப் பெண்! வார்னர் பரிதாபப் பட்டான். தடியை எடுத்து அவள் தலையில் அடிக்க வேண்டியதுதான் பாக்கி. மற்றபடி எத்தனை முடியுமோ அத்தனை குடைந்து விட்டார் டிசில்வா.

இந்த விஷயத்தை அவ்வளவு சுலபமாய் முடிவு செய்ய முடியுமென்று வார்னருக்குத் தோன்றவில்லை.

எதையும் கச்சிதமாய்ச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறவன் அவன். மறுபடி மறுபடி விவரங்களைப் படித்தான்.

ஒரு விஷயம் விசித்திரமாய் இருந்தது.

மாரெட்டிக்காக ஜெனிபர் வேலை செய்தது உண்மை யென்றால் அவள் இப்படி மாட்டிக் கொள்ளும் படியாகவா

மாரெட்டி விட்டிருப்பான்? அவளைப் பாதுகாக்க நல்ல ஏற்பாடுகள் செய்திருப்பானே? நான் குற்றம் செய்யவில்லை என்று ஜெனிபர் திரும்பத் திரும்பச் சொல்வது குழந்தைத் தனமாய் இருக்கிறது. ஆகவே அவள் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும்.

அவன் ஜெனிபரைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்த சமயம் டிசில்வா அவனுக்கு போன் செய்தார். "ஜெனிபரின் தலையைச் சீவ வேண்டிய வேலையை உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்களாமே?" என்று கேட்டார்.

தலையைச் சீவுவதா? அந்தச் சொல்லில் இருந்த கடுமை அவனைத் துணுக்குறச் செய்தது. "ஆமாம். விசாரித்து அறிக்கை தரச் சொல்லியிருக்கிறார்கள்," என்றான்.

"விசாரிப்பதற்கு என்ன இருக்கிறது? என்றென்றைக்கும் அவள் தலையெடுக்க முடியாமல் பண்ண வேண்டும்," என்றார் டிசில்வா.

அப்பா! இந்த மனிதர் என்ன இத்தனை ஆங்காரமாய் இருக்கிறார்! "பொறுங்கள், பொறுங்கள்," என்றான்.

டிசில்வா குரலைத் தணித்துக் கொண்டார். "சரி சரி," என்றவர், "நீங்கள் பாராளுமன்றத் தேர்தலுக்கு நிற்கப் போவதாகக் காதில் விழுந்தது. ரொம்ப சந்தோஷம். என் ஆதரவு உங்களுக்குப் பரிபூரணமாய் உண்டு," என்றார்.

டிசில்வாவின் ஆதரவு என்றால் லேசுப்பட்ட விஷயமில்லை. வார்னருக்குத் தெரியும். ரொம்பக் காலமாய் அரசாங்க வக்கீலாக இருப்பவர். பழம் பெருச்சாளி. யாரை எங்கே எப்படிச் சரிக்கட்ட வேண்டும் என்று அறிந்திருப்பவர்.

"ரொம்பத் தாங்க்ஸ்," என்றான் அவன்.

"இதில் என்ன தாங்க்ஸ்? ஜெனிபர் சமாசாரம் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்."

அவனுக்குப் புரிந்தது. நீ எனக்கு உதவி செய்தால் நான் உனக்கு உதவி செய்வேன் என்கிறார்.

ஆனால் அவர் சொன்னதற்காகச் சட்டுப் புட்டென்று ஜெனிபர் மீது குற்றம் சாட்ட அவன் தயாராயில்லை.

குறிப்புக்களைப் படித்தவரையில் ஜெனிபரை மாட்ட வைக்கக் கூடியதாக எந்த விஷயமும் அவனுக்குத் தெரிய வில்லை.

அவளே ஒப்புக் கொண்டாலோ, அல்லது அவள் உடந்தைதான் என்று வேறே யாராவது பலமான சாட்சியம் கொண்டு வந்தாலோ தவிர, டிசில்வாவினால் இவளை ஒன்றும் பண்ணமுடியாது என்று வார்னருக்குப் புலப் பட்டது.

ஆகவேதான் ஜெனிபரைப் பழி தீர்ப்பதற்கு நம் உதவியை நாடுகிறார்.

வார்னருக்கு முக்கியமான வேலைகள் பல இருந்தன. பெரிய கட்சிக்காரர்கள் காத்திருந்தார்கள். ஜெனிபர் வழக்கை மேலோட்டமாக விசாரித்து விட்டு டிசில்வாவும் மற்றவர்களும் விரும்புகிறபடி செய்துவிட்டுப் போய் விடலாம்.

ஆனால் ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது.

எவ்வளவு கஷ்டப்பட்டு ஒருவர் வழக்கறிஞராகிறார் என்று அவனுக்குத் தெரியும். எத்தனை இரவுகள் கண் விழித்து, முதுகு ஒடிய எவ்வளவு புத்தகங்களைக் கரைத்துக் குடித்து, எத்தனை வருடங்கள் பாடுபட்டு வக்கீல் பட்டத்தைப் பெற வேண்டும்! அப்படிக் கிடைத்த பட்டத்தை இந்தப் பெண் அவ்வளவு சுலபமாக இழக்கும்படி செய்து விடக்கூடாது என்று அவன் தீர்மானித்தான்.

பல பேருக்கு டெலிபோன் செய்து ஜெனிபரைப் பற்றி விசாரித்தான். அவளுடைய சொந்த ஊருக்கு விமானத்தில்

சென்று, அவளுடன் கூடப்படித்த மாணவர்கள், பேராசிரியர்கள், சிறு வேலைகள் கொடுத்த நிறுவன அதிபர்கள், வீட்டுச் சொந்தக்காரர்கள் முதலிய பலரிடம் அவளைப் பற்றிக் கேட்டான்.

ஜெனிபரின் ஊரில் அவன் இருந்த போது அவனுடைய அதிபர் கூட ஒருமுறை போனில், "இந்த அல்ப விஷயத்துக்குப் போய் இவ்வளவு மெனக் கெடுகிறாயே?" என்று கேட்டார்.

"இல்லை. சில விஷயங்களை ஆராய வேண்டியிருக்கிறது. இரண்டொரு நாளில் வந்து விடுகிறேன்." என்றான் வார்னர்.

"சரி. சரி. தேவைக்கு மேல் அவள் விஷயத்தில் மண்டையை உடைத்துக் கொள்ளாதே," என்றார் அவர்.

நியூயார்க்குக்குத் திரும்பிய போது ஜெனிபரைப் பற்றி அவனுக்கு நல்ல அபிப்பிராயமே ஏற்பட்டிருந்தது.

அவள் கைதேர்ந்த நடிகையாக இருந்தாலொழிய, மாரெட்டியை விடுவிப்பதில் அவளுக்கு எந்தப் பங்கும் இருந்திருக்க முடியாது என்று நிச்சயமாகத் தோன்றியது.

எல்லா விஷயங்களையும் முடித்துக் கொள்ள அவனுக்கு இரண்டு வாரம் பிடித்திருந்தது. அதன் பிறகே இங்கே ஜெனிபரை நேரில் பார்க்க வந்திருந்தான்.

ஆனால் விஷயத்தைச் சொன்னதும் படபடவென்று முகத்திலடித்தாற் போல் சொல்லி விட்டுக் குளியலறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு விட்டாளே!

ஜெனிபருக்கு ஏன் அப்படிப் பேசினோம் என்றிருந்தது. குளியலறைக்குள் நுழைந்தவள் சுவரோடு சுவராகச் சாய்ந்துகொண்டு நின்றாள் மூச்சு இரைத்தது. கண்ணீர் முட்டிக் கொண்டு வந்து கன்னங்களில் வழிந்தது.

சே! என்ன மடத்தனமாக நடந்துகொண்டு விட்டோம்! இரண்டாம் தடவையாக ஒரு மடத்தனம்!

விசாரிப்பதற்காக வந்திருப்பவரிடம் இப்படியா நடந்து கொள்வது? காச்சு மூச்சென்று கத்தியிருக்காமல் நிதானமாக விளக்கியிருக்க வேண்டும். பொறுமையாக விளக்கிச் சொன்னால் ஒருவேளை நம்மீது நடவடிக்கை எடுக்காமல் விட்டாலும் விடுவார்களோ என்னவோ.

ஹூம்! விடுவதா? மூனக் கோட்டைதான்! அவளை விசாரிப்பதற்காக ஒருவன் இங்கே வந்திருக்கிறானே. அதிலிருந்தே தெரியவில்லையா-அவளை அவர்கள் விடப் போவதில்லையென்று? அடுத்தபடி, அவள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று காரணம் காட்டும்படி ஒரு நோட்டீஸ் வரும். பிறகு மூன்று பேர் கொண்ட குழு ஓர் அறிக்கை தயாரித்து மேலிடத்துக்கு அனுப்பும். அதன் பின்: வக்கீல் தொழிலிலிருந்து வெளியேற்றம்தான்.

கசப்புடன் அவள் நினைத்துக் கொண்டாள். ஒரே ஓர் ஆறுதல்: கின்னஸ் புத்தகத்தில் அவள் பெயர் இடம் பெறும்-உலகத்திலேயே மிகக் குறைந்த காலம் வக்கீல் தொழில் செய்தவள் என்று!

மறுபடி குளிக்கத் தொடங்கினாள் வெது வெதுப்பான தண்ணீர் தேகத்தை நனைத்தபோது அவள் உணர்வுகள் மந்தமடைந்தன. நடப்பது நடக்கட்டும். யோசிப்பதற்கே களைப்பாயிருக்கிறது. கண்களை மூடிக் கொண்டாள். கொஞ்சம் தூங்கிக் கூடப் போய் விட்டாள். சூடு ஆறிய தண்ணீரின் சில்லிப்பு அவளை எழுப்பியது.

வேண்டாவெறுப்பாக எழுந்து கொண்டு உடம்பைத் துவட்டிக்கொண்டாள் பசி போயே போய் விட்டது.

தலையை வாரிக்கொண்டாள். சாப்பாடும் வேண்டாம் மண்ணும் வேண்டாம். பேசாமல் படுத்துக் கொண்டால்

போதும். பொழுது விடிந்ததும் ஊருக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியது தான்.

கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தவளுக்கு அதிர்ச்சி!

வந்தவன் போகவில்லை. ஒரு நாற்காலியில் உட்கார்ந்து ஏதோ பத்திரிகை புரட்டிக் கொண்டிருந்தான்.

துவாலையைச் சரியாகக் கூடச் சுற்றிக் கொள்ளாமல் வந்தவளைப் பார்த்ததும்-

"ஓ. ஸாரி," என்றான் அவன்.

ஜெனிபர் ஓட்டமாய் ஓடிக் குளியலறைக்குள் புகுந்துக்கொண்டு திரும்பி வந்தாள். கோபம் சீறிக்கொண்டு வந்தது.

"நீங்கள் போகலாம் என்று அப்போதே சொன்னேனே?"

பத்திரிகையை நிதானமாக வைத்தான் அவன். "மிஸ் ஜெனிபர், நாம் கொஞ்சம் அமைதியாகப் பேசினா லென்ன?" என்றான் மென்மையாக.

"தேவையில்லை!," தணிந்திருந்த சீற்றமெல்லாம் மறுபடி பொங்கியெழ, வெடித்தாள் அவள். "உங்களிடமும் சரி, உங்களுடைய நடவடிக்கைக் குழுவிடமும் சரி, இனிமேல் எதுவும் சொல்வதற்கில்லை. என்னை ஒரு கிரிமினல் மாதிரி நடத்துகிறீர்கள்! எனக்கு வெறுப்பாயிருக்கிறது!"

"உங்களைக் கிரிமினல் என்று நான் சொன்னேனா?" தொடர்ந்து அமைதியாகவே பேசினான் வார்னர்.

"அதில்லை... நீங்கள் வந்திருப்பது..."

"எதற்காக வந்திருக்கிறேன் என்று தான் சொன்னேனே? உங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாமா

கூடாதா என்று விசாரிக்கும்படி என்னிடம் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். உங்கள் தரப்பில் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, அதைச் சொல்லலாம். இப்போது அதற்காகத்தான் வந்திருக்கிறேன்."

ஜெனிபர் கசப்புடன் சிரித்தாள்.

"ஓகோ, அப்படியா? எனக்கு சாதகமாய்த் தீர்ப்பளிக்க உங்களுக்கு எவ்வளவு லஞ்சம் தர வேண்டும்?"

அவன் முகம் கறுத்தது. "ஸாரி மிஸ் ஜெனிபர். நான் போய் வருகிறேன்." கதவை நோக்கி நடந்தான்.

"ஒரு நிமிடம்," என்று அழைத்தாள் ஜெனிபர்.

அவன் திரும்பினான்.

"என்னை மன்னியுங்கள்" என்றாள் அவள். "என்னவோ தெரியவில்லை. யாரைப் பார்த்தாலும் என் எதிரிபோலத் தோன்றுகிறது. மன்னியுங்கள்."

"வழங்கினோம் மன்னிப்பு!" என்றான் அவன் வேடிக்கையாக.

அரைகுறையாக உடை அணிந்திருப்பது அப்போது தான் ஜெனிபருக்கு ஞாபகம் வந்தது. "கொஞ்சம் இருங்கள் நான் டிரெஸ் செய்து கொண்டு வந்து பேசுகிறேன்," என்றாள்.

"மெதுவாகவே வரலாம். நீங்கள் சாப்பிட்டாயிற்றா?"

அவள் தயங்கினாள். "வந்து..."

"எனக்குத் தெரிந்த ஒரு நல்ல ஓட்டல் இருக்கிறது. அங்கே போகலாம்," என்றான் வார்னர்.

5

வார்னருடன் புறப்பட்டாள் ஜெனிபர்.

ஆரவாரமில்லாத, அழகிய, சிறிய ஓட்டல் அது.

அவர்கள் உட்கார்ந்தார்கள்.

"இந்த ஓட்டலைப் பற்றி ரொம்பப் பேருக்குத் தெரியாது. உணவு ரொம்பப் பிரமாதமாக இருக்கும்," என்றான் வார்னர்.

ஆனால் உணவுகளை ரசிக்கக் கூடிய நிலையிலா ஜெனிபர் இருந்தாள்! இத்தனைக்கும் அன்று பூரா அவள் எதுவுமே சாப்பிடவில்லை. ஆனால் ஆசையுடன் சாப்பிடத் தோன்றவில்லை. ஏதோ ஒரு படபடப்பு அவளுக்குள் இருந்தது. மனசைத் தளர்த்திவிட்டுக் கொண்டு இயல்பாக இருக்க நினைத்தாள். முடியவில்லை.

இந்த வார்னர் என்னதான் நல்லவன் போல் பாசாங்கு பண்ணினாலும், நம்முடைய எதிரிதான் என்று அவளுக்குத் தோன்றியது. கூடவே, இவனிடம் ஒருவிதக் கவர்ச்சி இருக்கிறது என்பதையும் அவள் மனம் ஒப்புக் கொண்டது. சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறான். வேறு சந்தர்ப்பமாக இருந்தால் எவ்வளவு இன்பமாக உல்லாசமாக இருக்கும். ஆனால் இப்போது...!

தன் எதிர்காலம் மொத்தமும் இந்த மனிதனின் கையில் இருக்கிறது என்பதை அவள் உணர்ந்தாள். நம் வாழ்நாள் எப்படி அமையப் போகிறது என்று இன்னும் இரண்டொரு மணி நேரத்தில் தெரிந்து விடும்...

எதற்காக அவளைப் பார்க்க வந்தானோ அந்த விஷயத்தைத் தவிர மற்ற எல்லாவற்றையும் பற்றி அரட்டை அடித்துக் கொண்டிருந்தான் அவன்.

கடைசியில் அந்தப் பேச்சு வரத்தான் செய்தது.

அவன் மெதுவாகச் சொன்னான்: "இப்போது நான் உங்களைச் சில கேள்விகள் கேட்கப் போகிறேன். கோபப் படாமல் பதில் சொல்ல வேண்டும். ஓ.கே?"

தொண்டையில் எதுவோ அடைத்துக் கொண்டது போலிருந்தது ஜெனிபருக்கு. பேச்சு வராததால், தலையை மட்டும் ஆட்டினாள், 'சரி, சொல்கிறேன்' என்று.

"அன்று கோர்ட்டில் நடந்ததை உள்ளது உள்ளபடியே சொல்லுங்கள். என்ன ஞாபகம் வருகிறதோ அதை யெல்லாம் சொல்லுங்கள். அந்தச் சமயத்தில் உங்களுக்கு மனசில் என்ன தோன்றியதோ அதையெல்லாம் சொல் லுங்கள்; அவசரமில்லை. நிதானமாகச் சொல்லுங்கள்."

ஒரு பெருமூச்சை இழுத்து வெளியேற்றினாள். முதலில் தயங்கித் தயங்கி வார்த்தைகள் வந்தன. பிறகு, கடகடவென்று விவரிக்கலானாள்.

அவன் ஓரிடத்தில் கூடக் குறுக்கிடவில்லை. வைத்த கண்ணை எடுக்காமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அவள் சொல்லி முடித்த பிறகே கேட்டான்: "உங்களிடம் காகித உறை கொடுத்தானே, காலை பதவி யேற்ற சமயத்தில் அரசாங்க வக்கீலின் அலுவலகத்தில் அவன் இருந்தானா?"

"அன்று ஏகப்பட்ட பேர் இருந்தார்கள். அவ்வளவு பேரும் எனக்கு முன் பின் தெரியாதவர்கள்தான்."

"அந்த ஆளை அதற்கு முன் எங்காவது பார்த் திருக்கிறீர்களா?"

ஜெனிபர் தலையை அசைத்தாள் "பார்த்ததில்லை. என்று தான் தோன்றுகிறது."

"அவன் டிசில்வாவிடம் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்தாகச் சொன்னீர்கள். டிசில்வா அவனிடம் உறையைக் கொடுப்பதைப் பார்த்தீர்களா?"

"இல்லை."

"டிசில்வாவுடன் அந்த ஆள் பேசிக்கொண்டிருந்தான் என்கிறீர்களே? பேசிக் கொண்டு இருந்ததை நிஜமாகவே பார்த்தீர்களா? அல்லது கும்பலில் ஒருவனாகச் சும்மா நின்றிருந்தானா?"

ஜெனிபர் கண்ணை மூடிக் கொண்டு அந்தக் காட்சியை ஞாபகப் படுத்திக் கொள்ள முயன்றாள். "ஸாரி, தெரியவில்லை. ஒரே குழப்பமாயிருக்கிறது."

"உங்கள் பெயர் அவனுக்கு எப்படித் தெரியும்?"

"அதுதான் எனக்கும் ஆச்சரியம்."

"அவன் ஏன் உங்களைத் தேர்ந்தெடுத்தான் என்று நினைக்கிறீர்கள்?"

"என் மூஞ்சியில்தான் அசடு என்று எழுதி ஒட்டியிருக்கிறதே?"

வார்னர் சொன்னான்: "மாரெட்டியை மடக்க வேண்டும் என்று டிசில்வா ரொம்ப நாளாக முயற்சி செய்து கொண்டிருந்தார். இந்தத் தடவைதான் அவன் வசமாக அகப்பட்டான். அதைக் கெடுத்து விட்டீர்கள் என்று டிசில்வாவுக்கு உங்கள் மீது ஆத்திரம்."

தன்னைத் தனியே விட்டு விட்டால் தேவலை போலிருந்தது ஜெனிபருக்கு. நம் துன்பம் நம்மோடு. அதை யாரும் பார்க்க வேண்டாம்.

"எனக்கு உடம்பு சரியாயில்லை. வீட்டுக்குப் போகலாம் என்று பார்க்கிறேன், ப்ளீஸ்!"

அவளை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தான் அவன். "உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமென்று நான்

சிபாரிசு செய்யப் போகிறேன். இப்போது உடம்பு சரியாகி விட்டதா?"

அந்த வாக்கியத்தின் முழு அர்த்தமும் புரிய அவளுக்குப் பல வினாடிகள் பிடித்தன. அவளுக்குப் பேச்சு வரவில்லை. அவனையே அதிசயமாக நோக்கினாள். அவன் முகத்தையே ஆராய்ந்தாள். மூக்குக் கண்ணாடியின் பின்னே மறைந்திருக்கும் அந்த ஆழமான கண்களைக் கவனித்தாள். "நிஜமாக... உண்மையாகத்தான் சொல்கிறீர்களா?"

"உண்மையாகத்தான் சொல்கிறேன். வக்கீல் தொழிலைச் செய்ய வேண்டுமென்று நீங்கள் துடித்துக் கொண்டிருக்கிறீர்கள், இல்லையா?"

அந்தக் கணம் அவள் தன் தந்தையை நினைத்துக் கொண்டாள். அவரும் தானும் பேசிய பேச்சுக்களை நினைத்துக் கொண்டாள். சட்டக் கல்லூரியில் படித்த வருடங்களை நினைத்துக் கொண்டாள். 'நானும் நீயும் சேர்ந்து வக்கீல் தொழில் நடத்தப் போகிறோம். படித்து முடி. பட்டம் வாங்கு.... என்று தந்தை சொன்ன வார்த்தைகளை நினைத்துக் கொண்டாள்.

"ஆமாம்."

"இதெல்லாம் ஆரம்ப காலத்தில் ஏற்படக்கூடிய சோதனைகள். இதிலிருந்து மீண்டு விட்டால் பிரமாத மான வக்கீலாக நீங்கள் வருவீர்கள். சந்தேகமில்லை," என்றான் அவன்.

"தாங்க்யூ," என்று சொன்ன போது நன்றியினால் நெஞ்சு அடைத்தது அவளுக்கு.

வெயிட்டர் வந்து மேஜை மீதிருந்த தட்டுக்களை எடுக்கலானான் ஜெனிபர் ஏதோ சொல்ல முயன்றாள். விம்மலும் சிரிப்பும் கலந்து, ஒரு வார்த்தை தான் சொல்ல முடிந்தது. "மிஸ்டர் வார்னர்..."

"நாம் இரண்டு பேரும் இவ்வளவு நெருங்கி வந்தாயிற்றே? இனிமேலும் மிஸ்டர் போட வேண்டுமா?"

"வார்னர்... வந்து..."

"என்ன?"

"எனக்கு ஒரே பசி! ஒரு வெட்டு வெட்டப் போகிறேன்!" என்றாள்.

கலகலவென்று சிரிப்புப் பரவியது அங்கே.

போன் மணியடித்தது.

ஸம்மன்கள் சேர்ப்பிக்கும் வேலையை ஜெனிபருக்குக் கொடுத்திருந்த கம்பெனியிலிருந்து கூப்பிட்டார்கள் அது ஒரு புகழ்பெற்ற சட்ட நிறுவனம்.

"எங்கள் அதிபர் உங்களைப் பார்க்க வேண்டுமாம். சரியாய்ப் பதினொரு மணிக்கு வந்து விடுங்கள்," என்றாள் அதிபரின் காரியதரிசி.

ஜெனிபர், நிமிடம் பிசகாமல் அங்கே போய்ச் சேர்ந்தாள்.

வக்கீலாக அவளைச் சேர்த்துக் கொள்ளப் போகிறார்களோ? அவள் மீது குற்றமெதுவும் இல்லை யென்று இப்போது அவர்களுக்குப் புரிந்திருக்குமோ?

இரண்டு மணி நேரம் அவளைக் காக்க வைத்து விட்டுத்தான் கூப்பிட்டனுப்பினார் நிறுவன அதிபர்.

உயரமான ஒல்லியான நபர். உடைகள் ஆடம்பரமாக இருந்தன.

ஜெனிபரை, "உட்காருங்கள்," என்று சொல்லவில்லை.

உரத்த குரல், கொஞ்சமும் அதில் இனிமையில்லை. "மிஸ் ஜென்னி..." ஆரம்பித்தார்

"ஜெனிபர்," என்று அவள் திருத்தினாள்.

மேஜை மீதிருந்த ஒரு காகிதத்தை எடுத்தார். "இது ஒரு ஸம்மன் இதை நீங்கள் சாதரா செய்ய வேண்டும்," என்றார்.

பூ! கடைசியில் இவ்வளவு தானா?

அவளிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தார் அவர். "இதைச் சேர்ப்பித்தால் உங்கள் பீஸ் ஐந்நூறு டாலர்," என்றார்.

அவளுக்கு மூச்சு நின்றது. காதில் சரியாய்த்தான் விழுந்ததா?

"எவ்வளவு சொன்னீர்கள்? ஐந்நூறு டாலர் என்றா?"

"ஆமாம். ஐந்நூறு டாலர். அதாவது வேலையை ஒழுங்காக முடித்தால்."

"ஏன்..." ஸம்மன்ஸைப் பார்த்தாள் "இது கஷ்டமான வேலையா?"

"ஆமாம்," என்றார் அவர். "இந்த ஆளை நேரில் பார்த்து ஸம்மனைக் கையில் கொடுக்க வேண்டுமென்று ஒரு வருடமாக முயற்சி பண்ணுகிறோம். முடியவில்லை. இவர் பெயர் வில்லியம். வீட்டை விட்டு வெளியே தலைகாட்ட மாட்டார். இவரிடம் நேரில் நோட்டீஸ் கொடுப்பதற்கு இதுவரை ஒரு டஜன் பேர் முயன்று பார்த்து விட்டார்கள். தோல்விதான் மிச்சம். அடியாள் ஒருவன் வைத்திருக்கிறார். அவன் எவரையும் எஜமானரைப் பார்க்க விடுவதில்லை, விரட்டி விடுகிறான்."

ஜெனிபர் தயங்கினாள். "நான் மட்டும் எப்படி...?"

"என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது. இது ரொம்ப முக்கியமான வழக்கு. எக்கச் சக்கமான பணம் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த

வில்லியத்திடம் நேரில் சாதரா பண்ணி அவரைக் கோர்ட்டுக்கு இழுத்தால்தான் மற்றதெல்லாம். உங்களால் முடியுமா முடியாதா மிஸ் ஜென்னி.?"

"சரி, முயற்சி செய்து பார்க்கிறேன்," என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

பிற்பகல் இரண்டு மணி. வில்லியத்தின் தோட்டத்துக்கு வெளியே நின்றிருந்தாள் ஜெனிபர்.

பத்து ஏக்கர் விஸ்தீரணத்துக்குப் பரந்திருந்தது அந்தத் தோட்டம். மரங்கள் வெகு அழகாயும் கவனமாயும் வளர்க்கப் பட்டிருந்தன. நீண்டு வளைந்து செல்லும் பாதை. அதன் இருபுறமும் அழகிய மரங்கள். பாதையின் முடிவில் ஒரு பிரம்மாண்டமான பங்களா அதற்குள்ளேதான் வில்லியம் இருக்கிறார் போலும்.

நேரே பங்களாவுக்குள் நுழைந்து வில்லியத்தைப் பார்ப்பது முடியாத காரியம். அந்த அடியாள் தடுத்து நிறுத்தி விடுவான்.

வில்லியத்தைத்தான் பங்களாவை விட்டு வெளியே வரும்படி செய்ய வேண்டும். எப்படி?

சுற்றுமுற்றும் பார்த்தாள்.

தெருவின் மறு கோடியில் ஒரு லாரி நின்றிருந்தது. மரம் வெட்டுகிறவர்கள் பயன்படுத்தும் லாரி. அருகில் மூன்று ஆட்கள் ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மூவரும் ஜப்பானியர்கள்.

அவர்களை நெருங்கி, "யார் இங்கே மேஸ்திரி?" என்று கேட்டாள்.

ஒருவன் முன்னே வந்து, "ஏன்? நான்தான்," என்றாள்.

"ஐந்து நிமிட வேலை இருக்கிறது....

"ஊகூம். முடியாதம்மா."

"ஐந்நூறு டாலர் தருகிறேன்," என்றாள் ஜெனிபர்.

அசந்து போனார்கள் மூன்று பேரும். கொட்டக் கொட்டப் பார்த்தார்கள் அவளை. மேஸ்திரி, "ஐந்நூறு டாலரா தருகிறீர்கள்? ஐந்து நிமிட வேலைக்கா?" என்றான்.

"ஆமாம்."

"என்ன செய்யணும். சொல்லுங்கள்," என்றான் மேஸ்திரி.

ஐந்து நிமிடத்துக்கெல்லாம் அவர்களையும் லாரியையும் வில்லியத்தின் தோட்டத்துக்குள் அழைத்துச் சென்றாள் ஜெனிபர்.

பங்களா வாசலில் லாரியை நிறுத்தினாள். ஓர் அழகான மரத்தைத் தேர்ந்தெடுத்தாள். "இதை வெட்டுங்கள்."

கோடாலிகளை எடுத்து வந்து வெட்ட ஆரம்பித்தார்கள் அவர்கள்.

ஒரே ஒரு நிமிடம்தான்.

வாசல் கதவு மடாலென்று திறந்து கொண்டது. வாட்ட சாட்டமான ஓர் ஆள் ஓட்டமாய் ஓடி வந்தான். வில்லியத்தின் அடியாள் என்று ஜெனிபருக்குத் தெரிந்தது.

"என்ன இங்கே? என்ன செய்கிறீர்கள்? என்ன இதெல்லாம்?" என்று கத்தினான் அவன்.

ஜெனிபர் அமர்த்தலாக, "நான் லாங் ஐலண்ட் மரக் கம்பெனியைச் சேர்ந்தவள். இந்த மரங்களை வெட்டித் தள்ள வந்திருக்கிறேன்." என்றாள்.

"என்ன? என்ன? நீங்கள் யாரென்று சொன்னீர்கள்?"

ஜெனிபர் ஒரு காகிதத்தை அவன் முன்னால் நீட்டினாள். "இந்த மரங்களை வெட்டும்படி எனக்கு உத்தரவு."

"இருக்கவே இருக்காது. என் எஜமானருக்குத் தெரிந்தால் இருதயமே வெடித்து விடும்!" என்றவன், ஆட்களிடம், "நிறுத்துங்கய்யா!" என்று சத்தம் போட்டான்.

"இதோ பார், என்னுடைய வேலையை நான் செய்கிறேன்," என்று அவனை அடக்கினாள் ஜெனிபர் ஆட்களிடம், "நீங்கள் வெட்டுங்கள்," என்றாள்.

"நிறுத்து!" என்று மறுபடி கத்தினான் அடியாள். "யாரோ ஏதோ தப்பான விலாசம் உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் மரத்தை வெட்டும்படி என் முதலாளி சொல்லியிருக்க மாட்டார்."

"சொன்னாரென்று என் முதலாளி சொல்கிறாரே!"

"உன் முதலாளியிடம் நான் பேசுகிறேன். இப்ப எங்கே இருக்கிறார்?"

ஜெனிபர் தன் கைக்கடியாரத்தைப் பார்த்தாள். "அவர் வெளியூர் போயிருக்கிறார். சாயந்தரம் ஆறு மணிக்கு மேல்தான் திரும்புவார்."

அடியாளுக்குக் கண்களில் கனல் பறந்தது. ஒரு நிமிஷம் இருங்கள். இதோ வருகிறேன். அதற்குள் எதுவும் செய்துவிட வேண்டாம்," என்றான்.

"நீங்கள் பாட்டுக்கு வெட்டுங்கள்," என்றாள் ஜெனிபர் ஆட்களிடம்.

புயல்போல் பங்களாவுக்குள் போனான் அடியாள். சில நிமிடத்துக் கெல்லாம் திரும்பினான். அவனுடன் கூட, நடுத்தர வயதில் ஒரு சின்ன மனிதரும் வந்தார்.

"என்ன இது? என்ன அக்கிரமம் இதெல்லாம்?" என்றார் ஜெனிபரிடம்.

"எதுவானால் உங்களுக்கென்ன?" என்றாள் ஜெனிபர்.

"எனக்கென்ன என்றா கேட்கிறாய்? நான்தான் வில்லியம். இந்த இடத்தின் சொந்தக்காரன்! புரிகிறதா?" என்று அவர் கத்திய மறு வினாடியே-

"அப்படியா? வணக்கம் மிஸ்டர் வில்லியம்! இதோ இதைப் பிடியுங்கள்." கையிலிருந்த அந்த ஸம்மனை எடுத்து அவர் கையில் திணித்தாள் அவள்.

ஆட்களை நோக்கித் திரும்பினாள் "வெட்டியது போதும். நிறுத்திக் கொள்ளுங்கள்," என்று கூறிவிட்டு, வெற்றிகரமாக வேலையை முடித்த நிறைவுடன் திரும்பினாள் ஜெனிபர்.

அன்று இன்னொரு சந்தோஷமும் காத்திருந்தது அவளுக்கு.

டெலிபோன் அடித்தது. குரலைக் கேட்டதுமே அது வார்னர்தான் என்று தெரிந்து விட்டது.

"ஒரு நல்ல சேதி!" என்றான் அவன் "உன் மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்று முடிவு செய்து விட்டார்கள். இனிமேல் அந்த விஷயமாய் நீ கவலைப்பட வேண்டாம்."

அவளுக்குக் கண்களில் நீர் நிரம்பியது.

தெய்வமே! உனக்கு நன்றி!

ஒரு நிமிடம் மௌனப் பிரார்த்தனை செய்தாள்.

போனில் தடுமாறினாள். "வந்து... உங்களுக்கு... நான்... எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை."

"நீதி எல்லாச் சமயத்திலும் குருடாயிருப்பதில்லை," என்று மட்டுமே சொன்னான் வார்னர்.

தனது நிறுவன அதிபருடனும், அரசாங்க வக்கீல் டிசில்வாவுடனும் நடந்த மோதலை அவன் ஜெனிபரிடம் சொல்லவில்லை.

நிறுவன அதிபராவது, ஏதோ பிரசினை முடிந்தால் சரி என்று இருந்து விட்டார்.

ஆனால் டிசில்வாவுக்கு எக்கச் சக்கமான ஆத்திரம். குதிகுதியென்று குதித்தார். "என்னது! அந்தச் சிறுக்கியை விட்டு விடுவதா? பயங்கரக் கும்பலில் ஒருத்தியாக்கும் அவள்! உங்களுக்கு அது தெரியவில்லை? சரியானபடி உங்களை ஏமாற்றி விட்டாள்!"

இப்படியே வெகு நேரம் சத்தமிட்டார். வார்னருக்குக் காது புளித்து விட்டது.

"இதோ பாருங்கள் எல்லாம் சுற்றி வளைத்த சாட்சியமாகத்தான் இருக்கிறதே தவிர, ஜெனிபருக்கு எதிரான நேரடி சாட்சியம் எதுவுமில்லை. இருக்கக் கூடாத இடத்தில், இருக்கக் கூடாத நேரத்தில் அவள் இருந்து விட்டதுதான் அவள் செய்த குற்றம். அதனால் பொறியில் சிக்கி விட்டாள். மற்றப்படி அவள் பயங்கரக் கும்பலைச் சேர்ந்தவளென்று எனக்குத் தோன்றவில்லை." என்றான்.

டிசில்வாவின் கொதிப்பு அடங்கவில்லை. "இருக் கட்டும் இருக்கட்டும். எங்கே போய்விடுகிறாள்? எப்படியும் இதே நியூயார்க்கில்தானே வக்கீல் தொழில் பிராக்டிஸ் செய்ய வேண்டும்? கோர்ட்டுக்கு வரட்டும். உண்டு இல்லை யென்று பண்ணி விடுகிறேன்," என்று சூளுரைத்தார்.

ஜெனிபரிடம் இதையெல்லாம் வார்னர் சொல்ல வில்லை.

ஒன்று புரிந்தது.

ஒரு பயங்கரமான விரோதியை ஜெனிபர் சம்பா தித்துக் கொண்டு விட்டாள்.

எதற்கும் துணிந்தவர் டிசில்வா நச்சுப் பாம்பு. ஜெனிபரைக் கடிக்காமல் விட மாட்டார்.

ஜெனிபரோ பலவீனமான பெண். வெகு இளமை யானவள். அழகி.

பாவம், டிசில்வாவிடம் மாட்டிக் கொண்டு என்ன பாடுபடப் போகிறாளோ!

அவன் உள்ளம் அவளுக்காகப் பரிதாபப்பட்டது.

6

நாட்களும் வாரங்களும் மாதங்களும் ஓடின. 'ஜெனிபர்-வழக்கறிஞர்' என்ற பலகை தொங்கிக் கொண்டு தான் இருந்தது.

ஆனால் இதற்குப் பெயர் வக்கீல் தொழிலா!

சொன்ன இடத்தில் சம்மன்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க வேண்டியது. அதற்கான கூலியைப் பெற வேண்டியது. வெய்யிலாகட்டும், மழையாகட்டும், பனி யாகட்டும்-தெருத் தெருவாய் அலைய வேண்டியது. சம்மன் பெற்றுக் கொண்டவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியது.

சே! இது ஒரு பிழைப்பா?

எப்போதாவது சில சமயம் ஏழைகள் உதவி கேட்டு அவளிடம் வருவது உண்டு. கருநிறத்தவர், சமூகத்தில் நலிந்த பிரிவினர் இப்படிப்பட்டவர்கள் வருவார்கள். மனு எழுதித் தரும்படி கேட்பார்கள். எழுதித் தருவாள். சட்ட சம்பந்தமாக ஏதாவது யோசனை கேட்பார்கள். சொல்லுவாள். அத் தோடு சரி.

கிறிஸ்துமஸ் வந்தது. புத்தாண்டு வந்தது. நகரத்தையே பனி போர்த்திக் கொண்டிருந்தது. தெருவெல்லாம் ஜேஜே என்று ஜன வெள்ளம்.

வீட்டையும் குடும்பத்தையும் கதகதப்பையும் நோக்கி ஆசை ஆசையாக எல்லாரும் விரைந்து கொண்டிருக்கையில் ஜெனிபர் மட்டும் தன்னந்தனியே நடந்தாள்.

நெஞ்சு வலித்தது. சூனியம் உள்ளத்தை நிரப்பியது. பரிவுடன் தலையைத் தடவிக் கொடுத்து அன்பு காட்டிய அப்பா இல்லாத வேதனை இப்போது தான் அவளை அதிகமாய் வாட்டியது.

அப்பாடா! கிறிஸ்துமஸ் கோலாகலங்கள் ஒரு வழியாக ஓய்ந்தன. புத்தாண்டு பிறந்தது. சோர்வை உதறித் தள்ளினாள். புது வருடம் நமக்குப் பிரமாதமாய் இருக்கப் போகிறது என்று தனக்குத் தானே சொல்லி உற்சாகப் படுத்திக் கொண்டாள்.

வருமானம் குறைவாகத்தான் வந்தது. ஆனால் சீராக வந்து கொண்டிருந்தது. அவளுக்கு ஒரே ஆச்சரியம். இந்தக் கட்சிக்காரர்கள் எப்படி நம்மைத் தேடி வருகிறார்கள்? யார் அனுப்பி வைக்கிறார்கள்?

தன்னுடன் அலுவலகம் நடத்தும் துப்பறியும் நிபுணரைக் கேட்டாள். 'எனக்கொன்றும் தெரியாது' என்று அவர் சொல்லிவிட்டார்.

சில பணக்காரக் கட்சிக்காரர்கள் வர ஆரம்பித்த போது புரிந்து விட்டது.

அவர்கள் கொண்டு வந்தது சில்லறை வழக்கல்ல.

எக்கச்சக்கமான சொத்துக்கள் சம்பந்தப்பட்ட தாவாக்கள். எந்த வக்கீலும் இரு கை நீட்டி, தாம்பூலம் வைத்து, அந்த மாதிரி வழக்குகளை ஏற்றுக் கொள்வார்.

எப்படி நம்மிடம் இவர்கள் வந்தார்கள் என்று ஜெனிபர் நினைத்தாள்.

"என்னைப் பற்றி யார் உங்களுக்குச் சொன்னார்கள்?" என்று வந்தவர்களைக் கேட்டபோது மழுப்பலாகப்

பதில்கள் வந்தன. ஒரு சினேகிதர் சொன்னார்: உங்களைப் பற்றி எதிலேயோ படித்தேன் ஒரு பார்ட்டியில் உங்கள் பெயர் காதில் விழுந்தது. இப்படியே சொன்னார்கள்.

கடைசியில் கண்டுபிடித்து விட்டாள்.

ஒரு நாள் ஒரு கட்சிக்காரர் தன் வழக்கைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தபோது வார்னர் என்ற பெயரைச் சொல்லி விட்டார்.

"ஓ! வார்னர்தான் உங்களை என்னிடம் அனுப்பினாரா?" என்று கேட்டாள் ஜெனிபர்.

வந்தவர் சங்கடத்துடன் நெளிந்தார் "வந்து... ஆமாம்.... ஆனால் தன் பெயரைச் சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருந்தார்."

வார்னருக்குப் போன் செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டாள். போன் செய்து நன்றி சொல்ல வேண்டும். பேசும்போது மரியாதையுடன் பேச வேண்டும். ஆனால் ரொம்ப செயற்கையாகப் பேசக் கூடாது. இயல்பாய்ப் பேச வேண்டும்.. நன்றி தெரிவிக்கத்தான் பேசுகிறோமே தவிர, வேறு எந்த நோக்கமும் கிடையாது என்று அவருக்குப் புரிகிற மாதிரி பேச வேண்டும்.

சொல்ல வேண்டிய வாக்கியங்களை மனசுக்குள் சொல்லிச் சொல்லி ஒத்திகை பார்த்துக் கொண்டாள்.

கடைசியில் மனசைத் தைரியப் படுத்திக்கொண்டு போன் செய்தபோது வார்னர் ஊரில் இல்லை.

ஐரோப்பாவுக்குப் போயிருப்பதாயும் திரும்பி வர இரண்டு மாதமாகும் என்றும் வார்னரின் உதவியாளர் தெரிவித்தாள்.

சப்பென்றாகி விட்டது.

வார்னரைப் பற்றி அடிக்கடி நினைக்க ஆரம்பித்தாள். தன்னைப் பார்ப்பதற்காக அவன் வந்திருந்த நாள் அடிக்கடி ஞாபகம் வந்தது. சே! அன்று எவ்வளவு மோசமாக நடந்து கொண்டு விட்டோம்! ஆனால் அத்தனை ஆத்திரம் காட்டிய போது கூட அவர் நம்முடைய சிறு பிள்ளைத்தனமான போக்கை மன்னித்து, எவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொண்டார்!

அது மட்டுமா!

இப்போது அவளுக்காகக் கட்சிக்காரர்களை வேறே அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறார்!

மூன்று வாரம் கழித்து மறுபடி போன் செய்தாள். இந்தத் தடவை வார்னர் தென் அமெரிக்காவுக்குப் போயிருப்பதாகத் தெரிந்தது.

"அவருக்கு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா?" என்று கேட்டார் உதவியாளர்.

ஜெனிபர் சிறிது தயங்கிவிட்டு, "ஒன்றுமில்லை," என்றாள்.

இனி வார்னரைப் பற்றி எண்ண வேண்டாம் என்று நினைத்தாள். முடியவில்லை. அவன் கல்யாணமானவனா? அல்லது கல்யாணம் ஏதாவது நிச்சயமாகியிருக்குமா? தெரியவில்லை. 'திருமதி வார்னர்' என்று தன் பெயரைக் கற்பனை செய்துகொண்டு பார்த்தாள். 'எனக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது!' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

தண்டனையிலிருந்து தப்பிய மாரெட்டியைப் பற்றிப் பத்திரிகைகளில் ஏதாவது செய்தி அவள் கண்ணில் பட்டுக் கொண்டுதான் இருந்தது. பயங்கரக் கும்பலின் தலைவருக்கு உடம்பு சரியில்லையாம். மாரெட்டிதான் அடுத்த தலைவனாக வருவானாம். பத்திரிகைகள் கூறின. ஸ்டேலா சிறையில் இருக்கிறானாம். தூக்குக்குப் போயிருக்க

வேண்டிய மாரெட்டி, ஜெனிபரால் தப்பி விட்டான் என்று ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்கு நியூயார்க் நீதி மன்றங்கள் எல்லாம் பழக்கமாகி விட்டன.

திருட்டு, அடிதடி, விபசாரம், கஞ்சா-இப்படிப்பட்ட விவகாரங்களில் மாட்டிக் கொள்கிறவர்களை ஜாமீனில் விடுவிப்பதற்கு ஜெனிபர் ஆஜரானாள்.

அனேகமாய் அனைவருமே ஏழைகள்.

"ஐந்நூறு டாலர் ஜாமீன் கட்ட வேண்டும்." என்று நீதிபதி தீர்ப்பளிப்பார்.

"யுவர் ஆனர், என் கட்சிக்காரர் ரொம்ப ஏழை. அவ்வளவு பணத்துக்கு எங்கே போவார்? இருநூறு டாலராகக் குறைத்தால் வேலைக்குப் போய்க் குடும்பத்தைக் காப்பாற்றுவார்," என்று ஜெனிபர் கேட்டுக் கொள்வாள்.

"சரி, இருநூறு டாலர்," என்று குறைப்பார் நீதிபதி.

நியூயார்க்கில் இரவுக் கோர்ட்டுகள் உண்டு. அங்கே எப்போதும் கூட்டம்தான். கற்பழிப்பு, அனுமதி இல்லாமல் துப்பாக்கி வைத்திருந்தது, கஞ்சா, விபசாரம்- இப்படிப் பட்ட குற்றம் சாட்டப்பட்டவர்களால் இரவு நீதி மன்றங்கள் நிரம்பி வழியும். அனைவருக்கும் பொதுவான அம்சம்: ஏழ்மை.

வறுமை காரணமாக எந்தக் குற்றத்துக்கும் துணிந்தவர்களாக இருந்த அவர்களைப் பார்க்கும்போது ஜெனிபர் தனக்குள் சொல்லிக் கொள்வாள்: இவர்கள் வாழ்க்கையில் தோல்வி அடைந்தவர்கள். நடப்பது நடக் கட்டும் என்று விரக்தி அடைந்து விட்டார்கள். நானும் ஏழைதான். ஆனால் நான் இப்படிச் சரணாகதி அடைய மாட்டேன். நிமிர்ந்து நிற்பேன்! போராடுவேன்!

அன்று ரயன் என்ற பாதிரியாரை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தார் துப்பறியும் நிபுணர். பாதிரியாருக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். பாதி நரையும் பாதி கறுப்புமாக இருந்தது முடி. சுருட்டை முடி காதுக்கருகே அடர்ந்து தொடங்கியது. 'மனிதர் முடி வெட்டிக் கொண்டால் தேவலை' என்று ஜெனிபருக்குத் தோன்றுவது வழக்கம்.

தமது தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள் யாரேனும் காணாமற் போனால் துப்பறியும் நிபுணரிடம் வருவார் ரயன் பாதிரியார். ஓடிப்போன கணவனையோ மனைவியையோ பிள்ளையையோ பெண்ணையோ துப்பறியும் நிபுணர் கண்டு பிடித்துத் தருவார். ஆனால் அதற்குப் பணம் எதுவும் வாங்கிக்கொள்ள மாட்டார். "சொர்க்கத்துக்கு அச்சாரம் அந்தப் பணம்." என்பார்.

அன்று அவர் இல்லாதபோது ரயன் பாதிரியார் வந்திருந்தார்.

"அவர் இன்றைக்கு வர மாட்டாரே?" என்றாள் ஜெனிபர்.

"நான் பார்க்க வந்தது உன்னைத்தான்" என்றவாறு, ஜெனிபருக்கு எதிரிலிருந்த உடைசல் நாற்காலியில் அமர்ந்தார் பாதிரியார். "எங்கள் சர்ச்சைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கு ஒரு சின்ன பிரசினை," என்றார். எப்போதும் அப்படித்தான் பேச்சை ஆரம்பிப்பது அவர் வழக்கம்.

"சொல்லுங்கள்" என்றாள் ஜெனிபர்.

"வயதான கிழவி பாவம். சமீபத்தில்தான் எங்கள் பகுதிக்கு வந்திருக்கிறாள் அவளுடைய பென்ஷன் கணக்குகளைக் கம்ப்யூட்டரில் காணாமலடித்து விட்டார்களாம். அதை நீதான்...."

"கவனிக்கிறேன்," என்று ஜெனிபர் கூறியதும், "எனக்குத் தெரியும் நீ கவனிப்பாய் என்று," என்றவாறு

பாதிரியார் எழுந்துகொண்டார். "வந்து... ஒரு விஷயம்... இதற்குப் பணம்..."

"கிடையாது என்கிறீர்கள்? பரவாயில்லை," என்றாள் ஜெனிபர் புன்னகையுடன்.

முதலில் சுலபமான வேலையாகத் தோன்றியது. பல நாளுக்கு இழுத்துவிட்டது. கடைசியில் அதைச் சரிசெய்து கொடுத்தாள்.

பழகப் பழகப் பாதிரியாரை அவளுக்கு மிகவும் பிடித்துவிட்டது.

ஒரு மாதம் கழித்து ஒரு நாள் காலை மறுபடியும் பாதிரியார் அவளிடம் வந்தார். "உன்னைத் தொந்தரவு பண்ணக் கூடாதென்றுதான் பார்க்கிறேன் முடியவில்லை. சினேகிதர் ஒருவருக்கு ஒரு சின்னப் பிரசினை ஆனால் அவரிடம்-" அவர் தயங்கினார்.

"பணமில்லை? அதுதானே?"

"கரெக்டாய்ச் சொல்லி விட்டாய். ஆனால் பாவம் அவருக்குக் கட்டாயம் நீ ஒத்தாசை செய்ய வேண்டியிருக்கிறது."

"என்ன விஷயம் சொல்லுங்கள்."

"அவர் ஒரு நீக்ரோ. என் தேவாலயத்தைச் சேர்ந்தவர். அவருடைய மகன், ஏபிரகாம் என்று பெயர், ஒரு சாராயக் கடைக்காரனைக் கொலை செய்து விட்டதற்காக ஆயுள் தண்டனை அடைந்து ஸிங்ஸிங் சிறையில் இருக்கிறான்."

"வழக்கு நடந்து, தீர்ப்பாகி, ஜெயிலிலும் இருக்கிறவனுக்கும் போய் என்ன உதவி செய்ய முடியும் ஃபாதர்?"

பாதிரியார் பெருமூச்சு விட்டார். "ஏபிரகாம் மாட்டிக் கொண்டிருப்பது அந்த வழக்கு இல்லை."

"பின்னே?"

"சிறைக்குள்ளே ஒரு கைகலப்பு ஏற்பட்டது. ரேமண்ட் என்ற ஒரு கைதியைக் கொலை பண்ணிவிட்டான். அதற்காக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. மரண தண்டனை கொடுத்து விடுவார்கள் போலிருக்கிறது."

என்ன சொல்வதென்று ஜெனிபருக்குப் புரியவில்லை.

அந்த வழக்கைப் பற்றிப் பேப்பரில் படித்தது ஞாபகம் வந்தது. "அந்தக் கைதியை ஏபிரகாம் அடித்துக் கொன்றான், இல்லையா?"

"அப்படித்தான் சொல்கிறார்கள்," என்றார் பாதிரியார்.

காகிதமும் பேனாவும் எடுத்து வைத்துக் கொண்டாள் அவள். "அடித்ததைப் பார்த்ததற்குச் சாட்சி யாராவது உண்டா?"

"இருக்கிறார்கள். அதுதான் கஷ்டம்."

"எவ்வளவு பேர்?"

"நூறு பேரோ என்னவோ இருக்கும். ஜெயிலில் திறந்த வெளியில் சண்டை நடந்திருக்கிறதே?"

"சரிதான்! இதிலே நான் என்ன செய்ய முடியும், ஃபாதர்?"

"ஏபிரகாமுக்கு உதவ வேண்டும்." என்றார் சுருக்கமாக.

ஜெனிபர் பேனாவை மூடி வைத்தாள். "நான் ஒன்று சொல்லட்டுமா ஃபாதர்? உங்களுக்கு மேலே ஒருத்தர் இருக்கிறாரே, அவர்தான் வர வேண்டும். இந்த ஏபிரகாமைக் காப்பாற்ற!" நாற்காலியில் சாய்ந்துகொண்டு அமைதியாகச் சொன்னாள். "அவனுக்குப் பாதகமான விஷயம் மூன்று இருக்கிறது. முதலாவது, அவன் ஒரு நீக்ரோ. இரண்டாவது, ஏற்கெனவே ஒரு கொலைக் குற்றத்துக்காக ஆயுள்

தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறவன். மூன்றாவதாக, அவன் கொலை செய்ததைப் பார்த்தவர்கள் நூறு பேருக்கு மேல் சாட்சி இருக்கிறார்கள். சரி, ஏபிரகாமுக்குச் சாதகமாக ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றுமில்லை. கொலையுண்டவன் இவனை வம்புச் சண்டைக்கு இழுத்தானென்று வைத்துக் கொண்டால்கூட, இவன் சிறை அதிகாரியிடம்தானே புகார் செய்திருக்க வேண்டும்? அதை விட்டுவிட்டு, இவனே அந்த ஆளைக் கொலை பண்ணியிருக்கிறான். இதைப் போனால் போகட்டும் என்று எந்த நீதிபதியும் மன்னிக்க மாட்டார், ஃபாதர்."

"அவனும் மனிதன்தானே பாவம்?" என்றார் பாதிரியார். "எதற்கும் அவனோடு பேசிப் பாரேன்?"

ஜெனிபர் பெருமூச்சு விட்டாள் "சரி, உங்கள் இஷ்டம். அவனைப் பார்க்கிறேன். ஆனால் எந்தவித உத்திர வாதமும் தர மாட்டேன்."

சிறை அதிகாரிக்கு முன்னதாகவே போன் செய்து ஏபிரகாமைச் சந்திக்க ஏற்பாடு செய்துகொண்டு பஸ்ஸில் புறப்பட்டாள் ஜெனிபர்.

வாழ்க்கைக்கு இப்போதுதான் ஓர் அர்த்தம் ஏற்பட்டிருப்பது போல அவளிடம் ஒரு மன நிறைவு உண்டாகியிருந்தது. கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருக்கும் ஒருவனை அவள் பார்க்கப் போகிறாள். அவள் படித்ததெல்லாம் இப்படிப்பட்ட வழக்குகளை நடத்துவதற்காகத்தானே? இந்த ஒரு வருட காலத்தில் இப்போதுதான் தான் ஒரு வழக்கறிஞர் என்ற உணர்வு ஏற்பட்டது.

ஆனால் இந்த வழக்கில் அவளுக்கு நம்பிக்கை இல்லை. அனேகமாக ஏபிரகாமுடன் பேசிய பிறகு, 'உன் வழக்கில் நான் ஆஜராவதற்கில்லை,' என்று சொல்லிவிட்டுத் திரும்ப வேண்டியிருக்கும்.

மக்களிடையே பிரபலமாகி விட்ட வழக்கு இது. ஜெயிப்பதற்கோ எந்த வாய்ப்பும் இல்லை. இதிலே போய் ஆஜரானால், 'ராசி இல்லாத வக்கீல்,' என்ற கெட்ட பெயர் தான் மிஞ்சும். அவள் இப்போது இருக்கிற நிலைமையில் அந்தப் பெயர் வேறேயா?

வேறு யாரையேனும் அமர்த்திக்கொள் என்று ஏபிரகாமிடம் சொல்ல வேண்டியதுதான்.

சிறை வாசலில் மணியை அழுத்தியதும், ஒரு காவலர் வந்தார். ஜெனிபரின் பெயர், விலாசத்தைக் கேட்டறிந்து, தன் கையில் இருந்த காகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து விட்டு, சிறை அதிகாரியிடம் அழைத்துச் சென்றார்.

"ஏபிரகாமைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா?" என்று ஜெனிபர் கேட்டதும்-

"அவனுக்குச் சாதகமாக ஏதாவது பாயிண்ட் கிடைக்குமென்று எதிர்பார்த்தீர்களானால் அந்த எண்ணத்தை இப்போதே விட்டு விடுங்கள்!" ஏபிரகாம் பற்றிய ஃபைலைப் பிரித்து வைத்துக் கொண்டு சிறை அதிகாரி சொன்னார்: "ஜெயிலுக்கு வருவதும் வெளியே போவதும் தான் இந்த ஏபிரகாமின் வாழ்க்கை! பதினொரு வயதாகும் போது திருடி மாட்டிக் கொண்டவன். பதின்மூன்று வயதில் வழிப்பறி: பதினைந்து வயதில் கற்பழிப்பு: பதினெட்டு வயதில் பெண்களை வைத்து வியாபாரம். இன்னதுதான் என்றில்லை. அத்தனை வகைக் குற்றமும் செய்திருக்கிறான்" ஃபைலை மூடினார் "கடைசியாகச் செய்திருப்பது எல்லாவற்றையும் விடப் பெரிய குற்றம் - கொலை! போதுமா?"

ஜெனிபர் கேட்டாள்: "அந்தக் கைதியை இவன் கொலை செய்திருக்கமாட்டான் என்பதற்கு ஆதாரமாக ஏதாவது..."

"எதுவும் கிடையாது. கொலை செய்தேனென்று அவனே ஒப்புக் கொண்டிருக்கிறான். அப்படியே அதை அவன் மறுத்தால்கூட, கொலையைப் பார்த்ததற்கு நூற்று இருபது சாட்சிகள் இருக்கிறார்கள்."

ஜெனிபர் எழுந்து கொண்டாள். "சரி, எதற்கும் ஏபிரகாமை நான் பார்க்கிறேனே?"

"ஓ! தாராளமாய். ஆனால் உங்கள் நேரம்தான் வீணாகப் போகிறது," என்றார் அதிகாரி.

ஏபிரகாமைப்போல ஒரு கோரமான ஆளை ஜெனிபர் பார்த்ததே கிடையாது. கன்னங்கரேலென்ற கறுப்பு. மூக்கில் ஏகப்பட்ட தழும்புகள். முகத்தில் பல குத்துக் காயங்கள். முன் பல் உடைந்திருந்தது. ஆறரை அடி உயரம். வாட்டசாட்டமான உடம்பு. சின்னக் கண்கள்.

என்ன பயங்கரமான ஆள்!

பலத்த பாதுகாப்புப் போட்ட அறையில் அவனும் அவளும் சந்தித்துக் கொண்டார்கள். இருவருக்கு மிடையே தடித்த இரும்பு வலை போட்டிருந்தது. கதவருகே ஒரு காவலர் துப்பாக்கியுடன் நின்றிருந்தார்.

தனிமைச் சிறையில், இருட்டில் அடைபட்டிருந்தானாகையால் வெளிச்சத்துக்கு வந்ததும் ஏபிரகாமின் கண்கள் கூசின. படபடவென்று இமைகளைக் கொட்டினான்.

இவனுடைய வழக்கை எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்று கொஞ்ச நஞ்சமிருந்த தயக்கமும் ஜெனிபருக்குப் போய்விட்டது. அப்படியொரு வெறுப்பு அலை அவனிடமிருந்து பீறீட்டடித்தது.

"என் பெயர் ஜெனிபர். நான் ஒரு வக்கீல். உன்னைப் பார்க்கும்படி ரயன் பாதிரியார் என்னை அனுப்பியிருக்கிறார்," என்று பேச்சை ஆரம்பித்தாள்.

"அந்தக் கிழட்டுச் சனியனுக்கு வேறென்ன வேலை?" என்று இரும்பு வலை மீது அவன் காறித் துப்பினான்.

எச்சில் துளிகள் ஜெனிபரின் முகத்தில் தெறித்தன.

7

மேலே தெறித்த எச்சிலைத் துடைத்துக் கொள்ளாமலே, கைதி ஏபிரகாமைப் பார்த்தபடி ஒரு நிமிஷம் பேசாமலிருந்தாள் ஜெனிபர்... இவனுக்காக அக்கறை எடுத்துக்கொண்டு பாதிரியார் நம்மை அனுப்பியதென்ன, இவன் பாதிரியாரின் பெயரைச் சொன்னதும் காறித் துப்புவதென்ன! வெறுப்பும் ஆங்காரமுமாய் இருக்கும் இவனுடன் என்னத்தைப் பேச போகிறோம்?

"உனக்கு ஏதாவது தேவையானால் சொல்லு," என்றாள்.

அவன் விகாரமாகச் சிரித்தான்.

"தேவையா? எனக்கு ஒரு பொம்பளை வேணும். நீ வர்றியா?" என்றான்.

அந்தப் பேச்சைப் பொருட்படுத்தாமல், "இதோ பார், உன் மீதுள்ள வழக்கைப் பற்றிப் பேசுவதற்காக வந்திருக்கிறேன். என்னதான் நடந்தது?" என்றாள்.

"ஓகோ, என் வாழ்க்கைக் கதையைக் கேட்க வந்திருக்கிறாயா? அப்படியானால் எனக்குத் துட்டு தரணும். முடியுமா உன்னாலே? என் கதையைச் சினிமாக்காரங்களுக்குக் கொடுக்கப் போகிறேன் நானே அதிலே நடிச்சாலும் நடிப்பேன்."

அவனுக்குள் கொப்புளித்துக் கொண்டிருக்கும் கோபம் அவளுக்கு அச்சம் ஏற்படுத்தியது. ஒன்றும் வேண்டாம், இங்கிருந்து போய்விட்டால் போதும் என்று

தோன்றியது. சிறை அதிகாரி சொன்னது சரிதான். நம் முடைய நேரம்தான் வீணாகிறது.

"கொஞ்சம் கேள், ஏபிரகாம்! நீ எனக்கு உதவி செய்தால்தான் நான் உனக்கு உதவி செய்யமுடியும். உன்னோடு பேசிப் பார்க்கிறேன் என்று பாதிரியாரிடம் சொல்லிவிட்டு வந்திருப்பதால் தான் இவ்வளவு நேரம் இருக்கிறேன்," என்றாள்.

அவனிடமிருந்து மறுபடியும் ஒரு கசப்பான சிரிப்பு வெளிப்பட்டது. "உனக்கு ரொம்பப் பெரிய மனசுதான் கண்ணு. அதிருக்கட்டும், வர்றியா என்று கேட்டேனே, அதற்குப் பதில் சொல்லலியே நீ?"

ஊகூம். இதற்கு மேல் தாங்காது. ஜெனிபர் எழுந்து கொண்டாள். "நீ இப்படித்தான் எல்லாரிடமும் அசிங்க மாய், முரட்டுத்தனமாய் நடந்து கொள்வாயா?"

"முதலில் நீ என்கிட்டே வந்து படுத்துக்க. நீயும் நானும் கட்டிப் புரண்டு கிட்டே அசிங்கத்தைப் பத்திப் பேசலாம். என்ன?"

அந்தக் கோரமான கறுப்பு முகத்தை உற்றுப் பார்த்த வண்ணம் ஜெனிபர் நின்றாள். அவனுடைய அருவருப்பான பேச்சை மறுபடியும் மன்னித்து, "ஏபிரகாம், கடைசியாய்க் கேட்கிறேன். என்ன நடந்ததென்று சொல்லப் போகிறாயா இல்லையா?" என்றாள்.

அவன் பதிலொன்றும் கூறவில்லை. அவள் கண் களையே வெறித்து நோக்கியவாறு இருந்தான்.

ஜெனிபர் காத்திருந்தாள். அப்பப்பா! இந்தக் கறுப்பு உடம்பில் எத்தனை தழும்புகள்! உள்ளத்துக்குள் இன்னும் எத்தனை தழும்புகளோ!

நீண்ட மௌனம் நிலவியது அங்கே. கடைசியில் ஏபிரகாம் அதைக் கலைத்தான் "சொல்கிறேன். அந்தத்

தேவடியாள் பையனை நான் கொலை செய்தேன். உண்மைதான். போதுமா?" என்றான்.

"எதற்காகக் கொலை செய்தாய்?"

"ஒரு பெரிய கசாப்புக் கத்தியை எடுத்துக்கிட்டு என்னைக் குத்த வந்தான் அவன்."

ஜெனிபர் அதை நம்பத் தயாராயில்லை. "சிறையில் இருக்கும் கைதிக்குக் கசாப்புக் கத்தி எங்கிருந்து கிடைக்கும்? நம்புகிற மாதிரி வேறே ஏதாவது சொல்லு."

ஏபிரகாமின் முகம் கறுத்தது. "நடந்ததைச் சொல்லுன்னு கேட்டாய், சொன்னேன். நானா உன்னைக் கூப்பிட்டனுப்பினேன்? இன்னொரு வாட்டி இங்கே வந்து என் உயிரை எடுத்தியோ, தெரியும் சேதி! புரியுதா? நான் வேலை வெட்டி இல்லாதவன் இல்லை."

மறு நிமிடம் சிறைக் காவலருடன் அவன் போய் விட்டான்.

ஜெனிபர் பெருமூச்சு விட்டாள். இதற்குமேல் என்ன செய்ய முடியும்? பாதிரியாரிடம் போய், நடந்ததைச் சொல்லிவிட்டுக் கைகழுவ வேண்டியது தான். இவன் தலையெழுத்து இப்படித்தான் என்றால் யார் வந்து என்ன செய்ய முடியும்?

இவன் மூஞ்சியைக் கண்டாலே சரியான அயோக்கியன் என்று தெரிகிறதே?

ஒரு நிமிஷம் நின்றாள்.

திரும்ப வேண்டியதுதான் என்று அவளுக்குள் ஓவ்வோர் அணுவும் கூறிய போதிலும், சிறை அதிகாரியிடம் விசாரிக்கலாம் என்று அவருடைய அறையை நோக்கி நடந்தாள்.

சிறை அதிகாரி கூறினார்.

"இங்கே வருகிற கைதிகளைத் திருத்தி மறுவாழ்வு ஏற்படுத்தித் தரத்தான் நாங்கள் முயற்சி பண்ணுகிறோம், மிஸ். ஆனால் இந்த ஏபிரகாமைத் திருத்தவே முடியாது. அவனைத் திருத்தக் கூடியது ஒன்றே ஒன்றுதான்: தூக்குக் கயிறு."

"தன்னை அந்தக் கைதி ஒரு பெரிய கசாப்புக் கத்தியால் குத்த வந்தான் என்று ஏபிரகாம் சொல்கிறானே?" என்றாள்.

"இருக்கலாம்."

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"இருக்கலாம் என்றா சொன்னீர்கள்? ஒரு கைதி கத்தி வைத்திருக்க முடியும் என்றா சொல்கிறீர்கள்? அதுவும் பெரிய கசாப்புக் கத்தி?"

சிறையதிகாரி புன்னகை செய்தார். "மிஸ் ஜெனிபர், இந்தச் சிறையில் ஆயிரத்து இருநூற்று இருபது கைதிகள் இருக்கிறார்கள். அவர்களில் சில பேருக்கு அபார மூளை. வாருங்கள், உங்களுக்கு ஒன்று காட்டுகிறேன்."

நீண்ட தாழ்வாரத்தின் வழியே அவளை அழைத்துச் சென்றார் அதிகாரி. பூட்டியிருந்த அறையொன்றைத் திறந்தார். உள்ளே இருட்டாயிருந்தது. விளக்கைப் போட்டார்.

சுவரில் பல அலமாரிகள் இருந்தன. "கைதிகளிட மிருந்து கைப்பற்றிய ஆயுதங்களை இங்கே வைத்திருக் கிறோம், பாருங்கள்."

ஒன்றைத் திறந்து காட்டினார். எவ்வளவு வகையான ஆயுதங்கள்! துப்பாக்கி, கத்தி, அரிவாள், சம்மட்டி, பாறை, கட்டை, இரும்புத் தடி.

பார்க்கப் பார்க்க ஜெனிபரால் நம்பவே முடிய வில்லை.

அப்படியானால்... அப்படியானால்...

அந்த ரேமண்ட் தன்னைக் கத்தியால் குத்த வந்தா னென்று ஏபிரகாம் சொன்னது உண்மைதானோ?

"நான் ஏபிரகாமுடன் மறுபடி பேசினால் தேவலை," என்றாள்.

அந்த வழக்குக்காக மெனக்கெட்ட மாதிரி வாழ்க்கையில் எதற்கும் என்றைக்கும் ஜெனிபர் மெனக் கெட்டது கிடையாது.

நூல் நிலையங்களில் மணிக்கணக்காக அடைந்து கிடந்தாள். நீதிமன்றங்களின் நடைமுறைகள், வாதப் பிரதிவாதங்களைப் பற்றிப் படித்துப் படித்து மூளையில் ஏற்றிக் கொண்டாள்.

ஏபிரகாமுடன் பலமுறை பேசிப் பேசிச் சின்னச் சின்ன தகவல்களையும் சேகரித்துக்கொண்டாள்.

அவனுடைய குழந்தைப் பிராயம் எப்படிப்பட்டது, அவனுடைய பெற்றோர்கள் எப்படிப்பட்டவர்கள், அவன் பெரியவனான போது என்னென்ன நேர்ந்தது என்ற விஷயங்களை ஆராய்ந்தாள்.

பல வாரங்கள் சந்தித்துப் பேசி ஏபிரகாமின் மனசை மாற்றினாள். அவனுடைய பிடிவாதம் சிறிது சிறிதாகக் கரைந்தது.

அவனை ஒரு மனிதனாக இதுவரை யார் மதித்தார்கள்! எவருமில்லை. அவன் எப்படிப்பட்டவன் என்றோ ஏன் இப்படி இருக்கிறான் என்றோ, எண்ணிப் பார்த்தவர் எவரேனும் உண்டா? கிடையாது. ஆகவே ஜெனிபரிடம் அவனுக்கு மதிப்பு ஏற்பட்டது.

துருவித் துருவி அவள் கேள்விகள் கேட்டபோது அவனுக்குள் புதைந்திருந்த பல விஷயங்கள் அவனுக்கே

ஞாபகம் வந்தன. எவ்வளவு துன்பமானவை! எத்தனை தாங்கமுடியாத கொடுமைகள்!

சில சமயம் அவனுக்கே தாங்க முடியாமல், "வேண்டாம். என்னை எதுவும் கேட்காதீர்கள். போய் விடுங்கள்," என்று அழுது விடுவான்.

ஜெனிபரும் அப்போதைக்கு அத்துடன் நிறுத்திக் கொண்டுபோய்விடுவாள்.பிறகுமறுபடிவந்துகேள்வியைத் தொடர்வாள்.

நாளாக ஆக, ஏபிரகாம் வழக்கைத் தவிர தனக்கென்று வேறு எந்த வாழ்க்கையுமே இல்லாதது போலாகி விட்டது.

ஒன்று ஏபிரகாமுடன் இருப்பாள்.இல்லையென்றால் அலுவலகத்தில் வழக்கைப் பற்றிப் படித்துக் கொண்டி ருப்பாள்.

ஏபிரகாமின் கொலைக் குற்றத்தை, தற்காப்புக்காகச் செய்தது என்று வாதாடினால் தண்டனை குறைக்கப்பட வழியுண்டு என்று அவளுக்குத் தோன்றியது.

வழக்கைப் பற்றியே எப்போதும் கவனம் சென்றதால் சாப்பாட்டையும் தூக்கத்தையும் பற்றி ஜெனிபருக்கு ஞாபகமே இல்லை. எடை குறைந்து உடம்பு மெலிந்தது.

ஒரு நாள் துப்பறியும் நிபுணர் கென்னத் அவளைத் தன்னுடன் சாப்பிட வரும்படி பெரிய ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார். "நீ என்ன, தற்கொலை பண்ணிக் கொள்வது என்று முடிவு செய்து விட்டாயா?" என்றார்

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"கண்ணாடியில் உன்னைப் பார்த்துக் கொள், தெரியும்." அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டுக் கண்டிப்புடன் சொன்னார்: "கொஞ்சமாவது உனக்கு அறிவு இருந்தால் இந்த ஏபிரகாம் வழக்கை விட்டு விடு."

ஜெனிபர் திடுக்கிட்டாள்.

"இந்த வழக்கில் நீ ஜெயிக்கப் போவதில்லை. பத்திரிகைகளில் மறுபடியும் உன்னைக் கேலி பண்ணப் போகிறார்கள்."

ஜெனிபர் பிடிவாதமாகச் சொன்னாள்: "இதோ பாருங்கள், தனக்கு நீதி வழங்க வேண்டுமென்று கேட்க ஏபிரகாமுக்கு உரிமை உண்டு. அவனுக்காக வாதாட எனக்கும் உரிமை உண்டு. இதை நான் விடப் போவதில்லை. ஜெயித்துக் காட்டுகிறேன்."

துப்பறியும் நிபுணர் ஒரு பெரு மூச்சு விட்டார் "அப்படியா நினைக்கிறாய்? இந்த வழக்கில் அரசாங்கத் தரப்பில் ஆஜராகப் போகிறவர் யார் என்று தெரியுமா உனக்கு?"

"யார்?"

"டிசில்வா."

மூச்சு நிற்கிற மாதிரி ஆகிவிட்டது ஜெனிபருக்கு.

அடுத்த மூன்று நாளும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. திரும்பத் திரும்ப யோசித்தாள்.

டிசில்வா நேரடியாக ஆஜராகும் அளவுக்கு இந்த ஏபிரகாம் வழக்கு முக்கியமானதா என்ன?

இருக்காது.

ஜெனிபர் இந்த வழக்கில் ஆஜராகிறாள் என்பது தெரிந்து, அதற்காகவே அரசாங்கத் தரப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவளைப் பழி தீர்த்தாக வேண்டும். அவளுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். அதுதான் டிசில்வாவின் திட்டம் என்று புரிந்தது.

அவரை எதிர்த்துப் போராட நினைப்பது மடத்தனம். அவளுடைய வீம்பு, ஏபிரகாமின் கழுத்துக்குச் சுருக் காகி விடும்.

நாம் விலகி விடுவதுதான் புத்திசாலித்தனம் என்று ஜெனிபருக்குத் தோன்றியது.

அவள் விலகிக் கொண்டால் டிசில்வா அவ்வளவு காட்டம் காட்டமாட்டார். ஏபிரகாமிடம் கொஞ்சம் இரக்கம் காண்பிக்கக் கூடும்.

ஏபிரகாமின் உயிரைக் காப்பாற்ற வேண்டியதுதான் முக்கியம். அவள் இந்த வழக்கை ஏற்று நடத்துவது முக்கியமல்ல.

இந்த முடிவை டிசில்வாவிடம் தெரிவித்து விடுவது நல்லது என்று. தோன்றியது புறப்பட்டாள்.

ஆறாவது மாடிக்கு ஏறியபோது, கிட்டத்தட்ட ஒரு வருஷமாகப் போகிறது டிசில்வாவைப் பார்த்து என்பது ஞாபகத்துக்கு வந்தது.

இப்படியொரு சூழ்நிலையில் அவரை மறுபடி சந்திக்க நேரிடும் என்று அவள் நினைக்கவேயில்லை.

முன்கூட்டியே தான் வரவேண்டுமென்று கூறி, நேரம் ஏற்பாடு செய்திருந்தாள் அவள்.

டிசில்வாவின் அறைக்குள் நுழைந்தபோது, பழைய நிகழ்ச்சிகளெல்லாம் அடுக்கடுக்காய் நினைவு வந்தன.

அப்போது இருந்த அதே உதவியாளர் அதே இடத்தில் இருந்தாள்.

"நான் ஜெனிபர். அரசாங்க வக்கீலைப் பார்க்க.... என்று சொன்னதுமே. "உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் போங்கள்," என்றாள் அவள்.

சுருட்டுப் பிடித்தபடி இரண்டு உதவியாளர்களுக்கு ஏதோ உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார் டிசில்வா. பேச்சை நிறுத்திக் கொண்டு, "நீ வரமாட்டாய் என்று நினைத்தேன்," என்றார்.

"வந்திருக்கிறேனே."

"என்ன காரியமாய் வந்திருக்கிறாய்?" என்றார். அவர் மேஜை எதிரே இரண்டு நாற்காலிகள் காலியாய் இருந்தன. ஆனால் அவளை அவர் உட்காரச் சொல்லவில்லை.

ஜெனிபர் பேச்சை ஆரம்பித்தாள் மெல்ல. "என் கட்சிக்காரர் ஏபிரகாமைப் பற்றிப் பேசுவதற்காக வந்திருக்கிறேன்.."

"ஏபிரகாமா?" டிசில்வா நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து ஞாபகம் வராத மாதிரி பாசாங்கு செய்தார். "ஓகோ, அவனா... சிறையில் ஒருவனை அடித்துக் கொலை செய்தானே நீக்ரோ, அவனா? ஏன்? அவனுக்காக ஆஜராவதில் உனக்கு என்ன சிக்கல்?" என்றபடி அருகில் நின்றிருந்த இரண்டு உதவியாளர்களையும் ஓரக் கண்ணால் பார்த்தார். குறிப்பறிந்து அவர்கள் வெளியேறினார்கள்.

"என்ன கஷ்டம், வக்கீலம்மா?" என்றார் மறுபடி.

"அந்த வழக்கைப் பற்றி உங்களிடம் ஒரு விஷயம் பேசணும்."

ரொம்ப ஆச்சரியப்பட்ட மாதிரி நடித்தார் டிசில்வா. "அவனைப் பற்றிப் பேசுவதற்கு வந்ததாகவா சொல்கிறாய்? ஆச்சரியம்! ஆச்சரியம்! எப்பேர்ப்பட்ட சட்ட ஞானம் உள்ளவள் நீ! அந்த ஆளுக்கு ஜாம்ஜாமென்று விடுதலை வாங்கித் தர முடியுமே?"

"மிஸ்டர் டிசில்வா, இந்த வழக்கில் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பார்க்க வேண்டும். ஏபிரகாம்..."

டிசில்வா குறுக்கிட்டார் "ஓகோ! சந்தர்ப்ப சூழ்நிலையா? அந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலையைச் சுக்கு நூறாகக் கிழித்து உன் தலையில் போட்டுக் கொள்!" அவர் எழுந்து நின்றார். ஆத்திரத்தினால் அவர் குரல் நடுங்கியது. "என்னிடம் பேரம் பேசலாமென்று வந்தாயா? நடவாது!

என் வாழ்க்கையையே கெடுத்துக் குட்டிச் சுவராக்கினாயே அது உனக்கு மறந்தாலும் எனக்கு மறக்கவில்லை. உன் கட்சிக்காரன் தூக்கிலே தொங்கத்தான் போகிறான். அதை என் இரண்டு கண்ணாலும் பார்க்கத்தான் போகிறேன்! என்ன, நான் சொல்வது காதில் விழுகிறதா? அவனைத் தூக்குக்கு அனுப்பி விட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போகிறேனாக்கும்!"

ஜெனிபருக்கு ஒரே திகைப்பு. எப்படி இவரிடம் பேசுவது? மெதுவாகச் சொன்னாள்: "ஏபிரகாமின் வழக்கிலிருந்து நான் விலகிக் கொள்ளப் போகிறேன். அதைச் சொல்லத்தான் வந்தேன். திட்டமிட்டுக் கொலை செய்ததாக, அவன் மீது குற்றம் சாட்டாமல், ஆத்திர மூட்டப்பட்டதால் தாக்கினான் என்று குற்றச்சாட்டைக் குறைத்தீர்களானால் தேவலை, ஏபிரகாம் ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். நீங்கள் மனம் வைத்தால்..."

"ஒரு நாளும் முடியாது. அவன் செய்தது திட்டமிட்ட கொலைதான்! அதற்குண்டான மரண தண்டனைதான் அவனுக்குக் கிடைக்க வேண்டும்!" டிசில்வா கத்தினார்.

ஜெனிபருக்குக் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டு, "அவன் குற்றவாளியா என்பதையும் என்ன தண்டனை தரவேண்டியது என்பதையும் தீர்மானம் பண்ண வேண்டியது நீதிமன்றம் என்று நினைக்கிறேன்," என்றாள்.

டிசில்வா கேலியாய்ப் புன்னகைத்தார். "அடடே! அப்படியாம்மா! உன்னைப் போல ஒரு மாபெரும் புத்திசாலி, என் ஆபீசுக்கு வந்து என்னிடம் சட்டத்தை விளக்குவதென்றால் அதற்கு நான் எத்தனை பாக்கியம் செய்திருக்க வேண்டும்!"

"மிஸ்டர் டிசில்வா, நம்முடைய தனிப்பட்ட விரோதத்தைக் கொஞ்சம் மறந்து விட்டு..."

"மறப்பதா! நான் உயிரோடு இருக்கும் வரை மறக்க மாட்டேன். போய் வா!" என்றார் டிசில்வா. "ஆ, சொல்ல மறந்து விட்டேனே! உன் காதலன் மாரெட்டியை நான் ரொம்பக் கேட்டதாய்ச் சொல்லு."

சோகர்வுடன் திரும்பிய ஜெனிபரிடம், "என்ன ஆயிற்று?" என்று ஆர்வத்துடன் கேட்டார் துப்பறியும் நண்பர்.

"சரிப்பட்டு வரவில்லை," என்று அவள் ஒப்புக் கொண்டாள். "ஏபிரகாமுக்கு நான் ஆஜராகாமல் விலகிக் கொண்டால் அவன் விஷயத்தில் இரக்கம் காட்டுவாரென்று நினைத்தேன். ஆனால் டிசில்வா அதற்குத் தயாராயில்லை. அவர் தீர்த்துக்கட்ட விரும்புவது ஏபிரகாமை அல்ல, என்னை!"

"இனிமேல் என்ன ஆகும்?"

"நான் வக்கீல் தொழிலுக்குப் புதியவள். இது என் முதல் வழக்கு. என்னை எதிர்ப்பவரோ இந்த மாநிலத்திலேயே மகா கெட்டிக்காரரான அரசாங்க வக்கீல். என்னை வஞ்சம் தீர்க்க வேண்டுமென்று காத்திருப்பவர். என் கட்சிக்காரனோ ஒரு நீக்ரோ. ஏற்கனவே ஒரு கொலைக் குற்றத்துக்காக ஜெயிலில் இருப்பவன். சிறையில் இன்னொரு கொலை செய்திருக்கிறான். அதைப் பார்த்த சாட்சிகள் நூற்றிருபது பேர். என்ன ஆகும் என்று நீங்களே சொல்லுங்கள்."

துப்பறியும் நிபுணருக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

இன்னும் மூன்றே வாரம்தான் இருந்தது ஏபிரகாமின் வழக்கு ஆரம்பிக்க.

தனிமைச் சிறையிலிருந்து வேறொரு சிறைக்கு அவனை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தாள் ஜெனிபர் அதைக் காட்டிலும் இது மோசமாக இருந்தது.

ஏபிரகாமைச் சந்தித்துப் பேசும் போதெல்லாம், 'இந்த மனிதனின் உயிர் என் கையில் இருக்கிறது. இவனுக்கு மரண தண்டனை கிடைத்தால், அதற்கு நான் தான் பொறுப்பு,' என்று எண்ணிக் கொண்டாள்.

"பயப்படாதே. என்னால் முடிந்ததை எல்லாம் செய்யாமல் விடமாட்டேன்," என்று அவனுக்கு உறுதி கூறினாள்.

வழக்குத் தொடங்க மூன்று நாள் இருந்தபோது அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது.

வழக்கை விசாரிக்கப் போவது நீதிபதி வால்டுமேன். மாரெட்டி வழக்கை விசாரித்த அதே நீதிபதி. ஜெனிபரை வக்கீல் தொழிலிலிருந்து நீக்க வேண்டும் என்று டிசில்வாவுடன் சேர்ந்து முனைந்திருந்த அதே நீதிபதி.

8

குற்றவாளிக் கூண்டினருகே ஏபிரகாம் உட்கார்ந் திருந்தான். ஜெனிபர் வாங்கித் தந்திருந்த கருநீலக் கால் சட்டையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தான். அளவு சிறிதாக இருந்தன. 'இப்போது அசல் கொலையாளி போல் அல்லவா தெரிகிறான்!' என்று ஜெனிபர் எண்ணிக் கொண்டாள்.

எல்லோரையும் முறைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். உள்ளுக்குள் இருக்கும் உதறலை மறைப்பதற்குத்தான் அந்த முறைப்பு என்பது ஜெனிபருக்குத் தெரியும். ஆனால் நீதிபதியும் ஜூரர்களும் அப்படி நினைக்க மாட்டார்களே? இவன் பயங்கரமான ஆள், இவனுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டியதுதான் என்றல்லவா எண்ணுவார்கள்? அவர்களுக்கு இரக்கம் ஏற்படுத்தும்படி இனிமையான அம்சம் கடுகத்தனையாவது இவனிடம்

இருக்கிறதா? இல்லையே! கோரமான தழும்புகள் நிறைந்த முகம். பிரம்மாண்டமான உடம்பு. பார்க்கிறவர்களுக்கு இவனிடம் பயம்தான் ஏற்படும்.

ஏபிரகாமுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து, "குட்மார்னிங் எபிரகாம்," என்றாள் மெதுவாய்.

அவன் அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "எதற்காக அனாவசியமாய் வந்திருக்கிறீர்கள்? இது ஒன்றும் விசாரணையில்லை. சும்மா ஒரு டிராமா பார்ப்கார்ன் கொண்டு வந்திருக்கிறீர்களா, கொறித்துக் கொண்டே வேடிக்கை பார்க்கலாம்," என்றான்.

நீதி மன்றத்தில் சலசலப்பு ஏற்பட்டது. டிசில்வாதான். உதவியாளர்கள் புடைசூழ வந்து அமர்ந்தவர் ஜெனிபரை நோக்கிப் புன்னகை செய்தார். அந்தப் புன்னகை அவள் வயிற்றைக் கலக்கியது.

நீதிமன்றச் சிப்பந்தி கட்டியம் கூற, நீதிபதி வால்டுமேன் வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார்.

எல்லாரும் எழுந்து நின்றார்கள். எழுந்திருக்காமல் உட்கார்ந்திருந்தவன் ஏபிரகாம் ஒருவன்தான்.

"ஸ்! எழுந்து நில்!" என்று ஜெனிபர் கிசுகிசுத்த குரலில் அதட்டினாள்.

"மாட்டேன்! அவங்க வந்து என்னைத் தூக்கி நிறுத்தட்டும்!" என்றான் அவன்.

"எழுந்து நில் ஏபிரகாம். மனம் தளராதே. இந்தக் கேஸில் நாம் ஜெயிக்கத்தான் போகிறோம்!"

அவளைப் பல நொடிகள் இமை கொட்டாமல் பார்த்துவிட்டு, பிறகு வேண்டா வெறுப்பாய் எழுந்து நின்றான் ஏபிரகாம்.

முதல் சில நாட்களுக்கு வாடிக்கையான நடைமுறைகள்தான் நடந்தன. டிசில்வா கச்சிதமாகவும்

இனிமையாகவும் ஜூரர்களிடம் நடந்து கொண்டார். அவர்களுக்குத் தன்னிடம் நம்பிக்கை ஏற்படும் வகையில் பேசினார். அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொண்டார். 'பிரமாதமான நடிகர்!' என்று எண்ணிக் கொண்டாள் ஜெனிபர்.

சிறைக்குள் ரேமண்ட் என்ற கைதியை ஏபிரகாம் கொலை செய்த விவரத்தை ஜூரர்களுக்குத் தெரிவித்தார் டிசில்வா. 'இந்த வழக்கைப் பற்றிச் சொல்லி உங்கள் நேரத்தை நான் வீணடிக்க மாட்டேன். ஒன்று மட்டும் சொல்கிறேன். குற்றம் சாட்டப்பட்டிருக்கிற ஏபிரகாம் ஒரு அப்பாவிக் கைதியைப் பச்சைப் படுகொலை செய்திருக்கிறான். கொலை செய்ததை அவனே ஒப்புக் கொண்டிருக்கிறான். அவன் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கூட அந்தப் பச்சைக் படுகொலையைக் கண்ணால் கண்ட சாட்சிகள் இருக்கிறார்கள். நூற்றுக்கு மேற்பட்ட சாட்சிகள்.

"நான் வேண்டுமென்றே தான் பச்சைப் படுகொலை என்று குறிப்பிடுகிறேன். சில கொலைகளை நம்மால் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் நேசிக்கும் ஒருவரை உங்கள் குழந்தையையோ கணவரையோ மனைவியையோ - ஒருவன் கொல்லப் பார்க்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் கையில் துப்பாக்கி இருந்தால் நீங்கள் அவனைச் சுடலாம். அதில் தப்பில்லை. ஏனெனில் உங்கள் அன்புக் குரியவரைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. இன்னோர் உதாரணம் சொல்கிறேன். நள்ளிரவில் ஒருவன் உங்கள் அறைக்குள் புகுந்து உங்களைக் கொல்லப் பார்க்கிறான். உங்களிடம் துப்பாக்கி இருக்கிறது. அவனைச் சுட்டு வீழ்த்துகிறீர்கள். அதனாலேயே நீங்கள் கொலைகாரராக ஆகிவிட மாட்டீர்கள். ஏனென்றால், அந்த நிமிஷத்தில் இருந்த வேகத்தில் உங்கள் உயிரை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள அப்படிச் செய்தீர்கள் அவ்வளவுதான்."

இரண்டு வினாடி நிறுத்தி, பிறகு அழுத்தமாகச் சொன்னார்.

"ஏபிரகாம் செய்த பச்சைப் படுகொலை அப்படிப்பட்டதல்ல. எவ்வித ஆத்திரமோ உணர்ச்சி வேகமோ இல்லாத போது ஓர் உயிரைப் பறித்திருக்கிறான்!"

அவர் பேசுவதையெல்லாம் ஜெனிபர் கவனித்துக் கொண்டிருந்தாள்.

ஜூரர்களின் முகங்களை ஆராய்ந்தாள் சந்தேகமில்லை. டிசில்வா அவர்களைத் தன் பக்கம் இழுத்து விட்டார். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்கள் கை தட்டாத குறைதான். மற்றப்படி தலையை ஆட்டுகிறார்கள். ஏபிரகாமின் பெயரை அவர் குறிப்பிடும் போதெல்லாம் அவனைத் திரும்பிப் பார்த்து முகம் சிடுசிடுக்கிறார்கள்.

ஏபிரகாமிடம், 'தலையைக் குனிந்தபடியே இரு, ஜூரர்களை நேரடியாகப் பார்க்க வேண்டாம்' என்று படித்துப் படித்துச் சொல்லியிருந்தாள் ஜெனிபர். அவனா கேட்பான்! வைத்த கண் வாங்காமல் ஜூரர்களைத்தான் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏபிரகாம்! அவர்களைப் பார்க்காதே. இந்தப் பக்கம் திரும்பு!" என்று மெதுவாகச் சொல்லிப் பார்த்தாள்.

ஊகூம். அவன் அசையக் காணோம்.

டிசில்வா தன் பேச்சை முடித்துக் கொண்டிருந்தார். "ஏபிரகாமைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று நான் கேட்கவில்லை. கொலை செய்யப்பட்ட அப்பாவி ரேமண்டுக்கு நீதி வழங்குங்கள் என்று மட்டுமே கேட்கிறேன். ஏபிரகாமினால் பச்சைப் படுகொலை செய்யப் பட்ட ஒரு நல்ல மனிதனுக்கு நீதி வழங்குங்கள் என்றுதான் கேட்கிறேன். நன்றி."

ஜெனிபர் எழுந்து கொண்டாள் ஜூரர்களின் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது-அவர்கள் என்ன

நினைக்கிறார்கள் என்பது.ஏபிரகாம் குற்றவாளி தான் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள்.

ஒரு நிமிஷம் தன்னை நிதானப் படுத்திக் கொண்டு விட்டு ஜூரர்களிடம் சொன்னாள்:

"எந்த வழக்கிலும் இரண்டு கட்சி உண்டு என்பதால்தான் நீதிமன்றம் என்று ஒன்று இருக்கிறது. உங்களைப் போன்ற பெரியவர்கள் இங்கே உட்கார்ந் திருப்பதும் அதனால்தான். மதிப்புக்குரிய அரசாங்க வக்கீல் அதை மறந்து விட்டு, ஏபிரகாம் பச்சைப் படுகொலை செய்தவன் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார். அது முற்ற முழுக்கத் தப்பு. சிறையில் ஒரு கைதியை ஏபிரகாம் கொன்றது, தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, தற்காப்புக்காக. இந்தக் கொலை தற்காப்புக்காகச் செய்யப் படவில்லை, திட்டமிட்டுச் செய்தது என்பதைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்க வேண்டியது பிராசிக்யூஷனின் கடமை."

ஜெனிபர் பேசி முடித்தபின் சாட்சிகள் விசாரிக்கப் பட்டார்கள். டிசில்வா அவர்களை ரொம்பக் கவனமாகத் தயார் செய்து வைத்திருந்தார். கொலை செய்யப்பட்ட ரேமண்ட் தங்கமானவன் என்று ஆளுக்கு ஆள் நற்சாட்சி வழங்கினார்கள் எவர் வம்புக்கும் போகாதவன், ஈ எறும்புக்கு தீங்கு செய்யாதவன் என்று புகழ் பாடினார்கள்.

டிசில்வா மிகவும் அழுத்திச் சொன்ன விஷயம் இறந்தவனின் தோற்றம்.

ஏபிரகாம் ஒரு ராட்சசன், ரேமண்ட் ஓர் எலிக் குஞ்சு என்பது போல வர்ணித்தார்.

வாயால் சொன்னது மட்டுமல்ல, கண்ணெதிரே காட்டினார்.

ஒரு நீதிமன்றக் குமாஸ்தாவைக் கூப்பிட்டார்.

உயரத்தில் கிட்டத்தட்ட இறந்துபோன ரேமண்டைப் போலவே இருந்தார் அவர். ஏபிரகாமை எழுந்து நிற்கச் சொல்லி, அவன் பக்கத்தில் அந்தக் குமாஸ்தாவை நிற்கச் சொன்னார்.

ஜூரர்களுக்குப் புரிந்தது-

பார்த்த மாத்திரத்திலேயே ஏபிரகாம் எப்படிப்பட்ட காட்டான் என்பதும், ரேமண்ட் எப்படிப்பட்ட நோஞ்சான் என்பதும் புரிந்தது.

டிசில்வா ஏளனமாகச் சிரித்தார். "பார்த்துக் கொள்ளுங்கள் நீங்களே! தற்காப்புக்காக ஏபிரகாம் கொலை செய்தானாம்! தற்காப்பு! இவ்வளவு சின்ன ஆளைக் கண்டு அவ்வளவு பெரிய ஆளுக்குத் தற்காப்பாம்!"

ஜெனிபர் அசந்து போனாள்.

அவளால் என்ன செய்ய முடியும்! கண் முன்னால் ஒரு காட்சியாகக் காட்டி ஜூரர்கள் மனத்தில் ஓர் எண்ணத்தைப் பதிய வைத்து விட்டார் டிசில்வா. இனி என்ன செய்தாலும் அதை அழிக்க முடியாது.

போலீஸ் தரப்புச் சாட்சிகள் தங்கள் சாட்சியத்தைச் சொல்லி முடித்தார்கள். பின் ஜெனிபர் எழுந்து, "சிறை அதிகாரியைச் சாட்சி சொல்ல அழைக்கிறேன்," என்றாள்.

அவர் சாட்சிக் கூண்டுக்கு வந்து சத்தியப் பிரமாணம் செய்ததும், "தயவுசெய்து தங்கள் வேலையைப் பற்றி ஜூரர்களுக்குத் தெரிவிக்க முடியுமா?" என்றாள் ஜெனிபர்.

ஏபிரகாமுக்கு ஆதரவாக அவர் சாட்சி சொல்ல முதலில் விரும்பவில்லை. கோர்ட் சம்மன் மூலம் அவரை வரவழைத்திருந்தாள் ஜெனிபர் ஆகவே சுற்றி வளைத்துத்தான் பதில் தந்தார்.

"ஏபிரகாம் போன்ற ஆட்களுடன் நான் ஆயுள் பூரா மாரடித்து வருகிறேன். அவர்களால் எப்போதும் தொல்லை தான்," என்று ஆரம்பித்தார்.

டிசில்வாவின் முகம் மலர்ந்தது. தன் உதவியாளரிடம் ரகசியக் குரலில், "பார்த்துக் கொண்டே இரு. ஜெனிபர் தூக்குப் போட்டுக் கொள்ளப் போகிறாள்!" என்றார்.

சிறை அதிகாரியிடம் ஜெனிபர் அமைதியாகச் சொன்னாள்.: "ஏபிரகாம் இங்கே குற்றவாளிக் கூண்டில் நிற்பது வெறுமே தொல்லை தந்ததற்காக அல்ல. கொலைக் குற்றம் சாட்டப்பட்டு நிற்கிறான். தாங்கள் மனிதாபி மானத்தோடு அவனுக்கு உதவி செய்ய வேண்டாமா?" என்று கூறிவிட்டு, "இதற்கு முன்பும் கூடச் சிறையில் இந்த மாதிரிக் கொலைகள் நடந்திருக்கின்றன அல்லவா?" என்றாள்.

"நூற்றுக்கணக்கான குற்றவாளிகள் ஒரே இடத்தில் கட்டாயமாக அடைக்கப்பட்டிருக்கும்போது, பல விதமான பகைமைகள்...."

"ஆம், இல்லை என்று மட்டும் பதில் சொல்லுங்கள், ப்ளீஸ்."

"ஆமாம்."

"அந்தக் கொலைகளுக்குப் பல விதமான நோக்கங்கள் உண்டு. இல்லையா?"

"அதாவது சில சமயம்-"

"ஆம் இல்லை என்று மட்டும் சொல்லுங்கள்."

"ஆமாம்."

"தற்காப்புக்காக, தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, சில சமயம் கொலை நடந்ததுண்டு. இல்லையா?"

"அதாவது-" என்று ஆரம்பித்தவர் ஜெனிபரின் முகத்தைப் பார்த்ததும், "ஆமாம்," என்றார்.

தங்கள் பரந்த அனுபவத்தை வைத்துச் சொல்லுங்கள்-ஏபிரகாம் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ரேமண்டைக் கொலை செய்திருப்பது சாத்தியம்தான். இல்லையா?"

"நான் அப்படி நினைக்கவில்லை...

"சாத்தியமா இல்லையா என்றுதான் கேட்கிறேன்."

"அப்படியெல்லாம் நடந்திருக்க முடியாது..."

ஜட்ஜ் வால்டுமேனை நோக்கித் திரும்பினாள் ஜெனிபர். "யுவர் ஆனர், தயவு செய்து என் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லும்படி சாட்சிக்குத் தாங்கள் உத்தரவிட வேண்டும்," என்றாள்.

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்," என்று நீதிபதி உத்தரவிட்டார் சிறை அதிகாரிக்கு.

"சாத்தியம்தான்," என்று அவர் ஒப்புக்கொண்டார்.

ஜெனிபர் சொன்னாள்: "தடயங்களாகச் சில பொருள்கள் எடுத்து வரும்படி இந்தச் சாட்சியைக் கேட்டிருந்தேன். அவரும் கொண்டு வந்திருக்கிறார். அவைகளைக் காட்டுவதற்குக் கோர்ட்டார் அனுமதிக்க வேண்டும்."

டிசில்வா சரேலென்று எழுந்தார். "என்ன பொருள்?"

"தற்காப்புக்காகத்தான் ஏபிரகாம் கொலை செய்தான் என்பதை நிரூபிக்கக் கூடிய பொருள்," என்றாள் ஜெனிபர்.

"நான் ஆட்சேபிக்கிறேன், யுவர் ஆனர்," என்றார் டிசில்வா.

ஜெனிபர் உடனே, "இன்னும் பொருளையே நீங்கள் பார்க்கவில்லை. அதற்குள் ஆட்சேபிக்கிறீர்களே?" என்றாள்

நீதிபதி ஜெனிபருக்குப் பரிந்து பேசினார்: "ஒரு மனிதனின் உயிர் இங்கே பணயத்தில் இருக்கிறது. ஆகவே எல்லாவித சாட்சியங்களையும் கோர அவருக்கு உரிமை உண்டு."

சிறைச் சிப்பந்தி ஒரு பெட்டியை எடுத்து வந்தார். மூடியிருந்த பெட்டி.

"என்ன அது?" என்று கேட்டார் நீதிபதி.

"ஆயுதங்கள், யுவர் ஆனர். சிறையில் உள்ள கைதிகள் தயாரித்தவை - ஒருவரையொருவர் தாக்குவதற்காக."

"இந்தப் பெட்டியை வைத்துக் கொண்டு எதையும் நிரூபிக்க முடியாது," என்று டிசில்வா ஆட்சேபம் செய்து பார்த்தார்.

"யுவர் ஆனர், கொலை செய்யப்பட்ட ரேமண்ட் ஒரு அப்பாவி, சாது என்றெல்லாம் அரசாங்க வக்கீல் சொன்னார். அப்படியொன்றும் இல்லை, இந்த மாதிரி ஆயுதங்கள் வைத்திருந்தவன் தான் அவன் என்பதை நிரூபிக்க வேண்டியிருக்கிறது," என்று ஜெனிபர் அந்தப் பெட்டியைக் காட்ட வேண்டுமென்று கூறியதும் நீதிபதி அனுமதி தந்தார்.

"மிக்க நன்றி யுவர் ஆனர்," என்று கூறிவிட்டு, காவலரிடமிருந்து அந்தப் பெட்டியை வாங்கிக் கொண்டாள் அதைக் கையில் ஏந்தியபடி ஜூரர்களை நோக்கித் திரும்பினாள். "இதற்கு முன்பும் சிறைக்குள் கொலைகள் நடந்திருக்கின்றன என்றும் கைதிகள் பயங்கரமான ஆயுதங்கள் தயாரித்து வைத்துக் கொண்டிருப்பது உண்டு என்றும் சிறை அதிகாரி தெரிவித்ததைக் கேட்டீர்கள். அப்படிப்பட்ட ஆயுதங்கள் ரேமண்டிடமும் இருந்திருக்கிறது. அதைக் கொண்டு அவன் தாக்க வரும்போது ஏபிரகாம் தற்காப்புக்காக அவனைத் திருப்பித் தாக்க வேண்டியிருந்தது. அதை நிரூபிப்பதற்காகவே இந்தத்

தடயங்களை உங்களுக்குக் காட்டுவதற்காக இங்கே வரவழைத்திருக்கிறேன். இவைகளைப் பாருங்கள். ஏபிரகாம் தற்காப்புக்காகக் கொலை செய்திருக்கக் கூடும் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டால் என் கட்சிக்காரர் குற்றமற்றவர் என்று தீர்மானிப்பது உங்கள் கடமை."

கையிலிருந்த பெட்டியைத் தாங்கிக் கொள்ள முடியாதவளைப் போல் ஜெனிபர் தவித்தாள். "இந்தப் பெட்டியை முதன் முதல் பார்த்த போது என்னாலே கூட என் கண்களை நம்ப முடியவில்லை. உங்களுக்கும் இப்போது அப்படித்தான் இருக்கும்..."

பேசியபடியே ஜூரர்களின் அருகே அவள் சென்றாள். திடீரென்று அவள் கை தடுமாறுவது போலிருந்தது. கை வழுக்கிவிட்ட மாதிரி இருந்தது.

தடால்!

பெட்டி கீழே விழுந்தது. மூடி திறந்து கொண்டது. உள்ளிருந்த பலவகைப்பட்ட ஆயுதங்கள் தரையெங்கும் சிதறி உருண்டன.

ஜூரர்கள் எழுந்து நின்றார்கள். அந்தப் பொருள்களை எம்பிப் பார்த்தார்கள்.

எவ்வளவு கோரமான ஆயுதங்கள்! என்னென்ன அளவுகள்! கத்திரிக்கொல், சிறிய துப்பாக்கி, சுத்தி, கசாப்புக் கத்தி, கிடுக்கி, ஓயர்...

ஜெனிபருக்கு உதவி செய்ய ஒரு சிப்பந்தி விரைந்து வந்தான் "வேண்டாம், வேண்டாம். நானே எடுத்து வைக்கிறேன்," என்று பொறுக்கினாள் மெதுவாக, ஒவ்வொன்றாக எடுத்துப் பெட்டிக்குள் வைத்தாள் ஒவ்வொன்றையும் எடுத்து ஒரு வினாடி உயர்த்தினாற்போல் பார்த்து விட்டுப் பிறகே பெட்டிக்குள் வைத்தாள்.

எழுந்து நின்றிருந்த ஜூரர்கள் தங்கள் இருக்கைகளில் திரும்ப உட்கார்ந்து விட்டார்கள் ஆனால் அவர்கள்

பார்வை ஜெனிபர் எடுத்து வைக்கும் ஆயுதங்களின் மீதே பதிந்திருந்தது. கண் கொட்டவில்லை.

அவர்கள் மனத்தில் பதிவதற்காக ஜெனிபர் வேண்டுமென்றே பெட்டியை நழுவ விட்டு திரும்ப மெதுவாக எடுத்து வைக்கிறாள் என்பது டிசில்வாவுக்குப் புரிந்தது. ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது. ஆனால் அவரால் என்ன செய்ய முடியும்?

ஏபிரகாமைக் கூண்டில் நிறுத்தி விசாரணை செய்தாள் ஜெனிபர்.

"நீங்கள் ரேமண்டைக் கொலை செய்தீர்களா?"

"ஆமாம்," என்றான் அவன்.

"ஏன் என்று கோர்ட்டாருக்குச் சொல்கிறீர்களா?"

"அவன் என்னைக் கொலை செய்ய வந்தான்."

"ரேமண்ட் உங்களைவிட உருவத்தில் சின்ன ஆள். நீங்கள் ரொம்பப் பெரிய ஆள். அவன் எப்படி உங்களைக் கொல்ல வந்திருக்க முடியும்?"

"அவன் கையில் இரண்டு ஆயுதங்கள் இருந்தன. அதை வைத்திருக்கும் வரையில் அவன்தான் பெரிய ஆள்."

ஆயுதங்கள் அடங்கிய பெட்டியைக் காட்டினாள் ஜெனிபர். "எந்த மாதிரி ஆயுதங்கள்?"

ஒரு கத்தியையும் ஒரு கிடுக்கியையும் அவன் எடுத்துத் தந்தான். "இதுதான்."

"இவைகளைக் கொண்டு உங்களை ரேமண்ட் தாக்க வந்தபோது நீங்கள் தற்காப்புக்காக அவனைக் கொல்ல நேரிட்டது. அப்படித்தானே?"

"ஆமாம்."

ஜெனிபர் முடித்ததும் டிசில்வா குறுக்கு விசாரணை செய்தார்.

"ஏபிரகாம், ஏற்கனவே ஒரு கொலை செய்தவன்தான் நீ. இல்லையா?"

"ஏதோ தப்புச் செய்துவிட்டேன். அதுக்குத்தான் தண்டனை அனுபவிக்கிறேனே?" என்றான் ஏபிரகாம்.

"உன்னுடைய கதாகாலட்சேபத்தை அப்புறம் கேட்கிறேன். இப்போது கேட்டதற்குப் பதில் சொல்லு."

"ஆமாம்."

"அதாவது மனித உயிர் என்பது உனக்கு ஒன்றும் பெரிதல்ல. இல்லையா?"

"உயிரை மதிக்கிறவன் தான் நான்."

"ஓகோ! மனித உயிர்களை மதிக்கிறவன்தான் இரண்டு கொலைகளைச் செய்தாயாக்கும்? மதிக்க வில்லை யென்றால் இன்னும் எத்தனை கொலை செய்திருப்பாய்? ஐந்தா, பத்தா இருபதா?"

வேண்டுமென்றே அவர் அவனைச் சீண்டிக் கொண்டிருக்கிறார் என்பது ஜெனிபருக்குப் புரிந்தது. கடவுளே! இவன் நிதானம் இழக்காமலிருக்க வேண்டும்!

"தேவடியாப் பையா!" என்று கத்திவிட்டான் ஏபிரகாம்.

'போச்சு! போச்சு!' என்று மனத்துக்குள் அலறினாள் ஜெனிபர். 'வேண்டாம்! வேண்டாம்!' என்று அவனைக் கண்ணால் கெஞ்சினாள்.

டிசில்வா சீறினார். "ஆ! இப்படித்தான் ஆத்திரப்பட்டு ரேமண்டை கொலை செய்தாய். இல்லையா?"

"அவன் என்னைக் கொல்ல வந்தான்," என்று மறுபடியும் சொன்னான் ஏபிரகாம்.

"கொல்ல வந்தானா? எதைக் கொண்டு? இந்த ஆயுதங்களைக் கொண்டா?" கத்தியையும் கிடுக்கியையும் எடுத்து அவன் கண்முன் நீட்டினார் டிசில்வா. "இந்தக் கத்தியை அவன் கையிலிருந்து ரொம்பச் சுலபமாய் நீ பறித்து எறிந்திருக்க முடியுமே!" கிடுக்கியை அவன் முன் ஆட்டினார். "ஹூம்! இது ஒரு ஆயுதமா?" ஜூரர்களின் பக்கம் திரும்பி எளனம் நிறைந்த குரலில் விளக்கினார்: "இதைப் போய் ஒரு பயங்கர ஆயுதம் என்று யாராவது சொல்வார்களா? இதனால் தலையில் அடித்ததாகவே வைத்துக் கொண்டால் கூட என்ன ஆகும்? ஒரு சிறு வீக்கம் ஏற்படும்! அவ்வளவுதான்! சொல்லு ஏபிரகாம். இந்தக் கிடுக்கியைக் கொண்டு என்ன செய்யப் பார்த்தான் ரேமண்ட்? சொல்லு."

ஏபிரகாம் மெதுவே சொன்னான்: "வெறும் கிடுக்கி இல்லை அது. விரைக் கொட்டைகளை நசுக்குவது."

ஜூரர்கள் எட்டு மணி நேரம் தங்களுக்குள் ஆலோசனை செய்துவிட்டுத் திரும்பி வந்தார்கள்.

அவர்களின் தலைவர் நீட்டிய காகிதத்தைச் சிப்பந்தி வாங்கிவந்து நீதிபதி வால்டுமேனிடம் தந்தார்.

நீதிபதி அதைப் படித்துப் பார்த்தார். ஜூரர்களின் மீதும் டிசில்வாவின் மீதும் ஜெனிபரின் மீதும் அவர் பார்வை சுழன்றது. பிறகு ஏபிரகாமின் மீது நிலைத்து நின்றது.

"எழுந்து நில்," என்றார்.

ஏபிரகாம் நின்றான்.

கையிலிருந்த காகிதத்தைப் படித்தார்:

"குற்றம் சாட்டப்பட்ட ஏபிரகாம் வேண்டுமென்றே கொலை செய்யவில்லை என்றும், தற்காப்புக்காகவே கொன்றானென்றும் நாங்கள் தீர்மானிக்கிறோம்."

தன் காதில் விழுந்தது உண்மைதானா? ஜெனிபர் ஏபிரகாமைப் பார்த்தாள். அவனுடைய சின்னக் கண்கள்

மின்னின. அவன் முகத்தில் ஒரு புன்னகை பூத்து மெல்ல மெல்லப் பெரும் சிரிப்பாக மலர்ந்தது. திக்கு முக்காடிப் போனாள் ஜெனிபர். பொங்கி வரும் கண்ணீரை அடக்கிக் கொள்ள அவளால் முடியவில்லை.

୨

ஏபிரகாமுக்கு மரணதண்டனை இல்லை என்று தீர்ப்பானது.

பத்திரிகை நிருபர்களும் டி.வி.க்காரர்களும் ஜெனிபரைச் சூழ்ந்து கொண்டார்கள் கேள்வி மேல் கேள்வியாக வீசினார்கள்.

"அரசாங்கவக்கீல் டிசில்வாவை வீழ்த்தி விட்டீர்களே! அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்றார் ஒருவர்.

"வெற்றி பெறுவோம் என்று ஆரம்பத்தில் நீங்கள் நினைத்தீர்களா?" என்று கேட்டார் இன்னொருவர்.

"ஏபிரகாமுக்கு மரண தண்டனை கிடைத்திருந்தால் உங்களுக்கு எப்படி இருந்திருக்கும்?" என்றார் மூன்றாமவர்.

ஜெனிபர் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவில்லை. இவர்களெல்லாரும், ஏபிரகாமுக்கு மரண தண்டனை கிடைக்குமென்று நிச்சயமாக எதிர்பார்த்தவர்கள். அது போலத் தீர்ப்பாகியிருந்தால் நம்மைப் புரட்டி எடுத்திருப்பார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

மேஜை மீதிருந்த காகிதங்களை ப்ரீஃப்கேஸில் மௌனமாக அடுக்கி வைத்துக் கொண்டிருந்தபோது கோர்ட் சிப்பந்தியொருவர் அவளிடம் வந்து, "நீதிபதி வால்டுமேன் உங்களைப் பார்க்க வேண்டுமாம். வரச் சொன்னார்," என்றான்.

ஜெனிபர் ஆச்சரியப்படவில்லை. வழக்கு நடந்து கொண்டிருந்தபோது பலமுறை அவளை அவர் எச்சரித்

திருந்தார். கோர்ட்டை அவமதிக்கும் குற்றத்துக்காக அவள்மீது நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று கூடச் சொல்லியிருந்தார். இப்போது அதற்குத்தான் கூப்பிடுகிறார் என்று தோன்றியது.

பரவாயில்லை. என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். ஏபிரகாமை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றியாகி விட்டது. அது ஒன்றே போதும். இனி என்ன நடந்தாலும் நடக்கட்டும்.

அரசாங்க வக்கீல் டிசில்வா இருக்கும் திசையை ஓரக் கண்ணால் கவனித்தாள்.

வெறி பிடித்தவர் போல் தன் காகிதங்களைக் கைப்பெட்டிக்குள் அடைத்தபடி, உதவியாளர் ஒருவரிடம் ஏதோ சத்தம் போட்டுக் கொண்டிருந்தார் தற்செயலாக நிமிர்ந்து ஜெனிபரைப் பார்த்தபோது அவர் கண்களில் தீப்பொறி பறந்தது.

நீதிபதியின் அறைக்குச் சென்றாள் ஜெனிபர். தன் இருக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த நீதிபதி, "உட்கார், மிஸ் ஜெனிபர்," என்றார் நறுக்கென்று.

உட்கார்ந்தாள்.

"என் நீதிமன்றத்தை ஏதோ டிராமா மேடை மாதிரி நடத்துவதை நான் அனுமதிக்க முடியாது. நீயாயிருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி. புரிகிறதா?" என்றார் நீதிபதி.

ஆயுதங்களடங்கிய பெட்டியைக் கோர்ட்டில் சிதற விட்டதைத்தான் அவர் குறிப்பிடுகிறார் அவளுக்குப் புரிந்தது.

"அது வந்து... தவறிப் போய்..."

"தயவு பண்ணி என்னிடம் அளக்காதே!"

ஜெனிபர் வாயை மூடிக் கொண்டாள்.

"கோர்ட்டில் பல தடவை நீ ரொம்பத் திமிராக நடந்து கொண்டாய். அதுவும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாத விஷயம். தெரிகிறதா?"

என்ன செய்யப்போகிறாரோ, தெரியவில்லையே? அவளுக்குத் திகில் ஏற்பட்டது. அவரையே பார்த்த வண்ணமிருந்தாள் எதுவும் பேசாமல்.

"பலமுறை அத்து மீறி நடந்து கொண்டாய். இருந்தாலும் தொலையட்டும் என்று மன்னிக்கிறேன் ஏனென்றால், ஒரு மனிதனின் உயிரை நீ காப்பாற்ற வேண்டியிருந்தது. அந்த ஆர்வம் அளவுக்கு மீறியிருந்ததால் அப்படி நடந்து கொண்டாய் என்று எனக்குப் புரிகிறது. அதனால் தான் உன்மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தெரிகிறதா? சரி, நீ போகலாம்."

அப்பாடா! தப்பித்தோம்!

நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது ஜெனிபரின் மனத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

நீதிபதி வால்டுமேன் பார்ப்பதற்குத்தான் முரடர் மாதிரி இருக்கிறார். உள்ளுக்குள் நியாய உணர்வு உள்ளவர் போலும்.

அவள் உள்ளம் நெகிழ்ந்தது.

தினசரிகளிலும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளிலும் ஜெனிபர் மறுபடியும் முதல் இடத்தைப் பிடித்திருந்தாள். ஆனால் இந்தத் தடவை வில்லியாக அல்ல. கதாநாயகியாக. டிசில்வா என்ற ராட்சசனை வீழ்த்திய சின்னஞ்சிறு சிறுமியாக அவளை வர்ணித்தார்கள் அவள் படமும் எபிரகாமின் படமும் டிசில்வாவின் படமும் செய்தித் தாள்களின் முதல் பக்கங்களை அடைத்துக் கொண்டன.

ஒவ்வொரு வார்த்தையையும் ஒவ்வொரு வாக்கியத்தையும் சுவைத்துச் சுவைத்துப் படித்துப் பரவசப் பட்டாள்.

எவ்வளவு தாள முடியாத அவமானத்துக்குப் பிறகு இந்த வெற்றி கிடைத்திருக்கிறது! ஆனந்தத்தால் அவள் கண்களில் நீர் தளும்பியது.

மறு நாள் அவள் அலுவலகத்துக்குள் நுழைந்தபோது டெலிபோன் அடித்துக் கொண்டிருந்தது.

"உன்னைத்தான் யாராவது கூப்பிட்டுக் கொண்டே யிருக்கிறார்கள்," என்றார் துப்பறியும் நிபுணர் கென்னெத் முகம் நிறைந்த சிரிப்புடன். "உனக்கு இனிமேல் ஒரு போன் போதாது. இன்னும் அரை டஜன் போன் வைத்துக் கொள்ள வேண்டியதுதான்!"

தினசரிப் பத்திரிகைகளிலிருந்தும் வார இதழ் களிலிருந்தும் அவளைக் கூப்பிட்டுப் பேசினார்கள். அதைத் தவிர டி.வி., ரேடியோக்காரர்கள் அவளுடைய வாழ்க் கையைப் பற்றிப் பேட்டி காண வேண்டுமென்று கேட்டார்கள்.

ஒரே ராத்திரிக்குள் அவள் எவ்வளவு பெரிய புள்ளியாகி விட்டாள்!

அதுமட்டுமல்ல. அவளுடைய ஆசைக் கனவு இன்னொரு வகையிலும் நிறைவேறியது.

முன்பு அவளுடைய விண்ணப்பங்களைக் குப்பைக் கூடையில் எறிந்த சட்ட நிறுவனங்கள், இப்போது அவளை வேலைக்குக் கூப்பிட்டன. எப்போது அவளுக்கு வர வசதிப்படும் என்று கேட்டார்கள்

இப்படி வெற்றியில் ஜெனிபர் மிதந்து கொண்டிருக்க, அங்கே டிசில்வா தோல்வியில் புழுங்கிக் கொண்டிருந்தார்.

தன் உதவியாளரிடம் காச்சு மூச்சென்று கத்திக் கொண்டிருந்தார்.

"அந்த ஜெனிபரைப் பற்றிய அத்தனை தகவல்களையும் நீ திரட்டியாக வேண்டும். அவளுக்காக

உடனே ஒரு ரகசிய ஃபைல் போடு. எந்தெந்தக் கட்சிக் காரர்கள் அவளிடம் வருகிறார்கள், என்னென்ன வழக்கை அவள் எடுத்துக் கொள்கிறாள் என்ற சகலவிதமான விவரங்களும் அந்த ஃபைலில் இருக்க வேண்டும். என்ன, புரிகிறதா? போ உடனே செய்!" என்று கட்டளையிட்டார்.

ஜெனிபரின் வெற்றியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இன்னொருவனும் இருந்தான்.

மாரெட்டி - பயங்கரக் கும்பலின் தலைவன்.

பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் படித்தான்.

'அப்பா! எப்பேர்ப்பட்ட அழகுத் தேவதை!' என்று வியந்தபடி பத்திரிகைகளைப் புரட்டிப் புரட்டிப் படித்தான்.

ஏபிரகாமின் வழக்கைப் பற்றியும் ஜெனிபர் அடைந்த வெற்றியைப் பற்றியும் பத்தி பத்தியாக வெளியிட்டி ருந்தார்கள் ஒரு வருடத்துக்கு முன் இதே ஜெனிபர் மாரெட்டி வழக்கில் மாட்டிக் கொண்ட விவரங்களையும் பிரகரித்திருந்தார்கள்.

மாரெட்டி தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அந்தக் கொலை வழக்கைக் குலைக்க என்ன சாமர்த்தியமாய் அப்போது ஏற்பாடுகள் செய்திருந்தான்!

அவனால் எந்த மனிதப் பிறவியையுமே நேசிக்க முடியாது. பிராணிகளிடம் மட்டும் கொஞ்சம் பிரியம் உண்டு. அவன் சிறுவனாக இருந்தபோது யாரோ அவனுக்கு ஒரு நாய்க் குட்டி பரிசளித்தார்கள். அதை ஒரு நிமிடம்கூடப் பிரியமாட்டான். அவ்வளவு பிரியமாக இருந்த அந்த நாய்க் குட்டி ஒரு காரில் சிக்கிச் செத்து விட்டது. வேறொரு நாய் வாங்கித் தருவதாக அவன் அப்பா சொன்னார். வேண்டாம் என்று சொல்லி விட்டான். அதன்பின் இன்றளவும் அவன் எந்த நாயும் வளர்த்ததில்லை.

பயங்கரக் கும்பலுக்காக எவ்வளவோ கொலை கொள்ளைக் குற்றங்களைச் செய்து வந்தவன். இரு சகோதரர்களைச் சுட்டுக் கொன்றபோது மாட்டிக் கொண்டான் அவனுடைய அடியாளான ஸ்டேலா அவனுக்கு எதிராகச் சாட்சியம் சொல்ல வந்தான்.

மாரெட்டி இத்தோடு தீர்ந்தான் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். அவர்களுடைய குடும்ப வக்கீல் கூட அப்படித்தான் எண்ணினார்.

ஆனால் மாரெட்டியா மாட்டுவான்?

அவன் திட்டமே தனி.

ஒரு நாள் விடிகாலை நாலு மணிக்குத் தன் அடியாட்களில் ஒருவனை டெலிபோனில் கூப்பிட்டான்.

"அடுத்த வாரம் டிசில்வாவின் கீழே சில புதிய வக்கீல்கள் வேலைக்கு வந்து சேரப் போகிறார்களாம். அவர்கள் யார் யார், என்ன பெயர் என்ற தகவல்களைச் சேகரித்து வா," என்றான்.

"செய்கிறேன் சார்."

"இன்னொரு விஷயம். வெளியூரிலிருந்து நம் ஆட்களில் ஒருவனை வரவழை. போலீசார் சந்தேகப்படாத ஆளாக இருக்க வேண்டும். என்ன?"

"சரி சார்," என்றவன் அன்றே மாரெட்டி சொன்ன வேலைகளைச் செய்து முடித்தான்.

வழக்கு நடந்து கொண்டிருந்த போது மாரெட்டியின் கண்கள் டிசில்வாவின் உதவி வக்கீல்களை அளவெடுத்துக் கொண்டிருந்தன.

புதிதாக வேலைக்கு வந்திருந்த ஒவ்வொருவரையும் ஆராய்ந்தான். ஒவ்வொரு முகத்தையும் கவனித்தான்.

ஒவ்வொருவரும் எப்படிப்பட்டவர் என்பதை மனத்துக்குள் அலசினான்.

தான் திட்டமிட்டிருப்பது மிக ஆபத்தான வேலை என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் நிச்சயமாக ஜெயிக்கக் கூடிய திட்டம் என்றும் அவனுக்குத் தெரியும்.

வந்திருக்கும் இளம் வக்கீல்கள் அனைவரும் கற்றுக்குட்டிகள். உதவி கேட்டால் உடனே செய்து தருவதில் ஆர்வமாயிருப்பார்கள் என்ன ஏது என்று கேள்விகள் கேட்கக் கூச்சப்படுவார்கள் டிசில்வாவிடம் நல்ல பெயரெடுக்க வேண்டும் என்பதில் குறியாக இருப்பார்கள்.

இவர்களில் யாரைத் தேர்ந்தெடுக்கலாம்?

அவன் கண்கள் சுழன்று சுழன்று கடைசியில் ஜெனிபரின் மீது நிலைத்தன.

இவள்தான் சரியான நபர்.

அனுபவமில்லாதவள்.

இருப்புக் கொள்ளாமல் தவிக்கிறாள். ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் மறைக்கிறாள்.

இந்தப் பெண்தான் சரி.

கோர்ட்டில் பார்வையாளர்களின் மத்தியில் அவனுடைய ஆள் இருந்தான். அவனை ஜாடையாகப் பார்த்துத் தலையசைத்தான் மாரெட்டி. ஜெனிபரைக் கண்ணால் சுட்டிக் காட்டினான்.

விஷயம் முடிந்து விட்டது.

ஸ்டேலாவை விசாரணை செய்து முடித்துவிட்டு உட்கார்கிறார் டிசில்வா. மாரெட்டியின் வக்கீல் எழுந்திருக்கிறார். "இந்தச் சாட்சியைத் தொடர்ந்தாற் போல், இடைவிடாமல் குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறேன். ஆகவே இப்போது இடைவேளை விட்டு விட்டு, பகலுக்கு

மேல் என் குறுக்கு விசாரணையை வைத்துக் கொள்கிறேன்" என்று நீதிபதியிடம் கேட்டுக் கொள்கிறார்.

இடைவேளை விடப்படுகிறது.

மாரெட்டியின் ஆள் எழுந்து போய், டிசில்வாவைச் சுற்றியுள்ள கும்பலில் ஒருவனாகச் சேர்ந்து கொள்கிறான். அவருடைய ஆட்களில் ஒருவன்போல் காட்டிக் கொள்கிறான். சில நிமிடம் கழித்து ஜெனிபர் உறையைப் பெற்றுக் கொண்டு, ஸ்டேலா வைக்கப்பட்டுள்ள அறையை நோக்கிச் செல்கிறாள்.

திரும்ப வரும்போது அவள் கையில் அந்த உறை இல்லை.

மாரெட்டியின் முகத்தில் புன்னகை நிரம்புகிறது. அவன் திட்டம் நிறைவேறி விட்டது!

இதெல்லாம் நடந்து ஒரு வருடமாகிவிட்டது.

செய்யாத குற்றத்துக்காக மாட்டிக்கொண்டு ஜெனிபர் தவித்த போது, பத்திரிகைகள் அவளைக் கிழிகிழியென்று கிழித்துக் கொண்டிருந்தபோது, மாரெட்டி கொஞ்சமும் பரிதாபப்படவில்லை. அது அவளுடைய தலையெழுத்து, நாமென்ன செய்யமுடியும் என்றும் இருந்து விட்டான்.

இப்போது மறுபடியும் ஜெனிபரின் பெயர் செய்திகளில் அடிபட ஆரம்பித்தது.

ஏபிரகாம் வழக்குப் பற்றிய செய்திகளுடன் கூடவே பழைய மாரெட்டியின் வழக்கைப் பற்றியும் அதில் ஜெனிபரின் பங்கைப் பற்றியும் விவரித்திருந்தார்கள்.

பத்திரிகைகளில் ஜெனிபரின் புகைப்படம் வெளி வந்திருந்தது.

போன வருடம் நீதிமன்றத்தில் அவள் இருந்தபோது மாரெட்டி அவள் அழகைக் கவனிக்கவில்லை. இப்போது

அசந்து போனான். ஜெனிபருக்குள் ஒரு சுதந்திர உணர்ச்சி ஒளிவிடுவதையும் அவனால் உணர முடிந்தது. அது அவனைக் கவர்ந்தது.

ஏனோ மாரெட்டிக்குச் சந்தோஷமாக இருந்தது. புன்னகையுடன் டி.வி.யில் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்

"போன வருஷம் ஸ்டேலாவைப் பயமுறுத்த உங்களுக்குப் பயன்பட்டவள் இந்தப் பெண்தானே?" என்று மாரெட்டியின் தோழர்களில் ஒருவன் கேட்டான்.

"ஆமாம். பிரமாதமான புத்திசாலியாக இருக்கிறாள். என்றைக்காவது ஒரு நாள் இவள் நமக்கு உபயோகப்படப் போகிறாள், பார்," என்றான் மாரெட்டி.

ஏபிரகாமின் வழக்கில் ஜெயித்த மறுநாள் ஜெனிபரைப் போனில் கூப்பிட்டான் வார்னர். "கங்கிராசுலேஷன்ஸ்," என்றான்.

குரலைக் கேட்ட வினாடியே பேசுகிறவன் யாரென்று அவளுக்குப் புரிந்து விட்டது. நெஞ்சுக்குள் ஒரு திடீர்ப் படபடப்பு!

"நான் யார் என்று தெரிகிறதோ?" என்று அவன் கேட்டவுடனே-

"தெரிகிறதே," என்று தன்னை மறந்து சொல்லிவிட்டாள் ஜெனிபர். ஆனால் 'சே! அவசரப்பட்டு அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டேனே?' என்று தன் தலையில் தானே மெல்லத் தட்டிக் கொண்டாள். கடந்த சில மாதங்களுக்குள் எவ்வளவோ தடவை அவனைப் பற்றி எண்ணியது உண்மைதான். ஆனால் அதை இப்படியா அப்பட்டமாகக் காட்டிக் கொள்வது!

"ஏபிரகாம் வழக்கை ரொம்பத் திறமையாகக் கையாண்டீர்கள். அதைப் பாராட்டத்தான் கூப்பிட்டேன்," என்றான் வார்னர்.

"தாங்க்யூ," என்றாள்.

"ஏதாவது ஒரு நாள் ராத்திரி உங்களுடன் டின்னர் சாப்பிட வேண்டுமென்று எனக்கு ஆசை," என்றான் அவன்.

'பொறு, பொறு!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் அவள். ரொம்ப ஆர்வம் இருப்பதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது. மேலே விழுந்து பிடுங்கும் பெண்களை ஆண்களுக்குப் பிடிக்காது....

மனசுக்குள் அப்படி நினைத்தாளே தவிர, வாயென்னவோ, "இன்றைக்கு ராத்திரி வைத்துக் கொள்ளலாமே?" என்று கேட்டு விட்டது.

"எனக்கு வெள்ளிக் கிழமை இரவு தான் முடியும்," என்றான் அவன். அந்தக் குரலில் மகிழ்ச்சி தென்பட்டது. "உங்களுக்கு அன்று வேலை இருக்கிறதா?"

'வேலையா? ஒரு வேலையும் இல்லை!' என்று நாக்கு நுனி வரை வந்து விட்டதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, 'இல்லை!' என்று மட்டுமே சொன்னாள்

"லுட்டீஸ் ஓட்டல் சாப்பாடு உங்களுக்குப் பிடிக்குமா?" என்று வார்னர் கேட்டான்.

"சாப்பிட்டுப் பார்த்துவிட்டுச் சொல்கிறேனே?" என்றாள் அவள்

அவன் சிரித்தான் "சரி. வெள்ளிக்கிழமை எட்டு மணிக்கு வருகிறேன்."

"ரைட்!"

டெலிபோனைத் திரும்ப வைத்த போது, உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஓர் ஆனந்தம் அவள் உடம்பில் பாய்ந்திருந்தது. அதே சமயம், இது சுத்தக் கிறுக்குத்தனம் என்றும் தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

10

ஒரு நாள், தனது அலுவலறையைப் பகிர்ந்து கொண்டிருக்கும் துப்பறியும் நிபுணர் கென்னத்திடம், "நீங்கள் எனக்கு ஓர் ஒத்தாசை செய்ய வேண்டும். ஒரு மனிதரைப் பற்றிச் சில விவரம் துப்பறிந்து சொல்ல முடியுமா?" என்றாள் ஜெனிபர்.

"சொல்லு. தாராளமாகச் செய்கிறேன்," என்றார் கென்னத்.

"அவர் பெயர் வார்னர்-ஆடம் வார்னர்."

அவளை ஆச்சரியத்துடன் பார்த்தார் கென்னத். "வார்னர் என்றா சொன்னாய்? சரிதான் போ! அவனைப் பற்றித் துப்பறியவே தேவையில்லை. பேப்பர்களைப் படித்தாலே போதும்."

"உங்களுக்குத் தெரியுமா அவரைப் பற்றி?"

நாற்காலியை அவள் அருகே இழுத்துப் போட்டுக் கொண்டார் கென்னத். விரல்களைக் கூடாரமிட்டுக் கொண்டார். "சொல்லட்டுமா? பெரிய சட்ட நிறுவனத்தில் அவன் கூட்டாளி, பெரிய பணக்காரக் குடும்பம். வயது முப்பது இருக்கும்..."

ஜெனிபர் வியந்தாள் "இவ்வளவு விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

அவர் குறும்பாகக் கண் சிமிட்டினார். "என்னை என்னவோ சாதாரணமாக நினைத்திருக்கிறாய்! பெரிய பெரிய இடங்களிலெல்லாம் எனக்கு ஆள் இருக்கிறதம்மா! பாராளுமன்றத்துக்கு வார்னரை நிறுத்தப் போவதாகப் பேச்சு அடிபடுகிறது. ஜனாதிபதி பதவியைக் கூட அவன் ஒரு கை பார்க்கலாம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவனிடம் ஒரு அலாதியான கவர்ச்சி இருக்கிறது"

'அவருடைய கவர்ச்சியைப் பற்றி என்னிடமா சொல்கிறீர்கள்!' என்று எண்ணிக் கொண்டாள் ஜெனிபர். சும்மா ஒரு பேச்சுக்குக் கேட்கிற மாதிரி குரலை வைத்துக் கொண்டு அடுத்த கேள்வியைக் கேட்டாள். "அவருடைய குடும்ப வாழ்க்கை எப்படி?"

அவளை விசித்திரமாகப் பார்த்தார் அவர் "கடற்படைத் துறையில் முக்கிய காரியதரிசியாக இருந்த ஒருவரின் பெண்ணை அவன் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறான். சட்ட நிறுவனத்தில் அவனது கூட்டாளியான நீதாமின் உறவுக்காரப் பெண் அவள்."

பொசுக்கென்று தொய்ந்தது ஜெனிபரின் இதயம்.

சே! கடைசியில் அவ்வளவுதானா!

அவளையே கூர்ந்து கவனித்தவாறிருந்தார் கென்னத். ஜெனிபரின் கேள்விகள் அவருக்குப் புதிராய் இருந்தன. "வார்னரைப் பற்றி எதற்காக இந்தத் திடீர் விசாரணை, ஜெனிபர்?"

"ஒன்றுமில்லை. சும்மா ஒரு ஆவல்தான்."

கென்னத் புறப்பட்டுப் போய் வெகு நேரமான பின்னும் ஜெனிபர் எழுந்திருக்கவில்லை. வார்னரைப் பற்றியே சிந்தனை செய்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

ஏன்தான் இப்படியெல்லாம் எண்ணுகிறேன்? சும்மா ஒரு தொழில் மரியாதைக்காகத்தான் நம்மை விருந்துக்குக் கூப்பிட்டிருக்கிறார். அதுவும் ஏபிரகாமின் வழக்கில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவிக்கத்தான் ஆனால் வாழ்த்தைத்தான் டெலிபோனிலேயே சொல்லிவிட்டாரே? அப்புறம் என்ன? சரி, சரி. எதுவானால் என்ன? அவரை மறுபடி பார்க்க போகிறோம். அவருக்கு கல்யாணமாகி விட்டது என்பதைப் பேச்சின் போது சொல்லுகிறாரா பார்க்கலாம். ஊகூம். சொல்ல மாட்டார். எதற்காக அதைச் சொல்ல வேண்டும்? வெள்ளிக் கிழமை இரவு அவருடன்

விருந்து சாப்பிடப் போகிறேன் அத்தோடு எல்லாம் முடிந்துவிடும். ஏன் சும்மா சும்மா மனசைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டும்...

வெள்ளிக் கிழமைக்குள் இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

ஒன்று-

சம்மன்கள் கொண்டு போய்க் கொடுப்பதற்கு அவளை அமர்த்தியிருந்த சட்ட நிறுவனத்தின் அதிபர், தங்களிடம் வழக்கறிஞராகச் சேர்ந்து கொள்ளும்படி ஜெனிபரைக் கூப்பிட்டார் பிற்பாடு தங்கள் கம்பெனியில் ஒரு கூட்டாளியாகவும் சேர்த்துக் கொள்வதாகச் சொன்னார்.

ஜெனிபர் ஒப்புக் கொள்ளவில்லை. சொந்தமாக, தனியாக, வக்கீல் தொழிலை நடத்தப் போவதாகச் சொல்லி விட்டாள்.

இன்னொன்று-

வசதியான வேறோர் இடத்துக்கு ஜெனிபர் தன் அலுவலகத்தை மாற்றினாள் துப்பறியும் நிபுணர் கென்னத்தும் ஜெனிபருடன் ஜாகை மாறினார். ஸிந்தியா என்ற இளம் பெண்ணை உதவிக்கு அமர்த்திக் கொண்டாள் ஜெனிபர்.

கென்னத் உள்ளே வந்தார். "அங்கே என் அறையில் தனியே இருக்கப் போரடிக்கிறது. எங்காவது வெளியே போய் வரலாம் வாயேன்," என்று அழைத்தார்.

சில கேஸ் கட்டுகளைப் படிக்க வேண்டியிருந்தது அவளுக்கு. இருந்தாலும் கென்னத் அவளுடைய ஆத்ம நண்பராகி விட்டதால் அவருக்கு ஏமாற்றம் கொடுக்க அவளுக்கு விருப்பமில்லை, அவருடன் புறப்பட்டாள்

"வெள்ளிக்கிழமை இரவு ஒரு நடன நிகழ்ச்சிக்குப் போகலாமா? இரண்டு டிக்கெட் வாங்கியிருக்கிறேன்," என்றார் அவர்.

"ஸாரி. வெள்ளிக்கிழமை இரவு எனக்கு ஒரு வேலை இருக்கிறது," என்றாள் அவள்

"ஓ." என்று மட்டுமே சொன்னார் அவர். ஏமாற்றம் அவர் முகத்தில் தெரிந்தது.

கென்னத்தை அவளால் புரிந்து கொள்ள முடிய வில்லை. சில சமயம் அவருக்குத் தெரியாதபடி அவரைக் கவனிப்பாள் தன்னையே அவர் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது தெரியும்.

தன் சினேகிதர்களைப் பற்றியோ குடும்பத்தைப் பற்றியோ அவர் அவளிடம் பேசியதே கிடை யாது. அவர் மனைவி தற்கொலை செய்து கொண்டாள் என்று மட்டும் அறிவாள். தனிமை அவரை வாட்டுகிறது. ஏதாவது ஒரு விதத்தில் அவருக்கு உதவி செய்யவேண்டும். என்ன விதத்தில் என்றுதான் தெரியவில்லை.

வெள்ளிக் கிழமையே! நீ எப்போதுதான் வரப் போகிறாய்? வராமலே இருந்து விடுவாயோ!

வார்னருடன் விருந்துண்ணும் நாள் நெருங்க நெருங்க, ஜெனிபருக்கு இருப்புக் கொள்ளவில்லை. வேலையில் புத்தியைச் செலுத்துவது கஷ்டமாயிருந்தது.

அவளையும் அறியாமல் அவள் எண்ணங்கள் வார்னரைச் சுற்றியே ஓடிக் கொண்டிருந்தன.

இதெல்லாம் பைத்தியக்காரத்தனம் என்று அவளுக்குப் புரிந்தது. வாழ்க்கையில் ஒரே ஒரு முறைதான் வார்னரைப் பார்த்திருக்கிறோம். ஆனாலும் மனத்தி லிருந்து அவரை அகற்ற முடியவில்லையே? எதனால் அது? நன்றியுணர்ச்சி தான். வக்கீல் தொழிலிலிருந்து அவளை நீக்க முயற்சி நடைபெற்ற போது அவர் தான் காப்பாற்றினார் பிறகு நமக்காகக் கூ சிக்காரர்களை அனுப்பினார் அதனால்நமக்குஏற்பட் நன்றியுணர்வுதான் இது என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்

கொண்டாள். ஆனால், அந்த நன்றியுணர்வுக்கும் மேலாக ஏதோவொன்று மனத்தில் உதித்திருக்கிறதே? விளக்க முடியாத, விளங்கிக் கொள்ள முடியாத அந்த ஏதோ ஒன்றின் பெயர் என்ன?

இப்படியோர் உணர்ச்சியை இதற்கு முன்பு அவள் அனுபவித்ததுகிடையாது. இப்படியோர் ஈடுபாடு வேறெந்த ஆணிடமும் அவளுக்கு ஏற்பட்டதில்லை.

வார்னரின் மனைவி எப்படி இருப்பாள்? யோசித்துப் பார்த்தாள்.

நவநாகரிக அழகியாக இருப்பாள். வேளைக்கொரு அழகு நிலையத்துக்குப் போய், அலங்காரம் செய்து கொண்டு, வனப்புத் தேவதையாகப் பவனி வருகிறவளாக இருப்பாள்...

வெள்ளிக்கிழமை காலை ஓர் அலங்கார நிலையத்துக்குப் போனாள் ஜெனிபர். முடியலங்காரம் செய்து கொண்டாள். அந்த நிலையத்துக்குத்தான் எல்லா மாடல் அழகிகளும் போகிறார்களாம். காரியதரிசி ஸிந்தியா சொல்லியிருந்தாள். பத்து மணிக்கு அங்கே வருவதாக நேரம் ஏற்பாடு செய்திருந்தாள் வேண்டாம் என்று தோன்றியது. வரவில்லை என்று பத்தரை மணிக்குப் போன் பண்ணித் தெரிவித்தாள். வருகிறேனென்று மறுபடியும் பதினொரு மணிக்குச் சொன்னாள்

சாப்பிடக் கூடப் பொறுமை இருக்கவில்லை. துணிக் கடைக்குப் போய்ப் புதிய உடைகள் வாங்கிக் கொண்டாள் அதற்கேற்ற நிறத்தில் ஒரு கைப்பையையும் வாங்கிக் கொண்டாள்.

இதெல்லாம் கட்டுப்படியாகாத செலவுகள் என்று அவளுக்குத் தெரிந்தேயிருந்தது. ஆனால் தன்னை அடக்கிக் கொள்ள அவளால் முடியவில்லை.

வழியில் வாசனைப் பொருள்கள் விற்கும் கடை இருந்தது. ஏதோ ஒரு வேகத்தில் அங்கேயும் நுழைந்தாள். உயர்ந்த ரக சென்ட் வாங்கிக் கொண்டாள்.

'ஜெனிபர்! உனக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது!' என்று உள்ளிருந்து ஒரு குரல் ஒலித்தது.

அந்த ஆள் கல்யாணமானவர்! நீ நினைக்கிறபடி யெல்லாம் நடக்காது!

அந்தக் குரலை அலட்சியம் செய்தாள். ஐந்து மணிக் கெல்லாம் வீட்டுக்குக் கிளம்பி விட்டாள். குளிப்பதிலும் உடை மாற்றிக் கொள்வதிலும் இரண்டு மணி நேரம் செலவழிந்தது. பிறகு கண்ணாடியின் முன் நின்று தன்னைத் தானே ஆராய்ந்துகொண்டாள். முடியைப் பிரித்து வேறு விதமாகக் கட்டிக் கொண்டாள். பரவாயில்லை. இப்போது நன்றாயிருக்கிறது.

நான் ஒரு வக்கீல். இன்னொரு வக்கீலுடன் விருந்துண்ணப் போகிறேன். அவ்வளவுதானே? அதற்கு ஏன் இப்படி அலட்டிக்கொள்ள வேண்டும்?

கதவைச் சாத்திக்கொண்டு புறப்பட்டபோது, ரோஜாவும் மல்லிகையும் கலந்த ஒரு மெல்லிய மணம் அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது.

வார்னர் வரச்சொல்லியிருந்த ஓட்டல் வெகு ஆடம்பரமாக இருந்தது. ஜொலிக்கும் நகைகளும் விலையுயர்ந்த உடைகளும் அணிந்த சீமாட்டிகள், கணவன்மார்களும் காதலர்களும் துணை வர, பார்க்குமிடமெல்லாம் பளபளவென்று நடனமாடினார் கள்.

"பெரும் புள்ளிகளின் விலாசங்கள் அடங்கிய புத்தகம் இருக்குமே, ஹூ இஸ் ஹூ, அதுபோல இருக்கிறது இந்த ஓட்டல்," என்றாள் ஜெனிபர்.

"நீ வந்த பிறகு தான் இதற்குக் களை கட்டியிருக் கிறது" என்றான் வார்னர்.

ஜெனிபருக்கு முகம் சிவந்தது, அந்தப் புகழ்ச்சியைக் கேட்டு.

'முட்டாள் மனமே, வேண்டாம். இதிலெல்லாம் மயங்காதே!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

இதே இடத்துக்கு இதே வார்னர் இன்னும் எத்தனை பெண்களை அழைத்து வந்திருக்கிறாரோ! பாவம், இவர் மனைவி, வீட்டில் இவருக்காகக் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். இவருக்குக் கல்யாணமாகி விட்டது என்பது இவர் அழைத்து வரும் பெண்களுக்குத் தெரிந் திருக்குமா? ஊகூம். அவர்களுக்குச் சொல்ல மாட்டார். ரகசியமாகவே வைத்திருப்பார். ஆனால் எனக்கு உண்மை தெரியும், மிஸ்டர் வார்னர்! என்னை ஏமாற்ற முடியாது!

பானங்களும் சிற்றுண்டிகளும் வரவழைத்தான் வார்னர். ஜெனிபர் அவனைப் பேசவிட்டு விட்டு, தான் அதிகம் பேசாமலிருந்தாள். வேடிக்கையும் விளையாட்டும் புத்திசாலித்தனமுமாய் அவன் பேசினான். அதிலெல்லாம் மயங்கிவிடக் கூடாதென்று அவள் எச்சரிக்கையாக இருந்தாள். ஆனால் அது அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை. அவன் குட்டிக் கதைகளும் வேடிக்கை விஷயங்களும் சொன்னபோது தன்னை மறந்து சிரித்தாள்.

"நீங்கள் எனக்காக நிறையக் கட்சிக்காரர்களை அனுப்பினீர்கள். அதற்குத் தாங்ஸ் சொல்லவே சந்தர்ப்பப் படவில்லை," என்றாள் அவள். "இரண்டு மூன்று முறை உங்களுக்குப் போன் பண்ணினேன். ஆனால்-"

"ஆமாம், சொன்னார்கள்," என்றவன், சிறிது தயங்கிவிட்டு, "நான் வேண்டுமென்றுதான் உன்னைத் திருப்பிக் கூப்பிடவில்லை. நீ தப்பாய் நினைத்துவிடப் போகிறாயே என்று பயமாயிருந்தது."

அவள் நெஞ்சு படபடத்தது. அடுத்து அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது.

கல்யாணமான எல்லாரையும் போல இவரும் பொய் சொல்லப்போகிறார். அப்படிச் சொல்கிறவர்களைக் கண்டால் அவளுக்கு வெறுப்பு ஏற்படுவது வழக்கம். வார்னரை அவள் வெறுக்கத் தயாராயில்லை. கடவுளே, இவர் பொய் சொல்லாமல் இருக்க வேண்டுமே என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

வார்னர் மெல்லச் சொன்னான்: "ஜெனிபர், உனக்கு ஒரு விஷயம் சொல்ல வேண்டும். நான் கல்யாணமானவன்."

பயந்தபடி இல்லாமல் அவன் உண்மை பேசியதும் அவள் திகைத்துப் போனாள்.

வார்னர் ஒரு வறண்ட சிரிப்புடன், "என்னை மன்னித்துவிடு ஜெனிபர். இதை நான் முன்பே உனக்குச் சொல்லியிருக்க வேண்டும்...." என்றான்.

ஜெனிபருக்குக் குழப்பமாக இருந்தது. "வந்து... பின்னே... என்னை இங்கே விருந்துக்குக் கூப்பிட்டது ஏன்?"

"உன்னை மறுபடியும் பார்க்கவேண்டும் போலிருந்தது. பார்த்தே ஆகவேண்டும் என்று தோன்றியது."

பிரம்மாண்டமான அலையொன்று தன்னை வீழ்த்தி அடித்துக் கொண்டு போவதுபோல் இருந்தது அவளுக்கு. வார்னர் தன் மனத்தில் இருப்பதையெல்லாம் சொல்லிக் கொண்டு போகப்போக, அவள் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை என்று அவளுக்குத் தெரிந்தது. ஏனெனில் தன் உள்ளம் என்னென்ன நினைக்கிறதோ அதையெல்லாம்தான் வார்னர் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

"ஜெனிபர், உனக்கு வருத்தம் ஏற்படுத்தி விட்டேனோ?"

"வார்னர் நான்... நான் என்று தடுமாறினாள் ஜெனிபர் ஒருவரையொருவர் தொடக் கூட இல்லை. என்றாலும், தான் அவனுடை[illegible] அவளுக்கு. விட்ட மாதிரி [illegible]ள் மனைவியைப் பற்றி ஒன்றும் [illegible]ல்லையே?" என்றாள்.

"மேரிக்கும் எனக்கும் கல்யாணமாகிப் பதினைந்து வருஷமாகிறது. எங்களுக்குக் குழந்தை இல்லை."

"ஊம்."

"அவளுக்கு.... நாங்கள் குழந்தை வேண்டாமென்று இருக்கிறோம். கல்யாணமானபோது எங்கள் இரண்டு பேருக்குமே ரொம்பச் சின்ன வயது. எங்கள் இரண்டு குடும்பத்துக்கும் சினேகம். அவளுக்குப் பதினெட்டு வயதான போது அவள் அப்பா அம்மா இரண்டு பேரும் ஒரு விமான விபத்தில் இறந்து விட்டார்கள். மேரிக்கு யாருமே இல்லை. துக்கத்தில் பைத்தியமே பிடித்தவள் போலாகிவிட்டாள். நான்-நாங்கள் கல்யாணம் செய்து கொண்டோம்."

'அவள் மீது இவருக்குக் காதல் இல்லை. இரக்கத்தின் பேரில் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் கண்ணியமானவராகையால் அதை வெளியே சொல்ல இஷ்டப்படவில்லை' என்று ஜெனிபர் புரிந்து கொண்டாள்.

"மேரி அற்புதமான பெண், எங்களுக்குள் ரொம்ப ஒற்றுமை," என்றான் அவன்.

கேட்ட வரையில் போதும், ஓடி விடு என்று அவளுடைய மூளையின் ஒவ்வோர் அணுவும் சொல்லிற்று. கல்யாணமான ஆண்களிடமிருந்து நழுவுவது எப்படி என்று அவளுக்குத் தெரியும். இருந்தாலும் இப்போது நழுவுவது

கஷ்டமாயிருந்தது. ஆனால் இனிமேலும் தன் மனத்தை ஓட விட்டால் பிறகு திரும்பப் பிடிக்கவே முடியாது என்று உணர்ந்தவளாக, வார்த்தைகளை அளந்து சொன்னாள்: "வார்னர், உங்களை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இருந்தாலும், கல்யாணமான ஆண்கள் என்றால் நான் கொஞ்சம் எட்டியேதான் இருப்பது வழக்கம்."

கண்களில் நாணயமும் பரிவும் தெரிய அவன் புன்னகை செய்தான்.

"எனக்கும்கூடத் திருட்டுத்தனமான சினேகிதங்கள் பிடிக்காது. உன்னுடன் இருக்கும்போது எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. உன்னைப் பற்றி எண்ணும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது. நாம் அடிக்கடி சந்திக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன், ஜெனிபர்," என்றான்.

'ஹூம்! சந்தித்து என்ன ஆகப் போகிறது?' என்று சொல்ல வாயெடுத்தவள், "ஓ, அதற்கென்ன? சந்தித்தால் போச்சு," என்றாள்.

'மாதத்துக்கொரு முறை சந்திக்கலாம். அதனால் ஒன்றும் குடி முழுகிவிடாது,' என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டாள்.

அலுவலகத்தைப் புது இடத்துக்கு மாற்றிய பிறகு ஒரு நாள் ரயன் பாதிரியார் வந்தார். மூன்று அறைகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு, "இடம் ரொம்ப நன்றாக இருக்கிறது, ஜெனிபர் பிரமாதமாய் முன்னுக்கு வந்து கொண்டி ருக்கிறாய்? இல்லையா?" என்றார்.

"ஏதாவது வேலையாய் வந்தீர்களா ஃபாதர்? சொல்லுங்கள் தயங்காமல்," என்றாள் அவள்

அவர் முகம் மலர்ந்தது. "ஆமாம் ஜெனிபர்... நீ ரொம்ப பிஸியாய் இருப்பவள் இருந்தாலும், நீயே கேட்பதால் சொல்கிறேன். எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணுக்கு ஒரு

பிரசினை. அவளுக்கு ஒரு விபத்து ஏற்பட்டுவிட்டது. உன் ஒருத்தியால்தான் அவளுக்கு உதவமுடியும்....”

“அழைத்து வாருங்களேன். பேசுகிறேன்,” என்றாள் ஜெனிபர்.

“வந்து... அவளால் இங்கே வர முடியாது. நீதான் அவளைப் போய்ப் பார்க்கவேண்டும்,” என்றார் பாதிரியார்.

போய்ப் பார்த்தபோது ஜெனிபருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

II

ஜெனிபருக்குப் பெரும் அதிர்ச்சி.

பாதிரியார் சொன்ன பெண் இவ்வளவு பரிதாபமான நிலையில் இருப்பாளென்று அவள் கொஞ்சம்கூட எதிர் பார்க்வில்லை.

“அவளை இங்கே அழைத்து வாருங்கள். விபத்தைப் பற்றி அவளிடம் பேசுகிறேன்,” என்று பாதிரியாரிடம் சொன்னபோது, “அவளால் எங்கும் வர முடியாது, ஜெனிபர். நீதான் அவளைப் போய்ப் பார்க்க வேண்டும்,” என்று பாதிரியார் சொன்னார்.

அதன் அர்த்தம் அப்போது விளங்கவில்லை.

இப்போதல்லவா புரிகிறது!

ஒரு சிறிய ஃப்ளாட்டில் குடியிருந்தாள் அந்தப் பெண் ஜெனிபர் கதவைத் தட்டியதும் வயதான பெண்மணி யொருத்தி திறந்தாள் சமையலில் ஈடுபட்டிருந்தாள் போலும். இடுப்பில் துணி சுற்றிக் கொண்டிருந்தாள்.

ஜெனிபர் தன்னை இன்னாரென்று சொல்லிக் கொண்டதும், “உள்ளே வாருங்கள். கானி உங்களை எதிர்

பார்த்துக் கொண்டிருக்கிறாள். நான் அவள் அத்தை," என்றாள்.

மேசை நாற்காலிகள் எதுவும் இல்லாத அறைக்குள் நுழைந்தாள் ஜெனிபர்.

ஒரு பெரிய கூடை நாற்காலியில் தலையணைகள் வைத்துக் கொடுக்க கானி என்ற அந்தப் பெண் உட்கார்ந்திருந்தாள்.

அவளைப் பார்க்கவே ஜெனிபருக்குக் குலை நடுங்கியது.

அந்தப் பெண்ணுக்குக் கைகளும் இல்லை, கால்களும் இல்லை. வெறும் உடம்பு மட்டும்தான்.

தன் நடுக்கத்தைக் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டாள் ஜெனிபர்.

இந்தச் சின்ன வயசில் என்ன கொடுமை இது!

ஜெனிபரின் வயதே தான் இருக்கும் அவளுக்கு. இப்படிப்பட்ட நிலைமையிலும் முகத்தில் ஒரு பிரகாசம்...

ஜெனிபரைப் பார்த்ததும் பிரியமாகப் புன்னகை செய்தாள் கானி "உட்காருங்கள், ஜெனிபர். உங்களை நான் ஜெனிபர் என்று கூப்பிடலாமில்லையா? ஃபாதர் ரயன் உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். நானும் உங்களை டெலிவிஷனில் பார்த்திருக்கிறேன் நீங்கள் வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்."

'எனக்கும் உன்னைப் பார்த்ததில் ரொம்ப சந்தோஷம், என்று சொல்ல ஜெனிபர் வாயெடுத்தாள். ஆனால் இந்தப் பெண்ணைப் பார்த்ததில் சந்தோஷம் என்றா சொல்ல முடியும்!

எதுவும் சொல்லாமல் அந்தப் பெண்ணின் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் ஜெனிபர்.

"சில வருஷங்களுக்கு முன்னால் உனக்கு ஏதோ விபத்து நேர்ந்ததென்று ஃபாதர் ரயன் சொன்னார். என்ன நடந்தது?"

"தப்பெல்லாம் என் மேல் தான்," என்றாள் காணி. "யாரையும் குற்றம் சொல்லக் கூடாது. தெருவெல்லாம் ஒரே பனிக் கட்டியாயிருந்தது அன்றைக்கு. ஒரு நாற்சந்தியைக் கடக்கிற போது கால் வழுக்கி ஒரு லாரியின் முன்னால் விழுந்து விட்டேன்."

"விபத்து நடந்து எத்தனை நாளாகிறது?"

"போன டிசம்பரோடு மூன்று வருஷமாகிறது. அப்போது கிறிஸ்துமஸ் சமயம். சில சாமான்கள் வாங்க நான் போய்க் கொண்டிருந்தேன்."

"லாரி உன் மீது மோதியவுடன் என்ன ஆயிற்று?"

"கண் விழித்தபோது ஆஸ்பத்திரியில் இருந்தேன். அவ்வளவுதான் தெரியும். ஆம்புலன்ஸில் என்னை அங்கே கொண்டு வந்து சேர்த்தார்களாம். என் முதுகுத் தண்டில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கிறது என்றார்கள். காயம் பெரிதாகி...." அவள் நிறுத்தினாள்.

விரக்தியுடன் கைகளை விரித்துத் தோள்களைக் குலுக்க அவள் நினைத்தாள் போலும். கைகள் இல்லாததால் அந்த முயற்சி பரிதாபமாக இருந்தது. "செயற்கை உறுப்புக்கள் வைக்கப் பார்த்தார்கள். ஆனால் பொருத்த முடியவில்லை."

"லாரிக் கம்பெனி மீது வழக்குப் போட்டாயா?"

அவள் வியப்புடன் ஜெனிபரைப் பார்த்தாள். "ஃபாதர் சொல்லவில்லை?"

"என்னவென்று?"

"லாரிக் கம்பெனி மீது என் வக்கீல் கேஸ் போட்டார் என்று சொல்லவில்லையா? கேஸ் தோற்று விட்டது. அப்பீல் பண்ணினோம். அதுவும் தோற்று விட்டது."

"ஃபாதர் சொல்லவில்லையே அதையெல்லாம்? அப்பீலிலும் தோற்றுவிட்டதென்றால் நாம் எதுவும் செய்ய முடியாதேம்மா."

ஆமாம் என்கிற மாதிரி கானி தலையசைத்தாள். "ஒன்றும் செய்ய முடியாதென்றுதான் எனக்கும் தோன்றியது. ஆனால் ஃபாதர்தான் சொன்னார்-நீங்கள் அற்புதங்கள் செய்யக் கூடியவர் என்று..."

"அற்புதங்கள் செய்வது அவருடைய இலாகா நான் வெறும் வக்கீல்," என்றாள் ஜெனிபர். ஃபாதர் ரயன் மீது அவளுக்குக் கோபம் வந்தது. இந்தப் பெண்ணுக்கு ஏன் அவர் பொய்யான நம்பிக்கைகளைத் தரவேண்டும்? அவரிடம் சொல்ல வேண்டும், இப்படியெல்லாம் செய்யாதீர்கள் என்று.

கானியின் அத்தை எட்டத்திலேயே நின்றிருந்தாள். "சாப்பிட ஏதாவது கொண்டு வரட்டுமா, மிஸ் ஜெனிபர்? டீ, பிஸ்கெட்..." என்றாள்.

ஜெனிபருக்கு நல்ல பசி. நேரம் இல்லாததால் காலையிலிருந்து எதுவும் சாப்பிடவில்லை என்பது ஞாபகம் வந்தது. ஆனால்-

கையும் காலும் இல்லாத இந்தப் பரிதாபமான பெண்ணின் எதிரே உட்கார்ந்து கொண்டு, கைகளால் ஊட்டித்து உண்ணுவதாவது!

"தாங்க்ஸ். ஒன்றும் வேண்டாம். இப்பத்தான் சாப்பிட்டு விட்டு வந்தேன்," என்றாள்.

எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக இங்கிருந்து கிளம்பி விட்டால் தேவலை போலிருந்தது ஜெனிபருக்கு. புறப்படுவதற்கு முன் உற்சாக மூட்டும்படி இரண்டு வார்த்தை சொல்லி விட்டுப் போக நினைத்தாள் ஆனால் என்னத்தைச் சொல்ல முடியும்? எதுவும் தோன்றவில்லை.

"வந்து... ஸாரிம்மா... நான் எதுவும் உதவி..." என்றபடி எழுந்து கொண்டாள்.

"பரவாயில்லை. நீங்கள் கஷ்டப்படாதீர்கள்," என்றாள் கானி, புன்னகையுடன்.

அந்தப் புன்னகை!

ஜெனிபரின் மனத்தை அது உலுக்கி விட்டது. இவள் இடத்தில் நாம் இருந்தோமானால் புன்னகையா செய்வோம்! புன்னகை செய்வது எப்படி என்பதே மறந்து போயிருக்குமே!

புறப்பட்டவள் நின்றாள்.

"உன் வக்கீல் யார்?" என்று கேட்டாள்.

அவள் அவர் பெயரைச் சொன்னாள். "உங்களுக்கு அவரைத் தெரியுமா?"

"தெரியாது. எதற்கும் அவரைச் சந்தித்துப் பேசுகிறேன்," என்று ஒப்புக்குச் சொல்லி வைத்தாள் ஜெனிபர்.

"ரொம்ப சந்தோஷம்," என்றாள் கானி. ஜெனிபரின் பேச்சை உண்மையென்று எடுத்துக் கொண்டதால் அவள் குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

அவளை ஒரு வினாடி உற்றுப் பார்த்தாள் ஜெனிபர்.

என்ன அவல வாழ்க்கை இவளுக்கு! நாளுக்குப் பின் நாள் ஓடும். மாதத்துக்குப் பின் மாதம் ஓடும். வருடத்துக்குப் பின் வருடம் ஓடும். இவள் இங்கேயே இப்படியே உட்காந்திருப்பாள். எந்த நம்பிக்கையும் இல்லாமல்; தானாக எந்த வேலையையும் செய்ய முடியாமல்; வெறும் ஜடமாக.

"உனக்கு எந்த நம்பிக்கையும் தர முடியாமல் இருக்கிறதம்மா," என்றாள்.

"அது எனக்குத் தெரியும்." என்றாள் கானி. ஒன்று சொல்லட்டுமா ஜெனிபர்? நீங்கள் என்னைப் பார்க்க

வந்ததே போதும். அதுவே எனக்கு ரொம்பத் தெம்பாக இருக்கிறது."

ஜெனிபர் புறப்பட்டாள். கைகுலுக்கி விடை பெறுகிற தருணம். ஆனால் குலுக்குவதற்குக் கைதான் இல்லை.

சங்கடத்துடன், "வரட்டுமா? அப்புறம் சொல்லியனுப்புகிறேன்," என்றாள்.

அலுவலகத்துக்குத் திரும்பிச் செல்கையில் ரயன் பாதிரியாரைப் பற்றி எண்ணமிட்டாள் அவருடைய கோரிக்கைகளுக்கு இனி இடம் கொடுக்கக் கூடாது. முழுக்க முழுக்க முடமாகிக் கிடக்கும் இந்தப் பெண்ணுக்கு யாரால் என்ன உதவி செய்ய முடியும்? இவளுக்குப் போய் நம்பிக்கை கொடுப்பது கொடுமையல்லவா?

இருந்தாலும் கானி கூறிய வழக்கறிஞரைப் பார்த்து விடுவோம் என்று எண்ணிக் கொண்டாள்.

அலுவலகத்தில், அவளுக்காகப் போன் செய்தவர்களின் பெயர்களைக் குறித்து வைத்திருந்தாள் செகரட்டரி.

அதில் வார்னரின் பெயர் இருக்கிறதா என்று அவசரமாகப் பார்த்தாள்.

இல்லை.

அந்த வழக்கறிஞர், சின்ன மூக்கும் வழுக்கைத் தலையுமாக இருந்தார். வருமானமில்லாத வக்கீல் என்பது பார்த்துமே தெரிந்தது.

குமாஸ்தாவுக்கென்று போட்டிருந்த மேஜை நாற்காலி காலியாக இருந்தது. "சாப்பிடப் போயிருக்கிறார்," என்று அவர் சொன்னாரேயொழிய மனிதருக்கு பாவம், குமாஸ்தாவே இல்லை என்று ஜெனிபர் ஊகித்துக் கொண்டாள்

"கானியைப் பற்றிப் பேசவேண்டுமென்று டெலிபோனில் சொன்னீர்கள் இல்லையா?" என்று கேட்டார்.

"ஆமாம்."

அவர் பெருமூச்சு விட்டார்.

"அதைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது? வழக்குப் போட்டோம். தோற்று விட்டது. ஆனால் நான் கடைசி வரை,உயிரை விட்டுப் பாடுபட்டேன்."

"அப்பீலையும் நீங்கள்தானே பார்த்துக் கொண்டீர்கள்?"

"ஆமாம். அதுவும் தோற்றுப் போய் விட்டது. நீங்கள் வீண் பிரயத்தனம் செய்கிறீர்களென்று தோன்றுகிறது." ஒரு வினாடி அவளைக் கூர்ந்து கவனித்தார் அவர். "இந்த மாதிரி கேஸில் போய் ஏன் உங்கள் நேரத்தை வீணடிக்கிறீர்கள்? நீங்கள் பெயரும் புகழும் உள்ள வக்கீல். பணம் வரக்கூடிய பெரிய வழக்குகளில் வேலை செய்யலாமே?"

"ஒரு சினேகிதர் கேட்டுக்கொண்டார் இந்தக் கேஸைக் கவனிக்கும்படி. இது சம்பந்தமான தஸ்தாவேஜுகளை நான் பார்க்கலாமா?" என்றாள் ஜெனிபர்.

"ஓ, தாராளமாக, என்று கூறி, இன்னொரு பெருமூச்சுடன் எடுத்துத் தந்தார்.

கானியின் வழக்கு விவரங்களைப் படிக்கலாமென்று ஜெனிபர் உட்கார்ந்த போது மாலை நேரம்.

'நான் உயிரை விட்டுப் பாடு பட்டேன்,' என்று கானியின் வழக்கறிஞர் சும்மா பெருமைக்காகச் சொல்கிறார் என்று தான் அவள் நினைத்திருந்தாள்.

ஆனால் அது முழுக்க முழுக்க உண்மை என்று இப்போது தெரிந்தது.

வழக்கை மிகச் சரியான முறையில் நடத்தியிருந்தார் அவர்

கானியின் விபத்துக்காக நஷ்ட ஈடு கோரி நகரசபை, லாரிக் கம்பெனி இரண்டின் மீதும் வழக்குத் தொடுத்

திருந்தார். வழக்கை விசாரிக்க ஜூரர்கள் குழு நியமிக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

ஜூரர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் நகரசபையின் மீதோ லாரிக் கம்பெனியின் மீதோ தவறு கிடையாது என்று கூறிவிட்டார்கள்.

அந்த டிசம்பர் மாதம் நகரமெங்கும் பனிப் புயல் வீசியதற்குத் தாங்கள் காரணமல்லவென்றும் அது தெய்வச் செயல் என்றும் நகரசபைக்காரர்கள் தெரிவித்தார்கள். பனிக்கட்டியைச் சாலைகளிலிருந்து அகற்றுவதற்கு எவ்வளவு கருவிகளை உபயோகித்து என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவும் தாங்கள் செய்ததாகச் சொன்னார்கள். கானிதான் அஜாக்கிரதையாகச் சாலையைக் கடந்து விபத்தைத் தேடிக் கொண்டாள் என்று கூறினார்கள்

லாரிக் கம்பெனியும் தங்கள் மீது தவறில்லை என்று சொல்லிவிட்டது. விபத்தைக் கண்ணால் கண்ட மூன்று பேர் லாரிக் கம்பெனிக்குச் சாட்சியம் அளித்திருந்தார்கள். கானியின் மீது மோதிவிடக் கூடாதென்று டிரைவர் ரொம்பவும் முயன்றதாகவும், ஆனால் பிரேக் போடுவதற்கே அவகாசம் இல்லாமல் போய்விட்டதென்றும் அந்தச் சாட்சிகள் சொன்னார்கள். லாரியை நிறுத்துவதற்காகப் பிரேக் போட்ட போது லாரி ஒரு சுழல் சுழன்று கானி மீது மோதிவிட்டது என்றார்கள்.

நகரசபை, லாரிக் கம்பெனி இரண்டின் மீதும் தப்புக் கிடையாது என்று கோர்ட்டில் தீர்ப்பாயிற்று. அப்பீல் கோர்ட்டும் கீழ்க் கோர்ட் தீர்ப்பை உறுதி செய்துவிட்டது.

வழக்கு விவரங்களைப் படித்து முடித்துவிட்டுக் கடியாரத்தைப் பார்த்தாள் ஜெனிபர்.

விடிகாலை மூன்று மணி!

விளக்குகளை அணைத்துவிட்டுப் படுத்தாள். ஆனால் தூக்கம் வரவில்லை.

சட்டப்படி நீதி வழங்கப்பட்டிருக்கிறது. உண்மை தான்.

ஆனால் சட்டமா முக்கியம்? அந்த இளம் பெண்- அவளுக்கு ஏற்பட்டிருக்கும் நரகம்-

கானியின் உருவம் ஜெனிபரின் கண் முன்னே நின்று கொண்டிருந்தது.

இருபத்தைந்து வயது இளம் பெண். கையுமில்லை, காலுமில்லை.

அவளை லாரி மோதிய கோரம்- தாங்கிக் கொள்ள முடியாத வேதனைகள்-அடுத்தடுத்து அவள் உடலில் செய்யப்பட்ட பயங்கரமான ஆபரேஷன்கள்-ஆபரேஷனுக்கு ஆபரேஷன் அவள் இழந்த உறுப்புக்கள்-

இதற்கெல்லாம் யார் நீதி வழங்குவது?

ஜெனிபர் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் விளக்குகளைப் போட்டாள் கானியின் வழக்கறிஞர் வீட்டுக்குப் போன் செய்தாள்.

"ஏன் சார், வழக்கில் டாக்டர்களைப் பற்றி எதுவுமே காணோமே? ஆபரேஷனில் ஏதாவது முறைகேடு நடந்திருக்கிறதா என்று விசாரித்தீர்களா?" என்றாள்.

வக்கீலின் கரகரப்பான குரல் பதிலளித்தது. "என்ன இழவு? யார் பேசுவது?"

"ஜெனிபர் பேசுகிறேன். டாக்டர்களைப் பற்றி-"

"பாழாய்ப் போச்சு! ஏம்மா! இப்ப மணி என்ன தெரியுமா? விடிகாலை நாலு மணி! உன்னிடம் கடிகாரம் கிடையாதா?"

"இது ரொம்ப முக்கியம் சார் அதனால்தான் கூப்பிட்டேன். உங்கள் தாவாவில் ஆபரேஷன்களைப் பற்றி எதுவும் காணோமே? கானிக்குச் செய்த ஆபரேஷன்கள் எப்படிப்பட்டது? தீர விசாரித்தீர்களா?"

சற்று நேரம் மௌனம் நிலவியது. அவர் தன் சிந்தனைகளை ஒழுங்கு படுத்திக் கொண்டார் போலும். பிறகு சொன்னார்: "ஆஸ்பத்திரியில் அவளுக்குச் சிகிச்சை செய்த டாக்டர்களுடன் பேசினேன். அவள் உயிரைக் காப்பாற்றுவதற்கு அந்த ஆபரேஷன்கள் அவசியமா யிருந்தன என்று சொன்னார்கள். தலை சிறந்த டாக்டர்கள் ஆபரேஷனைச் செய்திருக்கிறார்கள். அதுவும் முறைப்படி செய்திருக்கிறார்கள். அதனால் தான் ஆஸ்பத்திரியைப் பற்றி மனுவில் குறிப்பிடவில்லை."

சப்பென்றாகி விட்டது அவளுக்கு. "ஓ," என்றாள்.

"இதோ பாருங்கள். முன்பே உங்களுக்குச் சொன்னேன். மறுபடியும் சொல்கிறேன். இந்த வழக்கில் நீங்கள் செலவழிக்கும் நேரம் தண்டம்தான். நல்லது, இப்போது நீங்களும் தூங்குங்கள். என்னையும் தூங்க விடுங்கள்."

படக்கென்று ரிசீவரை வைக்கும் சத்தம் கேட்டது.

ஜெனிபர் விளக்குகளை அணைத்து விட்டுத் திரும்பப் படுத்தாள். ஆனால் இருந்த கொஞ்ச நஞ்சத் தூக்கமும் எங்கோ மறைந்து விட்டது. எழுந்து கொண்டாள் சமையலறைக்குப் போய்க் காப்பி போட்டாள். சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டு மெல்ல உறிஞ்சினாள்.

வெளியே அடிவானம் வெளுக்கத் தொடங்கு வதையும் வெளிர் சிவப்பாக உதிக்கும் சூரியன் சிறிது சிறிதாகப் பளீரென்று ரத்தச் சிவப்பாக மாறுவதையும் பார்த்தவாறு இருந்தாள்.

மனம் தவித்தது.

எந்த அநீதிக்கும் சட்டத்தில் ஒரு பரிகாரம் இருப்பதாகச் சொல்வார்களே? கானிக்கு இழைக்கப் பட்டுள்ள அநீதிக்கு எங்கே இருக்கிறது பரிகாரம்?

கடியாரத்தைப் பார்த்தாள். மணி ஆறரை.

மீண்டும் போனை எடுத்தாள். வக்கீலைக் கூப்பிட்டாள்.

"லாரி டிரைவர் எப்படிப்பட்டவன் என்பதை விசாரித்தீர்களா?" என்று கேட்டாள்.

தூக்கக் கலக்கமாகப் பதில் கேட்டது: "கடவுளே! ஏம்மா, உனக்கு ஏதாவது பைத்தியம் கியத்தியம் பிடித்திருக்கிறதா? எப்பத்தான் நீ தூங்குவாய்?"

"லாரியை ஓட்டி வந்தவன் எப்படிப்பட்டவன் என்று கேட்கிறேன். அதற்கு முன் கேஸ் கீஸ் எதிலும் மாட்டிக் கொள்ளாதவனா? விசாரித்தீர்களா?"

"இந்தாம்மா, என்னை என்னவோ மடையன் என்று நீ நினைக்கிற மாதிரி இருக்கிறது."

"ஸாரி, சார்," என்று சொல்லி விட்டு மறுபடியும் அதையே கேட்டாள். "எனக்கு லாரி டிரைவரைப் பற்றித் தெரிந்தாக வேண்டும்."

"எல்லாம் நன்றாய் விசாரித்துவிட்டேன். எந்தத் தப்புத் தண்டாவும் செய்ததில்லை. இதுதான் அவனுடைய முதல் விபத்து."

"அப்படியா...?"

"மிஸ் ஜெனிபர், எனக்கு ஒரு உபகாரம் பண்ணுகிறீர்களா? மேற்கொண்டு ஏதாவது கேள்வி கேட்பதாக இருந்தால் தயவு பண்ணி ஆபீஸ் நேரத்தில் என்னைக் கூப்பிடுங்கள்."

"ஸாரி," என்றாள் ஜெனிபர். "நீங்கள் தூங்குங்கள்."

டெலிபோனை வைத்து விட்டு எழுந்தாள். குளித்து உடை மாற்றிக் கொண்டு அலுவலகம் செல்ல நேரமாகி விட்டது.

அந்தப் பெண்ணுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது.

12

ஈயுமில்லை, காலுமில்லை, வைத்த இடத்தில் கிடக்கும் கட்டையாக இருக்கிறாள் அந்தப் பயங்கர விபத்துக்குள்ளான கானி.

அவளுக்கு நியாயம் கிடைப்பதற்கு என்ன செய்ய முடியும்? நஷ்ட ஈடு வாங்கிக் கொடுப்பதற்கு வழி என்ன இருக்கிறது?

இதைப்பற்றி ஜெனிபர் ஒருபுறம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்க, இன்னொரு புறம் அவளை ஆனந்தத்தில் ஆழ்த்தும் அனுபவங்களும் ஏற்பட்டன.

வார்னரை அவள் சந்தித்து மூன்று வாரங்களாகி யிருந்தன.

அவனைப் பற்றி நினைக்கவே கூடாது என்றுதான் அவள் எண்ணினாள் ஆனால் எந்தப் பக்கம் திரும்பினாலும் ஏதாவதொன்று வார்னரை ஞாபகப் படுத்தியது. ஒரு குரல் காதில் விழும். அது வார்னரை ஞாபகப் படுத்தும். யாரோ ஒருவருடைய தலையைப் பார்ப்பாள். அது வார்னரை நினைவூட்டும்.

பல ஆண்கள் அவளை வெளியே அழைத்துச் செல்ல விரும்பினார்கள் அவளுடன் நெருங்கி உறவாட விரும்பினார்கள் கட்சிக்காரர்கள், கோர்ட்டில் எதிர்த் தரப்புக்கு ஆஜரான வக்கீல்கள்-ஏன், ஒரு நீதிபதிகூட-அவளை நெருங்க முயன்றார்கள். எவரையும் ஜெனிபருக்குப் பிடிக்கவில்லை.

வார்னர்! அவன் ஒருவன்தான் அவள் மனத்தில் இடம் பெற்றிருந்தான்

மறுபடி எப்போது அவனைப் பார்க்கப் போகிறோம் என்று அவள் ஏங்கிக் கொண்டிருந்த சமயம் அவனே போன் செய்தான்.

"இன்று சாயந்தரம் நாம் வெளியே போகலாமா ஜெனிபர்? உனக்கு அவகாசம் இருக்குமா?" என்று கேட்டான்.

அன்று சாயந்தரம் அவளுக்கு வேலை இருந்தது. இருந்தாலும், "ஓ! தாராளமாய்!" என்று சொல்லி விட்டாள்.

சே! அவள் உறுதியெல்லாம் காற்றில் பறந்துவிட்டதே! வார்னர் இன்னொரு தரம் கூப்பிட்டால் மரியாதையாய், ஆனால் விட்டேற்றியாய், பிடிகொடுத்து விடாமல் பேச வேண்டும் என்று நினைத்திருந்ததெல்லாம் வீண்! வீண்!

அவன் குரலைக் கேட்ட வினாடியே அதையெல்லாம் மறந்துவிட்டு, 'ஓ! தாராளமாய்!' என்று சொல்லி விட்டோமே! என்ன மடத்தனம்!

தன்னைத் தானே திட்டிக் கொண்டாலும், அன்று மாலை அவன் வரச் சொன்ன இடத்துக்குச் செல்லத் தவறவில்லை.

ஒரு சிறிய ஓட்டலில் அவர்கள் உணவு அருந்தினார்கள். இரண்டு மணி நேரம் இரண்டு நிமிடமாய் ஓடி விட்டது. சட்டத்தைப் பற்றியும் சினிமாவைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் உலகத்திலுள்ள சிக்கலான எல்லாப் பிரசினைகளைப் பற்றியும் அவர்கள் பேசினார்கள்.

எந்த விஷயத்தையும் துருவித் துருவிப் பார்ப்பவனாக இருந்தான் வார்னர். என்ன அற்புதமான மூளை! எத்தனை கவர்ச்சியான பேச்சு! மயங்கிப் போனாள் ஜெனிபர்.

அவளுடைய அலுவல்களைப் பற்றி அக்கறையாக விசாரித்தான். அவளுடைய வெற்றிகளைக் கேட்டு நிஜமான சந்தோஷத்துடன் பெருமைப்பட்டான்.

பெருமைப்பட அவனுக்கு உரிமை இருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள் ஜெனிபர்.

அவன் மட்டும் கட்சிக்காரர்களை அனுப்பி உதவி யிருக்காவிட்டால் என்றைக்கோ அவள் மூட்டை முடிச்சைச் கட்டிக் கொண்டு ஊரைப் பார்க்கப் போயிருக்க வேண்டும்.

அடுத்த வாரமும் வார்னர் அவளை வெளியே அழைத்துச் சென்றான்.

இம்முறை ஓட்டலுக்கு அல்ல. தன் சட்ட நிறுவனத்திலேயே இருந்த தனிப்பட்ட சிற்றுண்டிச் சாலைக்கு. பிரம்மாண்டமான, நவீனமான அவனுடைய அலுவலகத்தைக் கண்டு பிரமித்துப் போனாள் ஜெனிபர். தன் அலுவலகத்தைச் சேர்ந்த பலருக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தான். எல்லாருக்கும் அவளை ஏற்கெனவே தெரிந்திருந்தது.

நிறுவனத்தின் அதிபர் மட்டும் மரியாதைக்கு இரண்டு வார்த்தை பேசி விட்டு நகர்ந்து விட்டார். ஏனென்று முதலில் அவளுக்குத் திகைப்பாயிருந்தது. பிறகு ஞாபகம் வந்தது- அவரது மருமகளைத்தான் வார்னர் மணந்திருக்கிறான் என்பது.

அவர்கள் உணவருந்திய அறை பளபளவென்று தேக்கு மரச் சுவர்களுடன் இருந்தது. ஒரு தலைமைச் சமையல் காரரும் இரண்டு உதவியாளர்களும் கூப்பிட்ட குரலுக்குக் கை கட்டிக் காத்திருந்தார்கள்.

அடுத்த நாள் பூரா அவள் வார்னரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தாள்.

கூடாது. வார்னரை மறக்கத் தான் வேண்டும். அவனை இனிப் பார்க்கவே கூடாது. கல்யாணமானவன். இன்னொரு பெண்ணுக்குச் சொந்தமானவன்...

அன்று இரவு துப்பறியும் நிபுணர் கென்னத்துடன் ஒரு நாடகத்துக்குப் போனாள் ஜெனிபர்.

முன் ஹாலில் அவர்கள் நின்றிருந்த சமயம் வாசலில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. திடீரென்று கூட்டத்தில் பலர் கிசுகிசுவென்று பேசிக்கொள்வது காதில் விழுந்தது. ஜெனிபர் திரும்பிப் பார்த்தாள்.

தியேட்டர் வாசலில் ஒரு கறுப்பு நிறப் படகுக் கார் வந்து நிற்க, ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

"ஆமாமாம்.. அவன்தான் என்று ஒரு பெண் இன்னொருத்தியிடம் சொல்வது ஜெனிபரின் காதில் விழுந்தது.

ஜனங்கள் அந்தச் சொகுசுக் காரைச் சூழ்ந்து கொண்டார்கள் வெள்ளையும் சள்ளையுமாய் யூனிபாரம் அணிந்திருந்த டிரைவர் கதவைத் திறந்து விட்டு ஒதுங்கி நின்றான்.

காரிலிருந்து இறங்கியவர்கள் மாரெட்டியும் அவன் மனைவியும் தான்.

அவனைக் கூட்டம் சூழ்ந்து கொண்டது. அவன் அவர்களுக்கு ஹீரோ சினிமா நட்சத்திரம் போன்ற ஆணழகன். துணிச்சலாகக் காரியங்கள் செய்து அவர்கள் உள்ளங்களைக் கவரும் வீரன்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு மாரெட்டியும் அவன் மனைவியும் உள்ளே வந்தார்கள்.

ஜெனிபரைத் தாண்டிச் சென்ற போது, அவனுக்கும் அவளுக்கும் இடையே மூன்றடி தூரம்தான் இருந்தது. ஒரு வினாடி அவர்கள் கண்கள் சந்தித்துக் கொண்டன. அப்பா! எத்தனை கறுப்பு அந்தக் கண்கள்-அவனுடைய உள்ளத்தைப் போலவே!

ஒரு வினாடிதான். அவன் தியேட்டருக்குள் மறைந்து விட்டான்.

ஜெனிபருக்கு நாடகத்தில் மனம் செல்லவில்லை.

மாரெட்டியைப் பார்த்தது, மறைந்திருந்த பல வேதனைகளைக் கிளறி விட்டுவிட்டது.

இவனால் அவள் எவ்வளவு அவமானங்கள் பட்டாள்! எத்தனை துன்பங்களைச் சந்தித்தாள்!

ஜெனிபரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. பாதியிலேயே வீட்டுக்குக் கிளம்பிவிட்டாள்.

மறுபடியும் போன்.

வார்னரிடமிருந்துதான்.

மனத்தைக் கல்லாக்கிக் கொண்டாள் ஜெனிபர். இம்முறை அவன் எங்கே அழைத்தாலும் ஒப்புக் கொள்ளக் கூடாது. 'ரொம்ப நன்றி, வார்னர். ஆனால் இன்று நிஜமாகவே எனக்கு ஏகப்பட்ட வேலையிருக்கிறது' என்று சொல்ல வேண்டும்...

ஆனால் இந்தத் தடவை வார்னர் அவளை எங்கும் கூப்பிடவில்லை. "கொஞ்ச நாள் நான் வெளிநாடு போக வேண்டியிருக்கிறது, ஜெனிபர்," என்று மட்டுமே சொன்னான்.

மடேலென்று தலையில் அடிவிழுந்த மாதிரி இருந்தது ஜெனிபருக்கு "எத்தனை... எத்தனை நாளாகும் வர?" என்று தடுமாறினாள்.

"பதினைந்து இருபது நாளாகும். வந்ததும் உனக்கு போன் செய்கிறேன்." என்றான்.

"ஓ, போய் வாருங்கள்... பயணம் ஜம்மென்றிருக்க என் வாழ்த்துக்கள்," என்றாள் உற்சாகத்தை வலிய வரவழைத்துக் கொண்டு.

ஒரே சூனியம்-கன்னாபின்னாவென்று கற்பனைகள் ஓடின.

வெளிநாட்டுக் கடற்கரையில் வார்னர்... அவனைச் சுற்றி அரை நிர்வாண அழகிகள்... காபரே கிளப்பில் வார்னர்... மது அருந்திய வண்ணம் அழகியை அணைத்துக் கொண்டு... படுக்கையறையில் வார்னர் ஒரு பெண்ணுடன்...

'போதும், நிறுத்து!' என்று தன்னைத்தானே அடக்கிக் கொண்டாள் அவள்.

நான் ஒரு பைத்தியக்காரி.

சாமர்த்தியமாய்க் கேள்விகள் போட்டுத் தெரிந்து கொள்ளாமல் போய் விட்டோமே? ரொம்ப நீண்ட விமானப் பயணமா? உங்களுக்கு அன்னிய மொழிகள் என்னென்ன தெரியும்? பாரிஸில் டீ நன்றாக இருக்கும் என்பார்கள். அந்தப் பக்கம் போனால் எனக்கு டீ வாங்கி வர முடியுமா? உங்களுடன் உங்கள் மனைவியும் வருகிறாளா? இப்படியெல்லாம் கேட்டிருக்க வேண்டும்.

துப்பறியும் நிபுணர் கென்னத் உள்ளே வந்தவர், "என்ன ஜெனிபர், உனக்கு நீயே பேசிக் கொண்டிருக்கிறாய்? உடம்பு கிடம்பு சரியில்லையா?" என்றார்.

'ஆமாம். எனக்கு உடம்பு சரியில்லை!' என்று இரைந்து கத்த வேண்டும் போலிருந்தது. எனக்கு ஒரு டாக்டர் தேவை. எனக்கு ஜில்லென்று ஒரு ஷவர் குளியல் தேவை. எனக்கு வார்னர் தேவை.

"ஒன்றுமில்லை. கொஞ்சம் களைப்பாக இருக்கிறது," என்றாள்.

"ராத்திரி கொஞ்சம் சீக்கிரமாய்ப் படுத்துக் கொள்," என்றார் கென்னத்.

அங்கே வார்னரும் சீக்கிரம் படுத்துக் கொள்வானா? மறுபடியும் அவள் கற்பனை ஓடியது. மறுபடியும் அடக்கிக் கொண்டாள்.

வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள். அப்படியும் காலில் இரும்புக் குண்டு கட்டிவிட்ட மாதிரி நாட்கள் மெதுவாகவே ஓடின. பகலெல்லாம் நீதி மன்றங்களில் பழி கிடந்தாள் இரவெல்லாம் கேஸ் கட்டுக்களைப் படித்தாள்.

கென்னத் கூட, "மெதுவாய் ஜெனிபர்! மெதுவாய்! உயிரை விட்டு விடுவாய் போலிருக்கிறதே!" என்று எச்சரித்தார்.

ஆனால் உடலாலும் உள்ளத்தாலும் களைத்துப் போகவே அவள் விரும்பினாள். சிந்தனை செய்வதற்கே நேரம் இருக்கக் கூடாதென்று ஆசைப்பட்டாள்.

நாலு வாரம் கழித்து ஒரு நாள் வார்னர் போன் செய்தான்.

"இப்போது தான் ஊரிலிருந்து வந்தேன்," என்று அவன் சொன்னதுமே, அந்தக் குரலே அவளைச் சிற கடித்துப் பறக்க வைத்தது. அவளால் பேசவே முடிய வில்லை.

"இன்று எங்காவது நாம் சந்திக்கலாமா ஜெனிபர்?" என்றான்.

தன் படபடப்பைக் காட்டிக் கொள்ளமால், "சந்திக்கலாமே?" என்றாள். கச்சிதம் என்று தன்னைத் தானே பாராட்டிக் கொண்டாள். கரெக்டாய்ச் சொல்லி விட்டோம். சந்திக்கலாமே? அவ்வளவுதான்.

"பிளாஸாவுக்கு வருகிறாயா?" என்றான் வார்னர்.

"வருகிறேன்," என்றாள்.

பேச்சில் அப்படி இருந்தாளே தவிர, நேரில் சந்தித்தபோது...!

ஜெனிபர் சீக்கிரமாகவே அங்கு போய்க் காத்திருந்தாள்.

அதோ வார்னர்.

அந்த உயரமான மெல்லிய உருவம் வருவதைக் காணும்போதே உள்ளமெல்லாம் பரவசம் நிரம்பியது.

சற்றே கறுத்திருக்கிறாரோ? வெளிநாட்டுக் கடற்கரைகளில் பெண்களோடு கொட்டமடித்திருப்பார் என்று சந்தேகப்பட்டது சரிதானோ?

அவன் புன்னகையுடன் அவளை நெருங்கி வந்து அவள் கைகளை ஆசையுடன் பிடித்தான். அந்த நிமிடமே அவளுடைய எதிர்ப்பெல்லாம் பொடிப் பொடியாய் உதிர்ந்தது. வார்னரிடம் -ஏற்கெனவே கல்யாணமான வரிடம் உறவாடக் கூடாதென்று அவள் தனக்குள் கொண்டிருந்த தீர்மானமெல்லாம் காற்றிலே பறந்தது. தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள அவளால் முடியவில்லை. அவளுக்குள் வேறு யாரோ ஒருவர் புகுந்து கொண்டு அவள் எப்படி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்னென்ன செய்ய வேண்டும், என்று கட்டளையிடுகிற மாதிரி இருந்தது.

எனக்கு என்ன நேர்ந்து விட்டது? அவளாலேயே அவளுக்கு விளக்கம் சொல்லிக் கொள்ள முடியவில்லை. இது போன்ற அனுபவத்தை இதற்கு முன் ஒரு போதும் உணர்ந்தது கிடையாது.

வாழ்க்கையில் வேறெதுவுமே வேண்டாம். ஆயுளுக்கும் இந்த வார்னரின் கைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடக்க வேண்டும், அது ஒன்றே போதும் என்று தோன்றியது.

தன் முகம் சிவப்பதை அவளால் உணர முடிந்தது.

"உனக்கு அவகாசம் கொடுக்காமல் வரச் சொல்லி விட்டேன்," என்றான் வார்னர், மன்னிப்புக் கேட்கும் குரலில். "ஒரு கட்சிக்காரர் வருவதாகச் சொல்லியிருந்தார். வரவில்லை? அந்த நேரத்தில் உன்னைப் பார்க்கலாம் என்று வந்தேன்."

அந்தக் கட்சிக்காரர் நன்றாயிருக்கட்டும் என்று மனத்துக்குள் வாழ்த்தினாள் ஜெனிபர்.

"உனக்காக ஒன்று வாங்கி வந்திருக்கிறேன்," என்றான் அவன். பச்சையும் தங்க நிறமுமான ஸ்கார்ஃப் அது. வெகு அழகாக இருந்தது. "இத்தாலியில் மிலன் நகரில் வாங்கினேன்."

ஓ! இத்தாலிக்குப் போயிருந்தாரா? இத்தாலிய அழகிகளுடன் கொட்டமடித்தாரோ?

"ஸ்கார்ஃப் ரொம்ப அற்புதமாக இருக்கிறது," என்றாள்.

"நீ மிலன் நகருக்குப் போயிருக்கிறாயா."

"இல்லை. ஆனால் அந்த ஊர் மாதா கோவில் படத்தைப் பார்த்திருக்கிறேன். அற்புதம்."

"எனக்கு ஊர் சுற்றி வேடிக்கை பார்ப்பது அவ்வள வாகப் பிடிக்காது. ஒரு சர்ச்சைப் போலத்தான் எல்லா சர்ச்சும் என்று நினைக்கிறவன் நான்."

பிற்பாடு இந்தச் சந்திப்பைப் பற்றி ஜெனிபர் நினைத்துப் பார்த்தபோது, எதைப் பற்றிப் பேசினோம், என்ன சாப்பிட்டோம், வார்னரின் அருகில் வந்து விசாரித்து விட்டுப் போனவர்கள் யார்-இதையெல்லாம் ஞாபகப் படுத்திக் கொள்ளப் பார்த்தாள். எதுவும் நினைவு வரவில்லை. வார்னரின் நெருக்கம், அவனுடைய ஸ்பரிசம், அவனுடைய பார்வை, இவை மட்டும்தான் ஞாபகத்தில் நின்றன. நமக்கு யாரோ மந்திரம் போட்டுவிட்டார்களா என்ன? ஏன் இப்படி மயங்கி வசப்பட்டுக் கிடக்கிறோம்? இந்த மாய வசியத்திலிருந்து விடுபட முடியவில்லையே?

அவளுக்கு இன்னொரு எண்ணம் கூடத் தோன்றியது. ஒரு ராத்திரி, ஒரே ஒரு ராத்திரி இவருடன் வாழ்ந்துவிட்டால் போதும். நாம் கற்பனை செய்திருக்கிற அளவுக்கு அப்படி யொன்றும் பிரமாதமான ஆளல்ல என்பது புரிந்து

விடும். பிறகு இந்தப் பிரமையிலிருந்து சுலபமாக விடுபடலாம்.

தற்செயலாக அவர்கள் கைகள் தொட்டுக் கொண்ட போதெல்லாம் வார்னருக்கும் தனக்குமிடையே மின்சாரம் பாய்வது போல் இருந்தது அவளுக்கு.

அவன் அவள் கைகளைத் திடீரென்று பற்றி, "ஜெனிபர் " என்றான். அவன் குரல் கிசுகிசுத்தது.

அவளும் ரகசியக் குரலில், "நாம் வேறிடத்துக்குப் போகலாம்," என்றாள்.

அவன் எழுந்து சென்று அந்த ஓட்டலில் ஓர் அறை பதிவு செய்து கொண்டு திரும்பினான். லிப்டில் மாடிக்குச் சென்றார்கள்.

லிப்ட் போய்க்கொண்டே யிருப்பது போல அவளுக்குத் தோன்றியது.

மாடி வரவே வராதா?

சாப்பிட்டுக் கொண்டிருந்த போது பேசியதும் பார்த்ததும் பிற்பாடு அவளுக்கு ஞாபகமே வரவில்லை யென்றால், இப்போது நடந்தது அப்படி அப்படியே ஞாபகம் இருந்தது. பல வருடங்கள் கழிந்த பிறகு கூட, அந்த அறையின் படுதாக்களின் நிறமும், தரை விரிப்பின் பூக்களும் அவளுக்கு ஞாபகம் இருக்கும். அறையில் இருந்த மேசை நாற்காலியும் கட்டிலும் மெத்தையும் சுவரில் போட்டிருந்த விளக்குகளும் படங்களும் அவளுக்கு நினைவில் தங்கி விட்டன. வெகுவெகு கீழேயிருந்து மிதந்து வந்த நகரத்தின் சப்தங்களை அவளால் ஞாபகப் படுத்திக் கொள்ள முடிந்தது.

அன்று நிகழ்ந்தவை ஆயுள் காலத்துக்கும் அவள் நெஞ்சில் பதிந்திருந்தன.

வண்ணக் கோலமான ஒரு வெடி அவளுள் மெல்ல வெடித்துச் சிதறிப் பரவியது போலிருந்தது. படுக்கையில்

வார்னரின் அருகிலேயே படுத்திருந்த போது, அவனுடைய மென்மை, அவனுடைய முரட்டுத்தனம்.. அந்தச் சிரிப்பு, அந்தத் தாபம்... தணிக்கத் தணிக்க அதிகரித்து எழும் அந்தப் பசி...

வார்னர் அவளை அணைத்துக் கொண்ட அந்த முதல் வினாடியே அவளுக்குள் ஒரு குரல் சொல்லியது, 'ஜெனிபர்! நீ தொலைந்தாய்!' என்று.

பல மணி நேரம் கழித்து, இருவரும் அமைதியாய்ப் படுத்திருந்த போது வார்னர் சொன்னான்: "என் வாழ்க்கையிலேயே முதன் முறையாக இப்போதுதான் நான் உயிரோடு இருக்கிற மாதிரி தோன்றுகிறது ஜெனிபர்."

அவள் அவனுடைய மார்பை மெதுவாக வருடிய வண்ணம் பலமாகச் சிரித்தாள்.

வார்னர் அவளைத் திகைப்புடன் பார்த்தான் "இப்போது என்ன வேடிக்கையாக நான் சொல்லி விட்டேன்?"

"ஒன்றுமில்லை. ஒரே ஒரு ராத்திரி உங்களுடன் வாழ்ந்து விட்டால், அப்புறம் உங்களை மறந்தே போய் விடலாம் என்று நான் நினைத்திருந்தேன்..."

"இப்போ?"

"நான் நினைத்தது தப்பு என்று தெரிந்து விட்டது. இப்போது என்னில் ஒரு பகுதியாக உங்களை நினைக்கிறேன்" தயங்கியவாறு மறுபடி சொன்னாள்: "அதாவது, உங்களில் ஒரு பகுதி என்னில் ஒரு பகுதியாகி விட்டது என்று தோன்றுகிறது."

வார்னருக்குப் புரிந்தது- அவனுக்கு மனைவி இருப்பதைத் தான் அவள் குறிப்பிடுகிறாள்.

"என் மனைவி மேரி ஐரோப்பாவுக்குப் போகிறாள்.

திரும்பி வர ஒரு மாதமாகும் அதற்குள் ஏதாவது ஏற்பாடு செய்து கொள்வோம்," என்றான் அவன்.

அனேகமாக ஒவ்வோர் இரவும் அவர்கள் சேர்ந்தே இருக்கத் தொடங்கினார்கள்.

ஜெனிபரின் வசதிக் குறைவான வீட்டில் முதல் தடவையாக அவன் தங்கிய போது, "வசதியான வேறு வீடு வேண்டும், ஜெனிபர்," என்றான்.

அடுத்த நாள் பூராவும் அவர்கள் வீட்டு வேட்டை யாடினார்கள். சாயந்தரம் ஒரு அடுக்கு மாடிக் கட்டிடத் துக்கு அவளை அழைத்துச் சென்றான். ஆடம்பரமான ஃப்ளாட்டுகள் கொண்டது அது. கட்டிடத்தின் வாசலில் 'இடம் காலியில்லை' என்ற அறிவிப்புத் தொங்கியது.

"இங்கே எதற்குப் போகவேண்டும்?" என்று அவள் கேட்டாள்.

"வா. புரியும்."

அவன் காட்டிய இடம் ஐந்து பெரிய அறைகள் கொண்ட பெரிய ஃப்ளாட். மிக வனப்பாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. விருந்தாளிகள் தங்குவதற்குக் குளியலறையுடன் கூடிய தனி அறை இருந்தது. ஜன்னலுக்கு வெளியே பார்த்தால் நகரம் அருமையாகத் தெரிந்தது. சமையலறையும் சாப்பாட்டு அறையும் அற்புதமாக இருந்தன.

"என்ன, பிடித்திருக்கிறதா?" என்றான் அவன்.

"பிடித்திருக்கிறதாவா? தலை சுற்றுகிறது," என்றாள் ஜெனிபர். "ஆனால் இரண்டு விஷயம். இதற்கு வாடகை கொடுக்க என்னால் முடியாது. அப்படியே முடிந்தாலும் 'இடம் காலியில்லை' என்று வாசலில் அறிவிப்புப் போட்டி ருக்கிறார்கள். இந்த இடத்தை வேறுயாருக்கோ ஏற்கெனவே கொடுத்து விட்டார்கள் போலிருக்கிறது."

அவன் புன்னகை செய்தான்.

"இதை எங்கள் நிறுவனம் வாடகைக்கு எடுத்திருக்கிறது விருந்தாளிகளுக்காக வைத்திருக்கிறோம். அவர்களுக்கு வேறு இடம் பாத்துக் கொள்கிறோம்," என்றான் வார்னர்.

"வாடகை விஷயம்?"

"உனக்கேன் அந்தக் கவலை? நான் பார்த்துக் கொள்கிறேன்."

அவள் மறுத்தாள்.

"ஊகூம். நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்."

"பைத்தியம் மாதிரி பேசாதே ஜெனிபர். இதற்கான வாடகையைக் கொடுப்பது எனக்கு ஒரு பிரமாத காரியமில்லை."

அவள் பலமாகத் தலையசைத்தாள். "வேண்டாம், டார்லிங்... இவ்வளவு பெரிய உதவிக்கு நான் என்ன திருப்பித் தர முடியும்? என்னையேதான் கொடுக்க முடியும். ஆனால் என்னை உங்களுக்குக் கொடுப்பதற்கு நான் கூலி வாங்கிக் கொள்ள மாட்டேன். அது உங்களுக்கு நான் தரும் பரிசாக இருக்க வேண்டும்."

அவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான் அந்தப் பிடியில் மெல்லத் திமிறிக்கொண்டு. "சரி, சரி உங்களுக்குக் கொடுப்பதற்காக நான் இனிமேல் நைட் ஷிப்டும் பார்க்க வேண்டும்," என்றாள் குறும்பாக.

அவன் சிரித்த சிரிப்பு!

அவர்கள் ஷாப்பிங் சென்றார்கள். பரிசுகள் வாங்கிக் கொடுத்துக் கொண்டார்கள்.

அவனுக்கு என்னென்ன பிடிக்கும் என்று அறிந்து விதவிதமாகச் சமைத்துப் போட்டாள் ஜெனிபர். சாப்பிட்ட

பின் டெலிவிஷன் பார்த்தார்கள். சீட்டாடினார்கள். செஸ் ஆடினார்கள்.

ஒரு விஷயம் ஜெனிபருக்குச் சங்கடமாயிருந்தது.

அவர்களுக்குள் காதல் ஏற்படு முன் இருவரும் ஒளிவு மறைவில்லாமல் பகிரங்கமாகச் சந்தித்து வந்தார்கள். இப்போது காதலர்களாக ஆனபின், நாலு பேர் எதிரில் சேர்ந்து காட்சியளிக்கும் துணிவு குறைந்து விட்டது.

தெரிந்தவர்கள் இல்லாத இடங்களுக்குப் போக ஆரம்பித்தார்கள்.

வார்னரின் மனைவி ஐரோப்பாவிலிருந்து திரும்பும் தினம் நெருங்கிக் கொண்டிருந்தது.

13

வார்னருக்கு விளையாட்டுப் போட்டிகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். எங்கெல்லாம் விளையாட்டு நடக்கிறதோ அங்கெல்லாம் ஜெனிபரை அழைத்துச் சென்றான். அவனருகில் உட்கார்ந்து, அவனோடு சேர்ந்து கைதட்டிக் கூச்சல் போட்டு, தொண்டை கட்டிக் கொள்ளும் போது ஜெனிபருக்கு அது ஒரு தனி ஆனந்தமாக இருந்தது.

ஞாயிற்றுக் கிழமைகளில் ஒரு சுகமான சோம்பேறித் தனம். இரவு அணிந்திருந்த டிரெஸ்ஸை இருவரும் மாற்றிக் கொள்ள மாட்டார்கள். அத்துடனேயே காலைச் சிற்றுண்டி அருந்துவார்கள். பிறகு தினசரியைப் புரட்டிக் கொண்டிருப்பார்கள். நகரத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து சர்ச் மணியோசைகள் ஒலிப்பது அவர்கள் காதில் விழுந்த வாறிருக்கும்.

அந்த மணிச் சத்தம் கேட்கும் போதெல்லாம், அருகில் உட்கார்ந்துள்ள வார்னரைப் பார்ப்பாள். அவன் ஏதாவதொரு குறுக்கெழுத்துப் போட்டியைப் போட்டுப்

பார்த்துக் கொண்டிருப்பான். 'இறைவா! இப்போது எனக் குள்ள மகிழ்ச்சியை இப்படியே நிலைத்திருக்கப் பண்ணு,' என்று ஜெனிபர் தன் மனத்துக்குள் ஒரு பிரார்த்தனை செய்து கொள்வாள்.

இது ஒரு தப்பான வாழ்க்கை என்று அவளுக்குத் தெரிந்துதான் இருந்தது. இது நீடிக்க முடியாது என்பதையும் அவள் அறிந்தேயிருந்தாள். என்றாலும் இப்படிப்பட்ட ஓர் உல்லாசத்தை, இப்படியொரு குதூகலத்தை அவள் இதற்கு முன் ஒருபோதும் அனுபவித்தது கிடையாது. காதலர் களுக்கு என்று ஒரு தனி உலகம் உண்டு. அங்கே எந்த உணர்ச்சியுமே உச்சத்தில்தான் இருப்பது வழக்கம். ஜெனிபருக்கும் அப்படித்தான் இருந்தது. இப்போதுள்ள சந்தோஷத்துக்கு விலையாகப் பிற்பாடு எந்தத் துன்பம் அனுபவித்தாலும் பரவாயில்லை என்று எண்ணினாள்.

துன்பம் வரத்தான் போகிறது என்று அவளுக்குத் தெரியும். பயங்கரமான விலை கொடுக்கத்தான் போகிறோம் என்று அவள் உணர்ந்திருந்தாள்.

என்றாலும் வார்னரின் மீதுள்ள காதலைத் துறக்க அவள் தயாராயில்லை.

முன்னெல்லாம் நேரம் என்பது மணிகளாக இருந்தது. இத்தனை மணி நேரம் இன்ன கட்சிக்காரரைப் பார்க்கப் போகிறோம், இன்ன மணிக்கு இன்ன வேலையைக் கவனிக்க வேண்டும் என்று கணக்கிடுவாள். இப்போதோ எல்லாம் நிமிடக் கணக்குத்தான். வார்னருடன் கழிக்கும் ஒவ்வொரு நிமிடமும் முக்கியமாகத் தெரிந்தது.

அவனுடன் சேர்ந்திருக்கும் போதும் அவனைப் பற்றியே எண்ணினாள். அவனைப் பிரிந்திருக்கும்போதும் அவனைப் பற்றியே எண்ணினாள்.

தான் ஒரு குடும்பத் தலைவியாக இருக்க முடியும் என்று அவள் நினைத்துப் பார்த்ததே கிடையாது வார்னருக்காக எத்தனை வீட்டு வேலைகளை அவள்

இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாள்! அவனுக்கு என்ன பிடிக்கும் என்று கேட்டுச் சமையல் செய்கிறாள். அவனுக்காக வீட்டை சுத்தம் செய்கிறாள். மறுநாள் அவன் அணிய வேண்டிய உடைகளைத் தயாராக எடுத்து வைக்கிறாள். அவனுடைய சின்னச் சின்னத் தேவைகளை ஆசையுடன் கவனிக்கிறாள்.

பெரும்பாலான இரவுகள் ஜெனிபரின் வீட்டில்தான் வார்னர் தங்கினான்.

அவன் பக்கத்தில் படுத்துக் கொண்டு. அவன் சிறிது சிறிதாகத் தூக்கத்தில் ஆழ்வதைக் கவனித்த வண்ணம், எத்தனை நேரம் விழித்திருக்க முடியுமோ அத்தனை நேரம் விழித்திருந்தாள். அவனுடன் சேர்ந்திருக்கும் ஒவ்வொரு வினாடியும் அவளுக்கு ஒரு பொக்கிஷமாக இருந்தது. இந்த வினாடிகளை எங்கே இழந்து விடுவோமோ என்று நடுங்கினாள் இமைகளைத் திறந்துவைத்திருப்பது இனி மேல் முடியவே முடியாது என்ற அளவுக்குத் தூக்கம் கண்ணை அழுத்தும்போது அவனுடைய கைகளுக்குள் சுருண்டு பதுங்கிக் கொள்வாள். பத்திரமாக இருக்கிறோம் என்ற உணர்வோடு தூங்கிப் போவாள்.

வார்னரின் ஷர்ட்டை மாட்டிக் கொண்டு வீட்டுக்குள் வளைய வருவது அவளுக்கு ஆனந்தமாயிருந்தது. இரவு வேளைகளில் அவனுடைய பைஜாமாவை மாட்டிக் கொள்வாள். காலையில் அவன் முன்னதாக எழுந்து சென்று விட்டால், படுக்கையில் அவன் படுத்திருந்த இடத்துக்கு நகர்ந்து கொண்டு, அவனுடைய கதகதப்பான மணத்தை நுகர்ந்து மகிழ்வாள்.

பாபுலரான காதல் பாட்டுக்களைக் கேட்கும் போதெல்லாம் அது தனக்கும் வார்னருக்காகவுமே எழுதப்பட்ட மாதிரி இருந்தது அவளுக்கு. மலிவு ரகமான பாட்டுக்குக்கூட மகத்தான சக்தி உண்டு என்று யாரோ சொன்னார்களே! எவ்வளவு உண்மை!

தங்களுக்குள் உடலால் ஏற்பட்டுள்ள கவர்ச்சி, நாளாக நாளாகத் தேய்ந்து விடும் என்று ஜெனிபர் முதலில் நினைத்திருந்தாள். மாறாக, நாளுக்கு நாள் அது வலுப் பட்டுக் கொண்டிருந்தது.

எந்த மனிதருடனும் பேசியிராத விஷயங்களை யெல்லாம் வார்னருடன் அவள் பேசினாள் தனக்கும் வார்னருக்கும் குறுக்கே எந்தத் திரையும் இருப்பதை அவள் விரும்பவில்லை. எந்த முகமூடியையும் மாட்டிக் கொள்ள அவளுக்குப் பிடிக்கவில்லை. நிர்வாணமான ஜெனிபராக இருக்கவே அவள் ஆசைப்பட்டாள்.

ஒவ்வொரு நாளும் அவன் மீது அவள் கொண்டிருந்த காதல் வளர்ந்து கொண்டே போயிற்று. ஆனால் இந்த நிலைமை விரைவில் ஒரு நாள் முடிந்துவிடும் என்பதையும் அறிந்திருந்தாள். அதனால் தான், வார்னருக்குப் பிடித்த ஒரு குறிப்பிட்ட பிராண்ட் காப்பியை வாங்கும் போது கூட, ஒவ்வொரு தடவையும் ஒரே ஒரு பாக்கெட்தான் வாங்கினாள்.

பலவிதமான அச்சங்கள் அவள் உள்ளத்தைப் பிறாண்டின. வெளியே போகும்போது அவனுக்கு ஏதாவது விபத்து நேர்ந்துவிடும் என்று பயந்தாள். பேப்பரைப் பார்த்துக் கொண்டிருப்போம், அந்தச் செய்தி கண்ணில் படும். டெலிவிஷன் பார்த்துக் கொண்டிருப்போம், அந்தச் செய்தியைச் சொல்வார்கள் இப்படியெல்லாம் கற்பனை செய்து கொண்டாள்

ஆனால் தன் அச்சங்களைப் பற்றி வார்னரிடம் சொன்னதேயில்லை.

சாயந்தரம் அவன் வருவதற்கு நேரமாகும் என்றால் வார்னர் அவளுக்கு ஒரு குறிப்பு எழுதி வைப்பது வழக்கம். ஆனால் அவள் சிறிதும் எதிர்பாராத இடத்தில் அதை வைப்பான் ரொட்டி வைத்திருக்கும் பாத்திரத்தில், ஃப்ரிஜ்ஜில், அவளுடைய செருப்புக்குள் இப்படி

வைத்திருப்பான். அந்தக் குறிப்புக்களைப் பார்க்கும் போது ஜெனிபருக்கு ஒரே வேடிக்கையாயிருக்கும். அவைகளை யெல்லாம் பத்திரமாகச் சேமித்து வைத்தாள்.

வார்னரும் அவளும் சேர்ந்து இருக்கும் நாட்கள் ஒருபுறம் முடிவை நெருங்க நெருங்க இன்னொரு புறம் ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சி அதிகரித்துக் கொண்டே போயிற்று.

இறுதியில் வார்னரின் மனைவி மேரி ஊரிலிருந்து திரும்பும் நாளும் நெருங்கிவிட்டது. விடிந்தால் அவள் வந்துவிடுவாள். இரவு ஜெனிபரின் வீட்டில் ஜெனிபரும் வார்னரும் சேர்ந்து உணவருந்தினார்கள். பாட்டுக் கேட்டார்கள் இரவு முழுவதும் அவனைத் தன் கைகளுக்குள் அணைத்தபடி விழித்தவாறே படுத்திருந் தாள் ஜெனிபர். இருவரும் கூட்டாக அனுபவித்த மகிழ்ச்சி களை அவள் உள்ளம் எண்ண மிட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் மறுநாள் காலை சிற்றுண்டியின்போது, வார்னர், "என்ன வேண்டுமானாலும் நேரட்டும், ஜெனிபர். ஒன்று சொல்கிறேன். நான் உண்மையாகக் காதலித்த ஒரே பெண் நீதான். நீ ஒருத்திதான்!" என்று சொன்னபோது தான் பிரியும் நேரம் வந்துவிட்ட போதுதான், அவளுக்கு உள்ளம் வலித்தது.

வலிக்கு ஒரே ஒரு மருந்துதான் இருந்தது: வேலை.

அலுவல்களில் தன்னை முற்ற முழுக்க மூழ்கடித்துக் கொண்டாள் ஜெனிபர். சிந்திப்பதற்கே நேரம் இல்லாதபடி செய்து கொண்டாள்.

பத்திரிகைகளுக்கு இப்போது அவளைப் பற்றிய செய்திகள் அல்வாத்துண்டு. நீதிமன்றங்களில் அவள் அடையும் வெற்றிகளைப் பத்திரிகைகள் பத்தி பத்தியாக வெளியிட்டன. அவளால் சமாளிக்க முடியாத அளவுக்குக் கட்சிக்காரர்கள் வந்தார்கள். கிரிமினல் வழக்குகளில் மட்டும்

அவளுக்கு அதிக ஈடுபாடு இருந்தது. என்றாலும், துப்பறியும் நிபுணர் கென்னத் எடுத்துச் சொன்னதன் பேரில் எல்லா வகையான வழக்குகளையும் ஏற்றுக் கொண்டாள்.

ஜெனிபரின் வேதனைகளை மறப்பதற்கு நீதி மன்றத்தைத்தான் அவள் தஞ்சம் அடைந்தாள்.

ஒவ்வொரு வழக்கும் ஒரு விளையாட்டுப் போட்டியாக இருந்தது. அந்த விளையாட்டுக்குத் திட்ட வட்டமான விதிகள் இருந்தன அதற்கு உட்பட்டு விளையாட வேண்டும். எவன் சிறந்த விளையாட்டு வீரனோ அவன் வெற்றி பெறுகிறான்.

வெற்றி பெறும் ஆட்டக்காரியாக இருக்கவே ஜெனிபர் விரும்பினாள்.

ஒரு வழக்கின் மொத்தப் போக்கு எப்படி இருக்க வேண்டும் என்பதை மட்டுமல்லாமல், வழக்கு நடக்கும் போது அன்றாடம் என்னென்ன உத்தியைக் கையாள வேண்டும் என்பதையும் ஜெனிபர் தெரிந்து வைத்திருந்தாள்.

பெரும்பாலான தீர்ப்புக்கள், வழக்கு ஆரம்பமாகு முன்னரே வழங்கப்பட்டு விடுகின்றன என்பதற்கு ஏற்ப அவள் முன்கூட்டியே தகுந்த ஆயத்தங்கள் செய்து கொள்வாள்.

விசாரணைகள் மாலை நாலு மணிக்கு முடிவடைவது வழக்கம். எந்தச் சாட்சியையாவது பிற்பகலில் குறுக்கு விசாரணை செய்ய நேரிட்டால், முதலில் சாதாரணக் கேள்விகளாகக் கேட்டு நேரத்தை இழுத்தடிப்பாள். நாலு மணிக்குச் சில நிமிடங்கள் இருக்கும்போது, சாட்சியின் மண்டையில் அடிக்கிற மாதிரி வலுவான கேள்விகளைக் கேட்பாள். ஜூரர்கள் வீடு திரும்பும்போது அந்தக் கேள்விகளும் பதில்களும் பசுமரத்தாணி போல் அவர்கள் மனத்தில் பதிந்திருக்கும். இரவு அதையே நினைத்துக் கொண்டிருப்பார்கள் மறுநாள் காலை கோர்ட்டுக்கு வரும்போது அதுதான் அவர்களுக்கு ஞாபகத்தில் இருக்கும்.

சாட்சி எப்படி நிற்கிறான், கைகாலை எப்படி வைத்துக் கொள்கிறான் என்பதைக் கொண்டு அவனைப் பற்றி ஊகித்துக் கொள்வாள்.

மோவாயைத் தடவிக் கொண்டாலோ, உதட்டை இறுக்கிக் கொண்டாலோ, தலையைத் தடவிக் கொண்டாலோ, காதை இழுத்துக் கொண்டாலோ, வாயைக் கையால் அடிக்கடி மூடிக் கொண்டாலோ அவன் பொய் சொல்கிறான் என்பதைத் தெரிந்து கொள்வாள், பிறகு அவனுக்குத் தகுந்த வலை விரித்துச் சிக்க வைத்து விடுவாள்.

14

மேரியைக் கல்யாணம் செய்து கொண்டது தப்பு என்று ஆரம்பத்திலிருந்தே வார்னருக்கு எண்ணம். ஒரே சமயத்தில் அப்பாவையும் அம்மாவையும் விமான விபத்தில் இழந்தவள் அவள். ஆகவே அவளிடம் ஒரு பரிதாபம் ஏற்பட்டு, இரக்கமில்லாத உலகத்தில் அவள் மாட்டிக் கொண்டு திண்டாடக் கூடாதே என்ற ஒரு திடீர் பரிவினால் தான் அவளை அவன் மணந்திருந்தான்.

மேரிக்கு ஒரு சிறு வருத்தம் ஏற்படக் கூட அவனுக்குப் பொறுக்காதுதான். ஆனால் ஜெனிபரிடம் மட்டற்ற காதல் ஏற்பட்டு விட்டதால், இனி என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

யாரிடமாவது இதைப் பற்றிப் பேசினால் தேவலை போலிருந்தது.

யாரிடம் பேசலாம்?

தன் நிறுவன அதிபர்தான் சரியான நபர் என்று தீர்மானித்தான் எப்போதும் அவனிடம் அனுதாபம் உள்ளவர் அவன் நிலைமையைப் புரிந்து கொள்வார்.

ஆனால் அவன் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்றாக இருந்தது. அலுவலகத்துக்குள் நுழைந்ததுமே அவர் "நினைத்தேன், வந்து விட்டாய். தேர்தல் கமிட்டியோடு போனில் இப்பத்தான் பேசிக் கொண்டிருந்தேன். பாராளு மன்றத் தேர்தலில் உன்னை நிறுத்தப் போகிறார்களாம். கட்சியில் உனக்கு ஏகமனதான ஆதரவு," என்றார்.

"வந்து..." என்று ஆரம்பித்தான்.

"இதோ பார், இனிமேல் நமக்கு மூச்சுவிட நேரமில்லை. ஏகப்பட்ட வேலை. எல்லா ஏற்பாடுகளையும் இப்போதே ஆரம்பித்தாக வேண்டும். முதலில் என்ன செய்யணும் என்றால்..." என்று அவர் உற்சாகமாகப் பேசிக் கொண்டே போனார்.

அடுத்த இரண்டு மணி நேரமும், தேர்தல் ஆயத்தங் களைப் பற்றிய விவாதத்திலேயே செலவழிந்து விட்டது. அது முடிந்தவுடன், வார்னர், "என் சொந்த விஷயம் ஒன்று உங்களுடன் பேச வேண்டும்," என்றான்.

"அடடே! ஒரு கட்சிக்காரர் காத்திருக்கிறாரே? நேரமாகி விட்டது," என்று சொல்லிவிட்டு எழுந்து விட்டார் அவர்.

தன் மனத்திலிருப்பதை அவர் ஏற்கனவே தெரிந்து வைத்திருக்கிறாரோ என்று வார்னருக்குத் தோன்றியது.

அன்று ஜெனிபரை ஒரு ரெஸ்டாரெண்டில் சந்திப்பதாக ஏற்பாடு.

ஓட்டலின் பின் பகுதியில் அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்.

அவளைப் பார்த்ததுமே, அவனுக்குள் ஒரு புத்துணர்ச்சி.

அதேபோல், அவன் முகத்தைப் பார்த்ததுமே ஏதோ விசேஷம் இருக்கிறது என்று அவளும் கண்டு கொண்டாள்.

"ஜெனிபர், உனக்கு ஒரு நியூஸ்!" என்றான் அவன். "என்னைப் பாராளுமன்றத் தேர்தலில் நிறுத்தப் போகிறார்கள்."

ஜில்லென்று ஒரு பரவசம் நிரம்பியது அவள் இதயத்தில்.

"எவ்வளவு இனிப்பான நியூஸ்! பார்த்துக் கொண்டேயிருங்கள் நீங்கள் கட்டாயம் ஜெயிக்கப் போகிறீர்கள்."

"போட்டி ரொம்பக் கடுமையாக இருக்கும்," என்றான் அவன்.

"இருக்கட்டுமே? உங்களை யாராலும் தோற்கடிக்க முடியாதாக்கும்!" என்றாள் ஜெனிபர். சும்மா நுனி நாக்கால் அதைச் சொல்லவில்லை. உள்ளத்தின் ஆழத்திலிருந்து சொன்னாள். வார்னர் ஜெயிப்பதில் சந்தேகமென்ன? புத்தி கூர்மையுள்ளவன். தைரியசாலி. தான் நம்பும் கொள்கை களுக்காகப் போராடத் தயங்காதவன்.

வக்கீல் தொழிலிலிருந்து அவளை நீக்கக் கூடா தென்று போராடி நியாயத்தை நிலை நிறுத்தியவனாயிற்றே!

ஆர்வத்துடன் அவன் கையைப் பற்றிக் கொண்டாள். "உங்களை நினைத்தால் எனக்கு எவ்வளவு பெருமையா யிருக்கிறது, தெரியுமா?"

"இரு, இரு. இன்னும் நான் ஜெயித்து விடவில்லை. கைக்கும் வாய்க்கும் நடுவே ஏகப்பட்ட இடை வெளி உண்டு. கேள்விப்பட்டிருக்கிறாய் இல்லையா?"

"நீங்கள் ஜெயித்தாலும் தோற்றாலும் உங்களைப் பற்றி எனக்குப் பெருமைதான். என் காதல் அதனால் குறைந்து விடாது. தேர்தல் பிரசாரம் எப்போது ஆரம்பிப்பீர்கள்?"

"நான் போட்டியிடப் போவதை இப்போதே அறிவித்துவிட வேண்டும் என்கிறார்கள் கட்சியில் ஒருமனதாக எனக்கு ஆதரவு இருக்கிறது."

"அப்புறமென்ன! அட்டகாசம் தான்!" என்றாள் ஜெனிபர்.

வாய் அப்படிச் சொல்லியதே தவிர, அவள் மனத்தின் அடித்தளத்தில் ஓர் உறுத்தல் ஏற்பட்டிருந்தது. இன்றில்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள் அந்தப் பிரசினையை எதிர் நோக்கத்தான் வேண்டியிருக்கும்.

வார்னர் ஜெயிக்க வேண்டும் என்றுதான் அவள் ஆசைப்பட்டாள். ஆனால் அவள் கழுத்துக்குக் கத்தியாக அது தொங்கப் போகிறது. அவன் ஜெயித்த வினாடியே அவள் அவனை மறந்துவிட வேண்டியதுதான். பெரிய பதவிக்கு வந்த பிறகு வார்னரின் வாழ்க்கையில் கிசுகிசுக்கள், அவதூறுகள் இருக்கக் கூடாது. அவன் கல்யாணமானவன். கௌரவமாக வாழ்க்கை நடத்துகிறவன். ஒரு கள்ளக் காதலி அவனுக்கு இருக்கிறாள் என்று செய்தி பரவினால் அவனுடைய அரசியல் வாழ்க்கை அஸ்தமனமாகி விடும்.

வார்னரைக் காதலிக்க ஆரம்பித்த பிறகு முதல் தடவையாக அன்று இரவு ஜெனிபர் தூக்கமின்றித் தவித்தாள். ராத்திரி பூரா படுக்கையில் புரண்டு கொண்டேயிருந்தாள்

அன்று நியூயார்க் டைம்ஸ் முதல் பக்கத்தில் இரண்டு செய்திகள் அருகருகே வெளியாகியிருந்தன.

ஒன்று, ஒரு பணக்காரச் சீமாட்டியின் வழக்கில் ஜெனிபர் ஜெயித்ததைப் பற்றியது. கணவனைக் கொலை செய்தவள் என்று பொய் சொல்லி அவளைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைத்து வைத்திருந்தார்கள். அவளுடைய சொத்தை அபகரிப்பதற்காக உறவினர்கள் செய்த சூழ்ச்சி அது என்று நிரூபித்து அவளுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்திருந்தாள் ஜெனிபர்.

அந்தச் செய்திக்குப் பக்கத்தில் இன்னொரு செய்தி பிரசுரமாகியிருந்தது: வார்னர் பாராளுமன்றத்துக்குப்

போட்டியிடப் போகும் செய்தி. கூடவே வார்னரின் வாழ்க்கை பற்றிய கட்டுரையும் இருந்தது.

அதைத் திரும்பத் திரும்பப் படித்தாள் ஜெனிபர். வியட்நாம் யுத்தத்தின்போது வார்னர் விமான ஓட்டியாக இருந்தது; தீரச் செயல்களுக்காகப் பதக்கம் வாங்கியது; பாராளுமன்றத்துக்கும் தேசத்துக்கும் அவன் ஒரு பொக்கிஷமாக விளங்குவான் என்று பெரும் புள்ளிகள் பலரின் கருத்து...

கட்டுரையின் முடிவில் ஒரு முக்கியமான விஷயம் இருந்தது.

வார்னர் ஜெயித்து விட்டால், அடுத்த ஜனாதிபதி யாகவும் வரக் கூடுமாம்.

ஜெனிபரின் உள்ளம் ஒருபுறம் மகிழ்ச்சியில் பூரித்தது. மறுபுறம் சோகத்தில் கும்பியது.

பயங்கரக் கும்பலின் தலைவரான அன்ட்டோனி யாவின் பண்ணை வீடு. அவர் தலைவர் மட்டுமல்ல, மாரெட்டியின் மாமனாரும் கூட.

அவருடன் காலையுணவை அருந்தியபடி பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான் மாரெட்டி. ஜெனிபரின் வெற்றியைப் பற்றிச் செய்தி வெளியாகியிருந்ததைக் கூர்ந்து படித்தவன், மாமனாரை நிமிர்ந்து நோக்கி, "அந்தப் பெண் மறுபடியும் ஜெயித்திருக்கிறாள்," என்றான்.

அன்ட்டோனியோ தேக்கரண்டியால் கோப்பையைக் கலக்கியபடி கேட்டார்: "எந்தப் பெண்? என்ன ஜெயித் திருக்கிறாள்?"

"அந்த வக்கீல் ஜெனிபரைச் சொல்கிறேன் ஜெயிக்கிறதுக்கே பிறந்தவள் வெற்றி தண்ணி பட்ட பாடாயிருக்கிறது அவளுக்கு."

அன்ட்டோனியோ சூள் கொட்டினார். "இந்தப் பெண் வக்கீல்களின் சங்காத்தமே கூடாது. பொதுவாகவே

பெண்கள் பலவீனமானவர்கள். எந்தச் சமயத்தில் என்ன செய்து தொலைப்பார்களோ சொல்ல முடியாது."

மாமனாரின் மனநிலை புரிந்ததும் மாரெட்டி உஷாரானான். "ஆமாமாம். நீங்கள் சொல்வது சரிதான். பெண்களை நம்ப முடியாது."

கிழவரைப் பகைத்துக் கொள்வது ஆபத்து என்று அவனுக்குத் தெரியும். அபாயமான ஆள் இவர். ஆனால் எத்தனை நாளைக்கு! அதிக காலம் உயிரோடிருக்கப் போவதில்லை. அடிக்கடி உடம்புக்கு ஏதாவது வருகிறது. படுத்து விடுகிறார் கைகளில் எப்போதும் நடுக்கம். பேசுவதற்குக் கஷ்டப்படுகிறார். கைத்தடி இல்லாமல் நடக்க முடிய வில்லை சருகு மாதிரி தோல் சுருங்கி, வெளுத்துக் கொண்டிருக்கிறது.

மிகப் பெரிய குற்றவாளிகள் பட்டியலில் முதல் இடத்தைப் பெற்றிருக்கும் நபரா இவர்! இவருடைய பெயரைக் கேட்டாலே பயங்கரக் கும்பலில் அத்தனை பேருக்கும் குளிர் இவரால் இறக்க நேரிட்டவர்களின் மனைவிமார்கள் எத்தனை வயிறெரிந்து சாபமிட்டிருப் பார்கள்!

ஆனால் அதெல்லாம் ஒரு காலம். இப்போது பல் பிடுங்கப்பட்ட புலி. பயங்கரக் கும்பலைச் சேர்ந்தவர்கள் எந்த விஷயத்துக்கும் இவரை அணுகுவதில்லை. மாரெட்டி யிடமோ வழக்கறிஞர் கால்ஃபாகஸிடமோ தான் போகிறார்கள்.

அன்ட்டோனியோவின் அடுத்த வாரிசு மாரெட்டி தான் என்று பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லையே தவிர, மற்றுப்படி எல்லாரும் ஒப்புக் கொண்ட விஷயம்.

மாமனாரை மறுபடி பார்த்தான் மாரெட்டி. 'இன்னும் கொஞ்ச நாள் தான்' என்று எண்ணிக் கொண்டான் பொறுமையாக இருப்பதால் நஷ்டமொன்றுமில்லை. இவ்வளவு காலம் காத்திருந்தாயிற்றே?

தன் பிறப்பையும் வளர்ப்பையும் அவன் எப்போதும் மறந்ததில்லை. சின்னப்பையனாக, நோஞ்சானாக, நியூயார்க் பயங்கரக் கும்பல் 'தலைவர்'களின் முன்னால் பயந்து கொண்டு நின்றதும்; ஒரு துண்டுக் காகிதத்தைக் கொளுத்திக் கையில் பிடித்துக்கொண்டு. "நமது ரகசியங்களைக் காப்பேன். நமது கூட்டத்துக்குத் துரோகம் செய்தேனானால் இந்தக் காகிதம் எரிகிற மாதிரியே நானும் எரிந்து போவேனாக!" என்று பிரமாணம் எடுத்துக் கொண்டதும்...

எல்லாம் நினைவு இருக்கிறது.

மாமனாரிடம் மெதுவாகச் சொன்னான்: இந்த ஜெனிபரிடம் ஏதாவது சில்லறை கேஸ்களைக் கொடுக்கலாம் என்று தோன்றுகிறது. எப்படி வேலை செய்கிறாள் என்று பார்க்கலாமா?"

அன்ட்டோனியோவுக்கு அது சம்மதமில்லை. "ஜாக்கிர தையாயிரு. நமது ரகசியங்கள் அன்னியர்களுக்குத் தெரிவது எனக்குப் பிடிக்காது."

"அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்." என்றான் மாரெட்டி.

அன்றே ஜெனிபருக்குப் போன் செய்தான்.

மாரெட்டி கூப்பிடுகிறான் என்று செக்ரட்டரி வந்து சொன்னபோது

குபுக்கென்று ஏராளமான நினைவுகள் ஜெனிபரின் மனத்தில் முட்டி மோதிக் கொண்டு புறப்பட்டன. அத்தனையும் கசப்பான நினைவுகள்.

எதற்காகக் கூப்பிடுகிறான்? அவளால் ஊகிக்க முடியவில்லை.

டெலிபோனை எடுத்தாள் "என்ன வேணும் உங்களுக்கு?" என்றாள்

அந்தக் குரலில் தொனித்த கடுமை! மாரெட்டி அசந்து போனான். "உங்களைப் பார்க்க வேண்டும். நாம் நேரில் சந்தித்துக் கொஞ்சம் பேசினால் நல்லது."

"எதைப் பற்றிப் பேசவேண்டும்?"

"அதை டெலிபோனில் சொல்லவேண்டாமென்று பார்க்கிறேன். ஒன்று மட்டும் சொல்வேன்: நம் சந்திப்பினால் உங்களுக்குத்தான் ரொம்ப நன்மை இருக்கும்."

ஜெனிபர் அமைதியாகப் பதிலளித்தாள்: "மிஸ்டர் மாரெட்டி. நானும் ஒன்று சொல்வேன்: கேட்டுக் கொள்ளுங்கள் நீங்கள் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அதில் எனக்குக் கடுகத்தனை அக்கறையும் கிடையாது." டெலிபோனை படக்கென்று வைத்து விட்டாள்.

உயிரற்று விட்ட டெலிபோனைக் கையில் பிடித்தபடி வெகுநேரம் உட்கார்ந்திருந்தான் மாரெட்டி.

அவன் உள்ளத்தினுள் என்னென்னவோ எண்ணங்கள் அலைமோதின. ஆனால் கோபம் மட்டும் ஏற்படவில்லை.

ஒரு பெண் இப்படிப் பேசிவிட்டாளே நம்மிடம்! அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பெண்ணைப் பந்தாடியே அவனுக்குப் பழக்கம். அவனுடைய வசீகரமான தோற்றமும் தயவு தாட்சண்யமற்ற போக்கும் எவ்வளவோ பெண்களை அவன் காலடியில் கிடத்தியதுண்டு.

ஆனால் உள்ளூர அவனுக்குப் பெண்களைப் பிடிக்காது. பயந்தாங்கொள்ளிகள். கோழைகள், துணிச்சல் இல்லாத வர்கள் என்று பெண்களின் மீது வெறுப்பு.

முக்கியமாக அவன் மனைவி!

சொன்னால் சொன்னபடி செய்யும் நாய்க் குட்டி அத்தோடு சரி. அவனுடைய வீட்டைப் பார்த்துக்

கொள்கிறாள். அவனுக்குச் சமைத்துப் போடுகிறாள். படு என்றால் படுத்துக் கொள்கிறாள். வாயை மூடு என்றால் மூடிக் கொள்கிறாள்.

சே! துணிச்சலான பெண் என்று யாருமே கிடையாதா உலகத்தில்! அவனை எதிர்த்து நிற்கக்கூடிய, மறுத்துப் போகக்கூடிய, பெண் எவளுமே கிடையாதா?

இந்த ஜெனிபர்தான் முதல் பெண் - டெலிபோனைப் படக்கென்று வைத்துவிட்ட பெண்.

அவள் பேசியதை நினைத்துப் பார்த்துக் கொண்டான் மாரெட்டி.

என்ன சொன்னாள்? 'நீ என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அதில் எனக்குக் கடுகத்தனை அக்கறையும் கிடையாது!' என்றா?

அவன் உதட்டில் புன்னகை பூத்தது.

ஜெனிபர்! நீ சொன்னது தப்பும்மா, தப்பு. எவ்வளவு பெரிய தப்பென்று கூடிய சீக்கிரம் காட்டுகிறேன் பார்!

நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு. அன்று கோர்ட்டில் அவள் எப்படித் தோற்றமளித்தாள் என்பதை ஞாபகப்படுத்தி கொண்டான். அவள் முகம், அவள் உடம்பு எல்லாம் கண்முன் வந்து நின்றன.

படுக்கையில் அவள் எப்படி நடந்து கொள்வாள்? கற்பனை செய்து பார்த்தான்.

சரியான காட்டுக் குதிரையாக இருப்பாள். அவன் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

ஜெனிபரின் அலுவலகத்தில் இடைவேளை வெளியே போய்ச் சாப்பிட்டு விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள்.

தெருவைக் கடக்கும் சமயம்-

திடீரென்று ஒரு லாரி அவளை உராய்ந்தாற்போல் தாண்டிச் சென்றது.

கிறீச்சென்று பிரேக் போட்டான் டிரைவர். லாரியின் பின் பகுதி ஆடியது. மயிரிழை தவறியிருந்தால் அவள் மீது இடித்திருக்கும்.

டிரைவர் கத்தினான்: "இந்தாம்மா, கண்ணைத் திறந்துகிட்டு தெருவில் நட!"

ஜெனிபருக்கு அவன் சொன்னது காதில் விழவில்லை.

லாரியின் பின்புறத்தையே பார்த்த வண்ணம் நின்றாள் அதில் லாரிக் கம்பெனியின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

'நேஷன்வைட் மோட்டார் கார்ப்பரேஷன்.'

லாரி போய்விட்டது.

கண் பார்வையிலிருந்து அவன் மறைந்த பின்னும் ஜெனிபர் அங்கேயே நின்றிருந்தாள்.

'நேஷன்வைட் மோட்டார் கார்ப்பரேஷன்!'

அவளுக்கு நினைவு வந்தது.

கானியைக் கையும் காலும் இல்லாத பெண்ணாக ஆக்கியது இந்தக் கம்பெனியைச் சேர்ந்த லாரிதான்.

15

தொலைவில் மறைந்து கொண்டிருந்த லாரியையே பார்த்த வண்ணம் அசைவற்று நின்றாள் ஜெனிபர்.

பரபரப்பாக அலுவலகத்துக்குத் திரும்பினாள் உள்ளே நுழைந்ததுமே அவள் கேட்ட முதல் கேள்வி: "கென்னத் வந்திருக்கிறாரா?" என்பதுதான்

"வந்திருக்கிறார். அவருடைய அறையில் இருக்கிறார்; என்றாள் செக்ரட்டரி.

துப்பறியும் நிபுணரின் அறைக்கு விரைந்தாள்.

"கென்னத், நீங்கள் உடனடியாய் ஒரு காரியத்தைக் கவனிக்க வேண்டும். நேஷன்வைட் மோட்டார் கார்ப் பரேஷன் என்று ஒரு லாரிக் கம்பெனி இருக்கிறது. அதைப்பற்றிய தகவல்கள் எனக்கு அவசரமாய்த் தேவை. முக்கியமாக, இந்த ஐந்து வருஷங்களில் அந்தக் கம்பெனியின் லாரிகள் எங்கெங்கே என்னென்ன விபத்துக் குள்ளாகியிருக்கிறது என்ற விவரம் தெரிய வேண்டும். என்ன?"

கென்னத் தயங்கினார்.

"கொஞ்சம் டயம் பிடிக்குமே பரவாயில்லையா?"

"ஊகூம். டயம் கியமெல்லாம் கொடுக்க மாட்டேன். சாலை விபத்து சம்பந்தமான வழக்கு விவரங்களைக் கம்ப்யூட்டரில் கண்டுபிடிக்கலாமே?" என்றாள் ஜெனிபர்.

"சரி. செய்கிறேன். ஆனால் என்ன விஷயம்? எனக்குச் சொல்ல கூடாதா?"

"எனக்கே இன்னும் திட்டவட்டமாகத் தெரிய வில்லை. ஏதோ ஓர் ஊகம்தான். நீங்கள் கண்டுபிடித்த விவரங்களை வைத்துத்தான் என் அபிப்பிராயம் சரியா தப்பா என்பது தெரியவேண்டும். தெரிந்ததும் சொல் கிறேன்" என்றாள் ஜெனிபர்.

அவள் எண்ணமெல்லாம் கானியைப் பற்றியே இருந்தன.

கையும் காலுமில்லாமல், ஒரு கோரப் பிறவியாக ஆயுள் மொத்தத்தையும் கிடத்தினால் கிடத்தியபடியே கழிக்க வேண்டியவளாகிவிட்டாள். அதுவும் இந்த இளம் வயதில்.

அப்படிப்பட்ட பெண்ணின் வழக்கில் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனிக்காமல் இருந்து விட்டோமே என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

கானி மீது மோதிய லாரி? லாரி டிரைவர் தப்புச் செய்யாதவனாக இருந்திருக்கலாம். எந்த விபத்தும் ஏற்படுத்தியிராத கெட்டிக்காரனாக இருந்திருக்கலாம்.

ஆனால் லாரி? அது எப்படிப் பட்டது? லாரியின் அமைப்பில் பழுது இருந்திருக்குமானால் கம்பெனியைப் பிடித்துக் கொள்ளலாமே?

மறுநாள் காலையிலேயே ஜெனிபர் கேட்ட விவரங்களைக் கொண்டு வந்து தந்து விட்டார் கென்னத். காகிதங்களை அவள் முன்னே வைத்தார். "ஜெனிபர், நீ எதற்காக இந்த விவரங்களைக் கேட்டாயோ தெரியாது. ஆனால் அடித்தாலும் அடித்தாய் சரியான ஜாக்பாட்தான் அடித்திருக்கிறாய். இந்த நேஷன்வைட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான லாரிகள் சென்ற ஐந்து வருடத்தில் மொத்தம் பதினைந்து விபத்தில் மாட்டிக் கொண்டிருக்கின்றன. சில லாரிகளை உபயோகமற்றது என்று காயலான் கடைக்குகூடப் போட்டு விட்டார்கள்."

ஜெனிபரின் உள்ளத்துக்குள் ஒரு படபடப்பு பிறந்தது. "அவர்கள் லாரியில் என்ன கோளாறு?"

"எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரு கோளாறு அவர்கள் லாரிகளிலே பிரேக் அமைப்பு சரியாயில்லை. ஸடன் பிரேக் போட்டால் லாரியின் பின்பகுதி ஒரு ஆட்டம் ஆடிவிட்டுத்தான் நிற்கிறதாம். அப்போது எதன்மீதாவது இடித்து விபத்து நேரிடுகிறது."

ஜெனிபரின் முகம் மலர்ந்தது.

கானியை மோதியது லாரியின் பின்பகுதிதான் அதுவும் திடீர் பிரேக் போட்டபோதுதான்

தனது இரண்டு ஜூனியர்களையும் அழைத்தாள். கென்னத்தையும் இருக்கச் சொன்னாள் அவர்களிடம் அறிவித்தாள். "கானிக்காக மறுபடி வழக்குத் தொடுக்கப் போகிறோம்."

ஜூனியர்களில் ஒருவன் தன் சோடா புட்டிக் கண்ணாடி வழியே அவளை நோக்கி, "சட்டப்படி அது முடியாதம்மா," என்றான்.

கென்னத் திகைத்தார். "ஏன் முடியாது?"

ஜூனியர் விளக்கினான்: "ஏற்கெனவே கானி வழக்குத் தொடுத்து அப்பீலும் செய்து தோற்று விட்டாள். திட்ட வட்டமாகத் தீர்ப்பாகிவிட்டது. எந்த வழக்கும் ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும். நீட்டிக் கொண்டே போகக் கூடாது. அந்த அடிப்படையில் இந்த வழக்கை நாம் மறுபடி ஆரம்பிக்க முடியாது. அதற்கு ஏதாவது அசாதாரணமான காரணம் இருந்தாக வேண்டும். அப்படிப் புதிதாக என்ன காரணம் நம்மிடம் இருக்கிறது?"

ஜெனிபர் புன்னகை செய்து, "இருக்கிறது," என்றாள். "ஒரு வழக்கு நடைபெறும்போது அது சம்பந்தமான எந்த உண்மையையும் மறைக்கக்கூடாது என்பது சட்டம். ஆனால் இதிலே மறைத்திருக்கிறார்கள். நேஷன்வைட் மோட்டார் கார்ப்பரேஷனின் லாரிகளில் பிரேக் அமைப்பு சரியாயில்லை. அந்த உண்மையை மறைத்திருக்கிறார்கள் அதைக் காரணம் காட்டி நாம் மறுபடி வழக்கைத் தொடர முடியும்."

இரண்டு ஜூனியர்களும் அவளை வியப்புடன் பார்த்தார்கள். ஜெனிபர் அமைதியாக, "அடுத்து நாம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை யோசிப்போம்," என்றாள்.

இரண்டு மணி நேரம் கழித்து -

கானியின் வீட்டில் இருந்தாள் ஜெனிபர்.

"உனக்காகப் புதிதாக வழக்குத் தொடுக்கப் போகிறேன்," என்று அவள் சொன்னதைக் கேட்டு -

கானி சந்தோஷப்பட வில்லை.

"வேண்டாம் ஜெனிபர். என்னால் மறுபடியும் வழக்கு, கோர்ட், விசாரணை என்றெல்லாம் நரகவேதனை அனுபவிக்க முடியாது. விட்டு விடுங்கள்," என்றாள்.

"கானி, நான் என்ன சொல்கிறேன் என்றால் -"

"ஜெனிபர், என்னை நன்றாகப் பாருங்கள். நான் ஒரு கோர சொரூபம். கண்ணாடியில் என்னைப் பார்த்துக் கொள்ளும்போதெல்லாம் ஏன்தான் இந்த உயிரை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறோமோ என்று நினைத்துக் கொள்கிறேன். ஜெனிபர், நான் ஏன் தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கிறேன் தெரியுமா?" அவள் குரல் உடைந்தது. "ஏனென்றால்.. ஏனென்றால் நானிருக்கும் நிலைமையில் என்னால் தற்கொலையும் செய்து கொள்ள முடியாது. என்னால் முடியாது ஜெனிபர், என்னால் முடியாது!"

மண்டையில் அடிவிழுந்த மாதிரி ஜெனிபர் ஆடிப் போய்விட்டாள். சே! நாம் இன்னும் கொஞ்சம் நாசூக் காகப் பேச்சை ஆரம்பித்திருக்கலாமோ...

"சரி, கானி. கோர்ட்டுக்குப் போகாமல் வேறே ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கிறேன். நம் கேஸ் பலமாக இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டபிறகு அவர்கள் ஒரு வேளை கோர்ட்டுக்குப் போகாமலேயே ராஜி பண்ணிக் கொள்ள வந்தாலும் வருவார்கள்," என்றாள்.

தேஷன்வைட் மோட்டார் கார்ப்பரேஷனின் வக்கீலுடைய அலுவலகம் பளபளப்பான நவீன கட்டடத்தில் இருந்தது. முன்புறம் ஒரு நீருற்றுப் பீரிட்டுக் கொண்டிருந்தது.

அவர்களுடைய வக்கீல், பார்ப்பதற்குக் கறார் கண்டிப்பு நபராக இருந்தார். எதையும் கவனிக்கத் தவறாத கூர்மையான கண்கள்.

ஜெனிபரை உட்காரச் சொன்னார். "உங்களைப் பார்த்ததில் சந்தோஷம். கொஞ்ச நாளாய் உங்களுக்கு நல்ல பெயரும் புகழும் ஏற்பட்டிருக்கிறது. இல்லையா?" என்றார்.

"ஏதோ சுமாராய்," என்றாள் ஜெனிபர்.

"உங்களை ரொம்ப முரட்டுப் பெண்ணென்று சொன்னார்கள். பார்த்தால் அப்படித் தெரியவில்லையே?"

"உண்மையில் நான் அப்படியில்லை."

"காப்பி சாப்பிடுகிறீர்களா? அல்லது வேறே ஏதாவது?"

"காப்பியே போதும்," என்று ஜெனிபர் சொன்னதும், அவர் மணியை அழுத்தினார். பளபளவென்ற வெள்ளித் தட்டில் இரண்டு கோப்பை காப்பி கொண்டு வந்தான் வேலையாள்.

"ஏதோ காரியமாய் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?" என்றார் அவர்.

"கானி வழக்கு சம்பந்தமாய்ப் பேச வந்திருக்கிறேன்."

"ஓ, அதுவா?" என்று யோசிக்கிற மாதிரி பேசினார். "கேஸ் நடந்து அப்பீல் கூடத் தோற்று விட்டதாய் ஞாபகம்..."

ஞாபகமாம்! அழுத்தக்கார மனுஷன்! அந்த வழக்கின் அத்தனை புள்ளி விவரத்தையும் ஒப்பிக்கக் கூடியவர், 'ஞாபகம்' என்று பாசாங்கு பண்ணுகிறார்!

"வழக்கை மறுபடி விசாரிக்க வேண்டும் என்று மனுச் செய்யப் போகிறேன்," என்றாள் அழுத்தமாக.

"அப்படியா! என்ன ஆதாரத்தில்?" என்று பணிவோடு கேட்டார் அவர்.

ஜெனிபர் தன் பெட்டியைத் திறந்தாள் தான் தயாரித்துள்ள மனுவை வெளியே எடுத்தாள், அவரிடம் கொடுத்தாள். "உண்மையைச் சொல்லாமல் மறைத்தீர்கள் என்ற அடிப்படையில் கேஸ் போடப் போகிறோம்," என்றாள்.

அதைக் கேட்டு அவர் திடுக்கிட்டுவிடவில்லை. அலட்டிக் கொள்ளாமல் அந்தக் காகிதங்களைப் பார்வை யிட்டார். "ஓகோ, அந்தப் பிரேக் சமாசாரமா?" என்றார்.

"அப்படியானால் ஏற்கெனவே உங்களுக்கு இது தெரிந்த விஷயம்தானா?"

"பின்னே தெரியாமலா இருக்கும்?" விரல்களால் மேஜைமீது மெல்லத் தாளமிட்டார் அவர். "மிஸ் ஜெனிபர், இந்தப் பிரேக் சமாசாரத்தை வைத்துக் கொண்டு உங்களால் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்கள்? விபத்து ஏற்படுத்திய அந்தக் குறிப்பிட்ட லாரியில் பிரேக் அமைப்பு சரியா இருக்கவில்லை என்று நீங்கள் முதலில் நிரூபித்தாக வேண்டும். அது நடக்கிற காரியமா? அந்த விபத்துக்குப் பிறகு இதுவரை டஜன் தடவை அந்த லாரியை 'ஓவரால்' செய்திருப்பார்கள். ஆகவே விபத்து சமயத்தில் அதன் பிரேக் எப்படி இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு வழியே இல்லை." ஃபைலை ஜெனிபரின் பக்கம் தள்ளினார் அவர். "ஊகூம் நீங்கள் வழக்குப் போட எந்த முகாந்திரமும் இல்லை."

ஜெனிபர் காப்பியை ஒருவாய் உறிஞ்சினாள். "அந்தக் குறிப்பிட்ட லாரி தான் வேண்டுமென்பதில்லை. அந்தக் கம்பெனியின் லாரிகள் பொதுவாகவே பாதுகாப்பானவை அல்ல என்று நான் நிரூபித்தாலே போதும். உங்கள் எல்லா லாரிகளிலுமே பிரேக் சரியில்லை என்பது உங்கள் கம்பெனிக்கே தெரிந்து இருக்குமே?"

சாதாரணமாய்க் கேட்கிற மாதிரி அவர் கேட்டார். "சரி, நீங்கள் என்ன கேட்பதாக இருக்கிறீர்கள்?"

"சொல்லுகிறேன் கேளுங்கள் என் கட்சிக்காரி இருபத்திரண்டு வயதுப் பெண். உங்கள் லாரி மோதியதால் அவளுக்குக் கையும் காலும் போய் விட்டது. ஆயுள் பூராவும் ஒரே இடத்தில் அடைபட்டுக் கிடக்க வேண்டியவளாகி விட்டாள். அவளுடைய கஷ்டத்துக்கு ஓரளவேனும் ஈடு செய்யும்படி கேட்கப்போகிறேன்."

அவர் காப்பியை உறிஞ்சியபடியே கேட்டார்: "ஈடு என்றால் எவ்வளவு?"

"இருபது லட்சம் டாலர்."

அவர் புன்னகை செய்தார் "அடேயப்பா! கேஸ் போட முகாந்தரமே இல்லை என்கிறேன் நான். எவ்வளவு பெரிய தொகை நீங்கள் கேட்கிறீர்கள்!"

"முகாந்தரம் இருக்கிறதா இல்லையா என்பது கோர்ட்டுக்குப் போனால் தெரிந்துவிடும். கோர்ட்டில் இன்னும் பெரிய தொகைகூட வாங்க முடியும் என்னால். அப்படியொரு வாய்ப்பு ஏற்பட்டால், ஐம்பது லட்சம் கேட்பேன்."

சிரித்தபடி சொன்னார் அவர்: "என் தலை சுற்றுகிறது! காப்பி இன்னொருக் கப் சாப்பிடுகிறீர்களா?"

"போதும், தாங்ஸ்." ஜெனிபர் எழுந்து கொண்டாள்.

"பொறுங்கள். உட்காருங்கள்." என்றார் அவர். "நான் முடியாது என்று சொல்லவில்லையே?"

"ஆனால் சரியென்றும் சொல்லவில்லையே?" என்றாள் ஜெனிபர்.

"இன்னும் கொஞ்சம் காப்பி சாப்பிடுங்கள். எங்கள் கம்பெனியிலேயே தயாரிக்கிற காப்பியாக்கும். அருமையாக இருக்கும்."

ஜெனிபர் உட்கார்ந்தாள்.

அவர் சொன்னார்: "யோசனை பண்ணிப் பாருங்கள். இருபது லட்சம் டாலர் என்பது ரொம்பப் பெரிய தொகை இல்லையா?"

மனிதர் இறங்கி வருகிறார் என்று ஜெனிபருக்குத் தெரிந்தது. குறுக்கிட்டு எதுவும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

அவர் தொடர்ந்தார்: "தொகை சின்னதாக இருந்தால் ஒருவேளை நான் ஏதாவது செய்ய முடிந்தாலும் முடியும்." உள்ளங்கைகளை விரித்துப் பார்த்தபடி பேசினார். மனத்துக்குள் ஏதோ கணக்குப் போடுகிறாரென்று புரிந்தது.

ஜெனிபர் அப்போதும் பேசாமலேயே இருந்தாள்.

இறுதியாய் அவர், "நீங்கள் நிஜமாகவே இருபது லட்சம் கேட்கிறீர்களா?" என்றார்.

"நான் நிஜமாகக் கேட்க விரும்புவது ஐம்பது லட்சம்." என்றாள் ஜெனிபர் அழுத்தமாக.

"நான் நாளைக் காலை லண்டன் போகிறேன். அடுத்த வாரம் திரும்பி வந்ததும் கவனிக்கிறேன்," என்றார் அவர்.

"விவகாரத்தைச் சீக்கிரமே முடிப்பது நல்லது," என்றாள் ஜெனிபர் "உங்கள் கட்சிக்காரரிடம் பேசி விரைவாக ஒரு முடிவு செய்யுங்கள். என் கட்சிக்காரிக்கு அடுத்த வாரம் பணம் வாங்கிக் கொடுத்து விடலாமென்று பார்க்கிறேன்."

சரியென்று தலையசைத்தார் அவர். "அதற்கென்ன, ஏற்பாடு செய்து விடலாம்."

ஜெனிபர் விடைபெற்றுக் கொண்டு தன் அலுவலகத்துக்குத் திரும்பினாள்.

வழியெல்லாம் மனத்தில் ஏதோ ஒரு குடைச்சல்.

விஷயம் இவ்வளவு சுலபமாக முடிந்து விட்டதே? எப்படி? ஏன்? நம்புகிற மாதிரியா இருக்கிறது?

அன்று மறுபடி அந்த வக்கீலைச் சந்திப்பதாக இருந்தது. ஆனால் ஜெனிபர் புறப்பட்டவிருந்தபோது அவரது செக்ரட்டரி போன் செய்தாள். "மிகவும் மன்னிக்கவேண்டும் மிஸ் ஜெனிபர். இன்று பூரா அவருக்கு ஏகப்பட்ட வேலை. நாளைக்கு உங்கள் சௌகரியப்படி எப்போது வேண்டுமானாலும் நீங்கள் வரலாம் என்று சொல்லச் சொன்னார்."

"சரி," என்று சொல்லிவிட்டுப் போனை வைத்தாள்.

அந்த டெலிபோன் செய்தி அவளை உஷாராக்கியது.

மனத்துக்குள் அன்று ஏற்பட்ட குடைச்சல் மறுபடி முளைத்தது. அந்த உறுத்தலுக்குக் காரணமில்லாமல் இல்லை.

ஆசாமி ஏதோ சூழ்ச்சி செய்கிறார்.

என்னவாக இருக்கும்? என்னவாக இருக்கும்?

கதவைச் சாத்திக்கொண்டாள். "யார் போன் பண்ணினாலும் என்னைக் கூப்பிடாதே," என்று செக்ரட்டரிக்குக் கட்டளையிட்டாள்.

அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடை போட்டாள்.

அந்த வக்கீலின் மனத்துக்குள் என்னதான் இருக்க முடியும்? கேஸ் போடுவதற்கே எந்த அடிப்படையும் இல்லையென்று முதலில் சொன்னார் ஆனால் பிறகு இருபது லட்சம் டாலர் கொடுக்க ஒப்புக்கொண்டு விட்டார். ஜெனிபர் அதிகம் வற்புறுத்தக்கூட இல்லை!

எப்படி?

அவ்வளவு பெரிய தொகை வாங்கித் தருவதாக ஒப்புக் கொண்டவர், உடனடியாக அதைச் செய்தாரா என்றால்

இல்லை. இரண்டு வாரத்துக்கு ஆளே அகப்படவில்லை. ஒரு வாரம் லண்டனுக்குப் போவதாகச் சொன்னார். நிஜமாகவே போனாரோ. அல்லது சும்மா சொன்னாரோ?

அந்த ஒரு வாரம் முடிந்தது.

டெலிபோனில் அவரைக் கூப்பிட்ட போதெல்லாம் வெளியே போயிருப்பதாகச் சொன்னார்கள். வேறு ஏதோ அவசர ஜோலியைக் கவனித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவராகத் திருப்பி அவளுக்குப் போன் செய்து பேசவுமில்லை.

கடைசியில் ஒரு வழியாக ஆளைப் பிடித்தாள். இன்று சந்தித்துப் பேசலாமென்று சொல்லியிருந்தார்.

ஆனால் இன்றைக்கு வேலையிருக்கிறது, நாளைக்குப் பார்க்கலாம் என்கிறார்.

ஏன் இப்படி நாளைக் கடத்திக் கொண்டே போகிறார்? அதிலே ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. என்ன சூழ்ச்சி?

அறையின் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டே யிருந்தாள் ஜெனிபர்.

16

லாரிக் கம்பெனியின் வக்கீல் நாளைக் கடத்திக்கொண்டு போவதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கமுடியும்.

என்ன அது?

சட்டென்று நின்றாள் ஜெனிபர். அப்படியும் இருக்குமோ?

இன்ட்டர்காம் டெலிபோனை எடுத்தாள் தன் ஜூனியரைக் கூப்பிட்டாள்.

"கானிக்கு லாரி விபத்து நேரிட்டது எந்தத் தேதி? உடனே பார்த்துச் சொல்லுங்கள். சட்டப்படி ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் தானே நஷ்டஈடு கேட்க முடியும்? அந்த அவகாசம் இருக்கிறதா, கடந்து விட்டதா என்று எனக்கு இப்போதே தெரிந்தாக வேண்டும்," என்றாள்.

இருபது நிமிடத்துக்கெல்லாம் ஜூனியர் வேகமாகத் திரும்பி வந்தான். அவன் முகம் வெளுத்திருந்தது.

"நீங்கள் பயப்பட்டது சரிதான். நாம் சரியானபடி மாட்டிக் கொண்டு விட்டோம்!" என்றான் பதற்றமாக. "நஷ்ட ஈடு கேட்பதற்கு இன்றுதான் கடைசி நாள்!"

ஜெனிபருக்கு எல்லாம் புரிந்தது.

அந்த லாரிக் கம்பெனியின் வக்கீல் வேண்டுமென்றே தான் நாளைக் கடத்தி வந்திருக்கிறார்!

குழப்பத்தினால் அவளுக்கு தலை சுழன்றது. இனி என்ன செய்ய முடியும்.

"சரியாய்ப் பார்த்து விட்டீர்களா? சந்தேகம் எதுவும் இல்லையே?" என்று மறுபடி கேட்டாள்.

"இல்லையம்மா.... ஸாரி! முன்பே இந்த விஷயத்தை நாங்கள் செக்பண்ணியிருக்க வேண்டும். தோன்றாமலே போய்விட்டது."

"எனக்கும்தான் தோன்றவில்லை," என்றாள் ஜெனிபர்.

சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்தாள் மணி நான்கு. ஐந்து மணிக்குக் கோர்ட் குமாஸ்தாவிடம் மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

"மனு தயாரிக்க உங்களுக்கு எத்தனை நேரம் பிடிக்கும்?" என்று ஜூனியரைக் கேட்டாள்.

அவனும் அவளைப் போலவே இருப்புக் கொள்ளாமல் தவித்துக் கொண்டுதான் இருந்தான் "குறைந்த பட்சம் மூன்று மணி நேரமாவது ஆகும். நாலு

மணி நேரங்கூடப் பிடிக்கலாம். ஊகூம், வழியே இல்லை யம்மா."

இல்லை, இல்லை. ஏதாவது ஒரு வழி இருக்கத்தான் இருக்கும் என்று எண்ணிக் கொண்டாள் ஜெனிபர்.

என்ன மட்டமான சூழ்ச்சி செய்திருக்கிறார் இந்த லாரிக் கம்பெனியின் வக்கீல்! நினைக்க நினைக்க ஆத்திரம் மூண்டது ஜெனிபருக்கு.

அவருடைய அலுவலகத்துக்குப் போன் செய்தாள். அவரது செயலாளரிடம், "உங்கள் பாஸைக் கொஞ்சம் கூப்பிடுகிறீர்களா? நான் ஜெனிபர் பேசுகிறேன்," என்றாள். காத்திருந்த ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாக இருந்தது.

வக்கீல் கிடைத்ததும் கோபத்தை மறைத்துக் கொண்டு குரலில் உற்சாகத்தை வரவழைத்துக் கொண்டாள். "ஹலோ சார்! லண்டன் பயணமெல்லாம் எப்படி இருந்தது?" என்றாள். கொஞ்ச நேரம் அவர் சொல்வதைக் கேட்டாள். "இல்லை சார் நான் போனதில்லை.... சமயம் கிடைக்கிற போது போகலாமென்றுதான் இருக்கிறேன். நான் கூப்பிட்டது எதற்கென்றால்..." பிறகு குரலைச் சாதாரண மாக வைத்துக் கொண்டாள். "கொஞ்சம் முன்னால் அந்தப் பெண் கானியுடன் பேசிக் கொண்டிருந்தேன். ரொம்ப அவசியம் நேர்ந்தாலொழியக் கோர்ட்டுக்கு வருவதற்கு அவள் இஷ்டப்படவில்லை. ஆகையால் இன்றைக்கு நாம் ஒரு செட்டில்மெண்ட் செய்துகொண்டுவிட்டால் தேவலை என்று தோன்றுகிறது....."

அவரது கொக்கரிப்பான சிரிப்பு டெலிபோனுக்கு வெளியே கூடப் பலமாகக் கேட்டது. "பாவம். நீங்கள் ரொம்பத்தான் சிரமப்படுகிறீர்கள், மிஸ் ஜெனிபர் உங்களுக்குத் தெரியுமோ? நஷ்ட ஈடு கேட்பதற்கு இன்று தான் கடைசி நாள். நஷ்ட ஈட்டுக்காக யாரும் யார் மீதும் எந்த வழக்கும் இனிமேல் போட முடியாது. ஹூம்! அந்தப் பெண் விஷயத்தில் விதி இப்படி விளையாடி விட்டதே!

நல்லது. உங்களுக்குச் சௌகரியமான போது ஒரு நாள் டிபன் சாப்பிட வருகிறீர்களா? சாவகாசமாக நாம் பேசலாம். என்ன?"

ஜெனிபர் மறுபடியும் தன் கோபத்தை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டாள். "நீங்கள் செய்தது ரொம்ப மட்டமான தந்திரம்," என்றாள்.

"ஆமாம்மா. இது ஒரு மட்டமான உலகமாக இருக்கிறதே!" என்று அவர் சூள் கொட்டினார்.

"ஆட்டத்தை எப்படி ஆடினால் என்ன, ஜெயிப்பது தான் முக்கியம் என்கிறீர்கள். அப்படித்தானே?"

"உங்களைக் காட்டிலும் அதிககாலமாய் இந்தத் தொழிலில் நான் இருக்கிறேன். உங்கள் கட்சிக்காரியிடம் என் அனுதாபத்தைச் சொல்லுங்கள். அடுத்த தடவையாவது அவளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கட்டும் பாவம்."

போனை வைத்து விட்டார் அவர்.

நெடுநேரம் உட்கார்ந்திருந்தாள் ஜெனிபர் டெலி போனைக் கையில் பிடித்தபடி.

எண்ணமெல்லாம் கானியைப் பற்றியே இருந்தது. தன் விஷயம் என்ன ஆயிற்றென்று தெரிந்து கொள்வதற்காக வீட்டில் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாளே!

தலை விண்விண்ணென்று தெறித்தது. நெற்றிப் பொட்டில் பொடிப் பொடியாய் வியர்த்தது. மேஜை டிராயரை இழுத்து. ஒரு தலைவலி மாத்திரையை எடுத்தாள். விழுங்கினாள்.

சட்டென்று ஒரு யோசனை. ஜூனியரைக் கூப்பிட்டாள்.

"நேஷன்வைட் மோட்டார் நிறுவனத்துக்கு அமெரிக்கா முழுவதிலும் கிளைகள் இருக்கிறதில்லையா?" என்று கேட்டாள்.

"இருக்கிறது."

"இங்கே மணி நாலு என்றால் சான்பிரான் ஸிஸ்கோவில் மணி ஒன்று தான். அங்கே வழக்கைத் தாக்கல் செய்ய ஏற்பாடு பண்ணுவோம். பிறகு இங்கேயே மாற்றும்படி கேட்டுக்கொள்ளலாம்."

ஜூனியர் அவநம்பிக்கையுடன் தலையை அசைத்தான் "அது முடியாதம்மா வழக்கு சம்பந்தமான தஸ்தாவேஜுகள் எல்லாம் இங்கே இருக்கிறது. சான்பிரான் ஸிஸ்கோவில் நம் சார்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே ஒரு வக்கீலைப் பிடித்து அவரிடம் வழக்கு விவரத்தை டெலிபோனில் சொல்லவேண்டும். ஐந்து மணிக்குள் மனு தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்ளவேண்டும். இதெல்லாம் நடக்கிற காரியமா?"

ஜூனியர் அப்படிச் சொன்னாலும் ஜெனிபருக்குப் பிடிவாதம் தளரவில்லை. "சரி. சான்பிரான்ஸிஸ்கோ வேண்டாம். ஹவாயில் இப்போது மணி என்ன?"

"காலை பதினொரு மணி."

மந்திரம் போட்ட மாதிரி ஜெனிபரின் தலைவலி பறந்தது. நாற்காலியிலிருந்து குபுக்கென்று எழுந்து கொண்டாள். "பதினொரு மணி தானே? அது போதும்! நேஷன்வைட் மோட்டார்ஸுக்கு ஹவாயில் ஒரு கிளை இருக்கிறதா என்று பாருங்கள். அவர்களுடைய தொழிற் சாலையோ, விற்பனை நிலையமோ, காரேஜோ ஏதாவது ஒன்று இல்லாமல் போகாது. அங்கே வழக்குத் தாக்கல் பண்ணுவோம்."

ஜூனியர் ஒரு நிமிடம் அவளைப் பிரமிப்புடன் பார்த்தான். மறு நிமிடம் அவன் முகம் பிரகாசம் அடைந்தது. ஜெனிபரின் உற்சாகம் அவனைத் தொற்றிக் கொண்டது. "இதோ பார்க்கிறேன்," என்று வெளியே ஓடினான்

ஜெனிபர் அறைக்குள் மறுபடி நடைபோட்டாள்

லாரி கம்பெனி வக்கீலின் திமிரான பேச்சு இன்னும் அவள் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. என்ன சொன்னார்? அடுத்த தடவையாவது அவளுக்கு அதிர்ஷ்டம் அடிக்கட்டும் என்றா!

அடுத்த தடவை தேவையில்லை. இந்தத் தடவைதான்! இந்த ஒரே தடவை தான்! கானிக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறதா இல்லையா பார்த்துவிடலாம்.

இன்ட்டர்காம் போன் ஒலித்தது. ஜூனியர் பரபரப் பாகச் சொன்னான்: "பார்த்து விட்டேன். மேடம். ஓஹூ என்ற ஹவாய் தீவில் நேஷன்வைட் லாரிக் கம்பெனியின் கிளை இருக்கிறது."

உற்சாகம் கரை புரண்டது ஜெனிபருக்கு. "சரியானபடி மாட்டிக் கொண்டார்கள்!" என்றாள் "உடனே அந்த ஊரில் உள்ள ஒரு வக்கீலைப் பிடியுங்கள். விவரத்தைச் சொல்லி நம் சார்பில் அங்கே வழக்குத் தாக்கல் செய்யச் சொல் லுங்கள்."

"எந்தச் சட்ட நிறுவனம் தேவலை? உங்கள் மனசில் குறிப்பாக யாராவது..."

"எவராயிருந்தாலும் பரவாயில்லை. வழக்கைத் தாக்கல் செய்து, அந்த ஊரில் லாரிக் கம்பெனியின் வக்கீல் எவர் இருக்கிறாரோ அவரிடம் ஒரு நகல் தரும்படி சொல்லுங்கள். வேலை முடிந்ததும் நமக்குப் போன் செய்யச் சொல்லுங்கள் நான் எங்கேயும் வெளியே போகப் போவதில்லை. இங்கே தான் காத்துக் கொண்டிருப்பேன் என்று சொல்லுங்கள்."

"சரியம்மா, வேறே ஏதாவது செய்யணுமா?"

ஜெனிபர் புன்னகை செய்து "ஓ! பிரார்த்தனை செய்யுங்களேன்," என்றாள்

அன்று இரவு பத்து மணிக்கு ஹவாயிலிருந்து போன் வந்தது. மணி அடித்ததும் ஜெனிபர் பாய்ந்து எடுத்தாள்.

"மிஸ் ஜெனிபர் ப்ளீஸ்."

"ஜெனிபர்தான் பேசுகிறேன்."

"க்ரெக் அண்ட் ஹவாய் சட்ட நிறுவனத்திலிருந்து பேசுகிறேன். பதினைந்து நிமிடம் முன்பு வழக்குத் தாக்கல் செய்தாகி விட்டது. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்."

ஜெனிபர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். "நன்றி. ரொம்ப ரொம்ப நன்றி."

ஜோயி என்ற ஒருவன் ஜெனிபரை அன்று பார்க்க வந்திருந்தான். ஏதோ அடிதடி வம்பில் மாட்டிக் கொண்டவனாம். ஜெனிபரைப் பார்க்க வேண்டுமென்று போனில் கேட்டிருந்தான். அவளும் வரச் சொல்லியிருந்தாள்.

வந்தவன் கட்டுமஸ்தாய் இருந்தான். விலையுயர்ந்த ஆடைகள். வேறு யாருக்கோ தைத்ததை அவன் போர்த்திக் கொண்டிருந்த மாதிரி தோன்றியது. சுண்டு விரலில் பிரம்மாண்டமான வைர மோதிரம் அணிந்திருந்தான்.

பழுப்பேறிய பல் தெரியும்படி அவன் சிரித்தான். "நீங்கள்தான் எனக்கு உதவி செய்யணும், வக்கீலம்மா. தெரியாத்தனமாய் ஒரு தப்புப் பண்ணிவிட்டேன். ஆனால் யார்தான் தப்புப் பண்ணறதில்லை? இரண்டு பேரை நான் அடித்துக் காயப்படுத்தி விட்டேன் என்று போலீசில் என்னைப் பிடித்து விட்டார்கள். அந்த இரண்டு பேரும்தான் முதலில் என்னை அடிக்க வந்திருந்தார்கள். அதனால் நான் முந்திக் கொண்டேன். அந்தச் சந்து வேறே ஒரே இருட்டு. அந்தப் பேட்டையில் எப்பவுமே ரௌடிகள் கூட்டம்தான். அதனாலே..."

ஏனோ ஜெனிபருக்கு அவன் பேச்சும் பிடிக்கவில்லை. முகமும் பிடிக்கவில்லை. அவன் பொய் பேசுகிறானென்று

முதலிலேயே தோன்றிவிட்டது. தேவையில்லாமல் குழை யடிக்கிறான் என்பது அப்பட்டமாகத் தெரிந்தது.

வந்தவன் ஒரு கற்றை நோட்டை வெளியே எடுத்தான். "ஆயிரம் டாலர் இருக்கிறது. இதை அச்சாரமாக வைத்துக் கொள்ளுங்கள். வழக்கு ஆரம்பமானதும் இன்னொரு ஆயிரம் தருகிறேன்."

ஜெனிபர் அமைதியாகச் சொன்னாள்:

"அடுத்த ஆறு மாசத்துக்கு மூச்சு விடக் கூட எனக்கு நேரம் கிடையாது. அவ்வளவு கேஸ். வேறு யாராவது வக்கீலை ஏற்பாடு பண்ணித் தருகிறேன்."

அவன் விடுவதாக இல்லை. "ஊகூம், ஊகூம். வேறு வக்கீல் எனக்கு வேண்டாம். நீங்கள்தான் நல்ல வக்கீல்."

"ஒரு சாதாரண அடிதடி கேஸ்தானே? இதற் கொன்றும் நல்ல வக்கீல் தேவையில்லை."

"மாட்டேன் என்று சொல்லாதீர்கள் இன்னும் வேண்டுமானாலும் பீஸ் தருகிறேன்." அவன் பேச்சில் பதற்றம் தென்பட்டது. "இரண்டாயிரம் டாலர் வேண்டு மானால்..."

மேஜைக்கடியில் இருந்த பஸ்ஸரை அழுத்தினாள் ஜெனிபர். செக்ரட்டரி வந்ததும், "மிஸ்டர் ஜோயி புறப்பட ணுமாம். அழைத்துப் போ," என்றாள்.

ஒரு நிமிடம் அசையாமல் ஜெனிபரையே பார்த்தபடி இருந்தான் அவன். பிறகு மேஜை மீது வைத்த நோட்டுக்களை அள்ளி எடுத்துப் பையில் அடைத்துக் கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் வெளியேறினான்.

ஜெனிபர் இன்ட்டர்காம் போனை அழுத்தி, துப்பறியும் கென்னத்தைக் கூப்பிட்டாள்.

இந்த ஜோயி யார் என்னவென்று விசாரிக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

முப்பதாவது நிமிடம் அவள் கேட்ட தகவல்களைக் கொண்டு வந்து விட்டார் கென்னத்.

"அவன் மீதுள்ள கேஸ்கள் பட்டியல் போட்டால் ஒரு மைல் நீளம் வரும்," என்றார். "பதினொன்றாவது வயது முதல் ஜெயிலிலிருந்து வெளியே வருவதும் உள்ளே போவதும்தான் அவன் பொழுது போக்கு. இப்போது கூட ஜாமீனில்தான் வந்திருக்கிறான். அவன் கலாட்டா செய்ததாகப் போன வாரம் போலீசில் பிடித்திருக்கிறார்கள். தங்கள் பயங்கரக் கும்பலுக்குக் கப்பம் கட்டவில்லை என்பதற்காக இரண்டு கிழவர்களைத் தாக்கியிருக்கிறான் "

பொறி அடித்த மாதிரி ஜெனிபருக்கு எல்லாம் புரிந்தது. "பயங்கரக் கும்பல் என்றா சொன்னீர்கள்? இந்த ஜோயி அவர்கள் ஆளா?"

"ஆமாம். மாரெட்டியின் அடியாட்களில் இவனும் ஒருவன்."

ஜெனிபரால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை.

"ஓ, அப்படியா? மாரெட்டிக்குப் போன் போடுங்கள், " என்றாள்.

அவர் போட்டுத் தந்தார்.

ஜெனிபர் போனில் பேசியதும் மாரெட்டிக்கு ஒரே ஆச்சரியம், ஆனந்தம். "அடடே! ஜெனிபரா! என்ன எதிர் பாராத சந்தோஷம்!"

கடுமையுடன் பேசினாள் ஜெனிபர். "மிஸ்டர் மாரெட்டி. எனக்கு இந்த செட்டப் சமாசாரமெல்லாம் கொஞ்சம் கூடப் பிடிக்காது, புரிகிறதா?"

"என்ன சொல்கிறீர்கள்?"

"விளக்கமாகவே சொல்கிறேன். இரண்டு காதையும் திறந்து வைத்துக் கொண்டு கேளுங்கள். இப்போதும் சரி, எப்போதும் சரி. உங்களுக்காகவும் சரி, உங்களுடைய

ஆட்களுக்காகவும் சரி, எந்த வழக்கையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்."

மாரெட்டி பதட்டப்படவில்லை.

"உங்களை ஒன்று கேட்கலாமா?" என்றான்.

"சொல்லுங்கள்."

"என்னுடன் டிபன் சாப்பிட ஒருநாள் நீங்கள் வரவேண்டும். என்றைக்குச் சௌகரியப்படும்?"

ஜெனிபர் படக்கென்று போனை வைத்தாள்.

கானியின் வழக்கு ஹவாய்த் தீவில் தாக்கலான தினத்துக்கு மறுநாள்.

இன்டர்காமில் செகரட்டரி கூப்பிட்டாள் ஜெனிபரை.

"லாரி கம்பெனி வக்கீல் வந்திருக்கிறார் மேடம். உங்களைப் பார்க்க வேண்டுமாம். முன்கூட்டி அப்பாயின்ட் மெண்ட் செய்து கொண்டீர்களா என்று கேட்டேன், இல்லையாம்."

ஜெனிபரின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது. "அவரைக் கொஞ்ச நேரம் காத்திருக்கச் சொல்லு," என்றாள்.

நாற்பத்தைந்து நிமிட நேரம் அவரைக் காக்க வைத்தபின், காரியதரிசியைக் கூப்பிட்டு அவரை உள்ளே அனுப்பச் சொன்னாள்.

அவர் பழைய கிண்டல்காரப் பேர்வழியாக இருக்க வில்லை. முகத்தில் கோபம் குமுறிக் கொண்டிருந்தது. அதை மறைத்துக் கொள்ளவும் அவர் முயலவில்லை.

நேரே ஜெனிபரின் மேஜைக்கு வந்து நின்றார் "உங்களால் எனக்குப் பல பிரசினைகள் ஏற்பட்டுவிட்டது; —என்றார்

"அடடே, அப்படியா சார்!" என்றாள் ஜெனிபர்.

அவள் உட்காரச் சொல்லாத போதே அவர் உட்கார்ந்துகொண்டார். "கண்ணாமூச்சி விளையாடியது போதும். இத்தோடு நிறுத்திக் கொள்வோம். லாரிக் கம்பெனிக்காரர்கள் இப்போதுதான் விஷயத்தைச் சொன்னார்கள். ராஜி செய்து கொள்ளலாம் என்பது அவர்கள் அபிப்பிராயம். நான் உங்களைக் குறைவாக மதிப்பிட்டு விட்டது தப்புதான்..."

பைக்குள் கையை விட்டு ஓர் உறையை எடுத்தார் அவர். ஜெனிபரிடம் கொடுத்தார்.

பிரித்துப் பார்த்தாள். உள்ளே கானி பெயருக்கு ஒரு செக் இருந்தது ஒரு லட்சம் டாலருக்கு.

செக்கை உறைக்குள்ளேயே வைத்து அவரிடம் திரும்பினாள். "இது பற்றாது. ஐம்பது லட்சம் டாலர் கேட்பதாக இருக்கிறோம்."

அவர் சிரித்தார். "உங்களால் அது முடியாது, ஜெனிபர். ஏனென்றால் உங்கள் கட்சிக்காரி கோர்ட்டுக்கு வர மாட்டாள். அவளைப் பார்த்துவிட்டுத் தான் நேரே இங்கே வருகிறேன். அவள் ரொம்பப் பயந்து போயிருக்கிறாள். கோர்ட்டுக்கு நிச்சயம் வர மாட்டாளாம். கோர்ட்டுக்கு அவள் வந்தாலொழிய உங்களுக்கு கேஸ் ஜெயிக்காது."

ஜெனிபருக்குக் கோபம் வந்தது.

17

"நான் இல்லாத போது என் கட்சிக் காரியைப் பார்க்க உங்களுக்கு என்ன உரிமை?" என்று சீறினாள் ஜெனிபர்.

"எல்லாருக்கும் நல்லது செய்ய வேண்டும், அம்மா. அதுதான் என் கொள்கை," என்றார் லாரி கம்பெனியின் வக்கீல். "பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். விஷயத்தை இத்தோடு விடுங்கள்."

ஜெனிபர் சீற்றத்துடன் எழுந்து கொண்டாள் "இப்போது நீங்கள் வெளியே போகிறீர்களா, இல்லையா? உங்களைப் பார்த்தாலே எனக்குக் குமட்டிக் கொண்டு வருகிறது!"

"அடேங்கம்மா! எவ்வளவு கோபம் வருகிறது உங்களுக்கு?" என்று கூறிவிட்டு, செக்கை எடுத்துக் கொண்டு வெளியேறினார் அவர்.

அவர் போவதையே பார்த்தபடி இருந்தாள் ஜெனிபர். 'நாம் செய்தது சரிதானா' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். தவறு பண்ணி விட்டோமோ? ஒரு லட்சம் டாலர் என்பது லேசுப்பட்ட பணமா! அது காணிக்கு எவ்வளவோ உபகாரமாக இருக்கும்! நாம் பாட்டுக்கு அது வேண்டாமென்று சொல்லி விட்டோமே! ஆனால் -

ஆயுள் பூராவுக்கும், ஒவ்வொரு நாளும் கானி அனுபவிக்கப் போகிற வேதனைகளுக்கு இந்த ஒரு லட்சம் ஈடாகுமா?

அந்த வக்கீல் சொன்னதில் ஒன்று மட்டும் உண்மை என்று ஜெனிபருக்குத் தெரிந்தது.

கானியின் நரக வேதனை பற்றி எவ்வளவு தான் வாயால் சொன்னாலும் ஜூரர்கள் மனசில் பதியாது. கானி கோர்ட்டுக்கு நேரில் வந்தாக வேண்டும். அவளை ஜூரர்கள் கண்ணால் பார்க்க வேண்டும். ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் என்று தினம் தினம் அவர்கள் கானியைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அவளுடைய கஷ்டத்தை நேருக்கு நேரே காணவேண்டும். அப்போதுதான் அவள் கேட்கும் நஷ்ட ஈட்டைத் தரும்படி தீர்ப்பளிப் பார்கள்.

ஆனால் கோர்ட்டுக்கு வரக் கானி சம்மதிக்க வேண்டுமே?

அதற்கு ஏதாவது வழி செய்தாக வேண்டும்.

இப்போதெல்லாம் வார்னரும் ஜெனிபரும் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. வாரத்துக்கு ஒரு முறை ஏதாவது ஓர் ஓட்டலில் சேர்ந்து டிபன் சாப்பிடுவார்கள். மற்றப்படி தனியாய்ப் பேசுவதற்கோ அந்தரங்கமாய் இருப்பதற்கோ வசதியில்லாமல் போய்விட்டது. அது பெரிய நரக வேதனையாக இருந்தது இருவருக்கும். நாள் தவறாமல் டெலிபோனில் பேசிக் கொண்டார்கள். அதுகூட மற்றவர் களுக்குத் தெரியாமல் இருப்பதற்காகப் பொய்ப் பெயர்கள் வைத்துக் கொண்டார்கள்.

"இப்படித் திருட்டுத்தனமாகப் பேசிக் கொள்வது எனக்கு வெறுப்பாயிருக்கிறது, ஜெனிபர்," என்றான் வார்னர்.

"எனக்கும்தான்," என்றாள் அவள் ஆனால் அவனுடன் பேசுவதை நிறுத்த அவளால் முடியவில்லை. பேசுவதையும் நிறுத்திக் கொண்டால் ஒரேயடியாக அவனை இழந்து விடுவோமோ என்ற பயம் அவளைப் பிடித் தாட்டியது.

அன்று அவன் போன் செய்து. "ஸாரி, ஜெனிபர். இரண்டு மூன்று நாளாய் உன்னுடன் பேச முடியாமல் போய்விட்டது. தேர்தல் சம்பந்தமாக ஏகப்பட்ட கூட்டங்கள். நான் கட்டாயம் இருக்கும்படி ஆகிவிட்டது..." என்றான்.

"புரிகிறது டார்லிங்," என்றாள் ஜெனிபர். 'புரிந்து கொள்ள வேண்டியது தான். வேறு வழி?' என்று மனத்துக்குள் ஒரு குரல் வேதனையுடன் ஒலித்தது.

"ஜென்னி, உன்னைப் பார்க்காமல் நான் படும் துன்பம்..." அவன் மூச்சிலும் பேச்சிலும் உஷ்ணம் வெளிப் பட்டது.

"நான் மட்டும்?" என்றாள் ஜெனிபர். 'என் வேதனை எப்படிப்பட்டது என்பது எனக்குத்தான் தெரியும். உங்களால் அறியவே முடியாது' என்று எண்ணிக் கொண்டாள்.

"உன்னைப் பார்க்க வேண்டும் ஜெனிபர்," என்று அவன் சொன்னதும் -

'எப்போது வருகிறீர்கள்?' என்ற கேள்வி நாக்கு நுனிவரை வந்துவிட்டது. ஆனால் அவனே சொல்லட்டும் என்று காத்திருந்தாள்.

"நான் வெளியூர் போகிறேன். திரும்பி வந்ததும் கூப்பிடுகிறேன். என்ன?" என்றான் அவன்.

சடக்கென்று தலையில் அடி விழுந்த மாதிரி இருந்தது அவளுக்கு.

"ஓ," என்று மட்டுமே சொன்னாள். வேறென்ன சொல்ல முடியும்? வேறு எதுதான் செய்ய முடியும்?

அன்று இரவு வெகுநேரம் அவளால் தூங்க முடிய வில்லை. கொஞ்சம் கண்ணயர்ந்த சமயம் திடீரென்று விழிப்புக் கண்டது.

மணி, விடிகாலை நாலு.

படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

சரேலென்று ஓர் எண்ணம்.

வார்னரைப் பற்றி அல்ல கானியைப் பற்றி.

கானிக்கு ஐம்பது லட்சம் டாலர் நஷ்ட ஈடு வாங்கித் தர ஒரு வழி தோன்றிவிட்டது!

ஒரு புதன்கிழமையன்று கானியின் வழக்கு விசாரணைக்கு வந்தது.

வேறு சமயமாயிருந்தால் இந்த வழக்கைப்பற்றிய செய்தி பத்திரிகைகளில் மூலையில் ஒரே ஒரு பாரா இடம் பெற்றிருக்கும். ஆனால் கானிக்காக ஜெனிபர் ஆஜராகிறாளே! பத்திரிகை நிருபர்கள் நீதிமன்றத்தை மொய்த்துக் கொண்டு இருந்தார்கள்.

லாரிக் கம்பெனியின் வக்கீல் தன் பட்டாளம் புடைசூழ அமர்த்தலாக வீற்றிருந்தார்.

யார் யாரை ஜூரர்களாக அமர்த்துவது என்பதை முதலில் முடிவு செய்தார்கள். அந்த விஷயத்தில் லாரி கம்பெனியின் வக்கீல் கவலைப்படக் காணோம். ஏன், கொஞ்சம் அலட்சியமாகக் கூட இருந்தார்.

காரணம், கானி கோர்ட்டுக்கு வரப் போவதும் இல்லை, அவளை ஜூரர்கள் பார்க்கப் போவதுமில்லை, என்று அவர் நிச்சயமாக எண்ணியிருந்தார்.

ஜூரர்கள் நியமனமானதும் வழக்கு ஆரம்பமாயிற்று. லாரி கம்பெனியின் வக்கீல் தன் கட்சியை விவரமாக எடுத்துரைத்தார். மனிதர் நன்றாகத்தான் பேசுகிறார் என்று ஜெனிபரே ஒப்புக் கொள்ளும்படி இருந்தது.

கானியின் பரிதாபமான நிலைமை பற்றி விரிவாகச் சொன்னார். ஜெனிபர் பேசியிருந்தால் என்ன சொல்லியிருப்பாளோ அத்தையெல்லாம் தானே சொல்லி, பிற்பாடு ஜெனிபர் பேச்சுக்கு மதிப்பு இல்லாதபடி பண்ணிவிட்டார். பிறகு விபத்தைப் பற்றிக் கூறினார். கானிதான் உறை பனியில் கால் வழுக்கி விழுந்தாளே தவிர, லாரி டிரைவர் மீது எந்தத் தப்புமில்லை என்று வாதாடினார்.

"நண்பர்களே, கவனியுங்கள். நஷ்ட ஈட்டுக்காக ஐம்பது லட்சம் டாலர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார் அந்தப் பெண். ஒன்றில்லை, இரண்டில்லை, ஐம்பது லட்சம் டாலர்!" தன்னால் அவ்வளவு பெரிய தொகையை நம்பவே முடியவில்லை என்று சொல்லுவது போல் கண்களை

அகட்டினார். கைகளை விரித்தார். தலையை அசைத்தார். "ஐம்பது லட்சம் டாலர்! நண்பர்களே! நீங்கள் யாராவது ஒரே சமயத்தில் அவ்வளவு பெரிய தொகையைப் பார்த்ததுண்டா? நான் பார்த்தது கிடையாது, ஐயா, நானும் என் சட்டக் கம்பெனியில் எவ்வளவோ பணக்காரர்களைப் பார்த்திருக்கிறேன் அவர்கள்கூட அவ்வளவு பெரிய தொகை பார்த்ததில்லை. நான் எத்தனையோ வருஷமாய்ப் பிராக்டிஸ் பண்ணி வருகிறேன், பத்து லட்சம் டாலரைக் கூட நான் சேர்ந்தாற்போல் பார்த்தது கிடையாது, ஏன், ஐந்து லட்சம் டாலரைக்கூடப் பார்த்தது கிடையாது..." ஓரக் கண்ணால் ஜூரர்களைக் கூர்ந்து நோக்கினார் அவர் அவ்வளவு பெரிய தொகையை அவர்களும் பார்த்ததில்லை என்று அவர்கள் முகமே சொல்லியது.

வக்கீல் தொடர்ந்தார். "இந்த விபத்து எப்படி நடந்த தென்பதைப் பற்றி, விபத்தைக் கண்ணால் கண்டவர்கள் வந்து சாட்சி சொல்லப் போகிறார்கள். இது ஒரு தற் செயலான விபத்துதானே ஒழிய லாரிக் கம்பெனிக்கு எந்த விதத்திலும் சம்பந்தம் கிடையாதென்று உங்களுக்கே விரைவில் தெரியப் போகிறது. ஒன்றைக் கவனியுங்கள், நஷ்ட ஈடு கேட்டிருக்கும் அந்தப் பெண் இன்று கோர்ட்டுக்கு வரவில்லை. இன்று மட்டுமல்ல, என்றுமே வரப் போவதில்லை. அதை அவருடைய வக்கீல் கோர்ட்டுக்குத் தெரிவித்து விட்டார். வழக்கில் அக்கறை இருந்தால் அந்தப் பெண் கோர்ட்டுக்கு வந்திருக்க வேண்டுமா, வேண்டாமா? வரவில்லையே? ஏன்? ஆனந்தமாய்த் தன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு, பணம் வரப்போவதைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கிறாள்! எந்தப் பணம்? நீங்கள் வாங்கித் தருவீர்கள் என்று அவள் நினைத்திருக்கும் நஷ்ட ஈட்டுப் பணம்! டெலிபோனில் எப்போது மணியடிக்கும் என்று காத்துக் கொண்டிருக்கிறாள்! எதற்கு? எத்தனை லட்சம் பறிக்க முடிந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காக!

"பேராசை! பேராசைதான் இவ்வளவுக்கும் காரணம். உங்களுக்குத் தெரியும். இப்படிப்பட்ட ஒரு விபத்தில் ஒரு பெரிய நிறுவனம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே இவர்களுக்கு உள்ளங்கை அரிக்கும். 'ஆகா! அது ஒரு பணக்காரக் கம்பெனி எவ்வளவு வேண்டுமானாலும் அவர்களால் கொடுக்க முடியும்! நாமும் முடிந்த அளவுக்கு கறந்துவிட வேண்டும்.' என்று கணக்குப் போடுகிறார்கள். அதுதான் விஷயம்!"

அவர் சற்று நிறுத்திவிட்டுத் தொடர்ந்தார்.

"தான் கேட்கும் நஷ்ட ஈடு நியாயமானதல்ல என்று அந்தப் பெண் கானிக்கே தெரியும். உங்கள் முகத்தைப் பார்க்க அவளுக்குத் துணிச்சல் இல்லை. அதனால் தான் கோர்ட்டுக்கு வரவில்லை. நண்பர்களே, அவளுக்கு ஒரு பைசா கொடுக்காமல் வெறும் கையுடன் வீட்டுக்கு அனுப்புவோம். அப்போதுதான் எதிர்காலத்தில் இப்படி யாரும் பேராசைப் பட்டுக் கேஸ் போட மாட்டார்கள். என்ன அநியாயம் பாருங்களேன்! உறைபனியில் கால் வழுக்கி விழுந்து விட்டால் உடனே பெரிய ஆள் எவன் அகப்படுவான், எவன் தலையில் மிளகாய் அரைக்கலாம் என்றா பார்ப்பது? ஒரு நாளும் இதற்கு இடம் தரக்கூடாது."

லாரிக் கம்பெனியின் வக்கீல் தன் பேச்சை முடித்துக் கொண்டு நீதிபதிக்கும் ஜூரர்களுக்கும் வணக்கம் தெரி வித்தார். ஜெனிபருக்கும் வணக்கம் கூறிவிட்டுத் தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

ஜெனிபர் மெதுவே எழுந்து கொண்டாள் ஜூரர்களின் முக பாவங்களைப் பார்த்தாள். எதிரி வக்கீல் எவ்வளவு தூரம் அவர்களைக் கவர்ந்திருக்கிறார் என்பதை ஊகித்துக் கொண்டாள். பிறகு பேச ஆரம்பித்தாள்.

"என் கட்சிக்காரி கானி இங்கே கோர்ட்டுக்கு வரமாட்டாள் என்று என் மதிப்புக்குரிய நண்பர் உங்களுக்கு எடுத்துரைத்தார். உண்மைதான். அவள் வரமாட்டாள்."

ஜூரர்களுக்குப் பக்கத்தில் இருந்த ஒரு காலி நாற்காலியைக் காட்டினாள் ஜெனிபர் "வர முடிந்திருந்தால் அதோ அங்கேதான் அவள் உட்கார்ந்திருப்பாள். ஆனால் அந்த நாற்காலியில் அல்ல. ஒரு சக்கர நாற்காலியில். எந்தச் சக்கர நாற்காலியில் தன் பரிதாபமான வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறாளோ, அந்தச் சக்கர நாற்காலியில் அங்கே உட்கார்ந்திருப்பாள் ஆனால் அவள் இங்கே வரப் போவதில்லை. என் மதிப்பிற்குரிய நண்பர் சொன்னது உண்மைதான். என்றாலும், இந்த வழக்கு முடிவதற்கு முன்பு அவளை நீங்களெல்லாம் பார்க்கத்தான் போகிறீர்கள். அதற்குச் சந்தர்ப்பம் வரத்தான் போகிறது..."

லாரிக் கம்பெனி வக்கீலின் முகத்தில் திகைப்புப் படர்ந்தது. என்ன சொல்கிறாள் இவள்? தன் உதவியாளரின் பக்கம் குனிந்து ஏதோ கிசுகிசுத்தார்.

ஜெனிபர் தொடர்ந்து பேசினாள்:

"என் மதிப்பிற்குரிய நண்பர் பிரமாதமான வாக்கு வன்மையுடன் பேசியதை நீங்களும் கேட்டீர்கள். நானும் கேட்டேன். கேட்டு அப்படியே அசந்து போய் விட்டேன். இந்த இருபத்து நாலு வயதுப் பெண், கையும் காலும் இல்லாத பெண், எப்படி ஒரு பெரிய கம்பெனியை ஏமாற்றிப் பணம் கறக்கப் பார்க்கிறாள் என்பதை நண்பர் சொன்ன போது என் ரத்தம் கொதித்தது. எப்போது டெலிபோன் மணியடிக்கும் என்று இந்தப் பெண் வீட்டில் காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாளாம்! தான் லட்சாதி பதியாகிவிட்ட செய்தியைக் கேட்கத் துடித்துக் கொண்டி ருக்கிறாளாம்!"

வெறுப்புடன் சிரித்தாள் ஜெனிபர் அவள் குரல் தாழ்ந்து ஒலித்தது:

"என் மதிப்பிற்குரிய நண்பர் சொல்கிறார் பணம் எப்போது வரும் என்று கானி காத்துக் கொண்டு இருக் கிறாளாம். எதற்கு? விரல்களுக்கு வைர மோதிரங்கள்

போட்டு அழகு பார்க்கவா? அவளுக்கு விரல்களே இல்லையே? கால்களுக்கு விலையுயர்ந்த காலணிகள் மாட்டிக் கொண்டு நடனமாடுவதற்கா? அவளுக்குக் கால்களே இல்லையே! பளபளப்பான பட்டாடைகள் வாங்கி உடம்பில் போட்டுக் கொள்வதற்கா? அவளுக்கு உடம்பே இல்லையே! ரோல்ஸ்ராய்ஸ் காரில் ஏறிக்கொண்டு உல்லாச விருந்துகளுக்குப் போவதற்கா? அவளால் எங்குமே போக முடியாதே! ஆனாலும் மதிப்பிற்குரிய நண்பர் சொல்கிறார் பணம் பறித்து, அற்புத ஆடம்பரமான வாழ்க்கை வாழக் கானி ஆசைப்படுகிறாள் என்று!"

ஜூரர்கள் ஒவ்வொருவரின் முகத்தையும் பார்த்தபடி மிக அமைதியாகவும் மிக மனப்பூர்வமாகவும் பேசினாள் ஜெனிபர்.

"ஐம்பது லட்சம் டாலரைத் தான் பார்த்தது கிடையாது என்று என் அருமை நண்பர் சொன்னார். நானும் கூடப் பார்த்தது இல்லை. ஆனால் ஒன்று சொல்கிறேன். உங்களில் யாருக்கு வேண்டுமானாலும் நான் ஐம்பது லட்சம் டாலர் ரொக்கமாக இப்போதே தரத் தயார். ஒரு நிபந்தனை: ஐம்பது லட்சம் டாலரை வாங்கிக் கொண்டு உங்களுடைய இரண்டு காலையும் இரண்டு கையையும் வெட்டி எறிந்து விட வேண்டும். யோசித்துப் பாருங்கள். கையும் காலும் இல்லாத நிலைமையில் ஐம்பது லட்சம் டாலர் என்பது ஒரு பெரிய தொகையாகத் தோன்றுமா? சொல்லுங்கள்."

சற்று நிறுத்திவிட்டு ஜெனிபர் சொன்னாள்:

"தங்கள் லாரிகளில் பிரேக் அமைப்பு சரியில்லை என்பது தெரிந்திருந்தும் அதைக் கோர்ட்டுக்கோ என் கட்சிக் காரிக்கோ தெரிவிக்காமல் லாரிக் கம்பெனிக்காரர்கள் மறைத்து விட்டார்கள் அது ஒரு சட்ட விரோதமான காரியமாகும். அரசாங்கம் சமீபத்தில் எடுத்த கணக் கெடுப்பின்படி பெரும்பாலான விபத்துக்குக் காரணம் டயர்,

பிரேக், சக்கரம், ஸ்டியரிங் அமைப்புக்கள் சரியில்லாததுதான்...”

ஜெனிபர் புள்ளி விவரங்களைக் கூறிக் கொண்டிருக்க, லாரிக் கம்பெனியின் வக்கீல் ஜூரர்களின் முகங்களை ஆராய்ந்தார். அவருக்குச் சந்தோஷம் ஏற்பட்டது.

புள்ளி விவரங்களை ஜெனிபர் அள்ளி வீச வீச ஜூரர்களுக்குப் போரடித்துக் கொண்டிருக்கிறது. நன்றாய் அடிக்கட்டும்! கைகால் இல்லாத பெண்ணைப் பற்றிய விவரம் என்றால் கேட்டுப் பரிதாபப் படுவார்கள். சக்கரம், டயர், ஸ்டியரிங், பிரேக் என்று சொல்லிக் கொண்டிருந்தால் ஜூரர்களுக்கு அதில் என்ன சுவாரசியம்?

ஹூம்! இந்தப் பெண்ணை என்னவோ மகா புத்திசாலி என்றார்களே! அப்படியொன்றும் தோன்றவில்லை. இவளுக்குப் பதில் நாம் கானிக்காக ஆஜராகியிருந்தால் இப்படியா வளவளவென்று பேசிக் கொண்டிருப்போம்! இந்த மெகானிகல் சமாசாரம், புள்ளி விவரக் கணக்கு இதையெல்லாம் சொல்லிப் போரடித்துக் கொண்டிருப்போமா? ஜூரர்களின் பரிதாப உணர்ச்சியை அல்லவா சுண்டி விட்டிருப்போம்! இந்த ஜெனிபர் நேர்மாறாகச் செய்து கொண்டிருக்கிறாளே!

ஜம்மென்று தன் நாற்காலியில் நன்கு சாய்ந்து கொண்டார் அவர், கவலை நீங்கியவராக.

ஜெனிபர் நீதிபதியின் அருகில் போய் நின்றாள். “யுவர் ஆனர், தாங்கள் அனுமதி கொடுத்தால் ஒரு அத்தாட்சியை இங்கே காட்டலாம் என்று பார்க்கிறேன்,” என்றாள்.

“என்ன அத்தாட்சி?” என்றார் நீதிபதி.

வழக்கு ஆரம்பிக்கும் போது ஜூரர்களுக்கு நான் சொன்னது தங்களுக்கு ஞாபக மிருக்கலாம். கானியை அவர்கள் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் வரும் என்று நான்

சொல்லியிருந்தேன். கானி இங்கேவர முடியாதிருப்பதால் அவளுடைய படங்களைக் காட்டத் தாங்கள் அனுமதிக்க வேண்டும்."

"எனக்கொன்றும் ஆட்சேபமில்லை," என்ற நீதிபதி, லாரிக் கம்பெனியின் வக்கீலை நோக்கி, "உங்களுக்கு ஆட்சேபம் உண்டா?" என்றார்.

அவர் யோசனையுடன் மெல்ல எழுந்துகொண்டு, "என்ன மாதிரியான படங்கள்?" என்றார்.

"வேறொன்றுமில்லை. வீட்டில் கானி இருப்பதைக் காட்டும் சில படங்கள் அவ்வளவுதான்," என்றாள் ஜெனிபர்.

எந்தப் படமும் காட்டக் கூடாது என்று சொல்லத் தான் வக்கீல் விரும்பினார். பிறகு தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். தொலையட்டும். ஒரு முடமான பெண் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் புகைப்படங்களைக் காட்டுவதால் என்ன குடி முழுகிவிடப் போகிறது? அவள் கோர்ட்டுக்கு வந்தால் தான் ஆபத்து. அதற்கு இது எவ்வளவோ பரவாயில்லை. இன்னொன்று. கானியின் படங்களைக் காட்டக் கூடாதென்று எதிர்த்தால், தான் ஏதோ இரக்கமற்றவர் என்று ஜூரர்களுக்குத் தோன்றிவிடக் கூடும்.

"தாராளமாகக் காட்டுங்கள்," என்றார்.

"மிக்க நன்றி," என்ற ஜெனிபர் தன் ஜூனியரைப் பார்த்துச் சாடை காட்டினாள்.

கோர்ட்டின் கோடியில் உட்கார்ந்திருந்த இரண்டு பேர் வெளியே சென்று ஒரு சினிமா புரொஜக்டரையும் ஒரு சிறிய திரையையும் உள்ளே தள்ளிக் கொண்டு வந்தார்கள் நீதிபதியின் முன்னே அவற்றை நிறுத்தி வைக்கத் தொடங்கினார்கள்.

திடுக்கிட்டார் லாரிக் கம்பெனி வக்கீல்.

"இருங்கள், இருங்கள். என்ன இது?"

ஏதுமறியாதவள் போல் ஜெனிபர் பதிலளித்தாள்: "ஏன்? கானியின் படங்களைக் காட்டலாமென்று நீங்கள் சற்று முன்தானே சொன்னீர்கள்?"

18

ஜெனிபரின் ஆட்கள் சினிமா புரொஜக்டரையும் திரையையும் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்தியதும் திகைத்துப் போனார் லாரி கம்பெனி வக்கீல்.

என்ன சொல்வது, எப்படி ஆட்சேபிப்பது? அவருக்குத் தெரியவில்லை. உள்ளுக்குள் குமுறத்தான் முடிந்தது. சே! எப்படி ஏமாந்து விட்டோம்! கானியின் படம் என்றாளே தவிர, திரைப்படம் என்று சொல்லவில்லையே!

ஜூரர்களும் நீதிபதியும் நன்றாய்ப் பார்க்கும்படி திரையை நகர்த்தி வைத்தாள் ஜெனிபர். "யுவர் ஆனர், இந்த அறையைச் சற்று இருட்டாக்கத் தாங்கள் உத்தரவிட வேண்டும்" என்றாள்.

கோர்ட் சிப்பந்திக்கு நீதிபதி கட்டளையிட, சுருட்டி வைக்கப்பட்டிருந்த திரைச்சீலைகள் இறக்கிவிடப் பட்டன. நீதிமன்றம் இருட்டாயிற்று. ஜெனிபர் அந்த 16 மில்லி மீட்டர் புரொஜெக்டரை ஓட்டினாள்.

வெள்ளித் திரை உயிர் பெற்றது.

அடுத்த அரை மணி நேரம் நீதிமன்றத்தில் நிசப்தம் கோலோச்சியது. குண்டூசி விழுந்தால் கேட்கும் அளவுக்கு அமைதி.

கையும் காலுமில்லாத கானியின் அன்றாட வாழ்க்கை எவ்வளவு பரிதாபமானது என்பதைக் காட்டியது அந்தத் திரைப்படம்.

அதைத் தயாரித்துக் கொடுக்கும் பொறுப்பை ஒரு விளம்பரப் படடைரக்டரிடமும் ஒரு காமெரா மேனிடமும் ஒப்படைத்திருந்தாள் ஜெனிபர்.

பயங்கரமான யதார்த்தத்துடன் ஒவ்வொரு காட்சியையும் எடுத்திருந்தார்கள் அவர்கள்.

எதையுமே ஊகித்துக் கொள்ளும்படி விடவில்லை. அப்படியப்படியே அப்பட்டமாகக் காட்டியிருந்தார்கள்.

கைகளும் கால்களும் இல்லாத அந்த அழகிய இளம் பெண் காலையில் கண் விழிக்கிறாள் அவளைப் பாத்ரூமுக்குச் தூக்கிச் செல்கிறார்கள். உலகறியாத சிசுவுக்குச் செய்து விடுவதுபோல் சுத்தம் செய்து கழுவி விடுகிறார்கள். குளிப்பாட்டி விடுகிறார்கள். உடை மாற்றி விடுகிறார்கள். உணவு ஊட்டி விடுகிறார்கள்.

கோர்ட்டில் காட்டு முன்பே பல முறை இந்தப் படத்தைப் போட்டுப் பார்த்து விட்டாள் ஜெனிபர். பார்த்த ஒவ்வொரு முறையும் அவள் தொண்டையில் பந்து போல் ஒன்று அடைத்துக் கொள்ளும். கண்ணில் நீர் தளும்பி நிற்கும். இன்றும் அப்படித்தான் இருந்தது.

தான் மட்டுமல்ல, கோர்ட்டில் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் நீதிபதியும், ஜூரர்களும், கூடியிருக்கும் எல்லாருமே பரிதாபத்துடன் தவித்துக் கொண்டு இருப்பார்கள் என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

படம் முடிந்தது.

ஜெனிபர் நீதிபதியிடம், "அவ்வளவுதான் யுவர் ஆனர் இத்துடன் என் வாதத்தை முடித்துக் கொள்கிறேன்," என்றாள்.

ஜூரர்கள் தனியறைக்குச் சென்றார்கள் பத்து மணி நேரத்துக்கும் மேலாகத் தங்களுக்குள் ஆலோசனை செய்தார்கள். தீர்ப்பை உடனடியாகச் சொல்லி விடுவார்கள்

என்று ஜெனிபர் நம்பியிருந்தாள். எனவே நேரம் செல்லச் செல்ல அவள் உற்சாகம் குன்றலாயிற்று.

கானியைப் பற்றிய படத்தைப் பார்த்து அவர்கள் உள்ளம் நெகிழவில்லையா? நெகிழ்ந்திருக்குமானால் இவ்வளவு நேரம் ஆலோசனை செய்வானேன்?

அவள் அப்படித் தவித்துக் கொண்டிருக்க, லாரி கம்பெனி வக்கீல் உற்சாகம் கொள்ள ஆரம்பித்திருந்தார். ஜூரர்கள் ஆலோசனைக்காகச் சென்றபோது அவருக்குக் கலவரம் ஏற்பட்டிருந்தது உண்மை. கேஸ் தோற்று விட்டது என்றே தீர்மானித்து விட்டார். ஜெனிபரை மறுபடியும் குறைத்து மதிப்பிட்டு விட்டோம் என்று தன்னைத்தானே நொந்து கொண்டார். ஆனால் நேரம் ஓட ஓட, ஜூரர்கள் வெளியே வருவதற்குத் தாமதம் ஆக ஆக, அவர் மனத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் நம்பிக்கை முளைக்கலாயிற்று. திரைப் படத்தைப் பார்த்து ஜூரர்களுக்குப் பரிதாபம் ஏற்பட்டிருந்தால் அப்போதே முடிவைத் தெரிவித் திருப்பார்களே? "அதிக நேரம் அவர்கள் தங்களுக்குள் விவாதிக்க விவாதிக்க உணர்ச்சிகள் சூடாறிப் போகும். அவ்வளவுக்கவ்வளவு நல்லது," என்று தன் உதவியாளரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

நள்ளிரவுக்குச் சில நிமிடங்கள் இருந்தபோது ஜூரர்கள் வெளியே வந்தார்கள். ஜூரர்களின் தலைவராக இருந்தவர் ஒரு குறிப்பு எழுதி நீதிபதியிடம் தந்தார். அதைப் படித்த நீதிபதி, "இரண்டு தரப்பு வக்கீல்களும் கவனிக்கவும்," என்றார்.

நீதிபதியின் தீர்ப்பைக் கேட்க ஆவலுடன் நின்றார்கள் ஜெனிபரும் லாரிக் கம்பெனி வக்கீலும்.

நீதிபதி கூறினார்: "ஜூரர்களின் தலைவர் ஒரு சந்தேகம் கேட்டிருக்கிறார் அதாவது கானிக்காக அவர் வக்கீல் கேட்டிருக்கும் ஐம்பது லட்சம் டாலர் நஷ்ட ஈட்டுக்கும் மேலாகவே கொடுக்கலாமென்று தாங்கள் சொல்லலாமா,

சொன்னால் அது சட்டப்படி செல்லுமா என்று கேட்டிருக்கிறார்"

ஜெனிபருக்குத் தலை சுழன்றது. அவள் இதயம் குபீரென்று சிறகடித்துப் பறந்தது. லாரிக் கம்பெனி வக்கீலின் பக்கம் திரும்பி பார்த்தாள்: அவர் முகம் ரத்தம் சுண்டி வெளுத்திருந்தது.

"தங்களுக்கு நியாயமென்று தோன்றுகிற எந்தத் தொகையையும் சொல்ல ஜூரர்களுக்கு உரிமை உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்," என்று நீதிபதி சொன்னதும், ஜூரர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள். முப்பது நிமிட நேரம் கழித்துத்தான் மறுபடி வந்தார்கள்.

கானிக்கு அறுபது லட்சம் டாலர் நஷ்ட ஈடு தரப்பட வேண்டுமென்று தாங்கள் கருதுவதாக ஜூரர் தலைவர் தெரிவித்தார். அதன்படியே தீர்ப்பாயிற்று.

நியூயார்க் மாநிலத்தின் வரலாற்றிலேயே அத்தனை பெரிய தொகை எந்தத் தனிப்பட்ட நபருக்கும் தரப் பட்டதில்லை.

அடுத்த நாள் காலை ஜெனிபர் தன் அலுவலகத்துக்கு வந்தபோது அவள் மேஜை பூரா செய்தித் தாள்கள் பரப்பி வைக்கப் பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் முதல் பக்கத்தில் அவளைப் பற்றிய செய்தித்தான்.

ஐம்பது ரோஜாப்பூ கொண்ட அற்புதமான கொத்து ஒரு ஜாடியில் வைத்து அவளுக்கு வந்திருந்தது.

பார்த்ததுமே அவளுக்குள் உற்சாகம். முகமெல்லாம் புன்னகை. வார்னர்தான் அந்தப் பூங்கொத்தை அனுப்பி யிருக்க வேண்டும். எத்தனையோ வேலைகளுக்கு இடையில் அவளைப் பாராட்ட மறக்கவில்லை.

பூங்கொத்துடன் இருந்த கார்டை ஆர்வத்துடன் பிரித்தாள்

அதிர்ச்சி! பூங்கொத்து அனுப்பியவன் வார்னர் அல்ல.

'கங்கிராசுலேஷன்ஸ் மாரெட்டி' என்று கார்டில் கண்டிருந்தது.

வெறுப்பும் ஆத்திரமுமாகப் பூங்கொத்தைப் பார்த்தாள்.

"உங்களுக்குப் போன்," என்றாள் செகரட்டரி.

வாங்கிக் கொண்டாள் போனை. "ஹலோ," என்றாள்.

வார்னரின் குரல்!

"கானி கேஸைப் பற்றிப் படித்தேன் மறுபடியும் பிய்த்து வாங்கி விட்டாயே!" என்று வார்னர் பாராட்டினான்.

"ஏதோ அதிர்ஷ்டம்," என்றாள் ஜெனிபர்

"ஆமாம், உன் கட்சிக்காரியின் அதிர்ஷ்டம்!" என்றான் அவன் "இல்லாவிட்டால் இப்பேர்ப்பட்ட வக்கீல் அவளுக்குக் கிடைத்திருப்பாளா? அதிருக்கட்டும். ரொம்ப ஆனந்தமாய் இருப்பாய், இல்லையா?"

'வழக்கு ஜெயித்ததால் சந்தோஷம். ஆனால் ரொம்ப ஆனந்தம் என்பது உங்களுடன் இருக்கும்போது தான்' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு, "ஆமாம்," என்றாள்.

"உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும்," என்றான் அவன். "இன்று சாயந்தரம் உன்னைப் பார்க்க முடியுமா?"

"ஓ... பார்க்கலாமே?" என்றாள்.

"சாய்ந்தரம் ஓட்டல் மரியாவுக்கு வருகிறாயா? ஆறு மணிக்கு?"

"வருகிறேன்," என்றாள்

ஓட்டலில் வார்னர் காத்திருந்தான் சாப்பாட்டு ஹாலின் கோடியில் இருந்த ஒரு தனி மேஜையில் உட்கார்ந்திருந்தான்.

'ஏன் அப்படித் தனியாக ஒரு கோடியில் உட்கார்ந்திருக்க வேண்டும்?' என்று ஒரு நிமிடம் யோசித்தாள் ஜெனிபர்.

புரிகிறது. இனி நாம் சந்திக்க வேண்டாம் என்று அவன் சொல்லப் போகிறான். சொன்னதும் நான் காச்சு மூச்சென்று அழுவேன் என்று நினைக்கிறார் நான் அழுவதை மற்றவர்கள் பார்த்தால் அவருக்கு என்னவோ போலாகி விடும். யாருக்கும் தெரியவேண்டா மென்றுதான் இப்படித் தனியிடம் பார்த்திருக்கிறார் போலும்...

அவர் என்ன சொன்னாலும் சரி, நான் அழப் போவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டாள் ஜெனிபர். அப்படியே அழுவதானாலும் இங்கே, இவர் முன்னே அழ மாட்டேன்...

கிட்டே நெருங்கிப் பார்த்தபோது வார்னரின் முகத்தில் உளைச்சல் தெரிந்தது. அவர் மனத்துக்குள் நீண்ட போராட்டம் நடந்திருக்க வேண்டும். மேலும் நாம் வேறே துன்பம் தர வேண்டாம். எதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிற மாதிரி நடந்து கொள்வோம்...

அவனருகில் உட்கார்ந்தாள்.

வார்னர் அவள் கையைத் தன் கையோடு பிணைத்துக் கொண்டான். பிறகு மெதுவே சொன்னான்: "என் மனைவி மேரி என்னை விவாகரத்து செய்வதாகச் சொல்லிவிட்டாள் அதைச் சொல்லத்தான் உன்னை வரவழைத்தேன்."

அதிர்ந்து போய் நின்றாள் ஜெனிபர் உண்மையாகத்தான் சொல்கிறானா?

அன்று காலை வார்னரின் மனைவி மேரி அவனிடம் பேச்சை ஆரம்பித்தாள்.

ஒரு தேர்தல் கூட்டத்துக்குப் போய்விட்டு அவர்கள் அப்போதுதான் திரும்பியிருந்தார்கள். வார்னர் முக்கிய பேச்சாளராக இருந்தான். கூட்டம் பிரமாத வெற்றியாக அமைந்து விட்டது.

வார்னர் வெகு சந்தோஷமாயிருந்தானே தவிர மேரியை ஏதோவொரு சுமை அழுத்தியிருந்தது. வீட்டுக்குத் திரும்பிய போது அவள் ஒரு வார்த்தையும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள்.

"இன்றைய கூட்டம் அட்டகாசமாக நடந்தது இல்லை?" என்றான் வார்னர்.

"ஆமாம்," என்றதற்கு மேல் மேரி எதுவும் சொல்லவில்லை.

வீட்டை அடைந்தார்கள்.

"படுப்பதற்கு முன் ஏதாவது பானம் சாப்பிடுகிறாயா? கொண்டு வருகிறேன்," என்றான் வார்னர்.

"வேண்டாம், தாங்க்ஸ். நாம் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசித் தீர்த்தால் நல்லது."

"விஷயமா? என்ன விஷயம்?"

அவள் அவனைக் கூர்ந்து நோக்கினாள் ஒரு வினாடி. பிறகு, 'உங்களையும் ஜெனிபரையும் பற்றி," என்றாள்.

தடியால் தலையில் அடித்த மாதிரி இருந்தது அவனுக்கு. ஒரு நிமிடம் அவனால் எதுவும் பேச முடிய வில்லை. அவள் சொல்வதை மறுப்பதா ஒப்புக் கொள்வதா என்று தெரியாமல் குழம்பியபோது அவள் தொடர்ந்தாள்.

"கொஞ்ச நாளாகவே எனக்கு உங்கள் விஷயம் தெரியும். அதைப் பற்றி ஒன்றும் பேச வேண்டாமென்று

இருந்தேன். ஏனென்றால், உங்களிடம் பேசுவதற்கு முன்பு நானே ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று நினைத்தேன். இப்போது முடிவு செய்து விட்டேன்."

"மேரி, நான் -"

"பொறுங்கள். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுகிறேன். நம்முடைய உறவு..."

"வந்து..."

"இருக்க வேண்டிய முறைப்படி இல்லையென்று எனக்கும் தெரியும். உங்களுக்கும் தெரியும். ஒரு நல்ல மனைவி எப்படி இருக்க வேண்டுமோ அப்படி நான் இருக்கவில்லை."

"இதோ பார் மேரி, உன் மீது எந்தத் தப்பும் இல்லை...

"வேண்டாம். அதெல்லாம் ஏன் சொல்கிறீர்கள்? இது எனக்கு ஒரு பெரிய சோதனை. எதுவானாலும் நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். உங்கள் இஷ்டத்துக்குக் குறுக்கே இனி நிற்கப் போவதில்லை..."

என்ன சொல்கிறாள் இவள்? அவனால் நம்ப முடியவில்லை. "மேரி... வந்து... "

"உங்கள் மீது எனக்குள்ள பிரியம் அலாதியானது. உங்களுக்கு மன வருத்தம் ஏற்பட எனக்குப் பொறுக்காது. அரசியலில் உங்களுக்கு மகத்தான எதிர்காலம் இருக்கிறது. என்னால் அது கெட்டுவிடக் கூடாது. உங்களுக்குப் பரிபூரண சந்தோஷம் கொடுக்க என்னால்தான் முடிய வில்லை. ஜெனிபராவது கொடுக்கட்டும். நீங்கள் அவளுடனேயே இருங்கள். அதுதான் என் ஆசை..."

வார்னருக்கு ஒரே குழப்பமாயிருந்தது. இந்தப் பேச்செல்லாம் உண்மையாகவே கேட்கிற மாதிரி அவனுக்குத் தோன்றவில்லை. வேறு ஏதோ ஓர் உலகத்தில் வேறு யாரோ பேசுவதைக் கேட்பது போல...

"அப்புறம் உன் நிலைமை?" என்றான்.

மேரி புன்னகை செய்து, "என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் எனக்கென்று சொந்தமாகச் சில திட்டம் உண்டு. என்னை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றாள்.

"மேரி... நான்... என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை."

"நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கும் சேர்த்துத் தான் நானே பேசி விட்டேனே? உங்களைப் பிடித்து வைத்துக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை. அப்படிச் செய்தால் உங்கள் வாழ்க்கை நரகமாகிவிடும். அதிலே உங்களுக்கோ எனக்கோ என்ன லாபம்? ஜெனிபர் அருமையான பெண். இல்லாவிட்டால் உங்களுக்கு அவள் மீது இத்தனை காதல் ஏற்பட்டிருக்க முடியாது." மேரி அவனை நெருங்கி வந்து இரு கைகளாலும் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள் "இதோ பாருங்கள், முகத்தை ஏன் சோகமாக வைத்துக் கொள்கிறீர்கள்? சந்தோஷமாக இருங்கள். நான் எடுத்திருக்கிற முடிவு நம் எல்லோருக்குமே ரொம்ப நல்லது."

"மேரி, நீ... உன்னைப் போலப் பெண்ணைப் பார்க்கவே முடியாது."

"தாங்க்யூ," என்றவள், அவன் முகத்தை மெல்ல வருடினாள் "டார்லிங், என் கண்ணுக்குக் கண்ணானவர் நீங்கள் உங்களுக்கு மிகச் சிறந்த சினேகிதியாக நான் என்றைக்குமே இருப்பேன் என்றைக்கும்... எப்போதும்..." இன்னும் இறுக்கி அவனை அணைத்துக் கொண்டு அவன் முகத்தைத் தன் தோள் மீது சாய்த்துக் கொண்டாள் அவளுடைய குரல் வெகு அந்தரங்கமாக ஒலித்தது. "இந்த மாதிரி உங்களை அணைத்துக் கொண்டு படுத்து எத்தனை காலமாகிறது! இப்படி... இப்படி என்னைக் கெட்டியாய்க் கட்டிக் கொள்ளுங்கள் ஒரே ஒரு முறை... கடைசி

முறையாக..." அவனை நெஞ்சாரத் தழுவியபடி கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்.

இவ்வளவும் வார்னருக்கு இப்போது அடுக்கடுக்காய் ஞாபகம் வந்தன.

ஜெனிபரிடம் எல்லாவற்றையும் சொன்னவன், "விவாகரத்து செய்து கொள்ளலாம் என்று நான் சொல்லவில்லை. மேரி தானாகவே சொன்னாள்," என்றான்.

அவன் ஏதேதோ பேசிக் கொண்டே போனான் எதுவும் ஜெனிபரின் காதில் விழவில்லை. எங்கிருந்தோ இனிமையான இசையொன்று ஒலிப்பது போலிருந்தது. மெல்ல மெல்ல மேலெழுந்து ஆகாயத்தில் பறக்கிற மாதிரி இருந்தது அவளுக்கு.

அவள் பயந்ததென்ன, நடந்ததென்ன?

'இனி உன்னை நான் பார்க்க வர மாட்டேன்' என்று வார்னர் சொல்லப் போகிறானென்றல்லவா அவள் எதிர் பார்த்திருந்தாள்! அதைத் தாங்கிக் கொள்வதற்காகத் தன் மனத்தை இரும்பாக்கிக் கொண்டல்லவா வந்திருந்தாள்! ஆனால் இப்போதோ...!

வார்னரின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

இந்த நிமிடம் அவனைக் காதலிக்கிற மாதிரி முன்னெப்போதும் காதலித்ததில்லை என்று அவளுக்குத் தோன்றியது. தன் மார்பின் மீது அழுத்தி நசுக்கிக் கொண்டிருந்த ஒரு பெரும் சுமையைத் திடீரென்று யாரோ அகற்றி விட்ட மாதிரி இருந்தது. தாராளமாய் மூச்சுவிட முடிந்த மாதிரி இருந்தது.

வார்னர் சொல்லிக் கொண்டிருந்தான் "மேரி எவ்வளவு அற்புதமான பெண்! அவள் மாதிரி யார் இருக்க முடியும்! நாம் இரண்டு பேரும் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று உண்மையிலேயே அவளுக்கு எவ்வளவு ஆசை!"

இன்னும்கூட எல்லாம் கனவு போலிருந்தது ஜெனிபருக்கு. "என்னால் நம்பவே முடியவில்லை, டார்லிங்."

"இன்று உனக்கு ஒரு ரகசியம் சொல்கிறேன். கொஞ்ச காலமாக நானும் மேரியும் கணவன் மனைவியாக வாழவில்லை. அண்ணன் தங்கை போலத்தான் வாழ்ந்து வந்திருக்கிறோம்..." அவன் சிறிது தயங்கிவிட்டு, பிறகு நிதானத்துடன் சொன்னான்: "மேரிக்கு ஸெக்ஸ் ஆசைகள் அதிகம் கிடையாது..."

"அப்படியா?"

"இன்னொரு விஷயம், ஜெனிபர். மேரி உன்னைப் பார்த்துப் பேச வேண்டுமென்று சொன்னாள்..."

ஜெனிபருக்குச் சங்டமாயிருந்தது. "எதற்கு... வேண்டாமே... எனக்கு என்னவோ போலிருக்கும்..."

"எனக்காக ஜெனிபர். ப்ளீஸ்..."

"சரி, நீங்கள் சொல்வதற்காக."

19

வார்னரின் மனைவி மேரியைச் சந்திப்பதற்காக ஜெனிபர் புறப்பட்டபோது வானம் தெளிந்து சுறுசுறுப்பாய் இருந்தது. காரை ஓட்டிச் செல்லுவது வெகு சுகமாயிருந்தது ஜெனிபருக்கு.

இருந்தாலும் மேரியைச் சந்தித்து என்ன பேசப் போகிறோம், எப்படிப் பேசப் போகிறோம் என்று மனசுக்குள் ஒரு சங்கடம்தான். காரிலிருந்து ரேடியோவை ஆன் செய்தாள். மெல்லிய இசை அவளுடைய சங்கடத்தைச் சிறிது மறக்கடித்தது.

ஆற்றங்கரையில் பிரம்மாண்டமான மாளிகையாக இருந்தது வார்னரின் இல்லம். பச்சைப் பசேலென்ற புல்வெளி ஏக்கர் கணக்கில் விரிந்து பரந்திருக்க, அதன் நடுவே கம்பீரமாக எழுந்திருந்தது அந்தக் கட்டிடம். ஓங்கி உயர்ந்திருந்த முன்புற கேட்டைத் தாண்டிக்கொண்டு காரைச் செலுத்தி, உள்ளே சென்று வாசல் மணியை அழுத்தினாள்.

கதவைத் திறந்தவள் அவளைக் காட்டிலும் மூன்று நாலு வயது பெரியவளாக இருந்தாள். இனிமையான புன்னகையுடன் ஜெனிபரின் கையைக் குலுக்கி, "வாருங்கள். நான் மேரி. நீங்கள் ஜெனிபர்தானே? நீங்கள் இவ்வளவு அழகானவர் என்று என் கணவர் சொல்ல வில்லை," என்றாள்.

தான் வரப் போவதை முன் கூட்டியே ஜெனிபர் தெரிவித்திருந்தாள். ஆகவே தன் பெயரை மேரி சொன்னதில் ஜெனிபருக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை. ஆனால் மேரி இவ்வளவு சகஜமாக, பெருந்தன்மையோடு பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

மிருதுவான உல்லன் ஸ்கர்ட் அணிந்திருந்தாள் அவள். சில்க் பிளவுஸ் அவளுடைய அழகிய மார்பகங்களைக் கண்ணியமாக எடுத்துக் காட்டியது. சுருட்டை முடி கன்னத்தில் விளையாடியது. நீலக் கண்கள் எடுப்பாகத் தெரிந்தன. கழுத்தில் அசல் முத்தினாலான மாலை அணிந்திருந்தாள். நடையுடை பாவனைகளில் ஒரு பழங்காலத்துக் கம்பீரம் தென்பட்டது.

ஜெனிபர் அவளுடன் உள்ளே சென்றாள்.

வீட்டின் உட்புறத்தில் அறைகள் விசாலமாக இருந்தன. ஆங்காங்கே தொன்மையான கலைப் பொருட்கள் காணப்பட்டன. அற்புதமான வண்ண ஓவியங்கள் சுவர்களை அலங்கரித்தன.

வெள்ளுடை அணிந்த பட்லர் வெள்ளிப் பாத்திரங்களில் தேனீர் எடுத்து வந்து பணிவோடு வழங்கினான்.

அவன் போகும்வரை காத்திருந்துவிட்டு, அவன் போனபிறகு மேரி சொன்னாள்: "ஜெனிபர், உங்களுக்கு வார்னர் மீது மிகவும் காதல் என்று நினைக்கிறேன். இல்லையா?"

ஜெனிபருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. சங்கடத்துடன், "வந்து... இப்படியெல்லாம் நடக்க வேண்டுமென்று நாங்கள் எதையும் திட்டமிட்டுச் செய்யவில்லை..." என்று சொல்ல ஆரம்பித்தாள்.

மேரி பரிவோடு ஜெனிபரின் கையைத் தட்டிக் கொடுத்தவள் "நீங்கள் எதுவும் சொல்ல வேண்டாம். வார்னர் உங்களிடம் சொன்னாரோ சொல்லவில்லையோ எனக்கு தெரியாது. இருந்தாலும் சொல்கிறேன். நாங்கள் ஒரு மரியாதைக்குத்தான் கணவன் மனைவியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். குழந்தைப் பிராயத்திலிருந்தே நானும் வார்னரும் ஒருவரையொருவர் அறிவோம். முதல் தடவை பார்த்தபோது எனக்கு அவர்மீது பிரியம் ஏற்பட்டுவிட்டது. இரண்டு பேரும் ஒரே பார்ட்டிகளுக்கு போவோம். இரண்டு பேருக்கும் ஒரே சினேகிதர்கள். ஆகவே ஒரு நாள் நாங்கள் கல்யாணம் செய்து கொள்வது தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. இப்படிச் சொல்வதை வைத்து என்னைத் தப்பாய் நினைக்காதீர்கள். இன்றைக்கும் எனக்கு வார்னரிடம் கொள்ளைப் பிரியம் உண்டு. அவருக்கும் என் மீதும் கொள்ளைப் பிரியம்தான். ஆனால் காலம் ஓட ஓட மனிதர்கள் மாறி விடுகிறார்கள். என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம்." மேரியின் முகத்தைப் பார்த்தாள் ஜெனிபர். அவளிடம் அளவற்ற நன்றியுணர்ச்சி மேலிட்டது. இந்தச் சந்திப்பு அசிங்கமாக, கோரமாக ஆகியிருக்கக் கூடும். அதை என்ன இனிமையானதாய் மேரி மாற்றிவிட்டாள்! வார்னர் சொன்னது உண்மை. இவள் இனிமையான சுபாவமுள்ள பெண்தான்.

"உங்களுக்கு நான் மிகவும் நன்றி சொல்ல வேண்டும்," என்றாள்.

"நானும் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்," என்றாள் மேரி. கூச்சமான புன்னகை அவள் முகத்தில் படர்ந்தது. "எனக்கு வார்னர் மீது அசாத்தியக் காதல் உண்டு. இருந்தாலும் விவாகரத்தை உடனடியாகச் செய்துவிட வேண்டும் என்றுதான் எண்ணினேன். யோசித்துப் பார்த்தேன். தேர்தல் முடியட்டும், பிறகு விவாகரத்தை வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது. அதுதான் வார்னருக்கு நல்லது."

தேர்தல்! ஜெனிபருக்கு இப்போதுதான் ஞாபகம் வந்தது. தன் உணர்ச்சிகளிலேயே அவள் மூழ்கியிருந்ததால், தேர்தலைப் பற்றி அடியோடு மறந்திருந்தாள்.

மேரி தொடர்ந்தாள்: "பாராளு மன்றத் தேர்தலில் வார்னர் ஜெயிப்பது நிச்சயம் என்று எல்லாருமே சொல்கிறார்கள். இப்போது போய் விவாகரத்து அது இது என்று விவகாரம் கிளம்பினால் அது அவருடைய பெயரைக் கெடுத்து வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும். இன்னும் ஆறு மாசம்தானே? அதுவரை விவாகரத்தைத் தள்ளிப் போடலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்." ஜெனிபரை ஏறிட்டு நோக்கினாள். "பார்த்தீர்களா? உங்கள் அபிப் பிராயத்தைக் கேட்காமல் நானே பேசிக் கொண்டு போகிறேன். மன்னிக்கணும். உங்களுக்கு இதில் சம்மதமா?"

"தாராளமாக," என்றாள். ஜெனிபர். நம் வாழ்க்கை முறையையே இனி மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அவள் எண்ணிக் கொண்டாள் இந்தக் கணம் முதல் அவளுடைய எதிர்காலம் வார்னருடன் பிணைக்கப் பட்டதாகிவிட்டது. அவன் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று வாஷிங்டனுக்குச் சென்றால் அவளும் கூடவே போக வேண்டியிருக்கும். இங்கே நியூயார்க்கில் வக்கீல் தொழில் நடத்த முடியாது. விட்டுவிட வேண்டும்.

பரவாயில்லை, வார்னரும் நானும் சேர்ந்திருந்தால் போதும். மற்றதெல்லாம் அனாவசியம்.

"வார்னர் வெற்றி பெற்று ஒரு நல்ல செனெட்டராக விளங்குவார்," என்றாள்.

மேரி தலையை உயர்த்தி அவளைப் பார்த்துச் சொன்னாள்: "ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அவர் பிரமாதமான ஜனாதிபதியாகவும் விளங்குவார்," என்றாள்.

வீட்டுக்குள் ஜெனிபர் நுழைந்தபோது டெலிபோன் அடித்துக் கொண்டிருந்தது. எடுத்தாள். வார்னர்.

"மேரியைப் பார்த்தாயா? என்ன சொன்னாள்?"

"மேரி ரொம்ப அற்புதமான பெண், வார்னர்!"

"உன்னைப் பற்றி அவளும் அதையேதான் சொன்னாள்," என்றான் அவன்.

"மேரிக்கு மிக இனிமையான சுபாவம். என்ன கண்ணியமான பெண்!"

"நீயும்தான் டார்லிங்," என்றான் வார்னர் "அதெல்லாம் இருக்கட்டும் நமது கல்யாணம் எங்கே நடக்க வேண்டும் சொல்லு."

எவ்வளவு ஆர்வம் அவளுக்கு! ஜெனிபர் நிதானமாகவே பதிலளித்தாள் "எங்கே நடந்தாலும் எனக்குச் சம்மதம்தான். ஆனால் நாம் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்."

"எதற்கு?"

"தேர்தல் முடிவதற்காகத்தான். உங்கள் எதிர்காலம் ரொம்ப முக்கியம், டார்லிங். இந்தச் சமயத்தில் விவாகரத்து செய்து கொண்டால் உங்கள் அரசியல் வாழ்வை அது ரொம்பப் பாதிக்கும்."

அவன் பொறுமையிழந்து பேசினான்.

"என் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அரசியலுக்கும்...

"உங்களைப் பொறுத்த மட்டில் தனிப்பட்ட வாழ்க்கை, பொது வாழ்க்கை இரண்டும் ஒன்றுதான். உங்கள் வெற்றி வாய்ப்பைக் கெடுக்கக் கூடிய எதையும் நாம் செய்யக் கூடாது. ஆறு மாத காலம்தானே? பொறுத்திருப்பது பெரிய காரியமா?"

"எனக்குப் பொறுத்திருக்கப் பிடிக்கவில்லையே?" என்றான் அவன்.

"எனக்குக் கூடத்தான் பிடிக்கவில்லை," என்றாள் ஜெனிபர் புன்னகையுடன்.

இதன் பிறகு ஜெனிபரும் வார்னரும் அனேகமாய்த் தினம் தினம் சந்தித்து, சேர்ந்து உணவருந்தினார்கள். வாரத்தில் இரண்டோ மூன்று இரவுகள் அவள் வீட்டில் அவன் தங்கினான்.

ஆனால் முன்னைக் காட்டிலும் அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருந்தது. காரணம், அவன் தேசம் முழுதும் தெரிந்த புள்ளியாகப் பிரபலமாகிக் கொண்டிருந்தான். நிதி திரட்டும் கூட்டங்களிலும் அரசியல் பேரணிகளிலும் நிறையக் கலந்து கொண்டான். தேசிய பிரசினைகளில் அவன் சொல்லும் கருத்துக்களுக்குப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன.

அன்று காலை வழக்கம்போல தன் சட்ட நிறுவன அதிபருடன் தேனீர் அருந்திக் கொண்டிருந்தான் வார்னர்.

"டெலிவிஷனில் உன் பேட்டி ரொம்ப நன்றாயிருந்தது," என்றார் அதிபர். "உன் கருத்துக்களை வெகு அழகாக எடுத்துச் சொன்னாய். மறுபடியும் உன்னைப் பேசக் கூப்பிட்டிருக்கிறார்களாமே?"

அவருடைய உற்சாகத்தில் அவன் பங்கு கொள்ளவில்லை.

"எனக்கென்னவோ இந்த டி.வி. நிகழ்ச்சிகள் பிடிக்கவேயில்லை. வேஷம் போட்டுக்கொண்டு பேசி நடிக்கிற மாதிரி என்னைப் பற்றி எனக்கே தோன்றுகிறது," என்றான்.

அதிபர் அதைக் கேட்டுத் திடுக்கிடாமல் அமைதியாகவே சொன்னார்: "அரசியல்வாதிகள் என்றாலே நடிகர்கள் என்றுதான் அர்த்தம். ஒவ்வொரு அரசியல் வாதியும் ஒவ்வொரு குறிப்பிட்ட பாத்திரமாக நடிக்கிறார். மக்களும் அதைத்தான் விரும்புகிறார்கள். அரசியல்வாதிகள் தங்களை அசலாகவே காட்டிக் கொள்ள ஆரம்பித்தால் அவ்வளவுதான்! நாடு தாங்காது!"

"இருந்தாலும், இதெல்லாம் என்னவோ ஆணழகன் போட்டி மாதிரி பர்ஸனாலிட்டி போட்டி போல ஆகி விட்டது. அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

அதிபர் புன்னகை செய்தார். "நீ ஆணழகன்தான். உனக்கு நல்ல பர்சனாலிட்டி இருக்கிறது. அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்து. உன் வெற்றி வாய்ப்பைப் பற்றிய நம்பிக்கை வாரத்துக்கு வாரம் அதிகரித்துக் கொண்டே போகிறது." கோப்பையில் இன்னும் கொஞ்சம் தேனீர் ஊற்றிக் கொண்டார் அவர். "நான் சொல்கிறேன், கேள். இது வெறும் ஆரம்பம்தான். இப்போது பாராளுமன்றம் அடுத்தது நம்பர் ஒன் சமாசாரம்தான் ஜனாதிபதி பதவி. எதுவும் உன்னைத் தடுக்க முடியாது." தேனீரைக் கொஞ்சம் உறிஞ்சி விட்டுச் சொன்னார்: "ஆனால் நீ முட்டாள்தனமாக எதுவும் செய்துவிடாமல் இருக்கவேண்டும்."

அவரை நிமிர்ந்து பார்த்தான் வார்னர் "என்ன சொல்கிறீர்கள்?"

கைக்குட்டையினால் உதடுகளை நாசூக்காய்த் துடைத்துக் கொண்டார் அவர். "உன்னோடு போட்டியிடு கிறவன் சரியான சாக்கடைப் பேர்வழி, பந்தயம் வேண்டு

மானாலும் கட்டுகிறேன். இந்த நிமிஷம் அவன் உன் வாழ்க்கையை மைக்ரோஸ்கோப் வைத்து அணு அணுவாய் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பது நிச்சயம். வாயை மெல்லுவதற்கு அவனுக்கு எதுவும் கிடைக்காதென்று நினைக்கிறேன். என்ன, கிடைக்காது இல்லையா?"

"கிடைக்காது," சட்டென்று அந்தச் சொல் வார்னரிடமிருந்து வந்தது.

"நல்லது. மேரி எப்படி இருக்கிறாள்?" என்று பேச்சை மெல்ல மாற்றினார் அதிபர்.

ஆனால் வார்னருக்கு அவர் பேச்சில் கவனம் செல்லவில்லை. அவன் மனம் குழம்பியிருந்தது.

அந்த வார இறுதியில் ஊருக்கு வெளியேயிருந்த ஒரு பங்களாவில் வார்னரும் ஜெனிபரும் தங்கினார்கள். வார்னரின் சினேகிதன் ஒருவனுக்குச் சொந்தமானது அது. எல்லா வசதியும் நிரம்பிய பங்களா.

நாள் பூரா மகிழ்ச்சியுடன் சுற்றினார்கள். இரவு கணப்பில் இதமாகக் குளிர் காய்ந்தபடி வாராந்தரப் பத்திரிகைகள் அனைத்தையும் புரட்டிப் பார்த்தார்கள். தேர்தல் பற்றிய எல்லாக் கணக்கெடுப்பிலும் வார்னர்தான் முன்னணியில் இருந்தான். அவனுடைய செயல் முறைகள், நாணயம், அறிவு, ஒளிவு மறைவின்மை இப்படிப் பலவற்றைப் பாராட்டி எழுதியிருந்தார்கள். கெனடிக்கும் அவனுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டியிருந்தார்கள்.

கணப்பின் முன்னே தரையில் கைகாலைப் பரப்பிய படி படுத்திருந்த வார்னர், நெருப்பின் நிழல்கள் ஜெனிபரின் முகத்தில் குதித்து விளையாடுவதை ரசித்தான். "ஏன் ஜெனிபர், ஒரு ஜனாதிபதியின் மனைவியாக இருக்கிற தென்றால் உனக்கு எப்படி இருக்கும்?"

"வேண்டாம். ஏற்கெனவே நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினரைக் காதலிக்கிறேன்," என்றாள் அவள் குறும்பாக.

"நான் ஜெயிக்கவில்லையென்றால் உனக்கு ஏமாற்ற மாயிருக்குமா, ஜெனிபர்?"

"இருக்காது. உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்பதால்தான் எனக்குப் பிடித்திருக்கிறதே தவிர, எனக்கு அதிலெல்லாம் ஆசை கிடையாது."

"நான் ஜெயித்தால் நீ என்னோடு வாஷிங்டனில் வசிக்க வேண்டியிருக்கும். பரவாயில்லையா?"

அவள் அயரவில்லை. "நாம் சேர்ந்திருப்பதுதான் முக்கியம். வேறெதைப் பற்றியும் அக்கறையில்லை."

"உன் வக்கீல் பிராக்டிஸ் என்ன ஆவது?"

ஜெனிபர் புன்னகை செய்தாள். "நான் கேள்விப்பட்ட வரையில் வாஷிங்டனிலும் வக்கீல் தொழில் செய்பவர்கள் இருக்கிறார்களாம்."

"வக்கீல் தொழிலை விட்டுவிடு என்று நான் சொன்னால்?"

"விட்டு விடுவேன்."

"ஊகூம். நீ விடக் கூடாது ஜெனிபர் இப்போதுதான் நீ வக்கீல் தொழிலில் பிரமாதமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாய்."

"உங்களுடன் சேர்ந்து இருப்பது ஒன்றுதான் எனக்கு முக்கியம்."

அவளுடைய பட்டுக் கூந்தலுக்குள் விரலைக் கொடுத்து மெல்ல அளைந்தான் அவன். "எனக்கும்தான், டார்லிங்."

அவர்கள் மகிழ்ச்சியுடன் படுக்கச் சென்றார்கள்.

இப்போதெல்லாம் ஜெனிபருக்கு மூச்சுவிட நேரமில்லாமல் போய் விட்டது. முன்பு 'பிஸி' என்று சொல்லும்படி இருக்கும். இப்போதோ அவளைக் கட்சிக்காரர்கள் முற்றுகையிட்டார்கள். சட்டத்தின் பிடியில் சிக்கிய சர்வதேச நிறுவனங்கள் அவளிடம் வந்தன. ஊழல் செய்த அரசியல்வாதிகள் வந்தார்கள் இக்கட்டில் மாட்டிக்கொண்ட சினிமா நட்சத்திரங்கள் வந்தார்கள் பாங்க் தலைவர்களும் வந்தார்கள். பாங்கைக் கொள்ளை யடித்த திருடர்களும் வந்தார்கள். அரசியல்வாதிகளும், தொழிற் சங்கத் தலைவர்களும் வந்தார்கள்.

பணம் கொட்டோ கொட்டென்று கொட்டியது. ஊழியர்களுக்கு அள்ளி அள்ளிப் போனசும் சம்பளமும் கொடுத்தாள் பயங்கர விலையுள்ள வெகுமதிகள் வழங்கினாள்.

ஒரு வழக்கில் அவள் ஆஜராகிறாள் என்று தெரிந்தால், எதிர்த் தரப்பிலுள்ளவர்கள் இரண்டாம் தர வக்கீலை அமர்த்தாமல் முன்னணி வக்கீல்களையே ஏற்பாடு செய்தார்கள். அமெரிக்காவின் மிகப் பெரிய வழக்கறிஞர் சங்கங்கள் அவளை உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டன.

நியூயார்க்கில் ஒரு வழக்கு நடக்கிறதென்றால், எதிர்த் தரப்பில் டிசில்வா தானே நேரில் ஆஜராவது வழக்கமாகி விட்டது.

ஜெனிபர் ஜெயிக்கும் ஒவ்வொரு முறையும் அவள்மீது அவருக்கு வெறுப்பு அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

20

ஜெனிபர் வழக்கில் ஜெயித்துவிட்டு அலுவலகத்துக்குத் திரும்பும் ஒவ்வொரு முறையும் நாலு டஜன் சிவப்பு ரோஜாக்கள் அவள் மேஜை மீது இருப்பது வழக்கம்.

மாரெட்டிதான் அனுப்பி வந்தான் தன் வாழ்த்துக் களுடன்.

ஒவ்வொரு முறையும் ஜெனிபர் அந்த வாழ்த்து அட்டையைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் எறிந்து விட்டு, ரோஜாப் பூக்களைத் தன் செக்ரட்டரியிடம் தூக்கிக் கொடுத்து விடுவாள். அந்தப் பூக்கள் மாரெட்டியிடமிருந்து வருகின்றன என்ற நினைப்பே அவளுக்கு அருவருப்பா யிருந்தது. பொறுக்க மாட்டாமல் ஒரு நாள் மாரெட்டிக்கு ஒரு கடிதமும் எழுதிப் போட்டாள் ரோஜாப் பூக்கள் அனுப்புவதை நிறுத்தும்படி.

அடுத்த வழக்கில் அவள் ஜெயித்துக் கோர்ட்டில் இருந்து திரும்பியபோது, அவளுக்காக மேஜையில் ரோஜாப் பூக்கள் காத்திருந்தன. இந்த தடவை நாலு டஜன் அல்ல ஐந்து டஜன்!

'மழைக் கோட்டுக் கொள்ளைக்காரன்' என்று பத்திரி கையில் பரபரப்பாகச் செய்தி வெளிவந்து கொண்டிருந்தது. அவனுக்காக ஜெனிபர் ஆஜராகியிருந்தாள்.

அவனை ஜெனிபரிடம் அனுப்பியவர் ரயன் பாதிரியார்தான்.

ஒருநாள் அவர் வந்து, 'என் சினேகிதன் ஒருவனுக்கு ஒரு சின்னப் பிரசினை என்று வழக்கம்போல் ஆரம்பித்ததும் ஜெனிபர் குபுக்கென்று சிரித்து விட்டாள். ரயன் பாதிரியாரும் அவளுடன் சேர்ந்து சிரித்துவிட்டு விவரத்தைச் சொன்னார்.

பாங்க் கொள்ளை நடந்தபோது மழை பெய்து கொண்டிருந்தது. நீண்ட கறுப்பு மழைக் கோட்டு அணிந்த ஒருவன் பாங்க்கிற்குள் நுழைந்தான். மழைக் கோட்டுக்குள் ஒரு துப்பாக்கியை ஒளித்து வைத்திருந்தவன், நேரே கேஷியரிடம் போய்த் துப்பாக்கியை நீட்டி, ரொக்கம் மொத்தமும் பறித்துக் கொண்டு ஓடிவிட்டான். மழைக்

கோட்டின் காலரைத் தூக்கி விட்டிருந்தபடியால் அவன் முகம் தெரியவில்லை. கொள்ளையடித்த பணத்துடன் வாசலில் தயாராய்க் காத்திருந்த காரில் ஏறிக்கொண்டு பறந்து விட்டான். அது ஒரு பச்சை நிற ஸெடான் கார் என்பதைப் பார்த்து இருக்கிறார்கள். ஆனால் மழைச் சேறு அடித்திருந்ததால் காரின் நம்பர் தெரியவில்லை.

கொள்ளையடித்த தொகை ஒன்றரை லட்சம் டாலர்.

பாங்க் கொள்ளைகளை விசாரிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் இருந்தது. எனவே, மத்திய அரசின் போலீசார் கம்ப்யூட்டர் மூலம் ஆராய்ச்சி செய்தார்கள். கொள்ளையடித்த முறை, கொள்ளையடித்தவனின் அடையாளங்கள் முதலிய தகவல்களைக் கம்ப்யூட்டரில் கொடுத்துத் துப்பறிந்தார்கள்.

கம்ப்யூட்டர் கொடுத்த முடிவை வைத்து, பால் என்பவனைக் கைது செய்து வழக்குத் தொடுத்திருந்தார்கள்.

ரயன் பாதிரியார் தன் நண்பர் என்று சொல்லிச் சிபாரிசு செய்தது இந்த ஆளைத்தான்.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாலை ஜெனிபர் போய்ப் பார்த்தாள்.

"கடவுள் மேல் ஆணையாகச் சொல்றேன், அம்மா. நான் கொள்ளையடிக்கவில்லை," என்றான் பால். அவனுக்கு வயது ஐம்பது இருக்கும்.

"இதோ பார், நீ குற்றவாளியா நிரபராதியா என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஒரு விஷயத்தில் மட்டும் நான் கண்டிப்பானவள். என்னிடம் பொய் சொல்லக் கூடாது. சொன்னால் அவர்களுடைய கேஸை எடுத்துக் கொள்ள மாட்டேன். தெரிகிறதா?" என்றாள் ஜெனிபர்

"ஐயையோ! நான் பொய் சொல்லலீங்க. என் அம்மா மேல் சத்தியம். நான் கொள்ளையடிக்கவில்லை," என்றான் அவன்.

இப்படிப்பட்ட சத்தியங்களை நம்புவதை ஜெனிபர் என்றைக்கோ நிறுத்திக் கொண்டு விட்டாள். அம்மாக்கள் மேல், மனைவிகள் மேல், குழந்தைகள் மேல், சத்தியம் வைக்கும் பல பேரை அவள் பார்த்தாயிற்று. இந்தப் பொய்ச் சத்தியங்களுக்குக் கடவுள் தண்டனை தருவதாக இருந்தால் உலகத்தின் ஜனத் தொகையில் ரொம்பக் குறைந்திருக்கும் என்று அவள் நினைப்பதுண்டு.

"பின்னே போலீசார் ஏன் உன்னைக் கைது செய் தார்கள்?" என்று கேட்டாள்.

கொஞ்சமும் தயங்காமல் பால் உடனே பதில் சொன்னான்: "பத்து வருஷத்துக்கு முன்பு நான் இதே மாதிரி ஒரு பாங்க் கொள்ளை நடத்தினேன். முட்டாள்தனமாக அப்போது மாட்டிக் கொண்டேன். இப்போதும் அதே மாதிரி கொள்ளை நடந்திருப்பதால் நான்தான் செய்தேனென்று என்னைப் பிடித்திருக்கிறார்கள்."

"இதே மாதிரி கொள்ளை என்றா சொல்கிறாய்? அதாவது இதே போல் மழைக் கோட்டு அணிந்து, இதே மாதிரி மழைக் கோட்டுக்குள் துப்பாக்கி ஒளித்து வைத்து..."

"ஆமாம். அப்போது போல் இந்தத் தடவையும் மழை பெய்து கொண்டிருந்த சமயம் பார்த்து எவனோ ஒருவன் பாங்க்குக்குள் நுழைந்து கொள்ளையடித்து இருக்கிறான்..."

"நிச்சயம் நீ கொள்ளையடிக்கவில்லை?" என்று மறுபடியும் கேட்டாள் ஜெனிபர்.

"இல்லவே இல்லை. எந்தப் பாவியோ பத்து வருடத்துக்கு முன்பு நான் செய்ததை அப்படியே காப்பியடித்துச் செய்திருக்கிறான்," என்றான் பால்.

வழக்கு விசாரணைக்கு வந்தது.

நீதிபதி, மகா கண்டிப்பானவர் என்று பெயர் பெற்றவர். யார் என்ன குற்றம் செய்தாலும் கண்காணாத

நீதிபதிக்கு அனுப்பிவிட வேண்டும் என்றும், ஆயுளுக்கும் அவர்கள் அங்கேதான் அடைபட்டிருக்க வேண்டும் என்றும் சொல்லி வருகிறவர் ஒருவன் முதல் தடவையாகத் திருடினால் அவனுடைய வலது கையை வெட்டிவிட வேண்டுமாம். இரண்டாவது தடவை திருடினால் இடது கையையும் வெட்டி விட வேண்டுமாம். அதுதான் சரியான முறை என்று பகிரங்கமாகச் சொல்லி வருகிறவர் அந்த நீதிபதி. இப்படிப்பட்டவரிடம் இந்தக் கேஸ் மாட்டிக் கொண்டதே என்று ஜெனிபருக்கு உள்ளூர உதைப்புத்தான்.

வழக்கின் முதல் நாளே ஜெனிபரிடம் கடுமையாகச் சொன்னார் நீதிபதி:

"இதோ பாருங்கள் மிஸ் ஜெனிபர். இந்தக் கோர்ட்டின் நேரத்தைக் கன்னாபின்னாவென்று வீணடிக்க நான் அனுமதிக்க மாட்டேன். சட்டுப் புட்டென்று வழக்கை முடிக்க வேண்டும். ஜூரர்கள் யார் யார் என்பதை..."

"ஜூரர்களே தேவை யிருக்காது, யுவர் ஆனர்," என்றாள் ஜெனிபர்.

நீதிபதி திடுக்கிட்டார். "என்னது! ஜூரரே தேவை யில்லையா?"

"ஆமாம், யுவர் ஆனர் என் கட்சிக்காரர் மீது போலீசார் போட்டிருக்கும் கேஸ் எடுத்த எடுப்பிலேயே விழுந்து விடப் போகிறது."

போலீஸ் அதிகாரி கோபத்துடன் எழுந்து கொண்டார். "யுவர் ஆனர், எங்கள் தரப்பில் கேஸ் வெகு பலமாக இருக்கிறது. இதே மாதிரியான கொள்ளையை, இதே மாதிரியான முறையில் செய்து இவன் ஏற்கனவே தண்டனை அடைந்திருக்கிறான் இவனைப் போலவே அடையாளங்கள் கொண்ட இரண்டாயிரம் பேரைக் கம்ப்யூட்டரில் கொடுத்ததில் இவனைக் கண்டெடுத்துக் கொடுத்திருக்கிறது. ஆகவே என்ன ஆனாலும் சரி, நாங்கள் இந்த வழக்கை விட்டுவிடப் போவதில்லை."

"என்னம்மா சொல்கிறீர்கள்?" என்றார் நீதிபதி ஜெனிபரிடம்.

"வழக்குக்கு ஆதாரமே கிடையாது என்றுதான் இப்போதும் சொல்கிறேன். யுவர் ஆனர், பால் கொள்ளை யடித்ததை நேரில் பார்த்து யாரும் அடையாளம் காட்டவில்லை. கொள்ளையடித்த பணத்தைப் பாலிட மிருந்து கைப்பற்றினார்களா என்றால் அதுவுமில்லை. வழக்குக்கு ஒரே ஆதாரம் போலீசின் கற்பனைதான்."

நீதிபதி கேட்டார்: "ஏன், கம்ப்யூட்டர் இவனைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறதே, அதற்கு என்ன சொல்கிறீர்கள்?"

ஜெனிபர் ஒரு பெருமூச்சு விட்டாள். "அதிலே ஒரு பிரசினை இருக்கிறது, யுவர் ஆனர்."

நீதிபதி இன்னும் கோபத்துடன், "ஆமாம்மா, பிரசினைதான். உயிருள்ள நபர் சாட்சி சொன்னால் அவனை உங்கள் இஷ்டப்படி குழப்ப முடியும். கம்ப் யூட்டரைக் குழப்ப முடியாதே! பிரசினைதான்!" என்றார்.

போலீஸ் அதிகாரியிடம் ஜெனிபர் கேட்டாள்: "நீங்கள் உபயோகித்த கம்ப்யூட்டர் ஐ.பி.எம். 370, 168. இல்லையா?"

"ஆமாம். உலகத்திலேயே அது தான் மிகச் சிறந்த கம்ப்யூட்டர் கருவியாக்கும்."

"ஏன்? கம்ப்யூட்டர் மீது பழி போடப் போகிறீர் களா?" என்றார் நீதிபதி கடுமையாக.

"இல்லை யுவர் ஆனர் அதே ரகக் கம்ப்யூட்டரில் தேர்ச்சி பெற்ற ஒரு நிபுணரை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். கம்ப்யூட்டர் மூலம் என் கட்சிக்காரரின் பெயரைப் போலீசாருக்குப் பொறுக்கியெடுத்துக்

கொடுத்தவரே அவர்தான். கோர்ட்டாரவர்கள் அவர் சாட்சி சொல்ல அனுமதிக்க வேண்டும்."

நீதிபதி அனுமதியளித்ததும் உயரமான ஒல்லியான நபர் ஒருவர் முன்வந்தார்.

ஜெனிபர் கூறினாள்:

"கம்ப்யூட்டரில் சில குறிப்பிட்ட தகவல்களைத் தந்தால் என் கட்சிக்காரர் பாலைப் போலவே வேறு சிலரையும் சந்தேகப்பட முடியுமல்லவா என்று இவரிடம், கேட்டேன் முடியும் என்றார் என் கட்சிக்காரருக்கு இருப்பது போன்ற சில பொதுவான குணாதிசயங்கள் உள்ள பத்துப் பெயர்களை இவரிடம் தந்தேன் ஒரே மாதிரியான வயது, உயரம், எடை, நிறம், சொந்த ஊர் இப்படிப்பட்ட விஷயங்களில் பொதுவான தன்மை கொண்டவர்களின் பெயர்களை இந்த நிபுணர் கம்ப்யூட்டருக்குக் கொடுத்தார்..."

நீதிபதி பொறுமையிழந்து, "எதற்கு இதையெல்லாம் சொல்கிறீர்கள்?" என்றார்.

"இந்த பாங்க் கொள்ளையைச் செய்திருக்க முடியும் என்று இன்னொரு குறிப்பிட்ட நபரின் பெயரைக் கம்ப்யூட்டர் எடுத்துக் கொடுத்திருக்கிறது, யுவர் ஆனர்," என்றாள் ஜெனிபர்

"இதெல்லாம் உண்மைதானா?" என்று கம்ப்யூட்டர் நிபுணரை நோக்கிக் கேட்டார் நீதிபதி.

"ஆமாம். இதோ அந்தப் பெயர்," என்று தயக்கத்துடன் ஒப்புக் கொண்ட நிபுணர், தன் பெட்டியிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துத் தர, கோர்ட்டு சிப்பந்தி அதை வாங்கி, நீதிபதியிடம் தந்தார்.

நீதிபதி ஒரே ஒரு பார்வைதான் அதைப் பார்த்தார்

அவர் முகம் ஜிவுஜிவுவென்று கோபத்தில் சிவந்தது.

கம்ப்யூட்டர் நிபுணரை நோக்கி, "என்னய்யா, விளையாடுகிறீரா?" என்று இரைந்தார்.

"இல்லை சார். உண்மை."

"பாங்க் கொள்ளையைச் செய்திருக்கக் கூடியவர் என்று என் பெயரை அல்லவா கம்ப்யூட்டர் எடுத்துக் கொடுத்திருக்கிறது?"

"ஆமாம் சார். கம்ப்யூட்டர் சொன்னதைத்தான் நான் குறிப்பிட்டுத் தந்திருக்கிறேன்."

ஜெனிபர் அமைதியாகச் சொன்னாள்: "யுவர் ஆனர், கம்ப்யூட்டர் என்பது ஒரு யந்திரம். அதற்குப் பகுத்தறியும் சக்தியெல்லாம் கிடையாது. அதனிடம் என்ன தகவல்கள் தருகிறோமோ அதை வைத்து அது பதில் கொடுக்கிறது. அவ்வளவே. என் கட்சிக்காரரும் தாங்களும் ஒரே வயது, ஒரே உயரம், ஒரே எடை. நீங்கள் இரண்டு பேரும் பச்சை ஸெடான் கார் வைத்திருக்கிறீர்கள். இரண்டு பேருக்கும் சொந்த ஊர் ஒன்றே தான். இதைவைத்துத் தங்களைக் குற்றம் சாட்டிவிட முடியுமா? ஆனால் இந்த மாதிரி தகவல்களை வைத்துத்தான் போலீசார் என் கட்சிக்காரர் மீது குற்றம் சாட்டி இருக்கிறார்கள்! பத்து வருடத்துக்கு முன்னால் இதே போல் ஒரு பாங்க் கொள்ளை செய்தவராம் என் கட்சிக்காரர். இருக்கலாம். அந்த வழக்கு எல்லாப் பத்திரிகைகளிலும் மிக விவரமாக வெளிவந்திருந்தது. லட்சக்கணக்கான பேர் அதைப் படித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவன், அதே வழிமுறையைக் கையாண்டு இந்தக் கொள்ளையை இப்போது செய்திருக்கலாமில்லையா?" நீதிபதியின் கையில் இருந்த கம்ப்யூட்டர் காகிதத்தைச் சுட்டிக் காட்டினாள் அவள். "எவ்வளவு மோசமான ஆதாரத்தின் மீது போலீசார் இந்த வழக்கை

ஜோடித்திருக்கிறார்கள் என்பதற்குத் தங்கள் கையிலுள்ள காகிதமே சான்று, யுவர் ஆனர்."

நீதிபதி அந்தக் காகிதத்தை வெறித்துப் பார்த்தார். போலீஸ் அதிகாரியை முறைத்துப் பார்த்தார். பிறகு ஜெனிபரிடம், "என் பெயரைத் தவிர வேறு யார் பெயரையேனும் கம்ப்யூட்டர் காட்டியதா?" என்றார்.

ஜெனிபர் சற்றுத் தயங்கினாள். பிறகு, "ஆமாம் யுவர் ஆனர் நியூயார்க் அரசாங்க வக்கீல் டிசில்வாவின் பெயரையும் காட்டியது," என்றாள்.

கொல்லென்ற சிரிப்புக் கோர்ட்டெங்கும் பரவியது.

பால் விடுதலை செய்யப்பட்டான்.

மறுநாள் மாலை அவள் கோர்ட்டிலிருந்து அலுவலகத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது ஒரு கறுப்பு நிறப் படகுக் கார் அவளை உரசினாற் போல் நின்றது.

அதை அவள் தாண்டிச் செல்ல முயன்றாள்.

"உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன் ஜெனிபர்," என்ற குரல் கேட்டது காருக்குள்ளிருந்து.

மாரெட்டி!

21

காருக்குள்ளிருந்து மாரெட்டி கூப்பிட்டதும் ஜெனிபர் அசைவற்று நின்றாள்.

அவ்வளவு நெருக்கத்தில் இருந்த போது, ஏதோவொரு மின்சார சக்தி அவனிடமிருந்து பாய்ந்து வருகிற மாதிரி இருந்தது.

"வழியை விடு," என்றாள் ஜெனிபர்.

கோபத்தில் அவள் முகம் சிவந்தது. முன்னைக் காட்டிலும் இன்னும் அழகாக இருக்கிறாள் என்று மாரெட்டி நினைத்துக் கொண்டான்.

"பொறுமை கண்ணு பொறுமை," என்று மாரெட்டி சிரித்தான். "எனக்கு என்ன வேணும்? உன்னோடு கொஞ்சம் பேசணும். நீ என்ன செய்யணும்? கொஞ்சம் என் பேச்சைக் கேட்கணும். அவ்வளவுதான். எனக்காக நீ செலவிடுகிற நேரத்துக்கு நான் பீஸ் வேணுமானாலும் தருகிறேன்."

"எனக்குப் பீஸ் தருகிற அளவுக்கு உன்னிடம் பணம் கிடையாது!" என்று கூறிவிட்டு அவள் அந்த இடத்தை விட்டு நகர முயன்றாள். அவளைச் சமாதானப்படுத்துகிற மாதிரி அவள் தோளில் கை வைத்தான் மாரெட்டி. அவளைத் தொட்டதுமே அவனுக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. தன் இனிமை மொத்தத்தையும் வெளிப்படுத்தி, "அறிவோடு நடந்து கொள் ஜெனிபர். நான் சொல்வதை முழுவதும் கேள். அப்புறம்தான் உனக்குத் தெரியும் எவ்வளவு பெரிய லாபத்தை வேண்டாமென்று சொல்கிறோம் என்பது. பத்தே நிமிஷம் கேள். அவ்வளவு தான். நான் உன் ஆபீசில் உன்னை இறக்கி விட்டு விடுகிறேன். போகிற வழியில் நாம் பேசலாம்."

ஜெனிபர் ஒரு வினாடி அவனை வெறித்து நோக்கினாள். பிறகு சொன்னாள்: "சரி, வருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. நான் கேட்கிற கேள்விக்கு நீ பதில் சொல்லணும்."

அவன் தலையாட்டினான் "ஓ, தாராளமாய்ச் சொல்கிறேன். கேள்."

"அன்றைக்கு செத்த சிட்டுக் குருவியைக் கொடுக்கச் சொல்லி டிசில்வாவிடம் என்னை மாட்ட வைத்தது யாருடைய வேலை?"

அவன் கொஞ்சமும் தயங்காமல், "ஏன்? என் வேலைதான்," என்றான்.

162897

ஏற்கெனவே அவள் ஊகித்தது தான். இப்போது ஊர்ஜிதமாகிவிட்டது. அவனை ஒரே வெட்டில் கொலை செய்து விட வேண்டும்போல் ஆத்திரம் பொங்கியது.

பல்லைக் கடித்துக்கொண்டு அவன் காரில் ஏறிக் கொண்டாள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான் அவளைக் கேட்காமலே டிரைவரிடம் அவள் அலுவலகத்தின் விலாசத்தைச்சொல்லி அங்கே போகச் சொன்னான்.

கார் போய்க் கொண்டிருந்த போது மாரெட்டி, "உனக்குப் பிரமாதமான வெற்றிகள் கிடைத்துக் கொண்டிருக்கிறதே? எனக்கு ரொம்ப சந்தோஷம்," என்றான்.

ஜெனிபர் அவன் பேச்சைப் பொருட்படுத்தாமல் மௌனமாகவே இருந்தாள்.

"நிஜமாகத்தான் சொல்கிறேன்," என்றான் அவன்.

"ஏதோ பேச வேண்டுமென்று சொன்னீர்கள். அதை இன்னும் சொல்லவில்லை," என்றாள் அவள்.

"உன்னைப் பணக்காரியாக்க ஆசைப்படுகிறேன்."

"ரொம்ப நன்றி. நான் இப்போது பணக்காரியாகத்தான் இருக்கிறேன்." அவன் மீதுள்ள வெறுப்பு அத்தனையும் அவள் குரலில் பிரதிபலித்தது.

மாரெட்டியின் முகம் சிறுத்தது. "உனக்கு ஒரு உபகாரம் பண்ணலாமென்று பார்க்கிறேன். நீ என்னடா வென்றால் என்னோடு சண்டை பிடித்துக் கொண்டே இருக்கிறாய்."

நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்து ஜெனிபர் சொன்னாள்: "உங்களிடமிருந்து எந்தவிதமான உபகாரமும் எனக்குத் தேவையில்லை."

குழைவாகவே அவன் பேசினான்: "நல்லது. உனக்குச் செய்துவிட்ட கெடுதிக்காக ஒரு சிறு பரிகாரம்

பண்ணலாமே என்று பார்க்கிறேன். இதோ பார், உனக்கு ஏகப்பட்ட கட்சிக்காரர்களை அனுப்பி வைக்கிறேன். எல்லாரும் பெரும்புள்ளிகள். எக்கச்சக்கமான பணம் வரும். நீ கற்பனை கூடச் செய்திருக்க மாட்டாய்."

ஜெனிபர் குறுக்கிட்டாள். "மிஸ்டர் மாரெட்டி, தயவு பண்ணி மேலே ஒரு வார்த்தைகூடப் பேசாதீர்கள். இரண்டு பேருக்குமே அது நல்லது."

"வந்து..."

"உங்களுக்காகவோ உங்கள் கட்சிக்காரர்களுக் காகவோ எந்த வழக்கையும் நான் ஏற்று நடத்தத் தயாராயில்லை."

"ஏன்?"

"அப்படி ஏற்று நடத்தினால் நான் உங்களுக்குக் கடன் பட்டவளாக ஆகிவிடுவேன். அதனால்தான்."

"எல்லாமே தப்பாக நினைத்திருக்கிறாய் நீ. என் சினேகிதர்கள் அத்தனை பேரும் சட்டத்துக்குட்பட்ட பிஸினஸ் செய்கிறவர்கள். அதாவது, பாங்க், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி -"

"எதற்கு வீண் பேச்சு? பயங்கரக் கும்பலுக்கு நான் எந்த உதவியும் செய்ய மாட்டேன்."

"பயங்கரக் கும்பலா! யார் சொன்னது?"

"அதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். எனக்குக் கவலையில்லை. என்னை யாரும் விலைக்கு வாங்கியதில்லை. இனிமேலும் அப்படி இருப்பதாகத்தான் உத்தேசம்."

சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்ததால் கார் நின்றது.

"லிப்ட் கொடுத்ததற்கு ரொம்ப நன்றி," என்று கூறிவிட்டு ஜெனிபர் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.

"மறுபடி எப்போது உன்னைப் பார்க்கட்டும்?" என்று மாரெட்டி கேட்டான்.

"பார்க்கவே வேண்டாம் மிஸ்டர் மாரெட்டி."

அவள் போவதையே பார்த்தபடி இருந்தான் அவன்.

'பெண்ணென்றால் இவளல்லவா பெண்!' என்று நினைத்துக் கொண்டான். அவன் உடம்பில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. என்றைக்காவது ஒரு நாள், எப்படியாவது இவளை அடையத்தான் போகிறோம் என்று அவனுக்குள் நிச்சயமாகத் தெரிந்தது.

அக்டோபர் மாதத்தின் கடைசி வாரம். பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இரண்டு வாரங்கள் தான் இருந்தன.

தேர்தல் மும்முரத்தைப் பார்க்கப் பார்க்க, வார்னரின் மனைவி சொன்னது சரிதான் என்று ஜெனிபர் உணர்ந்தாள். வார்னருக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. இப்போது போய் விவாகரத்து என்ற பேச்சு அடிபட்டால் ஆபத்துதான்...

அன்று அவள் அலுவலகத்துக்குள் நுழைந்ததுமே, செக்ரட்டரி விரைந்து வந்து, "அரை மணிக்குள் உங்களை மூன்று தடவை ரிக் கூப்பிட்டு விட்டார். வந்ததும் பேசச் சொன்னார்," என்றான்.

ரிக், உலகப் புகழ் பெற்ற மெல்லிசைப் பாடகன். கிராமத்தில் ஆடுமாடு மேய்த்துக்கொண்டிருந்த அனாதைச் சிறுவன், தன் குரல் வளத்தினால், உலகத்திலேயே சிறந்த பாடகனாக ஆகியிருந்தான். இசைத்தட்டு, நேரிடை நிகழ்ச்சி, டெலிவிஷன், திரைப்படம் இப்படிப் பலவற்றின் மூலம் வருஷத்துக்கு ஒன்றரைக் கோடி டாலர் வருமான முள்ளவனாகத் திகழ்ந்தான். இருபத்தைந்து வயது இளைஞன். ஜெனிபரின் முக்கியமான கட்சிக்காரர்களில் ஒருவன்

"அவன் கொடுத்துள்ள நம்பருக்கு டெலிபோன் போட்டுக் கொடு," என்றாள் செக்ரட்டரியிடம்.

ஐந்து நிமிடத்தில் ரிக் பேசினான். "ஒரு பிரசினை. உங்களை உடனே பார்த்தாக வேண்டும்."

"சரி, சாயந்தரம் இங்கே என் ஆபீசுக்கு வாருங்களேன்"

"ஸாரி, முடியாது. நான் மான்ட்டி கார்லோவில் இருக்கிறேன் ஒரு உதவி நிகழ்ச்சிக்காக வந்திருக்கிறேன் இளவரசி கிரேஸும் இளவரசரும் கூப்பிட்டதால் வந்தேன். நீங்கள் எத்தனை சீக்கிரம் இங்கே வர முடியும்?"

"ஊகூம், என்னால் முடியாது," என்றாள் ஜெனிபர். "இங்கே மேஜை நிறைய வேலை குவிந்து கிடக்கிறது."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் கட்டாயம் வந்தாக வேண்டும். இன்று சாயந்தரமே பிளேன் பிடித்து வந்து சேருங்கள்."

அவன் போனை வைத்து விட்டான்.

ஜெனிபர் யோசித்துப் பார்த்தாள். ரிக்கின் பிரசினை என்னவென்று புரியவில்லை. ஆனால் அதைப் போனில் பேச அவன் விரும்பவில்லை என்று தோன்றியது. பெண்கள் விஷயமாக இருக்கலாம். போதைப் பொருள் சம்பந்தப் பட்டதாக இருக்கலாம். கூட வேலை செய்யும் ஆட்களைப் பற்றியதாக இருக்கலாம்.

தன் ஜூனியர்களை அனுப்பி, பிரசினையைச் சமாளிக்கச் சொல்லலாமா என்று முதலில் நினைத்தாள். பிறகு தானே போவது என்று தீர்மானித்தாள். ரிக்கிடம் அவளுக்கு அலாதிப் பிரியம் இருந்ததும் காரணம்.

விமானப் பயணம் என்றால் ஜெனிபருக்கு எப்போதுமே பிடிக்கும். பூமியில் இருக்கிற தொல்லைகள், பிரசினைகளிலிருந்து விடுபட்டு, மொய்க்கிற கட்சிக்

காரர்களிடமிருந்து விலகி, சுதந்திரமாக ஆகாய வெளியில் பறப்பது தனி ஆனந்தம்.

ஆனால் இம்முறை ஏனோ விமானப் பயணம் சுகமாக இருக்கவில்லை. கால நிலை சரியில்லாததால் விமானம் குபீர் குபீரென்று ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது. ஜெனிபருக்கு வயிற்றில் ஏதோ ஒரு சங்கடம்...

நைஸ் விமான தளத்தில் இறங்கி, மான்ட்டி கார்லோவுக்கு ஹெலிகாப்டரில் பிரயாணம் செய்த போதும் அதே போல் தான் இருந்தது. ஆல்ப்ஸ் மலையின் அற்புதமான சிகரங்கள் கீழே தெரிந்தன. ஆனால் அதை ரசிக்கும் மனநிலை ஏனோ அவளுக்கு இல்லை.

மான்ட்டி கார்லோவில் அவளை அழைத்துப் போவதற்கு வந்திருந்தான் பாடகன் ரிக்.

"பிரயாணம் எப்படியிருந்தது?" என்று கேட்டவன், "ரொம்பக் களைப்பாக இருக்கிறீர்களே? என் விடுதிக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் ராத்திரி நிகழ்ச்சியில் நன்றாய்க் கலந்து கொள்ளலாம்," என்றான்.

"ராத்திரி நிகழ்ச்சியா? என்ன நிகழ்ச்சி?"

"நடன விருந்து. அதற்காகத்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள்."

அவளுக்குக் கோபமும் வந்தது. திகைப்பும் ஏற்பட்டது. "என்னது!"

"ஆமாம். எனக்குப் பிடித்தமான உங்களைக் கூப்பிடும்படி இளவரசி கிரேஸ் சொன்னார் எனக்கு உங்களைப் பிடிக்கும் அதனால் கூப்பிட்டேன்"

மடேல் மடேலென்று அவனை அடிக்கலாம் போலிருந்தது ஜெனிபருக்கு. வார்னர் காத்திருக்கிறான்

கட்சிக்காரர்கள் காத்திருக்கிறார்கள். கோர்ட்டில் வழக்குகள் காத்திருக்கின்றன.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு, மூவாயிரம் மைல்கள் பிரயாணம் செய்து இங்கே வந்திருக்கிறாள் ஒரு பார்ட்டிக்காக!

"ரிக், நீங்கள் செய்தது ரொம்ப அநியாயம்!" என்று கோபத்துடன் ஆரம்பித்தவள், அவனுடைய சிரித்த முகத்தைப் பார்த்ததும் அடக்கிக் கொண்டாள் சரி, இருக்கட்டும். நடன விருந்துகளில் கலந்துகொண்டு ரொம்ப நாளாயிற்று. தமாஷாய்ப் பொழுது போகலாம்...

கோலாகலமான நிகழ்ச்சியாக இருந்தது அது. பெரும் பெரும் கோடீசுவரர்களும் மன்னர்களும் கலந்து கொண்டார்கள் ரிக்கும் இன்னும் பல புகழ் பெற்ற பாடகர்களும் இசை நிகழ்ச்சி நடத்தினார்கள்

அதன் பின்னர் விருந்து நடைபெற்றது. பஃபே விருந்து. ஜெனிபரை ஏராளமான மன்னர்களுக்கும் சீமான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் அறிமுகம் செய்து வைத்தான் ரிக். இவ்வளவு பெரிய நிகழ்ச்சிக்குத் தகுந்தபடி உடை எடுத்து வரவில்லையே என்று ஜெனிபர் வருந்தினாள்.

ஸ்விட்ஜர்லந்து பாங்க்காரர்கள் இருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது, ஜெனிபருக்குத் தலை சுற்றுகிற மாதிரி இருந்தது. "மன்னியுங்கள்," என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, ரிக்கிடம் சென்றாள்.

"ரிக், எனக்கு... என்று ஆரம்பித்தபோதே, அவன், "என்ன உங்களுக்கு? உங்கள் முகம் ஏன் இப்படி வெளுத்துக் கிடக்கிறது? கொஞ்ச நேரம் படுத்திருங்கள் டாக்டரை வரவழைக்கிறேன்," என்றான்.

"டாக்டர் யாரும் தேவையில்லை எனக்கு அப்படியொன்றும் இல்லை." என்று அவள் சொன்னதை

அவன் கேட்கவில்லை. அறைக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்து, டாக்டரை வரவழைத்துவிட்டான்.

அவர் மிக வயதான டாக்டர், அனுபவசாலி.

ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி மருந்துகள் கொடுத்து விட்டு, மறுநாள் தன் ஆஸ்பத்திரிக்கு வரும்படி சொன்னார்.

அடுத்த நாள் டெஸ்டுகள் எடுத்துவிட்டு, "டெஸ்ட் ரிசல்ட் வர இரண்டு மூன்று நாளாகும். இங்கேயே இருங்கள்," என்றார்.

இரண்டு மூன்று நாளா!

"ரிசல்ட் வந்ததும் இந்த நம்பருக்குப் போன் செய்யுங்கள்," என்று குறித்துத் தந்துவிட்டு அவள் புறப்பட்டாள்.

அவள் போன பிறகுதான் டாக்டர் அந்த நம்பரைப் பார்த்தார்.

ஜெனிபரின் நியூயார்க் நம்பர் அது!

நியூயார்க்கை அடைந்து வீட்டை அடைந்து வெகு நேரம் தூங்கினாள். பதினொரு மணிக்கு டெலிபோன் மணியடித்தது.

வார்னர்தான் கூப்பிட்டான்.

"ஜெனிபர்! எங்கே போயிருந்தாய் நீ?"

குரலில் உற்சாகமும் தெம்பும் வரவழைத்துக் கொண்டாள் அவள் "மான்ட்டி கார்லோவுக்குப் போயிருந்தேன். ஒரு கட்சிக்காரரைப் பார்ப்பதற்காக."

"நான் கவலைப்பட்டுப் போய் விட்டேன். உடம்பு ஒன்றுமில்லையே?"

"ஒன்றுமில்லை... நன்றாய்த் தான் இருக்கிறேன் கொஞ்சம் அலைச்சல்...

"அப்பாடா! நான் என்னென்னவோ எண்ணிப் பயந்து விட்டேன்."

"எந்தக் கவலையும் வேண்டாம்," என்றாள் அவள். "தேர்தல் வேலைகள் எப்படி இருக்கிறது?"

"அருமையாய் நடந்து கொண்டிருக்கிறது. சரி, உன்னை எப்போது நான் பார்ப்பது? இப்போது நான் வாஷிங்டனுக்குப் போவதாக இருக்கிறேன் அதை வேண்டுமானால் நிறுத்தி விட்டு -"

"வேண்டாம். நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள்," என்றாள் ஜெனிபர். தான் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருப்பதை அவன் பார்ப்பதை அவள் விரும்பவில்லை, "எனக்கும் நிறைய வேலை இருக்கிறது. இந்தச் சனி ஞாயிறில் நாம் சேர்ந்து இருக்கலாம்."

"சரி." என்றான் அவன் அரைமனதாக "பதினொரு மணிக்கு உனக்கு வேறே முக்கியமான வேலை இல்லை யென்றால் டெலிவிஷன் பார். நான் ஒரு நிகழ்ச்சியில் பேசுகிறேன்."

"கட்டாயம் பார்க்கிறேன் டார்லிங்," என்றாள்.

ஆனால் டெலிபோனை வைத்த ஐந்தாவது நிமிடமே அவள் தூங்கிப் போனாள்.

மறுநாள் காலை செக்ரட்டரிக்குப் போன் செய்து, தான் அன்று ஆபீசுக்கு வரவில்லை என்று தெரிவித்தாள். இரவு பூரா அவள் தூங்கவில்லை. காலையில் எழுந்த போதும் ஒரே அசதியாக இருந்தது. ஏதாவது சாப்பிடலா மென்று பார்த்தாள் உணவு இறங்கவில்லை. ஒரே பலவீனமாயிருந்தது. சென்ற மூன்று நாளில் ஆகாரம் எதுவுமே சாப்பிடவில்லை என்பது நினைவு வந்த போது ஆச்சரியமாயிருந்தது.

தன் உடம்பைப் பற்றிப் பயங்கரமான கற்பனைகள் எழுந்தன. கான்ஸராக இருக்குமோ? மார்பை அழுத்திப் பார்த்துக் கொண்டாள் ஏதாவது கட்டி தெரிகிறதா என்று பார்த்தாள் எதுவும் தெரியவில்லை. ஆனால் கான்ஸர் மார்பிலேதான் வருமா என்ன? எங்கே வேண்டுமானாலும் வருமே?

யாருமே உதவிக்கு இல்லாமல் அனாதையாக ஆகிவிட்ட மாதிரி இருந்தது. எப்போதுமே அற்புதமான ஆரோக்கியத்துடன் இருந்து வருகிறவள் அவள். இப்போது என்ன வந்தது திடீரென்று? தன் உடம்பு தனக்கு துரோகம் செய்து விட்டாற் போன்று இருந்தது.

உயிருக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ என்று அஞ்சினாள். வாழ்க்கை இப்போதுதான் அற்புதமாக மாறிக் கொண்டிருக்கிறது. இப்போது போய் உயிரை இழப்பதா?

சீ சீ! எல்லாம் அபத்தமான கற்பனை. எல்லாம் பிரமாதமாக இருக்கப் போகிறது. பிரமாதமாக இருக்கப் போகிறது...

குபீரென்று மறுபடி தலை சுற்றியது.

டெலிபோன் மணியடித்தது.

மான்ட்டி கார்லோவிலிருந்து அந்த வயோதிக டாக்டர்தான் கூப்பிட்டார்.

"எப்படியிருக்கிறீர்கள் ஜெனிபர்?" என்றார்.

"அப்படியேதான் இருக்கிறது டெஸ்ட் ரிசல்ட் வந்துவிட்டதா?"

"வந்துவிட்டது. நல்ல நியூஸ்தான். நீங்கள் தாயாகப் போகிறீர்கள்," என்றார் டாக்டர்.

22

'நீங்கள் தாயாகப் போகிறீர்கள்!'

டெலிபோனில் டாக்டர் சொன்னதைக் கேட்டதும் என்ன கூறுவதென்று ஜெனிபருக்குத் தெரியவில்லை. உணர்ச்சிகள் மரத்துப்போனவள்போல் டெலிபோனையே வெறித்துப் பார்த்தவளாக உட்கார்ந்திருந்தாள் பிறகு சுதாரித்துக் கொண்டவளாக, "வந்து... நிச்சயமாய்த்தான் சொல்கிறீர்களா?" என்றாள்.

"ஒரு சந்தேகமுமில்லை. இது தான் உங்களுக்கு முதல் பிரசவம் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?"

"ஆமாம்."

"ஒரு நல்ல பிரசவ நிபுணரை உடனே போய்ப் பாருங்கள். எவ்வளவு சீக்கிரம் பார்க்கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது. ஆரம்பத்திலேயே கோளாறுகள் இருப்பதால் பிற்பாடு சிரமப்படுமோ என்று தோன்றுகிறது."

"பார்க்கிறேன்," என்றாள் ஜெனிபர். "கூப்பிட்டுச் சொன்னதற்கு ரொம்ப நன்றி டாக்டர்."

ரிசீவரைத் திரும்ப வைத்து விட்டு வெகு நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தாள். அவள் உள்ளத்தில் குழப்பம் கூத்தாடியது. எப்போது இது நேர்ந்திருக்கும்? சந்தோஷப் படுவதா, வருத்தப்படுவதா? அவளால் ஒழுங்காகச் சிந்தனை செய்ய முடியவில்லை.

வார்னரின் குழந்தை அவள் வயிற்றிலே உருவாகி இருக்கிறது! திடீரென்று அவளுக்கு மகிழ்ச்சி பொங்கியது. வார்னரின் குழந்தை! அவள் வயிற்றில்!

வர்ணிக்க முடியாத, விலை மதிக்க முடியாத பரிசொன்று அவளுக்குக் கிடைத்த மாதிரி இருந்தது.

தெய்வம் என் பக்கத்தில் இருக்கிறது! இல்லாவிட்டால் இவ்வளவு கச்சிதமாக நேரம் பொருந்தி வந்திருக்குமா? தேர்தல் சீக்கிரமே முடிந்துவிடும். உடனேயே அவளும் வார்னரும் கல்யாணம் செய்து கொண்டு விடுவார்கள். நிச்சயம் பையன்தான் பிறப்பான்.

உடனே வார்னருக்குச் சொல்ல வேண்டும் என்று மனம் பரபரத்தது. அவனுடைய அலுவலகத்துக்குப் போன் செய்தாள்.

"மிஸ்டர் வார்னர் இன்னும் வரவில்லை," என்றாள் அவன் செக்ரட்டரி. "அவருடைய வீட்டுக்கு வேணுமானால் போன் பண்ணிப் பாருங்கள்."

வார்னரின் வீட்டுக்குப் போன் செய்ய ஜெனிபருக்குக் கொஞ்சம் தயக்கம்தான். ஆனால் இந்தச் சந்தோஷ செய்தியை அவனிடம் சொல்லாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது. ஆகவே கூப்பிட்டாள்.

வார்னரின் மனைவி மேரிதான் போனை எடுத்தாள்.

ஜெனிபர் மன்னிப்புக் கேட்கும் குரலில், "தொந்தரவு செய்வதற்கு மன்னியுங்கள். வார்னரிடம் அவசரமாக ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது. நான் ஜெனிபர் பேசுகிறேன்," என்றாள்.

"நீ கூப்பிட்டதைப் பற்றி எனக்குச் சந்தோஷம்," என்றாள் மேரி. அந்தக் குரலில் தென்பட்ட பரிவு ஜெனிபருக்குத் தைரியம் கொடுத்தது. "வார்னர் ஏதோ கூட்டத்தில் பேசுவதற்காகப் போயிருக்கிறார். இன்று ராத்திரி வந்து விடுவார். நீ இங்கே வாயேன். நாம் எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம். ஏழு மணிக்கு வந்து விடுகிறாயா?"

ஒரு நிமிடம் தயங்கிய பின், "ஓ! கட்டாயம் வருகிறேன்," என்றாள் ஜெனிபர்.

எப்படித்தான் எந்த விபத்திலும் சிக்காமல் ஜெனிபர் கார் ஓட்டிச் சென்றாளோ, அதிசயம்தான். வார்னரின் வீட்டுக்குச் செல்லும் வழியெல்லாம் அவள் மனம் கடந்த காலத்தைப் பற்றிய கற்பனைகளில் மிதந்து கொண்டிருந்தது. குழந்தைகள் பெற்றுக் கொள்வதைப் பற்றி அவளும் வார்னரும் எவ்வளவு முறை பேசியிருக்கிறார்கள்! "உனக்கு இரண்டு குழந்தைகள் பிறக்க வேண்டும் ஜெனிபர் இரண்டும் உன்னை உரித்து வைத்த மாதிரி இருக்க வேண்டும்," என்று ஒரு முறை அவன் சொன்ன வார்த்தைகள் அப்படியே இப்போது ஞாபகம் வந்தன.

காரோட்டிச் செல்லும்போது அடிவயிற்றில் ஏதோ ஓர் அசைவு ஏற்படுவதுபோல் தோன்றியது. சே, பைத்தியக் காரத்தனம் என்று எண்ணிக்கொண்டாள். அதற்குள்ளேயா குழந்தை அசைய ஆரம்பிக்கும்? ஆனால் கொஞ்ச நாளில் அதன் அசைவு தெரியும். வார்னரின் குழந்தை அவள் வயிற்றில் வளர்கிறது. ஜீவனுள்ள சிசு. விரைவில் கையைக் காலை உதைத்துக் கொள்ளும். அதை நினைக்கும்போதே நினைப்பதற்கே அற்புதமாக, பரவசமாக...

பின்னால் யாரோ பலமாக ஹாரன் அடிப்பது காதில் விழுந்ததும் தான் அவள் விழித்துக் கொண்டாள். பக்க வாட்டில் பார்த்தபோது, ஒரு லாரியைக் கிட்டத்தட்ட மோதுகிற மாதிரி தான் காரை ஓட்டிவிட்டது தெரிந்தது. நல்லவேளை. அந்த லாரி டிரைவர் தன் வண்டியைச் சட்டென்று சாலை ஓரத்துக்கு ஒதுக்கிக் கொண்டான்.

முறைப்புக்குப் பதிலாக ஜெனிபர் ஒரு புன்னகை மூலம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். இன்றைக்கு யாருடனும் சண்டை போடக் கூடாது. இன்று ஓர் அற்புத மான சிறப்பான நாள். யாருடனும் சண்டை போட்டு இன்றைத் தினத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது.

வார்னரின் வீட்டு வாசலில் காரை நிறுத்தியபோது பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. மரங்களுக்குப் பவுடர்

ஒற்றிய மாதிரி இனிமையான பனிப் பொடிகள் விழுந்து கொண்டிருந்தன. வாசல் கதவைத் திறந்து வரவேற்றாள் மேரி. நீல நிறத்தில் நீளமான புரோகேட் கவுன் அணிந்திருந்தாள். அவள் முகத்தில் அமைதியானதொரு மகிழ்ச்சி பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஜெனிபரைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள். முதல் தடவை சந்தித்தபோது எப்படிப் பிரியம் காட்டினாளோ அதைபோல இப்போதும் இருப்பதாக ஜெனிபருக்குத் தோன்றியது.

மேரியின் முகத்தில் பிரகாசம் பளபளத்தது மட்டுமல்ல. சின்னச் சின்ன விஷயங்களைப் பற்றியெல்லாம் அரட்டை யடித்து, வந்திருப்பவளின் கூச்சத்தைப் போக்கினாள். இருவருமாக வார்னரின் நூலக அறையை அடைந்தார்கள். சடபடவென்ற உற்சாகமான ஓசைகளுடன் கணப்பில் சுள்ளிகள் எரிந்து கொண்டிருந்தன.

"வார்னர் இதுவரை போன் பண்ணவில்லை," என்றாள் மேரி. "பொதுக் கூட்டத்தில் பிடித்து வைத்துக் கொண்டு விட்டார்கள் போலிருக்கிறது. அவர் வருகிறபோது வரட்டும். அதுவரை நீயும் நானும் ஊர்க் கதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாமே? ஆமாம், டெலிபோனில் கூப்பிட்டபோது என்னவோ ரொம்பப் பரபரப்பாய் இருந்தாயே?" ரொம்ப அந்தரங்கமாய்ப் பேசுகிறவள் போல ஜெனிபரை நோக்கிக் குனிந்தாள் "ஏதோ பிரமாதமான நியூஸ் வைத்திருக்கிறாய், இல்லையா? என்னிடம் சொல்லக்கூடாதா?"

சினேகம் நிறைந்த அந்த முகத்தைப் பார்த்தாள் ஜெனிபர் அவளையுமறியாமல் சொல்லிவிட்டாள்: "வார்னரின் குழந்தை என் வயிற்றில் வளருகிறது."

மேரி பின்னுக்கு நன்றாகச் சாய்ந்து கொண்டு புன்னகை செய்தாள் "பேஷ்! பேஷ்! இது ஒரு வேடிக்கைதான் ஏனென்றால் நானும் கர்ப்பமா யிருக்கிறேன்."

அதிர்ச்சியில் ஜெனிபர் பேச்சற்றுப் போனாள் மேரியை வெறித்து நோக்கினாள். "நான்... எனக்குப் புரிய வில்லையே?"

மேரி சிரித்தாள். "புரிவதற்கென்னம்மா இருக்கிறது இதில்? ரொம்ப ஸிம்பிள் விஷயம். வார்னரும் நானும் கல்யாணமானவர்கள். உனக்குத் தெரிந்ததுதானே?"

ஜெனிபர் மெதுவாகச் சொன்னாள்: "ஆனால் நீங்களும் வார்னரும்... விவாகரத்து செய்து கொள்ளப் போகிறீர்களே?"

"என்னம்மா நீ, சுத்தப் பைத்தியக்காரப் பெண்ணாக இருக்கிறாயே! வார்னரை நான் எதற்காக விவாகரத்து செய்யணும்? அவர் மீது நான் உயிரையே வைத்திருக் கிறேன்."

ஜெனிபருக்குத் தலை கிறுகிறுவென்று சுழன்றது. அர்த்தமில்லாமல் என்ன சம்பாஷணை இதெல்லாம்? "நீங்கள்... காதல்..." என்று தடுமாறினாள்.

"ஆமாம், நான் வார்னரைக் காதலிக்கிறேன் என்று அன்றைக்குச் சொன்னேன். முதல் தடவை அவரைப் பார்த்த போதே எனக்கு அவர் மீது காதல் ஏற்பட்டு விட்டது என்று உன்னிடம் சொல்லவில்லையா?"

'இவள் சொல்வதெல்லாம் பொய்! பொய்!' என்று ஜெனிபரின் உள்ளம் அலறிற்று. வேண்டுமென்றே விளையாடுகிறாள். பயங்கரமாய் விளையாடுகிறாள்!

"நிறுத்துங்கள் உங்கள் கதையை!" என்றாள் பதைப்புடன். "வார்னரும் நீங்களும் அண்ணன் தங்கை மாதிரி வாழ்ந்து வந்தீர்கள். அவர் ஒரு நாள்கூட உங்களுடன் படுத்தது கிடையாது!"

கலகலவென்ற சிரிப்புடன் வந்தது மேரியின் குரல். "அசட்டுப் பெண்ணம்மா நீ! உன்னை எவ்வளவோ

புத்திசாலி என்று நினைத்திருந்தேன் ஆனால்... ஜெனிபரிடம் ரொம்ப அனுதாபம் கொண்டவள்போல அவளை நோக்கிக் குனிந்து கொண்டாள்: "வார்னர் சொன்னதைப் போய் நம்பியிருக்கிறாயே! நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். நிஜமாகத்தான் சொல்கிறேன் ரொம்ப வருத்தமாயிருக்கிறது எனக்கு."

தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் தவித்தாள் ஜெனிபர்: "வார்னர் என்னைக் காதலிக்கிறார். நாங்கள் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறோம்."

மேரி தலையை அசைத்தாள் அது ஒருபோதும் நடவாது என்று சொல்வது போல. அவளுடைய நீலக் கண்கள் ஜெனிபரின் கண்களை நேரடியாகச் சந்தித்தன. அந்தக் கண்களில் வெளிப்பட்ட பச்சையான வெறுப்பு! ஒரு கணம் ஜெனிபரின் இருதயத் துடிப்பே நின்றுவிட்டது.

மேரி ஏளனமாகச் சொன்னாள்: "வார்னர் உன்னை கல்யாணம் செய்து கொண்டால், இருதாரம் மணந்த குற்ற வாளியாக ஆவார். ஒருநாளும் நான் அவருக்கு விவாகரத்து கொடுக்கப் போவதில்லை. வார்னருக்கு விவாகரத்து அளித்து உன்னை மணக்கும்படி நான் விட்டேனானால் தேர்தலில் நிச்சயமாகத் தோற்றுப் போவார். அதற்கு நான் இடம் தரமாட்டேன். பாராளுமன்றத் தேர்தலில் ஜெயிக்கப் போகிறார். படிப்படியாக முன்னேறி ஜனாதிபதியாவார். நாங்கள் வெள்ளை மாளிகையில் குடியேறுவோம். அதாவது நானும் வார்னரும். உனக்கு அவர் வாழ்க்கையில் கடுகத்தனையும் இனி இடம் கிடையாது. இதற்கு முன்பும் இருந்ததில்லை. உன்மீது காதல் கொண்டிருப்பதாக அவராகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறார், அவ்வளவு தான். அவருடைய குழந்தை என் வயிற்றில் வளர்கிறது என்று தெரிந்த நிமிடமே அவர் எண்ணம் மாறிவிடும். ஒரு குழந்தை வேண்டும் என்று வார்னருக்கு ரொம்ப நாளாகவே ஆசை."

தலைக்குள்ளே தாள முடியாத வலி ஏற்பட்டு, கண்ணை இறுக மூடிக் கொண்டாள் ஜெனிபர்.

மேரி வெகு அக்கறையாக, "ஏதாவது சாப்பிடு கிறாயாம்மா?" என்றாள்

ஜெனிபர் கண்ணைத் திறந்தாள் "நீங்கள் கர்ப்ப மாயிருக்கும் சமாசாரத்தை வார்னரிடம் சொல்லி விட்டீர்களா?"

"இன்னும் இல்லை," என்று புன்சிரிப்புடன் சொன்னாள் மேரி. "இன்று ராத்திரி வந்துவிடுவார் இல்லையா? இரண்டு பேரும் படுத்திருக்கும்போது சொல்லலாமென்றிருக்கிறேன்"

வெறுப்புப் பீறீட்டுக் கொண்டு வந்தது ஜெனிபருக்கு "நீ ஒரு பிசாசு..."

"அதெல்லாம் கண்ணோட்டத்தைப் பொறுத்ததம்மா. நான் வார்னரின் மனைவி. நீ அவருடைய வைப்பாட்டி"

ஜெனிபர் எழுந்து கொண்டாள் அவள் தலை சுழன்றது. மண்டைக்குள் தடால் தடாலென்று சம்மட்டியால் பிளக்கிற மாதிரி இருந்தது. செவிகளில் பெரும் இரைச்சல் கேட்டது. எந்த நிமிஷத்திலும் மயக்கம் போட்டு விழுந்து விடுவோம். என்று பயந்தாள். கால்கள் தள்ளாட நடந்து வாசற்படியை அடைந்தவள்

கதவில் சாய்ந்துகொண்டு நின்றாள். சிந்திப்பதற்கு முயன்றாள். அவளைக் காதலிப்பதாக எவ்வளவு சொன்னார் வார்னர்! ஆனால் இந்தப் பெண் பிள்ளையுடன் படுத் திருக்கிறார் இவளைக் கர்ப்பமாக்கியிருக்கிறார்!

மெல்ல வெளியேறி நடந்தாள் குளிர் நடுக்கும் இரவில்.

ஜெனிபருக்குப் புரிந்து விட்டது.

வார்னருடன் சரசமாடி ஏமாற்றியிருக்கிறாள் மேரி. அவனைத் தன்னுடன் படுக்கும்படி செய்து, கர்ப்பம் உண்டாகும்படி பண்ணிக் கொண்டிருக்கிறாள்.

அது நன்றாகவே புரிந்தது ஜெனிபருக்கு. என்றாலும், வார்னரின் வாயால் அதைக் கேட்க விரும்பினாள்.

ஆனால் வார்னருடன் பேச வேண்டுமென்று ஜெனிபர் எவ்வளவு முயன்றாலும் முடியவில்லை.

தேர்தல் பிரசாரம் வெகு மும்முரத்தில் இருந்தது. மாநிலம் பூராவும் சுற்றிக் கொண்டிருந்தான் வார்னர். ஜெனிபருக்கு டெலிபோன் செய்ய அவன் பலமுறை முயன்றான். ஆனால் எப்போதும் ஒரு பரிவாரம் அவனைச் சூழ்ந்த வண்ணமாகவே இருந்தது. ஆகவே மனம் விட்டுப் பேச முடியவில்லை. ஜெனிபராலும், தான் கர்ப்ப முற்றிருக்கும் விஷயத்தைச் சொல்ல முடியவில்லை.

"இன்னும் கொஞ்ச நாளில் ஊருக்கு வந்து விடுவேன். அப்போது பேசிக் கொள்ளலாம்," என்று வார்னர் சொல்லியிருந்ததால் காத்திருப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

தேர்தலுக்கு ஐந்து நாள்தான் இருந்தது. வார்னர்தான் ஜெயிக்கப் போகிறான் என்று எல்லாருமே சொன்னார்கள். ஏனெனில் அவனுடன் போட்டியிட்ட ஆளைக் காட்டிலும் வார்னருக்குத் தகுதிகள் அதிகம் இருந்தன.

அடுத்த கட்டம் அமெரிக்காவின் ஜனாதிபதி பதவிதான் என்று மேரி சரியாகத்தான் சொல்லியிருக்கிறாள் என்று ஜெனிபருக்குத் தோன்றியது. பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருந்து என்னதான் நடக்கிறது என்று பார்க்க வேண்டியதுதான்.

பாராளுமன்றத் தேர்தலில் வார்னர் வெற்றி பெற்று விட்டால் நாம் அவனை இழப்பது நிச்சயம். மேரியுடன் அவன் வாஷிங்டனுக்குப் போய் விடுவான். அதன் பிறகு

விவாகரத்துக்கு வழியே கிடையாது. புத்தம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற ஒரு பாராளுமன்ற உறுப்பினர், கர்ப்பமாயிருக்கிற தன் மனைவியை விவாகரத்து செய்துவிட்டு, கர்ப்பமாயிருக்கிற ஒரு வைப் பாட்டியைக் கல்யாணம் செய்து கொள்வதா! அந்தப் பழிச் சொல்லிலிருந்து அவன் என்றென்றும் மீள முடியாது.

வார்னர் தோற்றுப் போனால்?

சுதந்திர மனிதன்!

சுதந்திரமாக வக்கீல் தொழிலுக்குத் திரும்பிச் செல்லலாம். சுதந்திரமாக ஜெனிபரை மணம் செய்து கொள்ளலாம். உலகத்திலே யார் என்ன பேசினாலும் அவன் துளியும் லட்சியம் செய்யத் தேவையில்லை. ஆயுள் பூராவும் அவர்கள் சேர்ந்து வாழ்க்கை நடத்தலாம்... பிள்ளை பெற்றுக் கொள்ளலாம்...

தேர்தல் நாளும் வந்தது. மழையும் குளிருமான தினம். என்றாலும் பலமான போட்டியாகையால், வாக்களிப் போரின் எண்ணிக்கை எக்கச்சக்கமாக இருந்தது.

காலையில், நேரம் கழித்தே ஜெனிபர் வாக்களிக்கச் சென்றாள். வாக்குச் சாவடிக்குள் நுழையும் போது அவள் மனத்தின் ஒரு பகுதி அழுது கொண்டிருந்தது: 'வார்னரை ஆதரித்துப் போடும் ஓட்டு, ஜெனிபரை எதிர்த்துப் போடும் ஓட்டு...

வார்னருக்கு ஓட்டுப் போட்டு விட்டு வாக்குச் சாவடியை விட்டு வெளியே வந்தாள்.

ஏனோ அன்று அலுவலகத்துக்குப் போக அவளுக்குத் துணிவு வரவில்லை.

மாலை வரையில் தெருக்களில் அலைந்து கொண்டிருந்தாள் எதையும் நினைக்கக் கூடாதென்று எண்ணினாள். ஆனால் நினைத்துக் கொண்டேயிருந்தாள்.

எதைப் பற்றியும் உணரக் கூடாதென்று எண்ணினாள் ஆனால் உணர்ந்து கொண்டேயிருந்தாள்.

அவள் எதிர்காலம் எப்படி அமையும் என்பது இன்னும் சில மணி நேரங்களில் தெரிந்துவிடப் போகிறது.

இன்னும் சில மணி நேரங்களில்.

23

சமீப வருடங்களில் தேர்தலில் இவ்வளவு கடுமையான போட்டி இருந்ததில்லை," என்று டெலிவிஷன் அறிவிப்பாளர் சொல்லிக் கொண்டு இருந்தார்.

இரவு ஜெனிபர் வீட்டில் உட்கார்ந்து கொண்டு தேர்தல் முடிவுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். சாயந்தரம் ஏதோ பெயருக்குக் கொஞ்சம் கொறித்ததோடு சரி. வேறு எதுவும் அவள் சாப்பிடவில்லை. ஒரு போர்வையைப் போர்த்திக்கொண்டு நாற்காலியில் சுருட்டி மடக்கிக் கொண்டு டெலிவிஷனைப் பார்த்தவாறு இருந்தாள்.

கோடானுகோடி பேருக்கு இப்போது ஒளிபரப்பாகிக் கொண்டிருப்பது தேர்தல் முடிவல்ல, தன்னுடைய தலைவிதிதான் என்று அவளுக்குத் தோன்றியது.

இதே நேரத்தில் எவ்வளவோ லட்சக் கணக்கானோர் இதேபோல் டிவியைக் கவனித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். இன்னார் ஜெயிக்க வேண்டும், இன்னார் தோற்க வேண்டும் என்று அவர்கள் ஒவ்வொருவரும் கவலையுடன் காத்திருப்பார்கள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம் இருக்கும்.

'ஆனால் இந்தத் தேர்தலில் முடிவைப் பற்றி நான் கொண்டிருக்கும் அக்கறையும் கவலையும் அலாதியானது

இதுபோல வேறு யாருக்கும் இருக்க முடியாது,' என்று ஜெனிபருக்குத் தோன்றியது. வார்னர் ஜெயித்தால் அத்தோடு அவர்களுடைய உறவு சரி. உறவு மட்டுமா? அவள் வயிற்றில் உள்ள கருவும் அத்தோடு சரி...

திடீரென்று ஒரு நிமிடம் வார்னரை டி.வி.யில் காட்டினார்கள். அவன் பக்கத்தில் மேரி. ஏதோ இரண்டு வார்த்தை அவள் பேசினாள்.

மனிதர்களின் மனத்தில் ஓடும் எண்ணம் என்ன, அவர்களுடைய நோக்கம் எப்படிப்பட்டது என்று கண்டுபிடிக்கும் திறமை தனக்கு உண்டு என்று ஜெனிபர் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வது உண்டு. ஆனால் இன்று மேரியை அவளால் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்றே! நாக்கில் தேன் தடவுகிற மாதிரி நடந்து கொண்ட இந்த மோசக்காரியிடம் எப்படி ஏமாந்து விட்டாள்!

வார்னரும் மேரியும் சேர்ந்து படுத்திருக்கும் காட்சியும், மேரி தாயாகும் காட்சியும் ஜெனிபரின் கண் முன்னே தோன்றிக் கொண்டேயிருந்தன. கஷ்டப்பட்டு அவற்றைப் பின்தள்ளினாள்.

"இதோ லேட்டஸ்ட் தேர்தல் நிலவரம்..." என்று டி.வி. அறிவிப்பாளர் சொல்லிக் கொண்டிருந்தார். வார்னரின் தேர்தல் முடிவுகள் தொகுதி வாரியாக வந்து கொண்டிருந்தன.

யாரைவிட யார் எத்தனை சதவிகிதம் கூடுதல் வாக்குகள் பெற்று வருகிறார்கள் என்ற புள்ளி விவரத்தை அறிவிப்பாளர் சொல்லிக் கொண்டிருந்தார்

ஜெனிபர் விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள். அவள் வாழ்வைத்தான் சதவிகிதம் சதவிதமாகக் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

எல்லா இடங்களிலுமே இரு வேட்பாளர்களின் வாக்குகளின் எண்ணிக்கையும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகத் தான் இருந்தது.

...அறுபத்து நாலு சதவிகித ஓட்டுக்களை இதுவரை எண்ணியாயிற்று. வார்னரைக் காட்டிலும் டவுன்பிரிட்ஜ் இரண்டரைச் சதவிகிதம் ஓட்டு அதிகமாகப் பெற்றிருக் கிறார் இதே போக்கு நீடித்தால் டவுன்பிரிட்ஜ் வெற்றி வெற்றி பெற்றுவிடுவார் என்று தோன்றுகிறது...''

இதயம் தட்தட்டென்று அடித்துக் கொள்ள ஜெனிபர் அசையாமல் டெலிவிஷனையே பார்த்தபடி உட்கார்ந் திருந்தாள்.

வார்னரும் ஜெனிபருமா, அல்லது வார்னரும் மேரியுமா என்பதைப் பற்றியே லட்சக்கணக்கான பேர் வாக்களித்திருக்கிறார்கள் என்று அவளுக்குத் தோன்றியது.

முடிவுகளைக் கேட்டுக் கொண்டிருக்கையில் அவளுக்குத் தலைக்குள் ஒரு கிறுகிறுப்பு ஏற்பட்டது. எழுந்து போய் ஏதாவது சாப்பிட்டால் தேவலை. வேண்டாம். இப்போது எழுந்து போகக் கூடாது. இதோ எதிரேயுள்ள டிவி திரையில் என்ன செய்தி வருகிறது என்பதுதான் இப்போது முக்கியம்.

நிமிடத்துக்கு நிமிடம், மணிக்கு மணி சஸ்பென்ஸ் தாள முடியாதபடி வளர்ந்து கொண்டிருந்தது.

நள்ளிரவு வாக்கில், டவுன்பிரிட்ஜ் பெற்றிருந்த வாக்குகள் வார்னரைக் காட்டிலும் மூன்று சதவிகிதம் அதிகமாக இருந்தன

விடிகாலை.

எழுபத்தைந்து சதவிகித ஓட்டுக்கள் எண்ணப்பட்டு விட்டன. டவுன்பிரிட்ஜ் மூன்றரைச் சதவிகிதம் அதிகமாகப் பெற்றிருந்தார்.

கம்ப்யூட்டர் தெரிவித்து விட்டது ட வன்பிரிட்ஜ் வெற்றி பெற்று விட்டார் என்று.

டெலிவிஷன் பெட்டியை வெறித்து நோக்கியபடி உட்காந்திருந்தாள் ஜெனிபர். அவளுடைய உணர்ச்சிகள் அனைத்தும் வடிந்து விட்டன.

வார்னர் தோற்றுவிட்டார்.

ஜெனிபர் ஜெயித்துவிட்டாள்.

ஜெனிபர் வார்னரை ஜெயித்து விட்டாள், வயிற்றி லிருக்கும் குழந்தையையும் காப்பாற்றி விட்டாள்.

இனி அவனிடம் எல்லாவற்றையும் தைரியமாகப் பேசலாம். தங்கள் குழந்தையைப் பற்றிச் சுதந்திரமாகப் பேசலாம். இருவரும் சேர்ந்து வாழப் போகும் எதிர் காலத்தைப் பற்றிப் பேசலாம்.

பாவம், வார்னர் இப்போது எவ்வளவு வேதனைப் பட்டுக் கொண்டிருப்பார்! ஜெனிபருக்கு வருத்தமாக இருந்தது. பரவாயில்லை. நாளாவட்டத்தில் இந்தத் தோல்வி மறந்து போகும். பிற்காலத்தில் மறுபடி அவர் தேர்தலுக்குப் போட்டியிடுவார். அப்போது ஜெனிபர் அவருக்கு உறுதுணையாக நிற்பாள். அவர்களுக்கு வயதா ஆகிவிட்டது? இல்லையே!

உலகமே கைகட்டிக் காத்திருக்கிறது. அவளுக்கும் வார்னருக்கும் அவளுடைய குழந்தைக்கும் சேவகம் செய்ய காத்திருக்கிறது.

தன்னையும் அறியாமல் நாற்காலியில் சாய்ந்தபடியே கண்ணயர்ந்தாள் ஜெனிபர்.

வார்னரைப் பற்றியும் தேர்தலைப் பற்றியும் ஜனாதிபதி மாளிகையைப் பற்றியும் ஏதேதோ சொப்பனங்கள்.

அவளும் வார்னரும் அவளுடைய குழந்தைகளும் வெள்ளை மாளிகையில், குடும்ப அறையில் இருக்கிறார்கள்.

பதவியேற்பு நிகழ்ச்சிக்காகப் பேச்சுத் தயாரித்துக் கொண்டிருக்கிறான் வார்னர் மேரி திடுதிடுப்பென்று உள்ளே நுழைகிறாள். வார்னரின் வேலைக்கு இடைஞ்சல் செய்கிறாள் வார்னர் அவளைப் பார்த்துக் கூச்சல் போடுகிறான். பிறகு இன்னும் இரைந்து கூச்சல் போடுகிறான். பிறகு மேலும் கூச்சலாக... மேலும் மேலும் கூச்சலாக...

ஜெனிபர் விழித்துக்கொண்டாள். டெலிவிஷன் ஓடிக் கொண்டிருந்தது. விடிகாலை வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது.

இரைந்து சொல்லிக் கொண்டிருந்தது டெலிவிஷன் அறிவிப்பு. களைப்பான குரலில் தேர்தலின் இறுதி முடிவுகளை அறிவித்துக் கொண்டிருந்தார் அறிவிப்பாளர்.

இன்னும் அரைத் தூக்கத்திலேயே இருந்தாள் ஜெனிபர். சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தபோது, டி.வி. அறிவிப்பாளரின் குரல் கேட்டது.

இந்த மாதிரி திடீர்த் திருப்பம் எந்தத் தேர்தலிலும் ஏற்பட்டதில்லை. ஒரு சதவிகித வாக்குக்கும் கம்மியான வித்தியாசத்தில் டவுன்பிரிட்ஜை வார்னர் தோற் கடித்திருக்கிறார்...''

ஆக, ஜெனிபர் தோற்றுவிட்டாள்.

மறுநாள் காலை வெகு நேரம் கழித்து ஜெனிபர் தன் அலுவலகத்தை அடைந்தாள் காரியதரிசி அவளிடம் விரைந்து வந்து, ''மிஸ்டர் வார்னர் உங்களை டெலிபோனில் கூப்பிடுகிறார். காலையிலிருந்து கூப்பிட்டுக் கொண்டே யிருக்கிறார்,'' என்றாள்.

ஒரு வினாடி ஜெனிபர் தயங்கினாள். பிறகு, ''சரி, நான் போய்ப் பேசிக் கொள்கிறேன்,'' என்று கூறிவிட்டு, தன் அறைக்குள் சென்று போனை எடுத்தாள். ''ஹலோ வார்னர், கங்கிராசுலேஷன்ஸ்...''

"தாங்க்ஸ். நாம் நிறையப் பேச வேண்டும். மத்தியான்னம் லஞ்ச் நேரத்தில் ஃப்ரீயாக இருப்பாயா?"

ஜெனிபர் தயங்கிவிட்டு, "இருப்பேன்," என்றாள்

பிரசினையை எப்படியும் எதிர்நோக்கித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

மூன்று வாரங்களுக்குப் பிறகு இப்போதுதான் வார்னரைச் சந்திக்கிறாள் ஜெனிபர்.

அவன் முகத்தை ஆராய்ந்தாள் அவள். களைத்துச் சோர்ந்து நீள மூஞ்சியாய்த் தெரிந்தது. வெற்றியின் பெருமிதம் அங்கே பிரகாசித்துக் கொண்டிருக்கவில்லை. இருக்கை கொள்ளாமல் தவிப்பவனாக இருந்தான்.

உணவு ஆர்டர் கொடுத்தார்களே தவிர இருவருமே சாப்பிடவில்லை. தேர்தலைப் பற்றிச் சிறிது பேசினார்கள். எல்லாம் அர்த்தமில்லாத சொற்கள். மனத்துக்குள் உள்ள எண்ணங்களை மறைப்பதற்குப் போர்வைகள் போலத் தான் இருந்தன.

இந்தப் போலி நாடகம் சகிக்க முடியாததாக ஆகிவிட்டபோது, இறுதியில் வார்னர் சொன்னான்: "ஜெனிபர்..." மூச்சை இழுத்துப் பிடித்தவன் போல மௌனமாயிருந்தவன் பிறகு படபடவென்று சொன்னான்: "மேரி கர்ப்பமாயிருக்கிறாள்."

அவளுக்கு ஏற்கெனவே தெரிந்த உண்மைதான் ஆனால் அவன் வாயிலிருந்து அது வந்தபோது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"நான்... வந்து... ஸாரி டார்லிங்," என்று வார்னர் தடுமாறினான் "அது... வந்து... அது எப்படியோ நேர்ந்துவிட்டது. அது விளக்கிச் சொல்ல முடியாது."

"நீங்கள் விளக்கத் தேவையில்லை," என்றாள் ஜெனிபர். எப்படி நேர்ந்திருக்கும் என்பதை அவளால் காண முடிந்தது. மேரி அவன் முன் மயக்கும் உடையில் இருந்திருப்பாள்... ஏன், நிர்வாணமாகக் கூட இருந்திருப்பாள்... வார்னர் உடனே...

"எப்படிப்பட்ட மடையன் நான் என்று எனக்குப் புரிகிறது..." வார்னர் சொல்லிக் கொண்டிருந்தான். ஒரு தர்மசங்கடமான மௌனம் அங்கே நிலவியது. பிறகு அவன் தொடர்ந்தான்: "கட்சி மேலிடத்திலிருந்து - இன்று காலை என்னைப் போனில் கூப்பிட்டார்கள். அடுத்த ஜனாதிபதியாக என்னைக் கொண்டுவர இப்போது பிடித்தே தயார் செய்யப் போகிறார்களாம்," சிறிது தயங்கினான்: "பிரசினை என்னவென்றால்... மேரி கர்ப்பமாயிருக்கும் இந்தச் சமயத்தில் போய் விவாகரத்துக்கு நடவடிக்கை எடுத்தால்... அது எசகு பிசகாகப் போய்விடும்... எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நான் தூங்கி மூன்று நாளாகிறது..."

அவள் எதுவும் குறுக்கிட்டுப் பேசாமல் அவன் முகத்தையே பார்த்தவாறிருந்தாள்.

வார்னர் கூறினான்: "இதைச் சொல்லவே எனக்கு வெறுப்பாய்த்தான் இருக்கிறது. ஆனால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. ஏன் ஜெனிபர், இந்த நிலைமையெல்லாம் ஒரு வழியாக தெளிவடைகிற வரையில் நாம் கொஞ்ச காலம் காத்திருந்தால் என்ன?"

மேஜைக்கு எதிரேயிருந்த அவனை ஏறிட்டுப் பார்த்தாள் ஜெனிபர். பொறுத்துக் கொள்ள முடியாத வலியொன்று அவள் மனத்தை அழுத்தியது. தன்னால் தாங்கிக் கொள்ளவே முடியாத பெரும் நஷ்டம் ஏற்பட்டு விட்டது போலத் தோன்றியது.

"அதுவரையில் நாம் அடிக்கடி சந்தித்துக் கொண்டிருப்போமே! அதிலொன்றும் கஷ்டமில்லை. நாம்..." என்றான் வார்னர்.

தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு அவள் சொன்னாள்: "இல்லை வார்னர், எல்லாம் முடிந்தாயிற்று."

அவன் அவளை வெறித்து நோக்கினான்: "நான் உன்னைக் காதலிக்கிறேன் டார்லிங். இதற்கு ஏதாவது வழி செய்து..."

"எந்த வழியும் கிடையாது," என்றாள் ஜெனிபர் தீர்மானமாக. "இந்தக் காதலை நான் மனதார விரும்பினேன். நமது உறவின் ஒவ்வொரு நிமிடமும் நான் ஆனந்தமாக இருந்தேன்."

இந்த ஓட்டலுக்குள் இனி ஒரு வினாடி நின்றிருந்தாலும் பெரும் கூச்சலாகக் கத்தி விடுவோம் என்று அவளுக்குத் தோன்றியது. ஆகவே சரேலென எழுந்து கொண்டாள் "இனி நாம் ஒருவரையொருவர் பார்க்கவே கூடாது."

அவனுடைய வேதனை நிறைந்த கண்களைச் சந்திக்க அவளுக்குத் துணிவு வரவில்லை.

"இல்லையில்லை! ஜெனிபர்! அப்படிச் சொல்லாதே! இரு! நாம்..."

மேற்கொண்டு அவன் சொல்வதை அவள் கேட்டுக் கொண்டு நிற்கவில்லை. வாசலை நோக்கி விரைந்தாள்.

24

வார்னர் போனில் கூப்பிடுகிறான் என்றால் ஜெனிபர் போனை எடுப்பதில்லை. திருப்பிக் கூப்பிடுவதுமில்லை. அவனிடமிருந்து வரும் கடிதங்களைப் பிரித்துப் பார்க்காமலே திருப்பி அனுப்பிவிடுவாள்.

கடைசியாக வந்த ஒரு கடிதத்தின் உறைமீது 'விலாசதார் இறந்து விட்டார்' என்று எழுதித் தபால் பெட்டியில் போட்டாள்

'உண்மையைத்தான் எழுதியிருக்கிறோம்' என்று எண்ணிக் கொண்டாள் நான் இறந்துதான் போய் விட்டேன்.

இப்படிப்பட்ட வேதனைகள் கூட இருக்க முடியும் என்று அவள் ஒரு நாளும் எண்ணியதில்லை. அவள் தனியாகத்தான் இருக்கவேண்டியிருந்தது. ஆனால் தனியாய் இருப்பதாகவும் சொல்ல முடியாது. அவளுக்குள்ளே இன்னொரு ஜீவன் இருக்கிறது. அவளில் ஒரு பாதியும் வார்னரில் ஒரு பகுதியுமான ஜீவன்.

அதை அழித்துவிட வேண்டும்.

அழித்துவிட அவள் தீர்மானித்துவிட்டாள்

கருச் சிதைவை எந்த ஊரில் செய்து கொள்ளலாம் என்பதைப் பற்றிச் சிந்தனை செய்ய ஆரம்பித்தாள் சில வருடங்களுக்கு முன்பென்றால் அழுக்கும் அசுத்தமுமான இருட்டறையில் ஓர் அரைகுறை வைத்தியரிடம் அபார்ஷன் செய்து கொள்ள வேண்டியிருக்கும். இப்போதெல்லாம் அதற்குத் தேவையில்லை. பிரபலமான பெரிய ஆஸ்பத்திரிக்குப் போகலாம். புகழ்பெற்ற ரண சிகிச்சை டாக்டரிடம் கருச் சிதைவு செய்து கொள்ளலாம்.

ஆனால் நியூயார்க் நகரத்துக்கு வெளியேதான் போக வேண்டும். இங்கே பத்திரிகைகளில் அவளுடைய புகைப்படம் பலமுறை வெளியாகியிருக்கிறது. டெலிவிஷனில் அடிக்கடி தோன்றியிருக்கிறாள் இங்கே கூடாது.

ஆகவே ஊர் பேர் தெரியாத பெண்ணாக, ஊர் பேர் தெரியாத இடத்துக்குப் போக வேண்டும். யாரும் எந்தக் கேள்வியும் அவளைக் கேட்கக் கூடாது. வார்னருக்கும் அவளுக்கும் உறவு இருந்ததாக எவருக்கும் தெரியக் கூடாது. பாராளுமன்ற உறுப்பினர் வார்னருக்கும் அவளுக்கும் உறவா! வேண்டாம், வேண்டாம், யாருக்கும் தெரிய வேண்டாம்.

யார் என்னவென்று தெரியாமல் அனாமதேயமாகவே அவளுடைய குழந்தை இறந்து போகட்டும்.

குழந்தை பார்ப்பதற்கு எப்படி இருக்கும்? யார் சாயலாக இருக்கும்? கற்பனை செய்யும்போதே அவளுக்குத் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. மூச்சு விட முடியாமல் விம்மல் வெடித்தது.

வெளியே மழை பெய்து கொண்டிருந்தது. ஜெனிபர் சாளரத்துக்கருகே போய் நின்று வானத்தை நோக்கினாள். தெய்வம் கூடத் தன்மீது இரக்கப்பட்டு அழுவது போல இருந்தது.

கருச் சிதைவு விஷயத்தில் யாரிடம் உதவி கேட்பது என்று அவளுக்குத் தெரியவில்லை. துப்பறியும் நிபுணர் கென்னெத்தின் உதவியுடன் வெளியூரில் ஓர் ஆஸ்பத்திரியில் ஏற்பாடு செய்துகொண்டாள்.

அந்த ஆஸ்பத்திரி அழகான இரட்டை மாடிக் கட்டிடத்தில் இருந்தது. செங்கல் கட்டிடம். நகருக்கு வெளியே இருந்தது.

சுறுசுறுப்பான இளம் நர்ஸ் ஒருத்தி, "இதோ டாக்டர் வந்து விடுவார் அதற்குள் உங்கள் உடையைக் கழற்றிவிட்டு ஆஸ்பத்திரி கவுனை மாட்டிக் கொள்ளுங்கள்," என்றாள்.

எல்லாம் ஏதோ கனவில் நடப்பதுபோலிருந்தது ஜெனிபருக்கு. ஆஸ்பத்திரியின் வெள்ளைக் கவுனை அணிந்து கொண்டபோது கசாப்புக்காரனின் அங்கியைக் கட்டிக் கொள்கிற மாதிரி தோன்றியது. வயிற்றுக்குள் இருக்கும் சிசுவைக் கசாப்புப் போடப் போகிறோம்! கட்டிக் கொண்டிருக்கும் அங்கி பூராவிலும் அந்தச் சிசுவின் ரத்தம் தெறித்துப் பரவியிருப்பதை அவள் மனம் கற்பனை செய்து கொண்டது. அவளையுமறியாமல் அவள் உடம்பு நடுங்கியது.

காலடிச் சத்தம் கேட்டது. குண்டான, வழுக்கைத் தலை டாக்டர் உள்ளே வந்தார். தடித்த பிரேம் போட்ட கண்ணாடி அணிந்திருந்ததால் ஆந்தை முகமாகக் காணப்பட்டார்.

அவளைப் பற்றிய விவரங்கள் அடங்கிய காகிதம் அவர் கையில் இருந்தது. அதைப் பார்த்தபடியே, "நீங்கள்தானே ஜெனிபர்?" என்றார்.

ஜெனிபர் தலையை ஆட்டினாள்

டாக்டர் அவள் கையை மெல்லத் தட்டிக் கொடுத்து "உட்காருங்கள்," என்றார் பரிவாக. ஒரு கோப்பையில் தண்ணீர் எடுத்து வந்து தந்து, "சாப்பிடுங்கள்," என்றார்.

ஜெனிபர் அருந்தினாள். டாக்டர் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டு அவளுடைய உடல் நடுக்கம் முழுதும் அடங்கும் வரை காத்திருந்தார் பிறகு, "நீங்கள் அபார்ஷன் செய்து கொள்ளவேண்டும்?" என்றார்.

"ஆமாம்."

"உங்கள் கணவருடன் இதைப்பற்றிப் பேசி விட்டீர்களா?"

"ஆமாம்... வந்து... இரண்டு பேருமே செய்த முடிவு தான்..."

டாக்டர் அவளை ஏற இறங்கப் பார்த்தார். "நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்கள். இல்லையா?"

"ஆமாம்... நன்றாய் இருக்கிறேன்...

"உங்களுக்கு ஏதாவது பொருளாதாரப் பிரசினையா?"

"எதுவுமில்லை," என்று ஜெனிபர் வெடுக்கென்று பதிலளித்தாள் எதற்காக இந்த டாக்டர் இப்படிக் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு உயிரை எடுக்கிறார்?

"நாங்கள் எங்களுக்குக் குழந்தை வேண்டாமென்று தீர்மானித்து விட்டோம். அவ்வளவுதான்,"

டாக்டர் ஒரு புகைக் குழாயை எடுத்து வாயில் பொருத்திக் கொண்டார். "இதில் உங்களுக்கு ஆட்சேபம் உண்டா?"

"இல்லை."

அவர் குழாயைப் பற்ற வைத்துக் கொண்டார். "ஹூம்! கெட்ட பழக்கம்!" என்று சொல்லிவிட்டு நாற்காலியில் சாய்ந்து கொண்டு குப்பென்று புகையை வெளியே விட்டார்.

ஜெனிபர் பொறுமை இழந்தவளாக, "என் விஷயத்தைச் சீக்கிரம் கவனிக்கிறீர்களா டாக்டர்?" என்றாள். அவளுடைய நரம்புகளனைத்தும் தெறித்து விடுகிற மாதிரி முறுக்கேறி நின்றன. எந்த நிமிடமும் ஓவென்று அலறி விடப்போகிறோம் என்று தோன்றியது.

டாக்டர் மறுபடியும் ஒரு முறை புகையை ஆழமாக இழுத்து மெல்ல வெளியிட்டார் "நாம் கொஞ்சம் பேசலாமென்று நினைக்கிறேன்," என்றார்.

பெரும் பிரயத்தனத்துடன் தன் கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டாள் ஜெனிபர். "சரி," என்றாள்.

"கருச் சிதைவைப் பற்றி ஒரு முக்கியமான விஷயம் என்ன வென்றால், முடிவு எடுத்தால் எடுத்ததுதான். இப்போதே நீங்கள் மனசை மாற்றிக் கொண்டால்தான் உண்டு. கருவைச் சிதைத்து விட்ட பிறகு மனைசை மாற்றிக் கொண்டால் புண்ணியமில்லை."

"என் மனசை மாற்றிக் கொள்ளப் போவதில்லை."

டாக்டர் தலையை ஆட்டி இன்னொரு தரம் புகைத்துவிட்டு "நல்லது," என்றார்.

புகையின் மணம் அவளுக்கு வயிற்றைப் புரட்டியது. அவர் குழாயை அணைத்தால் தேவலை போலிருந்தது. "டாக்டர்..."

மனமில்லாமல் எழுந்து கொண்டார் டாக்டர் "நல்லதம்மா. உங்களைப் பரிசோதிக்க வேண்டும், வா."

பரிசோதனை மேஜையில் மல்லாந்து படுத்தாள் ஜெனிபர். கால்களை அகட்டி வளையங்களில் செருகிக் கொண்டாள். டாக்டரின் தேர்ச்சி பெற்ற விரல்கள் அவள் தேகத்துக்குள் மென்மையாகப் புகுந்து பரிசோதித்தபோது அவளுக்குச் சங்கடம் ஏற்படவில்லை. ஆனால் ஏதோ ஓர் ஈடு செய்ய முடியாத இழப்பை உணர்ந்தாள். ஆழம் காண முடியாத சோகமொன்று அவளை ஆட்டியது. அவளுடைய பிள்ளை ஓடுவது போலவும் சிரிப்பது போலவும் என்னென்னவோ காட்சிகள் அவள் மனக்கண் முன் ஓடின. பிள்ளை! ஆமாம், அது பிள்ளையாகத்தான் இருக்குமென்று அவளுக்குத் தோன்றியது. அப்பாவின் உருவத்தில் வளரும் பிள்ளை...

டாக்டர் தன் பரிசோதனையை முடித்துக்கொண்டு, "இனி நீங்கள் உடை மாற்றிக் கொள்ளலாம்." என்றார். "இஷ்டமானால் இங்கே ஆஸ்பத்திரிலேயே ராத்திரி தங்கிக் கொள்ளுங்கள் அல்லது வெளியே தங்கினாலும் சரி. நாளைக் காலையில் ஆபரேஷன்."

"ஊகூம்!" என்று மறுத்தாள் ஜெனிபர். அவளையும் மீறி முரட்டுத்தனமாக வந்தது அந்த மறுப்பு. "தயவு பண்ணி இப்போதே முடித்து விடுங்கள் டாக்டர்! ப்ளீஸ்!"

டாக்டர் அவளை மறுபடி புதிரான பார்வை பார்த்தார். "உங்களுக்கு முன்னால் இரண்டு பேஷண்ட்டுகள் காத்திருக்கிறார்கள் நர்ஸ் வருவாள் ஆபரேஷன் விவரங்களைக் குறித்து வைத்துக் கொண்டு உங்களை உங்கள் அறையில் கொண்டு போய் விடுவாள். இன்னும் நாலு மணி நேரத்தில் ஆபரேஷன் நடக்கும். சரிதானா?"

"சரி," என்றபோது ஜெனிபரின் குரல் கரகரப்பாய் வெளிப்பட்டது.

கண்களை மூடிக்கொண்டு, டாக்டரின் வருகையை எதிர்பார்த்தபடி, சிறிய ஆஸ்பத்திரிப் படுக்கையில் படுத்திருந்தாள் ஜெனிபர். பழங்காலத்துக் கடியார மொன்று சுவரில் இருந்தது. அதன் டிக்டிக் ஓசை, ஒவ்வொரு முறையும் வார்னரின் குழந்தை, வார்னரின் குழந்தை என்று சொல்லிக் கொண்டிருப்பதாகவே அவளுக்குக் கேட்டது.

குழந்தையின் உருவத்தை அவளால் மனத்தினின்று விரட்ட முடியவில்லை. இதோ இந்த நிமிடம் அது அவள் வயிற்றுக்குள் இருக்கிறது. சௌகரியமாக, கதகதப்பாக, ஜீவனுடன் இருக்கிறது. உலகத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கிறது. 'தனக்கு என்ன நேரப் போகிறது என்று அதற்குத் தெரியுமா? அமானுஷ்யமான துக்கம் அதற்கு ஏற்படுமா?' என்று அவள் எண்ணிப் பார்த்தாள். டாக்டரின் கத்தி அதைக் கொல்லும்போது அதற்கு வலிக்குமா?

கடியாரத்தின் டிக்டாக் ஓசையைப் பொறுக்க முடியவில்லை. கைகளால் காதை இறுக்கிப் பொத்திக் கொண்டாள். சுவாசிப்பது சிரமமாயிருப்பதாகத் தோன்றியது. உடலெங்கும் முத்து முத்தாய் வியர்வை பொடித்தது.

ஏதோ சந்தடி கேட்டது. கண்ணைத் திறந்து பார்த்தாள்.

டாக்டர் நின்றிருந்தார், அவளைக் குனிந்து நோக்கிய வண்ணம். அவர் முகத்தில் கவலை படர்ந்திருந்தது. "உடம்பு ஒன்றுமில்லையே ஜெனிபர்?"

"நான் நன்றாய்த்தான் இருக்கிறேன், டாக்டர். சீக்கிரம் முடித்து விடுங்கள்," என்றாள் மிகமிக மெல்லிய குரலில்.

டாக்டர் தலையாட்டி, "அதைத்தானே இப்போது செய்யப் போகிறோம்?" என்று கூறிவிட்டு, அவளுடைய

படுக்கைக்குப் பக்கத்திலிருந்த மேஜையிலிருந்த ஒரு சிரிஞ்சை எடுத்துக்கொண்டு அவளை நோக்கி வந்தார்.

"அதிலே என்ன இருக்கிறது?" என்றாள் ஜெனிபர்.

"உங்களை அமைதிப்படுத்துவதற்கான மருந்து. இன்னும் சில நிமிஷங்களில் ஆபரேஷன் தியேட்டருக்கு நாம் போவோம்," என்று கூறிவிட்டு அவளுக்கு ஊசி போட்டார் டாக்டர்.

"இது தான் உங்களுக்கு முதல் அபார்ஷன் இல்லையா?"

"ஆமாம்."

"அப்படியானால் என்ன செய்யப் போகிறோம் என்பதைக் கொஞ்சம் விளக்கிச் சொல்கிறேன். வலி யிருக்காது. ரொம்ப ஸிம்பிள். ஆபரேஷன் அறையில் உங்களுக்கு மரப்பு மருந்து தருவோம். பிராணவாயு முகமூடி போடுவோம். நீங்கள் மயக்க மடைந்ததும் கருவுக்குள் ஆயுதங்களைச் செலுத்தி, கருப்பையில் உள்ள கருவை அகற்றி விட்டு, சுத்தப்படுத்துவோம்..." விளக்கி முடித்து விட்டு, "ஏதாவது கேட்க வேண்டுமா?" என்றார்.

"இல்லை," வெதுவெதுப்பான தூக்க உணர்வு அவளை ஆட்கொள்ளத் தொடங்கியது. மந்திரம் போட்ட மாதிரி தன்னைப் பிடித்திருந்த இறுக்கம் விலகுவதை உணர்ந்தாள். அறையின் சுவர்கள் மங்க ஆரம்பித்தன. டாக்டரை ஏதோ கேட்க விரும்பினாள். ஆனால் என்ன கேட்பதென்று ஞாபகம் வரவில்லை... குழந்தையைப் பற்றித்தான் ஏதோ கேட்க நினைத்தாள்... பரவாயில்லை. அவள் என்ன செய்துகொள்ள நினைத்தாளோ அது நடக்கப் போகிறது. அதுதான் முக்கியம். இன்னும் சில நிமிடங்களில் எல்லாம் முடிந்து விடும்... வாழ்க்கையை மறுபடி புதிதாக ஆரம்பிக்கலாம்.

அற்புதமானதோர் மயக்க உலகத்தில் பிரவேசிப்பது போலிருந்தது. ஆட்கள் அறைக்குள் வருவதும் போவதும் இருப்பதும் அவளைச் சக்கரம் போட்ட மேஜையில் கிடத்துவதும் உணர்ந்தாள்... மெல்லிய ஆஸ்பத்திரி கவுனை ஊடுருவிக்கொண்டு ஸ்டீல் மேஜையின் ஜில்லிப்பை முதுகில் ஸ்பரிசித்தாள் வெராந்தா வழியே தள்ளிச் செல்கிறார்கள் மேலே வழியெங்கும் பிரகாசமான விளக்குகள். அவைகளை ஒவ்வொன்றாய் எண்ணிக் கொண்டே சென்றாள் மொத்தம் எத்தனை என்று கரெக்டாக எண்ணிவிட வேண்டும் என்று தோன்றியது. எதற்காக எண்ணுகிறோம் என்று தெரியவில்லை.

ஆபரேஷன் அறைக்கு வந்து விட்டோமென்று உணர்ந்தாள் இங்கே தான் என் குழந்தை இறக்கப் போகிறதா? குட்டி வார்னரே, கவலைப்படாதேடா கண்ணா. உனக்கு வலிக்காதபடி பார்த்துக் கொள்கிறேன்...

ஏனோ தெரியவில்லை. அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

டாக்டர் அவள் கைகளை மெல்லத் தட்டி "பயப்படாதீர்கள். வலிக்காது," என்றார்.

'குழந்தைக்கு வலியில்லாத மரணம்' என்று நினைத்துக் கொண்டாள் அவள் நல்லது, நல்லது. குழந்தையிடம் அவளுக்குப் பிரியமாயிருந்தது. அதற்கு வலிக்கக் கூடாது.

பிராணவாயு மூடியை யாரோ அவள் முகத்தின் மீது மூடினார்கள். "நன்றாய் இழுத்து மூச்சு விடுங்கள்," என்று ஒரு குரல் கேட்டது.

தன் கவுன் விலக்கப்படுவதும் கால்கள் அகற்றப் படுவதும் தெரிந்தது.

இதோ அது நடக்கப் போகிறது. இதோ, இதோ, குட்டி வார்னர், குட்டி வார்னர், குட்டி வார்னர்

"அமைதியாயிருங்கள்," என்றார் டாக்டர்.

ஜெனிபர் தலையசைத்தாள். குட் பை என் செல்லமே! போய் வா!

சில்லென்ற இரும்புக் கருவியொன்று தன் தொடைகளுக்குள் புகுந்து மெல்ல மெல்ல மேலேறுவது புலப்பட்டது. அந்த ஆயுதம்தான் அவள் குழந்தையைக் கொல்லப் போகிறது...

"நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" எங்கிருந்தோ அலறல்கள் கேட்டன.

ஆச்சரியம் நிறைந்த முகங்கள் தன்னைக் குனிந்து நோக்குவது தெரிந்தது. அந்த அலறல்கள் தன்னிடம் இருந்தே வருகின்றன என்பதை உணர்ந்தாள்.

பிராணவாயு மூடி முகத்தை அழுத்தியது. எழுந்து உட்கார முயன்றாள் ஆனால் கைகளும் கால்களும் கட்டப்பட்டிருந்தன. அதல பாதாளமான ஒரு சுனையில் தன்னை இழுத்துக்கொண்டு போய்த் தள்ளுவது போல் இருந்தது. அவளை முழுகடிப்பது போல் இருந்தது.

தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த பிரம்மாண்டமான வெள்ளை விளக்கு சுழலுவதுபோல ஒரு பிரமை. அதுதான் அவளுக்குக் கடைசி நினைவு. அதன்பின் அவள் உணர்விழந்தாள்.

கண் விழித்தபோது ஆஸ்பத்திரியில் தன் அறையில், படுக்கையில் படுத்திருப்பதை அறிந்தாள் ஜன்னலைப் பார்த்தபோது வெளியே இருட்டியிருப்பது தெரிந்தது. உடம்பெங்கும் சோர்வாக இருந்தது. எத்தனை நேரமாக நினைவில்லாமல் இருந்திருப்போம் என்று நினைத்து கொண்டாள்.

உயிரோடு இருக்கிறோம்.

ஆனால் குழந்தை? அவன் குழந்தை?

படுக்கையருகே இருந்த அழைப்பு மணியை அழுத்தினாள் அழுத்தினாள், வெறி பிடித்தவள் போல் அழுத்திக் கொண்டேயிருந்தாள். தன்னையே அடக்க முடியாதவளாக அழுத்தினாள்.

ஒரு நர்ஸ் எட்டிப் பார்த்துவிட்டு உடனே திரும்பிச் சென்றாள். சில நிமிடங்களில் டாக்டர் லிண்டென் அவசரமாக உள்ளே வந்தார். அவள் படுக்கையை நெருங்கி மணியை அழுத்திக் கொண்டிருந்த அவள் விரல்களை மெல்ல விலக்கி விட்டார்.

அவர் கைகளை முரட்டுத்தனமாய்ப் பற்றினாள் ஜெனிபர் கரகரத்த குரலில், "என் குழந்தை... அதைக் கொன்று விட்டீர்களா?" என்றாள்.

"இல்லை, ஜெனிபர்," என்றார் டாக்டர். "குழந்தை கர்ப்பத்தில் பத்திரமாக இருக்கிறது. ஆண் குழந்தையாக இருக்குமென்று நினைக்கிறேன். அவனை வார்னர் வார்னர் என்று நீங்கள் திரும்பத் திரும்பக் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தீர்கள்."

எல்லையற்ற நிம்மதி ஜெனிபரின் மனத்தில் பரவியது.

25

கிறிஸ்துமஸ் பண்டிகை வந்து போயிற்று. புது வருடம் பிறந்தது. பிப்ரவரி மாதத்துப் பனிகள் உருகி, விலகி, மார்ச் மாதத்தின் சுறுசுறுப்பான காற்றுக்கு இடம் கொடுத்தன.

பிரசவ காலம் நெருங்கவே இனி அலுவலகத்தில் வேலை பார்ப்பது சிரமமாயிருக்கும் என்று ஜெனிபருக்குத் தோன்றியது.

உதவியாளர்களைக் கூப்பிட்டு, "நான் லீவு எடுத்துக் கொண்டு வெளியூர் போகிறேன். ஐந்து மாசமாகும் திரும்பி வருவதற்கு," என்றாள்.

எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்.

ஓர் உதவியாளர், "உங்களோடு தொடர்பு கொள்ளலாம், இல்லையா?" என்று கேட்டார்.

"ஊகூம்! என்னை யாரும் போனில் கூப்பிடவோ வந்து பார்க்கவோ கூடாது."

அவள் குரலில் தென்பட்ட கண்டிப்பு, அவர்களை வாய்திறக்க விடாமல் செய்துவிட்டது. அதன் பிறகு கைவச மிருக்கும் வழக்குகளைப் பற்றிப் பேசிவிட்டுப் போய் விட்டார்கள்.

எல்லாரும் போன பிறகு துப்பறியும் நிபுணர் கென்னத் கேட்டார்: "ஜெனிபர், யோசித்துத் தான் இந்த முடிவுக்கு வந்தாயா?"

"ஆமாம், கென்னெத். வேறு வழி தெரியவில்லை."

"உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கியவன் எந்த அயோக்கிய ராஸ்கலோ எனக்குத் தெரியாது. ஆனால் அவனை நினைத்தாலே எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது."

ஜெனிபர் அவர் கையை மெல்லத் தட்டி, "ரொம்ப நன்றி. எல்லாம் சரியாகிவிடும். கவலைப்படாதீர்கள்," என்றாள்.

"போகப் போகக் கஷ்டமாயிருக்கும், ஜெனிபர் குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்குமா? வளர்ந்தது பெரியவர்களாகும். கேள்விகள் கேட்கும். தன் அப்பா யாரென்று கேட்கும்."

"சமாளித்துக் கொள்கிறேன்," என்றாள் ஜெனிபர்.

அன்று எல்லாரும் புறப்பட்டுப் போன பிறகும் ஜெனிபர் அலுவலகத்திலேயே தங்கியிருந்தாள் விளக்கைப் போடவில்லை. சிரித்துக் கொண்டு இருட்டில் உட்கார்ந் திருந்தாள்.

வார்னரைப் பற்றியே எண்ணங்கள் ஓடின.

அவன் மேல் அவளுக்குள்ள காதல் மாறவில்லை. என்றும் மாறப் போவதில்லை. வார்னருக்கும் தன் மீது காதல் அப்படியே தான் இருக்கும் என்று நிச்சயமாகத் தெரிந்தது. ஒரு வேளை அவருடைய மனத்திலிருந்து நாம் மறைந்து போவதே நல்லதாயிருக்குமோ?

விதி சிரிப்பது அவளுக்குக் கேட்டது. இருவரும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள். ஆனால் சேர்ந்து வாழமுடியவில்லை. காலம் செல்லச் செல்ல அவர்களுடைய பாதைகள் பிரிந்து விலகிக் கொண்டே போகப் போகின்றன. மனைவி மேரியுடனும் குழந்தையுடனும் வார்னர் வாஷிங் டனில் வசிக்கத் தொடங்குவார் கொஞ்ச நாளில் ஜனாதிபதியின் மாளிகையில் குடியேற நேர்ந்தாலும் நேரும்.

நம் குழந்தை? அதுவும் வளரும் தன் தகப்பன் யாரென்று தெரிந்து கொள்ள ஆசைப்படும். ஒருபோதும் குழந்தையிடம் சொல்லக் கூடாது. குழந்தையிடம் மட்டு மல்ல. வார்னரிடமும் அவர் மூலம் குழந்தை பெற்றுக் கொண்டோம் என்று சொல்லக் கூடாது. சொன்னால் அவர் வாழ்க்கையே நரகமாகிவிடும்.

வேறு யாருக்கேனும் தெரிந்து போனால்? அப்போதும் வார்னருக்கு ஆபத்துதான்...

வெளருக்கு வெளியே கிராமப்புறத்தில் ஒரு வீடு வாங்க வேண்டுமென்று ஜெனிபர் தீர்மானித்தாள். அங்கே அவளும் அவள் குழந்தையும் அவர்களுடைய சொந்தச் சின்ன உலகத்தில் சேர்ந்து வாழலாம்.

அப்படிப்பட்ட வீடு அவளுக்கு அதிர்ஷ்ட வசமாகத் தற்செயலாகக் கிடைத்தது.

ஒரு கட்சிக்காரரைப் பார்ப்பதற்காகக் காரில் வெளியூர் போய்விட்டுத் திரும்பி வந்தவள், தற்செயலாக ஒரு தப்பான பாதையில் திரும்பி விட்டாள். அது அழகான சிற்றூர். தெருக்களெங்கும் அமைதி தவழ்ந்தது. உயரமான வனப்பான மரங்கள் சாலையை நிறைத்தன வீடுகள் சாலையிலிருந்து மிக உட்புறமாக அமைந்திருந்தன.

'விற்பனைக்கு' என்று அறிவிப்புப் பலகை தொங்கிய ஒரு வீடு அவள் மனத்தைக் கவர்ந்தது. வேலி போட்டு, முன்புறம் அழகான கேட் போட்டிருந்தார்கள். வீட்டுக்குச் செல்லும் தோட்டப் பாதையில் அழகான விளக்குக் கம்பங்கள் இருந்தன. விஸ்தாரமான புல்வெளி.

மறுநாள் மாலை தரகரின் உதவியுடன் வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். அறைகள் பெரிது பெரிதாகக் காற் றோட்டத்துடன் இருந்தன. மாடியில் ஒரு பெரிய ஹால் இருந்தது. குழந்தையின் படிப்பு அறையாக அதை மாற்றலாம்...

"தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க வாருங்கள்," என்று அழைத்தார் தரகர்.

அந்த மர வீடு!

வலுவான ஓக் மரத்தின் மீது பரண் கட்டி. அங்கே ஒரு சின்ன விளையாட்டு வீடு கட்டியிருந்தார்கள்

அவள் பிள்ளை ஏறி விளையாடுவதற்காகவே கட்டியிருக்கிற மர வீடு!

பின்புறம் மூன்று ஏக்கர் பரப்புக்குப் புல்வெளி. அதன் கோடியில் உள்ள ஏரிக்கு இங்கே ஒரு படகுத் துறை இருந்தது.

என் பிள்ளை ஓடியாடி விளையாட எவ்வளவு இடம் இருக்கிறது! அவன் கொஞ்சம் வளர்ந்ததும் ஒரு சிறிய படகு

வாங்கித் தரலாம். இங்கே எவ்வளவு முடியுமோ அவ்வளவு தனியாக, அன்னியோன்யமாக நானும் என் பிள்ளையும் வசிக்கலாம். இந்த உலகம் எங்களுடையது. எனக்கும் என் பிள்ளைக்கும் மட்டுமே சொந்தமானது...

மறுநாளே ஜெனிபர் அந்த வீட்டை வாங்கி விட்டாள்.

ஆனால் தன் பழைய இருப்பிடத்தை விட்டுவிட்டு வருவது இவ்வளவு வேதனை ஏற்படுத்தும் என்று அவள் கொஞ்சமும் நினைக்கவில்லை. அவளும் வார்னரும் பகிர்ந்துகொண்ட இடம்... குளிக்கும்போது வார்னர் கட்டிக் கொள்ளும் துண்டும், பைஜாமாவும் இப்போதும்கூட இருக்கின்றன. வார்னரின் ஷேவிங் செட்டும் காலணிகளும் இருக்கின்றன. அவளும் வார்னரும் வாழ்ந்ததைப் பற்றிய நூறு நூறு எண்ணங்களை ஒவ்வோர் அறையும் ஞாபகப் படுத்துகிறது. இனிமையான, ஆனால் செத்துவிட்ட ஒரு காலத்தை நினைவூட்டுகிறது...

மளமளவென்று தன் பொருட்களை மூட்டை கட்டிக்கொண்டு விறுவிறுவென்று வெளியேறினாள் ஜெனிபர்.

புதிய வீட்டுக்கு வந்தாயிற்று. வேண்டுமென்றே காலை முதல் மாலை வரை தன்னை ஏதாவது ஒரு வேலையில் முழுகடித்துக் கொண்டாள் வார்னரைப் பற்றிய எண்ணமே வரக் கூடாதென்பதற்காக. பக்கத்தி லுள்ள டவுனுக்குச் சென்று பர்னிச்சர்களும் திரைச் சீலைகளும் விரிப்புக்களும் ஆர்டர் செய்தாள். வெள்ளி யிலும் பீங்கானிலும் பாத்திரம் பண்டங்கள் வாங்கினாள். உள்ளூர்த் தொழிலாளிகளை வரவழைத்து, ஒழுகுகிற கூரைகளையும், தண்ணீர் வராத குழாய்களையும், உளுத்துப்போன மின்சார சாதனங்களையும் பழுது பார்த்தாள். பொழுது விடிந்ததிலிருந்து பொழுது சாயும் வரை வெள்ளையடிப்போர், தச்சர்கள், எலக்ட்ரீஷியன்,

கொல்லத்துக்காரன் ஆகியோரின் ஓசைகள் வீடெங்கும் கேட்டன.

பகல் பூரா களைக்கக் களைக்க வேலை பார்த்தால் இரவு நன்றாகத் தூக்கம் வரும் என்று எதிர்பார்த்தாள். ஆனால் படுக்கையில் சாய்ந்தவுடனே என்னென்னவோ பயங்கரக் கற்பனைகள் கன்னாபின்னாவென்று முளைத்து அவளைத் தூங்க விடாமல் செய்தன.

கலைப் பொருட்கள் விற்பனை செய்யும் இடங்களுக்குச் சென்று அழகிய வேலைப்பாடுள்ள மேஜைகளும் நாற்காலிகளும் வாங்கினாள்

வீடு அழகுக் கோலமாகத் திகழ்ந்தது. குழந்தைக்கான மாடியறையைப் பளிச்சென்று தயார் செய்தாள்.

வயிறு வர வரப் பெரிதாகிக் கொண்டிருந்தது. கடைக்குப் போய், வயிற்றுப் பிள்ளைக்காரிக்கான உடைகளை வாங்கிக் கொண்டாள். டெலிபோன் இலாகாவிடம் சொல்லி, ரகசியமாக டெலிபோன் வைக்க ஏற்பாடு செய்து கொண்டாள். அவசரத் தேவைக்காகத் தான் அந்த போன். அதன் எண்ணை யாரிடமும் சொல்லவில்லை கென்னெத்தைத் தவிர அவரும் அதை வெளியே சொல்ல மாட்டேனென்று சத்தியம் பண்ணிக் கொடுத்திருந்தார்.

ஒரு நாள் மாலை அவளைப் பார்க்க வந்தார் கென்னெத். வீட்டையும் தோட்டத்தையும் அவருக்குச் சுற்றிக் காட்டினாள்

"ரொம்ப அற்புதம் ஜெனிபர்! பிரமாதமாய்ப் பண்ணி விட்டாயே..." என்று பாராட்டிவிட்டு அவள் வயிற்றைக் கவனித்தார். "பிரசவம் எப்போது இருக்குமாம்?"

"இன்னும் இரண்டு மாசத்தில்," என்றாள் ஜெனிபர்

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது கென்னெத், "நான் சொல்கிறேனென்று தப்பாய் நினைக்காதே,

ஜெனிபர். இந்தக் குழந்தைக்கு அப்பாயாரென்று தெரிந்தால்...'' என்று ஆரம்பித்தார்.

''அந்த விஷயம் பேச வேண்டாம்,'' என்றாள் ஜெனிபர் கறாராக.

''சரி, உன் இஷ்டம். நீ இல்லாமல் ஆபீசில் ஒரே குழப்பம். ஒரு புதுக் கட்சிக்காரர் வந்தார் ''

கையை உயர்த்தி அவர் பேச்சைத் தடுத்து நிறுத்தினாள் அவள் ''ஆபீஸ் விஷயம் எதுவும் என் காதில் போடாதீர்கள்.''

அவர் ஒரு பெருமூச்சுடன் வெளியேறினார்.

கென்னத்திடம் சொன்னது போலவே உலகத் திலிருந்து முற்ற முழுக்க ஒதுங்கியே வாழ ஆரம்பித்தாள் அவள். பேப்பர் படிப்பதில்லை. டி.வி. பார்ப்பதில்லை. ரேடியோ கேட்பதில்லை. பிரபஞ்சம் மொத்தமும் இந்த நான்கு சுவர்களுக்குள் அடங்கி விட்டது. அது அவள் கூடு. தன் பிள்ளையை உலகத்துக்குக் கொண்டு வருவதற்காகவே அவள் தயார் செய்து வைத்திருக்கும் இடம் இது.

குழந்தை வளர்ப்புப் பற்றி எத்தனை புத்தகங்கள் வாங்கிப் படிக்க முடியுமோ அவ்வளவும் படித்தாள் எல்லாவற்றையும் படித்துத் தீர்த்தானதும் மறுபடியும் ஒரு முறை படிக்க ஆரம்பித்தாள்.

குழந்தைக்கான அறையில் அலங்காரங்களைச் செய்து முடித்ததும் பொம்மைகள் வாங்கி வந்து பரப்பினாள். பேஸ்பால், கால்பந்து போன்ற விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைக்குச் சென்று, பந்துகள் வாங்கினாள் அவளுக்கே சிரிப்பு வந்தது இன்னும் குழந்தை பிறக்காதபோது இதெல்லாம் வாங்குகிறோமே என்று.

வீட்டைச் செப்பனிடும் வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகி விட்டன. வீடு அழகும் அமைதியும்

நிரம்பியிருந்தது. இரண்டு வாரத்துக்கொரு முறை ாக்டரிடம் சென்று வந்தாள். அவர் கிழித்த கோட்டைத் ாண்டாமல் நிறையப் பால் குடித்தாள். வைட்டமின் ாத்திரைகளை விழுங்கினாள். முறையான, சத்தான உணவு ாப்பிட்டாள்.

உடம்பு பெருத்து விட்டதால் நடமாட்டம் கஷ்டமாயிருந்தது.

எப்போதும் சுறுசுறுவென்று வேலை செய்தே பழக்கப்பட்டவள் அவள். உடம்பு சதை போட்டு உட்காருவதற்கும் எழுந்திருப்பதற்கும் கஷ்டப் படுகிற வர்களைப் பார்த்தால் அவளுக்கு வெறுப்பாயிருக்கும். ஆனால் இப்போது அது ஒரு தவறாகத் தெரியவில்லை. 'என்ன அவசரம்! எதையும் மெதுவாகச் செய்யலாமே?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

தன் சக்தியையெல்லாம் சேமித்து வைத்து, தனக் குள்ளே வளரும் அந்த இன்னோர் உடலுக்குக் கொடுக் கிறோம் என்று எண்ணிக் கொண்டாள். நெஞ்சில் பெருமை நிறைந்தது.

விடிகாலை மூன்று மணிக்கு நோவு எடுக்க ஆரம்பித்தது. சுரீரென்று முதல் வலி ஏற்பட்டபோது அவள் அதிர்ந்து போனாள் பிறகு அது அடங்கியது சில நிமிடங்களுக்குப் பிறகு மறுபடி வலித்தது.

'இது அதுதான்' என்று எண்ணுகையிலேயே அவளுக்குப் பரவசமாயிருந்தது.

ஒரு வலிக்கும் அடுத்த வலிக்கும் இடையேயுள்ள நேரத்தைக் கணக்கிட்டாள் பத்து நிமிடத்துக்கொரு முறை நோவு ஏற்படுகிறது எஷ்று தெரிந்ததும் டாக்டருக்குப் போன் செய்துவிட்டு, தானே காரை ஓட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள். நோவு எடுக்கும்போது மட்டும் சாலையில் ஓரமாகக் காரை நிறுத்திக் கொண்டாள்.

டாக்டர் அவளைப் பரிசோதித்து, "பிரசவம் சுலபமாக இருக்கும். இயற்கையை அதன் போக்கில் விட்டுவிட்டு அமைதியாயிருங்கள்," என்றார்.

வலியைப் பொறுப்பது சுலபமாயில்லை. ஆனால் தாள முடியாததாகவும் இல்லை.

அற்புதமான ஒன்று நேரப் போகிறது என்ற எண்ணத்தில் வலியைப் பொறுத்துக் கொள்ள முடிந்தது. எட்டு மணிநேரம் பிரசவ வலி இருந்தது. இந்த வலி நிற்கவே நிற்காதோ என்று அவள் எண்ணிய தருணம் -

திடீரென்று வலி அடங்கியது தெரிந்தது. வயிற்றுக்குள் வேகமாக எதுவோ காலியாவதை உணர்ந்தாள். எங்கிருந்தோ வந்தது ஆனந்தமானதோர் அமைதி.

குவா குவாவென்ற மெல்லிய அழுகைக் குரல் கேட்டது. அவளுடைய குழந்தையை டாக்டர் தூக்கிப் பிடித்திருந்தார் "ஜெனிபர், உங்கள் பிள்ளையைப் பாருங்கள்," என்றார்.

ஜெனிபரின் புன்சிரிப்பு அந்த அறை முழுவதையும் பளீரென்று பிரகாசிக்கப் பண்ணியது.

குழந்தைக்கு ஜோஸப் என்று பெயர் வைத்தாள் ஜெனிபர். எட்டுப் பவுண்டு ஆறு அவுன்ஸ் எடை இருந்தது குழந்தை. கை காலெல்லாம் திடமாக இருந்தன.

பிறந்தவுடனே எந்தக் குழந்தையும் பார்க்கச் சகிக்காது என்று இதுவரை எண்ணியிருந்தாள் ஜெனிபர். உடம்பெல்லாம் சுருக்கம் சுருக்கமாக, நிறம் செக்கச் செவேலென்று, குரங்கு குட்டி மாதிரி இருக்கும் என்று நினைப்பாள். ஜோஸப் அப்படியில்லை என்று சொல்லிக் கொண்டாள் இவன் எத்தனை கொள்ளை அழகு. ஆஸ்பத்திரி நர்ஸ்களெல்லாம் குழந்தை ரொம்ப அழகு என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்கள் அவர்கள்

எவ்வளவு சொன்னாலும் இன்னும் சொல்ல மாட்டார்களா என்றுதான் இருந்தது ஜெனிபருக்கு.

வார்னரை அப்படியே உரித்து வைத்தாற் போல பிறந்திருந்தது குழந்தை. அதே நீலக் கண்கள். அதே அழகான அளவுள்ள தலை. குழந்தையைப் பார்க்கும் போதெல்லாம் வார்னரைப் பார்ப்பது போலவே இருந்தது அவளுக்கு. ஆனந்தமும் சோகமும் நிறைந்த விந்தையான உணர்வு அவளை ஆட்டிப் படைத்தது. அழகுக் கொள்ளை யாயிருக்கும் தன் குழந்தையைக் காண வார்னர் எத்தனை ஆசைப்படுவார்!

ஜோஸப் பிறந்த இரண்டாம் நாளானபோது, ஜெனிபரைப் பார்த்துப் புன்னகை செய்தது. ஜெனிபர் உடனே மணியடித்து நர்ஸை வரவழைத்து "பார், பார்! என் குழந்தை சிரிக்கிறது!" என்றாள்.

"அது சிரிப்பில்லையம்மா. வாய்வு" என்றாள் நர்ஸ்.

"இல்லை. இல்லை. மற்றக் குழந்தைகளுக்கு அப்படி இருக்கலாம். என் குழந்தை சிரிக்கிறான்," என்றாள் ஜெனிபர் பிடிவாதமாக.

ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்குப் புறப்பட்ட போது, எப்படி எப்படிக் குழந்தையைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு நீண்ட பட்டியல் தந்தார்கள். அதைப் பார்த்து ஜெனிபருக்குக் கலவரம் ஏற்பட்டதுதான் மிச்சம். இரண்டு வார காலம் ஒரு நர்ஸ் அவளுடன் தங்கியிருந்தாள். பிறகு ஜெனிபர் தானே குழந்தையைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. பயந்து நடுங்கினாள். எதையாவது தப்பாகச் செய்து குழந்தையைக் கொன்று விடுவோமோ என்று கவலைப்பட்டாள்.

முதல் தடவை குழந்தைக்குப் பால் உணவு கரைத்தபோது ஒரே குழப்பமாகிவிட்டது. பால் புட்டியின்

நிப்பிளை வென்னீரில் கொதிக்கப் போட வில்லை என்று ஞாபகம் வந்தது. கரைத்த பாலைக் கொட்டிவிட்டு மீண்டும் தயாரித்தாள். ஆனால் புட்டியை வென்னீரில் கொதிக்க வைக்க வில்லை என்று நினைவு வந்தது. மறுபடியும் பாலைக் கொட்டினாள். மீண்டும் தயாரித்தாள். அதற்குள் அழுது அழுது குழந்தை விறைத்தே போய்விட்டது.

பகல் இரவு என்று நேரம் காலம் பார்க்காமல் டாக்டரைப் போனில் கூப்பிட்டுக் கொண்டேயிருந்தாள்.

'குழந்தை ரொம்ப வேகமாய் மூச்சு விடுகிறது' 'குழந்தை ரொம்ப மெதுவாய் மூச்சு விடுகிறது' 'ராத்திரி குழந்தை எதுவும் சாப்பிடவில்லை... 'குழந்தை வாந்தியெடுத்தது...' இப்படி. ஏதாவது சொல்லிக் கொண்டி ருந்தாள்.

பதில் சொல்லி அலுத்துப் போன டாக்டர் ஒரு நாள் அவள் வீட்டுக்கு நேரிலேயே வந்து குழந்தையைப் பார்த்துவிட்டு, ஒரு லெக்சர் கொடுத்தார்

"இதோ பாருங்கள் ஜெனிபர், உங்கள் குழந்தையைக் காட்டிலும் ஆரோக்கியமான குழந்தையை நான் இதுவரை பார்த்தது கிடையாது. பார்வைக்குச் சோனி மாதிரி இருக்கிறது. ஆனால் காளை மாடு போன்ற வலுவுள்ள குழந்தை. அதைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டு, கொஞ்சி மகிழ்ந்து சந்தோஷப்படுங்கள். உங்கள் குழந்தைக்கு நூறு ஆயுசு! போதுமா?"

அதன் பிறகு ஜெனிபர் அமைதி அடைந்தாள் குழந்தையின் அறையை வண்ண வண்ணமாக அலங்கரித்து, தொட்டிலையும் கட்டிலையும் அழகழகாக ஜோடித்தாள்

குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சுவதிலும், குளிப்பாட்டுவதிலும், உடை மாற்றி விடுவதிலும், கை வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு போவதிலும் ஆனந்தம் கண்டாள்.

26

குழந்தை பிறந்து ஆறு வாரமாயிற்று. இனி வேலைக்குத் திரும்ப வேண்டியதுதான் ஜெனிபர் தீர்மானித்தாள் ஒரு நாளில் சில மணி நேரங்கள் குழந்தையைப் பிரிந்திருக்கவேண்டும். அதை நினைக்கையில் வெறுப்பாயிருந்தது. அதே சமயம் அலுவலகத்தில் வேலைகளைக் கவனிப்பதை எண்ணுகையில் உற்சாகம் ஏற்பட்டது. உலகத்தின் தொடர்புகளை அடியோடு வெட்டிக் கொண்டு இத்தனை நாள் வாழ்ந்தாயிற்று. இனி, பழையபடி தனது இன்னோர் உலகத்தைப் பார்க்க வேண்டும்.

கண்ணாடியில் நோக்கியபோது, முதலில் பருமனைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது. இளைப்பதற்காக ஏற்கெனவே செய்து வந்த உடற் பயிற்சிகளை இன்னும் தீவிரமாகச் செய்ய ஆரம்பித்தாள்.

வீட்டோடு இருந்து குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு வேலைக்காரி தேட ஆரம்பித்தாள். நீதி மன்றத்தில் ஜூரர்களை ஆராய்வது போல ஆராய்ந்தாள். ஏறத்தாழ இருபது பேரைப் பேட்டி கண்டபின், ஒருத்தியைத் தேர்ந்தெடுத்தாள். அவளைப் பற்றிக் கென்னத் துப்பறிந்து வந்து நற்சாட்சி வழங்கினார். ஒரே குடும்பத்தில் பதினைந்து வருஷம் வேலை பார்த்தவள் என்று தெரிவித்தார். அதன் பின்னரே அவளை அமர்த்திக் கொண்டாள்.

அலுவலகத்திற்கு ஜெனிபர் வந்ததும் அத்தனை பேருக்கும் கொண்டாட்டமாயிருந்தது.

உதவியாளர்கள் மட்டுமல்ல, கட்சிக்காரர்களும் ஏராளமாய் அவளை வந்து பார்த்து வணக்கம் தெரி வித்தார்கள் 'இத்தனை நாளும் எங்கே போயி ருந்தீர்கள்?' என்ற கேள்விக்கு மட்டும் சரியாகப் பதில் சொல்லாமல் மழுப்பிவிட்டாள்.

"நீ எங்கே போயிருக்கிறாய் என்று விடாமல் துளைத் தெடுத்தது யார் தெரியுமா ஜெனிபர்?" என்றார் கென்னத்.

"யார்?"

"மாரெட்டி."

"ஓ."

"கொன்று விட்டான் எங்களை எங்கே போயிருக்கிறாள் என்று சொல்லா விட்டாலும் பரவாயில்லை, சௌக்கியமாயிருக்கிறாளா என்று சொன்னால் போதும் என்றான்."

"சரி, அந்த ஆளைப் பற்றி என்ன பேச்சு?" என்றாள் ஜெனிபர்.

புதிய கட்சிக்காரர்கள் நிறையச் சேர்ந்திருந்தார்கள். உதவியாளர்கள் தங்கள் அலுவல்களை மிகவும் நேர்த்தி யாகச் செய்து வைத்திருந்தார்கள். மிக முக்கியமான பழைய கட்சிக்காரர்கள் வேறு வக்கீலிடம் போகாமல் இவள் வரட்டும் என்று காத்திருந்தார்கள்.

"அவர்களை டெலிபோன் கூப்பிட்டுப் பேசிக் கொள்கிறேன்," என்றாள்.

யார் யார் டெலிபோனில் கூப்பிட்டிருக்கிறார்கள் என்ற பட்டியலைப் பார்த்தபோது -

சுமார் ஒரு டஜன் தடவை வார்னர் கூப்பிட்டிருந்தது தெரிந்தது.

அவரைக் கூப்பிடலாமா? கூப்பிட்டு, எனக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை, சௌக்கியமாய்த்தான் இருக்கிறேன் என்று சொல்லலாமா?

வேண்டாம். அவர் குரலைக் கேட்டால் என்னால் தாள முடியாது. இவ்வளவு கிட்டத்தில் இருந்து அவரைப்

பார்க்க முடியாது, தொட முடியாது, அணைத்துக் கொள்ள முடியாது. குழந்தை ஜோசப்பைப் பற்றிச் சொல்ல முடியாது.

அப்புறம் எதற்கு அவரைக் கூப்பிட வேண்டும்?

பத்திரிகைகளில் வெளியான சில கட்டுரைகளை வெட்டி எடுத்து வைத்திருந்தாள் ஜெனிபரின் செக்ரட்டரி. ஜெனிபர் அவைகளைச் சுவாரசியமாகப் படிப்பாள் என்பது அவள் எண்ணம்.

மாரெட்டியைப் பற்றி ஒரு கட்டுரைத் தொடர் அதில் இருந்தது. நாட்டில் இன்று மிக முக்கியமான பயங்கரவாதப் புள்ளி மாரெட்டிதான் என்று அந்தக் கட்டுரை கூறியது. மாரெட்டியின் புகைப்படம் வெளியாகியிருந்தது. அதன் கீழே, 'நான் ஒரு சாதாரண இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்ட். அவ்வளவுதான்' என்று அவன் சொல்லிக் கொள்வதாக ஒரு வாசகம் போட்டிருந்தார்கள்.

ஜெனிபர் வெறுப்புடன் அந்தக் கட்டுரைகளை ஒதுக்கித் தள்ளினாள்.

ஊரில் இல்லாதபோது தேங்கி விட்ட வழக்குகளைச் சரிசெய்து முடிக்க மூன்று மாதமாகி விட்டது ஜெனிபருக்கு. இன்னும் முன்னதாகக் கூட அவளால் முடிந்திருக்க முடியும். ஆனால் மாலை நான்கு மணி அடித்ததோ இல்லையோ, வீட்டுக்குப் புறப்பட்டு விடுவாள். கையில் எவ்வளவு முக்கியமான வேலை இருந்தாலும் அதைப் பாதியிலேயே விட்டு விட்டுக் கிளம்பிவிடுவாள்.

வீட்டில் ஜோசப் காத்திருக்கிறானே.

காலையிலும் அப்படித்தான். குழந்தைக்குக் காலை உணவைத் தானே தயாரித்துக் கொடுப்பாள். அதனுடன் எத்தனை நேரம் விளையாடிக் கொண்டிருக்க முடியுமோ அத்தனை நேரம் விளையாடிக் கொண்டிருந்தது விட்டு, பிறகு தான் அலுவலகத்துக்குப் புறப்படுவாள்.

சாயந்தரம் வீடு திரும்பியதும் ஜோசப்பின் பக்கத்தில்தான் அவள் நேரமெல்லாம் செலவழியும். வழக்கு சமாசாரங்கள் எதையும் வீட்டுக்கு எடுத்து வந்து பார்ப்பதில்லை என்று கட்டாயமாகப் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டிருந்தாள் ஆபீஸ் வேலை ஆபீசோடு. குழந்தையைப் பிரிந்து வெளியூர் செல்கிற மாதிரி ஏதாவது வழக்கு வந்தால் அதை ஒப்புக் கொள்வதில்லை. முன் னெல்லாம் சனி ஞாயிறுகளில் வேலை பார்ப்பதுண்டு. இப்போது விட்டு விட்டாள்.

தனது அந்தரங்க உலகத்தைக் கெடுக்கக் கூடிய எதற்கும் இடம் தரக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தாள்.

ஜோசப்பின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு குழந்தைக் கதைகளை உரக்கப் படிப்பது அவளுக்கு மிகவும் பிடிக்கும்.

வேலைக்காரி சிரிப்பாள்: "அது பச்சைக் குழந்தைம்மா. நீங்க படிக்கிறதெல்லாம் அதுக்குப் புரியாது," என்பாள்.

"ஜோசப்பிற்கு எல்லாம் புரியும்," என்ற நம்பிக்கை யுடன் சொல்லிவிட்டுத் தொடர்ந்து படிப்பாள்.

ஜோசப் செய்யும் ஒவ்வொரு காரியமும் மாபெரும் அதிசயமாக அவளுக்குத் தோன்றியது. மூன்று மாதத்துக் கெல்லாம் ஜோசப் 'ங்கா ம்ம்மா' என்று சொல்லிப் பேசுகிறதே! தொட்டிலுக்குள் அந்தக் கிலுகிலுப்பையும் கரடிப் பொம்மையையும் வைத்துக் கொண்டு என்ன விளையாட்டு விளையாடுகிறது! என்ன கொள்ளைச் சிரிப்பு!

ஆறு மாதமாகவில்லை, தொட்டிலை விட்டு வெளியே வரப் பார்க்கிறது! வெளியுலகத்தைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறது!

கைகளில் ஏந்திக் குழந்தையை இறுக்கி அணைத்துக் கொள்வாள் ஜெனிபர். அவளுடைய விரல்களைத் தன் பிஞ்சு

விரல்களால் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளும். இருவரும் ரொம்ப சீரியஸாய், ரொம்ப நேரத்துக்கு, என்னென்னவோ பேசிக் கொள்வார்கள்!

ஒரு வருஷம் என்னமாய் ஓடி விட்டது! நேற்றுத்தான் ஜோசப் பிறந்த மாதிரி இருந்தது!

குழந்தை தளர் நடை நடக்க ஆரம்பித்திருந்தான். 'மூக்கு எங்கே இருக்கு?' என்றால் காட்டினான். 'வாய்?' என்றால் காட்டினான். 'தலை?' என்றால் காட்டினான்.

"ஜோசப் ஒரு ஜீனியஸ்!" என்று வேலைக்காரியிடம் பெருமையாகச் சொல்லிக் கொண்டாள் ஜெனிபர்.

குழந்தையின் முதல் ஆண்டு நிறைவைப் பிரமாதமாய்க் கொண்டாடினாள். ஏதோ ஜனாதிபதி மாளிகையில் நடக்கிற விழா மாதிரி, வீடெங்கும் தோரணமும் பலூனும் கட்டி, அக்கம்பக்கத்துக் குழந்தை களையெல்லாம் வரவழைத்தாள். பிறந்த நாள் கேக்கைத் தானே தன் கைபடத் தயாரித்து வைத்திருந்தாள். அவள் கவனிக்காத போது குழந்தை கேக்கை கவிழ்த்து, ஒரு பெரிய வில்லல் விண்டு வாயில் அடைத்து முகமெல்லாம் பூசிக்கொண்டு விட்டது மற்றக் குழந்தைகள் வருவதற்கு முன்பே!

இரண்டு மணி நேரம் பிறந்த நாள் பார்ட்டி நடைபெற்றது. ஒரே அட்டகாசம்தான். வந்திருந்த குழந்தைகள் கண்டதையும் சாப்பிட்டு, அழகான தரை விரிப்பில் வாந்தியெடுத்து அசிங்கம் பண்ணின. பலூன்கள் உடைந்தபோது ஓவென்று அழுதன. பொம்மைகளுக்காகச் சண்டை போட்டன.

ஜெனிபர் அவ்வளவையும் ரசித்தாள்.

வந்திருந்தவர்கள் அனைவரும் போயாயிற்று. ஜோசப்பைத் தூங்க வைத்து, தூங்கும் குழந்தையின் பக்கத்திலேயே வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள் ஜெனிபர்.

என் உடம்புக்குள்ளிருந்தா இந்த அற்புதக் குழந்தை வந்தது!. நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. இன்றைக்குப் பிறந்த நாள் விழாவில் எவ்வளவு சமர்த்தாய் நடந்துகொண்டான்! வார்னர் பார்த்திருந்தால் எவ்வளவு பெருமைப் பட்டிருப்பார்!

வார்னர் இல்லையே என்று நினைக்கையில் அவள் மகிழ்ச்சி குறைந்தது.

இன்னும் எத்தனையோ பிறந்த நாள் வரும். ஜோசப்பிற்கு இரண்டு வயதாகும். ஐந்து வயதாகும். பிறகு, பத்து, இருபது வயதாகும். இளைஞனாகி விடுவான். பெரியவனானதும் அவளை விட்டுப் பிரிந்து செல்வான். தன் வாழ்க்கையைத் தானே அமைத்துக் கொள்வான்.

'போதும், நிறுத்து!' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டாள் ஜெனிபர். இப்படி மனசுக்குள் புலம்புவது கூடாது என்று முன்பே அவள் தீர்மானித்துக் கொண்டிருந்தாள். அதை ஞாபகப்படுத்திக் கொண்டு படுக்கையில் படுத்தாள். ஆனால் தூங்கி விடாமல், அன்றைய பிறந்த நாள் விழாவில் நடந்த ஒவ்வொரு சிறு விஷயத்தையும் ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

என்றாவது ஒரு நாள் வார்னரிடம் இதையெல்லாம் சொல்லச் சந்தர்ப்பம் வருமோ என்னவோ.

அறத்தாழ ஒன்பது மாதமாகி விட்டது வார்னருடன் ஒரு வார்த்தை பேசி. எந்தத் தொடர்பும் இல்லை.

ஆனால் அவனைப் பற்றி எந்தப் பத்திரிகையில் என்ன செய்தி வந்தாலும் ஜெனிபர் விழுந்து விழுந்து படித்தாள். டெலிவிஷனில் அவன் தோன்றினால் கண் கொட்டாமல் பார்த்தாள்.

நாடு மொத்தமும் அறிந்த பெரும் புள்ளியாகிக் கொண்டிருந்தான் வார்னர். பாராளுமன்றத்தில் செல்வாக்குடன் விளங்கினான். தொழிலாளர் நலனுக்காக அவன்

கொண்டுவந்த ஒரு மசோதா பெரும் ஆதரவுடன், எளிதாக நிறைவேறியது. ஜனாதிபதி பதவிக்கு அவன் போட்டியிடுவது நிச்சயம் என்று எல்லாருமே சொன்னார்கள்.

ஜெனிபருக்கு ஒரு பக்கம் பெருமையாக இருந்தது. ஒரு பக்கம் கசப்பாக இருந்தது.

இடைவிடாமல் அவனைப் பற்றியே அவள் சிந்தனைகள் ஓடின. எப்படி ஓடாமல் இருக்கும்? வார்னரைப் பற்றிச் சதாகாலமும் நினைவூட்டிக் கொண்டு ஜோசப் இருக்கிறானே? இப்போது அவனுக்கு இரண்டு வயதாகியிருந்தது. அச்சாக அப்பாவை போலவே இருந்தான். அதே ஆழமான நீலக் கண்கள். நடையுடை பாவனைகள் கூட அப்படியே.

இப்போது தட்டித் தடுமாறி வாக்கியமாகப் பேச வந்திருந்தது. 'ப்ளீஸ்' என்றான். 'தாங்க்யூ' என்றான்.

கென்னத் அவனுக்காக ஒரு பெயின்ட்டிங் செட் வாங்கி வந்து தந்தார். முன்னறைச் சுவர்கள் பூராவும் வர்ணங்களைப் பூசி அலங்கோலம் பண்ணிவிட்டான்.

"உதைக்கணும் இவனை!" என்றாள் வேலைக்காரி.

"கவலைப் படாதே! வர்ணங்கள் தானாகவே அழிந்துவிடும். குழந்தை தன் மனத்தில் இருக்கிற எண்ணங்களை வெளிப்படுத்துகிறானாக்கும்!" என்றாள் ஜெனிபர்.

குழந்தையை விட்டுவிட்டு எந்த வெளியூருக்கும் போவதில்லை என்பதில் ரொம்பக் கண்டிப்பாக இருந்தாள் அவள். அப்படியும்கூட இரண்டொரு கட்சிக்காரர்களின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் போய் விடுவதுண்டு.

பீட்டர் அப்படிப்பட்ட கட்சிக்காரர். பல தொழிற் சாலைகளின் அதிபர்.

அன்று அவளைக் கூப்பிட்டு, "லாவேகா நகரில் ஒரு தொழிற்சாலை வாங்குவதாக இருக்கிறேன். நீங்கள் வந்திருந்து அவர்களுடைய வக்கீல்களைச் சந்தித்துப் பேச வேண்டும்," என்று கேட்டார்.

"என் ஜூனியரை அனுப்புகிறேன். உங்களுக்குத் தான் தெரியுமே, நான் வெளியூர்களுக்குப் போவதில்லை," என்றாள் ஜெனிபர்.

"இருபத்துநாலு மணி நேரத்தில் வேலை முடிந்து விடும். எங்கள் கம்பெனி விமானத்திலேயே உங்களை அழைத்துப் போய் திரும்பிக் கொண்டு விட்டுவிடச் சொல்கிறேன்."

சரி என்று அரை மனதாக அவள் ஒப்புக் கொண்டாள்.

அந்த நகரத்துக்கு முன்பொருமுறை அவள் போயிருக்கிறாள். அந்த ஊர் அவளுக்குப் பிடிக்கவில்லை.. இரவைப் பகலாக்கும் விளக்குகள் ஒளி வீச, கேளிக்கைகளும், சூதாட்ட ஓட்டல்களும், நைட் கிளப்புகளும் நிறைந்த அந்த நகரம் முற்றிலும் அன்னியமான வேற்று நாடு போலத் தோன்றியது.

ஜோசப்பை எப்படியெப்படிக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று விவரமான நீளமான கட்டளைகள் கொடுத்தாள் ஜெனிபர்.

"நீங்கள் திரும்பி வர எத்தனை நாளாகும்?" என்று வேலைக்காரி கேட்டாள்.

"நாளைக்கு வந்து விடுவேன்."

"அதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம்? என்ன அம்மாக்களோ நீங்களெல்லாம்!" என்று வேலைக்காரி கழுத்தை நொடித்தாள்.

வந்த வேலை சாயந்தரத்துக்குள் முடிந்து விட்டது. அவளை வரவழைத்திருந்த தொழிலதிபர் இரவு ஓட்டலில் விருந்துண்ணலாம் என்று அழைத்தார்.

"மன்னியுங்கள். விடிகாலை நியூயார்க்கிற்குப் புறப்பட வேண்டும். என் அறைக்குப் போய் ஓய்வெடுத்துக் கொள்கிறேன்," என்றாள் அவள்.

தான் தங்கியிருக்கும் அறைக்கே சாப்பாட்டை வரவழைக்கத்தான் முதலில் எண்ணியிருந்தாள். ஆனால் அறைக்குள் ஒரே புழுக்கமாயிருந்தது. ஏனோ தெரியவில்லை. வார்னரின் ஞாபகம் வந்து கொண்டே யிருந்தது.

வார்னரைப் பற்றி ஞாபகம் வரும்போதெல்லாம் அவர் பிஸினஸ் விஷயமாக வெளியூர் போயிருக்கிறார், இதோ வந்து விடுவார் என்கிற மாதிரி நினைத்துச் சமாதானப்படுத்திக் கொள்வது வழக்கம். இந்தத் தடவை அந்தத் தந்திரம் பலிக்கவில்லை. வார்னர் மட்டுமல்ல, அவளை மயக்கித் தந்திரமாகப் படுக்கைக்கு இழுத்த அவர் மனைவி மேரி... மேரியும் வார்னரும் தனியாக...

அவளால் அந்த நினைப்பைத் தாங்க முடியவில்லை. தனியாக உட்கார்ந்திருந்தால் இப்படித்தான் இருக்கும். கூட்டமும் சந்தடியும் உள்ள இடத்துக்குப் போகலாம். ஏதாவது நடன ஷோ கூடப் பார்க்கலாம்...

கிடுகிடுவென்று குளித்து உடைமாற்றிக் கொண்டு புறப்பட்டாள்.

ஓட்டல் வாசலில் நீண்ட க்யூ நின்றிருந்தது. தொழிலதிபரிடம் சொல்லித் தனக்கு ரிசர்வேஷன் செய்து கொள்ளாமல் போனோமே என்று வருந்தியவள், ஓர் ஓட்டல் சிப்பந்தியிடம், இடம் கிடைக்க எத்தனை நேரமாகும் என்று விசாரித்தாள்.

"நீங்கள் எத்தனை பேர்?" என்று அவன் கேட்டான்.

"நான் ஒருத்திதான்."

"ஸாரி மிஸ்... என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையில், பின்னாலிருந்து ஒரு குரல் -

"ஏப்ரகாம், என் இடத்துக்கு அழைத்துப் போ,"

சிப்பந்தி வாயெல்லாம் பல்லாக, "நிச்சயமாய். இப்படி என் பின்னாடி வாருங்கள்," என்றான்.

ஜெனிபர் திரும்பிப் பார்த்தாள்.

மாரெட்டி நின்றிருந்தான்.

27

ஜெனிபருக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. மாரெட்டியை இங்கே சந்திப்போமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. தான் ரிசர்வ் செய்து வைத்துள்ள மேஜைக்கு அவன் அழைத்ததும், ஆத்திரம் பீறீட்டு வந்தது.

"தாங்க்ஸ். வேண்டாம். நான்... என்று சொல்ல ஆரம்பித்தாள்.

அதற்குள் அவன், "எப்படியும் நீ சாப்பிட்டாக வேண்டுமே? அதற்குத் தானே வந்திருக்கிறாய்?" என்று சொன்னவாறு அவள் கையைப் பற்றிக் கொண்டான்.

வேண்டா வெறுப்பாக அவனுடன் கூடச் செல்லும்படி ஆயிற்று. ஓட்டல் சிப்பந்தி அவர்களுக்குப் பணிவோடு வழி காட்டிக் கொண்டு சென்றான். பெரிய ஹாலின் மையத்தில் இருந்த அருமையான இடத்தைக் காட்டி உட்கார்த்தி வைத்தான்.

மாரெட்டியின் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிடுவதா? நினைக்கும் போதே ஜெனிபருக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. ஆனால் எப்படி இங்கிருந்து முரண்டிக் கொண்டு வெளியே ஓடுவது? நாலு பேர் கவனிக்கும்படி ஆகிவிடுமே?

முட்டாள் தனம். அந்தத் தொழிலதிபர் விருந்துக்குக் கூப்பிட்டபோது பேசாமல் ஒப்புக் கொண்டிருக்கலாம்.

நடனம் நடைபெறும் அரங்கத்துக்கு எதிரில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். சிப்பந்தி குனிந்து வணங்கி, "வருகிறேன் மிஸ்டர் மாரெட்டி. வணக்கம் மிஸ்," என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டான்.

மாரெட்டியின் கண்கள் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதை ஜெனிபரால் உணர முடிந்தது. இருப்புக் கொள்ளாமல் தவித்தாள்.

அவன் எதுவும் பேசவில்லை. மௌனமாக உட்கார்ந் திருந்தான் இப்படி மௌனம் சாதிப்பது அவனுக்கு வழக்கம். பேச்சினால்தான் எல்லாம் கெடுகிறது என்பது அவன் கருத்து. மற்றவருக்கு நம் எண்ணத்தை வெளிப் படுத்தவே சொற்கள் இருக்கின்றன என்று அவன் நினைப்ப தில்லை. மாறாக வார்த்தை என்பது மாட்டை வைக்கும் பொறி என்பது அவன் நம்பிக்கை. எல்லாருக்கும் பேச்சு கை கொடுக்கிற தென்றால் அவனுக்கு மௌனம் கைகொடுக்கும்.

பானங்கள் வந்தன. எதுவும் பேசாமலே ஜெனிபர் அருந்தினாள்.

இவனுடைய குழந்தைப் பிராயம் எப்படி இருந்திருக்கும்? தன்னையும் மீறி ஜெனிபர் அவனைக் கூர்ந்து பார்த்தாள் கவர்ச்சியாய் தோன்றினான் அபாயமான, திகில்நிறைந்த கவர்ச்சி. ஒரு வன்முறை இயல்பு எந்த நிமிடத்திலும் வெடிக்கக் கூடிய மாதிரி அவனுக் குள்ளே ஒளிந்திருந்தது போல் இருந்தது.

ஏனென்று ஜெனிபருக்குப் புரியவில்லை. ஆனால் இவன் பக்கத்தில் இருக்கிறபோது தான் ஒரு பெண் என்பது நினைவுக்கு வருவதாகத் தோன்றியது. அதற்கு என்ன காரணம்? அந்தக் கருமைக் கண்களா? ஒரு வினாடி. அவை அவளைப் பார்க்கின்றன. மறு வினாடி நகர்ந்து விடுகின்றன

உள்ளக் கிடக்கையை ரொம்ப வெளிப் படுத்தி விடுவோமோ என்று பயந்தது போல.

நாம் ஒரு பெண் என்ற நினைப்பு ஏற்பட்டு ரொம்ப நாளாகிறது என்று ஜெனிபர் எண்ணிக் கொண்டாள். வார்னரை இழந்தது முதல் அந்த எண்ணமே அவளுக்கு உதித்ததில்லை.

ஓர் உண்மையான ஆணினால் தான் ஒரு பெண்ணுக்குத் தானொரு பெண் என்ற உணர்வை உண்டாக்க முடியும் என்று நினைத்துக் கொண்டாள். நாம் அழகாயிருக்கிறோம் என்ற உணர்வு, நம்மை ஒருவன் விரும்புகிறான் என்ற உணர்வு எல்லாம் அப்போதுதான்...

சே சே சே! என்னவெல்லாம் நினைக்கிறோம்! நல்ல வேளை, என் மனத்தில் ஓடும் எண்ணங்களை மாரெட்டியால் அறிய முடியாது!

பல பேர் வந்து வந்து மாரெட்டிக்கு வணக்கம் செலுத்திவிட்டுப் போனார்கள். பிஸினஸ் நிர்வாகிகள், நடிகர்கள், ஒரு நீதிபதி, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இப்படிப் பலர் பதவியில் உள்ளவர்கள் பதவியில் உள்ளவர்களுக்குச் செலுத்தும் மரியாதைகள் மாரெட்டியின் செல்வாக்கு எப்படிப்பட்டது என்பது ஜெனிபருக்குப் புரிய ஆரம்பித்தது.

"இந்த ஓட்டலில் மொத்தம் எண்ணூறு பேருக்கான உணவை மொத்தமாகத் தயாரிக்கிறார்கள் விமானப் பயணத்தின் போது கொடுக்கிற சாப்பாடு மாதிரி உப்பு உறைப்பில்லாமல் இருக்கும். அது நமக்கு வேண்டாம். ஸ்பெஷலாக ஆர்டர் தருகிறேன்," என்று கூறி, கையை உயர்த்தினான் மாரெட்டி. உடனே ஓட்டல் சிப்பந்தி ஓடோடி வந்தான். மாரெட்டி பல வகையான உணவுகளுக்கு ஆர்டர் தந்தான்.

ஷாம்பேய்ன் ஒரு புட்டி அவர்கள் மேஜைக்கு வந்தது. டல் சொந்தக்காரர் தன் வாழ்த்துக்களுடன் இலவசமாக அனுப்பியிருந்தார்.

ஜெனிபரின் மனத்திலிருந்த இறுக்கம் சற்றே ளர்ந்தது. அவளுடைய உறுதியையும் மீறி ஒருவகை மகிழ்ச்சி அவள் மனத்தில் பரவியது. கவர்ச்சியான ஓர் ஆணுடன் மாலை நேரத்தைக் கழித்து எத்தனை நாளாகிறது!

அந்த எண்ணம் ஏற்பட்டவுடன் ஜெனிபருக்கே தன் மீது கோபம் வந்தது. இந்த மாரெட்டியைப் போய்க் கவர்ச்சியானவன் என்று எப்படி என்னால் நினைக்க முடிந்தது! இவன் ஒரு கொலைகாரன். வெறி பிடித்த விலங்கு. இவனுக்கு உணர்ச்சிகள் கிடையாது.

பயங்கரக் குற்றங்கள் செய்த எவ்வளவோ கொடுமைக் காரர்களை ஜெனிபருக்குத் தெரியும். அவர்களுக்காக நீதிமன்றத்தில் வாதாடியதும் உண்டு. ஆனால் அவர்கள் யாரும் இந்த மாரெட்டியின் அளவுக்கு அபாயமானவர்கள் அல்ல என்று அவளுக்குத் தோன்றியது. இல்லாவிட்டால் பயங்கரவாதக் கும்பலில் ஒரு பெரும் புள்ளியாக வந்திருக்க முடியுமா?

"இரண்டு மூன்று தடவை உனக்குப் போன் செய்தேன். நீ இல்லை," என்றான் அவன்.

அனேகமாய் ஒவ்வொரு நாளும் இவன் போன் செய்தான் என்று கென்னெத் சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது.

"எங்கே போயிருந்தாய்?" என்று கேட்கிற மாதிரி அவன் கேட்டான்.

"வெளியூருக்கு."

நீண்ட நேரம் மௌனம் நிலவியது. "என் வழக்குகளை நீ எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்பு கேட்டே னே, நினைவிருக்கிறதா?" என்றான் அவன்.

ஷாம்பேய்ன் கொஞ்சம் உறிஞ்சியபடி, "தயவு செய்து அந்தப் பேச்சை எடுக்காதீர்கள்," என்றாள் அவள்.

"நீ என்ன தொகை கேட்டாலும்...

"முன்பே சொன்னேனே? உங்கள் வழக்குகளில் எனக்கு அக்கறையில்லை. ஏராளமான தொகை தருவதாகச் சொன்னால் யாருமே மயங்கி விடுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அதெல்லாம் கதைகளில் தான். பணத்துக்கு மயங்காதவர்களும் உலகத்தில் உண்டு. நான் மறுத்தது மறுத்ததுதான் மிஸ்டர் மாரெட்டி."

கொஞ்ச நாள் முன்பு தன் மாமாவின் வீட்டில் நடந்த ஆலோசனைக் கூட்டம் மாரெட்டிக்கு ஞாபகம் வந்தது. மாரெட்டியின் மாமாதான் பயங்கரக் கும்பலின் தலைவர். கிழவர். அவருக்குப் பின் மாரெட்டிதான் அந்தப் பதவிக்கு வரவிருந்தான்.

அன்றைய கூட்டம் சுமூகமாக நடைபெறவில்லை. மாரெட்டி சொன்ன யோசனை ஒவ்வொன்றுக்கும் குடும்ப வக்கீலான கால்ஃபாக்ஸ் ஆட்சேபம் சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் புறப்பட்டுப் போன பிறகு மாரெட்டி தன் மாமாவிடம், "மனுஷன் சுத்த அத்தைப் பாட்டியாக ஆகிக் கொண்டிருக்கிறார். அவரைக் கழற்றி விட்டு விடுவது நல்லது என்று தோன்றுகிறது," என்றான்.

"அவர் நல்லவர் நம்மை எவ்வளவோ கஷ்டங் களிலிருந்து காப்பாற்றியிருக்கிறார்," என்றார் மாமா.

"அதெல்லாம் பழங் கதை இப்போது ஆசாமியின் மூளை மழுங்கி விட்டது," என்றான் மாரெட்டி விடாமல்.

"அவர் இடத்தில் யாரைப் போடலாம் என்கிறாய்?"

"ஜெனிபர்"

கிழவர் தலையை பலமாக ஆட்டினார். "முன்பே உனக்குச் சொல்லியிருக்கிறேன். நம் பிஸினஸ் விஷயங்களை ஒரு பெண் அறிந்து கொள்வது நல்லதில்லை."

"அவள் வெறும் பெண்ணல்ல. இந்த வட்டாரத்திலேயே பெரிய வக்கீல்."

"பார்க்கலாம், பார்க்கலாம்," என்று அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் மாரெட்டியின் மாமா.

அதெல்லாம் இப்போது மாரெட்டிக்கு ஞாபகம் வந்தது.

விரும்பியதை அடைந்தேதான் அவனுக்குப் பழக்கம். ஜெனிபர் எதிர்த்துக் கொண்டு நிற்க நிற்க அவளை அடைந்தே தீருவது என்று அவன் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான்.

இப்போது தனக்கு மிகப் பக்கத்தில் உட்கார்ந் திருக்கும் அவளை உற்று நோக்கினான். ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நீ எனக்குச் சொந்தமாகத்தான் போகிறாய், கண்ணு! காலோடு தலை எனக்குச் சொந்தமாகப் போகிறாய்! இரு இரு!

"என்ன யோசனை செய்கிறீர்கள்?" என்று ஜெனிபர் கேட்டாள்.

மெதுவான, இனிமையானதொரு புன்னகை அவன் இதழ்களில் பூத்தது. உடனே ஜெனிபர் நாக்கைக் கடித்துக் கொண்டாள் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டாமே என்று. நேரமாகிறது. புறப்பட வேண்டும்...

"விருந்து அருமையாயிருந்தது, மிஸ்டர் மாரெட்டி, தாங்க்ஸ். நான் விடிகாலை ஊருக்குப் புறப்பட வேண்டும். ஆகவே..."

அந்தச் சமயம் பார்த்து விளக்குகள் மங்கலாக எரியத் தொடங்கின. ஆர்க்கெஸ்ட்ராவின் இசை தவழ்ந்து வந்தது.

மாரெட்டி அவளைத் தடுத்து நிறுத்தினான். "இப்போது போய்க் கிளம்புவதாவது! ஊகூம்! நடனம் ஆரம்பமாகப் போகிறது. புகழ்பெற்ற நடனக்கலைஞர். உனக்கு ரொம்பப் பிடிக்கும்," என்றான் மாரெட்டி.

ஜெனிபர் உட்கார்ந்தாள்.

உண்மைதான் இசையும் நடனமும் பிரமாதமாயிருந்தன. அவள் மிகவும் ரசித்து மகிழ்ந்தாள் அது முடிந்தவுடன் புறப்பட்டு விட வேண்டுமென்று நினைத்தவளை மறுபடியும் மாரெட்டி விடவில்லை. எல்லோரும் ஜோடி ஜோடியாக நடனம் ஆடலானார்கள் தன்னுடன் ஒரு முறை நடனமாடும்படி அவன் ஜெனிபரைக் கேட்டுக்கொண்டான்.

முடியாதென்று மறுத்திருக்கலாம். அது மரியாதையில்லை என்று ஜெனிபருக்குத் தோன்றியது. அத்துடன் பொழுது இனிமையாகக் கழிந்து கொண்டிருக்கிறது என்பது உண்மை. அதைக் கெடுத்துக் கொள்வானேன் என்று எண்ணினாள்.

மாரெட்டியுடன் கைகோத்துக் கொண்டு நடனமாடினாள் அவன் நடனத்தில் தேர்ச்சி பெற்றவனாக இருந்தான். அவனுடன் ஆடும்போது தன் உள்ளத்தின் புழுக்கங்களும் இறுக்கங்களும் இளகிக் கரைவதை அவளால் உணர முடிந்தது.

பக்கத்தில் ஆடிக்கொண்டிருந்த இன்னொரு ஜோடி ஒரு முறை அவர்களை இடிக்கவே, ஜெனிபர் மாரெட்டியின் மேல் நேருக்கு நேரே மோதிக் கொள்ளும்படி நேரிட்டது. அவனுடைய தேகத்தின் திண்மையை அந்தக் கணத்தில் உணர்ந்தாள்.

ஆனால் மாரெட்டி உடனேயே விலகிக் கொண்டு விட்டான். நடனம் முடியும் வரை அவள் உடம்பின் மீது படாமலே ஆடினான்.

அதன் பின்னர் அவர்கள் சூதாட்டங்கள் நடைபெறும் காசினோவுக்குச் சென்றார்கள். பிரகாசமான விளக்குகள், பக்கச்சக்கமான சத்தம். தங்கள் உயிரையே பணயம் வைத்த மாதிரி பல பேர் பலவிதமான சூதாட்டங்களில் ஈடுபட்டிருந்தார்கள்

காஸினோ நிர்வாகிகளுக்கு மாரெட்டியை நன்கு தெரிந்திருந்தது. 'மிஸ்டர் எம்' என்று மரியாதையுடன் அவனை அழைத்தார்கள்.

மாரெட்டி ஏராளமாகப் பணம் கட்டி விளையாடி, ஏராளமாகத் தோற்றான். ஆனால் கொஞ்சமும் பதட்டப் படாமல் இருந்தான்.

"உன் அதிருஷ்டம் எப்படியென்று பாரேன்," என்று சொல்லி ஜெனிபருக்கு விளையாடப் பணம் கொடுத்தான்.

அவள் விளையாடி, முன்னூறு டாலர் ஜெயித்தாள். அதை மாரெட்டியிடமே தந்து விட்டாள். அவன் வாங்கிக் கொள்ள மறுத்தான். வற்புறுத்திக் கொடுத்து விட்டாள். எந்த விதத்திலும் அவனுக்குக் கடன் பட்டு விடக் கூடாது என்பதில் அவள் தீவிரமாயிருந்தாள்.

சாயந்தரத்திலிருந்து ஜெனிபர் கவனித்துக் கொண்டு தான் இருந்தாள் பல பெண்கள் மாரெட்டியிடம் வந்து பேசிவிட்டுச் சென்றார்கள். எல்லாருமே இளம் பெண்கள். கவர்ச்சியானவர்கள்.மரியாதைக்கு இரண்டு வார்த்தை பேசி அவர்களை அனுப்பி விட்டான் அவன். 'எனக்கு இந்த ஜெனிபர்தான் முக்கியம்' என்று அவன் சொல்லாமல் சொல்வது போலிருந்தது. அவளையும் மீறி ஜெனிபருக்குப் பெருமையும் கர்வமும் ஏற்பட்டன.

சாயந்தரம் புறப்பட்ட போது இருந்த களைப்பும் மனச் சோர்வும் இப்போது எங்கே மறைந்தன? மாரெட்டியின் வலுவும் உற்சாகமும் பொங்கித் ததும்பி

வெளியே தெறித்து அவளையும் நனைத்து விட்டது போலிருந்தது.

மாரெட்டி அவளை ஒரு ஜாஸ் இசைக் குழுவின் நிகழ்ச்சிக்கு அழைத்துச் சென்றான். பிறகு இன்னோர் இசைக் குழுவுக்குப் போனார்கள். எங்கே போனாலும் சரி, மாரெட்டிக்கு ராஜோபசாரம்தான். ஒவ்வொருவரும் அவன் கவனத்தைக் கவர முயன்றார்கள் வணக்கம் செலுத்தினார்கள் தாங்கள் வந்திருப்பதைத் தெரியப் படுத்திக் கொண்டார்கள்.

ஜெனிபர் இன்னொன்றையும் கவனித்தாள் அவளுடன் இருந்த மொத்த நேரத்திலும் தப்பான ஒரு வார்த்தை கூட அவளிடம் மாரெட்டி பேசவில்லை. அப்படியும்கூட அவனுடைய ஆண்மைக் கவர்ச்சி அலை அலையாகப் புறப்பட்டு அவளைத் தாக்கிக் கொண்டே யிருந்தது. உடம்பைப் பலவந்தப்படுத்திய மாதிரி. சிராய்ப்புக்கள் ஏற்பட்ட மாதிரி இருந்தது. அப்படியொரு அனுபவம் அதற்கு முன் அவளுக்கு ஏற்பட்டதேகிடையாது. அவளுக்குச் சங்கடமும் ஏற்பட்டது. புத்துணர்ச்சியும் உண்டாயிற்று. அவள் ஒரு போதும் அறிந்திராத மிருகத்தனமாக சக்தியொன்று அவனிடமிருந்து உற்பத்தி யாவதை உணர்ந்தாள்.

அவளை அவளுடைய ஓட்டலில் மாரெட்டி கொண்டு போய் விட்டபோது மணி விடிகாலை நான்கு.

ஜெனிபரின் அறை வாசலை அடைந்ததும் மாரெட்டி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "குட் நைட் என் வாழ்க்கையில் மறக்கவே முடியாத இரவு இது," என்றான்

போய்விட்டான்.

அந்தச் சொற்கள் ஜெனிபருக்கு ஏதோ ஒரு நடுக்கத்தை ஏற்படுத்தின.

வாஷிங்டனில் வார்னரின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தது. தினசரிகளிலும் வார இதழ்களிலும் அவன்பெயர் மேலும் மேலும் அடிபட லாயிற்று. பல ஊழல் விசாரணைகளை அவன் தொடங்கி வைத்திருந்தான். அமெரிக்க பாராளுமன்றக் குழுவுக்குத் தலைமை வகித்து மாஸ்கோவுக்குச் சென்றான் ரஷ்ய அதிகாரிகள் விறைப்பாக அவனுக்கு வரவேற்புக் கொடுக்கும் புகைப்படம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியாயிற்று. பத்து நாள் கழித்து அவன் நாடு திரும்பியதும் ரஷ்யாவில் அவன் ஆற்றிய பணியைப் பத்திரிகைகள் பாராட்டி எழுதின.

சிறைச்சாலைகளில் பல சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று வார்னர் வாதாடினான் அதற்காக நாடெங்குமுள்ள சிறைகளுக்கு விஜயம் செய்தான் கைதிகளையும் அதிகாரிகளையும் பேட்டி கண்டு அறிக்கை கொடுத்தான். அந்த அறிக்கையின் அடிப்படையில் சிறைச்சாலைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பெண்களுக்கான பத்திரிகையாளரும் அவனை விட்டு விடவில்லை.

'காஸ்மாபாலிடன்' இதழில் வார்னரின் குடும்பப் படம் பிரசுரமாகி இருந்தது.

ஜெனிபர் தன் படுக்கையறையில் கணப்பினருகே உட்கார்ந்த வண்ணம் அதைக் கண் கொட்டாமல் பார்த்தாள். நீண்ட நேரம் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் ஓரிடத்தில்.

வார்னர், அவன் மனைவி மேரி, அவர்களுடைய பெண் குழந்தை சமந்தா.

மேரி, அவளுக்கே உரிய இனிமையான கவர்ச்சியுடன் புன்னகை செய்தவாறு காட்சியளித்தாள் அவளை அப்படியே உரித்து வைத்த மாதிரியிருந்தது அவள் குழந்தை

வார்னரின் முகத்தைக் கவனித்தாள் ஜெனிபர் களைத்துப் போயிருக்கிற மாதிரி தோன்றினான். கண்களைச் சுற்றிச் சிறு வளையங்கள் தென்பட்டன. இதற்கு முன் அவனிடம் அவள் அப்படிக் கண்டதில்லை. கிருதாவில் லேசான நரை தெரிந்தது.

ஜோசப் வளர்ந்து பெரியவனாகும்போது, அவன் முகம் இதே போல்தான் இருக்கும் என்று எண்ணிக் கொண்டாள் அந்த ஒற்றுமையைப் பார்த்து அவளுக்குப் பயம் ஏற்பட்டது.

நேரே காமெராவைப் பார்க்கிற மாதிரி புகைப் படக்காரர் வார்னரைப் படமெடுத்திருந்தார். ஆகவே அவன் தன்னைப் பார்ப்பது போல் ஜெனிபருக்குத் தோன்றியது. அந்தக் கண்கள் என்ன சொல்லுகின்றன? ஜெனிபர் ஊகிக்க முயன்றாள்.

இதேபோல் இவரும் என்னைப் பற்றி என்றைக் கேனும் நினைத்துப் பார்ப்பாரா?

மேரியின் படத்தையும் அவள் குழந்தையின் படத்தையும் மறுபடி ஒரு முறை நோக்கினாள். பிறகு அந்தப் பத்திரிகையைக் கணப்பில் தூக்கி எறிந்தாள்.

நெருப்பில் அது எரிந்து கொண்டு மடங்கிக் கருகுவதைப் பார்த்தவாறு வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள்

28

காலம் ஓடிக்கொண்டிருந்தது. பருவங்கள் மாறிக் கொண்டிருந்தன.

பிள்ளை ஜோசப்பை வைத்துத் தான் உலகமே சுழல்வதுபோல இருந்தது ஜெனிபருக்கு. அவளுடைய உலகத்தின் மையமே அவள் குழந்தைதான் நாளுக்கு நாள்

அவன் வளர்வதையும் முன்னேறுவதையும் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் நடப்பதும் பேசுவதும் கேள்விகள் கேட்பதும் ஒவ்வொன்றும் மாளாத அதிசயமாக இருந்தது அவளுக்கு.

திடீர் திடீரென்று அவன் சுபாவம் மாறும். ஒரு நாள் முரட்டுத்தனமாயும் பிடிவாதமாயும் இருப்பான். இன்னொரு நாள் பிரியம் காட்டுகிறவனாயும் வெட்கப் படுகிறவனாயும் இருப்பான். ராத்திரியில் அவனைத் தனியே படுக்க விட்டால் கோபம் வரும். இருட்டைக் கண்டால் ஜோசப்புக்குப் பயம். அவனுக்காக ஒரு விடிவிளக்குப் போட்டு வைத்திருந்தாள்.

இரண்டு வயதானபோது, அந்த வயதுக் குழந்தைகளுக்கே உரிய முரட்டுத்தனங்கள் அவனுக்கும் வந்தன. உடைப்பதும் முரண்டு பிடிப்பதும் கைகாலை உதைத்துக்கொண்டு கத்துவதும் அதிகரித்தன. எதையும் 'ரிப்பேர்' பார்ப்பதில் அவனுக்கு அலாதி குஷி. வேலைக் காரியின் தையல் மெஷினை உடைத்தான். வீட்டிலிருந்த இரண்டுடிவி செட்டையும் பாழ் பண்ணினான். ஜெனிபரின் கைக் கடியாரத்தை அக்கக்காய்ப் பிரித்தான். சர்க்கரை யையும் உப்பையும் கொட்டிக் கலந்தான்.

கென்னத் அவனுக்காக ஒரு நாய்க்குட்டி வாங்கி வந்திருந்தார் முதல் நாளே ஜோசப் அதைக் கடித்து விட்டான்.

போதும்டா சாமி என்று ஆகிவிட்டது ஜெனிபருக்கு. பாரிடமாவது குழந்தையைத் தூக்கிக் கொடுத்து எடுத்துக் கொண்டு போ என்று சொல்லிவிடலாம் போலிருந்தது.

ஆனால் மூன்று வயதானதும் திடீரென்று ஜோசப் தங்கக் கம்பியாய் ஆகிவிட்டான். என்ன சாது, என்ன பிரியம், என்ன பாசம்! அப்பாவைப் போலவே உடம்பு வணங்கி வேலை செய்வது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. தானே தன் கையால் வேலைகள் செய்ய ஆசைப்பட்டான்

இப்போதெல்லாம் அவன் எதையும் உடைப்பதில்லை. வெளியே போய் ஓடியாடினான். மரங்களில் ஏறி யிறங்கினான், மூன்று சக்கர சைக்கிளை ஓட்டினான்.

கால்களைப் பரத்திக்கொண்டு தரையில் அவன் படுத்திருப்பதையும் கூர்ந்து நோக்கும்போது அவன் புருவங்களில் முடிச்சேறுவதையும் பார்ப்பாள் ஜெனிபர். திடீரென்று வார்னரின் ஞாபகம் வரும்.

அந்த ரணம் அவள் உள்ளத்தில் இன்னும் ஆறவே யில்லை.

இப்போது வார்னர் எங்கே இருப்பான், என்ன செய்துகொண்டிருப்பான் என்று எண்ணிக் கொள்வாள்.

அவனும் மேரியும் அவர்கள் குழந்தை சமந்தாவும் என்ன செய்துகொண்டிருப்பார்கள் இப்போது?

மாலை வெகு நேரமாகிவிட்டது. ஜெனிபர் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். டெலிபோன் மணி அடித்தது.

எடுக்கத் தயங்கினாள்.

மாரெட்டியாக இருக்குமோ என்று எண்ணியதே காரணம். பல முறை அவன் போன் செய்து விட்டான். ஒரு தடவை கூட ஜெனிபர் அவனைத் திருப்பிக் கூப்பிடவில்லை. நீதிமன்றத்தில் ஒரு முறை அவள் வாதாடிக் கொண்டிருந்த போது, மறுகோடியில் கூட்டத்தில் ஒருவனாக அவன் முகம் தென்பட்டது மாதிரி இருந்தது. கண்ணிமைக்கும் நேரம்தான். அவன் போய்விட்டான்.

இப்போது கூப்பிடுவது அவன்தானோ?

இல்லை. 'சட்ட உதவிகள் செய்யும் கழக'த்திலிருந்து அவளைக் கூப்பிட்டார்கள்.

"தொந்தரவுக்கு மன்னிக்க வேண்டும், ஜெனிபர். இங்கே ஒரு வழக்கு வந்திருக்கிறது. யாருமே அதை ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன் என்கிறார்கள். நீங்கள் ரொம்ப பிஸிதான். இருந்தாலும் அந்த வழக்கை ஏற்றுக் கொண்டால் சந்தோஷமாயிருக்கும்," என்றார் கூப்பிட்டவர்.

"குற்றம் சாட்டப்பட்டிருக்கிறவர் யார்?"

"ஜாக் ஸீன்லான்," என்றார் அவர்.

ஜெனிபருக்கு ஞாபகம் வந்து விட்டது கடந்த இரண்டு நாளாகத் தினசரிகளில் முதல் பக்கத்தில் அடிபட்டு வந்தது அந்தப் பெயர்.

நாலு வயதுப் பெண் குழந்தையொன்றைக் கடத்திச் சென்று பணயத் தொகை கேட்டானாம். குழந்தையைக் கடத்திப் போன போது கண்ணால் பார்த்தவர்கள் சொன்ன அடையாளங்களை வைத்து அவனைப் போலீசார் பிடித்து விட்டார்கள்.

"ஏன் குறிப்பாக என்னைக் கூப்பிடுகிறீர்கள்?" என்று ஜெனிபர் கேட்டாள்

"நீங்கள்தான் வேண்டுமென்று ஜாக் கேட்கிறான்."

சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்தாள் ஜெனிபர். குழந்தை ஜோசப் காத்திருப்பான். வீட்டுக்குத் திரும்ப நேரமாகிவிடும். இருந்தாலும், "ஜாக் இப்போது எங்கே இருக்கிறான்?" என்று கேட்டாள்.

சிறையின் முகவரியைத் தந்தார் அவர்.

சட்டென்று முடிவுக்கு வந்தாள் ஜெனிபர். "அவனைப் பார்த்துப் பேசுகிறேன் அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்."

"தாங்க்ஸ். ஒரு லட்சம் தாங்க்ஸ்."

வீட்டுக்குப் போன் செய்தாள் ஜெனிபர் வேலைக்காரியைக் கூப்பிட்டு, "ஜோசப்பைச் சாப்பிடச் சொல்லுங்கள். நான் சீக்கிரம் வந்து விடுகிறேன் என்று சொல்லுங்கள்," என்றாள்.

பத்து நிமிடத்துக்கெல்லாம் ஜாக் இருக்கும் சிறைக்கு அவள் புறப்பட்டாள்.

'குற்றங்களுக்குள் கடத்தல் குற்றம் வெகு கொடூரமானது. அதுவும் பிஞ்சுக் குழந்தையைக் கடத்துவது மகா மகா கொடூரம்,' என்பதுதான் ஜெனிபரின் கருத்து. 'ஆனால் குற்றம் சாட்டப்பட்ட எவனுக்கும், அது எவ்வளவு கொடுமையான குற்றமாக இருந்தாலும் சரி, தன் தரப்பை எடுத்துச் சொல்ல உரிமை உண்டு. சட்டத்தின் அடிப் படையே அதுதானே சமூகத்தில் வெகு உயர்ந்த வனானாலும் சரி, வெகு தாழ்ந்தவனானாலும் சரி நீதி கிடைக்க வேண்டும்,' என்று நம்பினாள்.

சிறை அதிகாரியிடம் தான் வந்திருக்கும் காரியத்தைச் சொன்னதும் அவர் போய் ஜாக்கை அழைத்து வந்தார்.

முப்பத்தைந்து வயதிருக்கும். கண்ணியமான அறிவாளிபோல், குறுந்தாடியும் பழுப்பு முடியுமாக இருந்தான்.

"நீங்கள் வந்ததற்கு மிக்க நன்றி, மிஸ் ஜெனிபர்," என்றான். அவன் குரல் மென்மையாகவும் பணிவாகவும் இருந்தது. "என்னைப் பொருட்படுத்தி இவ்வளவு தூரம் வந்தீர்களே, ரொம்ப நன்றி."

"உட்கார்," என்றாள் ஜெனிபர்.

அவளுக்கு எதிரில் இருந்த நாற்காலியில் அவன் உட்கார்ந்தான்.

"என்னைப் பார்க்க வேண்டுமென்று சொன்னா யாமே?"

"ஆமாம். ஆனால் கடவுள் ஒருவர்தான் என்னைக் காப்பாற்ற முடியும். நான் ரொம்ப முட்டாள் தனமான காரியமொன்று செய்து விட்டேன்."

அவனைக் கோபத்துடன் பார்த்தாள் ஜெனிபர் "ஒன்றுமறியாத ஒரு பெண் குழந்தையைக் கடத்திப் போனதும், அதைத் திருப்பிக் கொடுப்பதற்குப் பணயத் தொகை கேட்டதும் முட்டாள்தனமான காரியம் என்கிறாய்? அப்படித்தானே?"

நான் அதைக் கடத்திப் போனது பணத்துக்காக அல்ல."

"ஓகோ, அப்படியா? பின்னே எதற்காகக் கடத்தினாயாம்?"

வெகுநேரம் மௌனமாக இருந்தபின் ஜாக் சொன்னான்: "என்மனைவி பிரசவத்தின் போது இறந்து விட்டாள் உலகத்தில் அவளைக் காட்டிலும் பிரியமானவர்கள் எனக்கு யாரும் கிடையாது. அவள் ஒரு நோஞ்சான். குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருந்தார். ஆனால் அவள் கேட்கவில்லை." சங்கடத்துடன் தரையைப் பார்த்தபடி சிறிது நேரம் இருந்துவிட்டு, பிறகு சொன்னான்: "குழந்தை வேண்டுமென்று ரொம்பப் பிடிவாதமாக இருந்தாள் அவள். குழந்தை என்றால் என்னில் ஒரு பகுதி மாதிரி... குழந்தை வேண்டும் என்றாள் சொன்னால் உங்களுக்குப் புரியாது...."

'எனக்கா அது புரியாது!' என்று நினைத்துக் கொண்டாள் ஜெனிபர்.

ஜாக் தன் பேச்சை நிறுத்திக் கொண்டான். அவன் எண்ணங்கள் வேறெங்கோ மிதந்து கொண்டிருந்தன.

"சரி அவளுக்குக் குழந்தை பிறந்தது. அப்புறம்?" என்று தூண்டினாள் ஜெனிபர்.

அவன் தலையை ஆட்டினான். "பிரசவத்தில் அவளும் இறந்து விட்டாள். குழந்தையும் இறந்து விட்டது." துக்கம் அவன் தொண்டையை அடைத்தது. "அவள் இல்லாமல்... எனக்கு உயிர் வாழவே பிடிக்கவில்லை.... என் குழந்தை உயிரோடு இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று அடிக்கடி கற்பனை செய்து பார்ப்பேன். இரண்டு பேரும் உயிரோடு இருந்திருந்தால் வாழ்க்கை எத்தனை அற்புதமாக இருந்திருக்கும் என்று யோசனை செய்வேன்..." வேதனை தாங்காமல் அவன் விம்மினான். "பைபிளை அடிக்கடி படித்தேன் அதனால்தான் எனக்குப் பைத்தியம் பிடிக்காமலிருந்தது. 'உனக்காகக் கதவை'த்திறந்து வைத்திருக்கிறேன் அதை யாராலும் மூட முடியாது' என்ற வாசகம் என் மனசில் ஆழமாகப் பதிந்தது. இப்படியிருக்கும் போது கொஞ்ச நாளைக்கு முன்னால் அந்தப் பெண் குழந்தை தெருவில் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். என் மனைவி மறுபிறவி எடுத்து வந்த மாதிரி அச்சாக அவளைப் போலவே இருந்தது. அதே கண்கள். அதே முடி. என்னை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்தது. அந்த வினாடியில் என் மூளைக்கு என்ன ஆயிற்றோ தெரியாது. 'இதுதான் என் மனைவி பெற்றிருக்க வேண்டிய குழந்தை. இது எங்கள் குழந்தை' என்று தோன்றிவிட்டது."

அவன் கைவிரல்களைக் கோத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் நகங்கள் சதையை கவ்வுவதைக் கவனித்தாள் ஜெனிபர்.

"நான் செய்தது தப்புதான். அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டேன்." ஜெனிபரின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தான். "ஆனால் அந்தக் குழந்தைக்குத் தீங்கு விளைக்க எண்ணவேயில்லை. உலகத்தில் எதற்காகவும் அந்தக் குழந்தைக்குக் கெடுதி செய்ய மாட்டேன்"

ஜெனிபர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். எந்த இடத்தில் பொய் பேசுகிறான் என்பதைக் கூர்ந்து

கவனித்தவாறு இருந்தாள். அப்படி எதுவும் தெரியவில்லை. வேதனையில் உழலுகிறவனாகத்தான் தோன்றியது.

"சரி. பணம் கொடுத்தால் குழந்தையைக் கொடுப்பதாக ஏன் கடிதம் போட்டாய்?"

"நான் அந்த மாதிரி எதுவும் போடவில்லை. பணம் எனக்கு அனாவசியம். அந்தக் குழந்தை ஒருத்திதான் எனக்குத் தேவை."

"அந்தக் குழந்தையின் குடும்பத்துக்குக் கடிதம் வந்திருக்கிறதே?"

"அதை நான்தான் அனுப்பினேன் என்று போலீசில் சொல்கிறார்கள். நான் அனுப்பவில்லை."

அவன் துண்டு துண்டாகச் சொன்னதையெல்லாம் மனத்துக்குள் ஒழுங்கு செய்து பார்த்துக் கொண்டாள் ஜெனிபர். "நீ குழந்தையைக் கடத்திச் சென்றதைப் பற்றிப் பேப்பர்களில் செய்தி வந்ததே, அது போலீசில் உன்னைப் பிடிப்பதற்கு முந்தியா, பிடித்த பிறகா?"

"பிடிப்பதற்கு முந்தி," என்றான் அவன். "அதைப் பற்றி எழுதுவதை எப்போ பத்திரிகைகள் நிறுத்தும் என்று எனக்குக் கவலையாயிருந்தது. ஏனென்றால் குழந்தையுடன் எங்காவது போய்விட வேண்டுமென்று பார்த்தேன். ஆனால் பிடித்து விடுவார்களோ என்று பயமாயிருந்தது."

"அதாவது, நீ குழந்தையைக் கடத்தியது பற்றிப் பேப்பரில் படித்த எவனுக்கோ அந்த ஐடியா தோன்றியிருக்கிறது. பணயமாய் ஒரு தொகை வாங்கலாமே என்று பார்த்திருக்கிறான்?"

ஜாக் பரிதாபமாகக் கைகளை விரித்தான். "இருக்கும்... எனக்கு ஒன்றும் தெரியவில்லை. செத்துப் போய்விடலாம் போல் இருக்கிறது."

அவன் வேதனை வெளிப்படையாகத் தெரிந்தது. ஜெனிபருக்கு அவளையும் மீறி ஒரு பச்சாதாபம் ஏற்பட்டது. இவன் உண்மையைத்தான் சொல்கிறான் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. கடத்தல் குற்றத்துக்கு மரண தண்டனை உண்டு. அதற்கு இடம் தரக்கூடாது. தண்டனை கொடுக்க வேண்டியதுதான். ஆனால் மரண தண்டனை கூடாது.

"உனக்கு உதவி செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்," – என்றாள் ஜெனிபர்.

"ரொம்ப நன்றியம்மா. ஆனால் வந்து... உங்களுக்கு பீஸ் கொடுக்க என்னிடம் பணமில்லையே," என்றான் அவன்.

"அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். உன்னைப் பற்றி விவரமாய்ச் சொல்லு. உன் பிறப்பு வளர்ப்பு முதலிய விஷயங்களை."

"எனக்கு முப்பதைந்து வயதாகிறது. நான் ரொம்ப ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் என் அப்பாவிற்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் எதுவும் விளையாது. பதினைந்து வயதானபோது நான் வீட்டை விட்டு வெளியேறி விட்டேன். என் அம்மாவிடம் எனக்கு ரொம்பப் பிரியம் உண்டு. ஆனால் என் அப்பாவை வெறுத்தேன். பெற்றோர்களைப் பற்றித் தப்பாய்ப் பேசக் கூடாது தான். ஆனால் என் அப்பா மிகவும் பொல்லாதவர். என்னைச் சாட்டையால் அடிப்பது அவர், வழக்கம்..."

இதைச் சொல்லும்போது அவன் முகம் வெறுப் பினால் கறுப்பதைக் கவனித்தாள் ஜெனிபர்.

"நான் ஒரு சின்னத் தப்புப் பண்ணியதாக அவருக்குத் தெரிந்தாலும் போதும். இடுப்பிலிருக்கும் தோல்

பெல்ட்டைக் கழற்றி என்னை அடிப்பார். அந்தப் பெல்ட்டில் பெரிய பித்தளை பக்கிள்ஸ் இருக்கும். அடித்து முடிந்த பிறகு என்னை மண்டியிட்டுக் கடவுளிடம் மன்னிப்பு கேட்கும்படி சொல்லுவார். அப்பாவை எவ்வளவு வெறுத்தேனோ அந்த அளவுக்குக் கடவுள்மீதும் எனக்கு வெறுப்பு வந்தது."

குழந்தைப் பருவத்து நினைவுகள் முட்டி மோதிக் கொண்டு வந்ததால் அவன் சற்று நிறுத்தினான்.

"வீட்டை விட்டு வெளியேறினாய். அப்புறம்?"

"சிகாகோவில் ஒரு பாக்டரியில் வேலை கிடைத்தது. அங்கேதான் ஒரு நாள் மெஷினில் வேலை செய்யும்போது என் கையில் காயம் பட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனேன். அங்கே நர்ஸாக இருந்தாள் அவள். உலகத்திலேயே அவளைப் போன்று அழகியை நான் பார்த்தது கிடையாது. இரண்டு வாரத்தில் என் கை குணமாகி விட்டது. பிறகும் கூடத் தினம் தினம் அவளிடம் போய்க் கட்டுக் கட்டிக்கொண்டேன். எங்களுக்குள் காதல் மலர்ந்தது. கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்தோம். அந்தச் சமயம் பார்த்து, பாக்டரியில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு, நான் வேலை பார்த்த பிரிவை மூடிவிட்டார்கள். ஆனால் அதை அவள் பொருட்படுத்தவில்லை. கல்யாணம் நடந்தது. தன் வருவாயிலேயே என்னையும் சேர்த்துக் கவனித்துக் கொண்டாள். எங்களுக்குள் ஏதாவது விவாதம் வருமென்றால், அது இந்த ஒரு விஷயத்தில் மட்டும்தான். காரணம், ஆண்பிள்ளைதான் சம்பாதித்துப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைக்கிறவன் நான். பிறகு எனக்கு ஒரு லாரி டிரைவர் வேலை கிடைத்தது. நல்ல சம்பளம் வந்தது. அவளை அடிக்கடி பிரிந்து வெளியூர் போக வேண்டியிருந்தது. அது ஒன்றுதான் எனக்கு வருத்தம். மற்றப்படி நாங்கள் இரண்டு பேரும் ரொம்ப

சந்தோஷமாக இருந்தோம். அந்தச் சமயத்தில்தான் அவள் கர்ப்பமானாள்... பிரசவத்தில் இறந்து போனாள்."

காலோடு தலை ஒரு நடுக்கம் பரவியது, ஜாக்கின் தேகத்தில். அவன் கைகள் நடுங்குவதை ஜெனிபர் பார்த்தாள்.

"மனைவியும் போய்விட்டாள். என் குழந்தையும் போய் விட்டது." அவன் கண்களிலிருந்து கண்ணீர் திரண்டு உருண்டு கன்னங்களில் வழிந்தது. "ஏன்தான் கடவுள் என்னை அப்படிச் சோதித்தாரோ தெரியவில்லை..."

ஜெனிபர் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

என்ன ஆனாலும் சரி, இவன் இறக்கக்கூடாது. இவனுக்கு மரண தண்டனை கிடைக்கும்படி விடக்கூடாது.

"நாளை மறுபடி வருகிறேன்," என்று அவனுக்கு உறுதி கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

ஜாக்குக்கு ஜாமீன் பணமாக இரண்டு லட்சம் டாலர் கட்ட வேண்டியிருந்தது. அதை ஜெனிபர் கட்டினாள். அவனை விடுவித்து ஒரு சிறிய ஓட்டலில் தங்க வைத்தாள் கைச் செலவுக்காக நூறு டாலர் அவனிடம் கொடுத்தாள்.

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் திருப்பித் தருவேனோ தெரியவில்லை." அவன் குரல் தழுதழுத்தது. "இன்றைக்கே ஏதாவது ஒரு வேலை தேடிக் கொள்கிறேன். என்ன மாதிரி வேலையாக இருந்தாலும் சரி. பைசா பாக்கியில்லாமல் உங்கள் பாக்கியைத் தீர்க்காமல் ஓய மாட்டேன் அம்மா," என்று சொன்னவன், பத்திரிகைகளில் வெளிவரும் 'தேவை' விளம்பரங்களை அப்போதே பார்க்கத் தொடங்கினான்.

ஜெனிபரின் மனசுக்கு ஆறுதலாயிருந்தது.

இந்த வழக்கில் தன் பழைய எதிரியான டி சில்வாவுடன் மோதப் போகிறோம் என்பது அப்போது அவளுக்குத் தெரியாது.

29

ஜாக்கின் மீதுள்ள குற்றச்சாட்டை வேறு விதமாக அமைத்தால் அவன் மரண தண்டனையிலிருந்து தப்பக் கூடும். ஆகவே போலீஸ் அதிகாரியைப் பார்க்கச் சென்றாள் ஜெனிபர்.

டிசில்வாவை அங்கே பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டது.

ஜெனிபரின் அதிர்ச்சியை டிசில்வா லட்சியம் பண்ணவில்லை. கேலியாக, "நீ இந்தக் கேஸை எடுத்துக் கொள்ளப் போகிறாய் என்று கேள்விப்பட்டேன் எவ்வளவு மட்டமான வழக்காயிருந்தாலும் நீ விட மாட்டாய் போலிருக்கிறது?" என்றார்.

ஜெனிபர், அதிகாரியின் பக்கம் திரும்பி, "மத்திய அரசு அதிகாரத்துக்குட்பட்ட வழக்காயிற்றே இது? இவர் எங்கே இங்கே வந்தார்?" என்றாள்

"ஜாக் அந்தச் சிறுமியைக் கடத்திச் சென்றது அவளுடைய குடும்பக் காரில், என்று அதிகாரி சொன்னதும், டிசில்வா குறுக்கிட்டு, "கார் திருடுக் குற்றம் நியூயார்க் மாகாண அரசின் அதிகாரத்துக் குட்பட்டது," என்றார்.

நியூயார்க் அரசாங்க வக்கீல் என்ற முறையில் அவர் வந்திருப்பது ஜெனிபருக்குப் புரிந்தது. என்றாலும், நாம் ஆஜராகிறோம் என்பதற்காகவே இவரும் வந்திருக்கிறாரோ என்று அவளுக்குத் தோன்றியது.

அதிகாரியிடம், "நான் ஜாக் விஷயத்தில் ஏதாவது ஏற்பாடு செய்யலாமென்று வந்திருக்கிறேன்," என்றாள்

அதிகாரி தலையை அசைத்து, அதற்கெல்லாம் வழி கிடையாது. இந்த வழக்கை உண்டு இல்லையென்று பார்த்துவிட நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்," என்றார்

"இருந்தாலும், சந்தர்ப்பங்கள் -

"அதையெல்லாம் கோர்ட்டில் சொல்லிக் கொள்ளுங்கள்."

டிசில்வா அவளைப் பார்த்து கேலியாகச் சிரித்துக் கொண்டிருந்தார்.

"சரி, கோர்ட்டில் உங்களைப் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு ஜெனிபர் புறப்பட்டாள்.

திரும்பிச் செல்லும் வழியில் ஜாக்கைப் பார்த்தாள். தங்கியிருக்கும் ஓட்டலுக்குப் பக்கத்தில் ஒரு பெட்ரோல் பங்கில் வேலைக்கு அமர்ந்திருந்தான் அவன்.

"நாளை மறுநாள் உனது விசாரணை ஆரம்பமாகிறது, என்று தெரிவித்தாள், ஜெனிபர். "உன் தண்டனையைக் குறைப்பதற்கு என்ன செய்ய முடியுமோ அதெல்லாம் செய்கிறேன். சிறைத் தண்டனை கிடைக்காமல் போகாது. ஆனால் அதை ரொம்பக் குறைவான காலம் இருக்கும்படி செய்ய முயலுகிறேன்."

அவன் முகத்தில் பரவிய நன்றியுணர்ச்சி! இதுதான் பெரும் பரிசு என்று சொல்லிக்கொண்டாள் ஜெனிபர்.

அன்று விசாரணை ஆரம்பமாயிற்று.

ஜெனிபர் சொல்லித் தந்திருந்தபடி கண்ணியமான உடையணிந்து வந்திருந்தான் ஜாக். முடியைச் சுத்தமாக வெட்டிக் கொண்டு, தாடியை ட்ரிம் பண்ணிக் கொண்டிருந்தான். அவன் தோற்றத்தைக் கண்டு ஜெனிபருக்குச் சந்தோஷமாயிருந்தது.

டிசில்வா ஆஜராகியிருந்தார். போலீஸ் அதிகாரி தன் வசமிருந்த சாட்சியங்களை விளக்கி, ஜாக்கிற்குத் தண்டனை தர வேண்டுமென்று கோரினார்

நீதிபதி ஜெனிபரிடம், "நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.

"ஆமாம் யுவர் ஆனர். இந்த வழக்கில் சில முக்கியமான சந்தர்ப்ப சூழ்நிலைகள் வெளியாகாமல் இருக்கிறது. அவைகளைக் கவனித்தால், ஜாக்கின் தண்டனையைக் கணிசமாகக் குறைக்க முடியும்," என்றாள் ஜெனிபர்.

"அதற்கு ஒப்புக் கொள்ள முடியாது," என்றார் அதிகாரி.

"யுவர் ஆனர், தங்களுடன் தங்களுடைய அறையில் இதைப் பற்றிப் பேச விரும்புகிறேன். அனுமதி தர வேண்டும்;" —என்று நீதிபதியிடம் கேட்டுக்கொண்டாள் ஜெனிபர்.

"சரி. வழக்கறிஞர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதைத் தெரிந்துகொண்டு பிறகு விசாரணைக்குத் தேதி நிர்ணயிக்கிறேன்," என்றார் நீதிபதி.

ஜாக் திருதிருவென்று விழித்துக் கொண்டு நின்றிருந்தான். "நீ உன் வேலைக்குப் போ. நான் வந்து என்ன ஆயிற்றென்று சொல்கிறேன்," என்று அவனை அனுப்பினாள் ஜெனிபர்

"ரொம்ப நன்றியம்மா," என்று கூறிவிட்டு அவன் கிளம்பினான்.

நீதிபதியின் அறையில் ஜெனிபர், போலீஸ் அதிகாரி, டி.சில்வா ஆகியோர் கூடியிருந்தார்கள்.

போலீஸ் அதிகாரி ஜெனிபரிடம் கூறினார்: "குற்றச் சாட்டை மாற்றியமைத்து, தண்டனையைக் குறைக்கும்படி கோருகிறீர்களே, அது எப்படி முடியும்? ஆளைக் கடத்திச் சென்று மீட்சித் தொகை கேட்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகும். உங்கள் கட்சிக்காரன் குற்றவாளி. அவன் செய்த காரியத்துக்குத் தண்டனை கிடைத்தே தீரும்."

"பத்திரிகைகளில் படித்ததை யெல்லாம் நம்பாதீர்கள். மீட்சிப் பணம் கேட்ட கடிதத்துக்கும் ஜாக்கிற்கும் சம்பந்தம் கிடையாது," என்றாள் ஜெனிபர்.

"அபத்தம்! பணத்துக்காக இல்லாமல் வேறெதற்காக அவன் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போனான்?"

"சொல்கிறேன்," என்றாள் ஜெனிபர்.

சொன்னாள். ஜாக்கின் குழந்தைப் பிராயத்தையும், அவன் அப்பாவிடம் அவன் வாங்கிய சவுக்கடிகளையும், ஒரு பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டதையும், பிரசவத்தின் போது அவளும் குழந்தையும் இறந்ததையும் சொன்னாள்.

மௌனமாக அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவள் பேசி முடித்ததும் டிசில்வா, "ஓகோ, ஜாக்கிற்குப் பிறந்திருந்த குழந்தையைப் போலவே அந்தச் சிறுமி இருந்தாள்? அதனால்தான் அதைக் கடத்திக் கொண்டு போனான். ஜாக்கின் மனைவி பிரசவத்தின் போது இறந்து போனாள்? அப்படித்தானே?"

"கரெக்ட்!" என்றாள் ஜெனிபர். பிறகு நீதிபதியிடம் "இப்படிப்பட்டவனுக்குப் போய் மரண தண்டனை கொடுக்கலாமா?" என்றாள்.

"ஆமாம். கொடுக்கக் கூடாதுதான்," என்றார் டிசில்வா

அதை அவள் எதிர் பார்க்கவேயில்லை. ஆச்சரியத்துடன் அவரை நிமிர்ந்து நோக்கினாள்

அவர் தன் ப்ரீஃப்கேசைத் திறந்து சில காகிதங்களை வெளியே எடுத்தார் "இப்போது நான் சொல்கிறேன் ஓர் ஆளைப் பற்றி. அவனுக்கு மரண தண்டனை கொடுக்கலாமா

ன்று பாருங்கள்," என்றவர், ஒரு ஃபைலைத் பிரித்துப் படித்தார்: "பிராங்க் என்று பெயர் முப்பத்தெட்டு வயது. அப்பா ஒரு டாக்டர். அம்மா பிரபலமான சமூக சேவகி. பதினாறு வயசாகும்போது பிராங்க் கஞ்சா அடிமையானான். வீட்டை விட்டு ஓடினான். போலீசார் பிடித்து வந்து பெற்றோர்களிடம் ஒப்படைத்தார்கள் மூன்று மாதம்தான். பிராங்க் தன் அப்பாவின் மருந்துக் கடையின் பூட்டை உடைத்தான். இருக்கிற போதை மருந்துகளையெல்லாம் எடுத்துக் கொண்டு ஓடினான் அவைகளை விற்கும்போது மறுபடி பிடிபட்டான் சீர்திருத்தப் பள்ளிக்கு அவனை அனுப்பினார்கள். பதினெட்டு வயதில் விடுதலையானான். ஒரு மாசத்துக்கெல்லாம் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திக் கொள்ளையடித்து, கொலை செய்யவும் முயற்சி செய்து..."

எதற்காக இதையெல்லாம் விவரிக்கிறார்? ஜெனிபருக்கு வயிற்றைப் பிசைந்தது. "என் கட்சிக்காரர் ஜாக்கிற்கும் இந்த பிராங்க் என்பவனுக்குக் என்ன சம்பந்தம்?" என்றாள்

போலீஸ் அதிகாரி முகம் நிறைந்த சிரிப்புடன், "ஜாக்தான் பிராங்க். பிராங்க்தான் ஜாக்," என்றார்

அதிர்ச்சியில் துள்ளியெழுந்தாள் ஜெனிபர் "இருக்காது, இருக்காது! நான் இதை நம்ப மாட்டேன்!"

டி.சில்வா சொன்னார்: "இந்தத் தகவல்கள் எங்களுக்கு மத்திய அரசின் ரகசியப் போலீசிடமிருந்து சற்று முன்புதான் கிடைத்தது. திருட்டுக் கும்பல்களுக்குத் துணை போகிறவன் இந்த ஜாக். பொய் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடு சென்ற பத்து வருடத்தில் அவன் செய்யாத குற்றமில்லை பெறாத தண்டனை இல்லை. எந்த வேலையிலும் நீடித்து இருந்தவனல்ல கல்யாணம் செய்து கொண்டது கிடையாது. ஐந்து வருடங்களுக்கு முன்பு ரகசியப் போலீஸ் அவனை ஒரு கடத்தல் வழக்கில் கைது

செய்தது. மூன்று வயதுப் பெண் குழந்தையைக் கடத்தியதாக அவன் மீது குற்றச்சாட்டு. குழந்தையை விடுவிப்பதற்குப் பணம் கேட்டானாம். இரண்டு மாதம் கழித்து ஒரு காட்டுப் பகுதியில் அந்த குழந்தையின் உடம்பைக் கண்டெடுத்தார்கள். அழுகிப் போயிருந்தது. உடம்பெங்கும் கத்திக் குத்து, அதை மிருகத்தனமாகப் பலாத்காரம் செய்திருக்கிறான் என்று போலீஸ் விசாரணையில் தெரிந்தது..."

ஜெனிபருக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.

"ஒரு கெட்டிக்கார வக்கீல் அன்று அவனுக்குக் கிடைத்தார். சட்டத்தில் ஏதோ இடுக்குக் கண்டுபிடித்து அவனுக்கு விடுதலை வாங்கித் தந்துவிட்டார்." டிசில்வாவின் குரலில் வெறுப்புத் தெறித்தது. "இப்படிப் பட்டவனைத் தான் சுதந்திரமாகத் தெருவில் நடமாட விட வேண்டும் என்று நீ சொல்கிறாய்?"

"அந்த ஃபைலை நான் பார்க்கலாமா?" என்றாள் ஜெனிபர்.

எதுவும் பேசாமல் அவர் ஃபைலைக் கொடுத்தார். அவள் படிக்க ஆரம்பித்தாள்.

டிசில்வா சொன்னது அத்தனையும் உண்மை. ஜாக் என்பவனும் பிராங்க் என்பவனும் ஒருவனே. சந்தேகமேயில்லை. போலீசார் எடுத்திருந்த புகைப்படம் ஒன்று ஃபைலில் ஒட்டப்பட்டிருந்தது. கொஞ்சம் வயது குறைந்தவனாக இருந்தான். தாடி இருக்கவில்லை. மற்றப்படி அவனேதான்.

ஜாக் - பிராங்க் - அவளிடம் சொன்னது அத்தனையும் புளுகு. தன் வாழ்க்கை அப்படி இப்படி என்று கதை திரித்திருக்கிறான். ஒவ்வொரு வார்த்தையையும் ஜெனிபர் நம்பி விட்டாள்.

அவன் சொன்னது அத்தனை தத்ரூபமாய் இருந்ததால், கென்னத்தை விட்டுத் துப்பறியக் கூட அவளுக்குத் தோன்றாமல் போய்விட்டது.

"இப்படிக் கொடுங்கள் அதை," என்று நீதிபதி ஃபைலை வாங்கித் தானும் பார்த்தார். பிறகு ஜெனிபரை நோக்கி, "என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றார்.

"இந்த வழக்கில் நான் ஆஜராகப் போவதில்லை," என்றாள் அவள்.

டிசில்வா, திகைத்துப் போன மாதிரி பிரகாசமாகப் புருவங்களை உயர்த்தினார். "ஜெனிபர், ஆச்சரியமாக இருக்கிறதே உன் பேச்சு! யாராயிருந்தாலும் நீதி கிடைக்க வேண்டும், எவருக்கும் வழக்கறிஞர் வைத்துக்கொள்ள உரிமை உண்டு என்றெல்லாம் பேசுகிறவளாயிற்றே நீ!"

"ஆமாம். ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு," என்று நிதானமாகப் பதிலளித்தாள் அவள் "ஆனால் நான் ரொம்பக் கண்டிப்பாக ஒரு கொள்கை வைத்திருக்கிறேன். பொய் சொல்லுகிற எவனுடைய வழக்கையும் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் ஜாக் வேறே வக்கீலைப் பார்த்துக் கொள்ளட்டும்."

நீதிபதி தலையசைத்து, "நல்லது. கோர்ட் அதற்கு ஏற்பாடு செய்யும்," என்றார்

போலீஸ் அதிகாரி, "யுவர் ஆனர், இவனுடைய ஜாமீனை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவனைத் தெருவில் நடமாட விடுவது பெரும் அபாயம்" என்றார்.

நீதிபதி ஜெனிபரிடம், "இப்போதைக்கு அவனுடைய வக்கீல் நீங்கள்தான். ஜாமீனை ரத்து செய்வதில் உங்களும் ஏதும் ஆட்சேபம் உண்டா?" என்றார்.

"இல்லை, யுவர் ஆனர் எதுவும் இல்லை," என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னாள் அவள்.

"ஜாமீனை ரத்து செய்யும்படி உத்தரவிடுகிறேன்," என்றார் நீதிபதி

அன்று மாலை ஜெனிபர் ஒரு விருந்துக்குப் போக வேண்டியிருந்தது.

அவளுக்கு விருப்பமேயில்லை. அன்றைய நிகழ்ச்சிகள் அவளைச் சோர்வடையப் பண்ணியிருந்தன. வீட்டுக்குப் போய் ஜோசப்புடன் விளையாடிக் கொண்டிருந்தால் தேவலை போலிருந்தது. ஆனால் தன்னை அழைத்திருந்த பெரிய மனிதரை ஏமாற்ற விருப்பமில்லாமல் அலுவல கத்துக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு நட்சத்திர ஓட்டலை அடைந்தாள்.

கோலாகலமான விழாவாக இருந்தது அது. ஏகப்பட்ட ஹாலிவுட் நட்சத்திரங்கள் கூடியிருந்தார்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு. ஆனால் ஜெனிபரால் எதையும் அனுபவிக்க முடியவில்லை. அவள் மனம் வேறெங்கோ இருந்தது.

அவளை அழைத்திருந்த பிரமுகர், "ஏன் என்னமோ போலிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்

சமாளித்துக் கொண்டு புன்னகை செய்தாள் அவள் "ஒன்றுமில்லை. தொழிலில் ஒரு சின்னப் பிரசினை."

தொழிலில் பிரசினை! உண்மையில் என்ன தொழில் எனக்கு! சமுதாயத்தின் சாக்கடைப் பிறவிகளை, கற்பழிப்புக் காரர்களை, கொலைகாரர்களை, கடத்தல்காரர்களைக் காப்பாற்றும் தொழில்!

அவளுக்கு வெறுப்பாயிருந்தது.

விழா நிர்வாகிகளில் ஒருவர் அவள் மேஜைக்கு வந்து, காதோடு ரகசியமாகச் சொன்னார்: "மன்னியுங்கள் உங்களை டெலிபோனில் கூப்பிடுகிறார்கள்."

அடிவயிற்றில் குபீரென்று ஒரு கலவர உணர்ச்சி ஏற்பட்டது ஜெனிபருக்கு.

அவள் இங்கே வந்திருப்பது ஒரே ஒரு நபருக்குத்தான் தெரியும் - வீட்டு வேலைக்காரிக்கு.

அவள் கூப்பிடுகிறாள் என்றால் -

ஏதோ கோளாறு நேர்ந்திருக்க வேண்டும்.

அருகிலிருந்தவரிடம் சொல்லிக் கொண்டு அந்த நிர்வாகியின் பின்னே சென்றாள். ஒரு சிறிய அறைக்குள் நுழைந்து போனை எடுத்தாள்.

ஓர் ஆண் குரல் கரகரத்தது. "அடியே தேவடியா! என்கிட்டேயா வேலை காட்டுறே!"

தன் உடல் பூரா ஒரு நடுக்கம் பரவுவதை உணர்ந்தாள் ஜெனிபர் "யார்... யார் பேசறது?" என்றாள்.

ஆனால் பேசுவது யாரென்று அவளுக்குத் தெரிந்து விட்டது. ஜாக்!

"என்னைப் பிடித்துக் கொள்ளும்படி போலீசை ஏவிவிட்டாய் இல்லையா?"

"இல்லை... இல்லை... நான்

"எனக்கு உதவி செய்கிறேன் என்று சொன்னாயே?"

"செய்கிறேன். நீ எங்கேயிருந்து -"

"சரிதான் போடி!" அவன் குரல் ரொம்ப ரொம்பக் கிசுகிசுப்பாயிருந்தது அவன் என்ன சொல்கிறான் என்பதே

சரியாகப் புரியவில்லை. "இதோ பார், உன்னை நான் சும்மா விடப் போவதில்லை! ஆமாம், உன்னை நான் சும்மா விடமாட்டேன்!"

"இரு. வந்து..."

அவன் போனை வைத்து விட்டான். உறைந்து போன மாதிரி ஜெனிபர் அங்கேயே நின்றாள்.

30

டெலிபோனில் மிரட்டுவது ஜாக்தான் என்று ஜெனிபருக்குப் புரிந்தது.

அவன் உண்மையிலேயே ஒரு கடத்தல்காரன், கொலைகாரன் என்று தெரிந்தவுடன் ஜெனிபர் அவனுக்காக ஆஜராகப் போவதில்லை என்று தெரிவித்து விட்டாள். அவனுடைய ஜாமீனை ரத்து செய்யவும் சம்மதம் கூறிவிட்டாள்.

ஜாக்கிற்கு அதுதான் ஆத்திரம். 'உன்னைச் சும்மா விடமாட்டேன்' என்று டெலிபோனில் மிரட்டுவது அதனால் தான்.

டெலிபோனையே வெறித்து நோக்கிய வண்ணம் நின்றாள் ஜெனிபர்.

ஏதோ ஒரு பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஜாக் எப்படியோ போலீஸ் கையில் அகப்படாமல் தப்பியிருக்கிறான் நடந்ததற்கெல்லாம் ஜெனிபர் தான் காரணம் என்று குற்றம் சாட்டுகிறான்.

நாம் இங்கே இந்த விருந்தில் இருக்கிறோம் என்பது அவனுக்கு எப்படித் தெரிந்தது? நம்மைப் பின் தொடர்ந்து

வந்திருக்க வேண்டும். இப்போது கூட எனக்காக வெளியே காத்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ?

அவளை விருந்துக்கு அழைத்திருந்த பெரியவர் அவள் முகத்தைப் பார்த்ததுமே திடுக்கிட்டார். "என்ன நேர்ந்தது ஜெனிபர்? என்ன நேர்ந்தது?"

சுருக்கமாக அவரிடம் தெரிவித்தாள் அதிர்ந்து போனார் அவர். "ஐயையோ! என் காரில் உன்னை உன் வீட்டுக்குக் கொண்டு போய் விடுகிறேன், வா."

"பரவாயில்லை. எனக்கு ஒன்றும் நேராது. என் கார் வரையில் துணைக்கு வந்தீர்களானால் போதும். பிறகு நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றாள் அவள்.

யாரும் கவனிக்காத வகையில் அவர்கள் மேஜையை விட்டு எழுந்து வாசலை அடைந்தார்கள். ஓட்டல் சிப்பந்தி ஒருவன் போய் அவளுடைய காரை எடுத்து வந்தான். பெரியவர் அதுவரை அவளுடனேயே இருந்தார்.

"வீடு வரையில் நான் துணை வர வேண்டாமா ஜெனிபர்? நிச்சயமாகத்தான் சொல்கிறாயா?" என்றார்.

"வேண்டாம், தாங்க்ஸ். பொழுது விடிவதற்குள் அவனைப் போலீசார் மடக்கி விடுவார்கள். நிச்சயம். அவன் தோற்றம் வித்தியாசமானது. சுலபமாய்ப் பிடித்துவிட முடியும். வருகிறேன்," என்று கூறிவிட்டு ஜெனிபர் காரை ஓட்டிக்கொண்டு புறப்பட்டாள் எவரும் தன்னைப் பின்தொடர்ந்து வரவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்ட பின்னர், வேகமெடுத்து வீட்டை நோக்கிச் சென்றாள்.

அப்போதும்கூட பின்னால் என்னென்ன கார்கள் வருகின்றன என்பதைக் கண்ணாடியில் பார்த்தபடியே சென்றாள் சாலையின் ஓரத்தில் ஒதுங்கிக் கொண்டு

பின்னால் வரும் கார்கள் முன்னால் செல்லும்படி வழி கொடுத்துவிட்டு, யாரும் பின்தொடராத போது தனியே ஓட்டிக்கொண்டு போனாள். இனி ஆபத்தில்லை என்று நிம்மதியொன்று ஏற்பட்டது. கொஞ்சம் முன்னால்தான் நழுவியிருப்பான். அவனைப் பிடிக்க ரொம்ப தீவிரமாகப் போலீசார் வலை வீசி வைத்திருப்பார்கள்.

வீட்டுக்குள் நுழைந்தாள்.

தோட்டப் பாதையிலும் வீட்டிலும் எப்போதும் பளீரென்று விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருப்பது வழக்கம். இப்போது இருண்டு கிடந்தது. ஏன்? நம்ப முடியாதவளாய்க் காருக்குள்ளேயே சில வினாடிகள் உட்கார்ந்திருந்தாள் 'ஆபத்து! ஆபத்து!' என்று அவள் இருதயத்திற்குள்ளிருந்து ஒரு குரல் வீலென்று கூச்சலிட்டது.

காரின் கதவைப் பிய்த்துப் போடுகிற மாதிரி திறந்து கொண்டு வெளியே தாவி வாசலை அடைந்தாள். முன் கதவு ஓவென்று திறந்து கிடந்தது.

பயங்கரமான பீதி உள்ளத்தை அடைக்க நின்றவள் உடனே உள்ளே ஓடினாள். வரவேற்பறைக்குள் நுழைந்தாள்.

மெத்தென்று, சதசதப்பான ஏதோ ஒன்று காலில் தட்டுப்பட்டது.

விளக்கைப் போட்டவள் கிறீச்சென்று கூவி விட்டாள்.

தரை விரிப்பு ரத்தத்தில் ஊறி இருக்க, அவர்கள் வீட்டு நாய் இறந்து கிடந்தது. இந்தக் காதிலிருந்து அந்தக் காது வரை அதன் தொண்டை அறுக்கப்பட்டிருந்தது.

"ஜோசப்!" என்று அலறினாள் வேலைக்காரியின் பெயரைச் சொல்லிக் கூவினாள்.

ஒவ்வோர் அறையாக நுழைந்து நுழைந்து ஓடினாள். வழியெங்கும் உள்ள விளக்குகளைப் போட்டுக் கொண்டே

ஓடினாள். ஜோசப்பையும் வேலைக் காரியையும் கூப்பிட்டுக் கொண்டே ஓடினாள்.

இருதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது. மூச்சு விடுவதே கஷ்டமாக இருந்தது அவளுக்கு.

மாடியிலுள்ள ஜோசப்பின் அறைக்கு ஓடினாள்.

அவன் படுத்திருந்தான் என்பதற்கு அடையாளமாகப் படுக்கை கசங்கி இருந்தது.

ஆனால் காலியாயிருந்தது.

மாடியிலிருந்த மற்ற அறைகளையும் பார்த்துவிட்டு மறுபடி நாலு படிக்கு ஒரு காலாகத் தாவிக் கீழே இறங்கி வந்தாள் எதையும் யோசிக்க முடியாமல் மனம் மரத்துப் போயிருந்தது.

அவள் வீடு இங்கே இருக்கிறது என்பதை ஜாக் முன்பே பார்த்து வைத்திருக்கிறான் போலிருக்கிறது. அலுவலகத்திலிருந்து சாயந்தரம் அவள் வீடு திரும்பும்போது - அல்லது அவனைப் பெட்ரோல் பங்க்கில் சந்தித்துவிட்டுக் கிளம்பும் போது அவளுக்குத் தெரியாமல் பின்னாலேயே வந்து வீட்டைப் பார்த்து வைத்திருக்கிறான்.

இப்போது ஜோசப்பைத் தூக்கிக்கொண்டு போயிருக்கிறான். குழந்தையைக் கொலை செய்து அவளைப் பழி வாங்கப் போகிறான். ஐயோ கடவுளே!

கண்டாமுண்டான் சாமான்களைப் போட்டு வைக்கும் சின்ன அறையை அவள் தாண்டியபோது

மெல்லிய முனகலொன்று காதில் விழுந்தது.

கதவை மெதுவே நெருங்கித் திறந்து பார்த்தாள் உள்புறம் ஒரே இருட்டாயிருந்தது.

ஒரு குரல் முனகியது. "என்னை விட்டு விடு அடிக்காதே... இனிமேல் தாங்காது... ப்ளீஸ்.."

ஜெனிபர் விளக்கைப் போட்டாள்.

வேலைக்காரி தரையில் கிடந்தாள். அவள் கைகளும் கால்களும் ஒயர்களால் கட்டப்பட்டிருந்தன. அரை நினைவு தான் இருந்தது.

ஜெனிபர் சரேலென்று அவளிடம் குனிந்து கூப் பிட்டாள்.

வேலைக்காரி அவளை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்கள் ஜெனிபரைக் கூர்ந்து பார்த்தன.

"அவன்...ஜோசப்பைத் தூக்கிட்டுப் போய் விட்டான்." சொல்லிவிட்டு அவள் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

வேலைக்காரியின் உடம்பைக் கவ்விப் பிடித்திருந்த ஒயர் கயிறுகளை அவளுக்கு வலிக்காதபடி மென்மையாக அவிழ்த்து விட்டாள் ஜெனிபர். அவிழ்த்த இடங்களில் ரத்தம் கசிந்தது. கைத்தாங்கலாக அவளை எழுப்பினாள்.

வேலைக்காரி ஆவசேம் வந்தவள் போல் கத்தினாள், "அவனை அவனை என்னால் தடுத்த நிறுத்த முடியலே... நானும் எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்தேன்..."

அவள் பேச்சு சட்டென்று நின்றது. டெலிபோன் மணியடித்ததே காரணம்.

இரண்டு பேரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அறையில் நிசப்தம் நிலவியது

டெலிபோன் மறுபடி அடித்தது. மறுபடியும் மறு படியும் அடித்தது.

அந்த மணியோசையில் ஒரு பயங்கரம் புதைந் திருப்பது போல் தோன்றியது.

ஜெனிபர் போனை நோக்கி மெல்லச் சென்றாள். எடுத்தாள்.

"வீட்டுக்கு வந்து விட்டாயா என்று தான் பார்த்தேன்" என்றது அந்தக் குரல்.

ஜெனிபர் பதைத்தாள்.

"என் குழந்தை எங்கே?"

"உன் குழந்தை ரொம்ப அழகாக இருக்கிறான். இல்லை?" என்றது ஜாக்கின் குரல்.

"ப்ளீஸ்! தயவு பண்ணு. நான் எது வேண்டுமானாலும் செய்கிறேன். நீ என்ன சொன்னாலும் செய்கிறேன்."

"உன்னால் செய்யக் கூடியதை ஏற்கெனவே செய்து விட்டாயே, ஜெனிபர்?"

"இல்லை, இல்லை." அவள் விம்மியபடி அழ ஆரம்பித்தாள். என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"நீ அழுவதைக் கேட்க ஆனந்தமாயிருக்கிறது!" கிசுகிசுவென்று பேசியது அந்தக் குரல். "கவலைப்படாதே. உன் குழந்தை திரும்பக் கிடைத்துவிடும். நாளைக்குப் பேப்பர்களைப் பார், தெரியும்."

டெலிபோனை வைத்துவிட்டான் அவன்.

அவளுக்கு மயக்கம் வந்தது. சமாளித்துக் கொண்டு நிற்க முயன்றாள். மூளை ஸ்தம்பித்து விட்டது.

'உன் குழந்தை ரொம்ப அழகாக இருக்கிறான், இல்லையா?' என்ற ஜாக்கின் வார்த்தைகள் அவள் மனத்தில் வட்டமடித்தன. அப்படியானால் குழந்தை உயிரோடு இருக்கிறது என்றுதான் அர்த்தம் இல்லாவிட்டால் 'அழகாக இருந்தான்' என்றல்லவா சொல்லியிருப்பான்?

மூளை குழம்பிப் பைத்தியம் பிடிக்காமல் இருப்பதற் காகத்தான் இப்படியெல்லாம் வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டுபிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டாள்.

ஏதாவது செய்ய வேண்டுமே? உடனே விரைவாகச் செய்தாக வேண்டுமே?

அவளுக்குத் தோன்றிய முதல் எண்ணம் வார்னருக்குப் போன் செய்யலாம் என்பதே.

கடத்திச் சென்றிருப்பது அவனுடைய குழந்தையை. கொல்லப் போவது அவனுடைய குழந்தையை.

ஆனால் வார்னரால் எதுவும் செய்யமுடியாது என்று தோன்றியது. அவன் இருநூற்று முப்பதைந்து மைலுக் கப்பால் இருக்கிறான்.

இரண்டே வழிதான் உண்டு.

ஒன்று, டிசில்வாவுக்குப் போன் செய்து நடந்ததைச் சொல்வது. பலமான வலை வீசி ஜாக்கைப் பிடிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். ஐயோ, அதற்கு எவ்வளவு நேரமாகுமோ?

இரண்டாவது வழி, மத்திய அரசின் ரகசியப் போலீசை அணுகுவது. கடத்தல்காரர்களைப் பிடிக்கும் வழி முறைகளில் அவர்களுக்குத் தேர்ச்சி உண்டு.

ஆனால் எல்லாக் கடத்தல்களையும் போல இல்லையே இது? குழந்தையைத் திரும்பப் பெற வேண்டுமானால் இன்ன இடத்துக்கு வந்து இவ்வளவு பணம் கொடு என்று ஜாக் கேட்கவில்லை. அப்படி யிருந்தால் அந்தக் குறிப்பை வைத்துக் கொண்டு தேடுவார்கள்

இல்லை. ஜாக்கை மடக்கவும், குழந்தையின் உயிரைக் காப்பாற்றவும் வழியே இல்லை. மத்திய போலீசுக்கு அதற்

கென்று சில வழிமுறை இருக்கிறது. அதன்படிதான் அது செயல்படும். இப்போது அது உபயோகப்படாது.

சீக்கிரம் முடிவு செய்தாக வேண்டும் குழந்தை உயிரோடு இருக்கும்போதே முடிவு செய்தாக வேண்டும். டிசில்வாவா, மத்திய ரகசியப் போலீசா?

அவளால் சிந்தனை செய்ய முடியவில்லை.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அவளுக்குள்ளிருந்து ஒரு பெருமூச்சு எழுந்தது.

டெலிபோன் நோட்டைப் புரட்டி அந்த நம்பரைக் கண்டுபிடித்தாள்.

டயல் செய்தாள். விரல்கள் நடுங்கிக் கொண்டு இருந்ததால் தப்புத் தப்பாய் வந்தது. மூன்று முறை முயன்ற பிறகுதான் சரியாய்க் கிடைத்தது.

ஓர் ஆண் குரல் ஹலோ என்றது.

"மைக்கேல் மாரெட்டியுடன் பேசணும்," என்றாள்.

"ஸாரி அம்மா. மைக்கேல் மாரெட்டி என்று இங்கே யாரும் இல்லை."

"இருங்கள். வைத்து விடாதீர்கள்." ஜெனிபர் பதறினாள். ரொம்ப நடுக்கத்தின் பேரில் தன் குரலை அமைதிப்படுத்திக் கொண்டாள். "அர்ஜென்ட் விஷயம். நான்.. அவர் சினேகிதி. என் பெயர் ஜெனிபர். உடனே அவருடன் நான் பேசியாக வேண்டும்."

"இதோ பாரம்மா -

"என் பெயரையும் டெலிபோன் நம்பரையும் அவரிடம் சொல்லுங்கள்."

போன் எண்ணைச் சொன்னாள். அவள் உதடுகள் துடித்தன. சொற்கள் திக்கித் திக்கி வெளிப்பட்டதால் அவளால் பேசவே முடியவில்லை. "அவரிடம்... சொல்லுங்கள்..." என்றாள்.

மறுமுனையில் போன் வைக்கப்பட்டு விட்டது.

முதலில் நினைத்த இரண்டு வழிகளைத்தான் மறுபடி யோசிக்க வேண்டும். அல்லது இரண்டு வழிகளையுமே முயலலாம். டிசில்வா, ரகசியப் போலீசார் இரண்டு பேருமே சேர்ந்து ஜோசப்பைக் கண்டு பிடிக்கக் கூடாதா?

ஆனால் எப்படி? எப்படிக் கண்டுபிடிப்பார்கள்? வழியே இல்லை என்று அவளுக்குத் தெரிந்திருந்தது.

நேரம் ஓடிக் கொண்டிருந்தது.

'நாளைய பேப்பர்களில் பாருங்கள், தெரியும்' என்றானே! அந்தச் சொற்களில் ஒரு தீர்மானமும் அழுத்தமும் இருந்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. புரிந்தது. அதுதான் அவனுடைய கடைசிப் பேச்சு. இனிமேல் போன் செய்யமாட்டான். தான் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கச் சந்தர்ப்பம் கொடுக்க மாட்டான்.

ஆனால் ஏதாவது செய்து தானே ஆக வேண்டும்? என்ன செய்வது?

டிசில்வாவைத்தான் கூப்பிட வேண்டும். டெலி போனை நெருங்கினாள். போனில் கைவைத்ததுமே அது கிணுகிணு வென்று அடித்தது. அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

'நான் மாரெட்டி பேசுகிறேன்,' என்று குரல் கேட்டது.

"மைக்கேல்! ஓ மைக்கேல்! என்னைக் காப் பாற்றுங்கள்! ப்ளீஸ்!... நான்..." அடக்கவே முடியாமல்

தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள் ஜெனிபர். பதற்றத்தில் போனைக் கீழே போட்டு விட்டாள் ஆனால் மறுவினாடியே, அவன் போனை வைத்துவிடப் போகிறானே என்று பயம் உலுக்க உடனே போனை மறுபடி எடுத்தாள். "மைக்கேல்?"

"நான் இங்கேதான் இருக்கிறேன்." அவன் குரலில் அமைதி நிரம்பியிருந்தது. "அழுகையை நிறுத்து. மனசைத் திடப்படுத்திக் கொள். என்ன நடந்ததென்று சொல்லு."

"சொல் சொல்கிறேன் மூச்சைச் சீராக்கிக் கொண்டாள். உடம்பிலும் குரலிலும் உள்ள நடுக்கத்தை அடக்கிக் கொண்டாள். "என் பிள்ளை ஜோசப்... அவனை... அவனைக் கடத்திக் கொண்டு போய் விட்டார்கள் அவனை அவனைக் கொன்று விடப் போகிறார்கள்."

"சரி, என்ன நடந்ததென்று சொல்லு." அவன் குரலில் என்ன நிதானம்! என்ன தன்னம்பிக்கை!

31

ஜெனிபர் படபடப்பைக் கட்டுப்படுத்திக்கொண்டு மெதுவே போனில் ஒவ்வொன்றையும் அதது நடந்த வரிசைப்படி மாரெட்டியிடம் சொன்னாள்.

"உன் குழந்தையைக் கடத்திய ஜாக் எப்படி இருப்பான்? உன்னால் வர்ணிக்க முடியுமா?" என்று கேட்டான் அவன்

அவள் தன் மனசுக்குள் ஜாக்கின் உருவத்தை வரைந்து பார்த்தாள். அந்த உருவத்துக்கு வார்த்தையில் வடிவம் கொடுத்து வர்ணித்தாள்.

"நல்லது. அவன் ஜெயிலில் இருந்தவனென்று சொன்னாயே, எந்த ஜெயில் என்று தெரியுமா?"

சிறையின் பெயரைச் சொன்னாள். "என் குழந்தையைக் கொலை செய்யப் போவதாய்..."

"அவன் வேலை செய்த பெட்ரோல் பங்க் எங்கே இருக்கிறது?"

அந்த முகவரியைச் சொன்னாள்.

"அவன் தங்கியிருந்த ஓட்டலின் பெயர்?"

ஞாபகம் வரவில்லை. நெற்றியை அழுத்திக் கொண்டாள் நகங்கள் பதிந்து நெற்றியில் ரத்தம் வந்துவிட்டது.

அவள் யோசனை செய்து கொண்டிருந்த நேரம் முற்றும், அவன் பொறுமையாய்க் காத்திருந்தான்.

திடீரென்று ஞாபகம் வந்தது. "ட்ராவல்வெல் ஓட்டல். பத்தாவது அவென்யூவில் இருக்கிறது. ஆனால் இப்போது அவன் அங்கே இருக்க மாட்டான், நிச்சயம்."

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றான் மாரெட்டி.

"என் பிள்ளை எனக்கு உயிரோடு கிடைக்க வேண்டும்."

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. வாக்குக் கொடுக்க அவன் விரும்பவில்லை என்று அவள் ஊகித்துக் கொண்டாள்.

"ஜாக்கைக் கண்டு பிடித்ததும்... என்று மாரெட்டி சொல்கையில் ஜெனிபர் குறுக்கிட்டு, "கொலை! அவனைக்

கொலை செய்தாலும் தப்பில்லை," என்றாள் ஆத்திரத்துடன். மூச்சு வாங்கியது அவளுக்கு.

"சரி, டெலிபோனுக்குப் பக்கத்திலேயே இரு. எங்கும் போக வேண்டாம்."

ஜெனிபர் டெலிபோனை வைத்தாள். அவள் மனம் அமைதியுற்றது. ஏதோ சாதித்து விட்டாற்போன்ற அமைதி.

வேடிக்கைதான். மாரெட்டியிடம் இத்தனை நம்பிக்கை வைக்க ஒரு காரணமும் இல்லை. சிந்தித்துப் பார்த்தால் மாரெட்டியின் உதவியைக் கோரியது ஒரு கண்மூடித்தனமான, பித்துக்குளித்தனமான காரியம் தான்.

ஆனால் சிந்தனை செய்து கொண்டிருப்பதற்கு இதுவா நேரம்? அவள் குழந்தையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. தெரிந்தேதான் ஒரு கொலை காரனைப் பிடிக்க இன்னொரு கொலைகாரனின் உதவியை நாடியிருக்கிறோம்...

ஜாக்கைச் சீக்கிரமே பிடித்து விடுவான் மாரெட்டி... பிடிக்க முடியாமல் போனால்...

காட்டிலே குத்துக் காயங்களோடு அழுகிக் கிடந்த அந்தச் சிறுமியின் உடல் அவளுக்கு ஞாபகம் வந்தது.

நடுங்கினாள்.

வேலைக்காரியின் ஞாபகம் வந்தது. பாவம், அவளை அப்படியே விட்டு விட்டு வந்துவிட்டோமே!

போய்ப் பார்த்து, அவளுடைய காயங்களுக்குக் கட்டுப் போட்டாள். சிராய்ப்புக்களுக்கு மருந்து தடவினாள்.

"தூக்க மாத்திரை தருகிறேன். சாப்பிடுங்கள். நன்றாய்த் தூக்கம் வரும்," என்று கூறி மாத்திரைகளை நீட்டினாள்.

அவள் கையைத் தள்ளிவிட்டு வேலைக்காரி விம்மினாள் "வேண்டாம்! தூக்க மாத்திரை நான் சாப்பிட...

மாட்டேன்! இந்த மாத்திரையைப் பார்க்கும் போதே எனக்கு உடம்பெல்லாம் நடுங்குகிறது," என்றாள்.

"ஏன்? இதிலே என்ன?"

"குழந்தைக்கு அந்தப் பாவி தூக்க மாத்திரை கொடுத்து, சாப்பிடப் பண்ணினான்!" என்று சொல்லி அழுதாள் வேலைக்காரி. "அந்தக் காட்சி என் கண் முன்னாலேயே நிற்கிறதே! என்னால் எப்படியம்மா தூங்க முடியும்? எப்படித் தூங்க முடியும்?"

ஜோசப்புக்குத் தூக்க மாத்திரை கொடுத்தானா! ஜெனிபர் பயத்தில் உறைந்து சிலையாகி நின்றாள்.

மாரெட்டி சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தான்.

தன் உதவியாளர்களில் திறமைசாலிகளான ஏழு பேரை வரவழைத்திருந்தான். கிடுகிடுவென்று கட்டளைகள் பறந்தன.

குடும்ப வக்கீலான கால்ஃபாக்ஸிடம் சொன்னான்: "உங்களுக்குத் தொடர்பு உள்ளவர்களை இப்போதுதான் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஜாக்கைப் பற்றி என்னென்ன தகவல்கள் போலீசில் இருக்கிறதோ அதையெல்லாம் சொல்லச் சொல்லுங்கள். அவனைப் பற்றிய சகல விவரமும் தெரிந்தாக வேண்டும்."

கால்ஃபாக்ஸ் அதற்கு இஷ்டப்படவில்லை. ஏதோ ஆட்சேபம் எழுப்பினார்.

மாரெட்டி குறுக்கிட்டு, "வீண்வாதம் செய்து கொண்டிருக்காதீர்கள் சொன்னதைச் செய்யுங்கள்," என்றான்.

"சரி." என்றார் அவர் விறைப்பாக.

சுறுசுறுப்புடன் இன்னொரு உதவியாளரின் பக்கம் திரும்பினான், மாரெட்டி. "ஜாக் வேலை பார்த்த பெட்ரோல் பங்க்குக்கு நீ போ. அவனைப் பற்றி விசாரி. பக்கத்தில் உள்ள எந்தெந்தப் பார்களுக்கு அவன் போவான் என்பதையும், சினேகிதர்கள் யாராவது உண்டா என்பதையும் கண்டுபிடி."

அடுத்த இரண்டு பேரிடம் சொன்னான்: "ஜாக் தங்கியிருக்கும் ஓட்டலுக்குப் போங்கள். இப்போது அனேகமாய் அவன் அங்கே இருக்க மாட்டான். பரவாயில்லை, ஆனால் அவனுக்குச் சினேகிதன் எவனேனும் உண்டா என்று விசாரியுங்கள் யார் யார் அவனுக்குச் சினேகம் என்று விசாரியுங்கள் யார் யார் அவனுக்குச் சினேகிதம் என்று தெரிந்தாக வேண்டும்." கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். "இப்போது நள்ளிரவு பன்னிரண்டு ஆகிறது. எட்டே மணி நேரம் தான் உங்களுக்கு டயம் தருவேன். அதற்குள் ஜாக்கைக் கண்டு பிடித்தாக வேண்டும்."

அவர்கள் வாசலுக்குப் பறந்தார்கள்.

"இருங்கள், ஒருவிஷயம்." மாரெட்டி குரல் கொடுத்தான். "குழந்தைக்கு எந்த ஆபத்தும் நேரக் கூடாது. ஜாக்கிரதை. அடிக்கடி எனக்குப் போன் செய்யுங்கள். நான் காத்துக் கொண்டிருப்பேன்."

அவர்கள் போவதைப் பார்த்தபடி இருந்தவன், மேஜை மீதிருந்த பல போன்களில் ஒன்றை எடுத்தான். டயல் செய்ய ஆரம்பித்தான்.

ΠΠத்திரி ஒரு மணி.

ஜாக் ஒரு புதிய இருப்பிடத்துக்கு வந்திருந்தான்.

ஜன்னல் கதவுகள் சாத்தபட்டிருந்தன. யாரும் எட்டிப் பார்க்க முடியாது. வாசல் கதவை உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுப் பூட்டியிருந்தான். ஒரு நாற்காலியையும் முட்டுக் கொடுத்திருந்தான்.

கட்டிலை நோக்கி நடந்தான்.

அங்கே குழந்தை ஜோசப் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தான்.

மூன்று தூக்க மாத்திரைகளும் அவனை நல்ல நித்திரையில் ஆழ்த்தியிருந்தன. ஆனால் ஜாக்குக்கு அது திருப்தி தரவில்லை. எதையும் அரைகுறையாகச் செய்யக் கூடாது என்று அடிக்கடி அவன் சொல்லிக் கொள்வதுண்டு. அதன்படி ஜோசப்பின் கைகளையும் கால்களையும் இறுக்கமாகக் கட்டிப் போட்டிருந்தான். வேலைக்காரியைக் கட்டிப் போட்ட அதே மாதிரி ஒயர்கள்.

தூங்கும் குழந்தையைப் பார்த்தான் ஜாக். மனசுக்குள் ரொம்பச் சோகமாயிருந்தது.

ஹூம்! ஏன்தான் நம்மை இப்படிப்பட்ட பயங்கரக் காரியங்களையெல்லாம் செய்யும்படி எல்லோரும் தூண்டு கிறார்களோ! நான் எவ்வளவு மென்மையானவன்! எவ்வளவு அமைதியானவன்! ஆனால் என்ன செய்ய? உலகத்தில் அத்தனை பேரும் எனக்கு எதிரியாக இருக் கிறார்களே! என்னைத் தாக்க வருகிறார்களே! அப்புறம் எப்படித் தற்காப்புக்காகப் போராடாமல் இருக்க முடியும்? என்ன கஷ்டமென்றால், எல்லோரும் என்னை முட்டாளென்று நினைக்கிறார்கள்! நான் எவ்வளவு கெட்டிக் காரன் என்பது காலம் கடந்துதான் அவர்களுக்குப் புரிகிறது!

போலீஸ் தன்னைத் தேடி வரப் போகிறது என்பதைக் கண்டு கொண்டானே அதுவே பெரிய புத்திசாலித் தனமில்லையா? அவன் வேலை செய்த பெட்ரோல் பங்கில் ஒரு செவர்லே காருக்கு அவன் பெட்ரோல் ஊற்றிக்

கொண்டிருந்த போது டெலிபோன் மணியடித்தது. பங்க் முதலாளி உள்ளே போனார். போனை எடுத்துப் பேசினார். அவர் என்ன பேசினாரென்பது அவனுக்குக் காதில் விழவில்லை. ஆனால் விஷயம் புரிந்து விட்டது. முதலாளி ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தபடியே கிசுகிசு வென்று பேசினார். போலீசில் தன்னைத் தேடுகிறார்கள் என்பது தெரிந்து விட்டது.

அந்தத் தேவடியாள் ஜெனிபர் அவனைப் பிடிக்கும்படி போலீசில் சொல்லி விட்டாள் போலிருக் கிறது. துரோகி!

முதலாளி டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கும் போதே அவன் தன் கோட்டை அவசரமாக எடுத்துக் கொண்டு ஓர் ஓட்டம் பிடித்துவிட்டான். மூன்று நிமிஷம் தான். தெருவில் இருந்த ஒரு கார் அவன் கண்ணில் பட்டது. பூட்டாமல் இருந்ததால் அதை ஓட்டிக் கொண்டு பறந்தான். சில நிமிடங்களுக்கெல்லாம் ஜெனிபரின் வீட்டை அடைந்து விட்டான்.

'நான் எவ்வளவு புத்திசாலி!' என்று மறுபடியும் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான் ஜாக்.

ஜெனிபரின் வீடு எங்கேயிருக்கிறது என்று தெரிந்து வைத்துக் கொள்ள வேறு யாருக்கேனும் தோன்றி யிருக்குமா? அவனை அவள் ஜாமீனில் விடுவித்த தினத் தன்றே அவளுக்குத் தெரியாமல் அவள் பின்னால் போய் வீட்டைத் தெரிந்து வைத்துக் கொண்டான்.

ஒரு சின்னப் பையன் வீட்டுக்குள்ளிருந்து வருவதையும், அவள் அவனைத் தூக்கிக் கொண்டு கொஞ்சு வதையும் பார்த்தான். நல்லது, நல்லது! இது ஒரு திடீர் போனஸ்! இந்தப் பையன் நமக்கு உபயோகப் படுவான் அப்போதே கணக்குப் பண்ணிவிட்டான்.

சற்று முன்னால் ஜெனிபரின் வீட்டுக்குள் நுழைந்ததை எண்ணுகையில் அவனுக்குப் பெருமையா இருந்தது.

அந்த வேலைக்காரி என்னமாய் நடுங்கிப் போனாள்! நாம் என்னவோ அவளைக் கற்பழிக்கப் போகிற மாதிரி யல்லவா நினைத்துவிட்டாள்! அவனுக்கு அருவருப் பாயிருந்தது. உலகத்தில் இருக்கிற எல்லாப் பெண்களுமே அசிங்கம் பிடித்தவர்கள் -விபசாரத் தொழில் செய்கிறாளே அவன் தங்கை, அவள் உட்பட.

குழந்தைகள் தான் தூய்மையானவை.

தான் கொலை செய்த அந்த மூன்று வயதுச் சிறுமியை அவனுக்கு ஞாபகம் வந்தது. சுருள் சுருளான முடியுடன் எவ்வளவு அழகாக இருந்தது. பாவம், தன் அம்மா செய்த தவறுக்காக அவள் அவனை வேலையிலிருந்து விரட்டி விட்டாள் அது தண்டனை அடையும்படி நேரிட்டு விட்டது. உலகமே ரொம்பப் மோசம். நாணயமாய்ச் சம்பாதித்துப் பிழைப்பதற்கு விட மாட்டேன் என்கிறது. ஆனால் அதன் முட்டாள்தனமான சட்டங்களை உடைத்தால் பிடித்துத் தண்டனை கொடுக்கிறது. ஆண்கள்தான் அப்படியென்றால் பெண்கள் இன்னும் மோசம்.

அலமாரிக்குச் சென்றான். ஒரு பழைய அட்டைப் பெட்டியை எடுத்தான். திறந்தான். அதற்குள் பல வகையான ஆயுதங்கள் இருந்தன.

சில ஆணிகளையும் சுத்தியையும் மட்டும் எடுத்துக் கொண்டான்.

கட்டிலை நெருங்கினான். ஜோசப் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான்.

கட்டிலுக்கு அருகிலிருந்த சிறிய மேஜை மீது ஆணிகளையும் சுத்தியையும் வைத்தான்.

பிறகு குளியலறைக்குச் சென்றான். அங்கே இரண்டு காலன் டின் ஒன்று இருந்தது. அது நிறையப் பெட்ரோல்.

டின்னைத் தூக்கிக் கொண்டு வந்து ஜோசப்பின் பக்கத்தில் வைத்தான்.

குபீரென்று எரியப் போகிறான் பையன். ஆனால் அதற்கு முன் -

பையனின் கைகளையும் கால்களையும் ஆணி வைத்து அறைய வேண்டும்.

IIத்திரி இரண்டு மணி.

ஜாக்கைப் பிடிக்க வேண்டும்! ஜாக் எங்கே இருக்கிறான் தெரியுமா? எங்கே? எங்கே?

நியூயார்க் நகரமெங்கும், சுற்று வட்டாரங்களிலும் மாரெட்டியின் ஆட்களுக்குச் செய்தி பரவிக் கொண்டிருந்தது.

மதுபானக் கடைகளிலும் உணவு விடுதிகளிலும் கிசு கிசு கிசுகிசுவென்று விசாரணைகள் தூள் பறந்தன. காதோடு காதாக இங்கொரு கேள்வி அங்கொரு கேள்வி... சின்னத் துளிபோலக் கிளம்பி, மலிவான காப்பிக் கடைகளிலும் ஆரவாரமான டிஸ்கோ கடைகளிலும், இரவு முழுதும் திறந்திருக்கும் பத்திரிகைக் கடைகளிலும் பரவியது. டாக்ஸியோட்டிகள் கேட்டார்கள். தெருவில் திரியும் நள்ளிரவுப் பெண்கள் கேட்டார்கள். லாரி டிரைவர்கள் கேட்டார்கள் ஆழமான குளத்தில் விட்டெறிந்த கல்போல சிறு சிறு அலைகள் புறப்பட்டு வட்ட வட்டமாகப் பரந்து வளர்ந்தது.

இரண்டு மணி நேரம்தான் ஊரெங்குமிருந்த அத்தனை மாரெட்டி ஆட்களுக்கும் செய்தி கிடைத்து

விட்டது: மாரெட்டிக்கு ஒரு விஷயம் தெரிந்தாக வேண்டுமாம்... அதுவும் உடனடியாகத் தெரிந்தாக வேண்டுமாம்.

மாரெட்டிக்கு உதவி தேவையென்றதும் அவ்வளவு பேரும் நான் நீயென்று பறந்தார்கள். மாரெட்டி தினம் தினமா உதவி கேட்கிறான்? எப்போதோ ஒரு முறை தான். இது ஒரு பொன்னான சந்தர்ப்பம், மாரெட்டியின் அன்பைப் பெற. மாரெட்டி நன்றி மறவாதவன். தன் நன்றியைச் சாதாரணமாகவா காட்டுவான்!

குறுந்தாடி வைத்த ஒல்லியான ஆள் ஒருவன் எங்கே இருக்கிறான் என்று மாரெட்டிக்குத் தெரிய வேண்டுமாம்!

ஒவ்வொருவரும் மண்டையைக் குடைந்து கொண்டார்கள் அந்த அடையாளமுள்ள நபரை எங்கேயாவது பார்த்திருக்கிறோமா என்று.

ΠΠத்திரி மணி இரண்டேகால்.

தூக்கத்தில் சிறிது அசைந்தான் ஜோசப். உடனே அவனை நெருங்கி வந்து கவனித்தான் ஜாக். சிறுவனின் பைஜாமாக்களை இன்னும் அகற்றவில்லை.

சுத்தியும் ஆணிகளும் பக்கத்திலேதான் இருக்கின்றனவா என்று பார்த்துக் கெண்டான்.

எந்தக் காரியமர்னாலும் கனகச்சிதமாகச் செய்ய வேண்டும். அதுதான் ஜாக்கின் கொள்கை.

பையனைத் தரையில் கிடத்த வேண்டும். தரையோடு தரையாகக் கைகளிலும் கால்களிலும் ஆணி வைத்து அறைய வேண்டும். பிறகு அறைக்கு நெருப்பு வைக்க வேண்டும். இதுதான் அவன் திட்டம்.

பையன் தூங்கிக் கொண்டிருக்கும்போதே அதைச் செய்யலாம். ஆனால் ஜாக்கிற்கு அது இஷ்டமில்லை.

பையன் விழித்துக் கொண்டிருக்கும்போது செய்ய வேண்டும். என்ன நடக்கிறதென்று அவனுக்குத் தெரிய வேண்டும். அம்மா செய்த பாவங்களுக்காக அவன் தண்டனை பெறுகிறான் என்பது தெரிய வேண்டும்.

ஜோசப்பின் அருகே உட்காந்து கொண்டான். குழந்தையின் நெற்றியில் வந்து விழுந்திருக்கும் மயிர்ச் சுருளை அன்போடு ஒதுக்கி விட்டான்.

32

விடிகாலை மூன்று மணி.

மாரெட்டிக்குத் தகவல்கள் வரத் தொடங்கின.

குழந்தையைக் கடத்திச் சென்ற ஜாக்கைக் கண்டு பிடிக்கும்படி மாரெட்டி ஏவியிருந்த உதவியாட்களில் ஒருவன் மாரெட்டிக்குப் போன் பண்ணினான்.

"ஜாக்கைப் பற்றித் தகவல் அறிந்து விட்டேன். இரண்டு வருஷத்துக்கு முன்னால் அவன் ஜோன் என்பவருடனும் மெல் என்பவருடனும் திருட்டு வேலைகளில் ஈடு பட்டிருந்தானாம்."

"இரண்டு வருஷத்துக்கு முன்னால் அவன் எக்கேடு கெட்டால் நமக்கு என்ன ஆச்சு? இப்ப எங்கே இருக்கிறான்?"

"ஆறு மாசமாய் ஜாக்கைப் பற்றி ஒரு தகவலும் இல்லை என்று ஜோ சொல்கிறான் மெல்லக் கண்டு பிடிக்கத்தான் முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேன்."

"உடனே பிடி," என்றான் மாரெட்டி.

மறுபடி போன் அடித்தது.

"ஜாக்கின் ஓட்டலில் தேடினேன். அங்கே காலி செய்து கொண்டு வேறெங்கோ போய் விட்டானாம். ஓட்டல் குமாஸ்தாவை விசாரித்தேன் போகும்போது ஒரு பழுப்புநிற சூட்கேஸும் ஒரு இரண்டு காலன் பெட்ரோல் டின்னும் கையில் வைத்திருந்தானாம். டின்னில் பெட்ரோல் இருந்தாலும் இருந்திருக்கும் என்கிறார். எங்கே போனா னென்று தெரியாதாம்."

"பக்கத்து பார்களில் கேட்டாயா?"

"ஜாக்கின் அங்க அடையாளங்களைச் சொன்னேன். அந்த மாதிரி ஒருவனைப் பார்த்திருக்கிறேனென்று ஒரு சர்வர் சொன்னார். இரண்டு மூன்று தடவைதான் வந்திருக் கிறானாம்."

"தனியாகவா?"

"ஆமாம். பார்களில் இருக்கும் பெண்களிடம் அவன் அக்கறை காட்டியதில்லையாம்."

"உல்லாச அழகிகள் இருக்கும் ஓட்டல்களில் விசாரி."

மீண்டும் டெலிபோன் மணி அடித்தது.

"போலீஸ் குமாஸ்தாவைப் பிடித்துக் கேட்டாயிற்று. ஜாக்கின் அறையில் கைப்பற்றிய பொருள்களில் ஒரு அடகுக் கடை ரசீது இருந்தது. ரசீதின் நம்பரும் அடகுக் கடை நம்பரும் அடகுக் கடை விலாசமும் குறித்துக் கொண்டி ருக்கிறேன்."

"அந்த ஆளைப் பார்த்தாயா?"

"காலையில் கடை திறந்ததும்தான் பார்க்கணும். இப்ப மூடியிருக்குமே?"

மாரெட்டி வெடித்தான்."காலை வரையில் காத்திருக்க முடியாது! இப்பவே ஆளைப் பிடி. இல்லாவிட்டால் தொலைத்துவிடுவேன் தொலைத்து!"

மூன்றாவது ஆள் போன் செய்தான். அவனுக்குப் பலமான தொண்டைக் கட்டு. அவனுடன் பேசுவதே மாரெட்டிக்குப் பெரும் கஷ்டமாக இருந்தது.

"ஜாக்குடன் சிறையில் இருந்தவன் பெயர் மிக்கி. இரண்டு பேரும் ரொம்ப சினேகிதம்.

"மிக்கி இப்போது எங்கே இருக்கிறானாம்?"

"சரியாய்த் தெரியவில்லை. ஜாக்கின் தங்கையும் அவனும் காதலர்கள் ஆனால் அவள் எங்கே இருக்கிறாளென்றும் தெரியவில்லை."

"மிக்கி எதற்காக ஜெயிலுக்குப் போனான்?"

"நகைத் திருட்டு," என்றான் மாரெட்டியின் ஆள்.

விடிகாலை மணி மூன்றரை.

அடகுக் கடையைக் கண்டு பிடித்து விட்டார்கள், மாரெட்டியின் ஆட்கள் இருவர். ஒருவன் ராட்சசன் இன்னொருவன் சோனி.

கீழே அடகுக் கடை இருந்தது. மாடியில் அதன் சொந்தக்காரன் வசித்து வந்தான்.

பளீரென்று அடித்த டார்ச் ஒளியில் கண்கள் கூச, அவன் விழித்துக் கொண்டான். உடனே பக்கத்திலிருந்த மணியை அழுத்தப் போனான்.

"வேண்டாம். தொடாதே!" என்று ராட்சசன் அதட்டினான்.

கண்ணைக் கசக்கிக் கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் அடகுக் கடைக்காரன். தனக்கு இரு புறமும் நிற்கும் இருவரையும் கண்டதும், அவனுக்குத்

தொண்டையை அடைத்தது. அவன் ஓர் ஆஸ்துமா நோயாளி. அசையாமல் இருப்பதே புத்திசாலித்தனம் என்று அவன் உள்ளுணர்வு சொல்லியது.

"கீழே போய் உங்களுக்கு எது வேண்டுமானாலும் எடுத்துப் போங்கள். நான் அசைய மாட்டேன்" என்றான் அவன். அதைச் சொல்வதற்குள்ளேயே சுவாசம் தடுமாறியது.

"எழுந்திரு, மெதுவாய்," என்றான் ராட்சசன்.

அடகுக் கடைக்காரன் மெதுவாக எழுந்து கொண்டான். ஏதாவது வேகமாய் நகரப் போய் ஆபத்தை விலைக்கு வாங்கிவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கை யாக இருந்தான்.

சோனி ஒரு துண்டுக் காகிதத்தை அவன் கண்எதிரே நீட்டினான். "இது ஒரு அடகு ரசீது. இந்த ஆள் என்ன பொருளை அடகு வைத்திருக்கிறான் என்று எங்களுக்குத் தெரியவேண்டும். வந்து காட்டு."

கடைக்காரன் படியிறங்கிக் கீழே செல்ல, இருவரும் பின்தொடர்ந்தார்கள்.

அடகுக் கடைக்காரன் ஆறு மாசத்துக்கு முன்னால்தான் ஏராளமான எச்சரிக்கை மணிகள் நிறுவி யிருந்தான். கண்ணுக்குத் தெரியாத இடங்களில் பொத் தான்கள் இருந்தன. யாருக்கும் தெரியாமல் அவைகளை அழுத்த முடியும். உடனே எச்சரிக்கை மணியடித்து, உதவிக்கு ஆட்கள் ஓடி வருவார்கள்.

ஆனால் அவன் எந்தப் பொத்தானையும் அழுத்த வில்லை. காரணம், உதவிக்கு ஆள் வந்து சேருவதற்குள் தன் உயிர் பறந்துவிடும் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. இந்த ஆட்கள் கேட்பதைக் கொடுத்து விட்டால் போதும், போய் விடுவார்கள் கடவுளை வேண்டிக் கொள்வ

தெல்லாம் ஒன்றே ஒன்றுதான். ஆஸ்துமா திடீரென்று தாக்கி உயிரைப் பறித்துவிடக் கூடாது.

கீழே வந்ததும் விளக்குகளைப் போட்டான் வந்திருக்கும் ஆட்களின் நோக்கம் என்ன என்று அவனுக்குப் புரியவில்லை. கொள்ளையடிப்பதற்காக வந்திருந்தால், இருப்பதைச் சுருட்டிக் கொண்டு இத்தனை நேரம் போயிருப்பார்கள். ஆனால் ஏதோ ஒரு குறிப்பிட்ட பொருளையல்லவா தேடுகிறார்கள்? வாசல் கதவுகளிலும் ஜன்னல்களிலும் எச்சரிக்கை மணி பொருத்தியிருந்தோமே? அவைகளைத் தாண்டி எப்படி இவர்கள் நுழைந்தார்கள்? அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

"ஊம். சீக்கிரம் ஆகட்டும்!" என்று ராட்சசன் உறுமினான்.

ரசீது எண்ணை மறுபடி ஒருமுறை ப்ராத்துக் கொண்டபின் பைல்களைப் புரட்டினான் அடகுக் கடைக்காரன். தேடியது கிடைத்தது. திருப்தியுடன் தலையாட்டிக் கொண்டு பெட்டக அறையைத் திறந்தான். இரண்டு ஆட்களும் அவன் முதுகுக்குப் பின்னே நின்றிருந்தார்கள்.

ஷெல்பிலிருந்து ஒரு சிறிய உறையை எடுத்தான். பிரித்து, உள்ளிருந்ததை வெளியெடுத்தான்.

ஒரு பெரிய வைர மோதிரம். விளக்கின் வெளிச்சத்தில் ஜொலித்து டாலடித்தது.

"இதுதான்," என்றான் அடகுக் கடைக்காரன், "இருபதாயிரம் டாலர் பெறுமானம் இருக்கும். ஐந்நூறு டாலர் கொடுத்தேன்."

"யாருக்கு?" என்றான் சோனி.

கைகளை விரித்தான் அடகுக் கடைக்காரன். "ஒரு நாளைக்கு நூறு பேர் வருகிறார்கள். யாரென்று எப்படித்

தெரியும்? உறையின் மீது ஜான் கோ என்று பெயர் போட்டிருக்கிறது."

ராட்சசன் சரேலென்று ஒரு ஈயக் குழாயை எடுத்து அவன் மூக்கின் மீது ஒரு போடு போட்டான். அலறிக்கொண்டு கீழே விழுந்தான். அடகுக் கடைக்காரன். கொட கொடவென்று ரத்தம் அவன் தலையை நனைத்தது.

"யார் இதைக் கொண்டு வந்தது? சொல்லப் போகிறாயா இல்லையா?" ராட்சசன் நிதானமான குரலில் கேட்டான்.

அடகுக் கடைக்காரனுக்கு மூச்சுத் திணறியது. "அவன் பெயர் எனக்குத் தெரியாது. அவன் சொல்லவில்லை. சத்தியம்!"

"எப்படி இருந்தான் அவன்?"

அடகுக் கடைக்காரனின் வாய்க்குள் ரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அவனால் பேச முடியவில்லை. தலை சுற்றி மயக்கம் வந்து கொண்டிருந்தது. அவனால் பேச முடியவில்லை. ஆனால் இவர்களுக்குப் பதில் சொல்லாம... மயக்கமானால் பிறகு திரும்ப எழுந்திருக்கவே மாட்டோம் என்று அவனுக்குத் தெரிந்தது.

"இருங்கள், கொஞ்சம் யோசனை பண்ணுகிறேன்," என்று கெஞ்சினான். உண்மையிலேயே ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்றான். ஆனால் வலி உயிர் போய்க் கொண்டிருந்தது. எதையுமே சிந்திக்க முடியவில்லை.

மோதிரத்துடன் வந்த அந்த ஆள் கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு வந்தது. ஒரு பெட்டிக்குள்ளிருந்து அந்த மோதிரத்தை எடுத்ததும் தன்னிடம் காட்டியதும்...

"அவன்... அவன் ஒல்லியாய் இருந்தான்... வாயில் ரத்தம் வழிந்ததால் திணறினான். "என்னைக் கொஞ்சம் எழுப்பி உட்கார்த்தி வையுங்கள்..."

ராட்சசன் அவன் விலாவில் எட்டி உதைத்தான். "நிறுத்தாதே! மேலே சொல்லு!"

"அவனுக்குத் தாடி இருந்தது...

"சரி, இந்த மோதிரம் எந்தக் கடையில் திருடியது? சொல்லு!"

அந்தத் தாள முடியாத வலியின் நடுவிலேயும் அடகுக் கடைக்காரன் தயங்கினான். சொன்னால், கொஞ்ச நாளில் அந்த ஆட்கள் வந்து அவனைத் தீர்த்து விடுவார்கள் சொல்லா விட்டால் இப்போதே இவர்கள் கொலை செய்து விடுவார்கள்... சரி, கொஞ்ச நாளைக்காவது சாவைத் தள்ளிப் போடலாம்.

"டிஃபானி நகைக் கடையில் திருடியது," என்றான்.

"தாடிக்காரனின் கூட்டாளி யார்?"

அடகுக் கடைக்காரனால் பேச முடியவில்லை. "மிக்கி என்பவன்."

"அவனை எங்கே பிடிக்கலாம்?"

"எனக்குத் தெரியாது... அவன்... ஒரு பெண்ணோடு வசிக்கிறான்."

ராட்சசன் காலை உயர்த்தி அவன் மூக்கைத் தேய்த்து நசுக்கினான். சோனி கேட்டான்: "அந்தப் பெண்ணோட பெயர் என்ன?"

பெயரைச் சொன்னான்.

விடிகாலை நாலரை மணி

அந்தப் பெண்ணின் வீடு தெருவிலிருந்து சிறிது தள்ளினாற்போல் இருந்தது. சிறிய தோட்டம். வெள்ளை நிறத்தில் வேலி போட்டிருந்தது.

ராட்சசனும் நோஞ்சானும் பூச்செடிகளை மிதித்துக் கொண்டு வீட்டின் பின்புறத்தை அடைந்தார்கள். கதவைத் திறக்க ஐந்து வினாடிகள் கூடப் பிடிக்கவில்லை. உள்ளே புகுந்து மாடிக்கு ஏறினார்கள் படுக்கையறைக்குள்ளிருந்து ஒரு கட்டிலின் கிறீச் சத்தமும், ஓர் ஆணும் பெண்ணும் பேசும் குரல்களும் கேட்டன.

இருவர் துப்பாக்கியை நீட்டிக் கொண்டு உள்ளே நுழைந்ததும் -

அலறிக்கொண்டு எழுந்தாள் அந்தப் பெண். அவளுடன் இருந்தவன் திரும்பி, தலையணையின் கீழிருந்து துப்பாக்கியை எடுக்க நினைத்து, வேண்டாமென்று தீர்மானித்தான்

"அதோ அந்த நாற்காலி மீது கிடக்கிற பாண்ட்ஸில் என் பர்ஸ் இருக்கிறது. எடுத்துக்கொண்டு தொலையுங்கள். எனக்கு வேலை இருக்கிறது," என்றான்.

"மிக்கி, உன்னோட பர்சுக்காக நாங்கள் வரவில்லை" என்றான் ராட்சசன்.

மிக்கியின் முகத்திலிருந்த கோபம் மாறியது. எச்சரிக்கையுடன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான். இவர்களுடைய நோக்கம் என்னவாக இருக்குமென்று யோசித்துப் பார்த்தான். அந்தப் பெண் ஒரு போர்வையை எடுத்துத் தன் மார்பை மூடிக்கொண்டாள்.

இவர்கள் மீது எப்படிப் பாயலாம் என்று சந்தர்ப்பத்தைக் கணக்குப் போடுகிற மாதிரி மிக்கி காத்திருந்தான். "என்ன வேண்டும் உங்களுக்கு?" என்றான்.

"ஜாக் என்பவன் உன் கூட்டாளிதானே?"

"நான் சொல்லத் தயாராயில்லை."

ராட்சசன் சோனியின் பக்கம் திரும்பி, "ஆளைச் சரியான இடம் பார்த்துச் சுடு," என்றான்.

"இரு இரு!" என்று அலறினான் மிக்கி. "ஆமாம். ஜாக் என்னோட கூட்டாளிதான்."

அந்தப் பெண் குறுக்கிட்டு, "சொல்லாதே மிக்கி!" என்று கத்தினாள்.

அவன் அவளை நோக்கி ஆத்திரத்துடன், "என்னை உயிரை விடச் சொல்கிறாயா?" என்றான்.

ராட்சசன் அவளிடம் திரும்பினான். "நீ ஜாக்கின் தங்கைதானே?"

கோபத்தில் அவள் முகம் சிவந்தது.

"ஜாக்காவது மண்ணாவது! எனக்கு யாரையும் தெரியாது!"

சோனி தன் துப்பாக்கியை நீட்டிக் கட்டிலை நெருங்கினான். "இரண்டே செகண்ட் டயம் தருகிறேன். அதற்குள் சொல்லாவிட்டால் இந்தச் சுவர் பூரா உங்க இரண்டு பேர் ரத்தம் தெறிக்கும்!"

அவன் குரலில் இருந்த கடுமை அவளை உறைய வைத்தது. சோனி தன் துப்பாக்கியை உயர்த்தினான் ரத்தமெல்லாம் வடிந்து அவள் முகம் வெளுத்தது.

"அவர்கள் கேட்கிறதைச் சொல்லி விடு," என்று மிக்கி கத்தினான்.

துப்பாக்கி அவள் மார்பை அழுத்தியது.

"சுடாதே! சொல்கிறேன்! ஆமாம் ஜாக் என் அண்ணன்தான்!" என்றாள் அவள்.

"இப்ப எங்கே இருக்கிறான் அவன்?"

"எனக்குத் தெரியாது. நான் அவனைப் பார்க்கிறதே இல்லை. சத்தியமாய்ச் சொல்கிறேன், எனக்குத் தெரியாது."

அவன் விரல்கள் துப்பாக்கியின் விசையை அழுத்த ஆரம்பித்தன.

அவள் கூவினாள்: "கிளாரா! கிளாராவுக்குத் தெரியும். கிளாராவைப் போய்க் கேள்!"

ராட்சசன் கேட்டான்: "யார் அந்தக் கிளாரா?"

"அவள் ஒரு வெயிட்ரஸ்... ஜாக்கிற்குத் தெரிந்தவள்"

"அவளை எங்கே பார்க்கலாம்?"

இப்போது அவளுடைய தயக்கமெல்லாம் ஓடி மறைந்து விட்டன. வார்த்தைகள் மடமடவென்று வந்தன. "ஷேக்கர்ஸ் என்கிற ஓட்டலில் வேலை பார்க்கிறாள்," என்று சொல்வதற்குள் அவள் உடம்பு காலோடு தலை நடுங்கியது.

ராட்சசன் அவர்களை ஒரு முறை பார்த்துவிட்டு, மரியாதையான குரலில், "சரி, படுத்துக் கொள்ளுங்கள்," என்று கூறினான்.

இருவரும் புறப்பட்டார்கள்.

விடியற்காலை ஐந்தரை மணி.

கிளாரா வெகு குஷியாகப் பாடிக் கொண்டே பெட்டி படுக்கைகளை எடுத்து வைத்துக் கொண்டி ருந்தாள்.

ஜாக்குடன் கனடாவுக்குப் போவதாகத் திட்டம். அதை நினைக்கையிலேயே அவளுக்கு மிக உற்சாகமாக இருந்தது. இதற்கு முன்பும் பல ஆண்களுடன் பல ஊர்களுக்கு அவள் சென்றதுண்டு. ஆனால் இந்தப் பிரயாணம் வித்தியாசமானது. தேனிலவு மாதிரி. ஆகா! எவ்வளவு தங்கமானவன் ஜாக்! அவனைப் போல

ஒருவனைப் பார்க்க முடியுமா? அவள் வேலை பார்க்கும் ஓட்டலுக்கு எவ்வளவோ ஆண்கள் வருகிறார்கள் அவளைத் தடவுகிறார்கள் கிள்ளுகிறார்கள். மிருகங்கள் தான் அத்தனை பேரும். ஜாக் அவளைத் தொட்டது கூட இல்லை. ஆனால் அவள் மீது அவனுக்கு எல்லையற்ற காதல் என்று அவளுக்குத் தெரியும். மற்ற மேஜைகளை விட்டு விட்டு அவள் பணி புரிகிற மேஜைக்கு வந்து சாப்பிட உட் காருவானே, அதிலிருந்தே தெரியவில்லையா அவனுடைய காதல்!

கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள் கிளாரா. கொஞ்சம் குண்டாயிருக்கிறோம். தலையில் ஒன்றிரண்டு நரை தெரிகிறது. அவ்வளவுதான். சிறிது இளைத்து, சிறிது சாயம் பூசிக் கொண்டால் பழைய அழகு திரும்பி விடாதா!

உல்லாசத்துடன் துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டாள் அவள். அவளும் ஜாக்கும் கனடாவுக்குப் போய் விடுவதென்று திட்டம். காலை ஏழரை மணிக் கெல்லாம் அவனுடைய ஜாகைக்கு வந்து கூப்பிடுவதாய்ச் சொல்லி இருக்கிறாள் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள்.

அவளுக்கு ஜாக்கின் திட்டம் தெரியாது.

தன்னைப் போலீசில் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜாக்கிற்குத் தெரியும். அதற்காகத்தான் அவன் கிளாராவின் துணையை நாடியிருந்தான் எல்லையை அடையும் போது ஒண்டியாகச் செல்லும் நபர்களைத் தான் போலீசார் தேடுவார்கள் ஒரு பெண்ணுடன் சென்றால் சந்தேகிக்க மாட்டார்கள்.

கனடாவை அடைந்த பிறகு கிளாராவைத் தீர்த்து விடலாம் என்று ஜாக் திட்டமிட்டிருப்பது கிளாராவுக்குத் தெரியாது.

33

ஜாக்குடன் கனடாவுக்குப் போகப் போகிறோம் என்று இனிய நினைவுகளுடன் தன்னை அலங்காரம் செய்து கொண்டிருந்தாள் கிளாரா ஆயிற்று. மணி ஐந்தரை ஆகியிருந்தது. ஏழரைக்கெல்லாம் தன் ஓட்டலுக்கு வந்துவிடும்படி ஜாக் சொல்லியிருந்தான்.

கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டாள். அறைக்குள் இரண்டு பேர் நுழைவது தெரிந்தது. ஒருவன் ராட்சசன். இன்னொருவன் சோனி.

எங்கிருந்து வந்தார்கள் திடுதிப்பென்று?

அவர்கள் அவளை நெருங்கி வந்தார்கள்.

சோனியின் கண்ணில் அவளுடைய சூட்கேஸ் பட்டது. "எங்கே போகிறேம்மா கிளாரா?" என்றான்.

"உனக்கென்ன அதைப்பற்றி?" என்றாள் அவள். "உனக்கு என்ன வேண்டுமோ அதை எடுத்துக் கொண்டு போய்ச் சேர். ஆனால் இங்கே பத்துப் பைசா கூடக் கிடையாது. இருந்தால் நான் என் காதை அறுத்துக் கொள்கிறேன்!"

"காது என்ன, உன் தலையையே அறுக்கத்தான் நாங்க வந்திருக்கிறோம்," என்றான் ராட்சசன்.

கிளாரா கத்தினாள். "எதுக்காக வந்தீருக்கீங்க நீங்க? என்னைக் கெடுக்கப் போகிறீர்கள் என்றால் முதலிலேயே எச்சரிக்கை பண்ணி விடுகிறேன். எனக்குச் சீக்கு இருக்கிறது. டாக்டர் கிட்டே வைத்தியம் பண்ணிக் கொண்டு வருகிறேன்."

சோனி சொன்னான்: "உனக்கு ஒருகெடுதலும் பண்ண மாட்டோம். ஜாக் எங்கே இருக்கிறானென்று மட்டும் சொல்லிவிடு போதும்."

அவள் முகத்தில் உடனே ஒரு மாறுதல் ஏற்பட்டதை இருவரும் கவனித்தார்கள். அவள் உடம்பு சட்டென்று விறைத்துக் கொண்டது. திரை போட்ட மாதிரி முகத்தை உடனே மாற்றிக் கொண்டாள்.

"ஜாக்கா?" அவள் குரலில் வியப்புத் தென்பட்டது. "எந்த ஜாக்கையும் எனக்குத் தெரியாது!"

தன் இடுப்பில் செருகி வைத்திருந்த ஈயக்குழாயை வெளியெடுத்தான் ராட்சசன். அவளை நோக்கி ஓரடி வைத்தான்.

"வேண்டாம்! கிட்டே வராதே!" என்று கிளாரா அலறும் போதே, அந்த ஈயக் குழாய் அவள் முகத்தின் மீது பலமாய் விழுந்தது. வலியால் பாதி உயிர் போயிற்று: வாய்க்குள்ளே பற்கள் பொடிப் பொடியாக நொறுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்தாள். ரத்தம் கொட்டியது.

ராட்சசன் குழாயை மறுபடி ஓங்கினான்.

"இரு! இரு! அடிக்காதே!" என்று குழறினாள் அவள்.

சோனி மிகுந்த மரியாதையுடன் கேட்டான்: "ஜாக்கை எங்கேம்மா பார்க்க முடியும்? சொல்கிறீர்களா?"

"ஜாக்... வந்து... வந்து..."

அவள் குரல் நடுங்கியது. ஐயோ! என் ஆருயிர்க் காதலன் ஜாக், என் தங்கக் கம்பி, இந்த இரண்டு முரடர்களிடம் சிக்கிக் கொள்வானே! நிச்சயமாய் இவர்கள் அவனை அடிக்கப் போகிறார்கள். பாவம், அவனால் தாங்கிக்

கொள்ள முடியாது. எப்படியாவது அவனைக் காப்பாற்ற முடிந்தால்... ஜாக் என்றென்றும் அவளிடம் நன்றியோடு இருப்பான்.

"எனக்குத் தெரியாது... என்று மறுபடியும் சொல்லிப் பார்த்தாள்

ராட்சசன் ஓங்கி அடித்தான். அவள் காலில் எலும்பு முறிகிற சத்தம் கேட்டது. அதே வினாடி மரண வலியை உணர்ந்தாள்.

தரையில் துடித்து விழுந்து புரண்டாள். வாய் நிறைய ரத்தம் இருந்ததால் அலறவும் முடியவில்லை.

சோனி அவள் மீது காலை மிதித்துக்கொண்டு, மேலும் மரியாதையாகச் சொன்னான்: "நாங்கள் சொன்னது உனக்குப் புரியவில்லையாம்மா? உன்னை நாங்கள் கொலை செய்யப் போவதில்லை. இங்கொரு எலும்பு அங்கொரு எலும்பு என்று நொறுக்கிக் கொண்டேயிருப்போம். அவ்வளவுதான். கடைசியில் பார்த்தால், பூனை கடித்துப் போட்ட எலி மாதிரி இருப்பாய். என்ன, நாங்கள் சொல்வது விளங்கவில்லையா?"

ஏன் விளங்காமல்? தன் நிலைமை மிக நன்றாக விளங்கியது அவளுக்கு இனிமேல் ஜாக் தன்னை ஏறெடுத்தும் பார்க்கப் போவதில்லை. இந்த இரண்டு தடியன்களும் அவள் கதையை முடித்து விட்டார்கள் அவளுடைய ஆசைக் கோட்டையை அடியோடு தகர்த்து விட்டார்கள். இனி ஜாக்குடன் கனடா பிரயாணமாவது, கல்யாணமாவது!

ராட்சசன் தன் ஈயக் குழாயுடன் அவளை மீண்டும் நெருங்கினான்.

கிளாரா முனகினாள்: "அடிக்காதே. தயவு பண்ணி அடிக்காதே. ஜாக்... வந்து... புரூக்ஸைட் ஓட்டலில் இருக்கிறான்... அவன் "

வாக்கியத்தை முடிப்பதற்குள் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டது.

ராட் சசன் டெலிபோனிடம் சென்றான். ஓர் எண்ணை டயல் செய்தான்

"என்ன ஆச்சு?" என்று மறு முனையில் மாரெட்டி கேட்டான்

"இடம் தெரிந்துவிட்டது. ப்ரூக்ஸைட் ஓட்டலில் இருக்கிறானாம்."

"ஆளைப் பிடித்து இழுத்து வரட்டுமா?"

"வேண்டாம். நானே அங்கே வருகிறேன். ஆள் தப்பி விடாமல் மட்டும் பார்த்துக் கொள்."

"எங்கேயும் போகமாட்டான்," என்றான் ராட் சசன்.

காலை ஆறரை மணி.

ஜாக்கின் அறை.

குழந்தை ஜோசப் மெல்லப் புரண்டான். கண்களைத் திறந்தான் தன் மணிக்கட்டிலும் கால்களிலும் கட்டப் பட்டிருக்கும் ஒயர்களைக் கண்டான். பிறகு நிமிர்ந்து நோக்கி ஜாக்கைக் கவனித்தான்.

மளமளவென்று எல்லாம் நினைவு வந்தது. இவன் தான் நம் வாய்க்குள் தூக்க மாத்திரைகளைத் திணித்து விழுங்கும்படி பண்ணினான். பிறகு தூக்கிக் கொண்டு ஓடினான்

கடத்தல்காரர்களைப் பற்றிய பலபல செய்திகளை ஜோசப் டெலிவிஷனில் பார்த்திருக்கிறான் அவனுக்கு எல்லாம்

தெரியும். போலீஸ்காரர்கள் வருவார்கள் அவனை மீட்பார்கள். இந்த ஆளை ஜெயிலில் தள்ளுவார்கள்.

ஜோசப்புக்குப் பயமாய்த்தான் இருந்தது. ஆனால் தன் பயத்தை வெளிக் காட்டக் கூடாது என்று உறுதியாக இருந்தான். அப்போதுதான் அம்மாவிடம் சொல்லலாம், நான் எவ்வளவு தைரியமாக இருந்தேன் என்று.

"நீ என்னை அடிக்கக் கிடிக்க வேண்டாம். என் அம்மா பணத்தோடே வந்திடுவாங்க," என்றான் ஜாக்கிடம்.

ஜாக் கட்டிலை நெருங்கி வந்தான். சிறுவனைப் பார்த்துப் புன்னகை செய்தான் நிஜமாகவே அழகான குழந்தைதான். கனடாவுக்குக் கிளாராவை அழைத்துக் கொண்டு போவதற்குப் பதிலாக இவனை அழைத்துக் கொண்டு போகலாம். ஹூம்! கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். சட்டுப் புட்டென்று காரியத்தை முடிக்க வேண்டும்.

கட்டியிருந்த கைகளை உயர்த்தினான் ஜோசப். ரத்தம் கசிந்து கட்டி தட்டியிருந்தது.

"இதைக் கொஞ்சம் அவிழ்த்து விடறீங்களா? ப்ளீஸ். நான் எங்கேயும் ஓடிப் போக மாட்டேன். ப்ராமிஸ்," என்றான் பணிவான குரலில்.

'ப்ளீஸ்' என்று அவன் சொன்னது ஜாக்கிற்குச் சந்தோஷம் தந்தது. பண்பாடுள்ள குழந்தை. இந்தக் காலத்துப் பசங்களுக்குப் பண்பாடு எங்கே தெரிகிறது? காட்டு விலங்கு மாதிரி கத்திக்கொண்டு தெருவில் ஓடத்தான் தெரியும்.

குளியலறைக்குப் போனான் ஜாக். பெட்ரோல் டின்னை அங்கே தொட்டியில்தான் வைத்திருந்தான் முன்னறையில் வைத்தால் தரை விரிப்பில் கரை ஏற்படுத்தி விடும். இந்த மாதிரி சின்ன சின்ன விஷயங்களைக் கூடக்

கவனிக்கிறோமே என்று அவனுக்குத் தன்னைப் பற்றி பெருமையாகயிருந்தது.

இப்போது டின்னை எடுத்து வந்து கட்டிலினருகே வைத்தான். ஜோசப்பின் கட்டுக்களை அவிழ்த்து விடாமல் அப்படியே தூக்கித் தரையில் கிடத்தினான்.

பிறகு சுத்தியையும் இரண்டு பெரிய ஆணிகளையும் எடுத்து வந்து, குழந்தையின் அருகில் மண்டியிட்டு அமர்ந்தான்.

ஜோசப்பின் கண்கள் அகல விரிந்தன. "இதை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?"

"நான் ஒரு காரியம் செய்யப் போகிறேன். அது உன்னை ரொம்பச் சந்தோஷப்படுத்தப் போகிறது. நீ ஏசு கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விபட்டிருக்கிறாயா?"

ஜோசப் தலையை ஆட்டினான்.

"அவர் எப்படி இறந்தார் தெரியுமா?"

"சிலுவையில்."

"பலே! சமர்த்துப் பையன் இங்கே சிலுவை எதுவுமில்லை. இருக்கிறதை வைத்துக் கொண்டு சமாளிக்க வேண்டியதுதான்."

குழந்தையின் கண்களில் பயம் நிறையத் தொடங்கியது.

ஜாக் சொன்னான்: "பயப்படாதே. பயப்படும் படியாய் ஒன்றுமில்லை. ஏசுநாதர் பயப்பட்டாரா? நீயும் பயப்படக் கூடாது."

அச்சத்தினால் தடுமாறும் குரலில் ஜோசப், "நான் ஏசு நாதராக வேண்டாம். நான் வீட்டுக்குப் போகணும்..." என்றான்.

"வீட்டுக்குத்தானே? ஓ போகலாமே?" என்றான் ஜாக். "உன்னை வீட்டுக்குத்தான் அனுப்பப் போகிறேன்."

பையிலிருந்து ஒரு கைக்குட்டையை எடுத்தான். அதை ஜோசப்பின் வாய்க்குள் திணிக்க முயன்றான் ஆனால் ஜோசப் பல்லை இறுக்கிக் கடித்துக் கொண்டான். வாயைத் திறக்கவில்லை.

"ஏய். எனக்குக் கோபம் வரும்படி பண்ணாதே!"

குழந்தையின் கன்னங்களில் தன் சுட்டு விரலையும் பெருவிரலையும் வைத்து அழுத்தி, பலவந்தமாக வாயைத் திறக்கப் பண்ணினான் கைக்குட்டையை வாய்க்குள் அடைத்தான். வாயின் குறுக்காக ஒரு டேப் வைத்து ஒட்டினான்.

ஜோசப் தன் கையையும் கால்களையும் முறுக்கிக் கொண்டு, ஓயர்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான். கட்டியிருந்த இடங்களில் மறுபடி ரத்தம் வரத் தொடங்கியது.

அந்தச் சிராய்ப்புக்களைத் தன் கைகளால் தடவினான் ஜாக், "ஆ ஏசுநாதரின் ரத்தம்," என்றான் மென்மையாக.

குழந்தையின் கைகளில் ஒன்றை எடுத்தான் உள்ளங்கையை மல்லாத்தி தரையோடு வைத்து அழுத்தினான். ஓர் ஆணி எடுத்து உள்ளங்கையின் மீது வைத்துக் கொண்டான். மறு கையால் சுத்தியை எடுத்தான்.

ஆணியின் மீது ஓங்கி அடித்தான் கையைத் துளைத்துக் கொண்டு தரைக்குள் பாய்ந்தது ஆணி.

காலை மணி ஏழே கால்.

மாரெட்டியின் கறுப்பு லிமோஸின் கார் புரூக்ஸைட் ஓட்டலுக்குச் செல்லும் வழியில் நின்றிருந்தது. காரணம்,

அங்கே கறிகாய் லாரியொன்று கவிழ்ந்து, தெரு வெல்லாம் காய்கறிகள் கொட்டிக் கிடந்தன. போக்குவரத்து ஸ்தம்பித்துப் போயிருந்தது.

"காரைச் சாலையின் மறுபக்கமாக ஓட்டு," என்றான் மாரெட்டி தன் உதவியாளனிடம்.

"நமக்கு முன்னால் ஒரு போலீஸ் கார் நிற்கிறது, பாஸ்."

"போய், அந்தக் காரில் யார் இருந்தாலும் அழைத்து வா. நான் கூப்பிடுவதாகச் சொல்லு."

"ரைட் பாஸ்."

உதவியாள் காரிலிருந்து இறங்கிச் சென்று, போலீஸ் காரிலிருந்து ஒரு சார்ஜெண்ட்டை அழைத்து வந்தான். மாரெட்டி காரின் கண்ணாடியை இறக்கி, கையை நீட்டினான்.

நீட்டிய கையில் நூறு டாலர் நோட்டு ஐந்து இருந்தன.

"நான் அவசரமாய்ப் போக வேண்டும், சார்ஜெண்ட்," என்றான்.

இரண்டு நிமிஷத்துக்கெல்லாம் போலீஸ் வண்டி தன் சிவப்பு விளக்குப் பளபளக்க முன்னே வழி காட்டிக் கொண்டு செல்ல, மாரெட்டியின் கார் மற்ற எல்லாரையும் தாண்டிக் கொண்டு சென்றது. சீரான இடத்தை அடைந்ததும் போலீஸ் சார்ஜெண்ட் தன் காரிலிருந்து இறங்கி மாரெட்டியிடம் வந்து, "இன்னும் எங்காவது துணைக்கு வரவேண்டுமா மிஸ்டர் மாரெட்டி?" என்று கேட்டார்.

"வேண்டாம், தாங்க்ஸ்," என்றான் மாரெட்டி. "திங்களன்று என்னை வந்து பாருங்கள்," என்று சொல்லி விட்டு, உதவியாளனிடம், "போ," என்றான்.

காலை ஏழரை மணி.

ப்ரூக்ஸைட் ஓட்டல் என்பது ஒரு திறந்த வெளி ஓட்டல். சிறு இல்லங்கள் வரிசையாக இருந்தன. அதில் ஏழாவது இல்லத்தின் எதிரே காரில் உட்கார்ந்து இருந்தார்கள் ராட்சசனும் சோனியும்.

வாசல் சாத்தியிருந்தது. ஆனால் சில நிமிடங் களுக்கு முன்பு தட் தட்டென்று சத்தம் கேட்டது. ஆகவே ஆள் உள்ளேயிருக்கிறான் என்று தெரிகிறது.

உள்ளே புகுந்து ஆசாமியை ஒரே வினாடியில் மடக்கி விடலாம் என்று ராட்சசன் எண்ணிக் கொண்டான். ஆனால் அப்படிச் செய்ய வேண்டா மென்று மாரெட்டி கட்டளை இட்டிருக்கிறானே!

ஆகவே இருவரும் காத்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தார்கள்.

மணி ஏழே முக்கால்.

ஏழாவது எண் இல்லத்தின் உள்ளே ஜாக்தனது இறுதி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான்.

ஜோசப்பை எப்படியெல்லாமோ துன்புறுத்த நினைத்திருந்தது வீணாகிவிட்டது. ஓர் ஆணி அடித்ததும் பையன் மயக்கமாகி விட்டான். ஜாக்கிற்கு ஏமாற்றமாக இருந்தது.

மயக்கம் தெளிந்த பிறகு மற்ற ஆணிகளையும் அடிக்கலாமா என்று நினைத்தான் ஆனால் அதற்கு இனிமேல் நேரமில்லை.

பெட்ரோல் டின்னை எடுத்தான் குழந்தையின் உடம்பெங்கும் தெளித்தான். ஆனால் குழந்தையின் முகத்தில்

ஒரு துளியும் படாதபடி ஜாக்கிரதையாயிருந்தான். அழகான முகமாயிற்றே!

சரி, கிளாரா எந்த நிமிடமும் வந்து விடுவாள். அவள் வந்ததுமே கிளம்பத் தயாராக இருக்க வேண்டும். பைக்குள்ளிருந்து தீப்பெட்டியை எடுத்து. பெட்ரோல் டின்னுக்குப் பக்கத்தில் வைத்தான் அதன் அருகே சுத்தியையும் ஆணியையும் நீட்டாக வைத்தான். நீட்னஸ் என்பது வாழ்க்கையில் எவ்வளவு அவசியம் என்பது பல பேருக்குப் புரிவதில்லையே!

கைகடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். 'கிளாராவுக்கு என்ன ஆயிற்று? ஏன் இன்னும் வரக் காணோம்?'என்று யோசித்தான்.

34

மணி ஏழடித்து ஐம்பது நிமிடம் ஆகியிருந்தது.

லிமோசின் கார் சரக்கென்று வந்துநின்றது.மாரெட்டி வெளியே குதித்தான்.

அவனுடைய உதவியாளர்களான ராட்சசனும் சோனியும் அவனிடம் விரைந்தார்கள்.

ஏழாவது எண் இல்லத்தைக் காட்டி,"ஆசாமி உள்ளே இருக்கிறான்", என்றான் சோனி.

"குழந்தை?"

அவன் கைகளை விரித்தான். "தெரியவில்லையே? ஜன்னல் கதவெல்லாம் சாத்தி வைத்திருக்கிறான்."

"உள்ளே போய் ஆளை மடக்கட்டுமா?" என்று கேட்டான் ராட்சசன்.

"வேண்டாம். நீங்கள் இங்கேயே இருங்கள்."

இரண்டு உதவியாளர்களும் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள்.

மாரெட்டி பாஸ், அவன் ஏவுகிறபடி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். அவன் கால்மேல் கால் போட்டுக் கொண்டு பந்தோபஸ்தாக உட்கார்ந்திருக்கலாம்.

ஆனால் இப்போது ஜாக்கைக் கவனிப்பதற்குத் தானே போகிறேன் என்கிறானே?

"பாஸ், இவனும் நானும் போய்..." என்று சொல்ல ஆரம்பித்தான் சோனி.

ஆனால் அதற்குள் மாரெட்டி ஏழாவது இல்லத்தின் வாசலை அடைந்து விட்டான் அவன் கையில் ஓசையில்லாமல் சுடக்கூடிய துப்பாக்கி ஒன்று இருந்தது.

ஒரு நிமிஷம் கதவருகே நின்று, உள்ளேயிருந்து வரும் சத்தத்தைக் கவனித்துக் கேட்டான்.

இரண்டடி பின்னால் சென்று, கதவை ஓங்கி ஓர் உதை விட்டான்.

கதவு பிளந்து விழ, மாரெட்டி உள்ளே பாய்ந்தான்.

என்ன கோரமான காட்சி!

உள்ளே நுழைந்த மாரெட்டி ஒரு வினாடி உறைந்து விட்டவன் மாதிரி அப்படியே நின்றான்.

தரையில் கிடக்கும் குழந்தையினருகே மண்டியிட்டபடி அந்தத் தாடிக்காரன். குழந்தையின் உள்ளங்கை தரையோடு தரையாக ஆணி அறையப் பட்டிருக்கிறது. மூக்கைத் துளைக்கும் பெட்ரோல் நாற்றம் அறையெங்கும்.

சத்தம் கேட்டுத் தாடிக்காரன் திரும்பினான். வாசலில் நிற்கும் மாரெட்டியை வெறித்துப் பார்த்தான்.

"நீ... போலீஸ்...

அதுதான் ஜாக் கடைசியாகப் பேசிய வார்த்தை.

மாரெட்டியின் துப்பாக்கி சீறி வெடித்தது. முதல் தோட்டா அவனுடைய நெற்றியின் மத்தியைப் பிளந்தது. இரண்டாவது தோட்டா அவன் தொண்டையைக் கிழித்தது. மூன்றாவது தோட்டா அவன் மார்பைக் குதறியது. ஆனால் அதற்குள் ஜாக் எல்லா உணர்வுகளுக்கும் அப்பாற் பட்டவனாக இறந்து போய் விட்டான்.

வாசல் புறம் பார்த்தான் மாரெட்டி. வெளியே நின்றிருந்த இரண்டு உதவியாளர்களையும் உள்ளே வரும்படி கூப்பிட்டான். ஓட்டமாய் அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

மாரெட்டி குழந்தையிடம் குனிந்தான். நாடியைப் பிடித்துப் பார்த்தான். இதயத் துடிப்பு மிகப் பலவீனமாய் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் உயிரோடு இருந்தான் ஜோசப்.

உதவியாளருக்கு உத்தரவிட்டான் மாரெட்டி.

"நம் டாக்டருக்குப் போன் செய்து, அங்கே வந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்."

காலை ஒன்பதரை மணி.

டெலிபோன் மணி அடித்தது. அந்த வினாடியே பாய்ந்து எடுத்தாள் ஜெனிபர். போனை நொறுக்கி விடுவது போல இறுக்கிப் பிடித்து, 'ஹலோ' என்றாள்.

"உன் பிள்ளையை அழைத்துக் கொண்டு அங்கே வருகிறேன்," என்ற மாரெட்டியின் குரல் கேட்டது.

ஆனந்தத்தில் ஜெனிபருக்கு உடம்பு நடுங்கியது. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. 'நன்றி தெய்வமே நன்றி'என்று அவள் நெஞ்சு கதறியது.

மாரெட்டி அவனைத் தோளில் சாய்த்து வீட்டுக்குள் தூக்கி எடுத்து வந்தபோது அவன் தூக்கத்தில் இருந்தான்.

ஜெனிபர் அலறிவிட்டாள்.

மயங்கிக் கிடக்கிறான் குழந்தை! உள்ளங் கைகளிலும் முழங்கால்களிலும் பலமான கட்டு! உடம்பெங்கும் மருந்துப் பூச்சு!

அந்தக் காட்சியைக் கண்டவுடன் ஜெனிபருக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது.

மாரெட்டி தன் கூடவே டாக்டரையும் அழைத்து வந்திருந்தான்.

குழந்தைக்கு அபாயமில்லை. சரியாகிவிடுவான் என்று ஜெனிபரை ஆறுதல் சொல்லி அமைதிப்படுத்த அரைமணி நேரம் பிடித்தது மாரெட்டிக்கு

"கை ஆறிவிடும். கவலைப்படாதீர்கள்," என்றார் டாக்டர். "ஒரு சின்ன வடு மட்டுமே இருக்கும். அதிர்ஷ்ட வசமாக நரம்பு எதுவும் துண்டிக்கப்படவில்லை. பெட்ரோல் தீக்காயம் மேலோடுதான் பட்டிருக்கிறது. மருந்துத் தண்ணீரில் குழந்தையைக் குளிப்பாட்டி இருக்கிறேன். இன்னும் நாலைந்து நாளைக்கு நான் தினம் வந்து பார்த்துக் கொள்கிறேன். நான் சொல்வதை நம்புங்கள். உங்கள் குழந்தைக்கு ஒன்றுமில்லை. தங்கமாட்டம் ஆகிவிடுவான்."

புறப்படுமுன் வேலைக்காரியையும் பார்த்துவிட்டுப் போகும்படி டாக்டரைக் கேட்டுக் கொண்டாள் ஜெனிபர்.

பிறகு வெகு நேரம் வரை அவன் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தாள் அவள். குழந்தை கண்ணைத் திறந்ததும், 'பயப்படாதே,' என்று சொல்வதற்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

ஜோசப் சற்று அசைந்தான். கண்களை மெல்லத் திறந்தான்.

தாயைக் கண்டதும், "நீ வருவாய் என்று எனக்குத் தெரியும் அம்மா அந்த ஆளுக்கு... அவன் கேட்ட பணத்தைக் கொடுத்தியா?" என்றான் அவன் குரல் கிணற்றுக் குள்ளிருந்து வருகிற மாதிரி கேட்டது.

ஜெனிபர் தலையை அசைத்தாள். வாயைத் திறந்தால் குபுக்கென்று அழுது விடுவோம் என்ற அவளுக்குப் பயமாயிருந்தது.

ஜோசப் புன்னகை செய்தான். "நீ கொடுத்த பணத்துக்கு... நிறையச் சாக்லேட் சாப்பிடணும் அந்த ஆள்... சாப்பிட்டு... வயத்து வலி வரணும்... தமாஷா இருக்கும்... இல்லேம்மா?"

அவள் குரல் கரகரத்தது. "ஆமாம்டா கண்ணா. ரொம்பத் தமாஷாய் இருக்கும்... அடுத்த வாரம் நானும் நீயும் எங்க போகப் போகிறோம் தெரியுமா? உன்னை அழைத்துக்கொண்டு..."

குழந்தை அதற்குள் மீண்டும் தூங்கிவிட்டான்.

பலமணி நேரம் கழித்துத்தான் ஜெனிபர் முன்னறைக்குத் திரும்பினாள்.

ஆச்சரியம் ஏற்பட்டது.

மாரெட்டி இன்னும் அங்கே இருந்தான்.

ஏனோ தெரியவில்லை. அவளுக்கு வார்னரின் ஞாபகம் வந்தது. அந்த முதல் சந்திப்பு... அன்றும் இதே போல்தான் அவள் குளியலறையிலிருந்து வெளிவந்தபோது வார்னர் காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான்...

"நீங்கள்... என்று சொல்வதற்குள் அவள் நாக்குத் தழுதழுத்தது. என்ன சொல்வதென்றே தெரியாமல்

வார்த்தைகள் தடுமாறின. "உங்களுக்கு... என்னால்... நான்... நன்றி... எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை..."

அவன் ஒன்றும் பேசவில்லை. அவளை நோக்கி நிமிர்ந்து பார்த்துத் தலையை அசைத்தான்.

அவளால் பேச முடியவில்லை. சிரமப்பட்டு அந்தக் கேள்வியைக் கேட்டாள். "அவன்... ஜாக் என்ன ஆனான்?"

"அவனால் இனிமேல் யாருக்கும் எந்தத் தொந்தரவும் இருக்காது."

அப்பாடா! எல்லாத் துன்பமும் முடிந்து விட்டது. குழந்தை பத்திரமாயிருக்கிறான். இனி உலகத்தில் எதைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை.

மாரெட்டியைக் கண் கொட்டாமல் நோக்கினாள். இவருக்கு நான் எத்தனை கடமைப்பட்டிருக்கிறேன்! இவர் செய்திருக்கும் மகத்தான உதவியை நான் எப்படித் திருப்பிச் செலுத்தப் போகிறேன்?

மாரெட்டி அவளையே பார்த்தபடி பேசாமல் இருந்தான் - மௌனத்தை ஒரு போர்வையாகப் போர்த்துக் கொண்டவன் போல.

அடுத்த நாள் காலை குழந்தை ஜோசப்பின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதில் முனைந்தாள் ஜெனிபர். எதுவும் நடவாதது போல், எல்லாம் சரியாகி விட்டது போல்அவன் நினைக்கும்படி பண்ண முயன்றாள் முந்தின இரவின் பயங்கர அனுபவங்களை அவன் மறக்க வேண்டுமென்று எண்ணி, அவனுக்குப் பிடித்தமான உணவைத் தயாரித்து. படுக்கைக்கு எடுத்து வந்து ஊட்டினாள்.

"அந்த ஆளை நீ பார்த்திருக்கணும் அம்மா," என்றான் அவன், உணவை மென்றபடி. "அவன் ஒரு பைத்தியம்

அம்மா!" கட்டுப்போட்ட கைகளை உயர்த்திக் காட்டினான். "ஏம்மா, நிஜமாகவே என்னை ஏசுநாதர் என்றா அவன் நினைத்திருப்பான்?"

ஜெனிபருக்குக் காலோடு தலை ஒரு நடுக்கம் பரவியது. "வந்து... அதெல்லாம் இப்போ எதற்கு? நீ சாப்பிடு" என்றாள்.

"ஏம்மா, ஒருத்தரைக் கொலை செய்யணுமென்று ஏன் சில பேர் நினைக்கிறாங்க?"

"வந்து... ஏதோ சொல்ல நினைத்தாள் ஜெனிபர். திடீரென்று மாரெட்டியின் ஞாபகம் வந்தது.

'மாரெட்டியை ஒரு கொலைகாரன் என்று தீர்மானம் செய்ய நமக்கு என்ன உரிமை? என்னென்ன பயங்கர சக்திகள் அவன் வாழ்க்கையை இப்படி மாற்றியதோ நமக்கு என்ன தெரியும்?' என்று தனக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

"நாளைக்கு நான் ஸ்கூலுக்குப் போகணுமாம்மா?" என்று ஜோசப் கேட்டான்.

"வேண்டாம்டா கண்ணா. நானும் உன்னோடு வீட்டிலேயே இருக்கப் போகிறேன். இந்த வாரம் பூராவும் நாம் கேம்ஸ் விளையாடிக்கொண்டிருப்போம்..." என்று அவள் சொல்லிக் கொண்டிருந்த போது டெலிபோன் மணியடித்தது.

"ஜோசப் எப்படி இருக்கிறான்?" என்று கேட்டான் மாரெடடி.

"ஓ. நன்றாய் ஆகிவிட்டான். தாங்க்யூ," என்றாள்.

"நீ?"

சங்கடத்தினால் அவளுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. "ஓ... நானும் நன்றாய்த் தான் இருக்கிறேன்."

"நல்லது. நாளை பகல் உணவுக்கு டொனாடோ ஓட்டலுக்கு வந்து விடு. சரியாய்ப் பன்னிரண்டரை மணிக்கு."

"ஆல்ரைட். பன்னிரண்டரை மணிக்கு வந்து விடுகிறேன்," என்றாள் ஜெனிபர்.

அந்த வார்த்தை அவள் வாழ்க்கையைத் தீர்மானித்து விட்டது. அதன் பிறகு பழைய வாழ்க்கைக்குத் திரும்புவது என்பது நடவாமலே போய்விட்டது.

அந்த ஓட்டலின் மானேஜர் மாரெட்டிக்கு ரொம்பவும் வேண்டியவர். அருமையான இடம் ஒதுக்கியிருந்தார் அவர்களுக்காக. பல பேர் அங்கே வந்து மாரெட்டிக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுச் சென்றார்கள் ஏன் தான் இவர்கள் இவனிடம் இப்படி மயங்கிக் கிடக்கிறார்களோ என்று ஜெனிபருக்கு மறுபடியும் ஆச்சரியம் உண்டாயிற்று. வார்னரின் ஞாபகம் வந்தது. இருவரும் சக்தி படைத்தவர்கள் அவரவர் வழிகளில்.

மாரெட்டியின் கடந்த காலம், இந்த மாதிரி வாழ்க்கையில் சிக்கிக் கொள்ள நேரிட்டது எதனால் இதையெல்லாம் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள ஜெனிபர் விரும்பினாள்.

அதற்குள் அவனே பேசினான்:

"ஏதோ நான் என் குடும்ப நிலைமையினால் - யாரோ என்னைக் கட்டாயப் படுத்தியதால் இந்த வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறேன் என்று தானே நீ நினைக் கிறாய்?"

"ஆமாம், ஆமாம்," என்றாள் அவள் ஆவலுடன்.

மாரெட்டி சிரித்தான். "நான் பாடுபட்டு உழைத்து இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேனாக்கும். இந்த வாழ்க்கை எனக்குப் பிடித்திருக்கிறது. எனக்குப் பணம் பிடித்திருக்கிறது. பதவி பிடித்திருக்கிறது. நான் ஒரு ராஜா, ஜெனிபர் இந்த ராஜ வாழ்க்கை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது," என்றான்.

அவன் பேச்சு அவளுக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

35

மாரெட்டியையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜெனிபர். "வாழ்க்கையில் எல்லா சுகமும் கிடைத்துவிட்ட மாதிரி சொல்கிறீர்கள். ஆனால் அபாயம் நிறைந்த வாழ்க்கையல்லவா இது? இதிலே நீங்கள் என்ன சந்தோஷம் காண முடியும்?" என்றாள் அவனுடைய மனதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவளுக்கு ஆர்வமாயிருந்தது.

"சொல்கிறேன் கேள்," என்றான் மாரெட்டி. அவன் அதுவரை காத்து வந்த மௌனம் தகர்ந்து சரிந்தது. வார்த்தைகளும் வாக்கியங்களும் நம்பிக்கைகளும் ஆசைகளும் தாபங்களும் - எத்தனையோ வருடங்களாக அவன் மனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்தவை யெல்லாம் — பீறிட்டுக் கொண்டு கொட்டின. தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒருத்தர் வர வேண்டுமென்றுதான் இவ்வளவு காலமும் காத்திருந்த மாதிரி சொன்னான்: "என் அப்பா ஒரு கோககோலா புட்டி."

ஜெனிபர் திகைத்தாள். "என்னது? கோககோலா புட்டியா?"

"ஆமாம். உலகத்தில் கோடிக் கணக்கான கோக கோலா புட்டிகள் இருக்கிறது. அவைகளுக்குள் வித்தியாசம் உண்டா? தனித் தன்மை உண்டா? ஒன்றைப் போலத்தான் ஒன்று. அதுபோல, கோடிக் கணக்கான மக்கள் கூட்டத்தில் என் அப்பாவும் ஒருத்தர். அவர் ஒரு செருப்புத் தொழிலாளி. விரல்களின் எலும்பு ஒடிய உழைத்தார். குடும்பத்துக்கு உணவு சம்பாதித்துப் போட ஓடாய்த் தேய்ந்தார். கதைகளில் சொல்வார்கள், ஏழ்மையிலும் ஏதோ உயர்வுகள் இருக்கிற தென்று. அதெல்லாம் சும்மா. அசல் வாழ்க்கையில், நாற்ற மெடுத்த அறைகள், எலிகள், கரப்பான் பூச்சிகள். மட்டமான உணவு, அதுவும் முழு வயிற்றுக்குக் கிடைக்காது. நான் சின்னப் பையனாயிருந்தபோது, இரண்டு காசு சம்பாதிப் பதற்காக யார் என்ன வேலை கொடுத்தாலும் செய்தேன். பணக்காரர்கள் போகச் சொல்லும் இடத்துக்கு ஓடுவேன். காப்பியும் சுருட்டும் வாங்கி வந்து தருவேன். பெண்கள் வேண்டுமென்று கேட்டால் கூட்டி வந்து கொடுப்பேன். உயிரைப் பிடித்து வைத்துக் கொள்வதற்காக எதையும் செய்தேன்..."

ஜெனிபர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாரெட்டி தொடர்ந்தான். "ஒரு முறை மெக்ஸிகோ நகரில் அலைந்து கொண்டிருந்தேன். கையில் ஒரு பைசா கிடையாது. பசி வயிற்றைக் கிள்ளியது. அப்போது ஒரு பெண் என்னைத் தன்னுடன் ஓட்டலுக்கு வரும்படி கூப்பிட்டாள். டின்னர் சாப்பிடலாம் என்றாள். போனேன். சாப்பாட்டின் முடிவில் ஒரு பிரம்மாண்டமான கேக் கொண்டு வந்து வைத்தார்கள். ஆளுக்கு ஒரு பெரிய துண்டு வெட்டித் தந்தார்கள். அப்போது தான் ஒரு தகவல் தெரிந்தது. அதாவது, ஒரு சிறு களி மண் பொம்மை - சுட்ட பொம்மை அந்தக் கேக்கிற்குள் வைத்திருப்பார்களாம். அது இருக்கிற கேக் துண்டு யாருக்கு வருகிறதோ அவர்கள்தான் அங்கே சாப்பிட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு டின்னர் செலவு மொத்தத்தையும் கொடுக்க வேண்டுமாம். அங்கே

அப்படியொரு வழக்கம் என்று அறிவித்தார்கள். அந்த களிமண் பொம்மை என்னிடம் வந்துவிட்டது."

ஜெனிபர் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருக்க, மாரெட்டி சொன்னான்: "என்ன செய்ய? என்னிடம் பைசா கிடையாது. நல்லவேளை யாரும் பார்க்கவில்லை. ஆகவே எவருக்கும் தெரியாமல் அதை வாயில் போட்டுக் கொண்டு கடித்து விழுங்கிவிட்டேன்."

"வறுமை கொடியதுதான் ஒப்புக் கொள்கிறேன் ஆனால் உலகத்திலே எவ்வளவோ பேர் சிறு வயதில் ஏழையாகத்தான் இருந்திருக்கிறார்கள் எல்லாருமா உங்களைப் போல இப்படிப்பட்ட வாழ்க்கையை -"

அவன் குறுக்கிட்டு, "என்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுக் குழப்பாதே," என்றான் அவன் குரலில் பிடிவாதமும் முரட்டுத்தனமும் இருந்தன. "நான் நான்தான். நான் யாரென்று எனக்குத் தெரியும். நீ யாரென்று உனக்குத் தெரியுமா?"

"தெரியுமென்றுதான் நினைக்கிறேன்."

அவள் கண்களை விட்டுத் தன் கண்களை அவன் அகற்றவேயில்லை.

"என்னிடம், விளையாட்டு எதுவும் வைத்துக் கொள்ளாதே, ஜெனிபர் ஒருபோதும் வைத்துக் கொள்ளாதே," என்றான்.

தன் சக்தியனைத்தையும் இழந்துவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. அவர்களுக்கிடையே முன்பு நடந்ததெல்லாம் பழங்கதையாய் மறைந்துவிட்டதை உணர்ந்தாள்.

விருந்து முடியும் தருணம் மாரெட்டி சொன்னான்: "பார்த்தியா, மறந்தே போனேன் உனக்கு ஒரு கேஸ் வந்திருக்கிறது."

முகத்தில் பளீரென்று அறைவாங்கிய மாதிரி இருந்தது அவளுக்கு. மாரெட்டியை வெறித்து நோக்கி, "என்ன கேஸ்?" என்றாள்.

"என் பசங்களில் ஒருவனைப் பற்றித்தான். வாஸ்கோ என்று பெயர் ஒரு போலீஸ்காரனைக் கொன்று விட்டானாம். அதற்காகக் கைது செய்திருக்கிறார்கள். நீதான் அவனுக்காக ஆஜராக வேண்டும்."

ஜெனிபருக்குக் கோபம் வந்தது. தன்னை இப்படிப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறானே என்று நெஞ்சில் வேதனை ஏற்பட்டது.

எதையும் வெளிப்படுத்திக் கொள்ளாமல் அமைதியாக சொன்னாள் : "ஸாரி. முன்னே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். நான் உங்கள்... உங்கள் சிநேகிதர்களின் விவகாரங்களில் சிக்கிக் கொள்வதற்கில்லை."

அவன் மிதப்பாகச் சிரித்தான். "ஜெனிபர், சிங்கக் குட்டியின் கதை தெரியுமா? ரொம்பச் சின்னக் குட்டி. ஒரு நாள் முதல் தடவையாய்த் தாயை விட்டுவிட்டுத் தண்ணீர் குடிப்பதற்குத் தனியே போயிற்று. ஒரு கொரில்லா குரங்கு வந்து அதை மோதித் தள்ளியது. எழுந்து சமாளிப்பதற்குள் ஒரு பெரிய சிறுத்தை வந்து அதைத் தூக்கி அடித்துவிட்டுச் சென்றது. தபதபவென்று ஒரு யானைக் கூட்டம் வந்து அதை மிதித்தது. அந்தக் குட்டிச் சிங்கம் குற்றுயிரும் குலையுயிருமாய்த் தாயிடம் ஓடோடி வந்து, 'அம்மா! அம்மா!' அங்கே ஒரு பெரிய காடு இருக்கும்மா. என்னைக் காப்பாற்று! என்று அழுததாம்..."

அவன் பேச்சு அவளுக்குப் புரிந்தது. அவனுக்கும் அவளுக்குமிடையே நீண்ட நேரம் மௌனம் நிலவியது.

உண்மைதான் ஒரு பெரிய காடு இருப்பது உண்மைதான் என்று நினைத்துக் கொண்டாள் ஜெனிபர்.

ஆனால் அந்தக் காட்டுக்கு வெளியே, விளிம்பில்தான் இத்தனை காலமும் அவள் நின்றிருந்திருக்கிறாள். விரும்பினால் எந்த நிமிடமும் அங்கிருந்து ஓடிவிடுவதற்குச் சுதந்திரம் பெற்றிருந்தாள் அவளுக்கென்று சில கொள்கைகள் வைத்திருந்தாள் அவைகளின்படிதான் வழக்குகளை ஏற்றுக் கொண்டாள்.

ஆனால் இன்று மாரெட்டி அதையெல்லாம் மாற்றுகிறானே! அவனுடைய காடு இது. இந்தக் காட்டைப் பற்றி ஜெனிபருக்குப் பயமாயிருந்தது. இதிலே போய் மாட்டிக் கொள்வது பயமாயிருந்தது.

இருந்தாலும, மாரெட்டி தனக்காக எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கிறான்! குழந்தை ஜோசப்பைக் காப்பாற்றித் தந்தானே! அதோடு ஒப்பிடும்போது அவன் கேட்கும் உதவி மிகச் சிறியதுதான்...

இந்த ஒரு தடவை மட்டும் மாரெட்டிக்கு உதவி செய்வோம் என்று நினைத்துக் கொண்டாள்...

"வாஸ்கோவின் வழக்கை நாம் எடுத்துக் கொள்ளப் போகிறோம்," என்றாள் ஜெனிபர், துப்பறியும் நிபுணர் கென்னெத்திடம்.

அவரால் அதை நம்ப இயலவில்லை. "ஜெனிபர், அவன் பயங்கரக் கும்பலைச் சேர்ந்த ஆள்! மாரெட்டியின் அடியாட்களில் ஒருவன். இந்த மாதிரி கட்சிக்காரர்களை நாம் ஏற்றுக் கொள்வது கிடையாது."

"இந்தக் கட்சிக்காரனை ஏற்றுக் கொள்கிறோம்."

"ஜெனிபர், இந்தக் கும்பலில் போய் மாட்டிக் கொள்வது நமக்கு நல்லதில்லை."

"தனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்க எல்லாருக்கும் உரிமை உண்டு. அதுபோல் வாஸ்கோவுக்கும்

உண்டு," என்றாள் ஜெனிபர். ஆனால் அந்தச் சொற்கள் போலியாக ஒலிப்பது அவளுக்கே புரிந்தது.

"இதை நான் அனுமதிக்க முடியாது என்றார் கென்னெத்.

"இது என் அலுவலகம். இங்கே நான் தான் முடிவெடுப்பேன்," என்றாள் ஜெனிபர் கென்னெத்தின் ஆச்சரியமும் அவர் நெஞ்சம் புண்படுவதும் அவருடைய கண்களில் வெளிப்படுவது அவளுக்குத் தெரிந்தது.

கென்னத் அலுவலகத்தை விட்டு வெளியே நடந்தார். அவரைத் திரும்பக் கூப்பிட்டு நிலைமையை விளக்கலாமா என்று ஜெனிபர் ஒரு கணம் எண்ணினாள். ஆனால் என்னவென்று விளக்குவது? அவளுக்கே விளங்காமலிருக்கிறதே!

எல்லாக் கட்சிக்காரரையும் போல இந்த வாஸ்கோவும் ஒரு கட்சிக்காரன் என்றே நினைக்க முயன்றாள் ஜெனிபர். கொலைக் குற்றம் சாட்டப்பட்ட சிலபேருக்காக அவள் இதற்கு முன்னும் ஆஜரானதுண்டு.

ஆனால் வாஸ்கோ அவர்களைப் போல் இருக்கவில்லை. திட்டமிட்டுப் பயங்கரச் செயல்கள் செய்யும் ஒரு கும்பலின் உறுப்பினன் இவன் நாட்டுக்கு கோடானு கோடி டாலர் செலவு வைக்கும் கும்பல் அது. தன்னைக் காத்துக் கொள்வதற்காக எந்தக் கொலையையும் செய்ய அஞ்சாத கும்பல். அதிலே ஒருவன் இந்த வாஸ்கோ.

அவனுக்கு எதிரான சாட்சியம் மிக வலுவாக இருந்தது. ஒரு கடைக்குள் புகுந்து துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்க முயன்றபோது அவன் பிடிபட்டிருந்தான்.

அவனைப் பிடிக்க முயன்ற ஒரு போலீஸ் காரரைக் கொலை செய்திருந்தான்.

அவனுக்காக ஜெனிபர் ஆஜராகப் போகும் செய்தி எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

ஜெனிபரிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்த ஒரு நீதிபதி அவளுக்குப் போன் செய்து, "அந்தச் செய்தி உண்மைதானா ஜெனிபர்?" என்று கேட்டார்.

அவர் கேள்வியின் அர்த்தம் புரிந்தது அவளுக்கு. "ஆமாம் சார்," என்றாள்.

சிறிது மௌனத்திற்குப் பிறகு அவர், "அவன் எப்படிப் பட்டவன் என்று உனக்குத் தெரியும்? இல்லையா?" என்றார்.

"ஆமாம். தெரியும்."

"நீ ஆபத்தான இடத்தில் நுழைகிறாய், ஜெனிபர்."

"அப்படியொன்றுமில்லை. ஒரு சினேகிதருக்கு உதவி செய்வதற்காக..."

"ஓகோ... ஜாக்கிரதையாயிரு," என்றார் நீதிபதி.

"நிச்சயமாய்," என்று உறுதி கூறினாள் அவள்.

பொதுவாக அவருடன் பேச நேரிடும்போது அவளை ஓட்டலுக்கு விருந்துண்ண வரும்படி கூப்பிடுவது அவர் வழக்கம். இந்த முறை அவர் கூப்பிடவில்லை என்பது ஜெனிபருக்கு ஞாபகம் வந்தது.

ஜெனிபரின் உதவியாளர்கள் எல்லாத் தகவல்களும் சேகரித்து வந்து தந்தார்கள். அவைகளைப் பார்த்த போது, இந்த வழக்கில் ஜெயிக்கவே முடியாது என்று ஜெனிபருக்குத் தோன்றியது.

கொள்ளை கொலையில் ஈடுபட்டிருந்த சமயம் கையும் களவுமாகப் பிடிபட்டிருந்தான் வாஸ்கோ. சந்தர்ப்ப

வசத்தால் அதெல்லாம் நடந்து விட்டது என்றும் சொல்ல முடியாது. அத்துடன் கொலை செய்யப் பட்டிருப்பவர் ஒரு போலீஸ்காரர் என்னும் போது ஜூரர்களின் உள்ளங்கள் உணர்ச்சி வசப்படுவது வழக்கம்.

கென்னெத்திடம் என்னென்ன செய்ய வேண்டும் என்று வேலைகளை ஒப்படைத்தாள்.

அவர் ஒன்றும் சொல்லவில்லை. இதெல்லாம் அவருக்குச் சம்மதமில்லை என்பதை அவர் முகமே காட்டியது. ஜெனிபருக்கு வருத்தமாயிருந்தது. மாரெட்டிக் காக ஒரு வழக்கை ஏற்றுக் கொள்வது இதுதான் கடைசி தடவை என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

போன் மணியடித்தது. எடுத்தாள் மாரெட்டிதான். "என்ன டார்லிங், உன்னைப் பார்க்கத் துடியாய்த் துடிக்கிறேன் அரை மணிக்குள் என்னை வந்து பார்," என்றான்.

அவன் சொற்கள் காதில் விழும்போதே அவன் கைகள் தன்னைத் தழுவுவது போல் இருந்தது. அவன் உடலும் தன் உடலும் ஒட்டிக் கொள்வது போல் உணர்ந்தாள்.

"வருகிறேன்," என்றாள்.

இனிமேல் அவனுக்காக எதுவும் செய்வதில்லை என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்ட உறுதி மொழி துறந்தே போயிற்று.

வாஸ்கோவின் வழக்குப் பத்து நாள் நடந்தது.

அரசாங்க வக்கீல் டிசில்வாவும் ஜெனிபரும் மீண்டும் பகிரங்கமாக மோதிக் கொண்டு நின்றார்கள் ஆகவே பத்திரிகை நிருபர்கள் கோர்ட் நிறையக் குழுமி யிருந்தார்கள்.

டிசில்வா தன் தரப்பைப் பலமாக அமைத்திருந்தார். வேண்டுமென்றே எதையும் ஓங்கி அடித்துச் சொல்லாமல், அடக்கி வாசித்தே ஜூரர்களின் மனத்தைக் கவர்ந்தார் அவர் சொன்ன முறையில், சின்ன விஷயத்தைக்கூட மாபெரும் பயங்கரமாக அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள்.

ஜெனிபர் குறுக்கே எதுவும் பேசாமல் எல்லாச் சாட்சியங்களையும் கேட்டுக் கொண்டிருந்தாள்

வழக்கின் கடைசித் தினத்தன்று தான் துருப்புச் சீட்டைப் போட்டாள்.

வக்கீல்கள் உலகில் ஒரு பழமொழி உண்டு: 'உன் கட்சி பலவீனமாயிருந்தால் எதிர்க் கட்சியைக் கூண்டிலேற்று' என்று.

அதைத்தான் ஜெனிபர் செய்தாள்

வாஸ்கோவுக்குச் சாதகமாக எதுவும் இல்லாததால் கொலை செய்யப்பட்ட போலீஸ்காரர் மீது அவதூறு பொழிந்தாள்.

இறந்து போனவரைப் பற்றிய எல்லா விவரங்களையும் கென்னெத் சேகரித்துத் தந்திருந்தார்

அந்தப் போலீஸ்காரர் அப்படியொன்றும் பத்தரை மாற்றுத் தங்கமல்ல என்று தெரிந்தது. இருபது வருஷ சர்வீஸ் அவருக்கு. தேவையில்லாமல் வன்முறை உபயோகித்தாரென்று மூன்று தடவை அவர் சஸ்பெண்ட செய்யப் பட்டார் ஒரு முறை நிராயுதபாணியான ஒருவனை வெறும் சந்தேகத்தின் பேரில் துப்பாக்கியால் சுட்டு, கிட்டத்தட்ட அவன் செத்தே போகும்படி பண்ணிவிட்டிருந்தார் இன்னொரு முறை ஒரு மது பானக்கடையில் ஒரு குடிகாரனை அடித்து நொறுக்கி

யிருந்தார். வேறொரு முறை,ஏதோ ஒரு குடும்பத் தகராறில் ஓர் ஆளை அடித்து உதைத்து ஆஸ்பத்திரிக்குப் போகும்படி பண்ணியிருந்தார்.

இதெல்லாம் இருபது வருட காலத்தில் விட்டு விட்டு நடந்தவை. ஆனால் தொடர்ச்சியாக இடைவிடாமல் நடந்த மாதிரி ஜெனிபர் வர்ணித்தாள் இதற்காக ஏகப்பட்ட சாட்சிகளைத் தருவித்துச் சாட்சியம் சொல்ல வைத்தாள்.

டிசில்வாவினால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. "ஜூரர் பெரு மக்களே, இங்கே வழக்கு இறந்து போன போலீஸ் ஆபீசரைப் பற்றியதல்ல. அவர் கொலை செய்யப் பட்டிருக்கிறார் இந்த வாஸ்கோவினால். அதைத்தான் நீங்கள் மனத்தில் கொள்ள வேண்டும்," என்று மட்டுமே கூற முடிந்தது. ஆனால் தன் கட்சி தோற்று விட்டது என்று அப்போதே அவருக்குத் தெரிந்து விட்டது.

வாஸ்கோ எவ்வளவு மட்டமான ஆளோ அதே அளவுக்கு மட்டமான ஆள்தான் இறந்து போன போலீஸ்காரரும் என்ற எண்ணத்தை ஜூரர்களின் மனத்தில் பதிய வைத்து விட்டாள் ஜெனிபர். ஒரு குற்றவாளியைப் பிடிக்கும் உன்னதமான பணியில் உயிர் துறந்தவர் அந்தப் போலீஸ்காரர் என்பதே ஜூரர்களுக்கு மறந்து விட்டது.

விளைவு: வாஸ்கோ மரண தண்டனையிலிருந்து தப்பி விட்டான்.

டிசில்வாவுக்குப் பலமான அடி.

ஜெனிபருக்கு மற்றுமொரு வெற்றி என்று பத்திரிகைகள் புகழ்பாடின.

வெற்றியைக் கொண்டாடி ஜெனிபருக்கு விருந்து வைத்தான் மாரெட்டி.

வெள்ளையும் சிவப்புமான ஒரு பெட்டியை அவளுக்குப் பரிசளித்தான்.

திறந்தாள்.

ஒரு பெரிய வைர நெக்லஸ் ஜொலித்தது.

36

அந்த வைர நெக்லஸைக் கண் கொட்டாமல் பார்த்தாள் ஜெனிபர். "என்ன இது... எதற்கு?" என்று அவள் உதடு ஆட்சேபித்ததே தவிர, உள்ளத்தில் நீண்ட பெருமையும் மகிழ்ச்சியும் அவள் கண்களில் வெளிப் பட்டன.

"உங்களை... உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை," என்றாள் 'உன்னைத்தான் உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை' என்று அவள் மனத்துக்குள் ஒரு குரல் ஒலித்தது.

"உன் டிரெஸ்ஸுக்கு மாட்சாக இருக்க வேண்டாமா? அதற்குத்தான் இது," என்றான் மாரெட்டி. நெக்லெஸுடன் கூட இருந்த ஒரு வைர மோதிரத்தை அவளுடைய இடது கையின் நடுவிரலில் மாட்டினான்.

"என்ன சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை... ஏதாவது விசேஷமா இன்றைக்கு?" என்றாள் அவள்.

அவன் சிரித்தபடி, "விசேஷமெல்லாம் இனிமேல் தான் ஆரம்பம். இது சும்மா முன்னோடி," என்றான்.

அன்று அவள் மாரெட்டியின் படகுக் காரில் அவனுடைய பிரத்தியேக விடுதிக்குச் சென்றாள் போகும்போதே டிரைவருக்கும் பின் சீட்டுக்குமிடையே இருந்த தடுப்பை அவன் உயர்த்தினான். அவளை அணைத்து

முத்தமாரி பொழிந்தான். ஜெனிபரின் உடலெங்கும் பரவசம் ஓடியது.

மாரெட்டி குறிப்பிட்ட 'விசேஷம்' அன்று ஆரம்பமாயிற்று.

அதன்பின் பல காலம் ஓடிவிட்டது.

இன்று வெளியூர் ஓட்டலறையொன்றில் மாரெட்டியின் படுக்கையில் படுத்திருந்தபோது இவ்வளவும் அவளுக்கு ஞாபகம் வந்தது. மாரெட்டி குளியலறையில் இருந்தான். ஷவரின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

ஜெனிபரின் மனத்தில் சந்தோஷம் நிறைந்திருந்தது. ஒரே ஒரு வருத்தம்: குழந்தை ஜோசப் இங்கே இல்லையே என்பதுதான். இதுபோல் வெளியூர்களுக்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் அவனையும் தன்னுடன் கூடவே அழைத்து வர வேண்டும் என்று ஆசைப்பட்டதுண்டு. அதே சமயம் மாரெட்டியும் ஜோசப்பும் ஒருவரையொருவர் பார்க்காமலிருப்பது தான் முக்கியம் என்று அவள் உள்ளுணர்வு எச்சரித்தது. தனது இந்த வாழ்க்கையைப் பற்றி ஜோசப்புக்குத் தெரிய வேண்டாம் என்று அவள் முடிவு செய்திருந்தாள்.

'ஹூம்! என் இதயமே இப்படிப் பெட்டி பெட்டியாக அமைந்து விட்டது!' என்று எண்ணிக் கொண்டாள் அவள். வார்னருக்கு ஒரு பெட்டி ஜோசப்புக்கு ஒரு பெட்டி, மாரெட்டிக்கு ஒரு பெட்டி, ஒரு பெட்டி இன்னொரு பெட்டியைத் தொட்டு விடாதபடி தனித் தனியே பிரித்து வைத்துக் கொண்டிருக்கிறாள்

குளித்துவிட்டு ஒரு துண்டு மட்டுமே கட்டிக் கொண்டு வெளியே வந்தான் மாரெட்டி. மார்பின் ரோமங்கள் ஈரத்தில் மினுமினுத்தன. அழகான கிளுகிளுப்பூட்டும் மிருகம் என்று தோன்றியது ஜெனிபருக்கு.

"சீக்கிரம் உடை மாற்றிக் கொள். நிறைய வேலை இருக்கிறது," என்றான்.

இப்போதெல்லாம் மாரெட்டியின் விவகாரங்களைக் கவனிக்கவே அவளுக்குச் சரியாக இருந்தது. வாஸ்கோவின் வழக்கு முடிந்த கொஞ்ச நாளைக் கெல்லாம் இன்னொரு வழக்கைக் கவனிக்கும்படி மாரெட்டி கேட்டுக்கொண்டான். அதைத் தொடர்ந்து வந்தது இன்னொன்று. பிறகு மற்றொன்று... இப்படியே, கொஞ்சம் கொஞ்சமாக அவளையுமறியாமல் மாரெட்டியின் வழக்குகள் அவளிடம் வர ஆரம்பித்து விட்டன.

மாரெட்டி அவளைப் போனில் கூப்பிடுவான். "உன் உதவி தேவைப் படுது, கண்ணு. என்னோட பசங்களில் ஒருத்தனுக்கு ஒரு பிரசினை," என்பான்.

அவளுக்கு ரயன் பாதிரியாரின் ஞாபகம் வரும். அவரும் இப்படித்தானே சொல்வார் 'என்னோட சினேகிதன் ஒருவனுக்கு ஒரு சின்னப் பிரசினை' என்று?

ஆனால் அப்போது அவருக்குச் செய்த உதவியும் இப்போது இவனுக்குச் செய்கிற உதவியும் ஒன்றுதானா? ஒன்றுதான் என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டாள்.

ஆனால் இரண்டிற்கும் வித்தியாசம் இருந்தது - பெரு வித்தியாசம்.

மிகச் சக்தி வாய்ந்த ஒரு பயங்கரக் கும்பலின் நடுநாயகமாக அல்லவா இப்போது அவள் இருக்கிறாள்!

தன் மாமனாரும் கும்பலின் தலைவருமான பெரிய வரிடம் ஒருநாள் ஜெனிபரை அழைத்துப் போனான் மாரெட்டி.

ஜெனிபருக்கு அதிர்ச்சி. எலும்புக் கூடாக, ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் அவர். ஒரு காலத்தில் பயங்கர திடகாத்திரத் தலைவராக இருந்தவரா இவர்!

உயரமும் கவர்ச்சியும் நிறைந்த ஒரு பெண் உள்ளே வந்தாள் "இவள் ரோஸா, என் மனைவி," என்று ஜெனிபருக்கு அவளை அறிமுகம் செய்து வைத்தான் மாரெட்டி.

என்றாவது ஒரு நாள் இவளைச் சந்திக்க நேரிடும் என்று எண்ணிப் பல தடவை ஜெனிபர் பயந்திருக்கிறாள்.

மாரெட்டியுடன் இருக்கும்போதெல்லாம் அவளை ஒரு குற்ற உணர்வு தாக்குவது வழக்கம். 'ஒரு மணமான பெண்ணுக்கு நான் துரோகம் செய்கிறேனே! அவளுடைய கணவனைத் திருடிக்கொள்கிறேனே! கூடாது. இதை நிறுத்திவிட வேண்டும்!' என்று ஒவ்வொரு தடவையும் அவள் உள்ளம் ஓலமிடும். ஆனால் அடுத்தமுறை மாரெட்டியைச் சந்திக்கும்போது மறுபடியும் அவள் தோற்று விடுவாள்.

ரோசா அவளை ஏறிட்டு நோக்கினாள். அந்தக் கண்களில் அறிவுக் கூர்மை இருந்தது. 'நம் விஷயம் இவளுக்குத் தெரிந்திருக்கிறது' என்று ஜெனிபருக்குப் புரிந்தது.

இரண்டொரு வினாடிகளுக்கு, சற்றே சங்கடமான மௌனம் அங்கே நிலவியது. ரோஸா மென்மையான குரலில். "உங்களைப் பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம், ஜெனிபர். நீங்கள் பெரிய அறிவாளி என்று என் கணவர் அடிக்கடி சொல்வார்," என்றாள்.

பெரியவர் ஒரு கனைப்புடன், "எனக்கென்னவோ பெண்கள் அறிவாளிகளாயிருப்பது பிடிப்பதில்லை. மூளை சமாசாரங்கள் ஆண்களிடம் இருப்பதுதான் மேல்," என்றார்.

"ஜெனிபரை நான் ஆண் பிள்ளையாகத்தான் நினைக்கிறேன்," என்றான் மாரெட்டி அழுத்தமாக.

விஸ்தாரமான கொஞ்சம் கர்னாடகமான அறையில் அவர்கள் சாப்பிட அமர்ந்தபோது, "என் பக்கத்தில் உட்கார்" என்றார் பெரியவர் ஜெனிபரிடம். அந்த ஆணைக்கு அவள் கட்டுப்பட வேண்டியதாயிற்று. எதிரில் அவர்கள் குடும்ப வழக்கறிஞரான கால்ஃபாக்ஸ் உட்கார்ந் திருந்தார் அவருடைய எரிச்சலை ஜெனிபரால் உணர முடிந்தது.

மாரெட்டியின் மனைவி அற்புதமான விருந்து தயாரித்திருந்தாள். வேலைக்காரர்கள் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. அவளே பரிமாறுவதும் சாப்பாட்டு மேஜையை ஒழிப்பதுமாய்ச் சுறுசுறுப்பாயிருந்தாள்.

"ரோஸாவின் சமையல் பிரமாதமாயிருக்கும். அவள் அம்மா மாதிரியே," என்று பெரியவர் ஜெனிபரிடம் சொல்லிவிட்டு, "நான் சொல்வது சரிதானே," என்று மாரெட்டியிடம் கேட்டார்.

"ஆமாம்," என்றான் அவன் மரியாதையுடன்.

"ரோஸா அருமையான மனைவியும்கூட," என்றார். பெரியவர் அது சாதாரணமாகச் சொன்னதா அல்லது எச்சரிக்கையா? ஜெனிபரால் ஊகிக்க முடியவில்லை.

மாரெட்டி பேச்சை மாற்றி, "ஒன்றுமே சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறாயே?" என்றான் ஜெனிபரிடம்.

"அடெயப்பா! இப்படியொரு சாப்பாட்டை நான் என் ஆயுளில் சாப்ப்பிட்டதில்லை!" என்றாள் அவள்.

அதற்குப் பிறகும் வகை வகையான உணவுகள் வந்து கொண்டிருந்தன. இவ்வளவு சாப்பிட்டும் மாரெட்டி எப்படித்தான் உடம்பை ஒல்லியாய் வைத்துக் கொள் கிறானோ என்று ஜெனிபருக்கு ஆச்சரியமா இருந்தது.

சாப்பாட்டின்போது எல்லாரும் தமாஷாயும் கலகலப்பாயும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு பயங்கரக் கும்பலின் தலைவர்களுடைய குடும்பம் இது என்கிற எண்ணமே தோன்றவில்லை ஜெனிபருக்கு. ஆயிரக் கணக்கான சராசரிக் குடும்பங்களில் இதுவும் ஒன்று போல இருந்தது.

"எங்கள் சங்கத்தைப் பற்றி உனக்குத் தெரியுமா?" என்று பெரியவர் கேட்டபோதுதான் அவள் விழித்துக் கொண்டாள்

"தெரியாது."

"சொல்கிறேன், கேள்," என்றார் பெரியவர். "எங்கள் சொந்த நாடான இத்தாலியில், ஏழைகளுக்கு அநீதி இழைப்பதை எதிர்த்துப் போராடுவதற்காக இந்த அமைப்பை ஆரம்பித்தோம். அதிகாரத்தில் இருந்தவர்கள், ஏழை மக்களைக் கொள்ளை யடித்தார்கள். ஏழைகளுக்கு என்ன இருந்தது? எதுவுமில்லை. பணமில்லை, வேலை யில்லை, நீதியில்லை. அதற்காக இந்த ரகசிய சங்கம் உருவாயிற்று. ஏழை ஜனங்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது சங்கத்திடம் வந்து சொல்வார்கள். சங்கம் அந்த அநீதிக்காரர்களைப் பழிதீர்க்கும். நாளா வட்டத்தில் அரசாங்கச் சட்டத்தைவிட இந்த ரகசியச் சங்கத்தின் சட்டம் வலுவுள்ளதாக ஆகிவிட்டது. ஏனெனில் இது மக்கள் சட்டம். பைபிளில் சொல்லியிருக்கிறதைத்தான் நாங்கள் செய்கிறோம். 'யாராவது உனக்குத் துரோகம் இழைத்தால் நீ பழி வாங்கு' என்பது எங்கள் கொள்கை."

பெரியவர் பேசி முடித்தார். ஜெனிபருக்கு அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது புரிந்தது.

அவர்களுடைய கூட்டங்களில் அடிக்கடி கலந்து கொள்ள ஆரம்பித்தாள்.

வேண்டாத மனிதர்களைக் கொலை செய்வதும், மிரட்டிப் பணம் வசூலிப்பதும், விபசார விடுதிகள்

நடத்துவதும்தான் இந்தக் கும்பலின் வேலைகள் என்றுதான் இதுவரை ஜெனிபர் நினைத்திருந்தாள். அது ஒரளவு தான் உண்மை என்பதை இப்போது அறிந்து கொண்டாள். பெரிய பெரிய தொழில் அதிபர்கள் அந்தக் கும்பலில் இருந்தார்கள் ஓட்டல்கள், பாங்க்குகள், கப்பல் கம்பெனிகள், ஆஸ்பத்திரிகள், சினிமாத் தியேட்டர்கள், இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் - இப்படி ஏராளமானவற்றை இந்தக் கும்பல் நடத்திவந்தார்கள். அவர்களுடைய வருமானம் பல கோடிக் கணக்கில் இருந்தது. எப்படி இவர்களுக்கு இப்படியொரு பிஸினஸ் சாம்ராஜ்யம் கிடைத்தது என்பதைப் பற்றி ஜெனிபர் கவலைப்படவில்லை. சட்டத்துடன் மோதல் ஏற்படும் போதெல்லாம் அவர்களுக்காக ஆஜராக வேண்டியது அவளுடைய வேலையாயிற்று.

கோர்ட் மூலமாகத்தான் அவர்களைக் காப் பாற்றினாள் என்று சொல்ல முடியாது. சிறு தந்திரங்கள் மூலமும் வெற்றி பெற்றாள்.

ஒருமுறை மாரெட்டியின் ஆட்கள் சிலர் ஓர் உணவு தயாரிப்பு நிறுவனத்துடன் மோதினார்கள். பணம் கேட்டு மிரட்டினார்கள். அவர்களில் மூன்று பேரை டி.சில்வா மடக்கிப் பிடித்துவிட்டார்.

ஒரு பெண் அவருக்கு முக்கியமான சாட்சியாக இருந்தாள். மூன்று பேரும் கலாட்டா செய்ததை அவள் நேரில் பார்த்திருந்தாள்.

"அந்தப் பெண்தான் நம்மை ரொம்ப மாட்ட விடுவாள் போலிருக்கிறது," என்று மாரெட்டி ஜெனிபரிடம் சொன்னான்.

சிறிது நேரம் யோசனை செய்தாள் அவள். பிறகு, "நீங்கள் ஒரு பத்திரிகை பிஸினஸும் நடத்துகிறீர்கள் அல்லவா?" என்று கேட்டாள்.

"ஆமாம்... அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

ஜெனிபர் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. அமைதியாக ஓர் ஏற்பாடு செய்தாள்.

அந்தப் பத்திரிகையின் பிரதிநிதி அந்தப் பெண்ணைச் சந்தித்தார். அவள் தன் 'உண்மைக் கதை'யைச் சொல்வதானால் எக்கச்சக்கமாய்ப் பணம் தருவதாக ஆசை காட்டினார். அவளும் சொல்ல, அது அந்தப் பத்திரிகையில் வெளிவந்தது.

பிற்பாடு மாரெட்டியின் ஆட்களைப் பற்றிய வழக்கு நீதி மன்றத்துக்கு வந்தபோது, இதையே துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தினாள் ஜெனிபர். அந்தப் பெண் பப்ளிசிடிக்காகவும் பணத்துக்காகவும் எதுவும் செய்யக் கூடியவள்என்றும் அவளுடைய சாட்சியத்துக்கு மதிப்புத் தரக் கூடாது என்றும் வாதாடினாள்.

நீதிபதி அதை ஏற்றுக்கொண்டு வழக்கைத் தள்ளி விட்டார்.

ஜெனிபரின் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அவளுக்கும் அவளுடைய உதவியாளர்களுக்குமிடையே விரிசல் ஏற்படுத்தத் தவறவில்லை. பயங்கரக் கும்பல் சம்பந்தப்பட்ட வழக்குகள் வரிசையாக வரத் தொடங்கியதும், ஒரு நாள் கென்னெத் கடுமையாக ஆட்சேபித்தார். "என்ன ஜெனிபர் இதெல்லாம்? இந்த ரவுடிகளுக்காக நாம் ஆஜராவது சரியில்லை. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் நம்மை இவர்கள் கவிழ்த்து விடுவார்கள்" என்றார்.

"கவலைப்படாதீர்கள், இவர்களிடமிருந்து பணம் வருகிறது," என்றாள் அவள்.

"என்ன நீ இவ்வளவு அசடாக இருக்கிறாய், ஜெனிபர்? கடைசியில் நஷ்டப்படப் போவது நாம்தான். பார்த்துக்

கொண்டேயிரு. உன்னையே ஒருநாள் மாட்ட வைத்துவிடப் போகிறார்கள்."

அவர் சொல்வது உண்மை என்று ஜெனிபருக்குப் புரிந்தது. ஆகவே கோபம் வந்தது. "சரி, சரி. இத்தோடு இந்தப் பேச்சை விடுங்கள்," என்றாள் கடுமையாக.

. ஒரு நீண்ட நிமிடம் அவளையே பார்த்தார் கென்னெத். "சரியம்மா, நீதான் இங்கே முதலாளி, நான் என்ன சொல்ல முடியும்?" என்றார்.

பயங்கரக் கும்பலின் ஆட்களுக்காக ஜெனிபர் ஆஜராகிறாள் என்பது வழக்கறிஞர்கள் வட்டாரத்தில் பரவிவிட்டது. நல்லெண்ணம் கொண்ட பல நண்பர்கள் அவளை எச்சரித்தார்கள் "இந்த ரவுடிக் கும்பலில் மாட்டிக் கொண்டால் உங்கள் பெயர் கெடும்," என்றார்கள்.

அனைவருக்கும் ஒரே பதில் தான் சொன்னாள்: "நீதி மன்றத்தில் முறையிட எப்படிப் பட்டவருக்கும் உரிமை உண்டு. அதற்கு நான் உதவி செய்கிறேன். அது எப்படித் தவறு?"

'இவர்களுடைய எச்சரிக்கைள் சரிதான், ஆனால் எனக்குப் பொருந்தாது' என்று எண்ணிக் கொண்டாள் அவள் கும்பலில் உறுப்பினர் இல்லையே நான்? உறுப்பினர்களில் சிலருக்காக நான் கோர்ட்டில் ஆஜராகிறேன். அவ்வளவுதானே? நான் ஒரு வக்கீல். என் அப்பாவைப் போல. தன் மகளைப் பற்றி அவர் அவமானப் படும்படியான எதையும் நான் செய்ய மாட்டேன். ரவுடிகள் நிறைந்த வனாந்தரம் அதோ இருப்பது வாஸ்தவம்தான். அதற்கு வெளியே தான் நான் இருக்கிறேன்...

ரயன் பாதிரியார் ஒருநாள் அவளைப் பார்க்க வந்தார். ஆனால் எந்த நண்பனுக்கும் உதவி செய்யும்படி அவளைக் கேட்கவில்லை.

"உன்னைப் பற்றிக் கவலையாக இருக்கிறது ஜெனிபர். நீ சில வழக்குகளை... வந்து... மோசமான நபர்களின் வழக்குகளை எடுத்துக் கொள்கிறாயாமே?" என்றார்.

"மோசமான நபர் என்றால் யார் ஃபாதர்? உங்களிடம் உதவி கேட்டு வருகிறவர்களை யார் என்னவென்று பார்க்கிறீர்களா? பாவம் செய்தவர்கள் என்பதற்காகச் சர்ச்சுக்கு வரக் கூடாதென்று விரட்டி விடுகிறீர்களா?" என்றாள் ஜெனிபர்.

ரயன் பாதிரியார் தலையை அசைத்தார். "மாட்டேன் தான். ஆனால் ஒரு தனிப்பட்ட நபர் தப்புச் செய்வது என்பது வேறு. அதையே ஒரு கும்பல் ஒன்றுசேர்ந்து திட்டமிட்டுச் செய்வதென்பது வேறு. அவர்களுக்கு நீ உதவி செய்வது, அவர்களுடைய செயல்களை மன்னித்து ஏற்றுக் கொள்கிற மாதிரி ஆகிவிடும். நீயும் அவர்களில் ஒருத்தி என்று ஆகிவிடும் அம்மா."

ஜெனிபர் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "நான் ஒரு வக்கீல், ஃபாதர் கஷ்டத்தில் சிக்கிக் கொள்கிறவர்களுக்கு உதவுகிறேன். அவ்வளவு தான்," என்றாள்.

தான் எப்படிப்பட்ட வலையில் சிக்கியிருக்கிறோம் என்பது அவளுக்கு அப்போது தெரியவில்லை.

37

மனைவி ரோஸாவிடம் எனக்குக் காதல் எதுவும் கிடையாது என்று மாரெட்டி சொல்லியிருந்தான். உண்மைதான். ஆனால் ரோஸாவுக்கு அவன் தெய்வம். அவன் இட்ட ஏவலைச் செய்ய அவள் எப்போதும்

காத்திருந்தாள். அவனுடைய தேவைகளைக் குறிப்பறிந்து செய்யும் மனைவி அவள்.

இந்தப் பயங்கரக் கும்பலைச் சேர்ந்தவர்களின் மனைவிமார்கள் எல்லாருமே இப்படித்தான் இருந்தார்கள். ஜெனிபர் அதை விரைவிலேயே கண்டு கொண்டாள். மனைவிமார்களை அவர்கள் வசதியாக வைத்துக் கொண்டார்கள். அத்தோடு சரி. மற்றபடி கணவன்களின் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேச முடியாது.

ஜெனிபர் வந்தபின் மாரெட்டியின் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டிருந்தது. இதுவரை தன் ஸ்தாபனத்தைப் பற்றி மட்டும் அக்கறை காட்டி வந்தவன் அவன். எந்தப் பெண்ணிடமும் மயங்கி உணர்ச்சிவசப்பட்டதுகிடையாது. - அது அவன் மனைவியாக இருந்தாலும் சரி, காதலிகளாக இருந்தாலும் சரி. எந்தப் பெண்ணையும் தன் வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவள் என்று அவன் நினைத்ததுகிடையாது இதுவரை.

ஜெனிபர் வந்து அவன் மனத்தை மாற்றி விட்டாள்.

வேறு எந்தப் பெண்ணையும் காட்டிலும் ஜெனிபர் தனக்கு இன்றியமையாதவள் என்று நினைக்கத் தொடங்கியிருந்தான். ஜெனிபர் மாதிரி ஒருத்தியைப் பார்த்ததே கிடையாது என்று எண்ணினான். வெறும் அழகோ உடம்போ காரணமல்ல. அப்படிப் பார்த்தால் கவர்ச்சியான டஜன் கணக்கான பெண்களுடன் அவன் பழகியதுண்டே! குறிப்பாக ஜெனிபர் பிடித்துப் போனதற்குக் காரணம் அவளுடைய புத்திக் கூர்மை. அவளுடைய சுதந்திர உணர்வு. அவன் மனைவி அவன் கிழித்த கோட்டைத் தாண்டாமல் கீழ்ப்படிகிறவளாகஇருந்தாள் மற்றக் காதலிகள் அவனிடம் பயப்பட்டார்கள் ஜெனிபர் ஒருத்திதான் அவனுக்குச் சவால் விட்டாள்.அவள்தான் அவனுக்குச் சமமானவளாக இருந்தாள் அவளுடன் அவன் மனம் விட்டுப் பேச

முடிந்தது. பல விஷயங்களை விவாதிக்க முடிந்தது. வெறும் கெட்டிக்காரியாக மட்டுமல்ல, சூட்சும புத்தியுடன் விளங்கினாள்.

என்ன ஆனாலும் சரி, ஜெனிபர் தன் கையை விட்டுப் போகக் கூடாது என்பதில் மாரெட்டி வெகு உறுதியாக இருந்தான்.

வழக்குகள் விஷயமாக ஜெனிபர் மாரெட்டியுடன் வெளியூர் செல்ல நேரிட்டதுண்டு. ஆனால் கூடுமானவரை அந்தப் பயணங்களைத் தவிர்க்கவே முயற்சி செய்தாள். காரணம், குழந்தை ஜோசப்தான். அவனுடன் அதிக நேரம் இருக்க அவள் ஆசைப்பட்டாள்.

இப்போது ஜோசப்புக்கு ஆறு வயதாயிருந்தது. என்ன வேகமாய் வளர்ந்து விட்டான்! அவளாலேயே நம்ப முடிய வில்லை. வீட்டுக்கு அருகிலிருந்த ஒரு தனியார் பள்ளிக் கூடத்தில் அவனைச் சேர்த்திருந்தாள். ஜோசப்புக்கு அந்தப் பள்ளி ரொம்பப் பிடித்திருந்தது.

சைக்கிள் ஓட்டினான். பொம்மைக் கார்கள் வைத்துக் கொண்டு ரேஸ்கள் நடத்தினான். அம்மாவுடனும் வேலைக் காரியுடனும் வளவளவென்று பேசிக் கொண்டிருந்தான்.

அவன் பலசாலியாகவும் சுதந்திரமான போக்கு உள்ளவனாகவும் வளரவேண்டும் என்று ஜெனிபர் விரும்பினாள். அவனிடம் தனக்குக் கொள்ளைப் பிரியம் உண்டு என்பதை வாயால் சொல்லிக் கொண்டிருக்காமல் அவனாகவே தெரிந்து கொள்ளும்படி நடந்து கொண்டாள். அவன் தானாகவே சுதந்திரமாகக் காரியங்கள் செய்வதற்கு இடம் தந்தாள். அதே சமயம், தேவைப் பட்டால் அவனுக்கு உதவி செய்யத் தானொருத்தி இருப்பது தெரியும்படி நடந்து கொண்டாள்.

நல்ல புத்தகங்களைப் படிக்கவும் நல்ல சங்கீதத்தை ரசிக்கவும் அவனுக்குக் கற்றுத் தந்தாள் அவனைச்

சினிமாவுக்கு அழைத்துச் சென்றாள். ஆனால் படம் ஆரம்ப மாகும் தினத்தன்று போவதில்லை - தெரிந்தவர்கள் பல பேர் வரக்கூடும், ஏதாவது அனாவசியமாய்க் கேள்விகள் கேட்கக் கூடும் என்பதால். சனி ஞாயிறுகளில் ஒரு படம் பார்த்துவிட்டு, இரவு ஓட்டலில் சாப்பிட்ட பிறகு, மறுபடியும் ஒரு படம் பார்ப்பார்கள். ஞாயிறுகளில் படகுச் சவாரி செய்வார்கள். பந்தயம் போட்டுக் கொண்டு சைக்கிள் விடுவார்கள். தன் அன்பு மொத்தத்தையும் அவன் மீது கொட்டுவாள் ஜெனிபர். அதேசமயம் அவனுக்குச் செல்லம் கொடுத்துக் குட்டிச் சுவராக்கி விடக் கூடாது என்பதிலும் ஜாக்கிரதையா இருப்பாள். தன் வழக்குகளை எப்படித் திட்டமிட்டு அமைத்துக்கொள்வாளோ அதே போல் குழந்தை வளர்ப்பிலும் இருந்தாள் அவள். அம்மா மட்டுமே வளர்த்த பிள்ளைகள் எப்படி உருப்படாமல் போய் விடுவார்கள் என்று அவளுக்குத் தெரியும். ஆகவே எச்சரிக்கையுடன் இருந்தாள். குழந்தையுடன் இருப்பதற்காக எந்தத் தியாகம் செய்யவும் தயாரா யிருந்தாள். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி தன் மகன் முதன்மையாக இருப்பதில் அவளுக்கு மகா பெருமை.

படிப்புக் கெட்டுவிடாதபடி அவனை வெளியூருக்கும் வெளிநாடுகளுக்கும் அழைத்துச் சென்றாள். ஒரு முறை வழக்கு விஷயமாக லண்டன் போக வேண்டியிருந்தது. ஜோசப்பையும் அழைத்துப் போனாள். இரண்டு வார காலம் அங்கே ஊர் சுற்றினார்கள். ஜோசப்புக்கு லண்டன் ரொம்பப் பிடித்து விட்டது.

"ஏம்மா, நான் இங்கேயே படிக்கிறேனே?" என்றான்.

ஜெனிபரின் இதயத்தில் ஒரு வேதனை பிறந்தது.

ஹூம்! இன்னும் கொஞ்ச நாளில் ஜோசப் வெளியூர் பள்ளிக் கூடங்களுக்குப் போக வேண்டி இருக்கும். தன் எதிர் காலத்தைத் தானே பார்த்துக் கொள்வான். கல்யாணம் செய்து கொள்வான். அவனுக்கென்று தனி

வீடும் குடும்பமும் ஏற்பட்டுவிடும்... நான் ஏன் வருத்தப் படவேண்டும்? அப்படி அவன் சௌக்கியமாக, சந்தோஷ மாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே இத்தனை பாடுபடுகிறாள்! வளர்ந்து பெரியவனானதும் அவனைச் சுதந்திரப் பறவையாக விட்டு விட வேண்டியதுதான். ஆனால் அந்தச் சமயம் வரும்போது தாள முடியாத கஷ்டமாகத்தான் இருக்கும்...

"என்னம்மா, நான் கேட்டேனே?" என்றான் ஜோசப். "நான் இங்கே படிக்கலாமா? ஆக்ஸ்போர்டில் கூடப் படிக்கலாமில்லையா?"

"ஓ, தாராளமாய்?" என்றாள் மகனை இறுக அணைத்தபடி. "ஆக்ஸ்போர்டு கொடுத்து வைத்திருக்கணும் நீ அங்கே படிப்பதற்கு!"

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று, வேலைக்காரி வரவில்லை. ஜெனிபர் ஒரு கட்சிக்காரரைப் பார்க்க வெளியே போக வேண்டியிருந்தது. ஜோசப் தன் சினேகித் னொருவனின் வீட்டுக்குப் போயிருந்தான்.

வீடு திரும்பியதும் ஜெனிபர் தங்கள் இரண்டு பேருக்காகச் சமையல் செய்ய ஆரம்பித்தாள்.

ஃப்ரிஜ்ஜைத் திறந்தவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

இரண்டு பால் புட்டிகளுக்கு நடுவே ஒரு கடிதம் வைக்கப் பட்டிருந்தது.

அவள் இதயத் துடிப்பு ஒரு கணம் நின்றுவிட்டது.

வார்னர் இப்படித்தான் அவளுக்கு ஏதாவது தெரிவிக்க வேண்டுமென்றால், இப்படி ஒரு காகிதத்தில் எழுதி, இதே போல ஃப்ரிஜ்ஜில் இரண்டு புட்டிகளுக்கு நடுவே செருகி வைத்திருப்பான்.

அந்தக் காகித்தை வெறித்துப் பார்த்தபடி ஜெனிபர் நின்றாள். அதைத் தொடவே அவளுக்குப் பயமாயிருந்தது.

ஜோசப் என்ன எழுதி வைத்திருப்பான்?

மெதுவாக, வெகு வெகு மெதுவாக அதை எடுத்தாள். நடுங்கும் கரங்களால் பிரித்தாள். படித்தாள்.

'அம்மாவுக்கு, ராத்திரி என்னோடு சாப்பிடுவதற்கு என் சினேகிதன் ஆலனை அழைச்சிட்டு வரேன் சரி தானே?'

ஜெனிபரின் படபடப்பு குறைந்து சாதாரணத்துக்கு வர வெகுநேரம் பிடித்தது.

தன் தந்தையைப் பற்றி எப்போதாவது ஜோசப் கேட்பதுண்டு.

"வியட்நாம் போரில் அவர் இறந்து விட்டார் ரொம்பத் தைரியசாலி," என்பாள் ஜெனிபர்.

"ஏம்மா, அவர் போட்டோ ஒண்ணுகூட நம்ம வீட்டில் இல்லையே?"

"இல்லேப்பா. எனக்கும் கூட அதைப்பற்றி வருத்தம்தான். நாங்கள் கல்யாணம் பண்ணிக்கொண்ட கொஞ்ச நாளைக்கெல்லாம் அவர் இறந்து விட்டார். அதனாலே போட்டோ எடுத்துக் கொள்ளவில்லை." இப்படிப் பொய் சொல்ல அவளுக்கே வெறுப்பாகத்தான் இருந்தது. ஆனால் வேறு வழியில்லையே?

மாரெட்டியும் ஒரே ஒரு முறை கேட்டான், ஜோசப்பின் தந்தை யாரென்று. "இப்போது நீ எனக்குச் சொந்தமாகிவிட்டாய். இதற்கு முன்பு உன் வாழ்க்கையில் என்ன நடந்தது என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. சும்மா தெரிந்தது கொள்ளலாமென்று தான் கேட்கிறேன்" என்றான்.

வார்னரைப் பற்றி அவனிடம் சொல்ல ஜெனிபர் விரும்பவில்லை. வார்னர் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறான். அவனைப் பற்றிய ரகசியம் தெரிந்தால் மாரெட்டி அவனை ஆட்டி வைத்து விடுவான் என்று அவளுக்குத் தெரியும்.

"வியட்நாம் போரில் அவர் இறந்துவிட்டார்," என்று மட்டுமே சொல்லி வைத்தாள்.

வார்னரின் புகழ் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டிருந்தது தலை நகரில்.

சமீபத்தில் அவன் செய்த காரியமொன்று அவனுக்கு ஏகப்பட்ட பாராட்டுத் தேடித் தந்திருந்தது.

விமானப் படைக்காக அரசாங்கம் ஒரு புது ரக வெடி குண்டு வீசும் விமானம் வாங்கவிருந்த சமயம். அதைப் பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அது விமானப் படைக்கு ரொம்ப அவசியம் என்று ஒரு கட்சி. அனாவசியமான செலவு என்று இன்னொரு கட்சி.

வார்னர் தானே அந்த விமானத்தைச் சோதித்துப் பார்ப்பதாக அறிவித்தான். இரண்டு தரப்புக்கும் அதில் சம்மதம்.

இரண்டொரு உதவியாளர்களை மட்டுமே வைத்துக் கொண்டு வார்னர் அந்த விமானத்தை ஓட்டிப் பார்த்தான். பல கடுமையான சோதனைகள் நடத்தினான்.

அது மிக நல்ல விமானமென்றும் அதை வாங்குவது விமானப் படையின் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவும் என்றும் அறிவித்தான். அவன் சிபாரிசை ஏற்று, பாராளு மன்றம் உரிய தொகையை அனுமதித்தது.

பத்திரிகைகள் வார்னரை ஓகோவென்று பாராட்டின. வெறும் பேச்சுக்களை நம்பிக் கொண்டிருக்காமல், தானே தீரத்துடன் செயலாற்றி உண்மையைக் கண்டுபிடித்தான் என்று புகழ்ந்தன. பாராளுமன்றத்தில் ஒரு புதிய தலை முறையைத் தொடங்கியிருக்கிறான் என்று வர்ணித்தன.

'ஜனாதிபதியாக வருவதற்கான தகுதி இருக்கிற தென்று வார்னர் நிரூபித்து விட்டார்' என்று பத்திரிகைகள் எழுதின.

இந்தச் செய்திகளையெல்லாம் ஜெனிபர் விழுந்து விழுந்து படித்தாள். அவள் உள்ளத்தில் பெருமிதம் நிறைந்தது.

கூடவே வேதனையும் ஏற்பட்டது.

காரணம், அவளுக்கு இன்னமும் வார்னரின் மேல் காதல் இருந்தது. அதே சமயம் மாரெட்டியையும் அவள் நேசித்தாள். இரண்டும் எப்படி ஒரே சமயத்தில் சாத்தியம் என்று அவளுக்கே புரியவில்லை. 'நான் என்ன பெண்ணில் சேர்த்தி!' என்று அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது.

வார்னருக்கும் தனக்கும் இருந்த உறவை ரகசியமாக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று அவள் நினைத்திருந்த சமயத்தில் -

ஒரு சம்பவம் நடைபெற்றது.

மெக்ஸிகோ நாட்டிலிருந்து அமெரிக்காவுக்குக் கடத்திக் கொண்டு வரப்படும் கஞ்சாப் பொருள்கள் அளவுக்கு மீறிப் பெருகிவிட்டிருந்தன.

ஒரு கும்பல், ஸ்தாபன ரீதியாகத் திட்டமிட்டு இந்தக் கடத்தலைச் செய்து வருகிறது என்பது நன்கு தெரிந்தது. அதைத் துருவி ஆராய்ந்து கண்டுபிடிக்க ஒரு குழுவை

நியமித்தது பாராளுமன்றம். அந்த குழுவுக்கு வார்னர் தலைமை தாங்கினான். அரை டஜன் போலீஸ் இலாகாக்களை அவன் ஒருங்கிணைத்து, விசாரணைகள் நடத்தினான். மெக்ஸிகோவுக்கும் நேரே பயணமானான். அந்த நாட்டு அரசாங்கத்தின் ஒத்துழைப்பைப் பெற்று நடவடிக்கைகள் எடுத்தான்.

மூன்றே மாதம்தான்.

பூசணிக்காயாக இருந்த கஞ்சாக் கடத்தலின் அளவு கடுகாகச் சிறுத்துவிட்டது.

மைக்கேல் மாரெட்டியின் இல்லத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

ஜெனிபரும் மாரெட்டியும் அவன் மாமனாரான பெரியவரும் இருந்தார்கள் குடும்ப வழக்கறிஞரான கால்ஃபாக்ஸும் வந்திருந்தார்.

பெரியவருக்கு கொஞ்ச நாள் முன்பு பக்கவாதம் ஏற்பட்டிருந்தது. ஒரே ராத்திரியில் எலும்பும் தோலுமாய் ஆகிவிட்டார். பேச முயன்றால் வாயின் ஓரத்தில் எச்சில் வழிந்தது. எதற்கும் சக்தியில்லாத நடைபிணமாகி விட்டதால் இப்போதெல்லாம் மருமகன் மாரெட்டியைத் தான் எதற்கும் சார்ந்திருந்தார். அவனுடைய தீர்ப்பு எதுவோ அதையே ஆமோதித்தார். ஜெனிபரைக் கூடத் தங்களில் ஒருவராக வேண்டா வெறுப்பாய் ஏற்றுக் கொண்டார்.

ஆனால் வக்கீல் கால்ஃபாக்ஸ் அவளை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லை. மாரெட்டியின் மீது அவருக்குக் குரோதம் வளர்ந்துகொண்டே இருந்தது. இன்றில்லாவிட்டால் நாளை, மாரெட்டி பயங்கரக் கும்பலின் வக்கீல் பதவியிலிருந்து தன்னை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் ஜெனிபரை நியமிக்கப் போகிறான் என்று அவருக்குத்

தெரியும். 'ஜெனிபர் கெட்டிக்கார வக்கீல்தான். உண்மை. ஆனால் நமது ஸ்தாபனத்தின் அருமை பெருமைகளைப் பற்றி, பாரம்பரியத்தைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?' என்று எண்ணிக் கொண்டார். ஓர் அன்னிய நபரை அதிலும் ஒரு பெண்ணை நமக்குள் புகுத்தி, வாழ்வா சாவா என்று நமது ரகசியங்களை அவளிடம் ஒப்படைக்க எப்படித்தான் மாரெட்டிக்கு மனம் வருகிறதோ! இதை இப்படியே விட்டு விடக்கூடாது என்று அவர் தீர்மான மாகஇருந்தார். கும்பலின் தலைவர்களிடமும் தொண்டர் களிடமும் தனித் தனியே பேசி, அவர்களைத் தன் பக்கம் இழுக்க முயன்றார். ஆனால் அவர்களில் யாரும் மாரெட்டியை எதிர்த்து நிற்கத் தயாராயில்லை. 'மாரெட்டிக்கு அந்தப் பெண்ணிடம் நம்பிக்கை இருக்கிறது அப்படியானால் நாமும் அந்தப் பெண்ணை நம்ப வேண்டியதுதான்' என்று அவர்கள் கருதினார்கள்.

'பொறுமையாயிருப்போம், காலம் வரும்' என்று காத்திருந்தார் அவர்.எப்படியும் ஜெனிபரை விரட்டி யடிக்க ஒரு வழி தோன்றாமல் போகாது.

அவருடைய மனம் ஜெனிபருக்கும் புரிந்தது.கும்பலில் அவருக்கு இருந்த இடத்தைப் பறித்து அவளுக்குக் கொடுத்திருக்கிறான் மாரெட்டி. இதை அவர் ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை. பயங்கரக் கும்பலுக்கு விசுவாசமானவர் அவர். அதனால் மாரெட்டிக்குக் கட்டுப் பட்டிருக்கிறார். ஜெனிபரைப் பொறுத்துக் கொண்டி ருக்கிறார். ஆனால் அவருடைய வெறுப்பு ஒரு நாள் அளவுமீறிப் போகும்போது...

மாரெட்டி ஜெனிபரின் பக்கம் திரும்பிக் கேட்டான். "ஜெனிபர், வார்னர் என்கிறவனைப் பற்றி நீ கேள்விப் பட்டிருக்கிறாயா?"

38

ஜெனிபருக்கு ஒரு நிமிஷம் இருதயம் உறைந்தே போயிற்று. எதற்காகக் கேட்கிறான்? இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது? நிலைகுலைந்து போனாள் அவள். மூச்சு விடுவதுகூடப் பெரும் பிரயத்தனமாக இருந்தது.

மாரெட்டி அவளுடைய பதிலுக்காகக் காத்திருந்தபடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜெனிபர் சமாளித்துக் கொண்டு, "பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறாரே, அந்த வார்னரையா கேட்கிறீர்கள்?" என்றாள்.

"ஆமாம், ஆமாம். அந்தத் தேவடியாள் பையனை மண்டையில் ஒரு தட்டுத் தட்ட வேண்டியிருக்கிறது."

ரத்தமெல்லாம் வடிந்து ஜெனிபரின் முகம் வெளுத்துப் போயிற்று. "ஏன்? என்ன செய்தார் அந்த மனிதர்?"

"நம்முடைய தொழிலுக்குக் குந்தகம் பண்ணிக் கொண்டிருக்கிறான். அவனால்தான் மெக்ஸிகோவில் நம் நண்பர்கள் நடத்திக் கொண்டிருந்த கஞ்சா தொழிற் சாலைகளை மெக்ஸிகோ அரசாங்கம் மூடிக் கொண்டிருக்கிறது. எல்லாம் குட்டிச்சுவர். அந்தச் சோமாறி நம் வழிக்கு வராமல் பண்ண வேண்டும். அவனைத் தொலைத்துக் கட்டியாகணும்."

ஜெனிபரின் உள்ளம் தலைதெறிக்கப் படபடத்துக் கொண்டிருந்தது. மாரெட்டியிடம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவளாய், வார்த்தைகளை மனத்துக்குள் உருவாக்கிக் கொண்டு பிறகு பேசினாள்: "வார்னரிடம் ஏதாவது வம்பு வைத்துக் கொண்டால் உங்களுக்குத்தான் கெடுதல்."

"அதற்காக அவனைச் சும்மா விட்டுவிடுவதா?"

"இதோ பாருங்கள். அவர் ஒருவரைத் தீர்த்து விட்டால் சரியாகிவிடுமா? அந்த இடத்துக்குப் பத்துப் பேர் வருவார்கள். அப்புறம் நூறு பேர் வருவார்கள். அத்தனை பத்திரிகைகளும் ஒன்று சேர்ந்து உங்களைக் குற்றம் சாட்டும். இப்போது சும்மா புலன் விசாரணைகள் மட்டும்தான் நடந்து கொண்டிருக்கிறது. அந்த ஆளுக்கு ஏதாவது தீங்கு செய்தால் இதைக் காட்டிலும் மோசமான விளைவுகள் ஏற்பட்டு விடும்."

மாரெட்டிக்குக் கோபம் வந்தது. "அவன் நம் வேலைகளைக் கெடுத்துக் கொண்டிருக்கிறான் என்று சொன்னேனே? உன் காதில் விழவில்லையா?"

ஜெனிபர் தன் குரலைத் தணித்துக் கொண்டாள். "கொஞ்சம் பகுத்தறிவை உபயோகித்து யோசனை பண்ணிப் பாருங்கள். இந்த மாதிரி எவ்வளவோ நடவடிக்கைகளை நாம் பார்த்திருக்கிறோம். இதெல்லாம் அதிக நாள் நீடிப்பதில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பிரசினையில் காச்மூச்சென்று கத்துவார்கள். பிறகு அந்தப் பிரசினையை விட்டுவிட்டு இன்னொரு பிரசினைக்குத் தாவிவிடுவார்கள் அவ்வளவுதான். கொஞ்ச நாளைக் கெல்லாம் மூடிய தொழிற்சாலைகள் ஒவ்வொன்றாகத் திரும்பத் திறக்கும். பிஸினஸ் பழையபடி நடக்க ஆரம்பிக்கும். யாரும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நீங்கள் நினைக்கிற மாதிரி அடிதடி வழியில் இறங்கினால் பிறகு அதற்கு ஒரு முடிவே இருக்காது."

குடும்ப வழக்கறிஞரான கால்ஃபாக்ஸ் குறுக்கிட்டார்: "அதெல்லாமில்லை... என் அபிப்பிராயம்..."

மாரெட்டி வள்ளென்று விழுந்தான் "உங்கள் அபிப்பிராயத்தை இப்போது யார் கேட்டார்கள்?"

கால்ஃபாக்ஸ் ஆடிப் போய்விட்டார் முகத்தில் பளீரென்று அறை விழுந்த மாதிரி துடித்து விட்டார். ஆனால் மாரெட்டி அதைப் பற்றிச் சிறிதும் கவலைப் படவில்லை.

மாரெட்டியின் மாமனாரைப் பரிதாபமாகப் பார்த்தார், கால்ஃபாக்ஸ். அவராவது தனக்காகப் பரிந்து பேச மாட்டாரா என்று. ஆனால் கிழவர் எப்போதோ தூங்கிப் போயிருந்தார்.

மாரெட்டி ஜெனிபரிடம், "சரி, இப்போதைக்கு வார்னரை விட்டுத் தொலைப்போம்," என்றான்.

அப்பாடா! ஜெனிபருக்கு இப்போதுதான் சுவாசம் தாராளமாய் வந்தது. "அப்படியானால் சரி. வேறொன்று மில்லையே?" என்று புறப்படத் தயாரானாள்.

"இரு, இரு. இன்னொரு விஷயம் இருக்கிறது." மாரெட்டி ஒரு கனமான தங்க லைட்டரால் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். "என் சினேகிதன் ஒருவன் மார்க்கோ என்று பெயர் - மிரட்டிக் கொள்ளையடித்தான் என்று அவன் மீது வழக்குப் போட்டுத் தண்டனை கொடுக்கப் போகிறார்கள்..."

அந்த வழக்கைப் பற்றிப் பத்திரிகைகளில் அவள் படித்திருந்தாள். இந்த மார்க்கோ ஒரு கைதேர்ந்த வில்லன் என்றும், வன்முறை வழக்குகளுக்காகப் பலமுறை சிறை சென்றவன் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

"நான் என்ன செய்ய வேண்டும்? அவனுக்காக அப்பீல் பண்ண வேண்டுமா?" என்று கேட்டாள்.

"இல்லை. அவனுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும் படி பண்ண வேண்டும்," என்றான் மாரெட்டி.

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

சிகரெட் லைட்டரை மேஜைமீது திரும்ப வைத்தான் அவன். அமைதியாகச் சொன்னான்: "மார்க்கோவை அவனுடைய சொந்த நாடான ஸிஸிலிக்கு நாடு கடத்திவிடலாமென்று அரசாங்க வக்கீல் டிசில்வா கேட்கப் போகிறாராம். எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அவனுக்கு ஸிஸிலியில் ஏராளமான எதிரிகள் இருக்கிறார்கள். அங்கே போனால் இருபத்துநாலு மணி நேரம் கூட உயிரோடு இருக்க மாட்டான். தீர்த்துக் கட்டி விடுவார்கள். அவனுக்கு மிகப் பாதுகாப்பான இடம் இந்த நாட்டிலேயே உள்ள ஸிங்ஸிங் சிறைதான். அதில் அவனை அடைத்து வைக்கட்டும். ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ கழித்து அவனை வெளியே கொண்டு வந்து விடலாம். அவனுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கிற மாதிரி நீ பண்ண வேண்டும். முடியுமா?"

ஜெனிபர் சிறிது தயங்கிவிட்டு "டிசில்வா லேசில் விட மாட்டாரே" என்றாள்.

கால்பாஃக்ஸ் சட்டென்று, "ஜெனிபர் வேண்டாம். வழக்கை வேறு வக்கீலிடம் ஒப்படைக்கலாம்" என்றார்.

மாரெட்டி கோபமாக, "வேறு வக்கீல் வைக்கலாம் என்றால் அது நானே சொல்லியிருப்பேனே?" என்று மறுபடியும் சீறிவிட்டு, ஜெனிபர் பக்கம் திரும்பி, "நீதான் இதை ஏற்று நடத்த வேண்டும்," என்றான்.

எல்லோரும் புறப்பட்டுப் போய் விட்டார்கள்

கால்ஃபாக்ஸ் தன் காரில் ஏறிக் கொண்டிருந்தார். மாரெட்டியும் அவனது உதவியாளும் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தார்கள்

உதவியாளனின் முதுகில் தட்டினான் மாரெட்டி, "அந்த ஆளை நீ தீர்த்துவிட வேண்டியதுதான்," என்றான்.

அவன் திடுக்கிட்டான் "யாரை, பாஸ்? கால் ஃபாக்ஸையா?"

"ஆமாம். அவனை இனிமேல் நம்பக்கூடாது,"

"சரி பாஸ். எப்படி செய்யட்டும்?"

"சீக்கிரமே செய்துவிட வேண்டியதுதான். எப்போது என்று பிறகு சொல்கிறேன்," என்றான் மாரெட்டி.

நீதிபதி அறையில் மார்க்கோவின் வழக்கைப் பற்றிய பேச்சு வார்த்தை ஆரம்பமாயிற்று.

Plea-bargain என்ற அமெரிக்க முறைப்படி, ஒரு கைதி தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டு தண்டனையைக் குறைத்துத் தரும்படி கேட்கலாம். நீதிபதி ஆலோசித்து அதுபற்றி முடிவு செய்வார்.

அந்த நீதிபதி ஜெனிபரிடம் மிகவும் அன்பு கொண்டிருந்தார் அடிக்கடி போனில் பேசுவார் விருந்துக்குக் கூப்பிடுவார். அதெல்லாம் ஒரு வருஷத்துக்கு முன்பு. ஜெனிபர் பயங்கரக் கும்பலின் வழக்குகளுக்கு ஆஜராகிறாள் என்பது தெரிந்த பிறகு அவளுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்டார்.

'ஹூம்! என்ன பண்ணுவது!' என்று எண்ணிக் கொண்டாள் ஜெனிபர். அவர் நல்ல மனிதர்தான். அவருடைய நட்பை இழந்தது வருத்தமாய்த் தான் இருக்கிறது. ஆனால் தொழில் என்று ஒன்றை ஏற்றுக் கொண்ட பிறகு இதையெல்லாம் பார்க்க முடியாது.

டிசில்வா வரும் வரையில் இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஒரு தர்மசங்கடமான மௌனம் அங்கே நிலவியது.

டிசில்வா வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார். "நீங்கள் என்னம்மா சொல்லவிரும்புகிறீர்கள்?" என்று நீதிபதி ஜெனிபரைக் கேட்டார்.

ஜெனிபர் ஒரு தந்திரம் வைத்திருந்தாள். டிசில்வாவின் பக்கம் திரும்பி, "மார்க்கோவுக்குச் சிறைத் தண்டனை

கொடுத்து ஸிங் ஸிங் சிறைக்கு அனுப்ப வேண்டுமென்று நாங்கள் கேட்கப் போவதாகச் சொன்னார்கள். அது வேண்டாமென்பதுதான் என் கோரிக்கை. அவன் இந்த ஊர்க்காரனே அல்ல. சட்ட விரோதமாகக் குடியேறி யிருக்கும் அயல் நாட்டவன். ஸிஸிலியிலிருந்து இங்கே வந்தவன் ஆகவே அவனை ஸிஸிலிக்கே திருப்பி யனுப்பிவிட வேண்டும். அதுதான் என் கோரிக்கை," என்றாள்

டிசில்வா திகைத்துப் போனார். மார்க்கோவை நாடு கடத்த வேண்டும் என்றுதான் அவர் கேட்பதாக இருந்தார். ஆனால் ஜெனிபர் அதையே கோருகிறாளே? அப்படி யானால் அதற்கு இடம் தரக் கூடாது. நம் திட்டத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான்..."

"அவனை நாடு கடத்த வேண்டும் என்று ஏன் கேட்கிறீர்கள்?" என்றார்.

"பல காரணங்கள் இருக்கிறது. முதலாவது அவன் இங்கே குற்றங்கள் செய்து கொண்டிருப்பதைத் தடுக்கலாம்..."

"ஸிங் ஸிங் சிறையில் இருந்தாலும் அப்படித்தானே?"

"மார்க்கோ வயதானவன், பாவம். லிஸிலி நாட்டில் அவனுக்குப் பல சினேகிதர்கள் இருக்கிறார்கள் தன் குடும்பத்தோடு சேர்ந்து இருப்பான். கடைசிக் காலத்தில் சந்தோஷமாக இருந்துவிட்டு, அமைதியாகக் கண்ணை மூடுவான்."

டிசில்வாவுக்குக் கோபத்தில் முகம் ஜிவுஜிவு வென்று ஆயிற்று. "நன்றாயிருக்கிறது நீங்கள் பேசுவது! கற்பழிப்பு, கொலை, கொள்ளை இப்படிப் பல அக்கிரமங்கள் பண்ணிய பக்கா கிரிமினல் இந்த மார்க்கோ! அவன் தன் ஊருக்குப் போய்க் குடும்பத்தோடு இருக்க வேண்டும், சந்தோஷமாகக் கண்ணை மூட வேண்டும் என்று அவனுக்காக நீங்கள் கண்ணீர் வடிக்கிறீர்கள்! பிரமாதம்தான் போங்கள்!"

"நீதி கேட்கும் உரிமை மார்க்கோவுக்கு..."

"அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது!" டிசில்வா மேஜையை ஓங்கிக் குத்தினார். "மிரட்டிப் பணம் பறித்தவன்! கொள்ளையடித்தவன்! அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?"

"ஸிஸிலிக்கு அவனை அனுப்பினால்...

"அந்தப் பேச்சே வேண்டாம்!" என்று அடித் தொண்டையில் கத்தினார் டிசில்வா. "அவன் குற்றங்கள் செய்ததெல்லாம் இந்த நாட்டில். அவன் தண்டனை அனுபவிக்க வேண்டியதும் இந்த நாட்டில்தான்!" நீதிபதியை நோக்கி, "யுவர் ஆனர், தங்களுடைய நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. மார்க்கோவுக்கு எந்தக் கருணையும் காட்ட அரசாங்கம் தயாராயில்லை. மார்க்கோவை ஸிங் ஸிங் சிறைக்கு அனுப்ப வேண்டு மென்பதுதான் என் கோரிக்கை."

நீதிபதி, "வேறு ஏதேனும் நீங்கள் சொல்ல வேண்டுமா?" என்று ஜெனிபரைக் கேட்டார்.

டிசில்வாவைப் பார்த்துக் கோபமாக முறைப்பது போல் பாசாங்கு செய்துவிட்டு, "இல்லை, யுவர் ஆனர்," என்றாள் ஜெனிபர்.

நீதிபதி எழுந்து கொண்டார் "என் தீர்ப்பை நாளைக்குச் சொல்கிறேன் நீங்கள் இருவரும் போகலாம்," என்றார்.

டிசில்வாவும் ஜெனிபரும் வெளியே வந்தார்கள்.

டிசில்வா ஜெனிபரைப் பார்த்து வெற்றிப் பெருமிதத்துடன் புன்னகை செய்தார். "வக்கீலம்மா, உங்களுடைய கைராசி குறைந்துகொண்டு வருகிறது," என்றார்.

ஜெனிபர் ஒரு பெருமூச்சு விட்டாள் "ஹூம்! எப்போதுமே ஜெயித்துக் கொண்டிருக்க முடியுமா?" என்றாள்.

டிசில்வா சென்றபின் டெலிபோன் கூண்டுக்குப் போனாள் மாரெட்டிக்குப் போன் செய்தாள். "நிம்மதியாயிருங்கள். உங்கள் விருப்பப்படியே மார்க்கோ ஸிங் ஸிங் சிறைக்குத் தான் போவான்," என்றாள்.

அதே போல் மறுநாள் நீதிபதி தீர்ப்புக் கொடுத்தார். அவள் இம்முறை தோற்றுவிட்டதாக டிசில்வா எண்ணி மகிழ்ந்தார். இம்முறையும் ஜெனிபர் வெற்றி பெற்றுவிட்டது அவருக்குத் தெரியாது.

ஜெனிபரின் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. காலம் மாறிக் கொண்டிருந்தது. வசந்தங்களும் மழையும், பனியும், பிறந்த நாள்களும், சோதனைகளும் வேதனைகளும் தாண்டிச் சென்றன. வழக்குகளில் வெற்றிகளும் தோல்விகளும் மாறி மாறி வந்தன. மாரெட்டியுடன் இன்றைய யதார்த்தம். வார்னரைப் பற்றிய பழைய நினைவுகள்...

எல்லாவற்றிலும் மையமாகக் குழந்தை ஜோசப் இருந்தான். அவனை வைத்துத்தான் எதையும் ஜெனிபர் கணக்கிட்டாள்.

என்ன வேகமாய்க் காலம் ஓடுகிறது!

இப்போது அவனுக்கு ஏழு வயது.

சித்திரக் கதைகளும் கலர் பென்சில்களும் வைத்துக் கொண்டிருந்தவன், இப்போது பொம்மை விமானங்களிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் மனத்தைச் செலுத்தலானான். இப்போது அவன் உயரமாய் வளர்ந்திருந்தான். எதிலும் தன் தந்தையையே கொண்டிருந்தான் உடல் தோற்றத்தில் மட்டுமல்ல. உள்ளத்தாலும்தான்

மென்மை யான இருதயம்; மரியாதை; நியாயமாக நடந்து கொள்ள வேண்டுமென்ற உணர்வு.

வார்னரைப் போலவே விளையாட்டுக்களில் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தான். சனி ஞாயிறுகளில் டிவியில் விளையாட்டு நிகழ்ச்சிகளை விடாமல் பார்ப்பான் கால்பந்து, பேஸ்பால், கூடைப்பந்து எது நடந்தாலும் சரி.

முதலிலெல்லாம் அவன் பாட்டுக்குப் பார்த்துக் கொண்டிருக்கட்டும் என்று டெலிவிஷனின் முன்னால் அவனை விட்டுவிட்டு போய் விடுவாள் ஜெனிபர். ஆனால் அந்த நிகழ்ச்சிகளைப் பற்றி அவன் பேசும்போது தலையும் புரியாமல் காலும் புரியாமல் அவள் விழிக்க வேண்டி யிருந்தது. அதற்காக அவனுடன் சேர்ந்து உட்கார்ந்து தானும் டி.வி. பார்க்கத் தொடங்கினாள்.

சொந்தமாக ஒரு பாய்மரப் படகு வாங்கியிருந்தாள் ஜெனிபர். வாரக் கடைசிகளில் அவளும் ஜோசப்பும் படகுச் சவாரி செய்வார்கள். அவன் படகை ஓட்டும்போது அவன் முகத்தையே கவனித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள் அவள்.

அந்த முகத்தில் தோன்றும் ஒரு பிரகாசமான புன்னகை, அவளுக்கு வார்னரை ஞாபகப்படுத்தும்.

வார்னருடன் வாழ முடியாமல் போன வாழ்க்கையைத் தான் ஜோசப்புடன் வாழ்கிறோமோ என்று அவள் அடிக்கடி எண்ணிக்கொள்வதுண்டு.

எப்படியானால் என்ன? குழந்தை ஜோசப் சந்தோஷப் படுகிறான். அவளுடன் இருப்பதை நேசிக்கிறான் தந்தைக்குப் பர்த்தி அல்ல. இவன் இவனேதான்.

உலகத்தில் வேறெதுவும் எனக்கு வேண்டாம்! இந்தப் பாக்கியம் தான் எனக்குப் பெரிது! இதற்கு ஆபத்து வந்துவிடக் கூடாது! ஜெனிபரின் நெஞ்சு கடவுளை வேண்டிக் கொண்டது.

39

மாரெட்டியின் மாமனார் பயங்கரக் கும்பலின் தலைவராக விளங்கிய பெரியவர் - காலமாகி விட்டார். சவ ஊர்வலம் மிக ஆடம்பரமாக நடைபெற்றது. நாடெங்கிலு மிருந்து ஏராளமான குடும்ப நண்பர்கள் வந்திருந்தார்கள். மறைந்தவருக்கு மரியாதை செலுத்த மட்டுமல்ல புதிய தலைவரான மாரெட்டிக்குத் தங்கள் விசுவாசத்தையும் ஆதரவையும் தெரியப்படுத்தவும்தான்.

மாரெட்டியின் மனைவி ரோஸா மனமொடிந்து போயிருந்தாள் தந்தையிடம் அளவற்ற பிரியம் கொண்டவள் அவள். ஆனால் அதே சமயம், தலைமைப் பதவியைக் கணவன் அடைந்தது குறித்துப் பெருமையும் கொண்டாள்

நாளுக்கு நாள், விலை மதிக்க முடியாதவளாக, மதிப்பில் உயர்ந்து கொண்டிருந்தாள் ஜெனிபர் மாரெட்டிக்கு ஏதாவது ஒரு பிரசினை என்றால் உடனே ஜெனிபரைத்தான் கலந்தாலோசித்தான்.குடும்ப வக்கீலான கால்ஃபாக்ஸ் அனாவசியத் தொந்தரவாகத் தோன்றினார்.

அவரைப் பற்றி ஜெனிபர் பேச்செடுத்தால், "கவலைப்படாதே. அந்த ஆள் சீக்கிரமே ரிடையர் ஆகப் போகிறார்," என்பான் மாரெட்டி.

விடி காலை நேரம். டெலிபோன் மணி இனிமையாக மெல்ல அடித்தது. அதன் ஒலியைக் கேட்டவாறு ஒரு நிமிஷம் பேசாமலே படுத்திருந்தாள் ஜெனிபர் பிறகு அருகிலிருந்த டிஜிடல் கடியாரத்தைப் பார்த்தாள் மணி மூன்று.

யார் இந்த நேரத்தில் கூப்பிடுவது?

போனை எடுத்து, "ஹலோ," என்றாள்.

மாரெட்டிதான் கூப்பிட்டான். "நீ உடனே புறப்பட்டு வர முடியுமா?"

ஜெனிபர் நிமிர்ந்து உட்கார்ந்தாள் கண்ணைக் கசக்கித் தூக்கத்தைப் போக்கிக்கொண்டு, "ஏன்? என்ன ஆயிற்று?" என்றாள்.

"எட்டி என்று நம்ம ஆள் ஒருத்தன். துப்பாக்கியால் மிரட்டிக்கொள்ளையடித்தான் என்று அவனைப்போலீசில் பிடித்து விட்டார்கள், ஏற்கெனவே இரண்டு தடவை மாட்டிக் கொண்டவன் அவன். இந்தத் தடவை அவனை லேசில் விட மாட்டார்கள்."

"அவன் கொள்ளையடித்ததைக் கண்ணால் கண்ட சாட்சிகள் உண்டா?"

"ஆமாம். மூன்று பேர் இருக்கிறார்கள். மூன்று பேரும் அவனை மிக நன்றாய்ப் பார்த்திருக்கிறார்கள்."

"இப்போது அவன் எங்கே இருக்கிறான்?"

"பதினேழாவது எண் சிறையில்."

"இதோ புறப்படுகிறேன்," என்றாள் ஜெனிபர். உடையைச் சரிசெய்துகொண்டு சமையலறையை அடைந்து காப்பி போட்டுக் கொண்டாள். கொதிக்கக் கொதிக்க அதை உறிஞ்சிய வண்ணம் டைனிங் மேஜையடியில் உட்கார்ந்து, வெளியே கவிந்திருக்கும் இரவைப் பார்த்தபடி இருந்தாள்.

மூன்று சாட்சிகள்... மூன்று பேரும் அந்த எட்டியை மிக நன்றாய்ப் பார்த்திருக்கிறார்கள்...

டெலிபோனிடம் திரும்பி வந்தாள். ஒரு பத்திரிகை அலுவலகத்துக்கு டயல் செய்தாள். நகரச் செய்திகளை வெளியிடும் பிரிவைக் கூப்பிட்டாள். தான் இன்னார் என்று சொல்லாமல் பேசினாள். "உங்களுக்கு ஒரு தகவல். எட்டி என்று ஒருவனைப் போலீசில் பிடித்திருக்கிறார்கள்.

பதினேழாம் எண் சிறையில் இருக்கிறான். துப்பாக்கியால் மிரட்டிக் கொள்ளை அடித்ததாக அவன் மீது வழக்கு. வழக்கறிஞர் ஜெனிபர் அவனை வெளியே கொண்டு வரப் போகிறாள்." போனை வைத்து விட்டாள்.

பிறகு மேலும் இரண்டு பத்திரிகைக் காரியாலயங்களையும் ஒரு டெலிவிஷன் நிலையத்தையும் கூப்பிட்டு, இதே விஷயத்தை இதே போலச் சொன்னாள். பேசி முடித்ததும் கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டாள். நேரம் இருந்தது. சாவகாசமாய் இன்னொரு கப் காப்பி போட்டுக் குடித்தாள்.

அவள் உதட்டில் புன்னகை மலர்ந்திருந்தது.

புகைப்படக்காரர்களும் நிருபர்களும் பதினேழாம் எண் சிறைக்கு வந்து சேரக் கொஞ்ச நேரமாகும். அதற்கு அவகாசம் கொடுப்போம்...

உடை மாற்றிக் கொண்டாள்.

ஜோசப் படுத்திருக்கும் அறைக்குச் சென்றாள். விடி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஜோசப் தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய துருதுருப்பான உடம்பைப் போர்வை கன்னாபின்னா வென்று சுற்றிக் கொண்டிருந்தது.

போர்வையைச் சரியானபடி பிரித்துவிட்டாள். அவன் நெற்றியில் மெல்ல முத்தமிட்டாள். ஓசைப்படாமல் நுனிக் காலால் நடந்து வெளியேற முயன்றபோது -

"எங்கேம்மா போறே?"

மகனின் குரல் கேட்டுத் திரும்பினாள். "வேலைக்குப் போகிறேம்பா. நீ தூங்கு."

"மணி என்ன இப்போ?"

"நாலு."

ஜோசப் சிரித்தான். "உன்னோட ஆபீஸ் நேரம் ரொம்ப வேடிக்கைதான் அம்மா. ஒரு பொம்பளை இப்படியா வேலை செய்வாள்?"

அவள் அவனிடம் வந்து, "உன்னோட தூக்க நேரம் ரொம்ப வேடிக்கைதான். ஒரு ஆம்பிளை இப்படியா விடி காலையில் முழிச்சிட்டு இருப்பான்?"

"சாய்ந்தரம் நாம் ரெண்டு பேரும் சேர்ந்து ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சி பார்க்கணும் அம்மா."

"ஓ, கட்டாயம். இப்ப நல்லா தூங்கு."

"ஓகே. கேஸை நல்லா ஜெயிச்சுட்டு வா."

"தாங்க்ஸ்டா கண்ணா."

பதினேழாம் எண் சிறை வாசலை அடைந்தபோது ஒரு பத்திரிகை புகைப்படக்காரர் ஒண்டியாய் நின்றிருந்தார். ஜெனிபரைக் கண்டதும், "அட! அப்படியானால் உண்மை தானா! எட்டியின் கேஸை நீங்கள் எடுத்துக்கப் போகிறீர்களா!" என்றான்.

ஜெனிபர் கடுமையை வர வழைத்துக் கொண்டு, "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள்.

"ஒரு பட்சி சொல்லிற்று, வக்கீலம்மா!"

"அதெல்லாம் சும்மா கட்டுக்கதை. உங்கள் நேரத்தை வீணடித்துக் கொள்ளாதீர்கள். போட்டோ கீட்டோ எதுவும் எடுக்க வேண்டாம்."

உள்ளே சென்று எட்டியை ஜாமீனில் வெளிக்கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தாள். ஆனால் அதை எவ்வளவு முடியுமோ அவ்வளவு தாமதமாகவும் மெதுவாகவும் செய்தாள். காரணம், மற்றப் பத்திரிகை களிலிருந்தும் டெலிவிஷன் நிலையத்திலிருந்தும் புகைப் படக் காரர்கள் வந்து சேர அவகாசம் கொடுப்பதற்குத் தான்.

போலீஸ் அதிகாரி அவளிடம், "வெளியே டெலி விஷன் நிருபர்களும் புகைப்படக்காரர்களும் நின்று கொண்டிருக்கிறார்கள். பின்பக்கம் வழி இருக்கிறது. நீங்கள் வேண்டுமானால் அப்படிப் போய் விடுகிறீர்களா?" என்று கேட்டார்.

"தேவையில்லை. அவர்களை நான் சமாளித்துக் கொள்கிறேன்."

எட்டியை அழைத்துக் கொண்டு வாசற்புறமாகவே வந்தாள் புகைப்படக்காரர்களும் நிருபர்களும் காத்திருந்தார்கள்.

"இதோ பாருங்கள், போட்டோ எதுவும் எடுக்க வேண்டாம். ப்ளீஸ்," என்று கூறிவிட்டு ஜெனிபர், எட்டியை விட்டுச் சற்று விலகினாற் போல் சென்றாள். புகைப் படக் காரர்களும் டெலிவிஷன் நிருபரும் நன்றாகவே அவளைப் படம் எடுத்தார்கள்.

ஒரு நிருபர், "ஏனம்மா, நீங்கள் ஏற்று நடத்துகிற அளவுக்கு இந்த வழக்கு அவ்வளவு பெரிசா?" என்று கேட்டார்.

"நாளைக்குத் தெரியும்," என்றாள் ஜெனிபர். "மறுபடியும் சொல்கிறேன். போட்டோ எடுத்தது பரவா யில்லை. ஆனால் அதைப் பிரசுரம் பண்ணாதீர்கள். அவ்வளவு தான் சொல்வேன்."

ஒரு நிருபருக்குக் கோபம் வந்தது. "என்ன ஜெனிபரம்மா, பத்திரிகை சுதந்திரம் என்று ஒன்று இருக்கிறதே? நீங்கள் கேள்விப்பட்ட தில்லையா?" என்றார்.

ஜெனிபர் பதிலேதும் சொல்லவில்லை. தனக்குள் சிரித்துக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

அன்று பகல் மாரெட்டி அவளைப் போனில் கூப்பிட்டான். அவன் குரலில் கோபம் மிகுந்திருந்தது. "ஜெனிபர், பத்திரிகைகளைப் பார்த்தாயா?"

"இல்லையே? ஏன்?"

"ஏனென்றா கேட்கிறாய்? எட்டியைப் பற்றிய செய்தியும் புகைப்படமும் எல்லாப் பத்திரிகைகளிலும் முதல் பக்கத்தில் வெளிவந்திருக்கிறது. டெலிவிஷனிலும் எட்டியின் படத்தோடு செய்தி சொன்னார்கள். இப்படியா விஷயத்தை டமாரம் அடிக்கச் சொன்னேன் உன்னிடம்?"

"நீங்கள் சொல்லவில்லை. இது என் சொந்த ஐடியா," என்றாள் ஜெனிபர் அமைதியாக.

"என்னது! எதற்காக? என்ன லாபம் அதில்?"

"லாபம்தான் கொள்ளையின் போது எட்டியைக் கண்ணால் கண்ட மூன்று சாட்சிகள் இருப்பதாகச் சொன்னீர்கள் இல்லையா?"

"ஆமாம்?"

"அந்த மூன்று பேரும், கோர்ட்டில் கொள்ளையடித்தவன் என்று எட்டியை அடையாளம் காட்டுவார்கள். உடனே நான் மடக்கி விடுவேன் பத்திரிகைகளிலும் டெலிவிஷனிலும் எட்டியின் படம் எக்கச்சக்கமாய் வெளிவந்திருந்ததால், அதைப் பார்த்து விட்டுத்தான் அடையாளம் காட்டுகிறார்கள் என்று சொல்வேன். அதை மறுப்பதற்கு ரொம்பத் திண்டாடிப் போவார்கள்! மூன்று முக்கியமான சாட்சியும் பணால்!"

வெகுநேரம் மௌனமாயிருந்தான் மாரெட்டி. பின்னர், "நான் ஒரு முதல் நம்பர் மடையன்!" என்றான்.

ஜெனிபர் குபுக்கென்று சிரித்து விட்டாள்.

அந்தச் சிரிப்பு, கொஞ்ச நேரத்துக்கெல்லாம் துயரமாக மாற நேரிட்டது.

துப்பறியும் நிபுணர் கென்னெத் உள்ளே வந்தார். அவர் முகத்தில் எத்தனை பதைப்பு!

"ஜெனிபர், ஏன் நீ என்னிடம் சொல்லவில்லை?" என்றார் கோபமாக.

"எதைச் சொல்லவில்லை?"

"உனக்கும் மாரெட்டிக்கும் உள்ள தொடர்பைப் பற்றி?"

'அது உங்களுக்குச் சம்பந்த மில்லாத விஷயம்' என்ற பதில் நாக்கு நுனிவரை வந்து விட்டது. ஜெனிபர் தன்னை அடக்கிக் கொண்டாள். கென்னெத் அவளுடைய நண்பர். அவள் விஷயங்களில் அவருக்கு அக்கறை உண்டு.

பழைய நிகழ்ச்சிகள் அடுக்கடுக்காய் அவள் நினைவில் எழுந்தன.

கென்னெத்தின் அந்தச் சின்னஞ்சிறு அலுவலகம்... அதை அவள் பங்கு போட்டுக் கொண்டது... அவர் அவளுக்குச் செய்த உதவிகள்... 'என் சினேகிதர் ஒரு வக்கீல். அவருக்காக சம்மன்களை சாதரா செய்ய வேண்டுமாம். என் உயிரை எடுக்கிறார். எனக்கு டயம் இல்லை. ஒவ்வொரு சம்மனுக்கும் பன்னிரண்டரை டாலர் தருவார். போக வரச் செலவு தனியாய்க் கொடுப்பார். நீ கொஞ்சம் எனக்கு உதவி செய்ய முடியுமா?' என்று கென்னெத் சொன்னது, எல்லாம் இப்போது போல் தான் இருக்கிறது. இவரிடம் போய் உங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயம் என்று சொல்ல முடியாது.

"கென்னெத், இந்த விஷயத்தை நாம் பேசாம லிருப்பதே நல்லது என்று நினைக்கிறேன்," என்றாள்.

கோபம் கொப்புளித்தது அவர் குரலில்! "நாம் பேசாமலிருந்து விட்டால் சரியாய்ப் போச்சா? ஊரில் அத்தனை பேரும் இதைத்தான் பேசுகிறார்கள். நீ... நீ... மாரெட்டியின் வைப்பாட்டி என்று பேசுகிறார்கள். சே!" அவர் முகம் சிவந்து விட்டது, அதைச் சொல்கையில்.

"என் சொந்த வாழ்க்கையில் -

"அந்த மாரெட்டி ஒரு சாக்கடைப் பேர்வழி, அந்தச் சாக்கடையை இந்தப் புனிதமான அலுவலகத்துக்குள் கொண்டு வந்து விட்டாயே! அவனுக்காகவும் அவனுடைய கொலைகார ரவுடிகளுக்காகவும் நாங்கள் வேலை செய்கிற மாதிரி பண்ணி விட்டாயே!"

"நிறுத்துங்கள்!"

"ஆமாம். நிறுத்தத்தான் போகிறேன். அதைச் சொல்லத்தான் இங்கே வந்தேன். இங்கே வேலை செய்வதை நிறுத்திக் கொள்கிறேன். போய் வருகிறேன்."

என்ன அதிர்ச்சி! அதை ஜெனிபர் எதிர் பார்க்க வில்லை. "நீங்கள் போகக் கூடாது. மாரெட்டியைப் பற்றி நீங்கள் தப்பாக நினைத்திருக்கிறீர்கள். அவரைச் சந்தித்தால் உங்களுக்கே தெரியும்-"

அந்த வாக்கியத்தைச் சொன்னவுடனேயே அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது என்பதை அவள் உணர்ந்தாள்.

அவர் முகத்தில் கோபம் மறைந்து எல்லையற்ற வருத்தம் கப்பிக் கொண்டது. "ஓ, அவனைச் சந்தித்துப் பழகும் அளவுக்கு வந்தாகிவிட்டதா? அவன் அந்த அளவுக்கு உன்னை மயக்கி விட்டானா? நல்லது, அப்படியே இருக்கட்டும். ஆனால் உன்னை நான் பழைய ஜெனிபராகவே ஞாபகம் வைத்துக் கொள்வேன். கள்ளங்க கபடமில்லாத, தூய்மையான சின்னப் பெண்ணாக இருந்தாளே ஒரு ஜெனிபர், அவள் எப்போதும் என் ஞாபகத்தில் இருப்பாள். வருகிறேன், ஜோசப்பிடம் நான் சொல்லிக் கொண்டேனென்று சொல்லு."

கென்னெத் போய் விட்டார்.

தன் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு வருவதை ஜெனிபர் உணர்ந்தாள் மூச்சுக்கூட விட முடியாதபடி

தொண்டையை இறுக்கி அடைத்துக் கொண்டது. மேஜையில் தலையைக் கவிழ்த்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். தனக்கு விழுந்த அடியை மறக்க முயன்றாள்.

கண்ணைத் திறந்தபோது இரவு சூழ்ந்திருந்தது. அறையெங்கும் இருட்டு. வெளியிலிருந்து வந்த நகரத்தின் விளக்குகள், ஒரு பிசாசுத்தனமான சிவப்பு வெளிச்சத்தை அறையில் பரவவிட்டிருந்தது. அவள் எழுந்து ஜன்ன லண்டை போய் நின்றாள். வெகு கீழே தெரியும் தெருக் களைப் பார்த்தாள்.

நகரம் பயங்கரக் காடாகத் தெரிந்தது. நெருங்கி வரும் ஆபத்துக்களை விரட்டுவதற்காகக் கூடாரத்துக்கு வெளியே மூட்டப்படும் தீயைப் போல, ஆங்காங்கே விளக்குகள் எரிந்தன.

'ஆம். இது காடுதான். மாரெட்டியின் காடு. இதிலே நாம் சிக்கிக் கொண்டு விட்டோம். வெளியே வர வழியேயில்லை' என்று எண்ணிக் கொண்டாள்.

40

கூட்சியின் தலைமைக் காரியாலயத்தில் எக்கச் சக்கமான கூட்டம். ஏகப்பட்ட கூச்சல், சந்தடி.

ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட மூன்று பேர் விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் கட்சி ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்தது-

வார்னரைத்தான்.

ஆளும் கட்சித் தலைவர் - இப்போது ஜனாதிபதியாக இருந்தவர்-மக்களிடையே மதிப்பிழந்து விட்டார். பைசா

பிரயோசனமில்லாதவர் என்று எல்லோராலும் நினைக்கப் பட்டவர். ஆகவே வார்னருக்கு வெற்றி நிச்சயம் என்று அனைவரும் நம்பினார்கள்.

நியூயார்க்கில் பெரிய ஓட்டலொன்றில் கட்சியின் முக்கிய புள்ளிகள் கூடி, தேர்தலுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றித் திட்டமிட்டார்கள். பிரசாரப் பிரிவின் தலைவராக இருந்த மனிதர் அட்டகாசமாகப் பேசினார். அவரிடம் வார்னருக்கு ஒரே எரிச்சல்.

"இங்கே வேலை செய்வதில் எனக்கு எத்தனை சந்தோஷம் தெரியுமா? நீங்கள் நான் பணி செய்யும் மூன்றாவது ஜனாதிபதியாக்கும்!" என்றார் அவர்.

"ஓகோ," என்றான் வார்னர், சும்மா மரியாதைக்காக.

கையைக் காலை ஆட்டிக் கொண்டு ஆர்ப் பாட்டமாகப் பேசினார் அவர். "இதோ பாருங்கள் அமெரிக்காவின் பிரசினைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள்தான் ஒரே ஆள் என்ற எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். டெலிவிஷன் பேட்டி, பொதுக் கூட்டங்கள் அது இது என்று பிய்த்து வாங்க வேண்டும். புரிகிறதா, மிஸ்டர் ஜனாதிபதி?"

"தயவு பண்ணி என்னை ஜனாதிபதி என்று கூப்பிடாம லிருக்கிறீர்களா?" என்றான் வார்னர்.

அவர் சிரித்தார் "ஸாரி, நாக்கில் அப்படி வந்துவிட்டது. அதனால் என்ன? எனக்கென்னவோ இப்போதே நீங்கள் வெள்ளை மாளிகையில் குடியேறி விட்ட மாதிரிதான் இருக்கிறது. ஜனாதிபதி பதவிக்கு நீங்கள்தான் தகுந்த நபர் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. அதனால் தான் நான் இங்கே வேலை செய்ய வந்திருக் கிறேன் மற்றப்படி பணம் காசுக்காக நான் வரவில்லை. நான் வசதியானவன்."

'நான் வசதியானவன்-பணம் காசுக்காக வேலை செய்யவில்லை' என்று சொல்லிக் கொள்கிறவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வார்னர் எண்ணிக் கொண்டான்.

அந்த மனிதர் தொடர்ந்து, "ஜனாதிபதி பதவிக்கு நீங்கள்தான் சரியான ஆள் என்று எங்களுக்குத் தெரியும். அது மக்களுக்கும் தெரிய வேண்டும். அதற்காக மக்களைப் பல வகைகளாகப் பிரித்து வைத்திருக்கிறோம். ஒவ்வொரு பிரிவிடமும் நீங்கள் போய்ப் பேச வேண்டும்." என்று கூறி விட்டு, வார்னரின் முகத்தினருகே குனிந்து, "உங்கள் மனைவி நமக்குக் கிடைத்திருக்கிற பெரிய அதிர்ஷ்டம். பெண்கள் பத்திரிகைகள் அவரைப் பற்றிக் கட்டுரைகள் வெளியிடப் போட்டி போடும். உங்கள் குடும்ப வாழ்க்கையைப் பற்றி வெளியிடத் துடியாய்த் துடிக்கும்...."

வார்னரின் எரிச்சல் நிமிடத்துக்கு நிமிடம் அதிகமாகிக் கொண்டிருந்தது. "ஓகோ, அப்படியா?" என்றான்.

"நீங்கள் ஒரு பண்டம், மிஸ்டர் வார்னர். வியாபாரப் பண்டம். எல்லாப் பண்டங்களையும் மக்களிடம் விற்பனை செய்கிற மாதிரி, உங்களையும் விற்பனை செய்யப் போகிறோம்." என்றார் அவர்.

எல்லோரும் போன பின்னர் கட்சியின் பெரும் புள்ளியிடம் வார்னர் முணு முணுத்தான். "என்ன அந்த ஆள், என்னை ஒரு பண்டம் என்கிறார்?"

அவர் ஆறுதலாகச் சொன்னர்: "அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும். மனிதர் காரியத்தைச் சாதித்துக் கொடுப்பார். அதுதான் முக்கியம். இதற்கு முன் இரண்டு ஜனாதிபதிகளுக்காக வேலை செய்து வெற்றி தேடித் தந்தவர் அந்த ஆள். ஜனங்களின் மனத்தை அறிந்தவர். அவர் சொல்கிற மாதிரி நீ ஒரு

வியாபாரப் பண்டம்தான். மக்களிடம் உன்னை விற்றாக வேண்டும்."

"எனக்கு வெறுப்பாயிருக்கிறேதே?" என்றான் வார்னர்.

"வெறுப்பாயிருந்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டியது தான்," என்றார் அவர் அவன் தோளில் கை போட்டபடி. "உன்னுடைய லட்சியம் என்ன? ஜனாதிபதி ஆவது, இல்லையா? அதை அடைவது ஒன்று தான் உனக்குக் குறியாக இருக்க வேண்டும். அந்த லட்சியத்தை நீ அடைவதற்கு நாங்கள் அவ்வளவு பேரும் பாடுபடுகிறோம். ஆனால் அதற்கு நீயும் ஒத்துழைக்க வேண்டும்."

"அந்த ஆளை எனக்குப் பிடிக்கவில்லையே?"

"ஆனால் அவரைப் போல் ஒருத்தர் கிடைப்பது கஷ்டம். சரி. இனிமேல் அவரை நானே கவனித்துக் கொள்கிறேன். உன் பக்கம் அதிகம் வராமல் பார்த்துக் கொள்கிறேன்."

"ரொம்ப நன்றி," என்றான் வார்னர்.

அன்று முதல் வார்னருக்கான பிரசாரம் தூள் பறக்கலாயிற்று. டெலிவிஷனில் வார்னர்; ரேடியோவில் வார்னர் பொதுக் கூட்டங்களில் வார்னர் நோக்கு மிடமெல்லாம் அவனுடைய பிரம்மாண்டமான வண்ணப் போஸ்டர்கள், கட் அவுட்கள்.

அமெரிக்க வழக்கறிஞர் சங்கத்தின் வருடாந்தர மாநாடு மெக்ஸிகோ நாட்டில், அகாபுல்கோ என்ற இடத்தில் நடப்பதாக இருந்தது. ஜெனிபருக்கு அழைப்பு வந்திருந்தது.

அவளுக்குக் கைமேல் அரை டஜன் முக்கியமான வழக்குகள் இருந்தன. ஆகவே இதற்குப் போக

வேண்டாமென்றுதான் முதலில் நினைத்தாள். ஆனால் ஜோசப்புக்குப் பள்ளிக்கூட விடுமுறையாக இருந்தது. வெளியூருக்குப் போவதென்றால் அவன் ரொம்பச் சந்தோஷப்படுவான்.

மூன்றுடிக்கெட்டுகள் வாங்கச் சொன்னாள் ஜெனிபர். அவள், ஜோசப், வேலைக்காரி.

அன்றிரவு சாப்பிடும்போது, "அகாபுல்கோவுக்குப் போகப் போகிறோம். உனக்கு இஷ்டம்தானே?" என்றாள்.

"அகாபுல்கோவா? மெக்ஸிகோவில் இருக்கிறது. மேற்குக் கடற்கரையில். இல்லை?"

"கரெக்ட்."

"அங்கே பீச்சில் டாப்லெஸ் நிறையப் பார்க்கலாம். இல்லை?"

ஜெனிபருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஜோசப்!"

"ஏம்மா, நான் என்ன தப்பாய்ச் சொல்லிவிட்டேன்? அங்கே அப்படித்தான் இருப்பார்களென்று எனக்குத் தெரியும். நிர்வாணம் என்பது இயற்கையான விஷயம் தானே?" என்றான் ஜோசப்.

"ஆமாம், ஆமாம்," என்றாள் ஜெனிபர். அவனுடைய வயதுக்கு மீறின பேச்சைக் கண்டு அவளுக்கு அதிசயமாயிருந்தது.

"கடலுக்குள் போய் நாம் மீன் பிடிக்கலாம், இல்லையாம்மா?"

"ஓ, போகலாம். ஆனால் ரொம்ப தூரம் போனால் ரொம்பப் பெரிய மீன் இருக்குமே?"

"இருக்கட்டுமே அப்பத்தானே ஜோர்?" என்றான்.

வார்னரே பேசுகிற மாதிரி இருந்தது ஜெனிபருக்கு.

"இன்னும் என்னென்னம்மா அங்கே செய்யலாம்?"

"குதிரைச் சவாரி செய்யலாம் ஊர் சுற்றிப் பார்க்கலாம்..."

"போம்மா. ஊர் சுற்றிப் பார்க்கிறதாய்ச் சொல்லிப் பழைய சர்ச்சுக்கெல்லாம் போகக் கூடாது. ஒரு சர்ச் போலவேதான் எல்லாச் சர்ச்சும் இருக்கும்."

இதே போல, இதே வாக்கியத்தை வார்னரும் ஒரு முறை சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது.

அகாபுல்கோவில் அவர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்த பங்களா அமர்க்களமாக இருந்தது. ஜெனிபரின் கட்சிக்காரர் ஒருவர் அதை அமர்த்தி இருந்தார். நீச்சல் குளத்துடன் இருந்தது அந்தப் பங்களா.

போய்ச் சேர்ந்து பெட்டி படுக்கைகளைக் கீழே வைத்தவுடனே ஜோசப், "வாம்மா, வெளியே போகலாம். இங்கிலீஷ் பேசறவங்களைப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சு. இந்த ஊரில் என்ன மொழி பேசறாங்க என்று கேட்கணும் போலிருக்கிறது," என்றான்.

ஆனால் கடை கண்ணிக்குப் போனதுமே அவனுக்குப் பெருத்த ஏமாற்றம். எல்லாரும் இங்கிலீஷ்தான் பேசினார்கள். ஊரில் எங்கு பார்த்தாலும் அமெரிக்க டூரிஸ்ட்கள் நிரம்பியிருந்ததே காரணம்.

கடற்கரை ஓரமாகக் குதிரை வண்டியில் சவாரி செய்தார்கள். ஜோசப்புக்கு ஒரே குஷி. அந்த ஊர் உணவும் அவனுக்குப் பிடித்திருந்தது.

ஜய் அலாய் என்ற விளையாட்டுப் போட்டிகளைப் பற்றி ஊர் முழுக்க விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

"போய்ப் பார்க்கலாமா?" என்று ஜெனிபர் கேட்டாள்

"டிக்கெட் விலை அதிகம் என்றால் வேண்டாம்," என்றான்.

ஜெனிபருக்குச் சிரிப்பு வந்தது. "எப்படியோ சமாளிச் சுக்கலாம், வா," என்றாள்.

அதன்பின் இன்னும் பல இடங்களுக்குச் சென்று வேடிக்கை பார்த்தார்கள்.

"போதும்டா கண்ணா. உனக்குக் களைப்பா இருக்குமே? ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டாமா?" என்றாள் ஜெனிபர்.

"சரிம்மா உனக்குக் களைப்பாயிருந்தால் போகலாம். உனக்கு வயசாயிட்டுது என்பது எனக்கு மறந்தே போயிடுது."

ஜெனிபருக்கு ரோஷமாயிருந்தது. "என் வயசைப் பற்றிக் கவலைப்படாதே," என்று கூறியவள், அவனுடன் மேலும் வெகு நேரம் சுற்றினாள்

கடலில் டைவ் அடிக்கும் வேடிக்கைகளைப் பார்க்க இருவரும் சென்றார்கள். உயரமான குன்றுகளின் மீதிருந்து, நூற்றைம்பது அடிக்குக் கீழேயுள்ள கடலில் அந்த வீரர்கள் குதித்தார்கள். கையில் தீப்பந்தங்களை ஏற்றி வைத்துக் கொண்டு, பெரும் அலைகள் கரையைத் தொடும் நேரம் பார்த்துக் குதித்தார்கள். மயிரிழை தப்பினாலும் பாறைகளில் தலை மோதி மரணம்தான்.

அதற்கு மறுநாள் காலை கடற்கரைக்குச் சென்றார்கள், ஜெனிபரும் ஜோசப்பும் வேலைக்காரியும். கடலில் கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு விசைப் படகுகளும். பாய்மரப் படகுகளும் நிறைந்திருந்தன.

நீர்ச் சறுக்கு விளையாடிக் கொண்டிருந்தார்கள் ஏராளமான பேர்.

"நாமும் விளையாடலாமா அம்மா?" என்றான். ஜோசப்.

"விசைப் படகுகள் படு வேகமாய்ப் பறக்கும். உனக்குப் பயமாயிருக்காதா?"

ஜோசப் அதற்குப் பதில் சொல்லாமல் நீரைக் கீறிக் கொண்டு ஓடும் நபர்களையே பார்த்தவாறிருந்தான். பிறகு மெல்லிய குரலில், "அந்த ஆள் என்ன சொன்னான் தெரியுமாம்மா? 'உன்னை ஏசுநாதரின் வீட்டுக்கு அனுப்பப் போகிறேன்' என்றான். சொல்லிட்டு என் கையில் ஒரு ஆணியை அடித்தான்," என்றான்.

ஜெனிபருக்கு மூச்சு நின்றது.

தான் அனுபவித்த அந்தப் பயங்கரச் சித்திரவதையைப் பற்றி அவன் பேசுவது இதுதான் முதல் தடவை.

மண்டியிட்டு மகனை அணைத்துக் கொண்டாள் அவள். "ஜோசப், இப்ப எதுக்குத் திடீரென்று அதைப் பற்றிப் பேச்சு?"

அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். "ஏன் ஞாபகம் வந்ததுன்னு எனக்கே தெரியலை, அம்மா. ஏசுநாதர் தண்ணீர் மேல் நடந்தாரில்லையா? இவங்க தண்ணீர் மேலே நடக்கிறதைப் பார்த்து ஒரு வேளை அந்த ஞாபகம் வந்ததோ என்னவோ," என்றவன் தாயின் முகத்தை நோக்கினான் அதில் படர்ந்திருந்த வேதனையை உணர்ந்தான். "ஸாரிம்மா, அதைப் பத்தி நான் இனிமேல் பேச மாட்டேன்," என்றான்.

குழந்தையைத் தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்துக் கொண்டாள் ஜெனிபர். "பரவாயில்லேடா, கண்ணா நீர்ச்சறுக்கு விளையாடணும் என்று சொன்னாயே? சாப்பிட்டு விட்டுப் போகலாம்."

ஓட்டலில் சாப்பாடு பிரமாதமாக இருந்தது. ஜோசப்புக்கு ரொம்பப் பிடித்துவிட்டது. வயிறு முட்டச் சாப்பிட்டான். "நான் போய் மோட்டார் போட்டுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டு வருகிறேன் அம்மா," என்று சொல்லிவிட்டுச் சென்றவன், சில நிமிடங்களில் திரும்பி வந்து, "போட் ரெடிம்மா," என்றான்.

"கொஞ்சம் பொறுத்திருப்பது நல்லது," என்று ஜெனிபர் சிரித்தாள்.

"எதுக்கும்மா?"

"நீ வயிற்றுக்குள் ஏகப்பட்டது தள்ளியிருக்கிறாய், வெயிட் தாங்காமல் தண்ணீரில் மூழ்கி விடுவாய்!"

"அதெல்லாம் முழுகமாட்டேன். வந்து பார்."

விசைப் படகு அமர்த்திக் கொண்டார்கள். நீரில் சறுக்கிக் கொண்டு செல்வதற்கான ஸ்கீ பட்டைகளைக் காலில் மாட்டிக் கொண்டு, படகின் பின்னே விரைந்தார்கள்.

முதல் ஐந்து நிமிடத்துக்குத் தான் ஜோசப் விழுவதும் எழுந்து கொள்வதுமாகத் தடுமாறினான் பிறகு தண்ணீரிலேயே பிறந்து வளர்ந்தவன் போலத் தேர்ச்சி பெற்றுவிட்டான். ஒற்றை 'ஸ்கீ'யில் சறுக்கவும், ஸ்கீயே இல்லாமல் வெறும் காலிலேயே மிதக்கவும் தெரிந்து கொண்டு விட்டான்.

பிற்பகல் அவர்கள் கடற்கரை மணலில் சோம்பேறித் தனமாகப் படுத்திருந்தார்கள்.

பங்களாவுக்கு ஜீப்பில் திரும்புகையில், தாயின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டு, "உனக்கு ஒன்று சொல் லட்டுமாம்மா? இன்னிக்குத்தான் என் வாழ்க்கையிலேயே பிடித்தமான நாள்!" என்றான் ஜோசப்.

திங்களன்று காலையில் அவள் மாநாட்டுக்குப் புறப்பட்டாள். தனக்குப் பிடித்தபடி உடை அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது அவளுக்குத் திருப்தியாக இருந்தது. அவளுக்கு வயதாகி விட்டது என்று ஜோசப் அடிக்கடி சொல்வதுண்டு. ஆனால், ஜோசப்பின் முப்பத்து நாலு வயது அக்கா போல்-அழகான அக்கா போல்-தான் இருக்கிறோம் என்று ஜெனிபர் எண்ணிக் கொள்வாள்.

வேலைக்காரியிடம்,"நான் வருகிற வரை ஜோசப்பைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள். வெயிலில் அதிகம் சுற்ற விடாதே," என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

பிரம்மாண்டமான ஹாலில் எழுநூற்றைம்பது பிரதிநிதிகள் கூடியிருந்தார்கள்.

பதிவு செய்துகொள்ளும் இடத்தில் கையெழுத்திட்டு உள்ளே சென்றாள் ஜெனிபர் டஜன் கணக்கான நண்பர்களும் தெரிந்தவர்களும் இருந்தார்கள். எல்லோரும் ஏதோ பிக்னிக் வந்தது போல உல்லாசமாக உடை யணிந்திருந்தார்கள்.

அச்சடித்த நிகழ்ச்சி நிரலை அவள் கையில் கொடுத்திருந்தார்கள் அவள் அதைப் பார்க்காமல் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

ஒலி பெருக்கியில் ஒரு குரல் ஒலித்தது: "யுவர் அட்டென்ஷன், ப்ளீஸ்! அன்பு கூர்ந்து எல்லாரும் அவரவர் இருக்கைக்குச் சென்று அமருங்கள். கூட்டம் ஆரம்பமாகப் போகிறது."

சிறு சிறு கும்பல்களாகப் பேசிக் கொண்டு நின்றிருந்தவர்கள் தங்கள் இருக்கைகளைத் தேடிச் சென்று உட்கார்ந்தார்கள்.

ஜெனிபர் நிமிர்ந்து மேடையைப் பார்த்தாள்.

ஆறு பேர் அமர்ந்திருந்தார்கள்.

அவர்களில் நடுநாயகமாக உட்கார்ந்திருந்தான் வார்னர்.

41

வார்னர்? இங்கேயா!

ஜெனிபர் உறைந்து நின்றிருக்க, வார்னர் மேடையில் போய் மைக்குக்கு அருகே இருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான் தன் இதயம் தடதட வென்று அடித்துக் கொள்ளும் சத்தம் ஜெனிபருக்குக் கேட்டது.

கடைசியாக அவனை அவள் பார்த்தது ஓர் இத்தாலிய ரெஸ்ட்டாரெண்ட்டில் இருவரும் உணவருந்திய போது; தன் மனைவி மேரி கர்ப்பமாக இருக்கிறாள் என்பதை வார்னர் தெரிவித்தபோது.

ஜெனிபருக்கு உடனே ஏற்பட்ட எண்ணம் இங்கிருந்து ஓடிவிடவேண்டும் என்பதுதான்.

வார்னர் இந்த மாநாட்டுக்கு வருவானென்று அவள் சொப்பனத்திலும் நினைக்கவில்லை. அவனை நேருக்கு நேர் பார்ப்பதா - எண்ணுவதற்கே கஷ்டமாக இருந்தது.

வார்னரும் அவனுடைய மகனும் ஒரே ஊரில் இருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போதே அவளுக்குள் கலவரம் மூண்டது.

வேண்டாம், வேண்டாம். உடனே, இந்த வினாடியே, இங்கிருந்து ஓட்டம் பிடித்து விடவேண்டும்!

போய் விடலாமென்று திரும்பியபோது கூட்டத்தின் தலைவர் ஒலி பெருக்கியில் அறிவித்தார்: "பெரியோர்களே, தாய்மார்களே! நின்று கொண்டிருக்கும் மற்றவர்களும் உட்காரும்படி கேட்டுக் கொள்கிறேன். கூட்டம் இப்போது ஆரம்பமாகப் போகிறது."

அவளுக்கு இந்தப் பக்கமும் அந்த பக்கமும் இருந்தவர்கள் இருக்கைகளில் உட்காரத் தொடங்கினார்கள் தான் மட்டும் நின்று கொண்டிருப்பதை எல்லாரும் கவனிக்கிற மாதிரி தோன்றியது. அவளும் ஓர் இருக்கையில் உட்கார்ந்து கொண்டாள் சந்தர்ப்பம் கிடைத்தவுடனே நழுவிவிட வேண்டுமென்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

அவைத் தலைவர் கூறினார்: "இன்று ஒரு முக்கியமான விருந்தாளி நம்மிடையே வந்து நம்மைக் கௌரவித்திருக்கிறார். அவர் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடுகிறவர். நியூயார்க் வழக்கறிஞர் சங்கத்தின் உறுப்பினர். அமெரிக்கப் பாராளுமன்றத்தின் மிக முக்கியமான உறுப்பினர்களில் ஒருவர் உங்களுக்கு அவரை அறிமுகம் செய்து வைப்பதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். இதோ அவர்-செனெட்டர் ஆடம் வார்னர்!"

பலத்த கைதட்டல் எழுந்தது. வார்னர் எழுந்து நின்று, தலை வணங்கி அதை ஏற்றுக் கொண்டான் பிறகு மைக்கிடம் சென்று, அரங்கம் முழுவதையும் கண்களால் அளந்தான். "தலைவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் நன்றி!" என்றான்.

அவனுடைய குரல் கணீரென்று கம்பீரமாக இருந்தது. அவன் நின்ற தோரணையில் ஒரு கம்பீரம் இருந்தது. அது கூட்டத்தை வசியப்படுத்தியது. குண்டூசி விழுந்தாலும் ஓசை கேட்கும் வண்ணம் அரங்கமெங்கும் நிசப்தம் நிலவியது

"இங்கே நாம் கூடியிருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. நம்மில் சிலர் குஷியாய் நீச்சலடிக்கலாமென்று

வந்திருப்போம்... அவனுடைய நகைச்சுவையை ரசித்து, கூட்டத்தினர் கலகலவென்று சிரித்தார்கள்.

வார்னர் தொடர்ந்தான்: "ஆனால் முக்கியமாக இங்கே நாம் கூடியிருப்பது நம்முடைய அறிவையும் அனுபவத்தையும் யோசனைகளையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு, புதிய புதிய கருத்துக்களைப் பற்றி விவாதிப்பதற்காகத்தான். ஏனெனில் இன்று வழக்கறிஞர் சமூகம் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது. நமது நாட்டின் சரித்திரத்திலேயே இப்படியொரு தாக்குதல் நடந்தது கிடையாது. சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதி கூட நமது தொழிலைப் பற்றிக் கடுமையாகக் குறை கூறியிருக்கிறார்"

'நமது' என்று அவன் குறிப்பிட்டதை ஜெனிபர் ரசித்தாள். இங்கே கூடியிருப்பவர்களில் தானும் ஒருவன் என்று கூட்டத்தினரை எண்ண வைத்தது அந்தச் சொல்.

அவன் பேசுவது அவள் காதில் விழுந்ததே தவிர மனத்தில் பதியவில்லை. அவனைப் பார்த்துக் கொண்டிருப்பது ஒன்றே போதும் என்று தோன்றியது. அவன் அசைவுகளை நோக்கிக் கொண்டிருந்தாலே போதும். அவனுடைய குரலைக் கேட்டுக் கொண்டிருந்தாலே போதும்.

ஒரு முறை அவன் பேசுவதைச் சற்றே நிறுத்தி, தலையை விரல்களால் கோதிவிட்டுக் கொண்டான்.

அவள் இதயத்தில் சுரீரென்று வலித்தது.

அது ஜோசப்பின் வழக்கமான சேட்டை.

வார்னரின் மகன் இதோ சில மைல் தூரத்தில்தான் இருக்கிறான். ஆனால் வார்னருக்கு அது தெரியவே போவதில்லை!

வார்னரின் குரலில் சூடு ஏறிக் கொண்டிருந்தது. அழுத்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தான் "இங்கே

கூடியுள்ள உங்களில் சிலர் குற்றவியல் லாயர்கள். நம்முடைய தொழிலில் மிக முக்கியமான இடம் வகிப்பது கிரிமினல் பிரிவு. ஆகவே கிரிமினல் லாயர்களிடம் எனக்கு அலாதியான மதிப்பு உண்டு. ஏனெனில் வாழ்வா சாவா என்ற பிரசினைகள் அவர்கள் கையில்தான் உள்ளன. எனவே மதிப்பு வாய்ந்த அவர்களைப் பற்றி நாம் பெருமைப் படலாம்," வார்னரின் குரல் கண்டிப்புடன் ஒலிக்கத் தொடங்கியது. "எனினும் அவர்களிலே சிலர் இருக் கிறார்கள்..."

இதுவரை நாம், நமது என்று குறிப்பிட்டு வந்தவன் இப்போது 'அவர்கள்' என்று பிரித்துப் பேசுவதை ஜெனிபர் கவனித்தாள்.

"அவர்கள் நம்முடைய தொழிலுக்கே ஒரு களங்கம், நீதி மன்றத்தில் எடுத்துக் கொண்ட பிரமாணத்துக்கு இழுக்கு. நியாயம் கேட்டு நீதி பெற ஒவ்வொரு அமெரிக்கப் பிரஜைக்கும் உரிமை உண்டுதான். அது அவர்கள் பிறப்புரிமைதான் அதற்கு நம் அரசியல் சட்டம் உத்தரவாதம் தந்திருப்பதும் உண்மைதான். எனினும் சில வழக்கறிஞர்கள் சட்டத்தையே கேலிக் கூத்தாக்கு கிறார்களே! தங்களுடைய நேரத்தையும் சக்தியையும் கற்பனையையும் திறமையையும் கொண்டு சட்டத்தைக் குழிதோண்டிப் புதைக்கிறார்களே! நீதியைப் புரட்டி விடுகிறார்களே! இதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டாமா?"

குழுமியிருந்த அத்தனை பேரின் கண்களும் வார்னரின் மீது நிலைத்திருந்தன. விழிகள் பளபளக்க நின்றிருந்தான் வார்னர். "என் சொந்த அனுபவத்தைக் கொண்டு இதைச் சொல்கிறேன். நடைபெறும் சில விஷயங்களைப் பார்த்துக் கோபம் பொறுக்க முடியாமல் இதைச் சொல்கிறேன். ஸ்தாபன ரீதியாக, திட்டமிட்டுச் சில குற்றங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளைப் பற்றிய

விசாரணைக் குழுவுக்கு நான் தலைமையேற்றிருக்கிறேன். என் குழுவின் கைகள் அடிக்கடி கட்டப்படுகின்றன. அதன் முயற்சிகள் முறியடிக்கப்படுகின்றன. யாரால்? சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாய், மிகப் பெரிய காவல் அதிகாரி களுக்கும் மேற்பட்டவர்களாய் நடந்து கொள்ளும் சிலரால்! அவர்கள் நீதிபதிகளை மிரட்டுகிறார்கள். சாட்சி சொல்வோரின் குடும்பங்களைப் பயமுறுத்துகிறார்கள். சில சமயம் முக்கியமான சாட்சிகள் காணாமற் போய்விடுகிறார்கள். இந்தக் குற்றங்கள் ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் வாயிலாக நடைபெறுகின்றன. இது ஒரு பயங்கரமான மலைப் பாம்பு. இது நமது நாட்டின் பொருளாதாரத்தைக் கவ்வியிருக்கிறது. நீதிமன்றங்களை இது கவ்வியிருக்கிறது. நீதிமன்றங்களை இது விழுங்கி விடுகிறது. நம்முடைய உயிர்களுக்கே உலை வைக்கிறது. வழக்கறிஞர்களில் மிகப் பெரும்பாலோர்- ஆண் வக்கீல்களும் சரி, பெண் வக்கீல்களும் சரி கண்ணிய மானவர்கள் நேர்மையானவர்கள். ஆனால் ஒரு சிறுபான்மைக் கும்பல் இருக்கிறது- நாட்டின் சட்டத்தைக் காட்டிலும் தாங்கள் வைத்த சட்டம்தான் என்று எண்ணும் கும்பல்! அவர்களுக்கு நான் எச்சரிக்கை செய்ய விரும்புகி றேன். நீங்கள் பெரும் தவறு செய்கிறீர்கள். அதற்குண்டான விலையை நீங்கள் கொடுக்கத்தான் போகிறீர்கள். வணக்கம். நன்றி."

வார்னர் இருக்கையில் அமர்ந்தான். கைதட்டல் ஒலி வானைப் பிளந்தது. எல்லோரும் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

ஜெனிபர் தன்னையுமறியாமல் அவர்களுடன் சேர்ந்து கைதட்டினாள் எனினும் அவனுடைய கடைசி வாக்கியங்களையே அவள் மனம் எண்ணியவாறிருந்தது.

அவளையே நோக்கி, அவளுக்காகவே சொன்ன மாதிரியல்லவா இருக்கிறது!

கூட்டத்தினரை விலக்கித் தள்ளிக்கொண்டு வாசலை நோக்கி அவள் வெளியேறினாள்.

கதவை அடையும்போது ஒரு வழக்கறிஞர் அவளை வழிமறித்து விசாரித்தார். ஒரு வருட காலம் அவருடன் ஜெனிபர் வேலை செய்திருந்தாள்.

அவள் கையை எடுத்து மரியாதையுடன் முத்த மிட்டார் அவர், "எங்கள் நாட்டுக்கு நீங்கள் வந்திருப்பது பெரும் கௌரவம், ஜெனிபர். இன்றிரவு என்னுடன் நீங்கள் கட்டாயம் விருந்துண்ண வேண்டும்." என்றார்

ஒரு நடன நிகழ்ச்சிக்கு அவளும் ஜோசப்பும் போவதாகத் திட்டமிட்டிருந்தார்கள். "மன்னிக்கணும் சார். வேறொரு இடத்துக்கு வர ஒப்புக் கொண்டு விட்டேன்," என்றாள்.

அவருடைய கண்கள் ஏமாற்றத்தால் மங்கின. "அப்படியானால் நாளைக்கு?" என்று கேட்டார்

அதற்கு அவள் பதில் சொல்வதற்குள் உதவி அரசாங்க வக்கீலொருவர் அவளைப் பிடித்துக் கொண்டார். "நீங்கள் என்னோடுதான் இன்றிரவு விருந்துண்ண வர வேண்டு மாக்கும்! பிரமாதமான ஓட்டலொன்று நான் பார்த்து வைத்திருக்கிறேன்!"

"வரணுமென்று ஆசையாய்த்தான் இருக்கிறது. ஆனால் எனக்கு வேறொரு வேலை..." என்று ஜெனிபர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இன்னும் பல வழக்கறிஞர்கள் சூழ்ந்து கொண்டார்கள் அவளுக்கு உதவியாக வழக்குகளில் ஆஜரானவர்கள் அல்லது அவளுக்கு எதிராக வாதாடியவர்கள். பிரபலமான பெண் வக்கீலாகையால் எல்லாருமே அவளுடன் இரண்டு வார்த்தை பேச ஆசைப்பட்டார்கள். அவர்களிடமிருந்து விடுபடுவதற்கு அரை மணி நேரம் பிடித்தது.

ஒரு வழியாய் அவள் வெளியே வந்தபோது- எதிரில் வார்னர் வந்து கொண்டிருந்தான்,பத்திரிகை நிருபர்களும் ரகசியப் போலீசாரும் புடைசூழ.

சட்டென்று பின்வாங்கப் பார்த்தாள் அவள். காலம் கடந்து விட்டது. வார்னர் அவளைப் பார்த்து விட்டான்.

"ஜெனிபர்!"

அவன் கூப்பிட்டது காதில் விழாதது போல் பாசாங்கு செய்யலாமா என்று ஒரு வினாடி நினைத்தாள். ஆனால் அவ்வளவு பேருக்கெதிரில் அவனைச் சங்கடத்தில் ஆழ்த்த அவளுக்கு விருப்பமில்லை.

பக்கத்திலிருந்த நிருபர்களிடம் வார்னர், "அவ்வளவுதான் விஷயம், நண்பர்களே வேறு எதுவு மில்லை," என்று சொல்லிவிட்டு, அவளை நோக்கி வந்தான்.

அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் ஜெனிபர்.

வார்னர் அவள் கைகளை மெல்லப் பற்றி, அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான்—ஏதோ இதற்குமுன் இவன் கண்களும் அவள் கண்களும் பிரிந்ததே கிடையாது என்கிற மாதிரி.

அவர்கள் ஹாலுக்கு வெளியே வெராந்தாவில் நின்றிருந்தார்கள் சுற்றிலும் பல பேர் இருந்தார்கள் அப்படியும் தாங்கள் தன்னைந்தனியே நிற்பது போலிருந்தது.

எத்தனை நேரம் அப்படி இருந்தார்களோ, ஜெனிபருக்குத் தெரியாது.

இறுதியில் வார்னர், "நாம் ஏதாவது ட்ரிங்க் அருந்தி விட்டு வரலாம் வா," என்றான்.

"வேண்டாமென்று எனக்கு தோன்றுகிறது," என்றாள் ஜெனிபர். இங்கிருந்து எப்படியாவது போய்விட வேண்டு மென்று அவளுக்கு தோன்றியது.

வார்னர் தலையை அசைத்தான் "ஆட்சேபம் நிராகரிக்கப் பட்டது," என்றான் வேடிக்கையாக.

அவள் கையைத் தன் கையோடு இணைத்துக் கொண்டு சிற்றுண்டி சாலைக்குள் நுழைந்தான். மிகவும் கூட்டமாக இருந்தது. ஓர் ஓரமாக இடம் பிடித்தார்கள்.

"உன்னைப் போனில் கூப்பிட்டேன். கடிதங்கள் போட்டேன். நீ திருப்பிக் கூப்பிடவில்லை. கடிதங்களும் திரும்பி விட்டன," என்றான் வார்னர். பேசும்போது அவளையே கவனித்துக் கொண்டிருந்தான். ஏகப்பட்ட கேள்விகள் அவன் பார்வையில் தேங்கி நின்றிருந்தன. "நான் உன்னை நினைக்காத நாளில்லை. ஏன் அப்படி மாயமாய் மறைந்து போனாய் ஜெனிபர்?"

"என் மாஜிக் நிகழ்ச்சியில் அதுவும் ஒரு ஐட்டம்." ஜெனிபரும் அவன் பேச்சை வேடிக்கையாகத் தள்ள முயன்றாள்.

என்ன வேண்டும் என்று கேட்பதற்காக ஒரு வெயிட்டர் வந்தார். "என்ன சாப்பிடுகிறாய்?" என்றான் வார்னர்.

"எதுவும் வேண்டாம். நான் அவசரமாகப் போக வேண்டியிருக்கிறது."

"அதெல்லாம் நீ போகக் கூடாது. இன்று ஒரு விழாவாக்கும்."

"நாட்டுக்கா, நமக்கா?"

"யாருக்காக இருந்தால் என்ன?" என்றவன் வெயிட்டரிடம் ஆர்டர் கொடுக்கத் தொடங்கினான்

"இல்லை, எனக்கு.... என்று மறுக்க நினைத்தவள், சரியென்று ஒப்புக் கொண்டாள். கொஞ்சமாக ஏதாவது அருந்திவிட்டுப் புறப்பட்டுவிடலாம்.

"உங்களைப் பற்றிப் பேப்பரில் தினம் படித்துக் கொண்டிருக்கிறேன். ரொம்ப பெருமையாக இருக்கிறது," என்றாள்

"நன்றி," என்றவன் சிறிது தயங்கிவிட்டு, "நானும் உன்னைப் பற்றிப் பேப்பரில் படித்துக் கொண்டு தான் இருக்கிறேன்," என்றான்.

அவன் குரலில் தென்பட்ட மாறுதல் அவளுக்குப் புரிந்தது. "ஆனால் உங்களுக்குப் பெருமையாக இல்லை யாக்கும்?" என்றாள்.

"உனக்குப் பயங்கரக் கும்பலில் நிறையக் கட்சிக் காரர்கள் இருப்பதாகத் தெரிகிறது," என்றான் வார்னர்.

ஜெனிபருக்கு அவன் பேச்சுப் பிடிக்கவில்லை. "பேச்சு மேடையோடு உங்கள் லெக்சர் முடிந்துவிட்டது என்று நினைத்தேன். முடியவில்லையா?"

"இது லெக்சரில்லை. ஜெனிபர் உன்னைப்பற்றி எனக்குக் கவலையாக இருக்கிறது. என்னுடைய விசாரணைக் குழு மாரெட்டியைப் பற்றித்தான் தோண்டித் துருவிக் கொண்டிருக்கிறது. நாங்கள் அவனை மடக்காமல் விடப் போவதில்லை."

ஜெனிபர் சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டாள். எங்கு திரும்பினாலும் வழக்கறிஞர்கள்தான் தென் பட்டார்கள். "உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், வார்னர். நாம் இப்படி விவாதம் நடத்துவது சரியல்ல- அதுவும் இந்த இடத்தில்."

"வேறெங்கே பேசலாம்?"

"எங்கேயுமே பேசவேண்டாம். மாரெட்டி என் கட்சிக்காரர். அவரைப் பற்றி உங்களிடம் நான் பேசுவதற் கில்லை."

"உன்னோடு நான் பேச வேண்டும். எங்கே பேசலாம் என்று சொல்லு."

அவள் தலையை அசைத்தாள் "நான்தான் சொன்னேனே..."

"நம்மைப் பற்றி நான் பேச விரும்புகிறேன்," என்றான் வார்னர்.

"நம்மைப் பற்றியா? 'நம்' என்று எதுவும் நமக்குள் கிடையாது." அவள் எழுந்து கொண்டாள்.

வார்னர் அவள் கையைப் பிடித்து அழுத்தினான். "போகாதே, ப்ளீஸ். என்னால் உன்னைப் போகவிட முடியாது. அதுவும் அதற்குள்ளாக..."

அரை மனத்தோடு ஜெனிபர் திரும்ப உட்கார்ந்தாள்.

வார்னரின் கண்கள் அவள் முகத்தின் மீது நிலைத்திருந்தன. "ஜெனிபர், என்னைப் பற்றி நீ எப்போதாவது நினைப்பதுண்டா?"

ஜெனிபர் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

அவன் அவளுடைய வீட்டில்தானே இருக்கிறான்! அவனைத் தினம்தோறும் காலையில் முத்தமிட்டு 'குட்மார்னிங்' சொல்கிறாளே! அவனுக்காகச் சமையல் செய்கிறாளே! அவனை உயிருக்குயிராய் நேசிக்கிறாளே!

'எப்போதாவது நினைப்பதுண்டா?' என்று கேட்கிறார் இவர்!

42

வெகு நேரம் மௌனமாயிருந்த பின், "ஆமாம், உங்களைப் பற்றி அடிக்கடி நினைப்பதுண்டு," என்றாள் ஜெனிபர்.

"கேட்பதற்குச் சந்தோஷமாயிருக்கிறது. ஏன் ஜெனிபர், நீ சந்தோஷமாக இருக்கிறாயா?"

"ஓ, நிச்சயமாய்," என்றாள் அவள். அதை அவ்வளவு சட்டென்று சொல்லியிருக்க வேண்டாமென்று தோன்றியது. அதை ஈடு செய்வதற்காகக் குரலைச் சாதாரணமாக மாற்றிக் கொண்டாள் "என் பிராக்டிஸ் வெற்றிகரமாக நடக்கிறது. பணம் காசு கவலையில்லாமல் நல்ல வசதியுடன் இருக்கிறேன். எக்கச்சக்கமாய்ப் பிரயாணம் செய்கிறேன். ஏகப்பட்ட பேரைச் சந்தித்துப் பேசுகிறேன். உங்கள் மனைவி எப்படி இருக்கிறாள்?"

"ஓ, நன்றாயிருக்கிறாள்." என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு அவன் சொன்னான்.

"உங்கள் பெண்?"

அவன் தலையை ஆட்டினான். முகத்தில் பெருமை ஜொலித்தது. "மகள் ஸமந்தா அருமையான பெண். என்ன வேகமாய் வளர்ந்து கொண்டிருக்கிறாள், தெரியுமோ?" என்றான்.

அவளுக்கும் ஜோசப்பின் வயது தான் இருக்கும் என்று ஜெனிபர் நினைத்துக் கொண்டாள்.

"நீ கல்யாணம் செய்து கொள்ளாமலே இருக்கிறாய், இல்லையா?"

"ஆமாம்"

நீண்ட நேரத்துக்கு அங்கே மௌனம் நிலவியது. தொடர்ந்து ஏதோ சொல்ல வேண்டுமென்று ஜெனிபர் நினைத்தாள் ஆனால் ரொம்ப நேரம் மௌனமாக இருந்து விட்டதால் பேசுவதற்குச் சங்கடமாக இருந்தது. இனி என்ன சொல்வது? வார்னர் அவள் கண்களையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் மனத்தில் ஓடும் எண்ணங்கள் அவனுக்கு உடனேயே புரிந்து விட்டன.

அவள் கைகளைத் தன் கைகளுக்குள் இறுக்கிக் கொண்டான் "ஜெனிபர், ஜெனிபர் என் கண்ணே, என் டார்லிங்."

அவள் ரத்தம் மொத்தமும் குப்பென்று முகத்தில் ஏறியது.

அவள் உள்ளத்துக்குள் ஒரு குரல் ஒலித்துக் கொண்டேயிருந்தது. வேண்டாம் ஜெனிபர். இதெல்லாம் பயங்கரமான முட்டாள்தனம்.. இதிலே மாட்டிக் கொள்ளாதே...

"நான் புறப்பட வேண்டும். வேலை இருக்கிறது," என்றாள்.

"வேலையைத் தூக்கி உடைப்பில்போடு," என்றான் அவன்.

"ஸாரி. அது முடியாத காரியம்."

அவளுக்குத் தோன்றியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். இங்கிருந்து இந்தக் கணமே ஓடி விட வேண்டும். குழந்தையை கூட்டிக் கொண்டு போய் விட வேண்டும். ஊருக்குப் பறந்துவிட வேண்டும்.

வார்னர் சொல்லிக் கொண்டிருந்தான். "நான் இன்று சாயந்தரம் பிளேனில் வாஷிங்டனுக்குப் போவதாக ஏற்பாடு. பரவாயில்லை. ராத்திரி தங்கிக் கொள்கிறேன்-நீ வருவதாயிருந்தால்."

"இல்லை, இல்லை, நான் வர முடியாது." என்றாள் ஜெனிபர் பதட்டமாக.

"ஜெனிபர், மறுபடியும் நீ என்னை விட்டுப் போக நான் அனுமதிக்கப் போவதில்லை. சொல்வதைக் கேள். இப்படித் தடாலென்று நீ புறப்பட்டுப் போகக் கூடாது. நாம் பல விஷயங்கள் பேச வேண்டும். ராத்திரி என்னோடு சாப்பிடுவதற்கு வா."

அவன் அவள் கைகளை மேலும் மேலும் பலமாக இறுக்கிக் கொண்டிருந்தான். அவள் அவனை ஏறிட்டு நோக்கினாள். தன் சக்தியனைத்தையும் திரட்டி அவனை எதிர்த்துப் போராட முயன்றாள். முடியவில்லை. வினாடிக்கு வினாடி தான் பலவீனப்பட்டுக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது.

"வேண்டாம். தயவு பண்ணுங்கள்," என்று கெஞ்சினாள். "உங்களையும் என்னையும் ஜனங்கள் சேர்ந்து பார்க்கக் கூடாது. நீங்கள் மாரெட்டியை மடக்கிப் பிடிக்க நினைத்திருக்கையில்-"

"மாரெட்டிக்கு இதில் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இதோ பார், நான் உல்லாசமாகப் பொழுது போக்குவதற்காக ஒரு படகு தந்திருக்கிறார் ஒரு நண்பர். பலோமோ என்று அந்தப் படகுக்குப் பெயர் படகுத் துறையில் இருக்கிறது. நீ கட்டாயம் அங்கே வந்துவிடு. எட்டு மணிக்கு."

"இல்லை. நான் வர மாட்டேன்"

"நான் காத்திருப்பேன் கட்டாயம் வந்துவிடு," என்று மறுபடியும் சொன்னான் வார்னர்.

அவர்கள் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்த அதே சமயம், அதே ரெஸ்ட்டாரெண்ட்டின் இன்னொரு மூலையில்-

மாரெட்டியின் உதவியாள் ஒருவன் உணவருந்திக் கொண்டிருந்தான். அவனுக்கு இரு புறமும் இரண்டு கவர்ச்சிக் கன்னிகள் உட்கார்ந்து கொண்டு அவனுடன் சரசமாடிக் கொண்டிருந்தார்கள்.

அவன் பார்வை தூரத்தில் உள்ள ஜெனிபரையே வெறித்துக் கொண்டிருந்தது. அவளுடன் கூட உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பவன் யார்? அவனுக்குத் தெரியவில்லை.

எழுந்து சென்று ஜெனிபருக்கு ஒரு ஹலோ போடலாமா என்று நினைத்தான். இரண்டு அழகிகளும் அவனை எழுந்திருக்க விடவில்லை. அவர்களுடைய கொஞ்சல்கள் அவனைக் கிறுகிறுக்க வைத்தன.

ஜெனிபரிடம் செல்லாமல், அந்தப் பெண்களுடன் மாடியறைக்குப் போய்விட்டான்.

பலோமா என்று பெயர் கொண்ட அந்த விசைப் படகு, நிலா வெளிச்சத்தில் வெள்ளை வெளேரென்று கம்பீரமாகப் பளபளத்துக் கொண்டிருந்தது.

ஜெனிபர் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டாள் யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டாள். பிறகு அந்தப் படகை நோக்கி மெல்ல நடந்தாள்.

வார்னருடன் கூடவே ரகசியப் போலீஸ் படையைச் சேர்ந்தவர்கள் செல்வது வழக்கம். அவர்கள் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு வரப்போவதாக அவன் சொல்லியிருந்தான். அதேபோல் வந்து விட்டான் என்பது தெரிந்தது.

ஜோசப்பையும் வேலைக்காரியையும் ஓர் ஓட்டலில் கொண்டு போய் விட்டு விட்டு, ஒரு டாக்ஸி அமர்த்திக்

கொண்டு ஜெனிபர் புறப்பட்டாள். படகுத் துறைக்கு வெகு தூரம் முன்பே இறங்கிக் கொண்டு, நடந்தே வந்து சேர்ந்தாள்.

அவள் மனம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

அரை டஜன் தடவையாவது போனை எடுத்திருப்பாள்- 'தான் வரப் போவதில்லை' என்று வார்னருக்குத் தெரிவிப்பதற்காக. ஒவ்வொரு தடவையும் மனம் பலவீனப்பட்டு அந்த எண்ணத்தைக் கைவிட்டாள். ஒரு குறிப்பு எழுதி ஆள் மூலம் கொடுத்தனுப்பலாமா என்று நினைத்தாள் அதையும் எழுதி எழுதிக் கிழித்துப் போட்டாள்

ஓட்டலில் அவனை விட்டுப் பிரிந்து வந்தது முதல் அவள் இதயத்தில் வேதனைதான். எப்படி முடிவெடுப்பது என்று தெரியாத வேதனை.

வார்னரைப் பார்க்காமல் இருப்பதற்கு என்னென்ன காரணம் இருக்க முடியுமோ அத்தனையையும் அவள் அலசிப் பார்த்துவிட்டாள்.

இப்போது வார்னரைச் சந்திப்பதால் என்ன நன்மை விளையப் போகிறது? ஒன்றுமில்லை. மாறாக மாபெரும் கெடுதல்தான் ஏற்படும். அவனுடைய எதிர்காலத்தையே பாழாக்கி விடக்கூடிய அபாயம் ஏற்படலாம்.

தற்சமயம் பொதுமக்களின் ஆதரவு அவனுக்கு அபாரமாகத் திரண்டிருக்கிறது. நாடு முழுதும் கசப்பு நிறைந்திருக்கிறபோது வார்னர் ஒரு லட்சியவாதியாக விளங்கிக் கொண்டிருக்கிறான். நாட்டின் நம்பிக்கை நட்சத்திரம் அவன் வானொலியும் டெலிவிஷனும் பத்திரிகைகளும் அவனை வானளாவப் புகழ்ந்து கொண்டிருக்கின்றன. நாளை அவன் தன்னுடைய இமேஜுக்கு ஏற்ப நடந்து கொள்ளத் தவறி விட்டான் என்று தெரிய வேண்டியதுதான் தாமதம்-அவனை உச்சத்துக்கு ஏற்றி

வீட்டிருக்கும் இதே பத்திரிகைகள் மறு கணமே அவளை அதல பாதாளத்துக்கு உருட்டித் தள்ளி விடும்.

இதையெல்லாம் யோசித்து அவனைச் சந்திக்க வேண்டாமென்று தீர்மானித்திருந்தாள் ஜெனிபர். நாம் அவனுடன் சம்பந்தப்படாத பெண்... அவனுக்குச் சம்பந்த மில்லாத வாழ்க்கை வாழ்கிறவள். இப்போது மாரெட்டிக்குச் சொந்தமானவள். ஆகவே வார்னரைப் பார்க்கப் போகக் கூடாது...

இவ்வாறு எண்ணினாளே தவிர அவள் கால்கள் அவளை வார்னரை நோக்கியே இழுத்துச் சென்றன.

படகுத் துறையில் கரையருகே அவன் காத்திருந்தான்.

அவளைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது. "நீ வருவாயோ மாட்டாயோ என்று பார்த்துக் கொண்டே யிருந்தேன்," என்றான்.

அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவளுடைய உறுதி பொடிப் பொடியாய் உதிர்ந்தது. ஒரே தாவலில் அவனுடைய அணைப்புக்குள் கட்டுப் பட்டாள். முத்தங் களைப் பரிமாறிக் கொண்டாள்.

இறுதியில் அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவள், "படகில் சிப்பந்திகள் இருப்பார்களே?" என்று கேட்டாள்

"அவர்களை அனுப்பி விட்டேன். நாம் எவ்வளவு முறை படகு ஓட்டியிருக்கிறோம்! ஜெனிபர், உனக்குப் பட கோட்டுவது இப்போதும் வருமா அல்லது மறந்து விட்டதா?"

"மறக்கவில்லை," என்றாள் அவள் படகில் ஏறிக் கொண்டார்கள். பாய்மரங்களை ஏற்றிவிட்டு, விசையைத் தட்டி விட்டார்கள். நீரைக் கிழித்துக் கொண்டு பறந்தது படகு. துறைமுகப் பகுதியை விட்டு நீங்கிக் கடலை அடையும்

வரை, அரை மணி நேரத்துக்கு படகைச் செலுத்துவதிலேயே அவர்கள் மும்முரமாய் இருந்தார்கள்.

ஆனால் ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் மனம் மற்றவரைப் பற்றி, அந்த நெருக்கத்தைப்பற்றி, நினைத்துக் கொண்டேயிருந்தது. உடம்பே வெடித்து விடும் போல் ஓர் இறுக்கம் அவர்களுக்குள் நிரம்பியிருந்தது.

அடுத்து நேரப் போவது என்ன என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதைத் தவிர்க்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரிந்தேயிருந்தது.

பால் நிலா ஒளி பாய்ச்சியது. கடல் அமைதியாக இருந்தது.

வார்னர் அவளிடம் வந்து உட்கார்ந்து அவள் இடுப்பை அணைத்துக் கொண்டான்.

அவ்வளவுதான்.

அதன்பின் அவளுக்கு எல்லாம் மறந்துவிட்டது.

கடந்த காலம், எதிர்காலம் இரண்டையும் அவர்களுடைய ஆசை வெள்ளம் அடித்துக் கொண்டு போய் விட்டது. புயலெனப் பறந்தன நிமிடங்கள். அவர்களைச் சேர்த்துப்பிணைத்திருக்கும் இந்த நிகழ்காலம் ஒன்றே அவர்களுக்கு நினைவில் நின்றது.

இத்தோடு எல்லாம் முடிந்து விடப் போகிறது என்று ஜெனிபருக்குத் தெரிந்தேயிருந்தது. இது ஆரம்பமல்ல. முடிவு. இவள் உலகம் வேறு. அவன் உலகம் வேறு. இரண்டுக்கும் இணைப்புத் தர எந்தப் பாலத்தாலும் முடியாது. இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் வெகு தூரம் பயணப்பட்டாயிற்று. இனி எந்தச் சாலையின் வழியேயும் திரும்பி வர முடியாது. இப்போது மட்டுமல்ல. எப்போதுமே முடியாது.

வார்னரின் ஒரு பகுதி மகன் ஜோசப்பிடம் இருக்கிறது. இனி அதைக் கொண்டு திருப்திப்பட வேண்டியது தான்...

இனி மிஞ்சியுள்ள ஆயுள் மொத்தத்துக்கும் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய இரவு இது...

அவர்கள் அருகருகாய்ப் படுத்திருந்தார்கள். கடலின் மெல்லிய அலைகள் படகில் மோதும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

"ஜெனிபர், நாளைக்கு... என்று வார்னர் ஆரம்பித்தான்.

"வேண்டாம். பேசாதீர்கள். எதுவும் பேசாதீர்கள்," என்று அவன் காதோடு கிசுகிசுத்தாள் அவள். சொல்லி விட்டு, சின்னச் சின்ன முத்தங்களால் அவனுடைய உதடுகளை நிறைத்தாள்.

அவள் அப்படித் தன்னை மறந்திருந்த அதே சமயம்- அவளுடைய பெயர் வேறொரிடத்தில் அடிபட்டுக் கொண்டிருந்தது.

மாரெட்டியின் வீட்டில்தான்.

மாரெட்டியும் அவனது குடும்ப வழக்கறிஞரான கால்ஃபாக்ஸும் உரக்க விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

விவாதம், பகாமா தீவுகளில் ஒரு பெரிய சூதாட்டக் கிடங்கு நடத்துவது பற்றியது.

அது சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யும் பொறுப்பை ஜெனிபரிடம் ஒப்படைத்திருந்தான் மாரெட்டி. அது கால்ஃபாக்ஸுக்குப் பிடிக்கவில்லை.

"நீங்கள் சொல்வது சரியில்லை," என்று கால்ஃபாக்ஸ் ஆட்சேபித்தார். "அந்த ஊரில் உள்ள நம்ம ஆட்கள் எல்லாரையும் எனக்குத் தெரியும். ஜெனிபருக்குத் தெரியாது.

அந்த விவகாரத்தை நீங்கள் என்னிடம் தான் ஒப்படைக்க வேண்டும்," என்றார். தான் சத்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

"எல்லாம் முடிந்து விட்டதே? இனி என்ன செய்வது?" என்றான் மாரெட்டி.

"அந்தப் பெண்ணை நான் நம்ப மாட்டேன். பெரிய வரும் அவளை நம்பியதில்லை."

"பெரியவர் இப்போது உயிருடன் இல்லை," என்றான் மாரெட்டி, அவன் குரலில் பயங்கர அமைதி தென்பட்டது.

இனி

தணிவாகப் பேச வேண்டும் என்று கால்ஃபாக்ஸுக்குத் தோன்றியது. "நான் என்ன சொல்கிறேன் என்றால், அந்தப் பெண்ணை நம்புவது தப்பாகி விடக்கூடும். அவள் கெட்டிக்காரிதான். சந்தேகமில்லை. ஆனால் உங்களை இப்போதே எச்சரிக்கிறேன்- கொஞ்ச நாளில் அவள் நாம் எல்லோரும் போலீசில் மாட்டிக் கொள்ளும்படி பண்ணி விடுவாள்."

எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல் கால் ஃபாக்ஸையே பார்த்தபடி இருந்தான் மாரெட்டி.

இந்த ஆள் ஆபத்தானவர். அதிக நாள் இவரை விட்டு வைக்கக் கூடாது...

நாட்டிலுள்ள சமூக விரோத வன்முறைக் கும்பல்களைப் பற்றி வார்னரின் தலைமையில் உள்ள குழு வெகு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. கொஞ்ச நாளில் கால்ஃபாக்ஸைச் சுற்றியும் வலை இறுக்குவார்கள் அப்போது இந்த மனிதர் தாக்குப் பிடிப்பாரா? தனது கும்பலின் நடவடிக்கைகள் அனைத்தும் இவருக்குத்

தெரியும் அதையெல்லாம் போலீசாரிடம் உளறி விட மாட்டாரென்பது என்ன நிச்சயம்? இவரோடு ஒப்பிட்டால் ஜெனிபருக்குத் தெரிந்திருப்பது ரொம்பக் கொஞ்சம்தான்.

கால்ஃபாக்ஸினால் அத்தனை பேருக்கும் அழிவு ஏற்படக் கூடும் என்று மாரெட்டிக்குத் தோன்றியது.

இனி இவரை நம்பக் கூடாது என்று தீர்மானித்தான்.

அவன் உதட்டில் ஒரு குரூரமான, மர்மமான புன்னகை தவழ்ந்தது. அதைக் கால்ஃபாக்ஸ் கவனிக்கவில்லை.

43

கால்ஃபாக்ஸை இனிமேல் நம்பக் கூடாதென்று மாரெட்டி ஒரு மர்மப் புன்னகையுடன் இருக்க, அதை அறியாத அந்த வழக்கறிஞர் சொல்லிக் கொண்டிருந்தார்:

"நான் என்ன சொல்கிறேன்றால், ஜெனிபரைக் கொஞ்ச நாளைக்கு எங்கேயாவது அனுப்பி வையுங்கள். இந்த வார்னர் விசாரணையெல்லாம் கொஞ்சம் சூடு ஆறட்டும். என்ன இருந்தாலும் அவள் பெண்தான் பாருங்கள். போலீசில் மிரட்டினால் நம்மைப் பற்றி எல்லாம் கக்கி விடுவாள். இல்லையா?"

அவரை மறுபடி ஒரு முறை கூர்ந்து பார்த்துவிட்டு மாரெட்டி ஒரு முடிவுக்கு வந்தான். "ஆமாம் சார். நீங்கள் சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. ஜெனிபர் கெட்டிக் காரியாக இருக்கலாம். ஆனால் நூற்றுக்கு நூறு. அவள் நம் பக்கம் இருந்தாலொழிய, நாம் எதற்காக அனாவசியமாய் ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டும்?"

காஸ்ஃபாக்ஸுக்கு ஏகப்பட்ட உற்சாகம்.

"அதேதான், அதேதான் நான் சொல்கிறேன்," என்று கூறியபடி இருக்கையை விட்டு எழுந்து கொண்டார் "நீங்கள் இப்போது சொன்னீர்களே, இதுதான் புத்திசாலித்தனம்."

"ஆமாம்," என்ற மாரெட்டி சமையலறையை நோக்கித் தன் உதவியாளனைக் கூப்பிட்டான். "நிக்! இங்கே கொஞ்சம் வா."

மறுநிமிடம் நிக் வந்தான்.

"சாரைக் காரில் நியூயார்க்கிற்குக் கொண்டு போய் விட்டுவிட்டு வா என்ன?"

"ஓ, அதற்கென்ன பாஸ்?"

"இரு, இரு, போகிற வழியில் எனக்காக ஒரு பாக்கெட்டை ஒருவரிடம் கொடுத்துவிட்டுப்போ" காஸ்ஃபாக்ஸ் பக்கம் திரும்பினான் "உங்களுக்கு அதில் ஒன்றும் கஷ்டம் இல்லையே சார்?"

"சே, சே! அதிலென்ன கஷ்டம்?" என்றார் அவர், தனக்குக் கிடைத்த 'வெற்றி'யில் மகிழ்ந்தவராக.

"கொஞ்சம் என்னோடு வா. அது மாடியில் இருக்கிறது," என்றான் மாரெட்டி உதவியாளனிடம்.

அவன் முன்னே போக, நிக் பின் தொடர்ந்தான். மாடியறையை அடைந்ததும் மாரெட்டி கதவைச் சாத்திக் கொண்டான்

"கவனமாய்க் கேள். ஊருக்கு வெளியே போனதும் நீ காரைச் சிறிது நிறுத்தணும்."

"சரி பாஸ்."

"ஒரு குப்பையை அங்கே வெளியே தள்ளிவிட்டுப் போ. புரிகிறதா?" என்று மாரெட்டி சொன்னதும் நிக் சற்றுத் திகைத்தான் "யாரைச் சொல்கிறேனென்று தெரிய வில்லையா? நம்ப வக்கீல் ஐயாவைத் தான்."

"சரி, பாஸ்."

"பிணத்தைக் குப்பை மேட்டில் தள்ளிவிடு. இந்த ராத்திரி வேளையில் அங்கே யாரும் இருக்க மாட்டார்கள்," என்று சொல்லிவிட்டு மாரெட்டி புன்சிரிப்புடன் கீழே வந்தான்.

பதினைந்து நிமிடத்துக்கெல்லாம் அவனுடைய படகுக் கார் நியூயார்க்கை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. நிக் ஓட்டிக் கொண்டிருந்தான். அருகே கால்ஃபாக்ஸ் உட்கார்ந்திருந்தார். அவர் இதயத்தில் வெற்றியின் பெருமிதம் நிரம்பியிருந்தது. "ஒரு வழியாய் அந்தத் தேவடியாளை மாரெட்டி ஓரம் கட்டிவிட்டார். ரொம்பச் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். என்ன?" என்றார்.

அவரைக் கடைக்கண்ணால் பார்த்தபடி "ஆமாமாம்," என்றான் நிக். தனக்கு நேரப் போகிற கதியைப் பற்றித் துளி கூடச் சந்தேகப்படாமல் இருக்கிறாரே இந்த ஆள்! பாவம்.

கால்ஃபாக்ஸ் தன் மணிக்கட்டிலிருந்த தங்கக் கடியாரத்தைப் பார்த்தார் விடிகாலை மூன்று மணி காட்டியது. வீட்டிலிருந்தால் எப்போதோ அவர் தூங்கிப் போயிருப்பார். இன்று அவருக்கு ஏகப்பட்ட கவலைகள். உடம்பு களைத்துப் போயிருந்தது. 'வயதாகிறது. இந்த வம்புதும்பு விவாகரங்களையெல்லாம் இனிமேல் நம்மால் கவனிக்க முடியாது' என்று எண்ணிக் கொண்டார் "இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்று கேட்டார்.

"அதிக தூரமில்லை," என்று நிக் முணுமுணுத்தான். அவன் உள்ளம் குழம்பிப் போயிருந்தது.

கொலை என்பது அவனுடைய வேலைகளில் ஒன்றுதான். அவனுக்கு ரொம்பப் பிடித்த வேலைகூட. அதில் அவனுக்கு ஒரு திமிர் ஏற்படும். 'நாம் இஷ்டப்பட்டால் ஒரு உயிரைப் பறிக்க முடிகிறது. நாம் கடவுள் மாதிரி!' என்று நினைத்துக் கொள்வான்.

ஆனால் இப்போது ஏனோ அவனுக்கு ஏதோ சங்கடமாக இருந்தது. கால்ஃபாக்ஸைக் கொலை செய்யும் படி மாரெட்டி கட்டளையிட்டது அவனுக்குச் சரி யென்று தோன்றவில்லை. இவர் தங்கள் கும்பலின் நெடுநாளைய வக்கீல். யார் என்ன பிரசினையில் மாட்டிக் கொண்டாலும் இவரிடம்தான் போவது வழக்கம். காலம் சென்ற பெரியவருக்கு அடுத்த படியாக இவர்தான் ரொம்ப முக்கிய மான ஆள். ஒரு டஜன் தடவைக்கு மேல் நிக்கை அவர் காப்பாற்றியிருக்கிறார். அப்படியிருக்க... யோசித்தான்.

ஜெனிபரைப் பற்றி கால்ஃபாக்ஸ் சொல்லுவது ஒருவிதத்தில் சரிதான் என்று தோன்றியது. ஒரு பெண் பிள்ளை நம் கும்பலில் மூக்கை நீட்டுவதற்கு மாரெட்டி இடம் தந்திருக்கவே கூடாது. பெண்களுக்குப் புத்தியே கிடையாது. அந்த ஜெனிபர் மட்டும் என் கையில் அகப்பட்டால் கசக்கிப் பிழிந்து...

திடீரென்று கால்ஃபாக்ஸ் கத்தினார். "நிக்! சாலையை விட்டு விலகிப் போகிறாய் பார்!"

"ஸாரி சார்." நிக் விழித்துக் கொண்டான் காரைப் பாதையின் நடுவுக்குக் கொண்டு வந்தான்.

அதோ குப்பை மேடு நெருங்கிக் கொண்டிருக்கிறது. பிணத்தைத் தள்ள வேண்டிய இடம்.

நிக்கிற்கு நெற்றியிலும் அக்குளிலும் வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது. மீண்டும் ஓரக் கண்ணால் கால்ஃபாக்ஸைப் பார்த்தான்.

இந்தக் கிழவரைக் கொலை செய்வது ரொம்பச் சுலபம். குழந்தையைக் கொலை செய்கிற மாதிரி. சீசீ! ஒரு குழந்தையைப் போய்க் கொலை செய்வதா! மாரெட்டியின் புத்தியை யாரோ கெடுத்திருக்கிறார்கள். இந்தக் கிழவரைக் கொலை செய்வது பாவம். சொந்த அப்பாவைக் கொல்லுகிற மாதிரி....

தன் நண்பர்களுடன் இதைப் பற்றிப் பேசாமல் போய்விட்டோமே என்று நிக் வருத்தப்பட்டான். என்ன செய்யலாமென்று அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

நெடுஞ்சாலையின் வலது பக்கத்தில் அந்தக் குப்பை மேடு நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது.

நிக்கின் தசை நார்கள் இறுகிக் கொண்டிருந்தன. ஒரு கொலை செய்யப்போகும் சமயத்தில் அவனுக்கு அப்படித் தான் இருக்கும்.

கால் சட்டைப் பையை இடது கையால் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

கைத்துப்பாக்கி தயாராக இருந்தது.

"வீட்டுக்குப் போனதும் நன்றாய்த் தூங்க வேண்டும்," என்றார் கால்ஃபாக்ஸ் பெரிதாய்க் கொட்டாவி விட்டபடி.

"அப்படியா?" என்றான் நிக். பாவம், மனிதர் வெகு நீண்ட தூக்கம் தூங்கப் போகிறார்.

குப்பை மேட்டை நெருங்கிக் கொண்டிருந்தது கார் கண்ணாடி வழியே பின்னால் பார்த்துக் கொண்டான். யாரும் வரக் காணோம்.

பிரேக்கை அழுத்தினான். "அட சனியனே! ஒரு டயர் பங்ச்சர் ஆன மாதிரி தோன்றுகிறது."

காரை நிறுத்தினான் கதவைத் திறந்து கொண்டு வெளியே இறங்கினான். கைத்துப்பாக்கியை அதன் உறையிலிருந்து எடுத்து இடுப்பினருகில் பிடித்துக் கொண்டான். மறுபுறமாகக் கால்ஃபாக்ஸிடம் வந்து, "கொஞ்சம் இறங்கி எனக்கு ஒரு கை கொடுக்க முடியுமா?" என்றான்.

கால்ஃபாக்ஸ் வெளியே இறங்கினார். "எனக்கு இந்தக் கார் விஷயமெல்லாம் அதிகமாய்..." என்று ஆரம்பித்தவர்-

அவனுடைய உயர்த்திய கையில் இருந்த துப்பாக்கியைக் கண்டு விட்டார். அச்சத்தில் நாக்குக் குழறியது. மிடறு விழுங்கினார். "எ..என்ன இது நிக்?" அவர் குரல் உடைந்து சிதறியது. "நான்... நான் என்ன தப்பு செய்து விட்டேன்?"

அந்தக் கேள்வி!

சென்ற சில மணி நேரமாக அதே கேள்விதானே அவன் மனத்தைக் குடைந்து கொண்டிருக்கிறது! இவர் என்ன தப்பு செய்து விட்டார், கொலை செய்யப்பட வேண்டிய அளவுக்கு! மாரெட்டியின் புத்தியை யாரோ கெடுத்து விட்டார்கள். இந்தக் கால்ஃபாக்ஸ் நம் பக்கம் இருப்பவர். நம்மில் ஒருவர் எவ்வளவு உதவிகள் எனக்குச் செய்திருக்கிறார்! என் தம்பி ரகசியப் போலீசிடம் மாட்டிக் கொண்ட போது இவர்தானே உதவிக்கு வந்து அவனைக் காப்பாற்றினார்! ஏன், அவனுக்கு ஒரு நல்ல வேலைகூட வாங்கித் தந்தாரே! நான் இவருக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறேன்!....

ஒரே கணத்தில் அவன் மனத்தில் இப்படி ஆயிரம் எண்ணங்கள்!

துப்பாக்கியைக் கீழே போட்டான். "சத்தியமாய்ச் சொல்கிறேன் சார்... எனக்கு எதுவும் புரியவில்லை. இது சரியான காரியமில்லை என்று மட்டும் தெரிகிறது... ஆனால்..."

கால்ஃபாக்ஸ் அவனை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தவர், பிறகு ஒரு பெருமூச்சு விட்டார். "சரி, நிக். உனக்கு என்ன கட்டளையோ அதன்படி செய்," என்றார்

"கடவுளே! கடவுளே! என்னால் முடியாது. நீங்கள் பெரியவர். எங்கள் வக்கீல்..."

கால்ஃபாக்ஸ் விரக்தியுடன் சிரித்தார். "என்னை உயிரோடு விட்டால் மாரெட்டி உன்னைக் கொலை பண்ணிவிடுவான்."

கால்ஃபாக்ஸ் சொல்வது உண்மைதான் என்று அவனுக்குப் புரிந்தது மாரெட்டி எதையும் பொறுத்துக் கொள்வான். கட்டளைக்குக் கீழ்ப்படியாததை மட்டும் பொறுத்துக் கொள்ள மாட்டான். இப்படித்தான் முன்பு, ஒரு குறிப்பிட்ட காரை ஒரு குறிப்பிட்ட இடத்தில் போட்டு மறைத்து விடும்படி ஓர் ஆளுக்கு உத்தர விட்டிருந்தான். அந்த ஆள் தன் காதலியைச் சந்திக்கப் போகிற ஜோரில் வேறோர் இடத்தில் புதைத்து வைக்க. போலீசார் அதைக் கண்டுபிடிக்க, வழக்கில் அது முக்கியமான சாட்சியாகி விட்டது. மறுநாள் அந்த ஆள் 'காணாமல்' போய்விட்டான். ஒரு பழைய காரில் அவனுடைய அழுகிப் போன உடம்பு கிடைத்ததாகப் பேசிக்கொண்டார்கள் ஆம். மாரெட்டியின் கோபத்துக்கு ஆளான எவனும் உயிரோடு இருந்ததில்லை.

இருந்தாலும், வேறே ஏதாவது வழி... நிக் யோசித்தான்.

"உங்களை நான் உயிரோடு விட்டு விட்டேன் என்பது மாரெட்டிக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை,"

என்றான். அவனது மந்த மூளை கூட இப்போது சுறு சுறுப்பாக வேலை செய்தது. அசாதாரணமான தெளிவுடன் அவன் சொன்னான்: "நீங்கள் வேறே ஒன்றும் செய்ய வேண்டாம். இந்த நாட்டை விட்டு எங்கேயாவது போய்விடுங்கள் போதும். இந்தக் குப்பை மேட்டின் அடியில் உங்களைப் புதைத்து விட்டதாகச் சொல்லி விடுகிறேன். யாராலும் உங்களைக் கண்டுபிடிக்க முடியாது. என்ன? பேசாமல் தென்னமெரிக்காவில் ஏதாவது ஒரு தேசத்துக்குப் போய் விடுங்கள். அங்கேயே மறைந்து வாழுங்கள். வெளி நாட்டுப் பாங்கில் ரகசியப் பணம் சேர்த்து வைத் திருப்பீர்களே? இருக்கிறதல்லவா?"

தான் உயிர் தப்ப முடியும் என்று கால்ஃபாக்ஸ் எள்ளளவும் எதிர் பார்க்கவில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சி குரலில் அதிகம் வெளிப்பட்டு விடாதபடி எச்சரிக்கையாகப் பேசினார்: "பணத்துக்கென்ன? ஏராளமாய் இருக்கிறது, நிக். உனக்கு எவ்வளவு வேண்டும், கேள். தருகிறேன்," என்றார்.

பலமாகத் தலையை ஆட்டி மறுத்தான் அவன் "நான் உங்களைக் காப்பாற்றுவது பணத்துக்காக இல்லை. வேறே எதுக்காக என்றால்..." தன் எண்ணத்தை வெளிப்படுத்த அவனுக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. "எனக்கு உங்களிடம் ரொம்ப மதிப்பு. நீங்கள் என்னை மாரெட்டி யிடம் மாட்ட வைத்து விடாதீர்கள். தென் அமெரிக்கா வுக்குக் காலை விமானம் ஏதாவது இருக்கும். அதில் நீங்கள் போய்விட முடியுமா?"

"ஒரு கஷ்டமும் இல்லை, என்னை என் வீட்டில் இறக்கி விட்டுப்போ. என் பாஸ்போர்ட் அங்கே இருக்கிறது. எடுத்துக் கொள்ள வேண்டும்."

இரண்டு மணி நேரம் கழித்து ஒரு விமானத்தில் பறந்து கொண்டிருந்தார் கால்ஃபாக்ஸ்.

அந்த விமானம் எந்த வெளிநாட்டுக்கும் செல்ல வில்லை.

தலைநகரமான வாஷிங்டனை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

இங்கே இந்த நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்க, அங்கே வழக்கறிஞர்கள் மாநாட்டுக்காக வந்திருந்த உல்லாச நகரத்தில் காலைச் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தாள் ஜெனிபர்.

அன்று அவர்கள் ஊருக்குத் திரும்ப வேண்டிய கடைசித் தினம். மென்மையான காற்று, ஈச்சை மரங்களினூடே புகுந்து இனிய நாதங்களை எழுப்பிக் கொண்டிருந்தது. காலை வேளை, கடற்கரையெங்கும் உல்லாசப் பிரயாணிகள் நிறைந்திருந்தார்கள். கரையில் படுத்து, வெய்யிலின் சூட்டைப் பேராசையுடன் உடம்பில் ஏற்றிக் கொண்டி ருந்தார்கள்.

உணவு அருந்தும் மேசைக்கு ஓடி வந்தான் ஜோசப். நீச்சல் உடை அவனுடைய வாளிப்பான உடம்பை எடுப்பாகக் காட்டியது. பின்னாலேயே வேலைக்காரி வந்தாள்.

"அம்மா, அம்மா. நான் சாப்பிட்டாச்சு. போய்க் கொஞ்ச நேரம் தண்ணீர்ச் சறுக்கு விளையாடிவிட்டு வருகிறேனம்மா," என்றான்.

"இப்பத்தானே சாப்பிட்டே, ஜோசப்? அதற்குள் தண்ணிக்குப் போகணுமா?"

"எனக்கு ஜீரண சக்தி நிறைய உண்டு அம்மா. சாப்பிட்டதெல்லாம் எனக்கு அப்பவே செரிச்சிருக்கு மாக்கும்!" என்று பெருமையடித்துக் கொண்டான் ஜோசப்.

ஜெனிபர் சிரித்துவிட்டாள். "சரி, போ."

"ஜாக்கிரதையாய் இருப்பேன். கவலைப்படாதே. இங்கேயிருந்து என்னைப் பார்த்திட்டே இரு."

படகுத் துறையில் ஒரு விசைப் படகை நோக்கி அவன் ஓடுவதைப் பார்த்த வண்ணம் இருந்தாள் ஜெனிபர் விசைப்படகின் ஓட்டுநரோடு அவன் தீவிரமாகப் பேரம் பேசுவதும் அவளுக்குத் தெரிந்தது. பிறகு இருவரும் ஜெனிபரை நோக்கித் திரும்பிப் பார்த்தார்கள். 'இந்தப் பையனை அழைத்துச் செல்லலாமா?" என்று கேட்பது போல விசைப் படகின் டிரைவர் அவளைப் பார்த்தான், 'ஓகே,' என்று கையை வீசிக் காட்டினாள் ஜெனிபர். ஜோசப் நீர்ச் சறுக்கலுக்குக் காலணிகளை மாட்டிக் கொண்டான்.

விசைப்படகு உறுமும் சத்தம் கேட்டது. சறுக்குக் காலணிகளில் ஜோசப் தண்ணீரில் எழும்பி நிற்பது தெரிந்தது.

பக்கத்திலிருந்த வேலைக்காரி,"குழந்தை சரியான மீன் குஞ்சுதான்" என்றாள் பெருமிதத்துடன்.

ஜோசப் அம்மாவை நோக்கிக் கையை வீசியதில் பாலன்ஸ் தவறித் தண்ணீரில் விழுந்தான். பதைத்துப் போன ஜெனிபர் படகுத் துறையை நோக்கி ஓடினாள்.

ஆனால் ஒரு வினாடிதான் தண்ணீர்ப் பரப்புக்கு மேலே ஜோசப்பின் தலை தெரிந்தது. அவளைப் பார்த்துச் சிரித்தான்.

ஜெனிபர் அசைவற்று நின்றாள் ஜோசப் காலணிகளை மீண்டும் பொருத்திக் கொள்வதைப் படபடக்கும் இதயத்துடன் கவனித்தாள். படகு ஒருமுறை வட்டமடித்து விட்டு முன்னால் ஓட ஆரம்பித்தது. ஜோசப் சமாளித்துக் கொண்டு விட்டான். ஒரு முறை கையை அசைத்து விடைபெற்றுக் கொண்டு, அலைகளின் மீது ஒய்யாரமாய் ஆரோகணித்துப் பறந்தான்.

பயத்தினால் ஜெனிபரின் உள்ளம் தடக் தடக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. என் குழந்தைக்கு, என் செல்வத்துக்கு, என் கண்ணனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால்...

44

கடலில் தண்ணீர்ச் சறுக்கு விளையாடிக் கொண்டிருந்த ஜோசப்பின் தலை ஒரு நிமிஷம் அலை களுக்கு மேல் தெரியும். மறு நிமிடம் அலைகளின் கீழே மறைந்துவிடும்.

பார்த்துக் கொண்டே நின்ற ஜெனிபருக்குப் பெருமை யாயும் இருந்தது. பயமாயும் இருந்தது.

'எனக்கு என் பிள்ளை மேல் இருக்கிற பிரியம் மாதிரி தான் எல்லா அம்மாக்களுக்கும் தங்கள் குழந்தைகளின் மேல் இருக்குமா?' என்று எண்ணிக் கொண்டாள் ஒரு நாளும் இருக்க முடியாது. என் குழந்தைக்காக என் உயிரையும் கொடுப்பேன். அவனுக்காகக் கொலை செய்யவும் தயங்க மாட்டேன்....

ஏன், கொலையும் செய்தாயிற்றே! ஜோசப்பைக் காப்பாற்றுவதற்காக மாரெட்டியின் மூலம் நிஜமாகவே ஒரு கொலை கூடச் செய்தாயிற்றே!

வேலைக்காரி அருகே வந்து, "குழந்தை இப்போது விழுந்து எழுந்ததை பார்த்தீர்களா? பயங்கரமான விபத்து ஏற்பட்டிருக்க வேண்டியது! நல்ல வேளை" என்றாள்.

"ஆமாமாம், கடவுள் காப்பாற்றினார்" என்றாள் ஜெனிபர்

ஒரு மணி நேரம் கடல் விளையாடிவிட்டு ஜோசப் திரும்பினான். நீர்ச் சறுக்கு காலணிகளுடன் அவன் கரை ஏறி வந்ததே ஒரு தனி அழகாக இருந்தது.

பரபரப்புடன் தாயிடம் ஓடிவந்தவன், "அம்மா, அம்மா, சொன்னால் நீ நம்ப மாட்டாய் ஒரு பெரிய படகு கவிழ்ந்து கொண்டிருந்தது. எல்லாரும் திண்டாடிக் கிட்டிருந்தாங்க. நாங்க காப்பாற்றினோமாக்கும்!"

"அட அப்படியா? எத்தனை பேர் இருந்தார்கள்?"

"ஆறு பேர் அம்மா!"

"நீயேவா தண்ணீரிலிருந்து அவர்களை மேலே தூக்கினாய்?"

"நான் என்றால் நான்தானா? எல்லோருமாய்ச் சேர்ந்து. அவர்கள் படகில் ஒரு மூலையிலே ஓட்டிக் கொண்டிருந்தாங்க. நாங்க காப்பாற்றாட்டி, பாவம், தண்ணியிலேயே செத்திருப்பாங்க!" கதைகளுக்கே உரிய கற்பனையுடன் சொல்லிக் கொண்டு போனான்.

சிரித்து விடாமல் இருப்பதற்காக உதடுகளை அழுத்திக் கொண்டாள் ஜெனிபர். "பிரமாதம், பிரமாதம்! நல்ல வேளை நீ அவர்களைப் பார்த்தாயே!"

"ஆமாம்மா."

"கீழே விழுந்தாயே, அப்போது அடிகிடி படவில்லையே, கண்ணா?"

"சீச்சி!" என்றவன் தலையின் பின்புறத்தைத் தடவிக் கொண்டான்.

"சின்னதா ஒரு வீக்கம்...

"இரு, இரு. நான் பார்க்கிறேன்," என்று பதைத்தாள் அவள்.

"எதுக்கு? வேண்டாம். நீ வீக்கத்தைப் பார்த்ததே இல்லையா?"

அவனை அணைத்துக் கொண்டு எதுக்கும் தலையைத் தடவிப் பாத்தாள் அவள். ஒரு பெரிய முண்டு தட்டுப்பட்டது.

"ஐயையோ! ஒரு முட்டையளவு பெரிசாய் இருக்கே!"

"அது ஒண்ணுமில்லேம்மா."

"சரி, வா. ஓட்டலுக்குத் திரும்பலாம்."

"இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமேம்மா?"

"நேரமாகிறது, ஜோசப். லக்கேஜெல்லாம் எடுத்து வைக்க வேண்டாமா? ஊருக்குப் புறப்படணுமே? சனிக்கிழமை உனக்கு பேஸ்பால் போட்டி இருக்கிறதே? அதை விடலாமா?"

"ஊகூம், ஊகூம். விடக் கூடாது. வாட்டர்ஸ் என்கிற பையன் என் இடத்தைப் பிடிக்கக் காத்திருக்கிறான்."

"வாட்டர்ஸா? எனக்குத் தெரியுமே அவனை! பெண் பிள்ளை மாதிரி சகிக்க முடியாமல் ஆடுவான்!" என்றாள் ஜெனிபர் வேண்டுமென்றே.

"ஆமாம்மா! நீ கவனிச்சிருக்கியே!" தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டான் ஜோசப்.

ஓட்டலை அடைந்ததும், மானேஜருக்குப் போன் செய்தாள் ஜெனிபர். ஒரு டாக்டரை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குண்டான, நடுத்தர வயது டாக்டரொருவர் வந்து சேர்ந்தார்.

"என் பையன் தண்ணீரில் விளையாடும்போது விழுந்து அடிபட்டுக் கொண்டு விட்டான் தலையில்

வீக்கம் இருக்கிறது. நீங்கள் பார்த்துவிட்டால் தேவலை," என்று சொல்லி அவரை ஜோசப்பின் படுக்கையறைக்கு அழைத்துச் சென்றாள்.

"டாக்டர் வந்திருக்கார், ஜோசப்," என்றதும், "ஏம்மா? யாருக்கு உடம்பு சரியில்லை?" என்றான் அவன்.

"யாருக்கும் எதுவுமில்லேப்பா உன் தலையைப் பார்க்கத்தான் வந்திருக்கிறார்."

"என்னம்மா நீ! என் தலைக்கு என்ன வந்துவிட்டது?"

"ஒண்ணுமில்லைதான். எதுக்கும் டாக்டர் பார்த்துச் சொல்லி விட்டால் கவலையில்லாமல் இருக்கலாம் பார். எனக்காக, ப்ளீஸ்."

"பொம்பளைங்களே இப்படித்தான்!" என்று சொல்லி விட்டு, டாக்டரைச் சந்தேகமாய்ப் பார்த்தான் ஜோசப். "நீங்க ஊசி கீசி போட்டுக் குத்த மாட்டீங்களே?"

"சே, சே! நான் வலிக்காமல் வைத்தியம் பண்ணுகிற டாக்டர்!"

"ஆ! அந்த மாதிரி டாக்டர்களைத்தான் எனக்குப் பிடிக்கும்!"

"எழுந்து உட்கார்."

படுக்கை நுனியில் ஜோசப் உட்கார்ந்தான். அவன் பின்மண்டையை விரல்களால் தடவிப் பார்த்தார் டாக்டர். 'ஸ்!' என்றான் ஜோசப், வலியினால். ஆனால் கண்ணீர் விட்டு அழவில்லை.

அவர் ஒரு சின்னக் கருவியைக் கண்ணில் பொருத்திக் கொண்டு அவன் கண்களைப் பரி சோதித்தார்.

"என்ன டாக்டர் தெரிகிறது? யாராச்சும் அழகான டான்ஸ்காரிங்க ஆடற மாதிரி தெரியுதா?" என்று ஜோசப் சிரித்தான்.

"ஜோசப்! அப்படியெல்லாம் பேசக் கூடாது!" என்று ஜெனிபர் அதட்டினாள்.

"சும்மா விளையாட்டுக்கு சொன்னேம்மா."

டாக்டர் அவனுடைய இன்னொரு கண்ணையும் பரிசோதித்து விட்டு, "ஒரு கவலையும் இல்லை. பையன் ஜம்மென்று இருக்கிறான். வீக்கத்துக்குக் கொஞ்சம் ஐஸ் வையுங்கள். நாளைக்கு எல்லாம் சரியாகிவிடும்." பையை மூடிக்கொண்டு அவர் எழுந்தார்.

பெரும் சுமையை இதயத்திலிருந்து இறங்கி வைத்த மாதிரி இருந்தது ஜெனிபருக்கு. "தாங்க்ஸ் டாக்டர்," என்றாள்.

"என் பில்லை ஓட்டலில் கொடுத்து விடுவேன். அங்கே நீங்க பணம் கட்டி விடுங்கள் வரேன் தம்பி," என்று ஜோசப்பிடமும் சொல்லி கொண்டு டாக்டர் புறப்பட்டார்.

அவர் போனதும் அம்மாவிடம் திரும்பினாள். ஜோசப், "நீ ரொம்ப மோசம் அம்மா. பணத்தை வாரி இறைக்கிறாயே?"

"எதற்கு வாரியிறைக்கிறேன் நீ சந்தோஷமாக இருக்கணும், என்று தானே?"

"நான் எல்லாம் நல்லாத்தான் இருக்கேன். எங்க டீமிலேயே ரொம்ப ஆரோக்கியமானவன் நானாக்கும்!"

"அப்படியே என்னிக்கும் இரு"

"ஓ! ப்ராமிஸ்!"

விடிகாலை விமானத்தில் அவர்கள் நியூயார்க் கிற்குப் பயணமானார்கள். பயண முழுதும் ஜோசப் தூங்கிக் கொண்டு இருந்தான். இனி அவனைப் பற்றிக் கவலைப்

படுவதற்கு எதுவுமில்லை என்று ஜெனிபர் நினைத்துக் கொண்டாள்.

பாவம்.

வார்னருக்கு எதிலும் புத்தி செல்லவில்லை.

தேர்தல் பிரசாரத்துக்காக டி.வி.யில் ஒரு முக்கியமான பேச்சு தயாரிக்க வேண்டியிருந்தது அவனுக்கு. அறையில் உட்கார்ந்து குறிப்புக்கள் தயாரிக்க முயன்று கொண்டிருந்தான். அதிலே கவனம் செல்ல மறுத்தது.

ஜெனிபர், ஜெனிபர்-இதுவே அவன் சிந்தனையை நிறைத்து கொண்டிருந்தது. இன்றல்ல, ஜெனிபரை அந்த உல்லாச நகரத்தில் சந்தித்து விட்டுத் திரும்பியது முதல், வேறெதைப் பற்றியும் சிந்திக்க அவனால் முடியவில்லை.

மனைவியா ஜெனிபரா என்ற பிரசினை வந்த போது மனைவியைத் தேர்ந்தெடுத்தது முட்டாள்தனம் என்று அவனுக்குள் ஓர் அரிப்பு எப்போதுமே இருந்து வந்தது. ஜெனிபரைச் சந்தித்தபின் அந்த எண்ணம் இன்னும் உறுதிப் பட்டது. ஜெனிபரை ஒரு நாளும் விட்டிருக்கக் கூடாது. முன்பு எவ்வளவெல்லாம் சந்தோஷமா இருந்தோம்! அவ்வளவையும் எப்படித் தூக்கி யெறிந்து விட்டு நிற்கிறோம்!

நினைக்க நினைக்க அவனால் நம்ப முடியவில்லை.

இந்த இக்கட்டிலிருந்து வெளியேற வழியே கிடையாது! இனிமேல் அமைதி என்பதே இருக்கப் போவதில்லை.

கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

வார்னரின் உதவியாளர் ஒருவர் உள்ளே வந்தார். அவர் கையில் ஒரு கேஸட் -டேப் ரெக்கார்டரில் போட்டுக் கேட்கக் கூடிய கேசட்-இருந்தது.

"உங்களுடன் ஒரு நிமிஷம் பேச முடியுமா சார்?"

"கொஞ்சம் பொறுங்களேன். நான் ஒரு பேச்சைத் தயாரித்துக் கொண்டிருக்கிறேன்...."

"இது அவசரமான விஷயம் என்ற தோன்றுகிறது," என்றார் வந்தவர். அவர் குரலில் ஒரு பரபரப்புத் தெரிந்தது.

"சரி, சொல்லுங்கள். அப்படி என்ன அவசரமான விஷயம்?"

அவருடைய மேஜையை நெருங்கி வந்தார் அவர். "ஒரு டெலிபோன் கால் வந்தது. அதை டேப்பில் பதிவு செய்திருக்கிறேன். கேளுங்கள், உங்களுக்கே தெரியும்."

உதவியாளர், வார்னரின் மேஜை மீதிருந்த டேப் ரெக்கார்டரில் அந்தக் காஸெட்டைப் பொருத்தினார். பொத்தானைத் தட்டினார்.

டேப்பில் கேட்டதாவது:

உங்கள் பெயர் என்னவென்று சொன்னீர்கள்?

அது முக்கியமில்லை. வார்னரிடம் நான் பேசியாக வேண்டும். வேறு யாருடனும் நான் பேசத் தயாராயில்லை.

அவர் பிஸியாயிருக்கிறார். கடிதம் வேண்டுமானால் எழுதிப்போடுங்கள். அவரிடம் சேர்ப்பித்து விடுகிறேன்.

இல்லை, இல்லை. நான் சொல்லப் போவதைக் கவனமாகக் கேளுங்கள். இது ரொம்ப முக்கியமான விஷயம். மாரெட்டியை நான் பிடித்துத் தர முடியும் என்று அவரிடம் சொல்லுங்கள். உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இப்போது போனில் பேசுகிறேன். இதை மட்டும் வார்னரிடம் சொல்லுங்கள்.

சரி, சொல்கிறேன். நீங்கள் எங்கிருந்து பேசுகிறீர்கள்?

32 வது தெரு, கேபிடல் ஓட்டல், அறை எண் பதினான்கு. இருட்டின பிறகு அவரை வரச் சொல்லுங்கள் யாரும் பின் தொடராமல் இருக்கிறார்களா என்று பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள் நான் பேசுவதை யெல்லாம் நீங்கள் டேப்பில் பதிவு பண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? டேப்பை அவர் மட்டும் தான் கேட்க வேண்டும். வேறு யார் கேட்டாலும் நான் பிணமாகி விடுவேன்.

டேப் முடிந்து விட்டது.

உதவியாளர் கேட்டார் "என்ன சார், இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"மாரெட்டி! மாரெட்டி மட்டும் பிடிபட்டால்...

இரவு பத்து மணி.

ரகசியப் போலீசார் நான்கு பேர் துணைக்கு வர, வார்னர் அந்த ஓட்டலை அடைந்தான். பதினான்காம் எண் அறையை அடைந்து கதவை எச்சரிக்கையுடன் தட்டினான்.

ரொம்பக் கொஞ்சமாய்க் கதவு திறந்தது.

உள்ளேயிருக்கும் நபரின் முகம் வார்னருக்குத் தெரிந்தது. தன்னுடன் வந்த ரகசியப் போலீசாரிடம், "நீங்க வெளியே இருங்கள். யாரையும் இந்த பக்கம் விடாதீர்கள்," என்றான்.

கதவு இன்னும் சற்று அகலமாகத் திறந்த கொண்டது. அறைக்குள் நுழைந்தான் வார்னர்.

"வணக்கம், மிஸ்டர் வார்னர்," என்றார் அவர்

"வணக்கம் மிஸ்டர் கால்ஃபாக்ஸ்," என்றான் வார்னர்

ஆம். மாரெட்டியினால் கொலை செய்யப்பட விருந்த வழக்கறிஞர் கால்ஃபாக்ஸ்தான் அவர்.

45

வார்னரும் கால்ஃபாக்ஸும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றார்கள்.

முன்பே ஒரு முறை கால்ஃபாக்ஸை வார்னர் பார்த்திருக்கிறான். அப்போதைக்கு இப்போது இன்னும் வயதானவராகத் தோன்றினார் கால்ஃபாக்ஸ். அது மட்டுமல்ல. வேறே ஒரு வித்தியாசமும் தெரிந்தது. கண்ணுக்குத் தெரியாத வித்தியாசம்.

பயம். ஆம். அவர் முகத்தில் அச்சம் பரவியிருந்தது. வார்னரால் அதைக் காண முடிந்தது.

எப்போதும் தன்னம்பிக்கை மிகுந்தவராக இருப்பார் கால்ஃபாக்ஸ். திமிராகக் கூட இருப்பார். இப்போது அதையெல்லாம் காணோம். அவரை அச்சம் பிடித்தாட்டியது.

"நீங்கள் வந்ததைப் பற்றி ரொம்ப நன்றி வார்னர்," என்றார். அந்தக் குரலில் கஷ்டமும் சங்கடமும் தொனித்தன.

"மாரெட்டியைப் பற்றி ஏதோ சொல்ல வேண்டுமென்று சொன்னீர்களாமே?" என்றான் வார்னர்.

"ஆமாம். அவனை உங்கள் காலடியில் கொண்டு வந்து தள்ள முடியும் என்னால்."

"நீங்கள் மாரெட்டியின் வக்கீலாயிற்றே? ஏன் இப்படி மாறினீர்கள்?"

"காரணம் இருக்கிறது."

"சரி, பதிலுக்கு என்னிடம் என்ன எதிர் பார்க்கிறீர்கள்?" என்று வார்னர் நேரடியாகவே கேட்டான்.

"முதலில் என்மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்று உத்தரவாதம் தரவேண்டும். இரண்டாவதாக, நான் இந்த

நாட்டை விட்டு வெளியேறுவதற்கு உதவ வேண்டும். அதற்குப் பாஸ்போர்ட் முதலானது தேவை வேறு ஒரு புதிய பெயரில்."

வார்னரின் மூளை கிடுகிடுவென்று வேலை செய்தது.

இவரைத் தீர்த்துக் கட்டுவதென்று மாரெட்டி முடிவு செய்திருக்கிறான் அதனால்தான் மனிதர் ஓடி வந்திருக்கிறார் நம்மிடம். வேறு எந்தக் காரணமும் இல்லை.

எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பம்! வார்னரால் நம்பவே முடியவில்லை. பயங்கரக் கும்பல் பற்றிய அவனுடைய புலன் விசாரணைக்கு அருமையான திருப்பம் கிடைத்திருக்கிறது!

"உங்களுக்கு நான் பாதுகாப்புக் கொடுப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் மீது நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று உத்தரவாதம் தருவதாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பேச்சுக்குத்தான் சொல்கிறேன். நீங்கள் கோர்ட்டுக்கு வந்து முழுக்க முழுக்கச் சாட்சியம் சொல்ல வேண்டும். சொல்லுவீர்களா? உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவையும் ஒளிவு மறைவில்லாமல் வெளியிட வேண்டும். செய்வீர்களா?"

"செய்வேன்," என்றார் கால்ஃபாக்ஸ்.

ஒரு நிமிடம் யோசித்தபின் வார்னர் கேட்டான்: "நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்பது மாரெட்டிக்குத் தெரியுமா?"

"தெரியாது. நான் செத்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்," என்று கால்ஃபாக்ஸ் சங்கடமாகப் புன்னகை செய்தார். "ஆனால் ஒன்று. அவனிடம் மாட்டிக் கொண்டால் மறு நிமிடம் நான் பிணம்தான்."

"கவலைப் படாதீர்கள் அவனிடம் மாட்டிக் கொள்ளாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். அதாவது, நான் சொல்லும் நிபந்தனைகளுக்கு நீங்கள் உடன் பட்டால்."

"என் உயிரையே உங்களிடம் ஒப்படைத்துவிட்டேன், வார்னர்."

"நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள், நான் என்ன செய்யப்போகிறேன் என்பதைத் திட்டவட்டமாக நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். அதுதான் முதல் வேலை. நாம் ஓர் ஒப்பந்தத்துக்கு வருவோம். உங்களுக்கு எவ்வளவு பாதுகாப்புத் தர முடியுமோ அவ்வளவும் அரசாங்கம் தரும். நீங்கள் சொல்லப் போகும் தகவல்களில் எனக்குத் திருப்தி ஏற்பட்டால், உங்களுக்கு எந்த நாட்டில் போய் வாழ விருப்பமோ அங்கே போய் வாழுவதற்கு தேவையான பணம் தருவோம். வேறே ஒரு பெயரில் நீங்கள் நிம்மதியாக வாழலாம். பதிலுக்கு, நீங்கள் என்ன செய்ய வேண்டு மென்றால், மாரெட்டியின் நடவடிக்கைகளைப் பற்றிச் சகல விவரங்களும் தெரிவிக்க வேண்டும். அதையும் ஒரு ஜூரர் குழுவின் முன்னிலையில் சொல்ல வேண்டும். மாரெட்டியைப் பிடித்து விசாரணைக்குக் கோர்ட்டுக்குக் கொண்டு வருவோம். அப்போது நீங்கள் கவர்மெண்ட் தரப்பில் சாட்சி சொல்ல வேண்டும். இதற்கெல்லாம் சம்மதமா?"

கால்ஃபாக்ஸ் ஒரு பெருமூச்சு விட்டார் "சம்மதிக்கிறேன் மாரெட்டி எப்படியெல்லாம் மாறி விட்டான்! நீதி நேர்மையெல்லாம், கௌரவம் கண்ணிய மெல்லாம் காற்றிலே பறந்து விட்டது! பாவம், மாரெட்டியின் துரோகத்தைக் கண்டு பெரியவரின் ஆத்மா துடிக்கும்!"

வார்னர் அவருக்குப் பதில் சொல்லவில்லை. மனத்துக்குள் சிரித்துக் கொண்டான் பயங்கரவாதக்

கும்பலின் வழக்கறிஞரான இந்த ஆசாமி நூற்றுக் கணக்கான முறை சட்டத்தின் கண்ணில் மண்ணைத் தூவி யிருக்கிறார். பச்சைப் படுகொலை செய்த நபர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்திருக்கிறார் உலகம் கண் டேயிராத கொடுமையான பயங்கரங்களைச் செய்த கும்பலுக்குத் திட்டங்கள் தீட்டித் தந்து உறுதுணையாக இருந்திருக்கிறார். இவர் போய் இப்போது நீதியையும் நேர்மையையும் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பற்றிப் பேசுகிறார்!

வார்னரை நிமிர்ந்து நோக்கினார் கால்ஃபாக்ஸ். "சரி, உங்கள் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனால், எழுத்து மூலமாக ஒப்பந்தம் இருக்க வேண்டும். அரசாங்க வக்கீல் அதில் கையெழுத்திட வேண்டும்."

"உங்கள் இஷ்டப்படியே செய்யலாம்," என்ற வார்னர் சுற்று முற்றும் நோக்கினான். "இது ரொம்ப மட்டமான ஓட்டலாக இருக்கிறது. முதலில் இங்கிருந்து வெளியேறி விடுங்கள்."

"ஆமாம், வேறே நல்ல இடத்துக்குப் போனால்தான் தேவலை. மாரெட்டிக்கு ஆயிரம் கண்கள் என்னைக் கண்டுபிடித்து விடுவான்."

"அவன் கண்டுபிடிக்கவே முடியாத இடமாக உங்களுக்கு ஏற்பாடு செய்து தருகிறேன்," என்று கூறிவிட்டு வார்னர் புறப்பட்டான்.

அன்று இரவு பன்னிரண்டு அடித்துப் பத்து நிமிடத்துக் கெல்லாம் கால்ஃபாக்ஸ் தங்கியிருந்த ஓட்டலின் வாசலுக்கு ஒரு ராணுவ டிரக்கும் இரண்டு ஜீப்புகளும் வந்து நின்றன. நாலு ராணுவக் காவலர்கள் உள்ளே சென்றார்கள். சில நிமிடங்களில் கால்ஃபாக்ஸைப் பாதுகாப்பாகச் சூழ்ந்து கொண்டு வெளியே அழைத்து வந்தார்கள். அவரை ராணுவ லாரியில் பத்திரமாக ஏற்றிக் கொண்டார்கள்.

முன்னாடி ஒரு ஜீப் பாதுகாப்பாகச் செல்ல, பின்னாடி ஒரு ஜீப் பின்தொடர, அந்த ராணுவ லாரி பறந்தது தலை நகரிலிருந்து முப்பத்தைந்து மைல் தொலைவிலுள்ள ஓர் இடத்துக்கு.

நாற்பது நிமிடப் பயணம்.

கப்பற்படையைச் சேர்ந்த ஒரு முகாமில் அவர் களுக்காகக் காத்திருந்தார் அதிகாரி.

இரண்டு மணி நேரத்துக்கு முன்புதான் அவருக்கு அவருடைய மேலதிகாரியிடமிருந்து தகவல் வந்திருந்தது.

"கவனமாகக் கேளுங்கள். இன்னும் கொஞ்ச நேரத்தில் ஓர் ஆள் அங்கே கொண்டு வரப்படுவார். முகாமில் உள்ள சிறையைச் சுத்தப்படுத்தி, அவரைப் பத்திரமாக வைத்திருக வேண்டும். அடுத்த உத்தரவு வருகிற வரையில் பார்த்துக் கொள்ளுங்கள்."

"என்ன சார்? சிறையில் வைக்கும்படியா சொன்னீர்கள்."

"ஆமாம். அந்த மனிதரைத் தன்னந் தனியே வைத்திருங்கள். யாரும் அவரை நெருங்கக் கூடாது. ஒட்டிக்கு ரெட்டியாகக் காவல் போடுங்கள் என்ன?"

"சரி சார்."

"இன்னொரு விஷயம்: உங்கள் பாதுகாப்பில் இருக்கும் போது அந்த ஆளுக்கு ஏதேனும் நேர்ந்தால் உங்களை உண்டு இல்லையென்று பண்ணிவிடுவேன் உஷார்!" என்றார் அந்த மேலதிகாரி.

முகாம் அதிகாரிக்கு எல்லாம் புதிராயிருந்தது. அந்த முகாமிலுள்ள சிறையில் ராணுவக் கைதிகளைத்தான் வைத்திருப்பது வழக்கம். சிவில் ஆட்கள் யாரும் வந்தது கிடையாது இதுவரை.

ராணுவ லாரி வந்துகொண்டிருந்தது. முன்னும் பின்னும் ஜீப்புகள் புடைசூழ. முகாம் அதிகாரி தன் உதவியாளரைக் கூப்பிட்டார்.

"சிறையில் வைக்கப் போகும் ஆள் வருகிறார் அவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியதுதான் நம்முடைய ஒரே வேலை. புரிகிறதா? பக்காவான காவலர்களைத் தேர்ந்தெடுத்துக் காவல் வையுங்கள். யாரும் அவரை நெருங்கக் கூடாது. அவரைப் பார்க்க யாரும் வரக்கூடாது. தபால் கிபால் போகக் கூடாது. பார்சல் பாக்கெட் எதுவும் வரக்கூடாது. என்ன?"

"சரி சார்," என்றார் உதவியாளர்.

"அவருக்காகச் சாப்பாடு தயாரிக்கும்போது சமையலறையில் நீங்கள் இருந்து கண்காணிக்க வேண்டும்."

"எஸ் ஸார்."

"யாராவது அந்த ஆளைப் பற்றி அனாவசியமாய் அக்கறை காட்டினால் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். வேறே ஏதாவது தெரிந்து கொள்ளணுமா?"

"இல்லை சார்."

"நல்லது. கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருங்கள் ஏதாவது ஏடாகூடமாக நேர்ந்ததோ உங்களை உண்டு இல்லையென்று பண்ணிவிடுவேன்!" என்று தன் மேலதிகாரி சொன்னதையே தன் உதவியாளருக்குத் திருப்பிச் சொன்னார் அதிகாரி.

விடிகாலை வேளை

வீட்டின் மீது தூறல்கள் விழும் மெல்லிய சத்தத்தைக் கேட்டுக் கண் விழித்தாள் ஜெனிபர்

அலாரம் கடியாரத்தைப் பார்த்தாள் எழுந்து வேலைகளைக் கவனிக்கும் நேரம்.

எழுந்து கொண்டாள்.

அரை மணி நேரம் கழித்துக் காலைச் சிற்றுண்டிக்காகச் சாப்பாட்டு மேசைக்கு வந்தபோது அங்கே ஜோசப் இருக்கவில்லை.

வேலைக்காரி வந்து 'குட் மார்னிங்' சொன்னாள்

"குட் மார்னிங். ஜோசப் எங்கே?"

"என்னவோ களைப்பா யிருக்கிறதென்று சொன்னான். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கட்டும் என்று விட்டு விட்டேன். இன்றைக்கு அவனுக்குப் பள்ளிக்கூடம் கிடையாது. நாளைக்குத் தானே?"

"நல்லது. தூங்கட்டும்," என்றாள் ஜெனிபர்.

சிற்றுண்டியை முடித்துக்கொண்டாள். வேலைக்குக் கிளம்புமுன் ஜோசப்பிடம் சொல்லிக் கொள்வதற்காக அவனுடைய அறைக்குச் சென்றாள்.

படுக்கையில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான் அவன்.

கட்டிலின் முனையில் உட்கார்ந்து. "ஏய் தூங்கு மூஞ்சி, நான் ஆபீசுக்குப் போகிறேன். குட்பை சொல்லு," என்றாள்.

மெதுவாய் ஒரு கண்ணை மட்டும் திறந்தான் ஜோசப். "போயிட்டு வா," என்றான் தூக்கம் அழுத்தும் குரலில். "எழுந்து வரணுமாம்மா?"

"வேண்டாம். சும்மா இப்படியே இன்று பூராப் படுத்திரு. என்ன? வீட்டுக்குள்ளேயே ஏதாவது விளையாடிக் கொண்டிரு. வெளியே போகாதே. ஓரே மழை."

தூக்கக் கலக்கத்துடன் எழுந்து உட்கார்ந்தவன் மறுபடி படுத்துத் தூங்கி விட்டான்.

நீதிமன்றத்தில் நிறைய வேலை இருந்தது ஜெனிபருக்கு. எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு வீடு திரும்பியபோது இரவு ஏழு மணியாகிவிட்டது.

பகல் பூரா தூறிக்கொண்டிருந்த மழை இப்போது கொட்டோ கொட்டென்று கொட்ட ஆரம்பித்திருந்தது. தோட்டத்துக்குள் காரைச் செலுத்தியபோது, வீடு, முற்றுகையிடப்பட்ட கோட்டை மாதிரி தோன்றியது.

வேலைக்காரி கதவைத் திறந்து, ஜெனிபரின் நீர் சொட்டும் ரெயின் கோட்டைக் கழற்ற உதவினாள்.

ஈரத் தலையை உதறிக் கொண்டாள் ஜெனிபர் "ஜோசப் எங்கே?"

"தூங்கிக்கொண்டிருக்கிறான்."

ஜெனிபரின் முகத்தில் கவலை படர்ந்தது. "நாள் பூராவுமா தூங்கியபடியே இருக்கிறான்?"

"சே, சே. இல்லை. எழுந்து கொஞ்ச நேரம் விளையாடிக் கொண்டிருந்தான். சாப்பாடு தயாரித்துக் கொண்டு அவனைக் கூப்பிடுவதற்காக மாடிக்குப் போனேன். மறுபடி தூங்கி விட்டான் சரி, தூங்கட்டும் என்று விட்டுவிட்டேன்."

ஜெனிபர் மாடிக்குச் சென்று ஜோசப்பின் அறையை ஓசையின்றித் திறந்து உள்ளே நுழைந்தாள்.

ஜோசப் தூங்கிக் கொண்டிருந்தான்.

குனிந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

ஜ்ரம் இல்லை.

உடம்பில் வேறு எதுவும் மாறுதல் தெரிகிறதா என்று பார்த்தாள். தெரிய வில்லை. நாடியைப் பிடித்துப் பார்த்தாள் எந்தக் கோளாறும் தென்படவில்லை.

நாமாகப் பித்துக்குளித்தனமாய் ஏதேதோ கற்பனை செய்து கொள்கிறோம். அவ்வளவுதான். குழந்தை ரொம்ப அதிகமாய் விளையாடிக் களைத்துப் போய் இருப்பான்.

அறையை மெல்லச் சாத்திக் கொண்டு கீழே இறங்கி வந்தாள். வேலைக்காரியிடம், "ஜோசப்புக்குக் கொஞ்சம் ஸான்ட்விச் தயாரித்து, அவன் தலைமாட்டில் வைத்துவிடு. எழுந்து கொண்டதும் அவன் பாட்டுக்கு எடுத்துச் சாப்பிடட்டுமே?" என்றாள்.

பிறகு தான் மட்டுமே சாப்பாட்டை முடித்துக் கொண்டு, மறுநாள் இருந்த வழக்குக்கான தஸ்தாவேஜுகளைப் பார்த்தாள்.

மாரெட்டியைக் கூப்பிட்டு ஊர் திரும்பிவிட்டதைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தாள் ஆனால் வார்னரைச் சந்தித்துவிட்டுவந்த கையோடு மாரெட்டியுடன் பேசத் தயக்கமாயிருந்தது.

நள்ளிரவாகிவிட்டது வேலைகள் முடிவதற்கு. சோம்பல் முறித்துக்கொண்டாள். காகிதங்களை ஒழுங்காக அடுக்கி வைத்து, விளக்குகளை அணைத்து விட்டு, ஜோசப்பின் அறைக்குப் போய்ப் பார்த்தாள்.

இப்போதும் அவன் தூங்கிக் கொண்டிருந்தான். வேலைக்காரி செய்து வைத்திருந்த ஸான்ட்விச் அப்படியே இருந்தது.

மறுநாள் காலை ஜெனிபர் சமையலறைக்கு வந்த போது, ஜோசப் ஜம்மென்று உடையணிந்து, பள்ளிக்குப் புறப்படத் தயாயிருந்தான். "குட் மார்னிங் அம்மா."

"குட்மார்னிங் கண்ணா, இப்ப எப்படி இருக்கு?"

"ஜோராயிருக்கிறேன். நேற்று என்னவோ களைப்பு. வெளியூர் போயிருந்தோமே, அதனால் இருக்கும்," என்றான் அவன்.

"இருக்கலாம். ஸ்கூலுக்குப் புறப்படுவதில் சந்தோஷம் தானே?" என்றாள் ஜெனிபர்.

"நான் சொல்ல மாட்டேன். சந்தோஷம்தான் என்று சொன்னால் தினம் தினம் என்னை விரட்டுவே!" என்றான் அவன் சிரித்துக் கொண்டே...

அன்று பகல் அவள் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது ஸ்டெனோ உள்ளே வந்தாள்.

"தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கணும். மிஸஸ் ஸ்டெளட் என்று ஒரு அம்மாள் உங்களைப் போனில் கூப்பிடுகிறாள்," என்றாள்.

ஜெனிபருக்கு வயிற்றை என்னவோ செய்தது.

மிஸஸ் ஸ்டெளட் என்பது ஜோசப்பின் பள்ளி ஆசிரியை.

46

ஜோசப்பின் ஆசிரியையா கூப்பிடுகிறாள்? எதற்காக? ஜெனிபருக்குப் பயம் ஏற்பட்டது.

பதட்டமாகச் சென்று டெலிபோனை எடுத்தாள். "ஹலோ மிஸஸ் ஸ்டெளட், என்ன விஷயம்? எதற்குக் கூப்பிட்டீர்கள்?"

"ஒன்றுமில்லை, அம்மா கவலைப்படாதீர்கள் உங்களைக் கலவரப்படுத்த வேண்டாமென்றுதான் பார்த்தேன். ஆனால் எதற்கும் சொல்லிவிடுவது நல்லது என்று தோன்றியதால்..."

ஜெனிபரின் பதைப்பு அதிகரித்தது. "என்ன? என்ன, சொல்லுங்கள்."

"வந்து... உங்கள் பையன் ஜோசப் வீட்டிலே நன்றாய்த் தூங்குகிற மாதிரி பார்த்துக் கொண்டால் தேவலை..."

"என்னது? என்ன சொல்கிறீர்கள்?"

"ஆமாம்மா. இன்று பூரா எல்லா வகுப்பிலும் அவன் தூங்கிக் கொண்டே இருக்கிறான். அவனோட ஆசிரியைகள் இரண்டு பேர் என்னிடம் வந்து சொன்னார்கள். ராத்திரி அதிகம் கண் விழிக்காமல் சீக்கிரம் தூங்கப் போகிற மாதிரி அவனைப் பார்த்துக் கொண்டால் நல்லது."

என்ன பேசுவதென்று ஜெனிபருக்குப் புரியவில்லை வீட்டிலேயும் அவன் சதா தூங்கிக் கொண்டுதானே இருந்தான்? போனை வெறித்து நோக்கிய வண்ணம், "சரி... சரி. பார்த்துக் கொள்கிறேன்..." என்றாள்.

மெதுவாக டெலிபோனை வைத்தாள். நிமிர்ந்த போது அறையில் எல்லாருமே தன்னைக் கவனித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. காரியதரிசியைக் கூப்பிட்டாள். "ஸிந்தியா, எல்லா வேலைகளையும் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். எனக்கு ஒரு வேலை இருக்கிறது."

"எல்லாமே... என்று காரியதரிசி சொல்லத் தொடங்கினாள். அதைக் கேட்பதற்கு ஜெனிபர் அங்கில்லை. புயலாய்ப் புறப்பட்டு விட்டாள்

வெறி பிடித்தவள்போல் காரை ஓட்டினாள் சாலையின் வேகக் கட்டுப்பாடுகளை மதிக்கவில்லை. சிவப்பு சிக்னல்களை லட்சியம் செய்யவில்லை.

ஜோசப்... ஜோசப்... ஜோசப்...

அவனுக்கு ஏதோ பயங்கரமாக ஆகிவிட்டது. கன்னா பின்னாவென்ற கற்பனைகளில் அவள் மனம் தலை தெறிக்க ஓடியது.

ஐயோ! வீடு வரவே வராதா? போகப் போகப் போய்க் கொண்டேயிருக்கிறதே!

ஒரு வழியாய் வீட்டு வாசல் தெரிந்தது. ஆம்பூலன்ஸ் வண்டிகளும் போலீஸ் கார்களும் வாசலை அடைத்துக் கொண்டிருக்குமோ? பயங்கரமாக நினைத்துக் கொண்டாள்.

அப்படி எதுவும் வாசலில் ஈ காக்கை தென்படக் காணோம். காரை நிறுத்திவிட்டு, கதவை மடேலென்று திறந்து கொண்டு வீட்டுக்குள் பாய்ந்தாள் -

"ஜோசப்!" என்று கூவியவாறு.

முன்னறையில் அவன் இருந்தான் டிவியில் பேஸ்பால் விளையாட்டைப் பார்த்துக் கொண்டு.

"என்னம்மா இவ்வளவு சீக்கிரமாய் வந்துட்டே? வேலைக்குச் சீட்டுக் கிழிச்சிட்டாங்களா?" என்றான்.

அறை வாசலிலேயே ஆணியடித்த மாதிரி நின்றாள். வைத்த கண்ணை எடுக்காமல் அவனையே நோக்கியவாறு, நிம்மதியால் தேகம் நிறைய... 'சே! நான் ஒரு மடப் பெண்!' என்று எண்ணிக் கொண்டாள்.

"நீ பார்க்காமல் போயிட்டியேம்மா? ஆட்டம் பிரமாதமாயிருக்கு!" என்றான் ஜோசப்.

"எப்படிப்பா இருக்கிறே? உடம்புக்கு ஒண்ணுமில்லையே?"

"உடம்பா? ஜம்முனு இருக்கேன் அம்மா"

அவன் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் ஜுரம் எதுவும் இல்லை.

"ஒண்ணுமில்லேம்மா நீ ஏன் இப்படி இருக்கிறே? ஏதாவது கவலையா? என்கிட்டே சொல்லு. உன் கவலை தீர

நான் வழி சொல்கிறேன்," என்றான் அவன் பெரிய மனுஷத்தனமாக.

அவள் புன்னகை செய்தாள். "ஒண்ணும் இல்லேடா, கண்ணா. வந்து... ஏதாவது வலி கிலி இருக்கிறதா உனக்கு?"

அவனுக்கு எரிச்சலாயிருந்தது. "போம்மா, சும்மா தொண தொணத்துகிட்டு! ஆட்டம் எவ்வளவு ஜோராயிருக்கு! முதல் இன்னிங்ஸிலே என்ன நடந்தது தெரியுமா?"

அவன் விவரிக்க ஆரம்பித்தான். அவன் பேச்சையும் ஆர்வத்தையும் பார்க்கப் பார்க்க ஜெனிபருக்குப் பரவசமாக இருந்தது. சீ! என்னவெல்லாம் கற்பனை செய்து கொண்டு விட்டேன்! குழந்தை நல்லபடிதான் இருக்கிறான்...

"நீ ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிரு. நான் போய்ச் சமையலைக் கவனிக்கிறேன்."

சுமை அகன்ற லேசான உள்ளத்துடன் சமையலறைக்குச் சென்றாள் ஜெனிபர். வாழைப் பழக்கேக் என்றால் ஜோசப்புக்கு ரொம்பப் பிடிக்கும். அதைத் தயாரிக்க ஆரம்பித்தாள்.

முப்பது நிமிடம் கழித்து ஜோசப்பின் அறைக்கு அவள் திரும்பிய போது -

அவன் தரையில் விழுந்து கிடந்தான் நினைவு நீச்சு இல்லாமல்.

ஆம்புலன்ஸ் போய்க் கொண்டேயிருந்தது முடிவில்லாமல். ஆஸ்பத்திரி எப்போது வரும்?

ஜோசப்பின் கையைப் பிடித்துக் கொண்டு ஜெனிபர் உட்கார்ந்திருந்தாள் ஆம்புலன்ஸ் சிப்பந்தி பிராண வாயு முகமூடியை ஜோசப்பின் முகத்தின் மீது கவிழ்த்துப் பிடித்திருந்தான்.

ஜோசப்புக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை.

ஆம்புலன்ஸில் சைரன் வீரிட்டுக் கொண்டேதான் சென்றது. ஆனாலும் போக்குவரத்து நெருக்கடி அதிகமாய் இருந்ததால் அவ்வளவு சுலபமாய் வழி கிடைக்கவில்லை.

ஆம்புலன்ஸ் மெதுவாகப் போகும் போதெல்லாம் பக்கத்தில் வரும் கார்களிலிருந்து பல முகங்கள் ஆம்புலன்ஸை எட்டி எட்டிப் பார்த்தன. நினைவில்லாமல் கிடக்கும் சிறுவனையும் அவன் பக்கத்தில் வெளுத்து விட்ட முகத்தோடு இருக்கும் பெண்ணையும் திகைப்போடு பார்த்தார்கள் என்ன மனிதர்கள் இவர்கள், தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகாமல்! கோபம் கோபமாய் வந்தது ஜெனிபருக்கு. "ஆம்புலன்ஸ் வண்டிகளுக்குக் கறுப்புக் கண்ணாடி போட்டாலென்ன?" என்று முனகினாள்.

3265

சிப்பந்தி திடுக்கிட்டவராக, "என்னம்மா, என்ன சொல்றீங்க?" என்றான்.

"ஒன்றுமில்லை... ஒன்றுமில்லை."

அப்பா! முடிவேயில்லாத பிரயாணத்துக்கும் முடிவு வந்தது.

ஆஸ்பத்திரியின் பின்புறமிருந்த எமர்ஜென்ஸி பகுதில் ஆம்புலன்ஸ் நின்றது. வாசலிலேயே இரண்டு இளம் டாக்டர்கள் காத்து நின்றார்கள்.

ஜோசப்பை ஆம்புலன்ஸிலிருந்து இறக்கி ஒரு ஸ்ட்ரெச்சருக்கு மாற்றினார்கள். தான் என்ன செய்வதென்று தெரியாமல் ஜெனிபர் நின்றிருந்தாள்.

ஒரு சிப்பந்தி வந்து, "நீங்கள்தான் பையனின் அம்மாவா?" என்றார்.

"ஆமாம்."

"இப்படி வாருங்கள்."

ஒலியும் ஒளியும் அசைவுகளும் கலந்த கெலைடாஸ்கோப்பில் பார்க்கிறமாதிரி இருந்தது அவளுக்கு. வெள்ளைத்

தாழ்வாரத்தின் வழியே ஸ்ட்ரெச்சரைத் தள்ளிக்கொண்டு சென்றார்கள் எக்ஸ்ரே அறைக்கு.

குழந்தையைப் பின் தொடர்ந்து செல்ல முயன்றாள் ஜெனிபர். ஆனால் ஆஸ்பத்திரி சிப்பந்தி, "உங்கள் பெயர் விலாசம் எல்லாம் பதிவு செய்துவிட்டு வாருங்கள்," என்று தடுத்து நிறுத்தினார்.

அறைக்கு வெளியே ஒல்லியான பெண்ணொருத்தி மேஜையடியில் உட்கார்ந்திருந்தாள். ஜெனிபரிடம் அவள், "எப்படிப் பணம் கட்டப் போகிறீர்கள்? ப்ளூ க்ராஸ் வழியாகவா? அல்லது வேறு ஏதாவது இன்ஷ்யூரன்ஸா?" என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனபோது-

'சரிதான், நிறுத்து!' என்று அலற வேண்டும் போல் இருந்தது ஜெனிபருக்கு. வேறு வழியில்லாமல் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொன்னாள். ஏகப்பட்ட பாரங்களைப் பூர்த்தி செய்தாள். பிறகுதான் அந்தப் பெண் ஜெனிபரைப் போக விட்டாள்.

எக்ஸ்ரே எடுக்கும் அறையை அவள் அடைந்த போது அங்கே யாரும் இருக்கவில்லை.

ஜோசப்பை எங்கே கொண்டு சென்று விட்டார்கள்?

வெளியே ஓடி வந்து பார்த்தாள். பித்துப் பிடித்தாற் போல் நாலு புறமும் தேடினாள் ஒரு நர்ஸ் அந்தப் பக்கம் வந்தாள் அவள் கையைச் சட்டென்று பிடித்து, "என் பிள்ளை எங்கே?" என்றாள்

"எனக்குத் தெரியாதே. பையனின் பெயர் என்ன?"

"ஜோசப்-"

"அவனை எங்கே விட்டிருந்தீர்கள்?"

"அவனுக்கு... அவனை எக்ஸ்ரே எடுப்பதற்காக அழைத்துப் போனார்கள்..." தாறுமாறாகப் பேச்சு வந்தது. "அவனை என்ன பண்ணினார்கள்? சொல்லும்மா! சொல்லு."

நர்ஸ் அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "இங்கேயே இரும்மா. நான் போய்ப் பார்த்துவிட்டு வர்றேன்," என்று கூறி விட்டுச் சென்றாள்.

சில நிமிடங்களில் திரும்பி வந்து, "டாக்டர் உங்களைப் பார்க்க வேண்டும் என்கிறார். என்னோடு வாருங்கள்," என்றாள்.

ஜெனிபரின் கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. நடப்பதே கஷ்டமாக இருந்தது.

"ஏம்மா... உங்களுக்கு ஒன்றுமில்லையே?" என்றாள் நர்ஸ்.

அச்சம் காரணமாக ஜெனிபருக்கு நாக்கு உலர்ந்து விட்டது. "என் பிள்ளையைப் பார்க்கணும்... என் பிள்ளையை..."

வினோதமான பல கருவிகள் நிறைந்த அறையை அடைந்தார்கள் இருவரும். "இங்கே இருங்கள், ப்ளீஸ்."

சில நிமிடங்கள் கழித்து டாக்டர் வந்தார். செக்கச் சிவந்த முகம். பெருமனான உடம்பு. விரல்களில் சிகரெட் கறை படிந்திருந்தது. "ஜெனிபர் என்பது..."

"நான்தான். ஜோசப் எங்கே?"

"ஒரு நிமிஷம் இப்படி உள்ளே வாருங்கள்." அடுத்தாற் போலிருந்த ஒரு சிறிய அறைக்கு அவளை அழைத்துச் சென்றார். அது அவருடைய அலுவலக அறை.

ஜெனிபர் எப்படியோ நாற்காலியில் உட்கார்ந்தாள். "ஜோசப்... அவனுக்குப் பயப்படும்படி ஒன்றுமில்லையே, டாக்டர்?"

"இனிமேல்தான் தெரியணும்." அவ்வளவு பெரிய உடம்புக்கு அவருடைய குரல் ரொம்ப மென்மையாக இருந்தது ஆச்சரியம் தான். "நீங்கள் சில தகவல்களைச் சொல்ல வேண்டும். உங்கள் பிள்ளைக்கு என்ன வயது?"

"ஏழேதான்," என்றாள். ஏழு என்பதற்குப் பதில் 'ஏழேதான்' என்று வாயில் வந்துவிட்டது - கடவுளுக்கு ஒரு கண்டனம் போல.

"சமீபத்தில் அவனுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டதா?"

தண்ணீர்ச் சறுக்கு விளையாடிக் கொண்டிருந்த போது ஜோசப் தடுமாறி விழுந்ததும், கட்டைகளில் இடித்துக் கொண்டதும் மின்னல் போல் பளீரென்று ஞாபகம் வந்தது. "வந்து... நீர்ச் சறுக்கின் போது விழுந்தான்... மண்டையில் வீக்கம் இருந்தது..."

"எத்தனை நாள் முன்பு அது?"

"கொஞ்ச நாள் முன்பு... நிதானமாகச் சிந்தனை செய்வதே அவளுக்குக் கஷ்டமாக இருந்தது.

"விபத்துக்குப் பிறகு நன்றாயிருந்தானா?"

"ஆமாம். பின் மண்டையில் ஒரு வீக்கம் இருந்தது. மற்றப்படி... நன்றாகவே இருந்தான்."

"ஞாபக சக்தியை இழந்த மாதிரி ஏதாவது?"

"இல்லை."

"அவன் போக்கில், நடத்தையில் ஏதாவது மாறுதல்?"

"இல்லை."

"வலிப்பு - கழுத்துப் பிடிப்பு தலைவலி என்று..."

"இல்லை."

டாக்டர் எழுதுவதை நிறுத்திக் கொண்டு ஜெனிபரை நிமிர்ந்து பார்த்தார். "எக்ஸ்ரே எடுத்திருக்கிறோம். ஆனால் அது போதாது. ஸ்கான் எடுக்க வேண்டும்..."

"ஸ்கான்?"

"ஆமாம். இங்கிலாந்திலிருந்து புதிதாய் வந்திருக்கிறது. கம்ப்யூட்டர் கருவி. மூளையின் உள் பகுதிகளைப்

படம் எடுக்கும். அதன் பிறகு இன்னும் சில டெஸ்ட்டுகள். உங்களுக்குச் சம்மதம்தானே?"

"அது... அது... அவள் திணறினாள். "அவசியமா யிருந்தால் செய்யுங்கள் அவனுக்கு அதில் கஷ்டம் எதுவும் இருக்காதே?"

"இருக்காது. அப்புறம் அவன் முதுகுத் தண்டில் ட்யூப் போட்டுப் பார்க்கணும்."

அவர் சொல்லச் சொல்ல ஜெனிபருக்குப் பயம் அதிகரித்தது. கஷ்டப்பட்டுக் கேட்டாள்: "அவனுக்கு என்ன கோளாறு என்று நினைக்கிறீர்கள்? என் பிள்ளைக்கு என்ன..." அவள் குரல் அவளுடையது மாதிரியே இல்லை.

"ஊகமாய் எதுவும் சொல்லக் கூடாதம்மா. இன்னும் இரண்டொரு மணி நேரத்தில் தெரிந்துவிடும். பையன் இப்போது விழித்துக் கொண்டுதான் இருக்கிறான். நீங்கள் போய்ப் பார்ப்பதென்றால் பார்க்கலாம்."

ஒரு நர்ஸ் அவளை ஜோசப் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள்.

சின்ன உருவமாய், வெளிறிப் போனவனாய்ப் படுத்திருந்தான் ஜோசப். "ஹை அம்மா!"

"கண்ணா." அவள் படுக்கை நுனியில் உட்கார்ந்தாள். "எப்படிடா இருக்கு?"

"என்னவோ போல் இருக்கும்மா. நான் இங்கேயே இல்லை மாதிரி இருக்கு."

அவன் கையை மெல்ல எடுத்துத் தன் கையோடு வைத்துக் கொண்டாள் ஜெனிபர். "நீ இங்கே தாண்டா கண்ணா இருக்கிறே. நான் உன்கூடவே இருக்கிறேன்."

"ஒவ்வொண்ணும் இரண்டாய்த் தெரியுதும்மா."

"அதை... அதை டாக்டரிடம் சொன்னாயா?"

"ஊகூம். டாக்டர் கூட இரண்டு பேராய்த் தெரிஞ்சார்"

"உனக்கு இரண்டு பில் அனுப்பப் போறார், பார்."

அவன் இடுப்பை அணைத்து இறுகத் தழுவிக் கொண்டாள் அவள். அவன் தேகம் சுருங்கி மெலிந்து விட்ட மாதிரி தோன்றியது.

"அம்மா."

"என்னடா கண்ணா?"

"நான் செத்துப் போகும்படி விட்டு விட மாட்டியே?"

குபுக்கென்று அவள் கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது. "மாட்டேண்டா, கண்ணா, உன்னை விடவே மாட்டேன். டாக்டர்கள் வந்து உன்னை ஜம்மென்று பண்ணப் போகிறார்கள் பிறகு நானும் நீயும் நம்ம வீட்டுக்குப் போகப் போகிறோம்."

"சரிம்மா. நாம்ப இன்னொரு வாட்டி மெக்ஸிகோ போகலாம்னு சொல்லியிருக்கிறே. மறந்திடாதே."

"மறக்க மாட்டேம்பா. உனக்கு உடம்பு சரியானதும்-"

அவள் சொல்லி முடிப்பதற்குள் அவன் மீண்டும் தூங்கிப் போனான்.

டாக்டர் உள்ளே வந்தார். அவருடன் வெள்ளை அங்கி அணிந்த ஆட்கள் இருவர் வந்தார்கள்.

"டெஸ்ட்டுகள் எடுக்க ஆரம்பிக்கிறோம், அம்மா. அதிக நேரமாகாது. நீங்கள் இங்கேயே தங்கியிருங்கள். வசதியான அறை," என்றார் டாக்டர்.

ஜோசப்பை அவர்கள் வெளியே கொண்டு சென்றார்கள். படுக்கையின் நுனியில் ஜெனிபர் உட்கார்ந்து கொண்டாள். அடித்துப் போட்டாற் போல் உடம்பு வலித்தது. அவளுக்குள்ளிருந்த சக்தியனைத்தும் வடிந்து விட்டது. அரை மயக்கமும் அரை விழிப்புமான நிலையில், வெள்ளைச் சுவர்களை விழித்துப் பார்த்தபடி வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள்.

162897

47

ஜோசப்புக்கு என்ன ஆகுமோ என்ற கவலைகளில் மூழ்கியிருந்தவளை "ஜெனிபர்..." என்ற குரல் எழுப்பியது.

டாக்டர் அவளெதிரே நின்றிருந்தார்.

"சரி டாக்டர். நீங்கள் போய் ஜோசப்புக்கு டெஸ்டுகள் எடுகள்," என்றாள் அவள்.

டாக்டர் திகைத்தார் "எல்லா டெஸ்ட்டும் முடித்துவிட்டுத்தானே வருகிறோம்?"

என்ன!

சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தைப் பார்த்தாள் ஜெனிபர். இரண்டு மணி நேரமாகச் சிலை போல உட் கார்ந்திருந்தோம் என்று தெரிந்தது. எப்படி இவ்வளவு நேரம் ஓடிற்று?

டாக்டரின் முகத்தை ஏறிட்டு நோக்கினாள். அவர் சொல்லப் போவது நல்ல செய்தியா, கெட்ட செய்தியா? அவர் முகத்திலிருந்து தெரிந்துகொள்ள முயன்றாள் முன்னெல்லாம் இது எவ்வளவு சுலபமான வேலை அவளுக்கு! ஜூரர்களின் முகத்தைப் பார்த்து அவர்கள் என்ன தீர்ப்பளிக்கப் போகிறார்கள் என்பதைக் கண்டறிந் திருக்கிறாள். அப்படி ஒரு தடவை இரண்டு தடவையா? நூறு முறை ஏன், ஐந்நூறு முறைகூட இருக்கும்.

ஆனால் இப்போதோ?

மனத்துக்குள் கொந்தளித்துக் கொண்டிருக்கும் குழப்பத்தில், டாக்டரின் முகத்தைப் பார்த்து எதையும் ஊகிக்க முடியவில்லை. எதையும் கண்டுகொள்ள முடிய வில்லை.

அவள் கால்கள் நடுங்கின. அவளால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

டாக்டர் சொன்னார்: "உங்கள் பிள்ளைக்கு சப்ட்யூமல் ஹெமடோமா நோய் கண்டிருக்கிறது. புரியக் கூடிய விதத்தில் சொல்வதென்றால், மூளையில் கட்டி."

திடீரென்று ஜெனிபரின் தொண்டை வற்றி உலர்ந்துவிட்டது. குரலை வெளிப்படுத்த முடியவில்லை. "எ" மிடறு விழுங்கினாள் பேசுவதற்கு மீண்டும் முயன்றாள். "அப்படியென்றால்... அதாவது..." அவளால் வாக்கியத்தை முடிக்க முடியவில்லை.

டாக்டர் குறுக்கிட்டார்: "பையனுக்கு உடனே ஆபரேஷன் செய்தாக வேண்டும். அதற்கு உங்கள் அனுமதி தேவை."

என்ன இது?

ஏதோ குரூரமான விளையாட்டு விளையாடுகிறார் இந்த டாக்டர் இதோ, இன்னும் ஒரே நிமிஷம்தான். குபுக்கென்று சிரிக்கப் போகிறார்.

'சும்மா தமாஷ் பண்ணினேன். ஜோசப் ஜம்மென்று இருக்கிறான்' என்று சொல்லப் போகிறார்

'என் நேரத்தை வீணடித்தீர்கள் இல்லையா? அதற்காக உங்களைத் தண்டித்தேன்,' என்று சொல்லப் போகிறார்.

'பையனுக்கு ஒரு கெடுதலும் இல்லை நன்றாய்த் தூங்கணும். அவ்வளவுதான்,' என்று சொல்லப் போகிறார்.

'அவன் வளர்கிற பையன் திடகாத்திரமாய் இருக்கிறான். நிஜமாகவே உடம்பு சரியில்லாத நோயாளி

களை நாங்கள் கவனிக்க வேண்டாமா? எங்கள் நேரத்தை இப்படி நீங்கள் வீணாக்கியது நியாயமா?' என்று சொல்லப் போகிறார்

அவளைப் பார்த்துப் புன்னகை செய்யப் போகிறார் 'பையனை வீட்டுக்கு அழைத்துப் போங்கள்' என்று சொல்லப் போகிறார்

டாக்டர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார் "அவனுக்குச் சின்ன வயசு திடமான தேகம். ஆகவே ஆபரேஷன் வெற்றிகரமாய் நடக்கும் என்று நம்புவோம்..."

ஜெனிபரின் எண்ணங்கள் பித்துப் பிடித்துத் திசைக்கொன்றாய் ஓடின.

என் குழந்தையின் மண்டையில் துளை போடப் போகிறார்கள்... கூரான கருவிகளால் குத்தப் போகிறார்கள்... ஜோசப்பைச் சித்திரவதை செய்யப் போகிறார்கள்... ஏன், கொலையே கூடச் செய்யப் போகிறார்கள்.

"இல்லை! இல்லை!" சினத்துடன் வீரிட்டது அவள் குரல்.

"என்னம்மா சொல்கிறீர்கள்? ஆபரேஷனுக்கு அனுமதி தரமாட்டீர்களா?"

"நான்... நான்... அவள் உள்ளம் குழம்பித் தவித்தது. அவளால் சிந்தனை செய்ய முடியவில்லை. "ஆ... ஆபரேஷன் பண்ணவில்லையென்றால் என்ன ஆகும்?"

டாக்டர் சர்வசாதாரணமாகச் சொன்னார்: "குழந்தை இறந்துவிடுவான். ஏம்மா, பையனின் அப்பா இங்கே இருக்கிறாரா?"

வார்னர்! அவள் நெஞ்சு அலறியது. 'வார்னர் இப்போது இங்கே இருக்கக் கூடாதா?' என்று ஏங்கினாள். அவர் தன் இடுப்பை அணைத்துக் கொள்வாரே! அணைத்துக் கொண்டு, 'எல்லாம் சரியாகிவிடும். ஜோசப் ஜம்மென்று ஆகிவிடுவான்!' என்று தைரியம் சொல்வாரே!

"அவன் அப்பா இல்லை..." என்றாள். இறுதியில். "நான் உங்களுக்கு அனுமதி தருகிறேன் ஆபரேஷனை நடத்துங்கள்."

ஒரு பாரத்தில் ஏதேதோ எழுதி அவளிடம் நீட்டினார் டாக்டர். "இதில் கையெழுத்துப் போடுங்கள், ப்ளீஸ்."

அதைச் சரியாகக்கூடப் பார்க்காமல் கையெழுத்திட்டாள் ஜெனிபர். "எவ்வளவு நேரமாகும் டாக்டர்?"

"சொல்வதற்கில்லை. திறந்து பார்த்..." என்ற டாக்டர் அவள் முகத்தில் படர்ந்த கலவரத்தைக் கவனித்து, பேச்சை மாற்றினார் "ஆபரேஷன் செய்ய ஆரம்பித்த பிறகு தான்சொல்ல முடியும். நீங்கள் இங்கேயே காத்திருக்கிறீர்களா?"

"வேண்டாம்," என்றாள் ஜெனிபர்.நான்கு சுவர்களும் தன்னைக் கவிழ்ந்து கொண்டு அழுத்துவது போல் தோன்றியது. சுவாசிக்க முடியாதபடி மூச்சுத் திணறுகிற மாதிரி இருந்தது. "டாக்டர், நான் பிரார்த்தனை செய்ய வேண்டும். பக்கத்தில் ஏதாவது கோவில் இருக்கிறதா?" என்று விசாரித்தாள்.

டாக்டர் சொன்ன கோவில் சின்னதாக இருந்தது.

அங்கு யாருமே இல்லை. ஜெனிபர் ஒருத்திதான்.

மண்டியிட்டாள். ஆனால் பிரார்த்தனை செய்யத் தெரியவில்லை. 'இவ்வளவு நாளும் நான் தெய்வ பக்தி இல்லாமலே இருந்து வந்திருக்கிறேனே? இப்போது மட்டும் கடவுள் என் பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பாரா?, என்று எண்ணிக் கொண்டாள். மனத்தை அமைதிப்படுத்திக் கொள்ள முயன்றாள் கடவுளிடம் வாய்விட்டுப் பேச வேண்டுமென்று நினைத்தாள் ஆனால் அவளுடைய அச்சம் மிக வலுவானதாக இருந்தது. அவளைக் காலோடு தலை ஆட்டிப் படைத்தது.

தன்னைக் கண்டபடி திட்டிக் கொண்டாள் ஜோசப்பை மட்டும் மெக்ஸிகோவுக்கு அழைத்துப் போகாமல் இருந்திருந்தால்... அவனை நீர்ச் சறுக்கு விளையாட அனுப்பாமல் இருந்திருந்தால்... அந்த மெக்ஸிகோ டாக்டர் ஒன்றுமில்லை என்று சொன்னதை நம்பாமல் இருந்திருந்தால்... இது செய்யாமலிருந்தால்... அது செய்யாமலிருந்தால்... அவள் புலம்பிக் கொண்டாள்.

கடவுளிடம் பேரம் செய்தாள். தெய்வமே , என் குழந்தையைக் காப்பாற்று. நீ என்ன கேட்டாலும் தருகிறேன்.

கடவுளைத் திட்டினாள். கடவுள் என்று ஒருவர் இருப்பது உண்மையானால் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்திராத ஒரு குழந்தையை இப்படியா சோதனை செய்வார்? ஒரு பாவமும் செய்யாத குழந்தை களுக்கு மரணத்தைக் கொடுக்கிற கடவுள் என்ன கடவுளில் சேர்த்தி?

சிந்தனை செய்து செய்து களைத்துப் போய் அவள் மனம் இறுதியில் ஓய்வு கண்டது. டாக்டர் சொன்னது ஞாபகம் வந்தது. 'சின்ன வயது திடமாக இருக்கிறான் ஆபரேஷன் வெற்றிகரமாக நடக்கும் என்று நம்புவோம்.'

ஆமாம். எல்லாம் சரியாகத்தான் போகிறது. இப்போதே சரியாய்தான் இருக்கிறது. இதெல்லாம் நல்லபடி முடிந்ததும் ஜோசப்பை எங்காவது வெளியூருக்கு அழைத்துப் போக வேண்டும். நிறைய ஓய்வு தர வேண்டும். மெக்ஸிகோ அவனுக்குப் பிடித்திருக்கிறது. அங்கேயே போகலாம். நிறையப் படிக்கணும்... நிறைய விளையாடணும்... நிறையப் பேசணும்...

இதற்கு மேல் எதுவும் எண்ண முடியாது என்னும்படி ஜெனிபரின் மனம் ஓய்ந்து போயிற்று. இருக்கையில் சரிந்து தொய்ந்தாள். அவள் உள்ளத்தில் சூனியம் நிரம்பியது.

யாரோ அவள் தோளை மெல்லத் தொட்டார்கள். நிமிர்ந்து பார்த்தாள்.

டாக்டர்தான்.

ஜெனிபர் அவர் முகத்தைப் பார்த்தாள். புரிந்துவிட்டது எந்தக் கேள்வியும் கேட்க வேண்டிய அவசியமில்லை என்பது புரிந்துவிட்டது.

நினைவிழந்து கீழே விழுந்தாள்.

குறுகலான இரும்பு மேசை மீது ஜோசப் கிடத்தப்பட்டிருந்தான் அவன் உடல் அமைதியாக இருந்தது நிரந்தர அமைதியில். சாந்தமான நித்திரையில் ஆழ்ந்திருப்பவனைப் போல இருந்தது. ரகசியமான, வெகு தொலைவான கனவுகள் அந்த அழகிய இளம் முகத்தில் நிறைந்திருந்தன.

கதகதப்பான மெத்தையில் சுருண்டு மடங்கி அவன் படுத்திருந்தான். எவ்வளவு ஆயிரம் தடவை அவன் முகத்தை இந்த மாதிரி அவள் பார்த்திருக்கிறாள்! மூச்சைத் திணறவைக்கும் அன்பின் வேகத்தோடு எவ்வளவு தடவை இந்த முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி அவள் உட்கார்ந்

திருக்கிறாள்! இரவின் குளிரிலிருந்து அவனைப் பாதுகாப் பதற்காக எவ்வளவு முறை போர்வையை மென்மையாகச் செருகி விட்டிருக்கிறாள்!

அவ்வளவு குளிர்ச்சியும் இப்போது ஜோசப்பின் உடலுக்குள் இறங்கிவிட்டது. இனி அவனுக்குக் கதகதப்பு என்பதே கிடையாது. அந்தப் பிரகாசமான கண்கள் இனி ஒரு போதும் திறக்கப் போவதில்லை. ஒரு போதும் அவளைப் பார்க்கப் போவதில்லை. அந்தப் புன்சிரிப்பை அவள் ஒருபோதும் காணப் போவதில்லை. அவன் குரலை ஒருபோதும் கேட்கப் போவதில்லை. அவனுடைய சின்னக் கைகள் ஒரு போதும் அவளை அணைத்துக் கொள்ளப் போவதில்லை.

உடம்பில் ஒன்றுமில்லாமல் ஒரு போர்வையால் அவனைப் போர்த்தியிருந்தார்கள்

டாக்டரிடம் ஜெனிபர், "அவனுக்குக் குளிரும். இன்னொரு போர்வை போர்த்துங்கள்," என்றாள்.

"அவனுக்கு என்று ஆரம்பித்த டாக்டர் அவள் கண்களைப் பார்த்தார் "ஆமாமாம்" என்றவர் நர்ஸின் பக்கம் திரும்பி, "போர்வை கொண்டு வா," என்றார்.

அந்த அறையில் அரை டஜன் நபர்கள் இருந்தார்கள். பெரும்பாலோர் வெள்ளை யூனிபாரத்தில் இருந்தார்கள். எல்லாரும் தன்னிடம் ஏதோ சொல்வது போலிருந்தது ஜெனிபருக்கு. ஆனால் என்ன சொல்கிறார்களென்று அவளால் கேட்க முடியவில்லை. தான் அவர்களிடமிருந்து பிரிந்து ஒரு கண்ணாடி ஜாடிக்குள் அடைபட்டிருப்பது போல இருந்தது. அவர்களுடைய உதடுகள் அசைவது தெரிந்தது. ஆனால் சத்தம் கேட்கவில்லை. 'போங்கள் இங்கிருந்து!' என்று பெரிதாய்க் கத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் ஜோசப் பயந்து விடுவான் என்று பேசாமலிருந்தாள்.

யாரோ அவளுடைய கையைப் பிடித்து உலுக்கினார்கள். அவள் பிரமை கலைந்தது. திடீரென்று அறையெங்கும் அலை போலப் பெரும் சத்தம் எழுத்து. அத்தனை பேரும் ஒரே சமயத்தில் பேசுகிற மாதிரி இருந்தது.

டாக்டர் சொல்லிக் கொண்டிருந்தார்: "சவப் பரிசோதனை செய்தால்..."

ஜெனிபர் அமைதியாகச் சொன்னாள்: "என் குழந்தையைத் தொட்டீர்களோ, உங்களைக் கொலை பண்ணிவிடுவேன்."

சொல்லிவிட்டு எல்லாரையும் பார்த்துப் புன்னகை செய்தாள். ஜோசப்பிடம் அவர்கள் கோபம் கொண்டு விடக் கூடாது என்று எண்ணியதே காரணம்.

அவளை அறையை விட்டு வெளியே செல்லும்படி ஒரு நர்ஸ் மெல்லச் சொல்லிக் கொண்டிருத்நாள். ஆனால் ஜெனிபர் தலையை அசைத்து மறுத்தாள் "என் குழந்தையைத் தனியாய் விட்டுவிட்டுப் போக மாட்டேன். யாராவது விளக்கை அணைத்து விடுவார்கள். இருட்டென்றால் ஜோசப்புக்கு ரொம்பப் பயம்."

யாரோ அவள் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டார்கள். சுருக்கென்று இஞ்செக்ஷன் ஊசி குத்துவதை உணர்ந்தாள்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் அவளைப் பெரும் வெது வெதுப்புப் போர்த்திக் கொண்டது அமைதி மூடிக் கொண்டது. அவள் தூங்கிப் போனாள்.

அவள் கண் விழித்தபோது பொழுது சாய்ந்திருத்து. ஆஸ்பத்திரியில் ஒரு சிறிய அறையில் அவள் படுத்திருந்தாள். அவள் உடைகளைக் களைந்து, ஆஸ்பத்திரிக் கவுனை அணிவித்திருந்தார்கள்.

ஜெனிபர் எழுந்து தன் உடையை அணிந்து கொண்டாள் டாக்டருடைய அறைக்குச் சென்றாள். அமானுஷ்யமானதோர் அமைதி அவளிடம் குடி கொண்டிருந்தது.

டாக்டர் அவளிடம், "சவஅடக்க ஏற்பாடுகளை நாங்கள் செய்கிறோம். நீங்கள் சிரமப்பட வேண்டாம்," என்றார்.

"தேவையில்லை. நானே பார்த்துக் கொள்கிறேன்," என்றாள் ஜெனிபர்.

அடுத்த இரண்டு நாளும் எல்லா ஏற்பாடுகளையும் அவளே கவனித்துக் கொண்டாள். சவப் பெட்டி தயாரிப் பாளர்களிடம் தானே சென்று ஏற்பாடு செய்தாள் ஸாடினில் லைனிங் கொடுத்த வெள்ளைப் பெட்டியொன்று தேர்ந்தெடுத்தாள். கண்ணீர் வற்றிய கண்களுடன், தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டு வேலைகளில் ஈடுபட்டாள். என்னென்ன செய்தோமென்று அவளுக்கே பிற்பாடு நினைவு வரவில்லை. அவள் உடலையும் உள்ளத்தையும் வேறு யாரோ ஆக்கிரமித்துக் கொண்டு, அவளுக்காக எல்லாக் காரியங்களையும் செய்கிற மாதிரி இருந்தது. மனம் அடியோடு மரத்துப் போயிருத்து. ஆனால் அதுவே அவளுக்கு ஒரு கவசம் போலிருந்தது. பைத்தியம் பிடித்து விடாதபடி அவளைத் தடுத்துக் காத்தது.

சவப் பெட்டி தயாரிப்பாளர், "உங்கள் பிள்ளைக்குக் குறிப்பாக ஏதாவது ஸ்பெஷல் டிரெஸ் போட வேண்டு மென்று நீங்கள் விரும்பினால் எடுத்து வாருங்கள். நாங்கள் அணிவிக்கிறோம்," என்றார்.

"நானே அவனுக்கு டிரெஸ் போட்டு விடுகிறேன்," என்றாள் ஜெனிபர்.

அவர் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தார் "சரிம்மா. ஆனால்-" என்று அவர் சொல்லி முடிக்குமுன் ஜெனிபர் புறப்பட்டு விட்டாள்.

பிரேதத்துக்கு உடை அணிவிப்பதென்றால் ரொம்பச் சுலபமான வேலையென்றல்லவா இந்த அம்மாள் நினைக்கிறாள்! அவருக்கு விந்தையாயிருந்தது ஜெனிபரின் போக்கு.

தானே காரைச் செலுத்திக் கொண்டு வீட்டை அடைந்தாள். வேலைக்காரி அழுதழுது சிவந்த கண்களுடன் ஓடிவந்து, "ஜெனிபரம்மா..." என்று விம்மினாள்.

ஜெனிபர் அவளைப் பார்க்கவுமில்லை. அவள் பேசியதைக் கேட்கவுமில்லை. அவளைத் தாண்டிக்கொண்டு மாடிப் படியில் ஏறினாள் ஜோசப்பின் அறையை அடைந்தாள்.

48

குழந்தை ஜோசப்பின் அறை எப்போதும்போல் அப்படியே இருந்தது. எந்த மாறுதலும் இல்லை-ஜோசப் இல்லாமல் சூனியமாக இருந்தது என்பதை தவிர ஜோசப்பின் புத்தகங்கள், விளையாட்டுக் கருவிகள், பேஸ்பால், தண்ணீர்ச் சறுக்கி உபகரணங்கள் எல்லாம் அப்படியே இருந்தன-ஜோசப்பின் வருகையை எதிர் பார்ப்பது போல.

கதவினருகே ஜெனிபர் வெகுநேரம் நின்றிருந்தாள்-அறையை வெறித்து நோக்கியபடி. எதற்காக இங்கே வந்தோம் என்பதுகூட முதலில் மறந்துவிட்டது. ஆமாம், ஆமாம். ஜோசப்பின் உடைகளை எடுத்துச் செல்வதற்காக வந்தோம். ஞாபகப் படுத்திக்கொண்டாள்.

ஜோசப்பின் துணிகள் வைத்திருக்கும் அலமாரியைத் திறந்தாள். போன பிறந்த நாளன்று அவனுக்காக வாங்கிய

கருநீல சூட் இருந்தது. சாயந்தரம் அதை அணிந்துகொண்டு அம்மாவுடன் ஓட்டலில் விருந்து சாப்பிட்டானே! அந்தச் சாயந்தர நிகழ்ச்சிகள் எவ்வளவு தெளிவாக ஞாபகம் வருகின்றன. அவனை ஏறிட்டுப் பார்த்த போது அவன் வளர்ந்து பெரியவனாகிக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணம் மனசில் வேதனை உண்டாக்கியது நினைவு வந்தது. என்றாவது ஒரு நாள், தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகும் பெண்ணோடு இங்கே வந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பான் என்று அன்றைக்கு நினைத்துக் கொண்டாள். அந்த நாள் இனி வரவே போவ தில்லை. அவன் வளரவே போவதில்லை. பெரியவனாகவே போவதில்லை. எந்தப் பெண்ணும் வரப் போவதில்லை. வாழ்க்கையே இனிக் கிடையாது அவனுக்கு.

நீல சூட்டுக்குப் பக்கத்தில் நீல ஜீன்ஸ் ஜோடிகளும், ஸ்லாக்குகளும் டிஷர்ட்டுகளும் ஏராளமாய் இருந்தன. ஒன்றில் அவனுடைய பேஸ்பால் டீமின் பெயர் போட்டிருந்தது.

அவைகளை யெல்லாம் அளைந்து கொண்டு நின்றிருந்தாள் ஜெனிபர் நேரம் போவதே தெரியவில்லை.

வேலைக்காரி அவளருகே வந்து நின்றாள் "உங்களுக்கு உடம்பு ஒன்றுமில்லையே, ஜெனிபர்?"

பணிவுடன் ஜெனிபர். "ஒன்றுமில்லையம்மா, ஜம் மென்று இருக்கிறேன். தாங்க் யூ," என்றாள்.

"ஏதாவது உதவி செய்யட்டுமா நான்?"

"ஒன்றும் வேண்டாம் தாங்க்ஸ். ஜோசப்புக்கு டிரெஸ் பண்ணிவிடப் போகிறேன். இதிலே அவனுக்கு எது பிடிக்கு மென்று நினைக்கிறாய்?" ஜெனிபரின் குரல் கணீரென்றும் உற்சாகமாயும் இருந்தது. கண்கள் தான் எப்போதோ செத்து விட்டன.

அந்தக் கண்களைப் பார்த்த போது, வேலைக் காரிக்குப் பயம் ஏற்பட்டது. "கொஞ்ச நேரம் படுத்துத் தூங்குங்கள் அம்மா. நான் டாக்டரைக் கூப்பிடுகிறேன்."

ஜெனிபர் மீண்டுமொரு முறை ஜோசப்பின் உடைகளைத் தடவிப் பார்த்தாள். ஹாங்கரில் தொங்கிக் கொண்டிருந்த பேஸ்பால் யூனிபாரம் ஒன்றை எடுத்தாள். "இது ஜோசப்புக்கு பிடிக்குமென்று நினைக்கிறேன். வேறு என்னென்ன எடுத்துக் கொள்ளலாம்?" என்று வேலைக் காரியைக் கேட்டாள்.

வேலைக்காரிக்கு என்ன சொல்வதென்று தெரிய வில்லை. ஜோசப்பின் அண்டர்வேர், ஸாக்ஸ், ஷர்ட் முதலியவற்றை ஜெனிபர் எடுப்பதை மௌனமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஜோசப்புக்கு இதெல்லாம் தேவைப்படும் என்று ஜெனிபர் நினைத்துக் கொண்டாள். குழந்தை பிரயாணம் போகிறானே! அதுவும் எவ்வளவு தொலைதூரப் பிரயாணம்!

"இதெல்லாம் அவனுக்குக் குளிருக்கு அடக்கமாக இருக்கும் இல்லையா?" என்று மறுபடி வேலைக்காரியைக் கேட்டாள்.

குபீரென்று கண்ணீர் பொங்கி வர வேலைக்காரி கதறிவிட்டாள். "வேண்டாம்மா, இதெல்லாம் அப்படியே இருக்கட்டும். வைத்து விடுங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன்."

அவள் பேச்சைக் கேட்க ஜெனிபர் அங்கே இல்லை. மாடிப்படியில் வேகமாய் இறங்கி விட்டாள்.

அடக்கம் செய்யுமிடத்தில் சவக்கிடங்கில் ஒரு மேஜை மீது ஜோசப்பின் உடலைக் கிடத்தியிருந்தார்கள்

அந்த பெரிய மேஜையில் அவன் உடம்பு குறுகிச் சின்னதாகி விட்டாற்போல் இருந்தது.

அங்கே இருந்த ஆள், ஜெனிபரையும், அவள் கையிலிருந்த ஜோசப்பின் டிரெஸ்களையும் பார்த்தான். மறுபடியும், "டாக்டர்கூடச் சொன்னாரம்மா இந்த வேலையை நாங்களே கவனித்துக் கொள்கிறோமே? ஏனென்றால் எங்களுக்கு இதெல்லாம் பழக்கம்..." என்று சொல்ல ஆரம்பித்தான்.

அவனை நோக்கி ஒரு புன்னகை செய்துவிட்டு, "வெளியே போங்கள்," என்றாள்.

அவன் மிடறு விழுங்கிவிட்டு, "சரியம்மா..." என்றான்.

அவன் வெளியே போகும்வரை காத்திருந்துவிட்டு, மகனிடம் சென்றாள்.

அந்தத் தூங்கும் முகத்தைப் பார்த்து, "அம்மா உனக்கு டிரெஸ் செய்துவிடப் போகிறாள்டா கண்ணா உன் பேஸ்பால் யூனிபார்ம் போட்டுவிடப் போகிறேன். உனக்குப் பிடிக்கும். இல்லையா?" என்றாள்.

மேலே போர்த்தியிருந்த போர்வையை விலக்கித் தள்ளினாள். சுருங்கிப் போய்விட்ட அந்த உடம்பை ஒரு வினாடி பார்த்தாள். பிறகு உடை அணிவிக்க ஆரம்பித்தாள். ஜட்டியை முதலில் மாட்ட முயன்றபோது அந்த ஐஸ் சில்லிப்பு சுரீரென்று கையில் உறைக்க, ஓரடி பின் வாங்கினாள். உடம்பு எவ்வளவு கடினமாக, கருங்கல்லாக ஆகிவிட்டது!

இல்லை இல்லை. இந்த விறைத்துப் போன சில்லிட்ட..., உயிரற்ற கட்டை என் குழந்தையல்ல. அவன் வேறெங்கோ இருக்கிறான். சந்தோஷமாக, கதகதப்பாக இருக்கிறான். இது என் குழந்தை ஜோசப் அல்ல-இப்படி எவ்வளவோ முறை

தனக்குத் தானே சொல்லிக் கொண்டு பார்த்தாள். ஆனால் அவள் மனம் அதை நம்ப மறுத்தது. இதோ மேஜைமீது படுத்துக்கிடக்கிறவன் ஜோசப்தான்... என் கண்மணிதான்...

அவள் உடம்பு வெடவெடவென்று நடுங்கியது. ஜோசப்புக்குள் இருக்கும் சில்லிப்புத் தனக்குள் வந்து விட்டது போலிருந்தது. எலும்புகள் கூடச் சில்லிடுகிற மாதிரி-

நிறுத்து இந்த எண்ணங்களை! நிறுத்து! நிறுத்து! தனக்குத் தானே கோபத்துடன் கட்டளையிட்டு மனத்தை அடக்கிக் கொண்டாள்.

மூச்சை இழுத்துச் சீராக்கிக் கொண்டாள். இறுதியில் உள்ளம் அமைதிப்பட்டது. குழந்தைக்கு டிரெஸ் செய்ய ஆரம்பித்தாள். அவனுடன் ஏதோ பேசிக் கொண்டே அதைச் செய்தாள் ஜட்டியைப் போட்ட பின்னர் டிரெஸ்களை மாட்டிவிட்டாள். சட்டையை அணிவிப்ப தற்காகத் தலையைத் தூக்கியபோது கை வழுக்கி, தலை லொட்டென்று மேஜைமீது இடித்தது. "ஸாரி ஜோசப்," என்று உரக்கவே மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் மறுகணம் துயரம் தாங்காமல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

ஏறத்தாழ மூன்று மணி நேரம் ஆகிவிட்டது. பேஸ்பால் யூனிபாரத்தைப் போட்டு அவனுக்குப் பிடித்தமான டிஷர்ட்டை அணிவித்தாள். வெள்ளை ஸாக்ஸ் களும் காலணிகளும் போட்டாள். பேஸ்பால் தொப்பியின் நிழல் விழுந்து முகம் மறைகிற மாதிரி இருந்தது. அதை எடுத்து அவன் மார்பின் மீது வைத்தாள். "இதையும் கொண்டுபோடா கண்ணா," என்றாள்.

சவ அடக்கக்காரர் உள்ளே வந்தார் குழந்தைக்கு உடைகளை அணிவித்து விட்டு, கையைப் பிடித்தபடி

ஜெனிபர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். அருகில் வந்து மென்மையாக, "இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் அம்மா," என்றார்.

கடைசியாக ஒரு முறை தன் பிள்ளையைப் பார்த்தாள் ஜெனிபர் "ப்ளீஸ், ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளுங்கள். குழந்தைக்கு ஏற்கெனவே மண்டையில் காயம் பட்டிருக்கிறது," என்றாள்.

சவ அடக்கம் எளிமையாக நடந்து முடிந்தது. அந்தச் சிறிய வெள்ளைப் பெட்டி சவக் குழியில் இறக்கப்பட்ட போது ஜெனிபரும் வேலைக்காரியும் மட்டுமே இருந்தார்கள். துப்பறியும் நிபுணர் கென்னெத்துக்குச் சொல்லியனுப்பலாமா என்று ஜெனிபர் முதலில் நினைத்தாள். அவருக்கு ஜோசப் மீது உயிராயிற்றே!

ஆனால் இவர்களுடைய வாழ்க்கையிலிருந்து அவர் விலகிப்போய் ரொம்ப நாளாகிறதே! ஆகவே கூப்பிட வில்லை.

சவப் பெட்டியின் மீது முதல் கை மண்ணை இறைத்தானதும் ஜெனிபரின் கையை மெல்லப் பற்றிக் கொண்டாள் வேலைக்காரி. "வாருங்கம்மா. உங்களை வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்."

மிகவும் மரியாதையுடன் ஜெனிபர் சொன்னாள்: "நான் நன்றாய்த்தான் இருக்கிறேன். கவலைப் படாதே ஜோசப்புக்கும் எனக்கும் இனிமேல் நீ வேண்டாம். உன் சம்பளத்தைக் கொடுத்துக் கணக்குத் தீர்க்கிறேன். நற்சாட்சிக் கடிதமும் எழுதித் தருகிறேன். நீ எவ்வளவோ உதவியாக இருந்தாய். நானும் ஜோசப்பும் உனக்கு ரொம்ப நன்றி சொல்ல வேண்டும்."

அவள் திரும்பிச் செல்வதை திகைப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள் அந்த வேலைக்காரி.

ஜெனிபர் உடம்பை நிமிர்த்திக் கொண்டு நேராக நடந்து சென்றாள். முடிவேயில்லாத நீண்ட தாழ்வாரத்தில் ஏதோ எச்சரிக்கையுடன் நேரே நடப்பது போல இருந்தது அவள் நடை.

வீடு சந்தடியற்று வெகு அமைதியாக இருந்தது.

ஜோசப்பின் அறைக்குள் சென்றாள் ஜெனிபர். கதவை சாத்திக் கொண்டாள். ஜோசப்பின் படுக்கையில் படுத்துக் கொண்டு அவனுக்குச் சொந்தமான பொருள்களை எல்லாம் பார்த்தபடி இருந்தாள். இவ்வளவும் அவன் எவ்வளவு ஆசையாய் வைத்திருந்தவை!

இனி அந்த அறைதான் உலகம் என்று தீர்மானித்துக் கொண்டாள் அவள் செய்ய வேண்டியது எதுவுமே இனிமேல் இல்லை. அவள் போகக் கூடிய இடம் எதுவும் இனி இல்லை. ஜோசப் ஒருத்தன் தான் இந்த உலகத்தில் உண்டு. அவன் பிறந்த தினத்தை ஞாபகப் படுத்திக்கொள்ள ஆரம்பித்தாள். பிறகு ஒவ்வொன்றாக அவனுடன் வாழ்ந்த நாட்களை யெல்லாம் மறுபடியும் வாழத் தொடங்கினாள்.

ஜோசப் முதல் முதலாக அடியெடுத்து வைத்த தளர் நடை... 'கார்... கார்' என்று அவன் மழலை பேச ஆரம்பித்தது. போம்மா, நான் விளையாடணும்... முதல் தடவையாக ஜோசப் தனியே பள்ளிக்குப் போனது... சின்ன, ஆனால் தைரியமான உருவம்... ஜோசப்புக்கு விளையாட்டம்மை போட்டபோது வலியுடன் அவன் துன்பப்பட்டது... ஜோசப் தன் டீமில் நன்றாக விளையாடி முதல் தடவை ஜெயித்தது... ஜோசப் படகு ஓட்டியது... ஜோசப் மிருகக்காட்சி சாலையில் யானைக்குப் பிஸ்கெட் போட்டது.... 'தாய்மார்கள் தினத்'தன்று ஜோசப் ஷைன் ஆன், ஹார்பெண்ட் மூன் என்று பாடியது...

அடுக்கடுக்கான நினைவுகள்... ஏதோ வீட்டுக்குள் சினிமா போட்டுப் பார்ப்பது போல... கடைசியாக

ஜோசப்பும் அவளுமாய் மெக்ஸிகோவுக்கச் சென்றதோடு நினைவுகள் முடிவடைந்தன.

மெக்ஸிகோ... அங்கே 'வார்னரைச் சந்தித்தது... அவனுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டது.

கடவுளே! அப்போது நான் என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தேன்! என் சுய நலத்துக்காக என்னைத் தண்டித்து விட்டாயா! ஆமாம், இது எனக்குத் தண்டனை... இதுதான் எனக்கு நரகம்...

திரும்பத் திரும்ப அதே நினைவுகள் ஓடின-ஜோசப் முதல் முதல் நடக்க ஆரம்பித்ததும் 'கார்.. கார்' என்று மழலை பேசியதும்...

காலம் ஓடிக்கொண்டேயிருந்தது. வீட்டின் எந்தக் கோடியிலோ ஒரு டெலிபோன் மணியடிப்பது எப்போதாவது கேட்கும். ஒருமுறை வாசல் கதவை யாரோ தட்டுவது கூடக் கேட்டது.

ஆனால் அந்த ஓசைகளுக்கு அவள் வாழ்க்கையில் அர்த்தமில்லாமல் போய்விட்டது.

தன் குழந்தையுடன் அவள் வாழ்ந்து கொண்டு இருக்கிறாள் அதைக் கலைக்கக் கூடிய எதையும் அவள் அனுமதிக்கத் தயாராயில்லை.

அறையிலேயே அவள் படுத்துக்கிடந்தாள். எதுவும் சாப்பிடவில்லை, எதுவும் குடிக்கவில்லை. ஜோசப்... ஜோசப்.... அவள் தன் சொந்த உலகத்துக்குள்ளேயே மூழ்கிக்கிடந்தாள் காலம் நேரம் பற்றி எண்ணங்கள் இல்லாமல், எவ்வளவு நேரமாகக் கிடக்கிறோமோ என்ற பிரக்ஞையே அற்றுப் போனவளாக அவள் படுத்தபடியே கிடந்தாள்.

ஐந்து நாள் சென்று விட்டன. யாரோ வாசல் மணியை அடித்த சத்தம் கேட்டது. பிறகு தடதட வென்று கதவை இடிக்கும் ஓசை கேட்டது.

ஜெனிபர் அதை லட்சியம் செய்யவில்லை.

யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும். கொஞ்ச நேரம் தட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பிப் போய் விடுவார்கள். எங்கோ ஒரு கண்ணாடி உடையும் சத்தம் மெலிதாகக் கேட்கிற மாதிரி இருந்தது.

தொடர்ந்து ஜோசப்பின் அறைக்கதவை மடேலென்று பிளந்துகொண்டு....

அறை வாசலில் மாரெட்டி நின்றிருந்தான்.

படுக்கையைப் பார்த்தான். அங்கே கிடக்கும் எலும்பும் தோலுமான ஓர் உருவம், தன் குழி விழுந்த கண்களை உயர்த்திப் பார்ப்பதைக் கண்டான்.

"ஐயோ கடவுளே!" என்று பதறிப் போனான்.

படுக்கையிலிருந்து அவள் லேசில் எழுந்திருக்க வில்லை.

அவளை அந்த அறையிலிருந்து வெளியே கொண்டு வர அவன் தன் சக்தி மொத்தத்தையும் பிரயோகிக்க வேண்டியிருந்தது.

வெறி பிடித்த மாதிரி அவள் முரண்டித் திமிறினாள் அவனைக் குத்தினாள் அவன் கண்களைப் பிராண்டினாள்.

மாரெட்டியின் உதவியாளரான நிக் கீழே காத்திருந்தான். இரண்டு பேருமாகச் சேர்ந்து பலவந்தமாக ஜெனிபரைக் காருக்குள் ஏற்றினார்கள்

வந்திருப்பவர்கள் யாரென்று ஜெனிபருக்குத் தெரியவில்லை. எதற்காக வந்திருக்கிறார்களென்றும் தெரியவில்லை.

'என்னை கட்டாயப் படுத்தினீர்களோ உயிரை விட்டு விடுவேன்' என்று அவர்களிடம் சொல்லவேண்டும் போலிருந்தது. ஆனால் அதைச் சொல்ல முடியாமல் களைப்பு அவளை ஆட்கொண்டது. சில நிமிடங்களில் அவள் தூங்கிப் போனாள்

ஜெனிபர் கண்விழித்தபோது பிரகாசமான சுத்தமான அறையொன்றில் தான் படுத்திருப்பது தெரிந்தது. ஜன்னலருகே அழகான ஓவிய மொன்று மாட்டப் பட்டிருந்தது. ஒரு மலை... அதன் பின்னே எட்டத்தில் நீல நிற ஏரி..

படுக்கைக்குப் பக்கத்திலிருந்த நாற்காலியில் யூனிபாரம் அணிந்த நர்ஸ் ஒருத்தி ஏதோ பத்திரிகை படித்தவாறு உட்கார்ந்திருந்தாள். ஜெனிபர் கண்ணைத் திறந்ததும் அருகில் வந்தாள்.

நான் எங்கே இருக்கிறேன்?" என்றாள் ஜெனிபர், அதைக் கேட்பதற்குள் தொண்டையை வலித்தது.

"உங்கள் நண்பர்களுடன் இருக்கிறீர்களம்மா. மிஸ்டர் மாரெட்டி உங்களை இங்கே அழைத்து வந்தார். உங்களைப் பற்றி ரொம்பக் கவலைப் பட்டுப் போய் விட்டார். இப்போது நீங்கள் விழித்துக் கொண்டதைக் கேட்டால் சந்தோஷப் படுவார்," என்று கூறிவிட்டு அந்த நர்ஸ் வேகமாய் வெளியே போனாள்.

49

ஜெனிபர் படுத்தபடியே இருந்தாள். அவள் மனம் சூனியமாக இருந்தது.

தான் தற்கொலை செய்து கொள்ள முயன்றிருக்கி றோம் என்பதை அவள் உணர்ந்தாள். அதற்குத் துணிச்சல் ஏற்படவில்லை என்பதும் தெரிந்தது. சாக விரும்பினாள். சாவு தன்னாலேயே வரட்டும் என்று நினைத்தாள்.

அந்த நிலையில் மாரெட்டி அவளைக் காப்பாற்றி விட்டான்.

வேடிக்கைதான் வார்னர் காப்பாற்றவில்லை. மாரெட்டி காப்பாற்றியிருக்கிறான்.

ஜோசப் இறந்துவிட்டான். இப்போது அவளால் அதை உணரமுடிந்தது. அந்த வலி அவள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து அவளைத் துன்பத்தில் புரட்டி யெடுத்தது.

காலடியோசைகள் கேட்டன. நிமிர்ந்து பார்த்தாள்.

மாரெட்டி அறைக்குள் வந்தான்.

சற்று நேரம் நின்று அவளையே பார்த்தான். அவனால் நம்ப முடியவில்லை. ஜெனிபர் திடீரென்று தன் வாழ்க்கையிலிருந்து மறைந்து போன போது அவனுக்குக் கிட்டத்தட்டப் பைத்தியம் பிடித்திருந்தது. அவளுக்கு ஏதோ நேர்ந்திருக்கிறதென்று பயந்திருந்தான். இப்போது அவளை உயிரோடு பார்த்தபோது...

அவளுடைய கட்டிலை நெருங்கி வந்தான். அவளை நோக்கிக் குனிந்தான். "உன் பையன் இறந்து விட்டதைப்

பற்றி ஏன் என்னிடம் சொல்லவேயில்லை?" படுக்கையில் அவள் பக்கத்தில் அமர்ந்தான். "ரொம்ப வருத்தமாக இருக்கிறது. ஜெனிபர்."

அவள் அவன் கையை மெல்லப் பிடித்துக் கொண்டாள் "என்னை இங்கே அழைத்து வந்ததற்கு நன்றி.... நான் எனக்குக் கொஞ்சம் பைத்தியம் பிடித்திருந்தது என்று நினைக்கிறேன்...

"ஆமாம். கொஞ்சம் பிடித்திருந்தது."

"எத்தனை நாளாக இங்கே இருக்கிறேன்?"

"நாலு நாளாக. உனக்கு நரம்பு வழியாக உணவு ஏற்றினார்கள்."

ஜெனிபர் மெதுவாகவே தலையசைத்தாள். ஆனால் அந்தச் சிறிய அசைவுக்குக் கூடப் பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது. உடம்பெங்கும் அசாத்தியக் களைப்பாக இருந்தது.

"காலைச் சிற்றுண்டி வந்து கொண்டிருக்கிறது. சாப்பிடு. உன்னைக் குண்டாக்கும்படி டாக்டர் கட்டளை," என்றான் மாரெட்டி.

"எனக்குப் பசியேயில்லை. இனிமேல் சாப்பிடவே மாட்டோம் என்று தோன்றுகிறது,"

" நன்றாய்ச் சாப்பிடப் போகிறாய், பார்."

ஜெனிபருக்கே ஆச்சரியமாயிருந்தது. மாரெட்டி சொன்னது சரிதான். வேகவைத்த முட்டையும் ரொட்டியும் டீயும் நர்ஸ் எடுத்து வந்தபோது ஜெனிபருக்கு நல்ல பசி எடுத்தது.

அவள் சாப்பிடுவதையே பார்த்த வண்ணம் மாரெட்டி உட்கார்ந்திருந்தான் சாப்பிட்டு முடித்ததும், "நான்

நியூயார்க்கிற்குப் போகிறேன். சில விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. இரண்டு நாளில் திரும்பி விடுவேன்," என்றான். குனிந்து, அவளை மிருதுவாய் முத்தமிட்டான். "வெள்ளிக்கிழமை வந்து பார்க்கிறேன். என்ன?" என்று கேட்டு அவள் முகத்தை வருடிக் கொடுத்தான். "சீக்கிரம் நீ உடம்பு தேறிவிட வேண்டும். என்ன? காதில் விழுகிறதா?"

ஜெனிபர் அவனை நிமிர்ந்து பார்த்தாள் "சரி'" என்றாள்.

அமெரிக்கக் கடற்படை இலாகாவைச் சேர்ந்த அந்த ஹால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அறைக்கு வெளியே ஆயுதம் தாங்கிய காவலர்கள் கண்கொத்திப் பாம்பாகக் காவல் காத்துக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே மிக முக்கியமான கூட்டமொன்று நடை பெற்றுக் கொண்டிருந்தது. பிரத்தியேகமாக நியமிக்கப் பட்ட ஜூரர்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். நீண்ட மேஜையின் ஒரு பக்கத்தில் வார்னரும், டிசில்வாவும் ரகசியப் போலீஸ் உதவி இயக்குநரும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கெதிரில் கால்ஃபாக்ஸ்-மாரெட்டியின் பயங்கரக் கும்பலுக்கு வழக்கறிஞராக விளங்கியவர் உட்கார்ந்திருந்தார்.

ஜூரர்களை இந்த இடத்துக்கு வரவழைத்திருந்தவன் வார்னர்தான் "கால்ஃபாக்ஸுக்கு ஆபத்து வராமல் காப்பாற்ற இதுதான் வழி," என்று அவன் சொன்ன யோசனையை ஏற்றுக் கொண்டு இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். ரகசியமாய் இந்த விசாரணை நடை பெற்றது.

"உங்கள் பெயர் முதலிய விவரங்களைச் சொல்லுங்கள்," என்றான் வார்னர் கால்ஃபாக்ஸிடம்.

"என் பெயர் தாமஸ் கால்ஃபாக்ஸ்."

"உங்கள் தொழில் என்ன, மிஸ்டர் கால்ஃபாக்ஸ்?"

"நான் ஒரு வழக்கறிஞன் நியூயார்க் மாநிலத்தில் தொழில் நடத்த உரிமை பெற்றவன். வேறு பல மாநிலங்களிலும் பிராக்டிஸ் செய்ய உரிமை பெற்றிருக்கிறேன்.

"எத்தனை வருஷமாகத் தொழில் செய்கிறீர்கள்?"

"முப்பத்தைந்து வருஷத்துக்கு மேலே இருக்கும்."

"உங்களுக்குப் பல வகையான கட்சிக்காரர்கள் இருக்கிறார்களா?"

"இல்லை.எனக்கு ஒரே ஒரு கட்சிக்காரர்தான் உண்டு."

"யார் அவர்?"

"இத்தனை வருஷங்களாக கிரானெலி என்பவர் தான் என் கட்சிக்காரராக இருந்து வந்தார். அவர் சமீபத்தில் இறந்து விட்டார் அவருடைய இடத்துக்கு மைக்கேல் மாரெட்டி வந்திருக்கிறார். நான் அவருக்கும் அவருடைய ஸ்தாபனத்துக்கும் வேலை செய்து வருகிறேன்."

"ஸ்தாபனம் என்றால்? பயங்கரக் கும்பலைச் சொல்கிறீர்கள்? இல்லையா?"

"ஆமாம்"

"பல வருஷங்களாக நீங்கள் வகித்து வரும் பதவி காரணமாக,அந்தக் கும்பலின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு உங்களுக்கு இருந்திருக்கிறது இல்லையா?"

"எனக்குத் தெரியாதது அனேகமாய் எதுவுமே இல்லை."

"அந்த நடவடிக்கைகள் என்ன மாதிரியானவை? கொஞ்சம் சொல்ல முடியுமா?"

அடுத்த இரண்டு மணி நேரத்தில் அனைத்தையும் சொல்லி கொண்டே போனார். அவர் குரல் நிதானமாகவும் உறுதியாயும் இருந்தது. பெயர்கள், இடங்கள், தேதிகள்- அவர் சொல்லச் சொல்ல, அறையில் இருந்த அவ்வளவு பேரும் தங்களையே மறந்தார்கள். கால்ஃபாக்ஸ் சொன்ன பயங்கரக் கதைகள் அவர்களை மந்திரம் போட்டாற் போல் கட்டிப் போட்டது. கொலைகள் செய்வதற்கான ஒப்பந்தங்கள், சாட்சிகள் கொலை செய்யப்பட்ட விவரங்கள், கொள்ளை, தீ வைப்பு, அடிமை வியாபாரம்- எத்தனை கொடூரமான தகவல்கள்! உலகத்திலேயே மிகப் பயங்கரமான அமைப்பின் செயல்கள் அடுக்கடுக்காக அவர்கள் முன்னே விரிந்தன.

எப்போதாவது கால்ஃபாக்ஸின் பேச்சில் தொடர்பு விடுபட்டால், அப்போது மட்டுமே வார்னரோ அல்லது டிசில்வாவோ கேள்வி கேட்டுச் சரிசெய்தார்கள்.

வார்னர் எதிர்பார்த்ததை விட வெற்றிகரமாக விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது-

முடிவதற்குச் சில நிமிடங்களே இருந்தபோது-

வார்னருக்கு ஒரு பயங்கர அதிர்ச்சி!

ஒரு குறிப்பிட்ட பணப் பட்டுவாடா பற்றி ஜூரர்களில் ஒருவர் கால்ஃபாக்ஸிடம் ஏதோ கேட்டார்.

"அது இரண்டு வருஷத்துக்கு முன்பு நடந்த விஷயம், என்று பதிலளித்தார் கால்ஃபாக்ஸ். மாரெட்டி சில விஷயங்களை என்னிடம் ஒப்படைத்ததில்லை. இந்த விவகாரமும் அப்படி ஒன்று. அதை அவன் ஜெனிபரிடம் ஒப்படைத்திருந்தான்."

ஜெனிபரா!

வார்னர் உறைந்து போனான்.

டிசில்வா உடனே பரபரப்படைந்தார் "ஜெனிபர் என்றா சொன்னீர்கள்? ஜெனிபர் பார்க்கரா?"

"ஆமாம் சார்" கால்ஃபாக்ஸின் குரலில் பழி தீர்க்கும் ஆவல் நிரம்பியது. "ஜெனிபர் பார்க்கர்தான். அவள்தான் இப்போது மாரெட்டியின் பயங்கரக் கும்பலுக்கு வக்கீலாக இருக்கிறாள்."

ஜெனிபர்... மாரெட்டியின் வக்கீல்.. வார்னருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. காஃபாக்ஸின் பேச்சைத் தடுக்க நினைத்தான் அவர் சொல்வது விசாரணைக்குச் சம்பந்தமில்லாதது என்று கூற நினைத்தான்.

எல்லாம் கடந்து விட்டது. டிசில்வாவிடம் உற்சாக வெறி பீறிட்டுக் கொண்டிருந்தது. ஜெனிபரின் கழுத்தை முறிக்க எப்படிப்பட்ட சந்தர்ப்பம்! எதுவும் அவரை இனிமேல் தடுக்க முடியாது.

"ஜெனிபரைப் பற்றிச் சொல்லுங்கள்!" என்றார் காட்டத்துடன்.

கால்ஃபாக்ஸ் உடனே, "பினாமி ஸ்தாபனங்களை? நிறுவினதிலும் பண மோசடிகள் செய்வதிலும் ஜெனிபருக்குப் பெரும் பங்கு உண்டு..." என்று ஆரம்பித்தார்.

வார்னர் குறுக்கிட்டு, "இது வந்து..." என்று ஏதோ கூற முயன்றான்.

"அது மட்டுமல்ல... கொலையிலும் கூடப் பங்கு உண்டு," என்று தொடர்ந்தார் கால்ஃபாக்ஸ்

கொலை! திடீரென்று அந்த அறையில் பயங்கர நிசப்தம்!

வார்னர் சொன்னான்: "மிஸ்டர் கால்ஃபாக்ஸ், உண்மையாக நடந்தவைகளைப் பற்றி மட்டும்தான் இங்கே விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ஜெனிபர் ஒரு கொலையில் சம்பந்தப்பட்டதாக நீங்கள் பாட்டுக்கு ஏதோ சொல்லிக்கொண்டு போகிறீர்களே..."

"உண்மையைத்தான் சொல்கிறேன். அவளுடைய பிள்ளையை ஒருவன் கடத்திக் கொண்டு போனான். அவன் பெயர் பிராங்க் ஜாக்ஸன். அவனைக் கொலை செய்யும்படி ஜெனிபர் மாரெட்டியிடம் சொன்னாள். மாரெட்டியும் அவள் சொல்படி அவனைக் கொலை செய்தான்."

அறையெங்கும் பரபரப்பு! அனைவரும் கிசுகிசுவென்று பேசிக் கொண்டார்கள்.

வார்னருக்குத் தலை சுழன்றது.

ஜெனிபருக்குப் பிள்ளையா? சே, சே! இருக்க முடியாது. ஏதோ தப்பாகச் சொல்கிறார் இந்த ஆள்!

தட்டித் தடுமாறி, "பராபரியாய்க் காதில் விழுந்ததையெல்லாம் நாம் சாட்சியமாய் ஏற்றுக் கொள்ள முடியாது..." என்றான்.

"காதில் விழுந்த செய்தியில்லை நான் சொல்வது," என்றார் கால்பாக்ஸ் அழுத்தம் திருத்தமாக, "ஜெனிபர் பேசியபோது நான் மாரெட்டியுடன் அவன் அறையில் தான் இருந்தேன்."

வார்னரின் கைகள் ஒன்றையொன்று பிசைந்து கொண்டிருந்தன - ரத்தம் வற்றி உலர்ந்து போகும் அளவுக்கு.

"சரி, சாட்சி ரொம்பக் களைத்துப் போயிருக்கிறார். விசாரணை இன்றைக்கு இத்துடன் போதும் என்று நினைக்கிறேன்..." என்றான்.

டிசில்வா ஜூரர்களைப் பார்த்து, "எனக்கு என்ன தோன்றுகிறதென்றால்..." என்று கூற ஆரம்பித்தார்.

ஆனால் வார்னர் அதைக் கேட்டுக்கொண்டு நிற்கவில்லை.

ஜெனிபரை உடனே பார்த்தாக வேண்டும். எங்கே இருக்கிறாள் அவள்?

பல முறை ஜெனிபர் மாயமாய் மறைந்ததுண்டு. அவளைத் தேட முயன்று அவன் தோற்றதுண்டு.

ஆனால் இப்போது அவளைப் பார்த்தேயாக வேண்டும். ஜெனிபர்! நீ எங்கே இருக்கிறாய்?

அமெரிக்க அரசாங்கத்தின் ரகசியப் போலீஸ் தன் பிரம்மாண்டமான வேட்டையைத் தொடங்கியது. அதனுடன் வேறு பல அரசாங்கத் துறைகளும் முடுக்கி விடப்பட்டன.

கொலைகள், கொலைகளுக்கான சதிகள், மிரட்டிப் பணம் பறித்தல், கொடும் வட்டி, கஞ்சா வியாபாரம், கொள்ளை, வருமான வரி ஏய்ப்பு-இப்படி ஏராளமான குற்றங்களைப் பற்றி வேட்டை ஆரம்பமாயிற்று.

எல்லாம் கால்ஃபாக்ஸ் தெரிவித்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு.

ஸ்தாபன ரீதியாகக் குற்றங்கள் புரிந்து வரும் பயங்கரக் கும்பலை அடியோடு ஒழித்துக் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாயிற்று. அமெரிக்காவில் மட்டுமல்ல, வெளி நாடுகளில் இருந்த மாரெட்டியின் கூட்டாளிகள் மாட்டிக் கொள்ளத் தொடங்கியிருந்தார்கள்.

ஆனால் எதுவும் பகிரங்கமாக நடைபெறவில்லை. வெகு ரகசியமாக நடைபெற்றன. கும்பலின் மூத்த தலைகளுக்குப் பெரும் இடி காத்திருந்தது.

இந்த விசாரணைக் குழுவின் தலைவன் என்ற முறையில் வார்னருக்கு ஏகப்பட்ட முக்கியத்துவம் ஏற்பட்டிருந்தது. அவனுடைய அலுவலகத்தில் ஜேஜே என்று எப்பொதும் கூட்டம். இரவெல்லாம் கண் விழித்து வேலை செய்தான் வார்னர்.

மாரெட்டியின் கையில் விலங்கு ஏற வேண்டியது தான் தாமதம் வார்னரின் புகழ் உச்சாணிக் கொம்புக்கு ஏறப் போவது நிச்சயம். அதன் பின் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி ரொம்பச் சுலபமாகிவிடும்.

வார்னர் எவ்வளவோ சந்தோஷமாக இருக்க வேண்டியவன். ஆனால் இல்லை.

வேதனையில் துடித்துக் கொண்டிருந்தான் அவன். எவ்வளவு பெரிய சோதனை அவன் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கிறது!

இந்த விசாரணைகளில் ஜெனிபர் சிக்கியிருக்கிறாளே! அவளை எச்சரித்தாக வேண்டும். 'உடனே எங்காவது போய்விடு. இல்லாவிட்டால் பிறகு சந்தர்ப்பம் கிடைக்காது' என்று சொல்ல வேண்டும்? என்று நினைத்து கொண்டான்.

அதே சமயம் அவனுக்கு இன்னொரு கடமையும் இருக்கிறது. விசாரணைக் கமிஷனுக்கு அவன்தான் தலைவன். பாராளுமன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை அவனுக்கு இருக்கிறது.

ஜெனிபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியவனே அவன்தான்.

ஜெனிபர் மீது நடவடிக்கையா! அவனா! எப்படி எடுக்க முடியும்?

அதே சமயம், அவளுக்கு எச்சரிக்கை பண்ணி அவள் தப்பும்படி செய்து, அது வெளியே தெரிந்து விட்டால்...!

விசாரணைக் கமிஷனின் மதிப்பே குலைந்து விடும். இதுவரை செய்துள்ள சாதனைகள் குட்டிச் சுவராகிவிடும்.

அவனுடைய எதிர்காலம் குட்டிச்சுவர். அவனுடைய குடும்பம் குட்டிச்சுவர்.

இதெல்லாம் இருக்கட்டும். ஜெனிபருக்கு ஒரு குழந்தை இருக்கிறதாமே! கால்ஃபாக்ஸ் சொன்ன விஷயம் அவனை நிலைகுலையப் பண்ணியது.

எப்படியும் ஜெனிபரிடம் பேசியாக வேண்டும்.

அவளுடைய அலுவலகத்துக்குப் போன் செய்து பார்த்தான். அங்கிருந்த காரியதரிசி, "ஸாரி, மிஸஸ் ஜெனிபர் வரவில்லை," என்று தெரிவித்தாள்.

"ரொம்ப - ரொம்ப முக்கியமான விஷயம். ஜெனிபர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல முடியுமா?"

"ஸாரி, சார், வேறே யாரையாவது கூப்பிடட்டுமா- உங்களுக்கு உதவி செய்ய?"

யார் உதவி செய்வார்கள் அவனுக்கு? யார் உதவி செய்வார்கள்?

50

அந்த வாரம் முழுதும் வார்னர் தினம் பல முறை ஜெனிபருக்குப் போன் செய்து பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் ஜெனிபரின் செகரட்டரியிடமிருந்து ஒரே பதில்தான் வந்தது; "ஸாரி சார். ஜெனிபர் ஆபீசுக்கு வரவில்லை."

அன்று இன்னொரு தரம் போன் செய்வதற்காக டெலிபோனைக் கையிலெடுத்தான். அதற்குள் அவன் மனைவி மேரி உள்ளே வந்தாள். வார்னர் டெலிபோனை மெதுவே திரும்ப வைத்து விட்டான்.

மேரி அவனருகில் வந்து அவன் தலையைக் கைகளால் அளைந்தாள். "ரொம்பக் களைப்பாக இருக்கிறீர்கள் போலிருக்கிறதே டார்லிங்?" என்றாள்.

"இல்லையே? நன்றாகத்தான் இருக்கிறேன்."

அவனுடைய மேஜைக்கெதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள் அவள். "உங்கள் தேர்தல் வேலையெல்லாம் ஜோராய் நடந்து கொண்டிருக்கிறது. இல்லையா?"

"ஆமாமாம்."

"சீக்கிரம் முடிந்து விட்டால் தேவலை. உங்களுக்காகத்தான்' சொல்கிறேன். இடுப்பை முறிக்கிற மாதிரி பயங்கர வேலைகள் உங்களுக்கு."

"சமாளித்துக் கொண்டிருக்கிறேன், மேரி. கவலைப் படாதே," என்றான் வார்னர்.

"கவலையாய்த்தான் இருக்கிறது. ஜெனிபர் விவகாரம் வேறே முளைத்திருக்கிறதே! இல்லையா?"

வார்னர் திடுக்கிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தான். "உனக்கு எப்படித் தெரியும்?"

அவள் சிரித்தாள்: "இந்த வீட்டையே ஒரு பொதுக் கூட்ட மேடை மாதிரி பண்ணி வைத்திருக்கிறீர்களே, டியர்! என்னென்ன நடக்கிறது என்று என் காதிலும் கொஞ்சம் கொஞ்சம் விழுந்து கொண்டுதான் இருக்கிறது. மாரெட்டியையும் அவனுடைய சினேகிதியையும் பிடிப்பதில் எல்லாரும் கச்சை கட்டிக்கொண்டு இறங்கியிருப்பது எனக்குத் தெரியும்!"

சொல்லி விட்டு அவன் முகத்தைப் பார்த்தாள் மேரி. அதிலே எந்தச் சலனமும் தெரியவில்லை.

பிரியத்துடன் கணவனை நோக்கியவள், 'இந்த ஆண்கள் எவ்வளவு அப்பாவியாக இருக்கிறார்கள்!' என்று எண்ணிக் கொண்டாள். ஜெனிபரைப் பற்றி வார்னருக்குத் தெரிந்ததைக் காட்டிலும் அவளுக்கு அதிகமாய்த் தெரிந்திருந்தது. 'அரசியலிலும் பிஸினஸிலும் புத்திசாலியாயிருக்கும் ஆண்கள் கூட, பெண் விவகாரம் என்று வந்துவிட்டால் எத்தனை பித்துக்குளியாக ஆகிவிடுகிறார்கள்!' என்று அவள் எப்போதுமே ஆச்சரியப்படுவதுண்டு மாமேதையான மனிதர்கள், மிக மலிவான மட்டமான சிறுக்கிகளைப் போய் மணந்து கொள்வதை அவள் பார்த்திருக்கிறாள் ஆகவே, தன் கணவன் ஜெனிபரிடம் மயங்கிக் கிடப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. வார்னர் கவர்ச்சியான ஆணழகன். எந்தப் பெண்ணும் அவனை விரும்புவாள் எல்லா ஆண்களையும் போல வார்னரும் ஏமாளி...

மேரிக்கு ஒரே கொள்கை தான்: மன்னிக்கலாம். ஆனால் மறக்கக் கூடாது.

மேரி ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். ரகசியப் போலீசைச் சேர்ந்த இரண்டு பேர் பேசிக்கொண்டு நிற்பது

தெரிந்தது. வரவர, சொந்த வாழ்க்கை, அந்தரங்கம் என்பதே இல்லாமல் போய்விட்டது என்று அவளுக்கு எரிச்சல் ஏற்பட்டது. அதே சமயம், அமெரிக்க ஜனாதிபதி பதவிக்குத் தன் கணவர் போட்டியிடுகிறார் என்பது ஞாபகம் வரவே பெருமையாகவும் இருந்தது.

சே! முட்டாள்தனமாக எரிச்சல் பட்டோமே! நிச்சயமாய் அடுத்த ஜனாதிபதி நம் கணவர்தான்! யாரைக் கேட்டாலும் அதேதான் சொல்கிறார்கள். ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் குடியேறப் போகிறோம்! அந்த எண்ணமே மேரிக்கு ஏகப்பட்ட உற்சாகம் தந்தது. கூட்டம், சொற்பொழிவு என்று வார்னர் வேலையாயிருந்த நேரங்களில் அவளும் வேலையாயிருந்தாள் தன் கற்பனைகளில். வெள்ளை மாளிகையில் குடியேறியதும் எந்த இடத்தை எப்படி மாற்றலாம் என்று அவள் சிந்தனைகள் ஓடும். தன் அறையில் மணிக்கணக்காக உட்கார்ந்து, வெள்ளை மாளிகையில் என்னென்ன அலங்காரங்களை எப்படி யெப்படிச் செய்யலாம் என்று மனசுக்குள்ளாகவே திட்டம் தீட்டுவாள். நாட்டின் 'முதல் பெண்ணாக' ஆனதும் எவ்வளவு பரபரப்பான வேலைகள் இருக்கப்போகிறது! வார்னரும் அவளும் அந்த மாளிகையில் வசிக்கப் போகிறார்கள் சரித்திரத்தில் இடம் பெறப் போகிறார்கள்.

இந்த ஜெனிபரால் அவ்வளவும் பாழாகி விடும் போலல்லவா ஆகியிருந்தது! நினைக்கும் போதே மேரிக்கு உடல் நடுங்கியது. நல்ல வேளை, அந்த ஆபத்தைத் தாண்டியாகி விட்டது. கடவுள் காப்பாற்றினார்!

மேஜையெதிரில் உட்கார்ந்துள்ள கணவனைக் கூர்ந்து பார்த்தாள் பாவம், எவ்வளவு களைத்துச் சோர்ந்து போயிருக்கிறார்!

"ஒரு கப் காப்பி எடுத்து வரட்டுமா, டார்லிங்?" என்றாள்.

வேண்டாம் என்று சொல்ல வாயெடுத்தான் வார்னர். பிறகு மனதை மாற்றிக்கொண்டு, "ஓ! கொண்டு வாயேன்," என்றான்.

"இதோ ஒரு நொடியில்!"

மேரி அந்தண்டை போனதுமே வார்னர் மறுபடி டெலிபோனை எடுத்தான். மறுபடியும் டயல் செய்தான்.

அது மாலை நேரம். ஜெனிபரின் அலுவலகம் மூடியிருக்கும். இருந்தாலும் போனை எடுப்பதற்காகவாவது யாரேனும் இருக்கமாட்டார்களா?

ரொம்ப நேரத்துக்கு மணியடித்துக் கொண்டிருந்தது. கடைசியில் போனை எடுத்தார்கள்.

"ரொம்ப அவசரம், ப்ளீஸ். ஜெனிபருடன் பேச வேண்டுமென்று பல நாளாய் முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறேன். என் பெயர் வார்னர்..." என்றான் வேகமாக.

"ஒரு நிமிடம் இருங்கள்." சிறிது நேரத்துக்குப் பின் மறுபடி பேசினார் டெலிபோனை எடுத்தவர் "ஸாரி மிஸ்டர் வார்னர். ஜெனிபர் இப்போது எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை. ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள் அவர் வந்ததும் தெரிவிக்கிறோம்."

"ஒன்றுமில்லை." படீரென்று போனை வைத்தான் அவன் ...கசப்பு அவன் மனதில் நிரம்பியிருந்தது. 'வார்னர் கூப்பிட்டதாகச் சொல்லுங்கள்' என்று சொல்லலாம். ஆனால் எந்த நம்பருக்கு ஜெனிபரைப் பேசச் சொல்ல முடியும்? எப்படி அவள் கூப்பிட முடியும்? வழியே இல்லை.

வெளியே இரவு கவியலாயிற்று. இருட்டைப் பார்த்த படியே தன் மூலையில் முடங்கிக் கிடந்தான் அவன்.

இன்னும் சில நாட்களில், டஜன் கணக்கான கைது வாரெண்ட்டுகள் பிறப்பிக்கப்பட்டு விடும். அவைகளில் ஒன்று, கொலைக் குற்றத்துக்காக.

கைதாக வேண்டியவர்களின் பட்டியலில் ஜெனிபரின் பெயர் இருக்கும்.

என்ன செய்ய முடியும்? எப்படித் தடுக்க முடியும்?

வார்னர் தவித்தான்.

ஜெனிபர் ஒரு மலைவாசஸ் தலத்தில் தங்கியிருந்தாள். சாப்பிடுவதும் ஓய்வெடுத்துக் கொள்வதும் வளைந்த மலைப்பாதைகளில் உலாச் செல்வதுமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள்.

ஐந்து நாள் கழித்து மாரெட்டி நியூயார்க்கிலிருந்து திரும்பி வந்தான்.

கார் வரும் சத்தம் கேட்டதுமே அவனை வரவேற்க வாசலுக்கு விரைந்தாள்.

மாரெட்டி அவளை ஏற இறங்கப் பார்த்து, "முன்னைக்கு இப்போது உடம்பு தேறியிருக்கிறாயே?" என்றான்.

"உடம்பு தேவலை, தாங்க் யூ," என்றாள் அவள்.

இருவருமாய் ஏரிக்குச் செல்லும் பாதையில் நடந்தார்கள்.

"உனக்கு ஒன்று சொல்லப் போகிறேன்," என்றான் மாரெட்டி.

"என்ன?"

"நாளைக்கு நீ சிங்கப்பூருக்குப் புறப்பட வேண்டும்."

"சிங்கப்பூரா!"

"ஆமாம், விமானக் கம்பெனியில் வேலை பார்க்கும் என்னோட ஆள் ஒருவன் மாட்டிக் கொண்டிருக்கிறான். அவன் பெயர் ஜார்க். இப்போது ஜெயிலில் இருக்கிறான். அவன் ஏதாவது உளறி வைப்பதற்கு முன்னால் அவனை நீ ஜாமீனில் வெளியே கொண்டு வரவேண்டும்."

"சரி," என்றாள் ஜெனிபர்.

"சீக்கிரமாய்த் திரும்பி விடு. நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது," என்று சொன்னவன் அவளை அருகே இழுத்து அணைத்துக் கொண்டான் அவள் உதடுகளில் மென்மையாக முத்தமிட்டு, "ஜெனிபர், உன்மீது எனக்கு எவ்வளவு காதல் தெரியுமா?" என்றான்.

இதற்கு முன் எந்தப் பெண்ணிடமும் அவன் இந்த வார்த்தையைச் சொன்னது கிடையாது. ஜெனிபரும் அதை அறிவாள்.

ஆனால் அவள் உள்ளத்தில் எந்தக் கிளுகிளுப்பும் ஏற்படவில்லை. எல்லாம் முடிந்துவிட்டது. அவளுக்குள் ஏதோ ஒன்று செத்துவிட்டது. இனி அது ஒரு நாளும் உயிர்த்தெழப் போவதில்லை. அவளுக்குள் ஒரு குற்ற உணர்வு-தனிமை உணர்ச்சி-அவ்வளவுதான் மிஞ்சி யிருந்தது.

தான் நிரந்தரமாக எங்காவது போய்விடப் போவதாக மாரெட்டியிடம் சொல்லிவிடுவதென்று அவள் முடிவு செய்திருந்தாள். ஆம், இனி அவள் வாழ்க்கையில் வார்னரும் கிடையாது. மாரெட்டியும் கிடையாது. தனியாக வேறு எங்காவது புறப்பட்டுப் போய்விட வேண்டும். புது வாழ்க்கை ஆரம்பிக்க வேண்டும். அவளுக்கு ஒரு கடன் இருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டும்.

இதுதான் மாரெட்டிக்காகச் செய்யும் கடைசி வேலை. திரும்பி வந்ததும் அவனிடம் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட வேண்டும்.

மறுநாள் அவள் சிங்கப்பூருக்குப் புறப்பட்டாள்.

ஓட்டலில், முன்னறையில் மாரெட்டியின் ஆட்கள் உணவருந்திக் கொண்டிருந்தார்கள். நிக், டோனிக், இன்னும் இரண்டு பேர். பின் அறையொன்றில் மாரெட்டி இருந்தான்.

கதவைத் திறந்துகொண்டு யார் உள்ளே வந்தாலும் சட்டென்று ஓரக்கண்ணால் பார்த்துக் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள் மாரெட்டியின் ஆட்கள். கும்பலில் இப்போது விரோதி என்று யாரும் இல்லைதான். இருந்தாலும் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

"அப்புறம் என்ன ஆச்சு?" என்று கேட்டான் ஒருவன்.

மாரெட்டியிடம் மாட்டிக் கொண்ட ஒருவனைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். "அப்புறம் மாரெட்டி பேசுவதைப் பதிவு செய்து கொள்வதற்காக ரகசியமாய் ஒரு சின்ன மைக்கைக் காலில் ஒளித்து வைத்திருந்தான் அவன் சட்டையிடுக்கில் அதன் ஒயர் தெரிந்துவிட்டது. மாரெட்டி அந்த ஒயரினாலேயே அவன் கழுத்தை இறுக்கி - ஆள் கொஞ்சம் கொஞ்சமாக குளோஸ்..."

பத்திரிகை விற்கும் கிழவனொருவன் உள்ளே வந்தான்.

"நான் பணம் கட்டிய குதிரை என்னாச்சுன்னு பார்க்கணும்," என்றபடி மாரெட்டியின் ஆட்களில் ஒருவன் ஒரு பத்திரிகை வாங்கினான். ஒரு டாலர் தந்து, "மீதிச் சில்லறையை நீயே வெச்சுக்க," என்று அவனை அனுப்பிவிட்டு பத்திரிகையைப் பார்த்தான்.

முதல் பக்கத்தில் இருந்த ஒரு புகைப்படம் நிக்கின் கவனத்தைக் கவர்ந்தது.

"ஏய்! இந்த ஆளை நான் பார்த்திருக்கிறேன்!" என்றான்.

டோனி அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, "மட்டி! இந்த ஆளை தெரியாது? இவன்தான் வார்னர். ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடுகிறான்." என்றான்.

"இல்லையில்லை... நிக் தலையைத் தட்டிக் கொண்டான். " இவனை நேரிலேயே பார்த்திருக்கிறேன் என்கிறேன்..." ஞாபகப் படுத்திக் கொள்ள முயற்சி செய்தான். "ஆ! ஞாபகம் வந்து விட்டது! இவனை மெக்ஸிகோவில் ஓர் ஓட்டலில் பார்த்தேன். நம்ம ஜெனிபருடன் பேசிக் கொண்டிருந்தான்."

"என்ன உளறுகிறே?"

"உளறவில்லை நிஜமாய்த்தான். போன மாதம் நான் ஒரு சாமானை டெலிவரி செய்வதற்காக மெக்ஸிகோ போனேனே, உனக்கு ஞாபகமில்லே? அப்போ பார்த்தேன். அப்போ ஜெனிபருடன் இவனைப் பார்த்தேன். இரண்டு பேரும் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்."

அவன் தோழன் அவனை வெறித்துப் பார்த்தான். "நிச்சயமாய்த்தான் சொல்கிறாயா?"

"நிச்சயமாய்! எதுக்குக் கேட்கிறே?"

அவன் மெதுவே சொன்னான்: "இதை நாம் மாரெட்டியின் காதில் போட்டு விடுவது நல்லது என்று தோன்றுகிறது."

அவர்கள் மாரெட்டியிடம் போய்ச் சொன்ன போது-

"நிக்! ஏதாவது பைத்தியம் கியித்தியம் பிடித்தி ருக்கிறதா உனக்கு?" என்றான் மாரெட்டி. "உளறுகிறாயே? வார்னரிடம் ஜெனிபருக்கு என்ன வேலை?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. இரண்டு பேரும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். அதுதான் எனக்குத் தெரியும்."

"அந்த இரண்டு பேர் மட்டும்?"

"ஆமாம்."

மாரெட்டியின் இன்னோர் ஆள், "நீங்க இந்த விஷயத்தை விசாரிக்கணும் என்றுதான் இவனை உங்களிடம் சொல்லச் சொன்னேன். அந்த வார்னர் நம் விவகாரங்களைப் பற்றி ரொம்பத் தீவிரமாய் விசாரணை செய்து கொண்டிருக்கிறான். ஜெனிபருக்கு அவனிடம் என்ன பேச்சு?"

•

என்ன பேச்சு? அந்தக் கேள்வியேதான் மாரெட்டி யையும் குடைந்தெடுத்தது.

வக்கீல்கள் மாநாட்டுக்காக மெக்ஸிகோவிற்குப் போனதைப் பற்றி ஜெனிபர் சொன்னாள். மாநாட்டைப் பற்றிச் சொன்னாள். அங்கே சந்தித்த பலரைப் பற்றிச் சொன்னாள். ஆனால் வார்னரைப் பற்றி ஒரு வார்த்தை கூட மூச்சு விடவில்லையே?

டோனியிடம் திரும்பினான் "வீட்டுக் காவலர்களின் சங்கத்தில் இப்போது மானேஜராக இருப்பவன் யார்?"

"சார்லி."

ஐந்து நிமிடத்துக்கெல்லாம் அந்தச் சார்லி என்பவனை டெலிபோனில் பிடித்தான்.

ஜெனிபர் குடியிருந்த பல மாடிக் கட்டிடத்தின் பெயர் பெல்மாண்ட் டவர்ஸ் என்று மாரெட்டிக்குத் தெரியும்.

"என் சினேகிதன் ஒருவன் ஒன்பது வருடத்துக்கு முன்னால் பெல்மாண்ட் டவர்ஸில் குடியிருந்தான். அவனைப் பற்றித் தெரிய வேண்டும். அந்தச் சமயத்தில் அந்தக் கட்டிடத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் யார்? அவனை என்னிடம் அனுப்பு."

உதவியாளர்கள் நாலு பேரும் அவனையே கவனித்தபடி நின்றிருந்தார்கள்.

"போய்த் தோலையுங்களேண்டா? வேலை எதுவும் கிடையாது?" என்று சீறி விழுந்ததும் அவர்கள் ஓடி விட்டார்கள்.

வெகு நேரம் உட்கார்ந்திருந்தான் மாரெட்டி. ஜெனிபரும் வார்னரும் சேர்ந்து படுத்திருப்பதைக் கற்பனை செய்து பார்த்தான். அவன் உடலெங்கும் எரிந்தது.

வார்னரைப் பற்றி ஏன் ஜெனிபர் ஒன்றுமே சொல்லவில்லை? ஏன்?

ஜோசப்பின் தந்தை வியட்நாம் யுத்தத்தில் இறந்ததாக மட்டுமே சொல்லியிருக்கிறாள். ஏன் அந்த ஆளைப் பற்றி விவரமாக ஒருநாள் கூடப் பேசியதில்லை? ஏன்? ஏன்?

51

ஜெனிபருக்கு ஒரு குழந்தை இருந்ததா! மாரெட்டிக்குப் பொறுக்கவில்லை.

எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான் சற்றைக்கெல்லாம் 'பெல்மாண்ட்

டவர்ஸ்' கட்டிடத்தின் பொறுப்பாளராக இருந்தவர் வந்து சேர்ந்தார் பயந்தாங் கொள்ளி, பாவம், நடுங்கிக் கொண்டிருந்தார்.

அவர் கையைக் குலுக்கி, "உட்காருங்கள், நீங்கள் மெனக் கெட்டு இங்கே வந்ததைப் பற்றி ரொம்ப சந்தோஷம். சாப்பிட ஏதாவது கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்றான் மாரெட்டி.

"ரொம்ப நன்றி சார். ஒன்றும் வேண்டாம் சார்... கொஞ்சம் விட்டால் மாரெட்டியை நமஸ்காரம் செய்து விடுவார் போல இருந்தது.

"பயப்படாதீர்கள், ஒரு சின்னத் தகவல் தெரிய வேண்டும்."

"சொல்லுங்கள் சார்."

"பெல்மாண்ட் டவர்ஸில் இப்போதும் வேலை பார்க்கிறீர்களா?"

"இல்லை சார். ஐந்து வருஷமாகிறது அந்த வேலையை விட்டு. என் மாமியாருக்குப் பாரிச வாயு வந்ததிலிருந்து..."

மாரெட்டி குறுக்கிட்டு, அங்கே வசித்தவர் களையெல்லாம் நினைவிருக்கா?" என்று கேட்டான்.

"ஓ! அனேகமாய் எல்லாரையும்...

"ஜெனிபர் என்று ஒரு பெண் இருந்தாளே தெரியுமா?"

அவர் முகம் மலர்ந்தது. "நன்றாய்த் தெரியுமே? நல்ல பெண். அவளுடைய அபார்ட்மெண்ட் நம்பர் கூட ஞாபகம் இருக்கிறது. பத்தொன்பது இருபத்தொன்பது. அந்த வருடம்..."

"ஜெனிபரைப் பார்க்க நிறையப் பேர் வருவார்களா?"

அவர் தலையைச் சொறிந்து கொண்டார். "அதைச் சொல்றது கஷ்டம். அவள் வரும்போது போகும் போதுதான் பார்த்திருக்கிறேன்..."

"ராத்திரியில் யாராவது ஆண்கள் அவளுடன் தங்குவதுண்டா?"

தலையைப் பலமாக அசைத்தார் அவர். "சே, சே! கிடையாது சார்."

அப்பாடா! மாரெட்டிக்கு நிம்மதி ஏற்பட்டது. நாம் நினைத்தது சரிதான். ஜெனிபராவது அப்படியெல்லாம்...

"ஏன் சார்? அவளுடைய காதலனுக்கு விஷயம் தெரிந்து விட்டதா?"

தூக்கிவாரிப் போட்டது மாரெட்டிக்கு. "என்னது! காதலனா?"

"ஆமாம் சார் ஒரு காதலனுடன் அவள் குடித்தனம் நடத்தி வந்தாளே?"

வயிற்றில் ஈட்டியைப் பாய்ச்சின மாதிரி இருந்தது மாரெட்டிக்கு. கோபத்தில் தன்னை மறந்தான். வந்தவரின் சட்டைக் காலரைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி அவரைத் தூக்கி நிறுத்தினான், "பொய் சொன்னாயோ கொன்று விடுவேன் கொன்று! அந்த ஆளின் பெயர் என்ன? சொல்லு!"

கிழவர் நடுநடுங்கிப் போனார். "எனக்கு தெரியாது சார்! கடவுள் சத்தியமாய்ச் சொல்கிறேன். தெரியாது!"

அவரைப் பிடித்து ஒரு தள்ளு தள்ளிவிட்டு, மேஜை மீதிருந்த தினசரியை எடுத்து அவர் கண்ணெதிரே இடித்தான்.

அதிலிருந்த வார்னரின் புகைப் படத்தைப் பார்த்தார் அவர். "ஆமாம் இவன்தான். ஜெனிபருடன் குடித்தனம் நடத்திய காதலன் இவன்தான்," என்றார் பரபரப்பாக.

பொத்தென்று உட்கார்ந்தான் மாரெட்டி. உலகம் மொத்தமும் இடிந்து அவன் தலைமீது விழுந்து மாதிரி இருந்தது.

இத்தனை நாளும் ஜெனிபர் பொய் சொல்லி வந்திருக்கிறாள்! வார்னருடன் சேர்ந்து கொண்டு துரோகம் செய்து வந்திருக்கிறாள்! இரண்டு பேருமாய்ச் சேர்ந்து திருட்டுத்தனம் பண்ணியிருக்கிறார்கள்! அவன் முதுகுக்குப் பின்னே சதி செய்திருக்கிறார்கள்! அவனை முட்டாளடித்திருக்கிறார்கள்!

இன்று ஜெனிபர் அவன் கழுத்துக்குச் சுருக்குக் கொண்டு வந்திருக்கிறாள்!

வஞ்சத்தின் வேகம் மாரெட்டியின் நெஞ்சை நிறைத்தது.

இருவரையும் கொலை பண்ணாமல் விடுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டான்.

ஜெனிபர் நியூயார்க்கிலிருந்து புறப்பட்டு லண்டன் வழியாகச் சிங்கப்பூரை அடைந்தாள். நடுவே பஹ்ரீனில் இரண்டு மணி நேரம் விமானம் நின்றுவிட்டுப் புறப்பட்டது.

சிங்கப்பூர் சாங்கி விமான தளத்தில் அவள் இறங்கியபோது பிற்பகல் நாலு நாற்பது ஆகியிருந்தது. புத்தம் புது விமான தளம். நகரத்திலிருந்து பதினாறு மைல் தொலைவில் இருந்தது. விமானம் பாதையில் இறங்கி ஓடியபோது, சுற்றிலும் நிறையக் கட்டிட வேலைகள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

கஸ்டம்ஸ் பிரிவு நவீனமாயும் காற்றோட்டமாயும் இருந்தது. பிரயாணிகளின் லக்கேஜ்கள் வரிசை வரிசையாக அடுக்கப் பட்டிருந்தன. கஸ்டம்ஸ் அதிகாரிகள் திறமை

சாலியாயும் பணிவுள்ளவர்களாயும் இருந்தார்கள். பதினைந்தே நிமிஷத்தில் ஜெனிபரின் சுங்கச் சோதனைகள் முடிந்தன. நேரே டாக்ஸி ஸ்டாண்டை நோக்கிப் புறப் பட்டாள்.

வாசலுக்கு வெளியே, நடுத்தர வயதுச் சீனாக்காரன் ஒருவன் அவளை நெருங்கி வந்து "நீங்கள் தானே ஜெனிபர்?" என்றான்.

"ஆமாம்."

"என் பெயர் சூ லிங்," என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டான் அவன். மாரெட்டியின் ஆள் என்று ஜெனிபர் புரிந்து கொண்டாள்

"உங்களுக்காக லிமொஸின் கார் காத்திருக்கிறது," என்றான் சூலிங். ஜெனிபரின் லக்கேஜ்களைக் காரில் ஏற்றினான். சில நிமிடங்களுக்கெல்லாம் நகரத்தை நோக்கிக் கார் பறந்தது.

"பிரயாணம் சௌக்ரியமாக இருந்ததா?"

"ஓ," என்றாள் ஜெனிபர்.

ஜார்க் என்பவனைப் பற்றியே அவள் எண்ணங்கள் ஓடின. கஞ்சா கடத்தல் குற்றத்துக்காகப் பிடிபட்டிருக்கும் அவனை ஜாமீனில் வெளியே கொண்டு வருவதற் காகத்தானே மாரெட்டி அவளை இங்கே அனுப்பி யிருக்கிறான்.

அவள் மனதைப் புரிந்து கொண்டான் சூலிங். வழியில் தென்பட்ட ஒரு கட்டிடத்தைக் சுட்டிக் காட்டி, "அதுதான் சாங்கி சிறைச்சாலை. ஜார்க் அங்கேதான் இருக்கிறான்," என்றான்.

நெடுஞ்சாலையிலிருந்து ஒதுங்கியிருந்தது. அந்தச் சிறைச்சாலை. பெரிய கட்டிடம், முள்வேலி போடப் பட்டிருந்தது. மின்சாரம் பாய்ச்சப்பட்ட முள்வேலி.

மூலைக்கு மூலை கண்காணிப்புத் தூண்கள் ஓங்கி உயர்ந்து நின்றன. ஆயுதம் தாங்கிய காவலர்கள் அங்கே நின்றிருந்தார்கள். நுழை வாசலில் இன்னொரு முள்வேலி போடப் பட்டிருந்தது. மேலும் பல காவலர்கள் நின்றிருந்தார்கள்.

"உலக யுத்தத்தின் போது பிரிட்டிஷ் பிரஜைகளை யெல்லாம் இங்கே அடைத்து வைத்திருந்தார்கள்." எனறான் சூ லிங்.

"ஜார்க்கை நான் எப்போது பார்க்கலாம் ?"

சூலிங் மெதுவே சொன்னான்:"மிக ஜாக்கிரதையாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் இது. கஞ்சா சமாசாரத்தில் அரசாங்கம் ரொம்பக் கண்டிப்பாக இருக்கிறது. முதல் தடவையாகக் கஞ்சா அருந்தி மாட்டிக் கொள்கிற வர்களுக்குக்கூடக் கடுமையான தண்டனை விதிக்கிறார்கள். அப்படி இருக்க, கஞ்சா வியாபாரம் செய்கிறவர் பிடிபட்டால்!..." சூ லிங் தோள்களைக் குலுக்கிக் கொண்டு, "சக்தி வாய்ந்த மூன்று குடும்பங்கள் சிங்கப்பூரை ஆட்சி செய்கின்றன. மூன்று பேருமே கஞ்சா விஷயத்தில் ரொம்பத் தீவிரம்..."என்றான்.

"இன்ஃப்ளுயன்ஸ் உள்ள சினேகிதர்கள் நமக்கு இருப்பார்களே?"

"டேவிட் என்று ஒரு இன்ஸ்பெக்டர் இருக்கிறார். நியாயத்துக்குக் கட்டுப்படுகிற மனிதர்" என்றான் சூ லிங்.

'எவ்வளவு வாங்கிக்கொண்டு நியாயத்துக்குக் கட்டுப்படுவார்' என்று கேட்க நினைத்தாள் ஜெனிபர். கேட்கவில்லை அதையெல்லாம் போக போகத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்று எண்ணியவளாக ஊரின் அழகைக் கவனிக்கத் தொடங்கினாள். எந்தப் பக்கம் திரும்பினாலும் பச்சை பசேலென்றிருந்தது. ஏராளமான பூச்செடிகள். புராதனமான கோவில்கள். புத்த மடங்களுக்கிடையே நவீனமான கடைகள் தென் பட்டன.

சாலையில் நடந்து செல்வோரில் சிலர் கர்நாடகமான உடையும் முன்டாசும் அணிந்திருந்தனர். வேறு சிலர் லேட்டஸ்ட் மேற்கத்திய உடை அணிந்் திருந்தனர். பழைய கலாசாரமும் புதிய நாகரிகமும் கலந்து காட்சி தந்தது சிங்கப்பூர். துளி கூடக் குப்பை இல்லாமல் அப்பழுக்கற்று இருக்கிறதே என்று ஜெனிபர் ஆச்சரியப்பட்டாள்.

"தெருவிலே யாராவது குப்பை போட்டால் ஐந்நூறு டாலர் அபராதம் என்றான்," சூ லிங்.

ஒரு குன்றின் மீதிருந்த ஓட்டலைக் கார் அடைந்தது. பளிங்குத் தூண்களும் கண்ணாடியுமாக வெள்ளை வெளேரென்று பளபளத்தது அந்த ஓட்டல்.

சூ லிங் விடை பெற்றான். "இன்ஸ்பெக்டர் டேவிட் உங்களுடன் தொடர்பு கொள்வார்," என்று கூறி ஒரு விசிட்டிங் கார்டைக் கொடுத்தான். "எதாவது தேவைப் பட்டால் எனக்குப் போன் செய்யுங்கள்" என்றான்.

இரண்டாவது மாடியில் இருந்தது ஜெனிபரின் விஸ்தாரமான அறை. வெளியே நோச்கினால் பிரம் மாண்டமான தோட்டமும் ஒரு நீர்வீழ்ச்சியும் தெரிந்தன. எங்கெங்கும் மலர்கள், மலர்கள், மலர்கள்... இவ்வளவு பிரமாதமான ஓட்டலை ஜெனிபர் இதுவரை பார்த்ததேயில்லை.

இளந் தென்றல் மெல்ல வீசியது. இந்த மாதிரி இடம், இந்த மாதிரி நேரம்... ஜோசப்புக்கு உயிர்.

"இன்னிக்கு சாயந்திரம் நாம் படகில் போகலாமா அம்மா" என்று அவன் கேட்பது போலிருந்தது ஜெனிபருக்கு.

'வேண்டாம். வேண்டாம்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

டெலிபோனை எடுத்தாள் ஆப்ரேட்டரிடம், "அமெரிக்காவுக்கு ஒரு கால்போட வேண்டும். நியூயார்க். பெயர் மைக்கேல் மாரெட்டி" என்று சொல்லி டெலிபோன் எண்ணைத் தந்தாள்.

"ஸாரி, மேடம். எல்லா லயன்களும் ரொம்ப பிஸி. கொஞ்ச நேரம் கழித்து கூப்பிட்டுப் பாருங்கள்" என்றார் ஓட்டல் ஆபரேட்டர்.

" தாங்க் யூ." என்று போனை வைத்தாள் ஜெனிபர்

கீழே-

ஆபரேட்டரின் அறையில்-

தன் அருகே நின்றிருந்த ஆளைப் பார்த்து, "என்ன, சரிதானே?" என்றார் ஆபரேட்டர்.

"கரெக்ட். ரொம்ப கரெக்ட்," என்றான் அந்த ஆள்.

ஜெனிபர் ஓட்டலுக்கு வந்து ஒரு மணி நேரம் கழித்து. இன்ஸ்பெக்டர் டேவிட் அவளுக்குப் போன் செய்தார்

"ஜெனிபரா? நான் இன்ஸ்பெக்டர் டேவிட்," என்றார். குரல் மென்மையாக இருந்தது.

"இன்ஸ்பெக்டர், உங்களுடைய போனுக்காகத்தான் காத்திருந்தேன். இப்ப முதல் வேலை என்னவென்றால்..."

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டு, "இன்றிரவு உங்களுடன் சேர்ந்து சாப்பிடலாம் என்று நினைக்கிறேன்," என்றார்

எச்சரிக்கையான ஆள்தான்! போனில் யாரேனும் ஒட்டுக் கேட்பார்கள் என்று பயப்படுகிறார்.

"ஓ, ரொம்ப சந்தோஷம்" என்றாள்

சாப்பாட்டுக் கூடம் விஸ்தாரமாக இருந்தது. உள்ளூர்க்காரர்கள் ஏகப்பட்ட சத்தத்துடன் பேசியபடி உணவருந்திக் கொண்டிருந்தனர். ஓர் இசைக் குழுவின் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது. கவர்ச்சியான பெண்ணொருத்தி பிரபலமான அமெரிக்கப் பாட்டுக் களைப் பாடிக் கொண்டிருந்தாள்.

வெயிட்டர் வந்து விசாரித்தான்.

"இன்பெக்டர் டேவிட்டுக்காகக் காத்திருக்கிறேன்," என்று ஜெனிபர் சொன்னதும் அவன் முகம் புன்னகையால் மலர்ந்தது.

"உங்களுக்காகத்தான் அவர் காத்திருக்கிறார், மேடம், இப்படி வாருங்கள்," என்று அழைத்துப் போனான்.

இன்ஸ்பெக்டருக்கு நாற்பது வயதிருக்கும். உயரமாய், கவர்ச்சியாக இருந்தார். கண்கள் கருமையாய்ப் பளபளத்தன. வெகு கச்சிதமாய்க் கறுப்பு உடையில் இருந்தார்.

எழுந்து ஜெனிபருக்கு நாற்காலியை நகர்த்தித் தந்து அவள் உட்கார்ந்தபின் தானும் உட்கார்ந்து கொண்டார். இசைக் குழுவின் ஓசை காதைக் கிழித்தது.

சர்க்கரை போட்ட இளநீர் பானம் வரவழைத்தார் இன்ஸ்பெக்டர். சாப்பாட்டுக்கு ஆர்டர் தந்தார்.

"உங்கள் நாட்டில் பெண்கள் தான் சாப்பாடு ஐட்டங்களுக்கு ஆர்டர் தருவார்கள், இங்கே ஆண்கள் ஆதிக்கம்," என்றார்.

அவருடன் விவாதத்தில் இறங்க ஜெனிபர் இஷ்டப் படவில்லை. இந்த மனிதரின் உதவி அவளுக்குத் தேவை. எதையாவது சொல்லிக் காரியத்தைக் கெடுத்துவிடக் கூடாது.

இளநீர் பானம் அதிகப்படி இனிப்பாக இருந்தது. சாப்பாட்டு வகைகள் அவள் பார்த்தேயிராதவை. ஆனால் ருசியாக இருந்தன.

இசைக் குழுவின் இரைச்சலில் எதுவுமே பேச முடியவில்லை. இன்ஸ்பெக்டர் உரக்க, அந்த ஓட்டலின் சிறப்பைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

எதற்காக இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார் இந்த இஸ்பெக்டர்? தாங்கள் பேசுவது மற்றவர்களுக்குக் கேட்காமலிருப்பதற்காகவா? அல்லது எதுவுமே பேச வேண்டாம் என்பதற்காகவா? ஜெனிபருக்குப் புரியவில்லை.

உணவு வகைகள் வந்து கொண்டேயிருந்தன. ஜெனிபருக்கு அவைகளில் நாட்டம் ஏற்படவில்லை. ஜார்க்கைப் பற்றி பேச அவள் எண்ணினாள் இன்ஸ் பெக்டர் டேவிட் அதைப் பற்றிப் மூச்சே விடக் காணோம்.

சாப்பிட்டு முடித்து வெளியே வந்தார்கள். "என் கார் இருக்கிறது," என்று கூறி இன்ஸ்பெக்டர் கையைச் சொடுக்கினார் ஒரு பெரிய மெர்ஸிடிஸ் கார் அவர்களுக்கருகே வந்து நின்றது. காரின் பின் கதவைத் திறந்து ஜெனிபரை ஏறிக் கொள்ளச் சொன்னார் இன்ஸ்பெக்டர். யூனிபாரம் அணிந்த ஒரு போலீஸ்காரர் காரை ஓட்டினார்.

'ஊகும். ஏதோ சரியில்லை' என்று ஜெனிபருக்குத் தோன்றியது. இந்த இன்ஸ்பெக்டர் ஜார்க்கைப் பற்றி அந்தரங்கமாகப் பேச விரும்பினால் தனியாகத்தானே அழைத்துப் போக வேண்டும்? எதற்காக ஒரு போலீஸ் காரரை வைத்துக் கொண்டிருக்கிறார்?'

"சிங்கப்பூருக்கு நீங்கள் வருவது இதுதான் முதல் தடவையா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார் காரில் போகும் போது.

"ஆமாம்"

"அப்ப இந்த ஊரில் நீங்கள் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருக்கிறது."

"நான் ஊர் சுற்றிப் பார்ப்பதற்காக வரவில்லை, இன்ஸ்பெக்டர் வந்த வேலையைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு நான் ஊர் திரும்ப வேண்டும்," என்றாள் ஜெனிபர்.

இன்ஸ்பெக்டர் ஒரு பெருமூச்சு விட்டு, "உங்கள் அமெரிக்கர்களுக்கு எப்பவும் அவசரம்தான்," என்றார்.

ஜெனிபர் இருக்கையில் சாய்ந்துகொண்டு அவர் முகத்தை ஆராய்ந்தாள். தாராளமாய், கலகலப்பாய்ப் பேசக் கூடியவராகத் தான் இருக்கிறார் ஆனால் அவளும் சாய்ந்தரத்திலிருந்து பார்க்கிறாள் முக்கியமான விஷயத்தைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே!

கடைகள், பூங்காக்கள், கேளிக்கை இடங்கள் என்று பல இடங்களுக்கு அவளை அழைத்துச் சென்றார் இன்ஸ்பெக்டர் டேவிட்.

ஓட்டலுக்குத் திரும்பினார்கள்.

ஜெனிபருக்குப் பொறுக்கவில்லை. டிரைவர் இருப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த ஜார்க்கைப் பற்றிக் கேட்க வேண்டியதுதான் என்று முடிவு செய்தாள்.

ஓட்டல் வாசலை அடைந்ததும், "ஜார்க்... என்று ஆரம்பித்தாள்

"நாளைக் காலை பத்து மணிக்கு நீங்கள் ஜார்க்கைச் சந்திக்கலாம். ஏற்பாடு செய்திருக்கிறேன்," என்றார் இன்ஸ்பெக்டர்.

வாஷிங்டனில் ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் இருந்தான் வார்னர் நியூயார்க்கிலிருந்து அவசரமாகப் போனில் கூப்பிடுவதாகச் சொன்னார்கள்.

கூப்பிட்டவர் அரசாங்க வக்கீல் டிசில்வாதான். "நாம் குற்றம் சாட்டியிருந்தவர்களை யெல்லாம் பிடிக்கலாமாம். ஸ்பெஷல் ஜூரர்கள் குழு தீர்ப்பளித்து விட்டது. நாம் யாரையெல்லாம் குற்றம் சாட்டி இருந்தோமோ அவர்களை இனி மடக்கலாம்! அவ்வளவு பேரையும்!" என்றார்.

வார்னரிடமிருந்து பதில் ஏதும் இல்லை. "என்ன, நான் சொன்னது கேட்டதா?" என்றார்.

"கேட்டது, கேட்டது!" என்றான் வார்னர், குரலில் செயற்கையாக உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு. "பிரமாதமான செய்தி!" என்றான்.

"அடுத்த இருபத்து நாலு மணி நேரத்துக்குள் நாம் வேலையில் இறங்க வேண்டும். நீங்கள் உடனே புறப்பட்டு நியூயார்க்கிற்கு வந்து விடுங்கள். நாளை காலை பத்து மணிக்கு எல்லா அதிகாரிகளையும் சந்தித்து, என்னென்ன நடவடிக்கை எடுப்பது என்று ஏற்பாடு செய்ய வேண்டும். வந்துவிடுகிறீர்களா?"

"வந்துவிடுகிறேன்."

"சரி, மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நாளைக் காலை பத்து மணி? சரிதானே?"

"சரி," என்று சொல்லிவிட்டு போனை வைத்தான் வார்னர்

ஸ்பெஷல் ஜூரி ஒப்புக் கொண்டாகிவிட்டது! ஒவ்வொருவரையும் பிடிக்கப் போகிறார்கள்! ஒவ்வொருவரையும்!

வார்னர் மறுபடியும் டெலிபோனை எடுத்தான் மறுபடியும் மறுபடியும் ஜெனிபருக்கு டயல் செய்ய ஆரம்பித்தான்.

52

சிங்கப்பூர் சாங்கி சிறைச்சாலையில் பார்வையாளர்களுக்கான அறை சின்னதாக இருந்தது. ஒரு நீளமான மர மேஜையைத் தவிர வேறு எதுவும் இல்லை. மேஜையின் இரண்டு புறமும் கடினமான மர நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றில் ஜெனிபர் உட்கார்ந்திருந்தாள், ஜார்க்குக்காகக் காத்துக் கொண்டு.

கதவு திறந்தது. சீருடை அணிந்த காவலாளி ஒருவன் ஜார்க்கை அழைத்து வந்தான்.

ஜார்க்கிற்கு முப்பது வயதிருக்கும். உயரமான ஆள். முகத்தை முழு நீளம் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தான். கன்னத்திலும் நெற்றியிலும் காயங்கள் வெளிப் படையாகவே தெரிந்தன ஜெனிபருக்கு எதிரே உட்கார்ந்தான்.

"என் பெயர் ஜெனிபர். உன்னுடைய வக்கீல். உன்னை வெளியே கொண்டு வர முயற்சி செய்யப் போகிறேன்," என்றாள் அவள்.

அவன் ஜெனிபரை ஏறெடுத்துப் பார்த்து, "செய்வதைச் சீக்கிரமாய்ச் செய்," என்றான் அதை அவன் பயமுறுத்தலாகச் சொல்கிறானா, கெஞ்சலாகச் சொல் கிறானா என்று தெரியவில்லை. 'போலீசாரிடம் அவன் ஏதாவது உளறி வைப்பதற்கு முன்னால் ஜாமீனில் வெளியே கொண்டு வந்து விடு' என்று மாரெட்டி சொன்னது அவளுக்கு ஞாபகம் வந்தது.

"உன்னை நல்லபடி நடத்துகிறார்களா?" என்று கேட்டாள்.

கதவினருகே நின்றிருந்த காவலாளியை ஓரக் கண்ணால் பார்த்தபடி 'ஊம் ஊம்' என்றான் ஜார்க்.

"உன்னை ஜாமீனில் விடும்படி மனு பண்ணியிருக்கிறேன்."

"எனக்குச் சான்ஸ் எப்படி இருக்கு?" என்று கேட்டபோது அவன் குரலில் ஆவல் நிரம்பியிருந்தது.

"நல்ல சான்ஸ் இருக்கிறது," என்றாள் ஜெனிபர். "அதிக பட்சம் இரண்டு மூன்று நாளில் நீ வெளியே வந்து விடலாம்."

"இந்த இடத்தை விட்டு வெளியே போனால் போதும்."

ஜெனிபர் எழுந்து கொண்டாள். "சரி, அப்புறம் பார்க்கிறேன்."

"தாங்க்ஸ்" என்ற ஜார்க் கையை நீட்டினான் குலுக்குவதற்காக.

காவலாளி சட்டென்று, "ஊம்! கூடாது!" என்று அதட்டினான் இருவரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள்.

"ஒருத்தரை ஒருத்தர் தொடக் கூடாது!" என்றான் காவலாளி.

ஜார்க் எரிச்சலுடன், "சீக்கிரம் போய் வேலையைக் கவனியுங்கள்," என்று ஜெனிபருக்கு விடைகொடுத்தான்.

ஓட்டலுக்கு அவள் திரும்பிய போது இன்ஸ்பெக்டர் டேவிட் அவளைக் கூப்பிட்டதாகச் சொன்னார்கள். ஓட்டல்

மானேஜர் அதைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த போதே மறுபடியும் டெலிபோன் அடித்தது. இன்ஸ்பெக்டர் தான் கூப்பிட்டார்.

"ஜெனிபர், நீங்கள் சும்மா உட்கார்ந்திருக்கிற நேரத்தில் ஊரைச் சுற்றிப் பார்க்கலாமே? வருகிறீர்களா, அழைத்துப் போகிறேன்," என்றார்

'வரவில்லை' என்று சொல்லத்தான் முதலில் நினைத்தாள் ஜெனிபர். ஆனால் ஜார்க்கைப் பத்திரமாய் விமானத்தில் ஏற்றியனுப்புவதுதான் அவளுடைய ஒரே வேலை. அதற்கு இன்ஸ்பெக்டர் டேவிட்டின் நல் லெண்ணம் அவசியம்.

"வருகிறேன்," என்றாள்.

காரில் அவர்கள் ஊர் சுற்றிப் பார்த்தார்கள் மலேசியாவுக்குச் செல்லும் சாலையில் அழகிய சின்னக் கிராமங்களைக் கண்டாள் எவ்வளவு வகையான கடைகள்! மக்கள் நன்றாக உடையுடுத்தி, வசதியாக இருந்தார்கள்.

யுத்தத்தில் உயிர் நீத்தோரின் நினைவுச் சின்னத்துக்கு அவளை அழைத்துப் போனார் இன்ஸ்பெக்டர். அங்கிருந்த கல்லறையில் ஏராளமான வெள்ளை நிறச் சிலுவைகள் காணப்பட்டன.

"உலகப் போரின்போது நாங்கள் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டோம். எவ்வளவு நண்பர்களை, எவ்வளவு உறவினர்களை நாங்கள் இழந்தோம் தெரியுமா?" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஜெனிபரின் காதில் அது விழவில்லை. ஆயிரக்கணக்கான மைல்களுக் கப்பால் உள்ள ஒரு கல்லறையை அவள் உள்ளம் நினைத்துக் கொண்டது.

ஜோசப்பின் கல்லறை... அவள் கண்களில் நீர் தளும்பியது. சிரமப்பட்டு அந்த நினைப்பை விரட்டினாள்.

நியூயார்க்கில் போலீஸ் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் வெகு சுறுசுறுப்பாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவர் முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. காரணம்-

பயங்கரக் கும்பலின் மீது அவர்கள் எடுத்த நடவடிக்கைக்கு இப்போதுதான் பலன் கிடைத்திருக்கிறது. இவ்வளவு தூரம் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் எதிர் பார்க்கவேயில்லை. கடந்த பல வருடங்களில் பல நடவடிக்கைகள் அவர்கள் எடுத்தது உண்டு. பிளாக்மெயில் பேர்வழிகள், கொலைகாரர்கள், அடிதடி ஆசாமிகள் இப்படிப் பட்டவர்கள்மீது அசைக்க முடியாத ஆதாரங்களுடன் நடவடிக்கை எடுப்பார்கள் ஆனால் ஒவ்வொரு முறையும் பெரிய பெரிய வக்கீல்கள் அவர்களுக்காக ஆஜராகி, அந்தக் கேடிகளுக்கு விடுதலை வாங்கித் தந்து விடுவார்கள்.

இந்தத் தடவை அது நடக்காது.

பயங்கரக் கும்பலைச் சேர்ந்த கால்ஃபாக்ஸ் சாட்சி சொல்லியிருக்கிறார். அவரை யாராலும் அசைக்கமுடியாது. இருபத்தைந்து வருடமாகப் பயங்கரக் கும்பலில் ஒரு முக்கிய புள்ளியாக இருந்தவர் அவர் நீதிமன்றத்துக்கு வந்து ஆட்களை அடையாளம் காட்டுவார் தேதிகளைச் சொல்லுவார். செய்த அக்கிரமங்களைப் புள்ளி விவரங் களுடன் விவரிப்பார்.

அடுத்த நடவடிக்கையை எடுக்கும்படி மேலிடத்திலிருந்து அவர்களுக்கு அனுமதி கிடைத்து விட்டது. அதுதான் இன்று அவர்களுடைய கொண்டாட் டத்துக்குக் காரணம்.

ஜனாதிபதி மாளிகைக்கு வெற்றி ஊர்வலம் செல்ல வெண்டிய தருணத்தில் வார்னர் இடிந்து நொறுங்கிப் போயிருந்தான்

பிரத்தியேக ஜூரர்கள் குழுவால் குற்றம் சாட்டப் பட்டோரின் பட்டியல் அவன் முன்னே இருந்தது. பட்டியலில் நாலாவது பெயர்:ஜெனிபர்.

அவள் மீது சாட்டப்பட்டிருந்த குற்றங்கள்: கொலை, அரை டஜன் வேறு குற்றங்களில் உடந்தை.

அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான் வார்னர்.எதிரே கூடியிருந்தவர்களை நோக்கினான். "கங்கிராசுலேஷன்ஸ்-உங்கள் எல்லாருக்கும்," என்று எப்படியோ சொல்லி முடித்தான் அதற்கு மேலும் பேச முயன்றான். ஆனால் வார்த்தைகள் வெளிவரவில்லை. அவனுக்கே அவன்மீது வெறுப்பாயிருந்தது. பேச முடியாமல் தொண்டையில் வலித்தது.

மாரெட்டி குரூரமாகப் புன்னகை செய்து கொண்டிருந்தான்.

பழி தீர்க்க வேண்டியதுதான் ஜெனிபரை!

எப்போதோ அவள் பிணமாகியிருக்க வேண்டும். இன்னும் உயிரோடிருப்பதற்குக் காரணம். அவன் கைக்கு எட்டாமல் அவள் சிங்கப்பூரில் இருப்பதுதான்.

'பரவாயில்லை. சீக்கிரமே ஊர் திரும்பி விடுவாள்,' என்று எண்ணிக் கொண்டான் மாரெட்டி.

அவளை எப்படியெல்லாம் தண்டிக்க வேண்டும் என்று அவன் மனம் இனிக்க இனிக்க கணக்குப் போட்டது.

ஓர் ஆணுக்கு எத்தனை வழியில் ஒரு பெண் துரோகம் செய்ய முடியுமோ அத்தனை வழியிலும் ஜெனிபர் துரோகம் செய்திருக்கிறாள்.

அதற்கான தண்டனையை ரொம்பச் சிறப்பான முறையில் தரவேண்டும்....

மாரெட்டி கறுவிக் கொண்டிருந்தான்.

சிங்கப்பூரில் ஜெனிபர் மறுபடியும் முயற்சி செய்தாள் மாரெட்டியை டெலிபோனில் கூப்பிட.

டெலிபோன் ஆபரேட்டர் "ஸாரி மேடம். அமெரிக்காவுக்கான லயன்கள் ரொம்ப பிஸியாயிருக்கிறது," —என்றாள்.

"முயற்சி பண்ணிக்கொண்டே இருங்கள்," என்றாள் ஜெனிபர்.

"நிச்சயமாய்," என்று சொல்லிவிட்டு அந்த ஆபரேட்டர் பக்கத்தில் நின்றிருந்த ஆளைபார்த்தாள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்து மர்மமாகப் புன்னகை செய்து கொண்டார்கள்.

டில்வா தன் அலுவலக அறையில் உட்கார்ந் திருந்தார். அவர் முகம் மலர்ந்திருந்தது.

கைது செய்வதற்கான வாரண்ட் ஒன்றை அவர் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஜெனிபரைக் கைது செய்வதற்கான வாரண்ட் அது.

'ஜெனிபர்! கடைசியில் உன்னைப் பிடித்து விட்டேன்!' என்று சொல்லிக் கொண்டார். வஞ்சம் தீர்த்த குரூரமான திருப்தி அவர் முகத்தில் படர்ந்தது.

டெலிபோன் ஆபரேட்டர் ஜெனிபரைக் கூப்பிட்டாள். "உங்களைப் பார்ப்பதற்காக இன்ஸ்பெக்டர் டேவிட் வந்திருக்கிறார். இங்கே வரவேற்பறையில் உட்கார்ந்திருக்கிறார்," என்றாள்.

ஜெனிபருக்கு ஆச்சரியமாயிருந்தது. வரப் போவதாக இன்ஸ்பெக்டர் ஒன்றும் சொல்லவில்லையே? ஒரு வேளை ஜார்க்கைப் பற்றி ஏதாவது தகவல் கொண்டு வந்திருப்பாரோ?

கீழே இறங்கிச் சென்றாள்.

"முன்னதாக டெலிபோன் செய்யாமல் வந்து விட்டேன். மன்னியுங்கள்," என்றார் இன்ஸ்பெக்டர். "உங்களிடம் நேரில் பேசுவதுதான் நல்லது என்று தோன்றியது..."

"என்ன, ஏதாவது விசேஷமா?"

"காரில் போய்க் கொண்டே பேசலாம். உங்களுக்கு ஓர் இடம் காட்ட வேண்டும்," என்றார் இன்ஸ்பெக்டர்.

ஜெனிபருக்குப் புதிராக இருந்தது. அவருடன் காரில் ஏறிக் கொண்டாள் கார் புறப்பட்டது. இன்ஸ்பெக்டர் ஒன்றும் சொல்லவில்லை.

"ஜார்க் விஷயத்தில் ஏதாவது பிரசினையா?" என்று கேட்டாள்.

"ஒரு பிரசினையுமில்லை. நாளை மறுநாள் அவனை ஜாமீனில் விடுதலை செய்துவிடுவார்கள்."

பின்னே. எங்கே அழைத்துச் செல்கிறார் நம்மை? ஜெனிபர் திகைத்தாள்.

வரிசையாகப் பல கட்டிடங்களைத் தாண்டிக் கொண்டு கார் சென்றது. ஒரு கட்டடத்தின் வாசலில் நின்றது.

"இங்கே ஒரு சுவாரசியமான விஷயம் காட்டுகிறேன்." என்றார் இன்ஸ்பெக்டர் டேவிட்.

"என்ன அப்படி?"

"வாருங்களேன். உங்களுக்கே தெரியும்."

அந்தக் கட்டிடம் பழசாய், இடிசலும் உடைசலுமாய் இருந்தது. ஒருவிதமான வாடை வீசியது.

ஓர் இளம் பெண் விரைந்து வந்து, "நான் அழைத்துப் போய்க் காட்டட்டுமா?" என்றாள்.

"வேண்டாம்," என்று அவளை ஒதுக்கினார் இன்ஸ்பெக்டர். ஜெனிபரைக் கையைப் பிடித்து உள்ளே அழைத்துப் போனார். கட்டிடத்தின் பின்புறம் இருந்த மைதானத்தை அடைந்தார்கள்.

சின்னச் சின்னதாகப் பல தண்ணீர்க் குட்டைகள் அங்கே இருந்தன. ஒன்றன் அருகே போய் ஜெனிபர் நின்றாள். 'அபாயம்-தண்ணீரில் கை விடாதீர்கள்' என்ற அறிவிப்புப் பலகை அங்கே மாட்டப்பட்டிருந்தது.

பிறகுதான் ஜெனிபர் குனிந்து நோக்கினாள்.

டஜன் கணக்கான முதலைகள் அங்கே நீந்திக் கொண்டிருந்தன, ஒன்றன் மீதொன்றாக வழுக்கியபடி.

ஜெனிபருக்கு உடம்பு நடுங்கியது. "என்ன இதெல்லாம்?"

"இது ஒரு முதலைப் பண்ணை," என்று இன்ஸ்பெக்டர் விளக்கினார். "இவைகளுக்கு நாலைந்து

வயதானதும் தோலை உரித்துக் கைப்பை, பெல்ட், காலணி முதலியன தயார் செய்வார்கள். எல்லாம் வாயைத் திறந்து கொண்டிருக்கிறது, பாருங்கள் அப்படி இருந்தால் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக அர்த்தம். இவை வாயை மூடிக் கொண்டிருக்கும் போதுதான் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்."

அடுத்தக் குட்டைக்குச் சென்றார்கள் அங்கே இரண்டு பெரிய முதலைகள் இருந்தன.

"இவைகளுக்குப் பதினைந்து வயதாகிறது. இன விருத்திக்காக வைத்திருக்கிறார்கள்" என்றார் இன்ஸ் பெக்டர்.

"எவ்வளவு அருவருப்பான ஜந்துக்கள்!" என்றாள் ஜெனிபர்.

எதற்தாகத் தன்னை இன்ஸ்பெக்டர் இங்கே கூட்டி வந்திருக்கிறார்? இந்தக் கோரமான முதலைகளைப் பார்த்து நாம் சந்தோஷப் படுவோம் என்று நினைத்தாரா என்ன? ஜெனிபருக்கு புரியவில்லை. "போகலாமா?" என்றாள்.

"ஒரு நிமிஷம்." என்ற இன்ஸ்பெக்டர், முதலில் சந்தித்த இளம் பெண்ணிடம் ஏதோ சொன்னார். அவள் ஒரு தட்டில் மாமிசத் துண்டுகளை எடுத்து வந்து, முதலைகளுக்கு போட்டாள்.

அப்பா! என்ன அமளி அந்த முதலைகளுக் கிடையே! எம்புவதும் தாவுவதும், ஒன்றை யொன்று தள்ளுவதும், விகாரமான பற்களை வெளிக்காட்டுவதும்-

இரண்டு முதலைகள் ஒரேசமயத்தில் உணவுக்காகத் தாவின. ஒன்றையொன்று கடித்துக் கொண்டன. ஒன்றின் கண்ணும் இன்னொன்றின் தாடையும் கடிபட்டு, குட்டை

முழுதும் ரத்தம் பரவியது. உடனே மற்ற முதலைகள் வந்து காயம் பட்ட முதலைகளை கடித்துத் தின்னத் தொடங்கின. ஜெனிபருக்குத் தலை சுற்றியது. "போதும். போதும்! போகலாம்." என்றாள்.

அதன் பின்னரும் சில நிமிடம் அந்தக் காட்சியைச் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர். பிறகு ஜெனிபரை வெளியே அழைத்துச் சென்றார்.

அன்றிரவு ஜெனிபரால் தூங்கமுடியவில்லை. கனவிலே முதலைகள் வந்தன. எம்பின. குதித்தன. கிழித்தன.

இரண்டு முதலைகள்-

திடீரென்று அவை ஒன்று வார்னராகவும் ஒன்று மாரெட்டியாகவும் மாறின.

சரேலென எழுந்து உட்கார்ந்தாள் ஜெனிபர். அவள் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

அங்கே அமெரிக்காவில் ரெய்டுகள் ஆரம்பமாகின.

மத்திய அரசின் போலீசும், மாநில அரசுகளின் போலீசும் இணைந்து செயலாற்றி, ஒரே நேரத்தில் சோதனைகளை நடத்தின. உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் கிடுகிடுவென்று நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

ஓர் ஊரில், பாராளுமன்ற உறுப்பினரொருவர், அரசாங்கத்தில் நாணயம் என்பதைப் பற்றி ஒரு பெண்கள் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த போது கைதானார்.

இன்னொரு ஊரில், சட்டவிரோதமான பங்கு மார்க்கெட் நிறுவனம் மூடப்பட்டது.

வேறொரு நகரில், ஒரு வைரக் கடத்தல் தடுத்து நிறுத்தப் பட்டது.

சட்ட விரோதமான காரியங்களுக்குப் பண உதவி செய்ததற்காக ஒரு பாங்க் மானேஜர் கைது செய்யப் பட்டார்.

இன்னோர் ஊரில், ஒரு பெரிய கிடங்கு சோதனையிடப்பட்டு, ஏராளமான திருட்டுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

பல ஊழல் போலீஸ் அதிகாரிகள் கைதானார்கள்.

கஞ்சா தொழிற்சாலை யொன்று பிடிபட்டது.

நாடெங்கும் கார்களைத் திருடும் கும்பலொன்று மடக்கப் பட்டது.

வார்னரால் பொறுக்க முடியவில்லை.

ஜெனிபர் போனில் கிடைக்காமல் போகவே, நேராக அவள் அலுவலகத்திற்கே சென்றான்.

ஜெனிபரின் காரியதரிசிக்கு அவனை அடையாளம் தெரிந்தது. " ஸாரி ஸார். ஜெனிபர் வெளிநாட்டுக்குப் போயிருக்கிறார்," என்றாள்.

"எந்த நாடு?"

"சிங்கப்பூர் - ஷாங்ரிலா ஓட்டலில் தங்கியிருக்கிறார்."

வார்ரனருக்கு நிம்மதி ஏற்பட்டது.

நல்ல வேளை! ஜெனிபருக்குப் போன் செய்து, இப்போது ஊர் திரும்ப வேண்டாமென்று சொல்லி விடலாம்!

53

ஜெனிபர் அப்போதுதான் ஷவரில் குளித்து விட்டு முன்னறைக்கு வந்தாள். ஓட்டல் பையன் அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

"மன்னிக்கணும், மேடம். இன்னிக்கு எத்தனை மணிக்கு நீங்கள் ரூமைக் காலி பண்ணப் போறீங்க?" என்றான்.

"இன்னிக்கு நான் காலி பண்ணவில்லையே? யார் சொன்னார்கள்? நாளைக்குத்தான் புறப்படப் போகிறேன்," என்றாள் ஜெனிபர்.

ஓட்டல் பையன் முகத்தில் திகைப்புப் படர்ந்தது. "இன்னிக்கு ராத்திரி ஒரு பார்ட்டி இங்கே வரப் போறாங்களாம். அவங்களுக்காக இந்த ரூமைத் தயார் பண்ணணும் என்று சொன்னாங்களே?"

"யார் சொன்னார்கள்?"

"மானேஜர்தான்." என்று பதில் வந்தது.

ஜெனிபருக்குப் புதிராயிருந்தது.

இன்றைக்கு நாம் இந்த இடத்தைக் காலி பண்ணப் போவதாக ஏன் மானேஜர் சொல்ல வேண்டும்? நாம் அவரிடம் அப்படி யொன்றும் சொல்லவில்லையே?

அவள் குழம்பிக் கொண்டிருந்த சமயம்-

கீழே டெலிபோன் ஆபரேட்டர் அறை.

இப்போது டெலிபோன் ஆபரேட்டர் மாறி யிருந்தாள். அவள் அருகே நின்றிருந்த ஆளும் வேறொருவன்.

போன் மணியடித்தது.

டெலிபோன் ஆபரேட்டர் போனை எடுத்துப் பேசினாள். வெளி நாட்டிலிருந்து ஒரு கால் வந்திருந்தது.

"எங்கேயிருந்து? நியூயார்க்கிலிருந்தா? யார் வேண்டும்? மிஸ் ஜெனிபரா?"

கேட்டுவிட்டு, தன் பக்கத்தில் நின்றிருந்த ஆளைப் பார்த்தாள். அவன் ஊகூம் என்று தலையை அசைத்தான்.

"ஸாரி. மிஸ் ஜெனிபர் ரூமைக் காலி செய்துவிட்டுப் போய் விட்டார்," என்றாள் டெலிபோன் ஆபரேட்டர்.

அங்கே அமெரிக்காவில் போலீஸ் ரெய்டுகள் அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தன.

துருக்கியிலும் மெக்ஸிகோவிலும் இன்னும் பல வெளி நாடுகளிலும் ஏராளமான பேர் கைது செய்யப் பட்டார்கள்.

போதைப் பொருள் வியாபாரிகள். கொலைகாரர்கள், பாங்க் கொள்ளைக்காரர்கள், தீ வைத்துச் சூறையாடு கிறவர்கள்-இப்படிப் பல பேர் விலங்கு மாட்டிக் கொண்டார்கள்.

அமெரிக்காவில் பல நகரங்களில் வலைகள் விரிக்கப்பட்டு, எண்ணற்றவர்கள் சிக்கிக் கொண்டி ருந்தார்கள்.

தொடர்ந்து சோதனைகள்.... தொடர்ந்து, தொடர்ந்து...

நியூயார்க்கில் டிசில்வாவுக்கு எத்தனை எக்களிப்பு! யார் யார் பிடிபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

இதோ வலை வீசப்படுகிறது! ஜெனிபரும் மாரெட்டியும் இதோ அகப்படப் போகிறார்கள்!

அந்தக் காட்சியை நினைக்க நினைக்க அவர் இருதயக் துடிப்பு அதிகரித்தது.

'சே! மறந்தே போய்விட்டேன்!' என்று ஜெனிபர் நினைத்துக் கொண்டாள்

கஞ்சா குற்றவாளி ஜார்க்கிற்கு ஜாமீன் கொடுத்து விடுவார்கள். அவனை நாளை நம்முடன் அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்ல வேண்டுமே? அதற்கு விமானத்தில் ரிசர்வேஷன் செய்ய வேண்டுமே? மறந்து போய் விட்டதே!

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் அலுவலகத்துக்குப் போன் செய்தாள்.

"நான் ஜெனிபர் பார்க்கர் பேசுகிறேன் நாளை பிற்பகல் லண்டனுக்குப் போகும் விமானத்தில் டிக்கெட் வாங்கியிருக்கிறேன். அதே ஃப்ளைட்டில் இன்னொரு டிக்கெட் புக் பண்ண வேண்டும்," என்றாள்.

"கொஞ்சம் இருங்கள் மேடம். பார்த்துச் சொல்லுகிறோம்," என்றார் ஏர்லைன்ஸ் ஊழியர்

சில நிமிடங்களுக்குப் பிறகு அதே குரல் கேட்டது: "பெயர் என்ன சொன்னீர்கள், மேடம்? ஜெனிபர் என்றா? ஜெ-னி-ப-ர்?"

"ஆமாம்."

"உங்கள் ரிசர்வேஷன் கேன்ஸல் ஆகியிருக்கிறதே?"

ஜெனிபருக்குத் தூக்கி வாரிப் போட்டது "என்னது! கேன்ஸலாகியிருக்கிறதா? யார் கேன்ஸல் செய்தது?"

"எனக்குத் தெரியாது, மேடம். பிரயாணிகள் பட்டியலில் உங்கள் பெயரை அடித்திருக்கிறது."

"இல்லையில்லை. ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. என் பெயரைச் சேர்த்து விடுங்கள்," என்றாள் ஜெனிபர்.

"ஸாரி மேடம். விமானம் ஃபுல்லாகி விட்டது."

டெலிபோனை வைத்துவிட்டு ஜெனிபர் யோசித்தாள். என்ன இது குழப்பத்துக்கு மேல் குழப்பம்?

இதையெல்லாம் சரி செய்யக் கூடியவர் இன்ஸ்பெக்டர் டேவிட்தான்.

அன்று இரவு அவளுடன் விருந்துண்ணுவதாகச் சொல்லியிருந்தார். வரட்டும். என்ன இதெல்லாம் என்று அவரைக் கேட்கலாம்...

சென்ன நேரத்துக்கும் முன்னதாகவே வந்து விட்டார் இன்ஸ்பெக்டர் டேவிட். காரில் அவளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்.

ஓட்டல் அறையைக் காலி செய்வதிலும் விமான ரிசர்வேஷனிலும் ஏற்பட்ட குழப்பங்களைப் பற்றி ஜெனிபர் சொன்னாள்.

அவர் தோள்களைக் குலுக்கிப் பெருமூச்சு விட்டார் "எங்கள் ஊரில் இந்த மாதிரியான மடத்தனங்கள் ஜாஸ்தி, மேடம். நான் கவனிக்கிறேன்," என்றார்

"சரி, ஜார்க் விஷயம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?"

"எல்லாம் ஏற்பாடு செய்தாகிவிட்டது. நாளைக் காலை அவனை விடுவித்து விடுவார்கள்," என்றவர், சீன

மொழியில் டிரைவரிடம் எதோ சொன்னார். கார் ஒரு வளைவு வளைந்து பக்கத்துச் சாலையில் நுழைந்தது.

"நீங்கள் சுலாங் ரோடு பார்த்ததில்லையே? சுவாரசியமான இடம்," என்றார் இன்ஸ்பெக்டர்

இரண்டு மூன்று தெருக்களைக் கடந்து சுலாங் சாலையை அடைந்தது கார். மலர் வளையங்கள் விற்கும் கடைகளும் சவப் பெட்டி தயாரிக்கும் நிறுவனங்களும் பெரிய பெரிய விளம்பரப் பலகைகளுடன் காணப் பட்டன. கார் இன்னொரு திருப்பத்தில் நுழைந்தது.

"நாம் எங்கே இருக்கிறோம்?" என்று ஜெனிபர் கேட்டாள். இன்ஸ்பெக்டர் மெதுவான குரலில் சொன்னார்; "பெயரில்லாத தெரு என்று இதற்குப் பெயர்."

கார் மிக மெதுவாக ஊர்ந்தது.

தெருவின் இருபுறத்திலும் சவ ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்கிறவர்களின் கடைகள் நிறைந்திருந்தன. வரிசை வரிசையாக - எல்லாம் சீனாக்காரர்களின் கடைகள். சற்றுத் தொலைவில் ஒரு சவ ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. பாண்டு வாத்யம் முழங்க. ஓரிடத்தில் ஒரு மேஜை மீது ஒரு சவம் கிடத்தப்பட்டிருந்தது. அதைச் சுற்றிலும் நிறையப் பூமாலைகள் இறந்தவனின் பிரம் மாண்டமான உருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. சாவுக்கு வந்திருந்தவர்கள் உட்கார்ந்து உணவு அருந்திக் கொண்டிருந்தார்கள்.

ஜெனிபர் இன்ஸ்பெக்டரை நோக்கி, "என்ன இது?" என்று கேட்டாள்.

"சாவு வீடுகள் என்று இவைகளுக்குப் பெயர். சாவு என்பதற்குச் சரியான சொல் எங்கள் மொழியில் கிடையாது," என்று கூறிவிட்டு, இன்ஸ்பெக்டர் அவளை நேராகப்

பார்த்தார். "ஆனால் மரணம் என்பது வாழ்க்கையில் ஒரு பகுதிதான். என்ன சொல்கிறீர்கள்?"

அவருடைய சிலீரென்ற கண்களை ஜெனிபர் நோக்கினாள்.

திடீரென்று அவளைப் பயம் பிடித்துக் கொண்டது.

ஓட்டலை அடைந்தார்கள்

சாப்பிட உட்கார்ந்த பிறகு தான். இன்ஸ்பெக்டரைக் கேட்க முடிந்தது.

"இன்ஸ்பெக்டர், முதலைப் பண்ணைக்கும் சவப் பெட்டிகள் தயாரிக்கும் தெருவுக்கும் என்னை அழைத்துச் சென்றதற்கு ஏதாவது காரணம் உண்டா?" என்றாள்.

அவர் அவளை உற்றுப் பார்த்து, அமைதியான குரலில் சொன்னார் "ஆமாம், அதெல்லாம் சுவாரசியமான இடங்கள் என்றுதான் அழைத்துப் போனேன். உங்கள் கட்சிக்காரர் ஜார்க்கை விடுதலை செய்வதற்காக நீங்கள் வந்திருக்கிறீர்கள் அல்லவா? முக்கியமாக அதற்காகத்தான் அங்கே அழைத்துப் போனேன். இந்த நாட்டுக்குக் கொண்டு வரும் போதைப் பொருள்களால் எங்கள் நாட்டு இளைஞர்கள் எவ்வளவு பேர் இறந்து கொண்டி ருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா மிஸ் ஜெனிபர்? அந்த இளைஞர்களுக்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சை கொடுப்பதை உங்களுக்குக் காட்ட வேண்டு மென்று முதலில் நினைத்தேன் ஆனால் மரணம் எவ்வளவு கொடூரமானது என்பதை நீங்கள் பார்த்தால் நல்லது என்று தோன்றியது...."

"இதெல்லாம் எனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்," என்றாள் ஜெனிபர் எரிச்சலுடன்.

"சம்பந்தமில்லையென்று நீங்கள் நினைக்கிறீர்கள்," என்றார் இன்ஸ்பெக்டர். அவருடைய குரலில் சினேக பாவம் அடியோடு போய் விட்டிருந்தது.

ஜெனிபர் கடுமையாகக் கூறினாள்: "இதோ பாருங்கள் இன்ஸ்பெக்டர், நான் வந்திருக்கிற சமாசாரத்தைக் கவனிப்பதற்காக உங்களுக்குக் கணிசமான பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்..."

"உலகத்தில் உள்ள பணம் மொத்தத்தையும் கொடுத்தாலும் என்னை விலைக்கு வாங்க முடியாது," என்றார் இன்ஸ்பெக்டர் டேவிட்.

சொல்லிவிட்டு யாருக்கோ சைகை காட்டினார்.

ஜெனிபர் திரும்பிப் பார்த்தாள்.

காக்கி உடையணிந்த இரண்டு பேர் அவளை நெருங்கி வந்தார்கள். "மிஸ் ஜெனிபர் நீங்கள்தானே?" என்றார்கள்.

"ஆமாம்."

அவர்கள் தங்களுடைய ரகசியப் போலீஸ் அட்டையை எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவளுக்குப் புரிந்து விட்டது.

"நாங்கள் அமெரிக்க ரகசியப் போலீஸ். உங்களைக் கைது செய்து அழைத்துப் போவதற்காக வாரெண்ட்டுடன் வந்திருக்கிறோம். இன்று நள்ளிரவு நியூயார்க் செல்லும் விமானத்தில் உங்களை அழைத்துப் போகிறோம்," என்றார்கள்.

ஹரெட்டியின் மாமனாருக்கு அன்று நினைவு தினம். மனைவியுடன் கல்லறைக்குச் சென்று மலர் வைத்து விட்டுத் திரும்பினான். அடுத்தாற் போல் ஒரு வேலை இருந்தது.

அதற்கு நேரமாகி விட்டதால் அலுவலகத்துக்குப் போன் செய்து அடுத்த அலுவல்களைத் தக்கபடி மாற்றி யமைக்கும்படி சொல்ல நினைத்தான்.

ஒரு முறை மணியடித்ததுமே போனை எடுத்தார்கள்.

"நான்தான் மைக் பேசுகிறேன் அங்கே-" என்று சொல்வதற்குள்-

"மிஸ்டர் மாரெட்டி இங்கே இல்லை. அப்புறம் போன் செய்யுங்கள்," என்று பதில் வந்தது.

மாரெட்டி உதட்டைக் கடித்துக் கொண்டான். 'மைக்' என்றவுடன் புரிந்து கொள்ளவில்லையே? வேறு யாரோ அல்லவா பேசுகிறார்கள்?

போனை வைத்துவிட்டுக் காருக்கு வேகமாகத் திரும்பினான். அவன் மனைவி ரோஸா அவன் முகத்தைக் கண்டதும், "ஒன்றும் விபரீத மில்லையே?" என்றாள்.

"தெரியவில்லை. உன்னை உன் மாமன் வீட்டில் இறக்கி விட்டுப் போகிறேன். நான் சொல்கிற வரையில் எங்கும் போகாமல் அங்கேயே தங்கியிரு."

அந்த ஓட்டலின் பின்புறத்தில் இருந்த அலுவலகத்தை அடைந்தான் மாரெட்டி. டோனி என்ற உதவியாளன் உள்ளே வந்தான். "பாஸ், உங்கள் வீட்டிலும் உங்கள் தலைமை அலுவலகத்திலும் ஏகப்பட்ட ரகசியப் போலீசார் குவிந்திருக்கிறார்களாம். இப்பத்தான் செய்தி வந்தது."

"சரி, நீ போ. இங்கே யாரும் வராதபடி பார்த்துக் கொள்," என்றான் மாரெட்டி.

பிறகு போனை எடுத்து வெறி பிடித்தவன் போல் டயலைச் சுழற்றத் தொடங்கினான்.

இருபது நிமிடம்தான்.

எப்பேர்ப்பட்ட பூகம்பம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது அவனுக்குப் புரிந்து விட்டது.

மாரெட்டியினால் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

அவனுடைய சிப்பாய்கள், அவனுடைய தளபதிகள் அவ்வளவு பேரும் கைது செய்யப்பட்டு விட்டார்கள்! கிடங்குகளில் ரெய்டு. சூதாட்ட ஓட்டல்களில் பறிமுதல்; ரகசியமான கணக்குப் புத்தங்களுக்கும் தஸ்தாவேஜி களுக்கும் சீல்-

என்ன பயங்கர நடவடிக்கைகள்!

போலீசால் இவ்வளவும் செய்ய முடிந்தது எப்படி?

மாரெட்டியின் கும்பலைச் சேர்ந்த குடும்பங்கள் நாட்டின் பல பகுதிகளில் இருந்தன. அவர்களுக்குப் போன் செய்து விசாரித்தான்.

"என்ன இதெல்லாம்? ஏன் இப்படி நடக்கிறது? சொல்லுங்கள்," என்று அவர்கள் கூச்சல் போட்டார்கள்.

பயங்கரக் கும்பலின் தலைமை ஸ்தாபனம் லா வேகாவில் இருந்தது. கும்பலைச் சேர்ந்த எவருடைய குடும்பத்துக்காவது அபாயம் நேரிட்டால் இந்தத் தலைமையகம்தான் நடவடிக்கை எடுப்பது வழக்கம்.

அங்கிருந்து மாரெட்டியைக் கூப்பிட்டார்கள் "எல்லாக் குடும்பத்தாரையும் போலீசில் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். யாரோ பெரிய புள்ளி நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கிறார்கள் உங்கள் ஆட்களில் ஒருவர்தான் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்திருக் கிறது. இருபத்து நாலு மணி நேரம் அவகாசம் தருகிறோம்.

அதற்குள் அவன் யாரென்று கண்டுபிடித்து மடக்க வேண்டியது உங்கள் பொறுப்பு."

மாரெட்டி யோசனையில் ஆழ்ந்தான்.

அசைக்க முடியாத தகவல்களைப் போலீசாருக்குத் தந்திருக்கிறான் எவனோ. இல்லாவிட்டால் இத்தனை பெரிய நடவடிக்கையைப் போலீசில் எடுத்திருக்க மாட்டார்கள்.

யார்? யார் அந்த ஆள்?

மாரெட்டி சிந்தனை செய்து கொண்டிருந்தான்.

54

போலீசுக்குத் தகவல்கள் தந்த ஆள் யார்? மாரெட்டி திகைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் அவனுடைய இரண்டு பிரதான தளபதிகளுக்கும்தான் இவ்வளவு முக்கியமான உள் வயணங்கள் தெரியும். சால்வடார் என்பவன் ஒருவன். இன்னொருவன் காவெல்லா என்பவன். கணக்குப் புத்தகங்கள் எங்கெங்கே ஒளித்து வைக்கப் பட்டிருக்கின்றன என்பது இந்த மூன்று பேரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது, அப்படியும் போலீசில் அவைகளைக் கண்டுபிடித்துக் கைப்பற்றி இருக்கிறார்கள். இந்த மூன்று பேரைத் தவிர ரகசியங்களை அறிந்த இன்னொரு ஆள் கால்ஃபாக்ஸ். அவரைக் கொலை செய்து எங்கோ ஒரு குப்பை மேட்டில் தூக்கிப் போட்டாயிற்றே! மாரெட்டி யோசனை பண்ணிப் பண்ணிப் பார்த்தான். சால்வடாரும் காவெல்லாவும் தாங்கள் செய்து கொடுத்திருக்கும் சத்தியத்தை மீறிக் காட்டிக் கொடுத்திருப்பார்களா என்ன? நம்ப முடியவில்லை. அந்த இரண்டு பேரும் அவனோடு

ஆரம்ப நாள் முதல் கூடவே இருந்து வந்திருப்பவர்கள். அவர்களை அவனே நேரடியாகப் பரீட்சித்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டிருக்கிறான் அவர்கள் சொந்தமாக வட்டிக் கடைகள் வைக்கவும் விபசார விடுதிகள் நடத்தவும் அனுமதித்திருக்கிறான். அவர்கள் அவனுக்குத் துரோகம் இழைக்கிறார்கள் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். பதவி ஆசை.

மாரெட்டியைத் தொலைத்து விட்டால் அவனுடைய தலைமைப் பதவி அவர்களுக்குச் சுலபமாகக் கிடைத்து விடும்.

இரண்டு பேரும் கூட்டாக வேலை செய்து இருக்கிறார்கள். அப்படித்தான் இருக்கவேண்டும்.

கொலை வெறி மாரெட்டியைப் பிடித்தாட்டியது. டேய் அப்பன் பெயர் தெரியாத மடையன்களே! என்னையா கவிழ்க்கப் பார்க்கிறீர்கள்! நான் தொலைந்தாலும் நீங்கள் ஒரு நாள் கூடத் தலைமைப் பதவியை அனுபவிக்க மாட்டீர்கள்! உங்களை உயிருடன் இருக்க நான் விட்டால்தானே!

இப்போது கவனிக்க வேண்டிய முதல் வேலை, கைதாகியுள்ள ஆட்களை ஜாமீனில் வெளியே கொண்டு வருவது தான். அதற்கு நம்பகமான ஒரு வக்கீல் ஜெனிபர்.

ஜெனிபர்!

சினத்துடன் அவன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

அவள் சிங்கப்பூருக்குப் புறப்பட்ட போது, 'சீக்கிரம் வந்துவிடு, ஜெனிபர் நீயில்லாமல் என்னால் இருக்க முடியாது. உன் மீது எனக்கு எவ்வளவு காதல் தெரியுமா?' என்றெல்லாம் சொல்லியனுப்பியது அவனுக்கு ஞாபகம் வந்தது.

ஆனால் அவளே அவனுக்குத் துரோகம் செய்து விட்டாள்.

அதற்குத் தண்டனை பெறாமல் அவள் தப்பிக்க முடியாது! முடியாது!

டெலிபோனைச் சுழற்றினான்.

ஒரு முறை டயலைச் சுழற்றி விட்டுக் காத்திருந்தான். பதினைந்து நிமிடத்துக்கெல்லாம் அவனுடைய உதவியாளன் நிக் விரைந்து வந்து சேர்ந்தான்.

"எப்படி நிலைமை?" என்று மாரெட்டி கேட்டதும்-

"எங்கே பார்த்தாலும் போலீஸ் கும்பல்! இரண்டு மூன்று தடவை நம் அலுவலகம் பக்கமாய்ப் போனேன். ஆனால் நீங்கள் எச்சரித்திருந்தபடி கிட்டே போய் மாட்டிக் கொள்ளவில்லை," என்றான் அவன்.

"உனக்கு ஒரு வேலை வைத்திருக்கிறேன், நிக்."

"சொல்லுங்கள் பாஸ். என்ன செய்யணும்?"

"சால்வடார், காவெல்லா இருவரையும் கவனி."

நிக் திகைத்தான். "புரியலையே? 'கவனி' என்றால்- நீங்கள் சொல்வது...."

மாரெட்டி கத்தினான் "இரண்டு பேரையும் தீர்த்துக் கட்டு என்கிறேன். எப்படிச் செய்யணும் என்று சொல்லித் தரணுமா உனக்கு?"

"இ...இல்லே பாஸ்...." நிக் தடுமாறினான். "நான்...நான்.... என்ன சொல்கிறேன் என்றால்... அந்த இரண்டு பேரும் உங்களுடைய முக்கியமான தளபதிகள்...."

மாரெட்டி குபீரென்று எழுந்து கொண்டான். அவன் கண்களில் கொலை வெறி கூத்தாடியது. "என் தொழிலை நான் எப்படி நடத்தணும் என்று எனக்கே சொல்லித் தருகிறாயா?"

"இல்லே பாஸ், இல்லே. நான் அவர்களைக் கவனிக்கிறேன். எப்போது அவர்களை..."

"இப்போதே! உடனேயே! இன்று ராத்திரி அவர்கள் உயிரோடு இருக்கக் கூடாது! புரிகிறதா?"

"புரிகிறது, பாஸ்."

உள்ளங்கையில் முட்டியால் குத்திக் கொண்டான் மாரெட்டி. "எனக்கு நேரமில்லை. இருந்தால் நானே அவர்களைத் தீர்த்துக் கட்டுவேன்! நிக், அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகணும்! பொசுக்கென்று தீர்த்து விடாதே. சித்திரவதை செய்து கொல்லணும். தெரிகிறதா?"

"தெரிகிறது, பாஸ்."

கதவு திறந்தது. டோனி என்ற இன்னொரு அடியாள் வேகமாய் வந்தான். அவன் முகம் வெளிறியிருந்தது. "பாஸ், ரகசியப் போலீஸார் இரண்டு பேர் வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார்கள் உங்களைக் கைது செய்ய வாரெண்ட் கொண்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் இங்கே இருப்பது எப்படித் தான் அவர்களுக்குத் தெரிந்ததோ "

நிக்கிடம் திரும்பினான் மாரெட்டி. "பின்வாசல் வழியாய் நீ போய்விடு! சீக்கிரம்!" டோனியிடம், " நான் பாத்ரூமில் இருக்கிறேன். என்று அவர்களிடம் சொல்லு. இதோ வந்து விடுவார் என்று சொல்லு," என்றான்.

அவன் போனதும் போனை எடுத்து அவசரமாகச் சுழற்றினான். ஒரு நிமிடத்துக்கெல்லாம் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவருடன் பேசலானான்.

"என்னைக் கைது செய்வதற்காக வாரெண்ட்டுடன் இரண்டு ரகசியப் போலீசார் வந்திருக்கிறார்கள் இங்கே," என்றான்.

"என்ன குற்றம் சாட்டியிருக்கிறார்கள்?"

"தெரியவில்லை. எதுவானாலும் அதைப்பற்றி இப்போது கவலையில்லை. உங்களைக் கூப்பிட்டதற்குக் காரணம், என்னை ஜாமீனில் வெளியே விட வேண்டும் என்பதற்குத்தான். எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கிறது. இப்பப் போய் ஜெயிலுக்குள் உட்கார்ந்திருக்க முடியாது."

சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு நீதிபதி எச்சரிக்கையாகப் பேசினார். "இந்தத் தடவை உங்களுக்கு உதவி செய்ய முடியாது போல் தோன்றுகிறது, மாரெட்டி. எங்கே பார்த்தாலும் தூள் பறக்கிறது! ஒரே அமளி துமளி! இப்போது நான் தலையிடப் பார்த்தால்-"

மாரெட்டியின் குரலில் ஒரு பயங்கரம் தொனித்தது. "மடத்தனமாய்ப் பேசாதே.நான் சொல்வதைக் கேட்டால் நீ பிழைப்பாய். தெரிகிறதா? ஒரு மணி நேரம் நான் ஜெயிலில் இருக்க நேரிட்டால், நீ ஆயுள் பூராவும் ஜெயிலில் இருக்கும்படி பண்ணி விடுவேன். உன் சரித்திரம் என்னிடம் இருக்கிறது. எனக்காக நீ எவ்வளவு வழக்குகளைச் சரிபண்ணித் தந்திருக்கிறாய் என்று போலீசில் சொல்ல வேண்டுமா? அல்லது ஸ்விஸ் பாங்க்கில் உன் அக்கவுண்ட் நம்பர் என்னவென்று சொல்ல வேண்டுமா? அல்லது"-

"வேண்டாம், வேண்டாம்! தயவு பண்ணி-"

"அப்போ உடனே என் வேலையைக் கவனி!"

"என்னால் முடிந்ததை.... முயற்சி பண்ணி.....

"முயற்சி கியற்சி என்றெல்லாம் பேசாதே!

சொன்னதைச் செய்! தெரிகிறதா!" போனை ஆத்திரத்துடன் டமாலென்று வைத்தான் மாரெட்டி.

அவன் மனம் வேகமாய், ஆனால் தெளிவாய்ச் செயல்பட்டது.

கைதாகிச் சிறைக்குச் செல்வதைப் பற்றி அவன் கவலைப் படவில்லை. நீதிபதி வால்டுமேன் நிச்சயமாய் அவன் வெளியே வர வழி செய்வார்.

சால்வடாரையும் காவெல்லாவையும் நிக் தீர்த்துக் கட்டி விடுவான். அவர்களுடைய சாட்சியம் இல்லாமல் அரசாங்கம் அவனை ஒன்றும் பண்ண முடியாது.

காரிலிருந்த சிறிய கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துக் கொண்டான். சீப்பெடுத்துத் தலையை ஒழுங்காக வாரிக் கொண்டான். டையை நேராக்கிக் கொண்டான்.

காத்திருக்கும் போலீசாரைச் சந்திக்க வெளியே போனான்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி மோசம் பண்ணவில்லை. மாரெட்டியின் விருப்பப்படியே செய்தார்.

முதல் விசாரணையின் போது, அவரே ஒரு வக்கீல் ஏற்பாடு செய்து, மாரெட்டியை ஜாமீனில் விடும்படி விண்ணப்பிக்க ஏற்பாடு பண்ணினார்.

ஐந்நூறாயிரம் டாலர் ஜாமீனில் மாரெட்டியை விடுதலை செய்தார்.

ஆத்திரமான ஆத்திரம் டிசில்வாவுக்கு! அவர் கண் முன்னால் நீதிமன்றத்தை விட்டு மாரெட்டி ஜாம் ஜாமென்று வெளியேறுகிறான்! பார்த்துப் பார்த்துக் குமைந்தார் புழுங்கினார். ஆத்திரப்பட்டார்.

இரண்டு பேரைக் கொலை செய்வதற்காக மாரெட்டி நியமித்த நிக், அப்படியொன்றும் புத்திசாலியல்ல.

ஆனால் சொன்னால் சொன்னபடி செய்வான். எதிர்த்து ஒரு வார்த்தை கேட்காமல், மேலிடத்திலிருந்து வரும் கட்டளையைத் திறமையாக நிறைவேற்றுவான். அதனால்தான் பயங்கரக் கும்பலில் அவனுக்கு நல்ல பெயர். எவ்வளவோ துப்பாக்கிகளையும் கத்திகளையும் பார்த்திருக்கிறான் ஆனால் பயம் என்பதைத் துளியும் அறியாதவன்.

இருந்தாலும் ஏனோ இப்போது அவனைப் பயம் பிடித்துக் கொண்டது. என்னவோ பயங்கரமாய்ப் பெரிதாய் நடந்து கொண்டிருக்கிறது. என்னவென்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் ஏதோ ஒரு வகையில் தான் தான் அதற்கெல்லாம் பொறுப்பு என்று தோன்றியது.

மளமளவென்று ரெய்டுகள் நடந்து கொண்டிருப்பதும், ஏராளமான பேர் கிடுகிடுவென்று கைதாகிக் கொண்டிருப்பதும் நாள் பூரா அவன் காதில் விழுந்து கொண்டிருந்தது. மேல் மட்டத்திலிருக்கும் யாரோ, ஒருவர் துரோகம் செய்து விட்டார்கள் என்கிற வரையில் அவனுக்குப் புரிந்தது.

அவனுக்கு அறிவு கம்மிதான். என்றாலும்கூட, அன்றொரு நாள் கால்ஃபாக்ஸைத் தான் உயிரோடு விட்டதற்கும் இன்று யாரோ துரோகம் செய்வதற்கும் சம்பந்தம் இருக்கிறதென்று அவனால் ஊகிக்க முடிந்தது. மற்றப்படி மாரெட்டி நினைப்பது போல் சால்வடாரோ காவெல்லாவோ இந்தத் துரோகத்தைச் செய்திருக்க முடியாது. இருவரும் அவனுக்குச் சகோதரர்கள் மாதிரி. அவனைப் போலவே மாரெட்டிக்காக உயிரையும் கொடுக்கக் கூடிய விசுவாசிகள் அவர்கள்

ஆனால் சொன்னால் மாரெட்டி கேட்க மாட்டேன் என்கிறானே! இதற்கு மேல் வற்புறுத்தினால் நம் தலைதான் போய்விடும்! துரோகம் செய்திருக்கக் கூடியவர் கால்ஃபாக்ஸ்தான் என்று அவனிடம் எப்படிச் சொல்ல முடியும்! கால்ஃபாக்ஸ் செத்து விட்டார் என்றல்லவா மாரெட்டி நினைத்திருக்கிறான்!

ஒரு தீர்மானத்துக்கு வந்தான்.

இருவரும் எங்கே இருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும். மாரெட்டி கூப்பிடும் குரலுக்கு ஏனென்று கேட்க வேண்டும் என்பதால் எந்த நேரத்தில் எங்கே இருக்கிறோம் என்பதை முன்கூட்டியே அவர்கள் சொல்லி வைத் திருந்தார்கள்.

இப்போது மணி மூன்று. சால்வடார் தன் காதலி வீட்டில் இருப்பான் ஐந்து மணிக்கு அங்கேயிருந்து புறப்பட்டுத் தன் வீட்டுக்குப் போவான்.

காதலியின் வீட்டை விட்டு வெளியே வந்தபின் அவனைக் கொல்லுவதா, அல்லது வீட்டுக்குள்ளேயே போய்க் கொலை செய்வதா என்று யோசித்தான். வெளியே காத்திருக்க அவனுக்குப் பொறுமை இருக்கவில்லை. மனம் மாறி விடுவோமோ என்று நினைத்து மேலும் பொறுமை இழந்தான். சே! வரவர நமக்கு மூளையே குழம்பிப் போகிறது. இதெல்லாம் ஒருவழியாய் முடிந்ததும் பாஸிடம் லீவு வாங்கிக் கொள்ளவேண்டும். இரண்டு மூன்று பெண்களை அழைத்துக் கொண்டு ஜாலியாய் உல்லாசப் பயணம் கிளம்ப வேண்டும்.

அந்த எண்ணம் தோன்றியவுடன் சிறிது உற்சாகம் ஏற்பட்டது.

சால்வடாரின் காதலியினுடைய ஜாகையை அடைந் தான். கள்ளச் சாவி போட்டு கேட்டைத் திறந்தான். லிஃப்டில்

செல்லாமல் படிகள் வழியே மூன்றாம் மாடியை அடைந்தான். அவர்களுடைய அறைக் கதவைப் பலமாகத் தட்டி, "திற கதவை! போலீஸ்!" என்றான்.

அறைக்குள் பரப்பான காலடியோசைகள் கேட்டன. சில நிமிடங்களில் சால்வடாரின் காதலி கதவைக் கொஞ்சமாகத் திறந்து எட்டிப் பார்த்தாள்.

"அட, நீயா நிக்! பைத்தியமா பிடித்திருக்கிறது உனக்கு? எதற்காகப் போலீஸ் என்று சொன்னாய்? பயத்தில் உயிரே போய்விட்டது!" என்றாள். பிறகு கதவை நன்றாகத் திறந்து, "நிக் தான் வந்திருக்கிறார்!" என்று படுக்கையை நோக்கிக் குரல் கொடுத்தாள்

சால்வடார் உருவத்தில் சின்னவன். அரை குறை ஆடையுடன் எழுந்து கொண்டு, "என்னப்பா நிக், என்ன திடீர்னு?" என்றான்.

"பாஸ் ஒரு சமாசாரம் சொல்லியனுப்பிருக்கிறார்" என்றவன், கைத்துப்பாக்கியை உயர்த்தினான் சத்தம் இல்லாமல் சுடும் துப்பாக்கி. விசையை அழுத்தினான். தோட்டா பறந்தது - வினாடிக்கு ஆயிரம் அடி வேகத்தில்.

ஒரு தோட்டா அவன் மூக்கைத் துளைத்தது. இரண்டாவது அவன் இதயத்தைப் பிளந்தது. உயிரற்று அவன் விழுந்த போது அவன் காதலி கூச்சலிடுவதற்கு வாயைத் திறந்தாள். நிக் அவள் தலையைக் குறிபார்த்துச் சுட்டான்.

அவளும் விழுந்தாள். சந்தேகத்துக்கு இடமில்லாத படி, இன்னொரு முறை அவள் மார்பில் சுட்டான்.

பாவம், நல்ல அழகி. இவளைக் கொலை செய்தது அனாவசியம். ஆனால் சால்வடாரின் கொலைக்கு யாரும் சாட்சி இருக்கக் கூடாது. பாஸுக்கு அது பிடிக்காது.

அடுத்தது, காவெல்லா.

குதிரைப் பந்தய மைதானத்தில் அவன் இருக்கிறா னென்று தெரிந்தது. அவன் ரேஸ் குதிரைகள் சொந்தமாக வைத்திருந்தான். எதன் மீது பணம் கட்ட வேண்டுமென்று நிக்கிற்கு டிப்ஸ் கொடுத்து, பலமுறை பணம் கிடைக்கும்படி செய்ததுண்டு.

குதிரைப் பந்தய மைதானத்தில் காவெல்லா இருந்த தனியறையை அடைந்தான் நிக். இனிமேல் நமக்கு யார் குதிரைப் பந்தய டிப்ஸ் கொடுக்கப் போகிறார்கள் என்று நினைத்த போது சிறிது வருத்தமாகக் கூட இருந்தது.

எட்டாவது ரேஸ் ஆரம்பமாகியிருந்தது. காவெல்லாவின் குதிரை ஓடியது போலும். எழுந்து ஆரவாரித்துக் கொண்டிருந்தான்.

நிக் அவன் பக்கத்தில் போய் நின்று "என்ன? எப்படி இருக்கிறே?" என்று விசாரித்தான்.

"அட, நிக்கா! சரியான சமயத்துக்குத்தான் வந்திருக்கிறே! இப்பத்தான் உன் பெயரில் பந்தயம் கட்டியிருக்கிறேன்," என்றான் காவெல்லா

"அப்படியா! பிரமாதம்!" என்று சொல்லிவிட்டு, நிக் தன் துப்பாக்கியை வெளியெடுத்தான். காவெல்லாவின் கோட்டோடு வைத்து அழுத்தி, மூன்று முறை மார்பில் சுட்டான்.

வெளியே குதிரைகள் ஓடும் ஆர்ப்பாட்டத்திலும் ஆரவாரத்திலும் அந்தச் சிறிய சத்தம் யாருக்கும் கேட்க வில்லை.

காவெல்லா சரிந்து விழுந்தான்.

ரேஸ் டிக்கெட்டை அவன் பையிலிருந்து எடுத்துக் கொள்ளலாமா என்று ஒரு வினாடி தயங்கினான், நிக் தொலையட்டும், வேண்டாம் அந்தக் குதிரை ஜெயிக்குமென்று அப்படியொன்றும் நிச்சயமில்லை.

வெளியேறினான் ஆயிரமாயிரம் பேர்களில் ஒருவனாகக் கலந்து மறைந்தான்.

மாரெட்டியின் அறையில் டெலிபோன் மணி அடித்தது.

"மாரெட்டி இருக்கிறாரா?" என்றது குரல்.

"யார் பேசுவது?"

"நான் இன்ஸ்பெக்டர் டேனர்."

சிறிது நேரம் பிடித்தது அவர் யாரென்று புரிந்து கொள்ள. பிறகு ஞாபகம் வந்தது.

அவனிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டிருக்கும் போலீஸ் அதிகாரிகளில் ஒருவர்.

"சொல்லுங்கள் மாரெட்டிதான் பேசுகிறேன்," என்றான்.

"போலீசுக்கு உங்களைக் காட்டிக் கொடுத்தது யாரென்று இப்போது தெரிந்து விட்டது வேறு யாருமில்லை. கால்ஃபாக்ஸ்," என்றார் போலீஸ் அதிகாரி.

"என்ன உளறுகிறீர்கள்? கால்ஃபாக்ஸ் செத்துப்போய் ரொம்பக் காலமாகிறது," என்றான் மாரெட்டி.

55

"உளவு கொடுத்தவர்கள் யார் என்று எனக்குத் தெரியும். அவர்களைத் தீர்த்துக் கட்ட ஏற்பாடு செய்தாகி விட்டது," என்றான் மீண்டும்.

"கொடுத்தவர்கள் என்கிறீர்களே? உளவு சொன்னவர் ஒரு ஆள் தான் - கால்ஃபாக்ஸ்," என்றார் போலீஸ் அதிகாரி மீண்டும்.

"கால்ஃபாக்ஸ் எப்போதோ செத்து விட்டார்," என்று மாரெட்டி சொன்னதும், போலீஸ் அதிகாரி டேனருக்கும் குழப்பம் ஏற்பட்டது.

"என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? இந்த நிமிஷம் கால்ஃபாக்ஸ் கடற்படை ஓட்டலில் உட்கார்ந்து கொண்டு, தனக்குத் தெரிந்ததையெல்லாம் எடுத்து விட்டுக் கொண்டிருக்கிறார். ரகசியப் போலீஸ் அதிகாரிகள் கேட்டுக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறார்கள்," என்றார்

"உமக்கு மூளையில் ஏதோ கோளாறாகி விட்டது!" என்று சீறினான் மாரெட்டி. "நிச்சயமாய் சொல்லுவேன்..." என்று சொல்ல ஆரம்பித்தவன் நிறுத்திக் கொண்டான்

எப்படி நிச்சயமாய்ச் சொல்ல முடியும்? கால்ஃபாக்ஸைக் கொன்று விடும்படி நிக்கிடம் சொல்லியனுப்பினேன். கொன்று விட்டதாக நிக் வந்து சொன்னான். அவ்வளவுதானே? அதை வைத்துக் கொண்டு எப்படி நிச்சயமாய்ச் சொல்லமுடியும்?

யோசனையில் ஆழ்ந்தவனாக, "உங்களுக்குச் சந்தேகமில்லையே?" என்றான்.

"மிஸ்டர் மாரெட்டி, சந்தேகமிருந்தால் உங்களைக் கூப்பிட்டுத் தகவல் தெரிவிப்பேனா?"

"சரி நான் செக் பண்ணுகிறேன். உங்கள் தகவல் உண்மையாயிருக்கும் பட்சத்தில் ரொம்ப நன்றி."

"ரொம்ப நன்றி சார்," என்று சொல்லிவிட்டு டேனர் டெலிபோனை வைத்தார் அவர் மனத்தில் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது. கடந்த காலத்தில் பலமுறை இந்த மாதிரி தகவல்களை மாரெட்டிக்குத் தெரிவித்திருக்கிறார் அதற்கெல்லாம் அவ்வப்போது 'அன்பளிப்பு' கிடைத்த துண்டு. ஆனால் இப்போது தெரிவித்த தகவல் மிகப் பெரிது. அதற்கேற்றபடி மிகப் பெரிய அன்பளிப்புக் கிடைக்கும். அதை வைத்துக் கொண்டு கவலையில்லாமல் காலம் கழிக்கலாம். இந்த உத்தியோகத்தையே விட்டுவிடலாம்.

டெலிபோன் கூண்டை விட்டு அவர் வெளியே வந்தார்.

இரண்டு பேர் வெளியே காத்திருந்தார்கள் அவர்களைத் தாண்டிக்கொண்டு செல்ல டேனர் முயன்றார். ஒருவர் அவரை வழி மறித்தார். மற்றவர் தனது அடையாளக் கார்டை எடுத்துக் காட்டினார்.

"மிஸ்டர் டேனர், நான் ரகசியப் போலீஸ் அதிகாரி. கொஞ்சம் எங்களுடன் வருகிறீர்களா? போலீஸ் கமிஷனர் உங்களிடம் இரண்டு வார்த்தை பேச வேண்டுமாம்," என்று கூறி அவரைக் கைது செய்து அழைத்துப் போனார்கள்

மாரெட்டி தன் ரிசீவரை மெதுவாகவே வைத்தான்.

நிக் தன்னிடம் பொய் சொல்லியிருக்கிறான் என்று அவன் உள்ளுணர்வு சர்வ நிச்சயமாய்க் கூறியது.

கால்ஃபாக்ஸ் உயிருடன் இருக்கிறார் இப்போது எல்லாம் புரிகிறது அவர்தான் துரோகியாக மாறி எல்லாத் தகவல்களையும் போலீசுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

இதை அறியாமல் சால்வடாரையும் காவெலாவையும் கொலைச் செய்யும்படி நிக்கை அனுப்பியிருக்கிறேனே! கடவுளே! எப்படிப்பட்ட முட்டாள்தனம் செய்து விட்டேன்! ஓர் அயோக்கிய அடியாளிடம் ஏமாந்து போய், என்னுடைய இரண்டு சிறந்த தளபதிகளைத் தீர்த்துக் கட்டி விட்டேனே!

நினைக்க நினைக்க மாரெட்டியின் கோபம் உச்சத்தை எட்டியது.

டெலிபோனை எடுத்து ஒரு நம்பரைச் சுழற்றிச் சுருக்கமாகப் பேசினான். இரண்டாவதாக இன்னொரு நம்பரைக் கூப்பிட்டு, நாற்காலியில் சாய்ந்து கொண்டு காத்திருந்தான்.

மணி அடித்தது. நிக்தான் பேசினான்.

தன் சீற்றம் குரலில் வெளிப்பட்டு விடாதபடி அடக்கிக்கொண்டு, "என்ன நிக், வேலை முடிந்ததா?" என்று கேட்டான்.

"ஆமாம் பாஸ். நீங்கள் சொன்னபடியே முடித்து விட்டேன். இரண்டு பேருக்கும் சரியான சித்திரவதை."

"உன்னை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க முடிகிறது, நிக். இல்லையா?"

"நீங்கள் சொல்வதைச் செய்யத்தானே நான் இருக்கிறேன், பாஸ்?"

"நிக், இன்னொரு உதவி செய்ய வேண்டுமே நீ? நம்ம ஆட்களில் ஒருவன் 95'வது தெரு முனையில் காரை நிறுத்தியிருக்கிறான். கறுப்பு நிறம். காருக்குள்ளேயே சாவி இருக்கிறது. இன்று ராத்திரி ஒரு வேலைக்காக அந்தக் கார் தேவைப்படுகிறது. நீ கொஞ்சம் அதை இங்கே ஓட்டி வந்து விடுகிறாயா?"

"ஓ, செய்கிறேன் பாஸ். எப்ப வரணும் சார்?"

"இப்பவே வேண்டும், நிக்."

"இதோ எடுத்து வருகிறேன், பாஸ்."

"குட் பை நிக்!" என்ற மாரெட்டி டெலிபோனை வைத்தான்.

அவன் முகத்தில் ஒரு குரூரத் திருப்தி பரவியது.

அந்தக் காரில் வெடிகுண்டு வைத்தாயிற்று. டைம் பாம்!

வரும் வழியில் கார் ஆயிரம் சுக்காக வெடிக்கப் போகிறது.

நிக் சிதறிச் சாகப் போவதைப் பார்க்க வேண்டும் போலிருந்தது மாரெட்டிக்கு. ஆனால் அதற்கு இப் போது நேரமில்லை. இன்னொரு முக்கியமான காரியம் இருக்கிறது.

இன்றோ நாளையோ ஜெனிபர் சிங்கப்பூரிலிருந்து வந்து விடுவாள்.

அவளுக்காக எல்லாம் தயார் செய்து வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினான்.

வெகு பாதுக்காப்பாக, கட்டுக் காவலுடன், கடற்படைக் கட்டிடத்தில் கால்ஃபாக்ஸ் விசாரிக்கப்பட்டு வந்தார்.

அங்கே அன்று பரபரப்பாக ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

'ஹூம்! சுத்த ஹாலிவுட் மாதிரி ஆகிவிட்டது இந்த இடம்!' என்று தனக்குள் சலித்துக்கொண்டார் கடற்படைத் தளத்தின் தலைமை அதிகாரி.

ஏனெனில் டிசில்வா சொல்வதைச் சினிமாப் படமாக எடுக்க அங்கே ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. காமெராவை ஆங்காங்கே வைப்பதும் ஒளியமைப்பைச் சரிசெய்வதுமாக இருந்தார்கள்.

"முன்னெச்சரிக்கையாக ஒரு சினிமாப் படமும் இருக்கட்டும்," என்று கூறியிருந்தார் டிசில்வா.

"கால்ஃபாக்ஸின் மீது யாரும் கை வைக்க முடியாதுதான். இருந்தாலும் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று நேர்ந்து விட்டால் நம்மிடம் ஆதாரம் இருக்க வேண்டுமல்லவா?" என்று அவர் சொன்னதை மற்றவர்களும் ஆதரித்தார்கள்

இன்னும் கால்ஃபாக்ஸ் வரவில்லை. எல்லாம் தயாரான பிறகு கடைசி நிமிஷத்தில் அவரை அழைத்து வரவிருந்தார்கள்.

கால்ஃபாக்ஸின் தனியறை.

நீதி விசாரணைத் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரி அவருடன் அடுத்த திட்டங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார். அரசாங்கத்துக்காகத் துப்புத் தந்து சாட்சி சொல்ல முன் வருவோருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுப்பது அவருடைய வேலை.

"விசாரணை முடிவடைந்ததும், நீங்கள் எந்த நாட்டுக்குப் போக விரும்பினாலும் அரசாங்கம் வசதி பண்ணிக் கொடுக்கும். உங்களுக்குச் சொந்தமான பொருள்களை வாஷிங்டனில் ஒரு கிடங்குக்கு அனுப்பி வைத்து விடுவோம். அதற்கு ஒரு ரகசிய எண் கொடுத்திருப்போம். பிற்பாடு அவைகளை உங்களுக்கு அனுப்பி வைப்போம். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று யாராலும் கண்டு பிடிக்க முடியாது. உங்களுக்குப் புதுப் பெயர், புதுச் சரித்திரம் எல்லாம் நாங்கள் தயாரித்துத் தருவோம்.

வேண்டுமானால் உங்கள் முகத் தோற்றத்தையும் மாற்றிக் கொடுக்கிறோம்," என்றார் அதிகாரி.

"அதை நான் பார்த்துக் கொள்கிறேன்," என்றார் கால்ஃபாக்ஸ். முகத்தோற்றத்தை மாற்றிக் கொள்ளும் விஷயத்தில் யாரையும் அவர் நம்பத்தயாராயில்லை. அதை அந்தரங்கமாகச் செய்து கொள்ளத் தீர்மானித்திருந்தார்.

"வழக்கமாக நாங்கள் உங்களைப் போன்ற சாட்சிகளுக்குப் புது வாழ்க்கை ஏற்படுத்தும்போது, அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற துறையில் வேலை வாங்கித் தருவோம். கொஞ்சம் பணமும் தருவோம். ஆனால் உங்களுக்குப் பணப் பிரசினை இல்லையென்று தெரிகிறது," என்றார் அதிகாரி.

கால்ஃபாக்ஸ் தனக்குள் சிரித்துக் கொண்டார் ஜெர்மனியிலும் ஸ்விட்சர்லாந்திலும் பாங்குகளில் ரகசியக் கணக்குகளில் அவர் சேமித்து வைத்திருக்கும் எக்கச் சக்கமான பணத்தைப் பற்றி இந்த அதிகாரி அறிந்தால்...

கால்ஃபாக்ஸுக்கே சொத்துக் கணக்கு மறந்துவிட்டது. ரொம்பக் குறைச்சலாய்க் கணக்குப் போட்டால் கூடக் கிட்டத்தட்ட ஒரு கோடி டாலருக்கு மேலிருக்கும் என்று எண்ணிக் கொண்டு, "ஆமாம். பணத்தைப் பற்றிப் பிரசினை இல்லை," என்றார்.

"அப்படியானால் சரி. நீங்கள் எங்கே போக விரும்புகிறீர்கள் என்பதைத் தீர்மானிப்போம். அதுதான் முதல் வேலை. உங்கள் மனசில் குறிப்பாக எந்த நாட்டையாவது நினைத்து வைத்திருக்கிறீர்களா?"

ரொம்பச் சின்னக் கேள்வி தான். ஆனால் ரொம்பப் பெரிய விஷயம். 'உங்கள் மீதி வாழ்நாளை எங்கே கழிக்கப் போகிறீர்கள்?'என்பது அதற்கு அர்த்தம். எந்த நாட்டுக்குப்

போவதானாலும் சரி, இனி அதுதான் சாசுவதம். பிறகு இங்கே திரும்புவது என்பது நடவாத காரியம்.

"பிரேஸிலுக்குப் போகிறேன்," என்றார் கால்ஃபாக்ஸ்.

ஏற்கெனவே பிரேஸில் நாட்டில் இரண்டு லட்சம் ஏக்கரா பரப்பில் ஒரு பண்ணை வாங்கியிருந்தார் அவர், வேறொரு நிறுவனத்தின் பெயரில். அதில் இவருக்குச் சம்பந்தம் உண்டு என்று எவருக்கும் தெரியாது. அந்தப் பண்ணை ஒரு கோட்டை மாதிரி. அங்கே எல்லாப் பாதுகாப்பும் செய்துகொள்ள முடியும். அவர் இருக்குமிடம் மாரெட்டிக்குத் தெரியவந்தால் கூட, சுண்டுவிரலை வைக்க முடியாது அவர்மீது. அது மட்டுமல்ல. எவ்வளவு பெண்கள் வேண்டுமானாலும் விலைக்கு வாங்கலாம். பிரேஸில் நாட்டுப் பெண்கள் என்றால் அவருக்குக் கொள்ளை ஆசை. 'அறுபத்தைந்து வயதாகிவிட்டால் ஸெக்ஸ் உணர்வு போய்விடும் என்று எல்லாரும் நினைக்கிறார்கள். ஆனால் நமக்கு அப்படியில்லை. வயது ஏற ஏற ஸெக்ஸ் உணர்வு அதிகரிக்கிறது,' என்று நினைத்துக் கொண்டார் கால்ஃபாக்ஸ். படுக்கையில் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று பெண்கள் இருந்தால் அவருக்குக் கொண்டாட்டம். இளம் பெண்கள் பிரேஸிலில் நிறைக் கிடைப்பார்கள்.

அதிகாரி சொன்னார்: "பிரேஸில்தானே? சுலபமாய் ஏற்பாடு செய்து விடலாம். உங்களுக்காக ஒரு சின்ன வீடு அரசாங்கம் வாங்கித் தரும்..."

"அதற்கு அவசியமில்லை," என்றார் கால்ஃபாக்ஸ். சின்ன வீடாம்! வாங்கித் தருகிறார்களாம்! அவருக்குச் சிரிப்பு வந்தது. "எனக்குத் தேவையானதெல்லாம் ஒரு புதுப்பெயர், பத்திரமான பிரயாணம். அதற்கு நீங்கள் வசதி பண்ணித் தந்தால் போதும். மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்."

"உங்கள் விருப்பப்படி எல்லாம் செய்து தருகிறோம்," என்றபடி எழுந்து கொண்டார் அதிகாரி. "இதெல்லாம் ரொம்பச் சுலபமான வேலை. நீங்கள் சாட்சியம் சொல்லி முடித்ததுமே பிரேசில் நாட்டுக்கு விமானத்தில் ஏற்றி விடுவோம். கவலைப்படாதீர்கள்."

"ரொம்ப நன்றி," என்று கூறி அவருக்கு விடை கொடுத்தார் கால்ஃபாக்ஸ். அவருக்கு ஒரே குதூகல மாயிருந்தது. எவ்வளவு பிரமாதமாய்த் திட்டத்தை நிறைவேற்றி விட்டோம்! மாரெட்டி நம்மை ரொம்பக் குறைத்து மதிப்பிட்டு விட்டான். பாவம், இதுதான் அவன் செய்யும் கடைசித் தவறு. மாரெட்டி! உன்னை ஆழக் குழி தோண்டிப் புதைத்தாயிற்று! அந்தக் குழியிலிருந்து நீ ஒருநாளும் எழுந்து வரமுடியாது.

நாம் சாட்சியம் சொல்வதைச் சினிமாப் படம் பிடிக்கப் போகிறார்கள் என்பதை எண்ண அவருக்கு உற்சாகமாக இருந்தது. மேக் அப் போடுவார்களோ ஒருவேளை? கண்ணாடியில் பார்த்துக் கொண்டார். என் வயதுக்கு நான் நன்றாய்த்தான் இருக்கிறேன். இந்த மாதிரி வயதான நரை முடிக்காரர்களைப் பிரேஸில் பெண்களுக்கு ரொம்பப் பிடிக்கும்...

அறைக் கதவு திறந்தது.

கப்பல் படைச் சிப்பந்தி யொருவன் அவருக்குச் சாப்பாடு எடுத்து வந்திருந்தான்.

அவைகளை மேஜைமீது எதிரே வைத்தான் சாப்பாட்டில் விஷம் ஏதும் இல்லை என்ற உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இவருக்கு ஒன்று, அவனுக்கு ஒன்று. 'அந்தக் காலத்து ராஜாக்கள் மாதிரி!' என்று தனக்குள் எண்ணி மகிழ்ந்தார், கால்ஃபாக்ஸ்.

சிப்பந்தி அவரெதிரில் உட்கார்ந்து கத்தியால் வெட்டி முள் கரண்டியால் உண்ணத் தொடங்கினான்.

"எப்படி இருக்கிறது?" என்று கேட்டார்.

"அவ்வளவாக நன்றாயில்லை சார்," என்றான் அவன்.

அவர் சாப்பிட ஆரம்பித்தார். 'நன்றாய்த்தானே இருக்கிறது!' என்று தோன்றியது அவருக்கு.

இரண்டாவது கவளம் தொண்டையில் இறங்கிய போது - ஏதோவொரு விபரீதத்தை உணர்ந்தார். திடீரென்று தொண்டை பயங்கரமாய் எரிந்தது. மறுவினாடி உடம்பு மொத்தமும் எரிந்தது. நெருப்பின் மீது நிற்கிற மாதிரி இருந்தது. தொண்டை அடைத்தது. சுவாசம் திணறியது.

சிப்பந்தி அவரையே பார்த்தபடி எதிரில் உட்கார்ந்து இருந்தான். கால்ஃபாக்ஸ் தன் தொண்டையைப் பிடித்துக் கொண்டு ஏதோ சொல்ல முயன்றார். ஒரு வார்த்தையும் வெளிவரவில்லை. அந்தப் பயங்கர எரிச்சல் அவர் நாடி நரம்புகளில் வெகு வேகமாகப் பரவி, தாள முடியாத வேதனையைத் தந்தது. ஒரு கோர வலிப்புடன் தேகம். விறைத்துக் கொண்டது. பின்புறமாகச் சரிந்து தரையில் விழுந்தார்.

அந்தச் சிப்பந்தி ஒரு நிமிஷம் அவரைக் கவனித்தபடி நின்றான். பிறகு அவரை நோக்கிக் குனிந்து, இமைகளைத் தூக்கிப் பார்த்தான். அவர் இறந்து விட்டார் என்பதை நிச்சயம் செய்து கொண்ட பின்னர்-

வெளியே போய், "உதவி! உதவி! சீக்கிரம் வாருங்கள்!" என்று குரல் கொடுத்தான்.

சிங்கப்பூரிலிருந்து வந்த விமானம் லண்டன் விமான நிலையத்தில் இறங்கியது.

ஜெனிபரும் அவளுக்குக் காவலாக வந்திருந்த ரகசியப் போலீசாரும் முதலில் இறங்கி, விமான நிலையத்தின் காவல் அறைக்குச் சென்றார்கள்.

நியூயார்க்கிற்கு அவர்கள் வேறு விமானம் மாற வேண்டும்.

ஊரில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளத் தவித்தாள் ஜெனிபர். தினசரியைப் பார்த்தால் தெரியும். ஆனால் அவளுக்குக் காவலிருந்த போலீசார் அவளுக்கு எந்தப் பேப்பரும் தர மறுத்து விட்டார்கள். ஏதாவது பேச்சுக் கொடுக்கலாமென்றால் அதற்கும் அவர்கள் இடம் தரவில்லை.

இரண்டு மணி நேரம் சென்றது. நியூயார்க் செல்லும் விமானத்தில் மூன்று பேரும் பயணமானார்கள்.

அங்கே அமெரிக்காவில் அரசாங்க முக்கியப் புள்ளிகளின் அவசரக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வார்னரும் டிசில்வாவும் ரகசியப் போலீஸ் இலாகாவின் தலைமை அதிகாரிகளும் இன்னும் பலரும் குழுமியிருந்தார்கள்.

"என்னய்யா அக்கிரமம்! எப்படி இது நடந்தது?" டிசில்வாவின் குரல் கோபத்தால் நடுங்கியது. கப்பற்படை அதிகாரியிடம் திரும்பி, "கால்ஃபாக்ஸ் எங்களுக்கு எவ்வளவு முக்கியமானவர் என்று சொன்னோமா இல்லையா?" என்றார்.

அவர் தன் இரு கைகளையும் விரித்தார். "எல்லா முன்னெச்சரிக்கையும் செய்திருந்தோம் சார். எப்படிக் கால்ஃபாக்ஸின் சாப்பாட்டில் அக்கினித் திராவகத்தைக் கலந்தார்கள் என்ற விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறோம்...."

"உமது விசாரணையைக் கொண்டு போய் உடைப்பில் போடும்! கால்ஃபாக்ஸ் செத்துவிட்டாரே!"

அரசாங்க அதிகாரி ஒருவர் குறுக்கிட்டு, "கால்ஃபாக்ஸ் இறந்ததால் காரியம் ரொம்பக் கெட்டு விட்டதா?" என்று கேட்டார்.

"சந்தேகமில்லாமல்!" என்றார் டிசில்வா. "ஒரு ஆளை நேரடியாகச் சாட்சிக் கூண்டில் நிறுத்திச் சொல்ல வைப்பது எப்படி, வெறுமே கணக்குப் புத்தகங்களையும் பத்திரங் களையும் காட்டுவது எப்படி? எவனாவது ஒரு கொம்பு முளைத்த வக்கீல் வந்து எல்லாக் கணக்குப் புத்தகங்களும் பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்று சொல்லி அக்கு வேறு ஆணி வேறாய்ப் பிய்ப்பானே!"

"இப்போது என்ன பண்ணுவது?"

"இதுவரை செய்ததையே தொடர்ந்து செய்து கொண்டிருப்போம். ஜெனிபர் சிங்கப்பூரிலிருந்து வந்து கொண்டிருக்கிறாள். அவளை நிரந்தரமாய்ச் சிறையில் அடைப்பதற்கான ஆதாரம் நம்மிடம் இருக்கிறது. அவளோடு மாரெட்டியும் சேர்ந்து சிறைக்குப் போகிற மாதிரி அவளைப் பேச வைப்போம்," என்ற டிசில்வா, வார்னரை நோக்கி, "என்ன, நான் சொல்வது சரிதானே?" என்றார்.

வார்னருக்கு வயிற்றைக் கலக்கியது. "மன்னிக்கணும்," என்று சொல்லி விட்டு வேகமாய் வெளியேறினான்.

56

நியூயார்க் விமான நிலையத்தில் அந்தப் பிரம் மாண்டமான விமானம் மெல்ல இறங்கியது.

விமானத்துக்குள் இருந்த ஒலி பெருக்கியில் அறிவிப்பு வந்தது. "நாம் இப்போது கெனடி விமான நிலையத்தில் இறங்கியிருக்கிறோம். தயவுசெய்து எல்லாப் பிரயாணிகளும்

அடுத்து அறிவிப்பு வரும்வரை பொறுத்திருக்கக் கோருகிறோம்."

பிரயாணிகள் முணுமுணுத்தார்கள்.

ஒரு நிமிடத்துக்கெல்லாம் கதவு திறந்தது. விமானத்தின் முன்பகுதியில் ஜெனிபருக்கு இருபுறமும் உட்கார்ந்திருந்த ரகசியப் போலீஸ் அதிகாரிகள் இருவரும் எழுந்துகொண்டார்கள். ஒருவர் ஜெனிபரின் பக்கம் திரும்பி, "போகலாம்," என்றார்

மூவரும் இறங்கிச் செல்வதை மற்றப் பிரயாணிகள் திகைப்புடன் பார்த்தபடி இருந்தார்கள்.

சில நிமிடம் கழித்து, ஒலிபெருக்கியில், "பொறுத் திருந்ததற்கு மிக்க நன்றி, இப்போது நீங்கள் இறங்கலாம்," என்று இன்னொரு அறிவிப்பு வந்தது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு பெரிய படகுக் கார் விமான நிலையத்தின் வாயிலில் தயாராக நின்றிருந்தது.

"ஸாரி, உங்களை ரைடர்ஸ் தீவுக்கு அழைத்துப் போய் வைத்திருக்கும்படி எங்களுக்கு ஆர்டர்," என்றார் அதிகாரிகளில் ஒருவர். கைதிகள் காவலில் வைக்கப்படும் இடம் ரைடர்ஸ் தீவு.

கார் மிக மௌனமாகச் சென்றது. பின்ஸீட்டில் இரண்டு ரகசியப் போலீசாரின் மத்தியில் ஜெனிபர் உட்கார்ந்திருந்தாள் அவளுடைய வாய்தான் பேச வில்லையே தவிர, மனம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

சிங்கப்பூரிலிருந்து பறந்து வந்த நேரம் மொத்தமும் இந்த ரகசியப் போலீசார் ஒரு வார்த்தைகூட வாயைத் திறக்கக் காணோம். ஆகவே, தான் எப்படிப்பட்ட இக்கட்டில் மாட்டியிருக்கிறோம் என்பதை ஜெனிபரால் அறிய வழியிருக்கவில்லை. ஆனால் ரொம்ப சீரியஸ் சமாசாரம் என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது. இல்லா

விட்டால் வெளிநாட்டிலிருந்து கைது செய்து அழைத்து வந்திருக்கமாட்டார்கள்.

ஜெயிலுக்குப் போய்விட்டால் பிறகு எதுவும் செய்ய முடியாது. எனவே முதல் வேலை ஜாமீனில் வெளியே வருவதுதான்.

காரை விட்டு வெளியே பார்த்தாள். எவ்வளவு முறை பார்த்துப் பழகிய இடங்கள்... கைதிகளை சந்திப்பதற்காகப் போகும் போதும் வரும்போதும் நூற்றுக் கணக்கான தடவை பார்த்திருக்கிறாள் இப்போது அவளே ஒரு கைதியாகச் செல்லுகிறாள்...

இருக்கட்டும். இதெல்லாம் ரொம்ப நாளைக்கு அல்ல. சீக்கிரமே மாரெட்டி என்னை வெளியே கொண்டு வந்து விடுவார்...

சிறைக் கட்டடம் வந்தது.

"உங்களை மூன்றாம் எண் அறையில் வைக்கும்படி எங்களுக்கு உத்தரவு," என்றார் காவலாளி.

"எனக்கு ஒரு போன் செய்து கொள்ள உரிமை உண்டா?" என்றாள் ஜெனிபர்.

"ஓ, தாராளமாய்." அந்தக் காவலாளி தன் மேஜை மீதிருந்த டெலிபோனை அவள் பக்கம் நகர்த்தினார்.

அவள் டயலைச் சுழற்றலானாள் - மாரெட்டி ஊரில் இருக்க வேண்டும் என்று தெய்வங்களை வேண்டியபடி.

ஜெனிபரின் போனுக்காகத்தான் காத்திருந்தான் மாரெட்டி.

சென்ற இருபத்து நாலு மணி நேரமாக அவனால் வேறெதைப் பற்றியும் நினைக்க முடியவில்லை.

சிங்கப்பூரிலிருந்து விமானம் லண்டனுக்கு வந்ததையும், அங்கிருந்து புறப்பட்டதையும், நியூயார்க்கை

அடைந்ததையும் ஜெனிபரைச் சிறைக்கு அழைத்துச் செல்வதையும் உடனுக்குடன் அவன் ஆட்கள் அவனுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

ஜெனிபர் ஜெயிலுக்குள் நுழைவதை அவன் மனக் கண்ணால் கண்டான்.

அடைபடுவதற்கு முன்புதான் ஒரு போன் கால் செய்ய வேண்டுமென்று நிச்சயமாய் அவள் கேட்பாள்.

மாரெட்டியைத்தான் கூப்பிடுவாள்.

அதற்காகத்தான் அவன் காத்திருந்தான்.

ஒரே மணி நேரத்தில் அவளை வெளியே கொண்டு வந்துவிட வேண்டும். அவள் நேரே அவனைப் பார்க்கத்தான் வருவாள்.

வ்ரட்டும், வரட்டும். இங்கேதான் அவள் வரவேண்டும்.

அந்த நிமிடத்துக்காக மாரெட்டி தவித்துக் கொண்டிருந்தான்.

மன்னிக்க முடியாத துரோகத்தைச் செய்து விட்டாள் ஜெனிபர் என்னை ஒழித்துக் கட்டுவதற்காக முயற்சி மேற்கொண்டிருக்கும் ஆளுக்குத் தன் உடம்பை மட்டுமா இன்னும் என்னவெல்லாம் வார்னருக்குக் கொடுத்தாளோ! எத்தனை யெத்தனை ரகசியங்களை அவனுக்குச் சொன்னாளோ!

ஜெனிபரின் பிள்ளைக்குத் தகப்பன் இந்த வார்னர். மாரெட்டிக்கு அதைப்பற்றிச் சந்தேகமில்லை. ஆரம்பம் முதல் இந்த விஷயத்தில் ஜெனிபர் பொய் சொல்லி வந்திருக்கிறாள்.

ஜோசப்பின் தந்தை இறந்து விட்டார் என்று சொன்னாளே!

அப்படியே ஆகட்டும் அவன் இறக்கும்படி பண்ணுகிறேன், பார்.

மாரெட்டி ஆத்திரத்தின் உச்சியில் இருந்தான். ஆனால் அவனால் இப்படியும் போக முடியவில்லை. அப்படியும் போக முடியவில்லை.

வார்னரை ஒரே அடி மண்டையில் போட்டு ஒழித்துவிட முடியும். ஜெனிபருக்கும் அவனுக்கும் இருந்த உறவைப் பகிரங்கப்படுத்தி, அவன் எதிர்காலத்தையே நாசம் செய்வதாகப் பிளாக்மெயில் செய்ய முடியும்.

ஆனால் அப்படிச் செய்தால் அது மாரெட்டியின் தலைக்கே தீம்பாகக் கூடும்.

பயங்கரக் கும்பலைப்பற்றி விசாரணை நடத்தி வரும் குழுவுக்குத் தலைவன் வார்னர். அந்த வார்னரின் காதலிதான் மாரெட்டிக்கும் காதலி என்று கும்பலில் உள்ள எல்லார்க்கும் தெரிய வந்தால்...!

கைகொட்டிச் சிரிப்பார்கள்.

அதற்குப் பிறகு தலை நிமிர்ந்து நிற்பது முடியாத காரியம். கீழே உள்ள ஆட்களை அதிகாரம் செய்வது நடவாது. ஒரு பொட்டச்சியிடம் ஏமாந்தவன் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்துக்குத் தலைவனாக விளங்குவதா! சிரிப்பார்கள்.

எனவே, வார்னரை பிளாக்மெயில் செய்வதென்பது இரு பக்கமும் கூரான கத்தி மாதிரி. எவ்வளவு தான் ஆசையாக இருந்தாலும் அந்த வழி கூடாது. வேறு வழியில் தான் எதிரியை அழிக்க வேண்டும்.

தன் மேசைமீது இருந்த மேப் படத்தைப் பார்த்தான் மாரெட்டி. கோணாமாணாவென்று கிறுக்கிய மேப். அன்று

மாலை ஒரு சொற்பொழிவுக்காக வார்னர் எந்தெந்த வழியே செல்கிறான் என்ற ரூட்டை அது காட்டியது.

ஐயாயிரம் டாலர் செலவழித்து இந்த ரூட்டைக் கண்டறிந்தான் மாரெட்டி.

இதை வைத்து வார்னரின் உயிரைக் குடிக்கப் போகிறோம்! இதற்கு என்ன விலை வேண்டுமானாலும் தரலாம்.

டெலிபோன் அடித்தது. எடுத்தான். மறுமுனையில் ஜெனிபரின் குரல் கேட்டது. அவன் காதில் எவ்வளவோ காதல் பேச்சுக்களைக் கிசுகிசுத்த அதே குரல் -

"மாரெட்டி நீங்கள் தானே?"

"ஆமாம். நீ எங்கேயிருந்து பேசுகிறாய்?"

"ரைடர்ஸ் தீவு சிறையில் என்னை வைத்திருக்கிறார்கள் கொலைக் குற்றம் சாட்டி இருக்கிறார்கள் இன்னும் ஜாமீன் தர்வில்லை. நீங்கள் எப்போது -"

"உடனே உன்னை விடுவிக்க ஏற்பாடு செய்கிறேன். கவலைப்படாமல் இரு. என்ன?"

"சரி," என்றாள். அவள் குரலில் தொனித்த நிம்மதியை அவனால் உணர முடிந்தது.

"உன்னை அழைத்து வர என் ஆள் ஜினோவை அனுப்புகிறேன்."

சில நிமிடங்கள் கழித்து மாரெட்டி போனை எடுத்துச் சுழற்றினான். வெகுநேரம் பேசினான். "எவ்வளவு அதிக ஜாமீன் கேட்டாலும் பரவாயில்லை. அவளை இப்போதே விடுதலை செய்தாக வேண்டும்," என்றான்.

போனை வைத்துவிட்டு மேஜை மீதிருந்த ஒரு பொத்தானைத் தட்டினான். ஜீனோ வந்தான்.

"ஜெனிபர் ரைடர்ஸ் தீவு சிறையில் இருக்கிறாள். இன்னும் ஒரு மணி நேரத்தில் அவளை ஜாமீனில் விட்டுவிடுவார்கள். அவளை நேரே இங்கே அழைத்து வா."

"ரைட் பாஸ்."

நாற்காலியில் சாய்ந்து கொண்டான் மாரெட்டி. "வார்னரைப் பற்றி நாளை முதல் நாம் கவலைப்படத் தேவையிருக்காது என்று அவளிடம் சொல்லு."

ஜினோவின் முகம் மலர்ந்தது. நிஜமாகவா பாஸ்?"

"ஆமாம். ஒரு கூட்டத்துக்காக அவன் போகப் போகிறான். ஆனால் அங்கே போய்ச் சேரப் போவ தில்லை. வழியிலேயே நியூ கனான் பாலத்தில் அவனுக்கு ஒரு விபத்து நேரப்போகிறது..."

ஜினோ புன்னகை செய்தான் "பிரமாதம் பாஸ்."

"சரி, சரி சீக்கிரம் புறப்படு," என்றான்.

ஜெனிபருக்கு ஜாமீன் கொடுக்கக் கூடாதென்று முழு மூச்சாகச் போராடினார் அரசாங்க வக்கீல் டிசில்வா.

"டஜன் கணக்கான கிரிமினல் குற்றங்கள் ஜெனிபரின் பேரில் இருக்கின்றன. சிங்கப்பூரிலிருந்து பிடித்து அழைத்து வந்திருக்கிறோம். இப்போது ஜாமீன் கொடுத்தால் வேறு ஏதாவது ஒரு நாட்டுக்கு ஓடிவிடுவாள். அங்கிருந்து கொண்டு வர முடியாமல் போய்விடக் கூடும். ஆகவே ஜாமீன் கொடுக்கக் கூடாது," என்றார்.

ஜெனிபருக்காக ஆஜராகியிருந்த வழக்கறிஞர், "அரசாங்க வக்கீல் சொல்லுவது தவறு. என் கட்சிக்காரர் எந்த நாட்டுக்கும் ஓட்டம் பிடிக்கவில்லை. பிசினஸ் விஷயமாகச் சிங்கப்பூர் சென்றிருந்தார். திரும்பி வரும்படி அரசாங்கம் அவருக்குச் சொல்லியிருந்தால் அவர் தானாகவே வந்திருப்பார். ஏராளமான பிராக்டிஸ் உள்ள

புகழ்பெற்ற வக்கீல். அவரா ஓடிப் போவார்? அபத்தம்!" என்றார்.

அரை மணி நேரம் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் நீதிபதி ஜெனிபரை ஐந்நூறாயிரம் டாலர் ஜாமீனில் விடுதலை செய்தார்.

பதினைந்து நிமிடத்துக்கெல்லாம் ஜெனிபரைத் தன் பிரம்மாண்டக் காரில் ஏற்றிக் கொண்டான் மாரெட்டியின் ஆளான ஜினோ.

"நல்ல வேளை, ஜாமீன் மனு ரொம்ப நேரம் இழுத்தடிக்கவில்ல," என்றான்.

ஜெனிபர் பதிலளிக்கவில்லை.

என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை ஊகிப்பதிலேயே அவள் கவனம் மொத்தமும் சென்றிருந்தது.

சிங்கப்பூரில் இருந்தவரையில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருந்தது. அமெரிக்காவில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்ல. ஆனால் தன்னைக் கைது செய்தது ஏதோ தனியான விஷயமல்ல என்று அவளுக்குப் புரிந்தது. அவள் ஒருத்தியைக் கைது செய்ததோடு விட்டுவிட மாட்டார்கள். மாரெட்டியை உடனே பார்த்தாக வேண்டும். பார்த்தால் தான் என்ன நடக்கிறதென்று விளங்கும். டிசில்வாவிடம் அசைக்க முடியாத ஆதாரம் ஏதோ இருக்கும் போலிருக்கிறது. இல்லாவிட்டால் அவளைக் கொலைக் குற்றம் சாட்டி சிங்கப்பூரிலிருந்து கைது செய்து அழைத்து வரும்படி பண்ணியிருக்கமாட்டார்...

காரை ஓட்டிக்கொண்டிருந்த ஜினோ ஏதோ பேசிக் கொண்டுவந்தான். முதலில் அவள் அதைக் கவனிக்கவில்லை. 'வார்னர்' என்று ஒரு வார்த்தை காதில் விழுந்ததும் விழித்துக் கொண்டாள் 'என்ன சொன்னாய்' என்று கேட்டாள்

"இனிமே வார்னரைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை என்று சொன்னேன். அந்த ஆளுக்கு ஒரு வழி பண்ணப் போகிறார் பாஸ்," என்றான் அவன்.

ஜெனிபரின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. "வழியா? என்ன வழி? எப்போ..."

ஸ்டீரியங்கிலிருந்து கையை எடுத்து கைக்கடியாரத்தைப் பார்த்தான் ஜினோ. "இன்னும் பதினைந்து நிமிஷத்தில் தற்செயலாய் நேர்ந்த விபத்து மாதிரி பண்ணப் போகிறார்..."

ஜெனிபருக்கு நாக்கு உலர்ந்தது. "விபத்து... எங்கே... எங்கே... நடக்கப் போகிறது?"

"நியூ கனான் பாலத்தில்."

உடம்பு பதறியது அவளுக்கு. எட்டிப் பார்த்தாள். ஒரு கடை தெரிந்தது.

"ஜினோ, அந்த கடைக் கிட்டே கொஞ்சம் நிறுத்து. ஒரு சாமான் வாங்கணும்," என்றாள்.

"ஓ." அவன் காரை லாகவமாய் வளைத்துக் கடை வாசலில் நிறுத்தினான்.

"இதோ ஒரே நிமிஷத்திலே வந்துவிடுவேன்."

வெளியே பாய்ந்து கடைக்குள் ஓடினாள். அவள் நாடி நரம்புகள் அத்தனையும் வேதனையால் துடித்தன.

கடையின் மூலையில் ஒரு டெலிபோன் கூண்டு இருந்தது. ஜெனிபர் தன் பர்ஸைத் திறந்து பார்த்தாள். சில்லறையாகச் சிங்கப்பூர்க் காசுகள் இருந்தன. கேஷியரிடம் ஓடி, ஒரு டாலரைக் கொடுத்து, சில்லறை வாங்கிக் கொண்டாள். திரும்ப ஓடினாள்.

அதற்குள் ஒரு தாட்டியான அம்மாள் டெலிபோனைப் பிடித்துக்கொண்டு, டயல் செய்ய ஆரம்பித்திருந்தாள்.

"மன்னிக்கணும். ரொம்ப அவசரமாகப் போன் செய்ய வேண்டியிருக்கிறது..."

அந்த அம்மாள் அவளை ஒரு முறைப்பு முறைத்து விட்டு தன் பாட்டுக்கு டயல் செய்து பேச ஆரம்பித்தாள். "ஹலோ, நான்தான்... செருப்புக் கடைக்குப் போனேனில்லையா? என் கால் அளவுக்கு எதுவுமே சரியாயில்லை."

ஜெனிபர் கண்களை மூடிக் கொண்டு அசையாமல் நின்றாள் உள்ளத்துக்குள் பொங்கும் கொடிய வேதனையைத் தவிர வேறெதுவும் அவளுக்குத் தெரியவில்லை. வார்னரை மாரெட்டி கொன்றுவிடக் கூடாது.. என்ன செய்தாவது வார்னரைக் காப்பாற்ற வேண்டும்.

அந்த அம்மாள் ஒரு வழியாய் டெலிபோனை வைத்துவிட்டு, "சரியான உபத்திரவம்!" என்று ஜெனிபரைத் திட்டிவிட்டுச் சென்றாள்.

சரேலென்று போனை எடுத்தாள் ஜெனிபர். வார்னரின் அலுவலகத்தைக் கூப்பிட்டாள்.

"ஸாரி," என்றார் வார்னரின் செக்ரட்டரி. "மிஸ்டர் வார்னர் இன்னும் வரவில்லை."

"அவர் எங்கே இருப்பார் என்று சொல்ல முடியுமா? ரொம்ப அர்ஜண்ட்."

"ஸாரி... எனக்குத் தெரியாது."

போனை வைத்தாள். ஒரு நிமிடம் யோசித்தாள். பிறகு வேகமாகப் போன் செய்தாள் டிசில்வாவுக்கு.

காத்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் ஒரு யுகமாக இருந்தது. கடைசியில் போனை எடுத்து, "அரசாங்க வக்கீலின் அலுவலகம்," என்றார்கள்.

"மிஸ்டர் டிசில்வாவை உடனே கூப்பிடுங்கள், நான் ஜெனிபர் பேசுகிறேன்."

"ஸாரி, அவர் முக்கியமான வேலையாக இருக்கிறார், தொந்தரவு-"

"இப்போது அவரைக் கூப்பிடுகிறீர்களா இல்லையா? ரொம்ப அவசரம்! சீக்கிரம்!" அவள் குரல் கோபத்தால் நடுங்கியது.

"கொஞ்சம் இருங்கள்.

சற்றைக்கெல்லாம் டிசில்வா, "என்ன?" என்றார். அவர் குரலில் சினேகபாவமே இருக்கவில்லை.

"ஒரு முக்கியமான விஷயம்- கவனமாய்க் கேளுங்கள்," — என்றாள் ஜெனிபர். "வார்னரைக் கொலை செய்யப் போகிறார்கள். இன்னும் பத்து அல்லது பதினைந்து நிமிடத்துக்குள் கொலை நடக்கப் போகிறது. நியூ கனான் பாலத்தில் ஒரு விபத்து நடக்கிற மாதிரி ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள் -"

சொல்லிவிட்டுப் போனை வைத்தாள். இதற்கு மேல் என்ன செய்ய முடியும்?

கைக்கடியாரத்தைப் பார்த்தாள் கடவுளே! வார்னரைக் காப்பாற்ற டிசில்வாவுக்கு அவகாசம் இருக்க வேண்டும்! காலம் தாழ்ந்துவிடக் கூடாது!

டிசில்வா போனைத் திரும்ப வைத்தார். தன்னைச் சுற்றியுள்ள அரை டஜன் நபர்களை நோக்கினார் "விசித்திரமான கால்தான்!" என்றார்.

"யாரிடமிருந்து?"

"ஜெனிபரிடமிருந்து. வார்னரைக் கொலை செய்யப் போகிறார்களாம். சொல்கிறாள்."

"உங்களுக்கு ஏன் போன் செய்யணும்?"

"யாருக்குத் தெரியும்?"

"உண்மையான தகவலாகவா இருக்கும்?"

"இருக்காது." என்றார் டிசில்வா.

57

அந்தச் சாலையின் தெற்குப் பக்கமிருந்த பாலத்தை நோக்கி வார்னரின் கார் பறந்து கொண்டிருந்தது. பின் சீட்டில் வார்னர் உட்கார்ந்து இருந்தான். அவன் பக்கத்தில் ஒரு ரகசியப் போலீஸ் அதிகாரியும், முன் சீட்டில் இருவரும் இருந்தார்கள்.

வார்னரின் பக்கத்திலிருந்த அதிகாரியின் பெயர் ரெட்டின். சென்ற ஆறு மாத காலமாக அவர்தான் வார்னரின் பாதுகாப்பு அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். ஒளிவு மறைவில்லாமல் கலகலப்பாய்ப் பழகுகிறவர் என்று வார்னரிடம் அவருக்கு நல்ல மதிப்பு.

ஆனால், ஏன் இன்று பூரா என்னவோ போலி ருக்கிறார்? சரியாய்ப் பேசவேயில்லை. தனக்குள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவராக இருக்கிறாரே. எதனால்? என்னவோ கவலை என்று எண்ணிக் கொண்டார் ரெட்டின். வார்னர் தான் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக வரப் போகிறவர் என்பது பற்றி அவருக்குச் சந்தேகமே இருக்கவில்லை. ஆகவே வார்னருக்கு எந்தத் தீங்கும் வராதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று தீவிரமாய் இருந்தார்.

வார்னரைப் பாதுகாப்பதற்கு எடுத்துக் கொண்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மனசுக்குள் பரிசீலனை செய்தார். எல்லாம் கச்சிதம். எதுவும் தப்பாகப் போக வாய்ப்பில்லை.

நாளைய ஜனாதிபதியை மீண்டும் பார்த்தார் ரெட்டின் எதைப் பற்றி இவர் கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார்?

வார்னரின் மனத்தில் எண்ணங்கள் முட்டி மோதிக் கொண்டிருந்தன.

ஜெனிபரைக் கைது செய்தாயிற்று என்று டிசில்வா தெரிவித்திருந்தார். அதுதான் அவன் வேதனை.

ஜெனிபரை ஏதோ காட்டு விலங்கு மாதிரி கூண்டுக் குள் அடைத்திருக்கிறார்கள்! நினைக்கவே வேதனை யாயிருந்தது. தானும் அவளும் சேர்ந்து அனுபவித்த இன்பமான நாட்கள் அவனுக்கு ஞாபகம் வந்தன. ஜெனிபர்! உன்னைக் காதலித்த மாதிரி எந்தப் பெண்ணையும் எந்தச் சமயத்திலும் நான் காதலித்தது கிடையாது கண்ணே...!

முன் சீட்டில் அமர்ந்திருந்த ரகசியக் காவலரில் ஒருவர் வார்னரிடம் திரும்பி, "கூட்டத்துக்குக் கரெக்டாய், டயத்துக்குப் போய்ச் சேர்ந்து விடுவோம் மிஸ்டர் பிரசிடெண்ட்!" என்றார்.

மிஸ்டர் பிரசிடெண்ட்!

வார்னருக்கும் உடம்பு கூசியது.

மாதிரி வாக்கெடுப்புக்கள் பல எடுத்தாயிற்று. கடைசியாகக் கிடைத்த தகவலின்படி அவன் தான் மற்ற எல்லா வேட்பாளரையும் காட்டிலும் மிக மிக முன்னணியில் இருந்தான்.

இன்று நாட்டின் மிகப் பெரிய ஹீரோ அவன்தான்.

அதற்குக் காரணம் பயங்கரக் கும்பலைப் பற்றி அவன் நடத்திய விசாரணைகள்.

அதே விசாரணைகள் ஜெனிபரை ஒழித்துக் க ் ப் போகின்றன!

வார்னரின் கார் பாலத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

அதே சமயம், பாலத்தின் பக்கத்திலிருந்த ஒரு தெருவில் நின்றிருந்த ஒரு பிரம்மாண்டமான லாரியும் பாலத்தை நோக்கிப் புறப்பட்டது.

ஒரே சமயத்தில் வார்னரின் காரும் லாரியும் பாலத்துக்குள் நுழைந்தன.

"சுத்த மடையனாய் இருக்கிறானே!" என்று திட்டிய வண்ணம் வார்னரின் டிரைவர் பிரேக்கை அழுத்தினான். காரின் வேகம் குறைந்தது.

காருக்குள் இருந்த ரேடியோ திடீரென்று ஒலித்தது: "பீக்கன் ஒன்! காதில் விழுகிறதா? பீக்கன் ஒன்!"

டிரைவருக்குப் பக்கத்திலிருந்த ரகசியப் போலீஸ்காரர் மைக்கை எடுத்து, "பீக்கன் ஒன் பேசுகிறேன்!" என்றார்.

முன்னால் சென்று கொண்டிருந்த அந்த லாரி இப்போது பாலத்தின் குறுக்காக வந்தது. மாபெரும் லாரியாகையால் வார்னரின் டிரைவருக்குப் பாதையே தெரியாதபடி மறைத்தது. அதைத் தாண்டிக் கொண்டு வேகமெடுக்க முயன்றார் டிரைவர். ஆனால் கூடவே லாரியும் வேகமெடுத்தது.

"மனசிலே என்னதான் நினைச்சிட்டிருக்கிறான் அந்த முட்டாள்!" என்று கார் டிரைவர் முணுமுணுத்தார்.

காரில் இருந்த ஒலிபெருக்கி அறிவித்தது. "ஃபாக்ஸ் ஒன் அபாயத்தில் இருக்கிறார் அரசாங்க வக்கீலின் அலுவலகத்திலிருந்து அர்ஜெண்ட் தகவல் வந்திருக்கிறது. சொல்வது கேட்கிறதா?"

தடாலென்று, எந்த முன்னறிவிப்புமின்றி அந்த லாரி பாலத்தின் வலது பக்கத்துக்கு வந்து வார்னரின் கார் மீது மோதியது.பாலத்தின் பக்கவாட்டுக் கிராதிகளோடு ஒண்டிக் கொள்ளும்படி அதை நெருக்கியது.

காவலர்களில் ஒருவர் வார்னரிடம் கத்தினார்: "குனியுங்கள்!"

காரின் தரையோடு வார்னரைத் தள்ளி, அவர் உடம்பைக் கவசம்போல் மூடிக் கொண்டார் அதிகாரி ரெட்டின். மற்ற இரு காவலர்களும் காரின் ஒருபக்கக் கண்ணாடிகளை ஏற்றிவிட்டு மறுபக்கம் துப்பாக்கிகளை நீட்டிக்கொண்டார்கள்.ஆனால் சுடுவதற்குத்தான் எதுவுமே தெரியவில்லை. அந்தப் பிரம்மாண்ட லாரியின் பக்கவாட்டுப் பகுதிதான் அவர்களுக்குத் தெரிந்தது. வேறு எதுவும் தெரியாதபடி லாரி மறைத்திருந்தது.அதன் டிரைவர் லாரியின் முன்பகுதியில் எங்கேயோ இருந்தான்.

மறுபடியும் ஓர் இடி! மடேல்! பாலத்தின் கிராதிகளில் மீண்டும் வார்னரின் கார் மோதிக் கொண்டது.

பாலத்துக்கு வெளியே கார் விழுந்து விடாமல், பாலத்துக்குள்ளேயே ஓடும்படி வார்னரின் டிரைவர் காரை இடதுபுறம் ஒடித்தான். ஆனால் அதற்குக் கொஞ்சமும் இடம் தராமல் லாரி அவர்களைப் பாலத்தின் ஓரத்துக்கு நெருக்கித் தள்ளிக் கொண்டிருந்தது.

கீழே இருநூறு அடி ஆழத்தில் ஆறு நொப்பும் நுரையுமாகச் சுழித்து ஓடிக் கொண்டிருந்தது.

வார்னரின் காரில் இருந்த ரகசியப் போலீஸ்காரர் மைக்கைப் பற்றிக் கொண்டு, "பீக்கன் ஒன் பேசுகிறேன்! ஆபத்து! ஆபத்து! எல்லோரும் உதவிக்கு வாருங்கள்!" என்று கூவினார்.

ஆனால் யாரும் உதவிக்கு வரமுடியாது என்பது வார்னரின் காரில் இருந்த அத்தனை பேருக்கும் புரிந்தேயிருந்தது. காரை நிறுத்தப் பார்த்தார் டிரைவர். ஆனால் அந்த லாரியின் தகடுகள் அதைக் கொக்கி போட்டாற் போல் பிடித்திருந்தன. காரையும் தன்னோடு தரதரவென்று இழுத்துக்கொண்டு சென்றது லாரி. இன்னும் சில நிமிடங்கள்தான்-பாலத்தின் கிராதிகளைத் தகர்த்துக் கொண்டு ஆற்றில் கார் விழுந்து விடும். அந்த அளவுக்கு லாரி அதை நெருக்கித் தள்ளிக் கொண்டிருந்தது.

வார்னரின் டிரைவர் என்ன வெல்லாமோ 'பாச்சுக்' காட்டிப் பார்த்தார் ஒரு முறை பிரேக் போடுவார் இன்னொரு முறை ஆக்ஸிலரேட்டரை அழுத்தி வேகத்தை அதிகரிப்பார். ஆனால் என்ன செய்தாலும், லாரி பாலத்தின் சுவரோடு சுவராகக் காரை நசுக்குவதிலேயே முனைந் திருந்தது. கார் இந்தண்டை அந்தண்டை நகருவதற்குத் துளியும் இடம் இருக்கவில்லை இடது பக்கம் போக முடியாதவாறு சாலையை அடைத்துக் கொண்டி ருந்தது லாரி. வலதுபக்கம் பாலத்தின் இரும்புக் கிராதியில் மோதிக் கொள்ள வேண்டியிருந்தது.

கார் டிரைவர் பெரும் பிரயத்தனம் செய்து ஸ்டியரிங்கை வளைக்க முயன்றார் கிராதிக் கம்பிகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தகர்ந்து கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்தது.

லாரி மேலும் இடித்து நெருக்கியது, அவர்களைக் காரோடு வெளியே தள்ள

திடீரென்று ஒரு முறிவுச் சத்தம் கேட்டது வார்னருக்கும் மற்றவர்களுக்கும். காரின் முன்சக்கரம் கிராதியைத் தாண்டிப் பாலத்தின் விளிம்பைக் கடந்து விட்டது!

அந்த விளிம்பில் கார் தொற்றித் தொங்கிக் கொண்டிருந்தது. காரில் இருந்தவர்கள் இனி சாகத்தான் போகிறோம் என்று முடிவு செய்து விட்டார்கள்.

வார்னருக்குப் பயம் ஏற்படவில்லை. தாள முடியாத துயரம்தான் உண்டாயிற்று. வாழ்க்கை இப்படி வீணாக முடிவடைகிறதே என்று.

ஜெனிபருடன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்தி இருக்கலாம்... குழந்தைகுட்டி பெற்றுக் கொண்டு....

காருக்கு இன்னொரு இடி!

வார்னர் வாய்விட்டே அலறி விட்டான். கடவுளே! என்னை இப்படிச் சாகடிப்பது நீதியா? முறையா?

திடுப்பென்று-

ஆகாயத்தில் இரண்டு ஹெலிகாப்டர்கள் முளைத்தன எங்கிருந்தோ. அவர்கள் தலைக்கு மேல் பறந்தன. மறு வினாடி யந்திரத் துப்பாக்கிகள் படபடவென்று சுடும் ஓசை கேட்டது.

சொல்லி வைத்தாற் போல் எல்லாச் சலனங்களும் நின்றன.

மேலே ஹெலிகாப்டர்கள் வட்டமிடும் ஓசை வார்னருக்கும் மற்றவர்களுக்கும் கேட்டது. அவர்கள் சிறிதும் அசையாமல் மூச்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். இம்மி அசைந்தாலும் கார் நகர்ந்து ஆற்றில் கிடுகிடு பாதாளத்தில் தலைகுப்புறம் விழுந்துவிடும் என்று அவர்கள் உணர்ந்திருந்ததே காரணம்.

வெகு தொலைவில் போலீஸ் சைரன்களின் ஊளை கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சத்தம் அருகில் வந்தது.

சற்றைக்கெல்லாம் தடதடவென்று காலடி ஓசைகள்... கட்டளைகள் பறக்கும் ஒலிகள்....

லாரியின் இஞ்சின் இயங்கும் சத்தம்.... மெல்ல மெல்ல, அங்குலம் அங்குலமாக லாரி விலகுகிறது. காரை நசுக்கியுள்ள கோரப் பிடியை விடுகிறது... கார் பாலத்தின் விளிம்பில் பயங்கரமாக ஒரு முறை அசைகிறது... பிறகு சலனமற்று நிற்கிறது.

ஒரு நிமிடத்துக்கெல்லாம் லாரி பாதையிலிருந்து நகர்ந்து பின்செல்கிறது. இப்போது காரின் ஜன்னல் வழியே பாதையைப் பார்க்க முடிகிறது.

நீட்டிய துப்பாக்கிகளுடன் பாலமெங்கும் போலீஸ் காரர்கள்! டஜனுக்கு மேற்பட்ட போலீஸ் வேன்கள்!

58

வார்னரின் நசுங்கிப் போன காரிடம் ஒரு போலீஸ் அதிகாரி வந்தார். "கதவுகளைத் திறந்து உங்களை வெளியே கொண்டு வர முடியவில்லை. ஜன்னல் வழியாக எடுத்து விடுகிறோம். கவலைப் பட வேண்டாம்," என்றார்.

முதலில் வார்னரை ஜன்னல் வழியாய் வெளியே தூக்கினார்கள் மெதுவாக, மிக எச்சரிக்கையாக. கொஞ்சம் தவறினாலும் கார் ஆற்றுக்குள் விழுந்துவிடும் அபாயம் இருந்தது. பிறகு மற்ற மூவரையும் ஒவ்வொருவராக வெளியே கொண்டு வந்தார்கள்.

எல்லோரும் வெளியேற்றப்பட்ட பிறகு போலீஸ் அதிகாரி, "தங்களுக்கு ஒன்றுமில்லையே சார்?" என்று வார்னரை விசாரித்தார்

பாலத்தின் விளிம்பில் அபாயகரமாகத் தொற்றிக் கொண்டிருக்கும் காரையும், கீழே ஓடும் ஆழமான ஆற்றையும் மாறி மாறிப் பார்த்தான் வார்னர். "எனக்கு ஒன்றுமில்லை... நன்றாகத்தான் இருக்கிறேன்," என்றான்.

மாரெட்டி சுவரிலிருந்த கடியாரத்தைப் பார்த்தான். "எல்லாம் முடிந்துவிட்டது," என்றவன், ஜெனிபரை நோக்கித் திரும்பினான். " உன் காதலன் இந்நேரம் ஆற்றில் மூழ்கி உயிரை விட்டிருப்பான்," என்றான்.

அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகம் வெளிறியிருந்தது. "நீங்கள்... நீங்கள் என்ன...

"கவலைப் படாதே. உன் வழக்கை நியாயமாக விசாரித்த பிறகே தண்டனை கொடுப்பேன்," என்றவன், தன் உதவியாளனான ஜினோவிடம், "பாலத்தில் வார்னரைத் தீர்த்துக் கட்டப் போகிறோம் என்று அம்மையாரிடம் சொன்னாயா?" என்றான்.

"ஓ! நீங்கள் சொல்லச் சொன்னபடியே சொன்னேன், பாஸ்!"

மாரெட்டி ஜெனிபரைப் பார்த்தான்."அவ்வளவுதான். வழக்கு விசாரணை முடிந்து விட்டது," என்றான்.

எழுந்தான். ஜெனிபர் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்றான். அவள் பிளவுசைப் பிடித்து இழுத்து அவளை நிற்க வைத்தான்.

"நான் உன்னை எவ்வளவு காதலித்தேன்!" அவன் குரல் கரகரத்தது. அவள் முகத்தின் மீது பளாரென்று ஓர் அடி அடித்தான். அவள் தள்ளாடவில்லை. இன்னொரு தரம் அடித்தான், முன்னைக்காட்டிலும் பலமாக, மூன்றாம் முறை மறுபடி அடித்தான்.

ஜெனிபர் சுருண்டு கீழே விழுந்தாள்.

"எழுந்திரு! நாம் ஒரு பிரயாணம் போகப் போகிறோம்."

முகத்தில் விழுந்த அடிகளினால் ஜெனிபருக்குத் தலை சுற்றியது. அதற்குள் மாரெட்டி அவளை முரட்டுத் தனமாகத் தூக்கி நிறுத்தினான்.

"சொல்லு!" என்று உறுமினான் மறுபடி, "உலகத்தையே உன் காலடியில் கொண்டு வந்து வைத்தேனே நான்! அப்படியும் நீ உதறித் தள்ளினாயே, ஏன்? ஏன்?"

அவள் பதிலளிக்கவில்லை.

அவன் முகத்தில் குரூரம் கொப்புளித்தது. "நம்முடைய பழைய காதலுக்கு ஞாபகார்த்தமாக ஒரு முறை என்னோடு படுத்துக் கொள்கிறாயா?" அவளை நெருங்கி, அவள் கையைப் பிடித்து முறுக்கினான். "என்ன, எப்படியிருக்கு இப்ப?"

ஜெனிபர் அசையாமலிருந்தாள்.

"இதோ பார், இனிமேல் நீ யாரோடும் என்றைக்கும் படுத்துக்கொள்ள முடியாது! புரியவில்லை? உன் காதலனை மூழ்கடித்த அதே ஆற்றில் உன்னையும் மூழ்கடிக்கப் போகிறேன்! நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்தே இருக்கலாம்!"

ஜினோ உள்ளே ஓடி வந்தான். அவன் முகம் பயத்தால் வெளுத்திருந்தது. "பாஸ், வெளியே-"

அறைக்கு வெளியே மடேலென்று எதுவோ முறிந்து விழும் சத்தம் கேட்டது. மேஜை டிராயரிலிருந்து தன் துப்பாக்கியை எடுத்தான் மாரெட்டி. அதை நீட்டுவதற்குள் கதவைப் பிளந்து கொண்டு இரண்டு ரகசியப் போலீசார்

உள்ளே பாய்ந்து வந்தார்கள். துப்பாக்கிகள் துருத்திக் கொண்டிருந்தன அவர்களுடைய கைகளில்.

"தூக்கு கையை!" - கத்தினார்கள்.

அந்தக் கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மாரெட்டி ஒரு முடிவுக்கு வந்தான். கைத்துப்பாக்கியை உயர்த்தினான். ஜெனிபரை நோக்கிச் சுட்டான்.

ரகசியப் போலீசாரின் துப்பாக்கி குண்டுகள் அவனைத் துளைப்பதற்கு ஒரு நொடிக்கு முன்னதாக, அவன் தோட்டா அவளைத் துளைத்தது. அவள் மார்பிலிருந்து ரத்தம் பீறீட்டடிப்பதைக் கண்டான். அதே சமயம் போலீசாரின் தோட்டா தன் மார்பைக் கிழிப் பதையும் உணர்ந்தான்.

அடுத்து இன்னொரு தோட்டா...

ஜெனிபர் கீழே விழுந்து கிடப்பது அவனுக்குத் தெரிந்தது.

யாருடைய மரணம் அதிக வேதனையானது? என்னுடையதா, ஜெனிபருடையதா?

அவனுக்குத் தெரியவில்லை.

இடிபோல இன்னொரு தோட்டா தாக்குவதை உணர்ந்தான்.

அதன் பிறகு அவனால் எதையுமே உணர முடியாமல் போய்விட்டது.

சக்கர ஸ்டிரெச்சரில் ஜெனிபரை வைத்து, ஆபரேஷன் தியேட்டரிலிருந்து தீவிர சிகிச்சைப் பிரிவுக்குத்

தள்ளிச் சென்றார்கள் இரண்டு ஜூனியர் டாக்டர்கள். ஜெனிபரின் பக்கத்தோடு ஒரு யூனிபாரம் அணிந்த போலீஸ்காரர் நடந்தார். ஆஸ்பத்திரி தாழ்வாரமெங்கும் போலீஸ்காரர்கள், துப்பறியும் நிபுணர்கள், பத்திரிகை நிருபர்கள்.

ஆஸ்பத்திரி வரவேற்புக் குமாஸ்தாவை ஒரு நடுத்தர வயதுக்காரர் அணுகினார் "நான் ஜெனிபரைப் பார்க்கணும்."

"நீங்கள் அவருடைய உறவினரா?"

"இல்லை. சினேகிதன்."

"ஸாரி. விஸிட்டர்கள் யாரையும் அனுமதிப்பதற்கு இல்லை. அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கிறார்."

"நான் காத்திருக்கிறேன்."

"ரொம்ப நேரமாகலாம்."

"பரவாயில்லை," என்றார் வந்தவர் துப்பறியும் நிபுணர் கென்னெத் தான் அவர்

பக்கத்து அறையின் கதவொன்று திறந்தது. வார்னர் உள்ளே வந்தான். அவன் முகம் வாடி வதங்கியிருந்தது. ரகசியப் போலீசாரின் குழு அவனைச் சூழ்ந்திருத்து.

ஒரு டாக்டர் அவனை வரவேற்றார் "இப்படி என்னுடன் வாருங்கள் சார்," என்று கூறித் தனது சிறிய அறைக்கு அழைத்துச் சென்றார்.

"அவள் எப்படியிருக்கிறாள்?" என்றான் வார்னர்.

"எனக்கு நம்பிக்கையில்லை. அவள் உடம்பிலிருந்து மூன்று தோட்டாக்களை வெளியே எடுத்திருக்கிறோம்"

கதவு திறந்தது. அரசாங்க வக்கீல் டிசில்வா வந்தார். வார்னரைப் பார்த்து, "நல்ல காலம், ஒன்றும் நேராமல் தப்பினீர்கள். ரொம்ப சந்தோஷம்," என்றார்.

"நீங்கள்தான் என்னைக் காப்பாற்றினீர்கள் என்று சொன்னார்கள். எனக்கு ஆபத்து என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றான் வார்னர்.

"ஜெனிபர் டெலிபோனில் என்னைக் கூப்பிட்டாள். உங்களை நியூகனான் பாலத்தில் கொல்வதற்குச் சதி செய்திருக்கிறார்கள் என்று சொன்னாள். நம்மைத் திசை திருப்புவதற்காக ஏதோ சொல்கிறாள் என்று முதலில் நினைத்தேன். இருந்தாலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று உங்களுக்குப் பாதுகாப்பாகச் சில பேரை அனுப்பி வைத்தேன். எனக்கென்னவோ ஜெனிபர் உங்களைத் தீர்த்துக் கட்ட ஏதோ சதி செய்திருக்கிறாள் என்று தான் தோன்றுகிறது."

"சே, சே!" என்றான் வார்னர். "அப்படியெல்லாம் இல்லை."

டிசில்வா ஒரு பெருமூச்சு விட்டார் உங்கள் இஷ்டப்படி எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள். அதுதான் முக்கியம்." பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவர் போல, டாக்டரிடம் திரும்பி, "என்ன, அவள் பிழைத்துக் கொள்வாளா?" என்று கேட்டார்.

"சான்ஸ் கம்மிதான்."

வார்னரின் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை டிசில்வா கண்டார் ஆனால் அதை வேறுவிதமாக அர்த்தம் பண்ணிக் கொண்டார் "கவலைப்படாதீர்கள். அவள் எமனிடமிருந்து தப்பித்துக் கொண்டால்கூட, நம்மிடத்திலிருந்து தப்ப முடியாது. வழக்குத் தொடுத்து அமுக்கோ அமுக்கென்று

அமுக்கி விடுவோம்," என்றவர், வார்னரைக் கூர்ந்து கவனித்தார். "உங்களைப் பார்க்கவே சகிக்கவில்லை. வீட்டுக்குப் போய்ச் சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடாதோ?"

"முதலில் ஜெனிபரைப் பார்க்க வேண்டும்."

டாக்டர் கூறினார்: "ஜெனிபர் கோமாவில் இருக்கிறாள். அதிலிருந்து மீளாமலே போக நேரிடலாம்."

"அவளை எப்படியாவது பார்த்தால் தேவலை, டாக்டர்."

"சரி, இப்படி வாருங்கள்."

வார்னரும் டிசில்வாவும் அறைக்குள் நுழைந்தார்கள். அங்கே மூன்று படுக்கைகள் இருந்தன. இரண்டு காலி. மூன்றாவதில் ஜெனிபர் படுத்திருந்தாள் அவளுடைய நாசியிலும் நாடியிலும் ட்யூப்கள் செருகப்பட்டிருந்தன.

வார்னர் படுக்கையை அணுகி, அவளை வெறித்துப் பார்த்தான். வெள்ளைத் தலையணைகளின் பின்னணியில் ஜெனிபரின் முகம் சோகை படிந்து காணப்பட்டது. அவள் கண்கள் மூடியிருந்தன. இந்த மயக்க நிலையில் அவள் இன்னும் இளமையாயும் இன்னும் மென்மையாயும் தெரிந்தாள்.

பல வருடங்களுக்கு முன்பு தான் சந்தித்த கள்ளங் கபடமற்ற பெண் அவனுக்கு நினைவு வந்தாள். அவனை நோக்கிக் கோபத்துடன் கூச்சலிட்ட பெண்! 'நான் லஞ்சம் வாங்கினேன் என்றா சொல்கிறீர்கள்? வாங்கியிருந்தால் இப்படிப்பட்ட இடத்திலா வசிப்பேன்! நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள் எனக்குக் கவலையில்லை. தயவு பண்ணி என்னைத் தனியே விடுங்கள்...

அவளுடைய தைரியம், அவளுடைய லட்சியப் பிடிப்பு, அவளுடைய இளகிய மனம்-எல்லாம் அவனுக்கு ஞாபகம் வந்தன. அன்று அவள் தேவதைகளின் பக்கத்திலே இருந்தாள் நியாயத்திலே நம்பிக்கை வைத்திருந்தாள் நியாத்துக்காகப் போராடத் தயாராயிருந்தாள்.

எங்கே போய்விட்டது அதெல்லாம்? எந்த இட..த்தில் தப்பு நேர்ந்தது?

அவன் அவளைக் காதலித்தான் இன்றும் காதலிக்கிறான். இருந்தாலும், இதுவா அதுவா என்று வந்தபோது தப்பாக ஒரு தேர்வுசெய்து விட்டான். அது அவர்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் நஞ்சு கலந்து விட்டது. உயிருடன் இருக்கும் வரை இந்தக் குற்ற உணர்விலிருந்து நாம் தப்ப முடியாது என்பது அவனுக்குத் தெரிந்தது.

டாக்டரை நோக்கி, "என்ன நேர்ந்தாலும் எனக்குத் தகவல் தெரிவியுங்கள்," என்றான்.

"நிச்சயமாய்," என்றார் டாக்டர்.

ஒரு முறை ஜெனிபரைப் பார்த்தான் வார்னர் 'போய் வருகிறேன்' என்று மானசீகமாக விடை பெற்றான்.

வெளியே சென்றான்-காத்திருக்கும் நிருபர்களைச் சந்திக்க.

பனிப் படலம் போன்ற அரை மயக்கத்தில் கிடந்த ஜெனிபருக்கு அவர்கள் வெளியேறும் சத்தம் மங்கலாகக் கேட்டது. அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. காரணம், அவளை இறுக்கிக் கசக்கிய வலியில் அவர்களுடைய பேச்சுக்கள் சிதறுண்டன.

வார்னரின் குரல் கேட்ட மாதிரி இருந்தது. இருக்காது... இருக்க முடியாது.... அவர் இன்னேரம் இறந்து போயிருப்பாரே....

கண்களைத் திறக்க முயன்றாள். முடியாத காரியமாக இருந்தது.

அவளுடைய எண்ணங்கள் எங்கெங்கோ தறிகெட்டு ஓடின... அந்த ஆள், கையில் ஒரு பெட்டியுடன் வருகிறான். இடறி விழுகிறான். பெட்டி திறந்து கொள்கிறது. ஒரு மஞ்சள் குருவி வெளியே பறந்தோடுகிறது. டிசில்வா கத்துகிறார்: 'பிடியுங்கள்.... அதை! விடாதீர்கள்!' மாரெட்டி அதைப் பிடித்து வைத்துக் கொண்டு சிரிக்கிறான்... ரயான் பாதிரியார் 'எல்லாரும் பாருங்கள்! அற்புதம்!" என்கிறார்... கையில் டஜன் கணக்கான ரோஜாக்களுடன் வார்னர் வருகிறான். 'அதெல்லாம் எனக்கு' என்கிறான் மாரெட்டி.... 'ஜாடியில் தண்ணீர் ஊற்றி இவைகளை அதில் வைக்கிறேன்' என்கிறாள் ஜெனிபர்... அதற்குள் பூக்கள் வாடிச் சுருங்கிச் சாகின்றன. தண்ணீர் தரையில் கொட்டுகிறது... அதுவே ஒரு பெரிய ஏரியாக வளர்கிறது... வார்னரும் அவளும் படகோட்டுகிறார்கள்... நீர்ச்சறுக்குக் காலணிகளுடன் மாரெட்டி அவர்களைத் துரத்துகிறான்... அவன் ஜோசப்பாக மாறுகிறான் ஜெனிபரைப் பார்த்துச் சிரித்துக் கையாட்டுகிறான்... தவறி... 'விழாதே! விழாதே!' இன்று அவள் அலறுகிறாள்... பிரம்மாண்டமான அலையொன்று அவனைச் சுருட்டி ஆகாயத்துக்குத் தூக்குகிறது... ஏசுநாதர் மாதிரி கைகளை விரித்து நீட்டுகிறான். பிறகு மறைந்து விடுகிறான்...

அமெரிக்காவின் தலைநகரம்.

ஜனவரி மாதத்தின் குளிரான நாள்.

அமெரிக்க நாட்டின் நாற்பதாம் ஜனாதிபதியாக வார்னர் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டான். அவன் மனைவி அணிந்திருந்த உடை அவளுடைய வெளுத்த தோற்றத்தை மாற்றி, அவள் கர்ப்பமாயிருப்பதைப் பெரும்பாலும் மறைத்தது. தன் மகளின் பக்கத்தில் அவள் நின்றிருந்தாள். வார்னர் பதவியேற்பதைப் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் இருவரும். இந்த மூன்று பேரை நாடு மொத்தமும் வாழ்த்திக் கொண்டிருந்தது. நாட்டின் தலைசிறந்த பிரஜைகள் அவர்கள்... கண்ணியமும் நேர்மையும் நல்ல மனமும் உள்ளவர்கள் வெள்ளை மாளிகையில் குடியேறத் தகுதி படைத்தவர்கள்...

வாஷிங்டன் நகரின் ஒரு மூலையில், தனது சிறிய அலுவலகத்தில் உட்கார்ந்தபடி பதவியேற்பு பைவங்களை டெலிவிஷனில் பார்த்துக் கொண்டிருந்தாள், ஜெனிபர்.

எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்து, வார்னரும் அவன் மனைவியும் மகளும் ரகசியப் போலீசார் புடை சூழப் புறப்பட்டுப் போவதுவரை பார்த்துக் கொண்டே இருந்தாள் பின்னர் டி.வி.யை அணைத்தாள் எல்லா உருவங்களும் சூனியத்தில் மறைந்து போவதைக் கவனித்தபடி இருந்தாள்.

டி.வி.யை மட்டுமல்ல கடந்த காலத்தையே அணைத்தாயிற்று. காதலையும் மரணத்தையும் ஆனந்தத்தையும் வலியையும் - தனக்கு நேரிட்ட அவ்வளவையும் அணைத்தாயிற்று.

எதனாலும் அவளை அழிக்க முடியவில்லை. அவள் பிழைத்து விட்டாள்.

தொப்பியையும் கோட்டையும் அணிந்து கொண்டு அவள் புறப்பட்டாள். வெளியே ஒரு நிமிடம் தயங்கி, 'ஜெனிபர் - வழக்கறிஞர்' என்ற பலகையைப் பார்த்தாள்.

தன்னை விடுதலை செய்த ஜூரிக் குழுவை ஒரு கணம் நினைத்துப் பார்த்துக் கொண்டாள்.

இன்னும் அவள் வழக்கறிஞர்தான் அவள் அப்பாவைப் போல. கைப்பிடிக்கு அகப்படாத நீதி என்ற சமாசாரத்தைத் தேடித் தேடி அவள் சென்று கொண்டேயிருப்பாள்.

நீதிமன்றத்தை நோக்கி அவள் நடந்தாள்.

காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. தெருவில் நடமாட்டம் இல்லை. சல்லாத் துணியில் பூமிக்குத் திரை போட்ட மாதிரி மெல்லிய பனி விழ ஆரம்பித்தது. பல மாடிக் கட்டட மொன்றிலிருந்து திடீரெனக் கொண்டாட்ட ஆரவாரங்கள் அவள் காதில் மோதின. அந்த ஒலி அவளுக்கு ரொம்ப அன்னியமாகத் தோன்றியது. சற்று நின்று கேட்டாள். பிறகு கோட்டை இறுக்கமாக இழுத்து விட்டுக்கொண்டு தெருவில் நடந்தாள் தன் முன்னால் விழும் பனித் திரையைக் கழுத்தை நீட்டிப் பார்த்தபடி நடந்தாள்-ஏதோ எதிர்காலத்தையே பார்க்க முயலுவது போல.

ஆனால் அவள் கண்ணுக்குத் தெரிந்தது அவளுடைய எதிர் காலமல்ல. அவளுடைய கடந்த காலம்தான்.

வாழ்க்கையின் அந்தச் சிரிப்புக்களெல்லாம் எங்கே போயின? எப்போது போயின? ஏன் போயின?

யேரசித்த வண்ணம் ஜெனிபர் நடந்தாள்.

முற்றும்

✧ ✧ ✧

32565